# நின்றன் காதலையெண்ணிக் களிக்கின்றேன்!



நிவேதா ɹ கார்த்திகேயன்

# அத்தியாயம் - 1



**காற்று வெளியிடைக் கண்ணம்மா – நின்றன்**

**காதலை எண்ணிக் களிக்கின்றேன் – அமுது**

**ஊற்றினை ஒத்த இதழ்களும்-நிலவு**

**ஊறித் ததும்பும் விழிகளும்-பத்து**

**மாற்றுப் பொன் ஒத்தநின் மேனியும்-இந்த**

**வையத்தில் யான் உள்ள மட்டிலும்-எனை**

**வேற்று நினைவு இன்றித் தேற்றியே-இங்கோர்**

**விண்ணவன் ஆகப் புரியுமே!**

"**டேய்**.. ஸ்ரீதர்.. அந்த மெழுகுவர்த்தியை எடுத்துக் கொண்டு வாடா.. சீக்கிரம்... சீக்கிரம்.. நேரமாகிறது பார்... 12 மணி அடிக்க இன்னும் 10 நிமிடம் தான் உள்ளது.." எனக் கூவியபடி இளம் வயது பெண்ணொருத்தி பரபரப்புடன் கையிலிருந்த கேக் பெட்டியைத் திறந்து கொண்டிருந்தாள்.

"என்னடி ரொம்பத் தான் வேலை வாங்குகிறாய்..?, காலையிலிருந்து இதைச் செய்,அதைச் செய் என்று என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறாய்..?, என்னுடைய திட்டம்,என்னுடைய திட்டம் என்று பெரிதாகப் பேசினாயே..., திட்டம் போட்டது மட்டும் தான் நீ.., நீ சொல்லும் வேலைகளையெல்லாம் அடிமை போல் காலையிலிருந்து நான் செய்து கொண்டிருக்கிறேன்.." என்று புலம்பியபடியே மெழுகுவர்த்தித் தேடலைத் துவங்கினான் ஸ்ரீதர்.



DO NOT COPY

அவனிடமிருந்து அடுத்த 2 நிமிடங்களில் எந்தவொரு பதிலும் இல்லாமல் போக பெட்டியைப் பிரித்து கேக்-ஐ டேபிளின் மீது வைத்து விட்டு கோபத்துடன் அவன் முன்னே வந்து நின்றாள். அவள் தன்னை முறைப்பதைக் கண்டவன் "என்ன அனு..?,candles கிடைக்கவில்லை.. தேடிக் கொண்டிருக்கிறேன்.."என்று கூறிய படியே மீண்டும் துழாவத் தொடங்கினான்..

"என்ன டா தேடுகிறாய்...?,ம், இது என்ன..?"என்றபடி அந்தச் சிறிய டப்பாவை எடுத்து அவனிடம் நீட்டியவள் "கண் முன்னே இருப்பதைத் தேடுவாயா டா நீ..?, எந்தக் காரியத்தை உருப்படியாக செய்திருக்கிறாய்..?,உன் உதவியை நாடியதற்கு என்னைச் சொல்ல வேண்டும்.., அப்பா-அம்மாவை தொந்தரவு செய்ய வேண்டாமென்று உன்னிடம் உதவி கேட்டேன் பார்.."

"நான் plan -ஐ உன்னிடம் விவரித்த பொது.. தலையை நன்றாக உருட்டி விட்டு.. நேரம் பார்த்துத் தூங்கித் தொலைத்து விட்டாயே.. உன்னால் தான் இந்தத் தாமதம்.., காலையிலிருந்து என்னடா கிழித்தாய்..?, உன்னைத் திட்டக் கூட எனக்கு நேரமில்லையடா.."என்றபடி வேக வேகமாக கேக்-ன் மீது மெழுகுவர்த்தியைச் சொருகி வைத்தாள்.

இதய வடிவத்தில் இருந்த அந்த black forest கேக்-இன் மத்தியில் "Happy Birthday Prabhu anna.."என்று எழுதப் பட்டிருக்க.. அதைப் பார்த்துக் கொண்டே அருகில் வந்த ஸ்ரீதர்.."ஏன் அனு.. என்றேனும் என் பிறந்த நாளை இதைப் போல் கொண்டாடி இருப்பாயா..?, நானும் உன் அண்ணன் தானே..?"என்று பொறாமையுடன் வினவினான்.

தீப்பெட்டியை உரசி மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்துக் கொண்டிருந்த அனு நிமிர்ந்து அவனை முறைத்தாள். "நீயும் அண்ணன் தான்.. யார் இல்லை என்றது..?, அண்ணன் என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு என்ன பொறுப்பானக் காரியங்களை இது வரை நீ செய்திருக்கிறாய்..?, ம்?, பிரபு அண்ணாவிற்கு ஈடாக வர முடியுமா..?, அவன் என் தோழன்.., என் நலம் விரும்பி.., அதற்கும் மேலே என்று கூடக் கூறுவேன்.., உன்னைப் போல் அவர் எதற்கெடுத்தாலும் என்னிடம் சண்டை போட்டுக் கொண்டு வம்பு வளர்க்க மாட்டார். தெரிந்து கொள்.."

"அண்ணனாம்!, அண்ணன்!"என்று முணுமுணுத்தவளை ஸ்ரீதர் முறைக்க "என்ன டா.. முறைத்துப் பார்க்கிறாய்..?, விருப்பமிருந்தால் வேலையைச் செய்.. இல்லையென்றால் சென்று விடு.. நானே.. அண்ணனை எழுப்பிக் கொண்டாடிக் கொள்கிறேன்.."என்று கூற..

"ம், ஆமாம்டி.. ஸ்ரீதர்.. இது எனக்கு எட்டவில்லை.. நீ வந்து மாட்டிக் கொடு டா.. இதைச் செய் டா.. அதைச் செய்யடா... என்றெல்லாம் கெஞ்சி விட்டு..

DO NOT COPY

இப்போது.. அனைத்து வேலைகளும் முடிந்தபின்.. என்னை விரட்டுகிறாயா..?" என்று அவனும் கத்தத் துவங்க..

"ஷ்.. ஷ்.. "என்று அவனை அடக்கியவள் "நம் சண்டையை பிறகு வைத்துக் கொள்ளலாம்.. நான் சென்று அண்ணனை அழைத்து வருகிறேன்.. நீ அம்மா,அப்பாவை எழுப்பு.. "என்று அவள் கூறிக் கொண்டிருக்கையில் "அனு.. ஸ்ரீதர்.. என்ன டா இது..?, நடு ராத்திரியில்.. உறங்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்...?,"என பாதித் தூக்கத்தில் கண்களைக் கசக்கியபடி நடந்து வந்து கொண்டிருந்த சீதாவின் வாயை வேகமாக மூடினாள் அனுதரணி.

"அம்மா.. சத்தம் போட்டு திட்டத்தைக் கெடுத்து விடாதே.."என்று அன்னையை மிரட்டியவள்.. அவரைத் தொடர்ந்து வெளி வந்த தந்தை ராஜாராமனிடம் திரும்பி "என்னப்பா..?, நீங்களும் விழிக்கிறீர்கள்..?, இன்று பிரபு அண்ணாவின் பிறந்த நாள்.., அதனால் தான் இந்த இன்ப அதிர்ச்சி.. எப்படி இருக்கிறது..?"என்று சிரித்தபடியே கேக்-ஐ காட்டி வினவியவளின் தலையில் தட்டி "எல்லாம் சரி, மணி 12 ஆகப் போகிறதே.. இன்னும் உன் அண்ணனை எழுப்பவில்லையா..?"என்று அவர் வினவ.."இதோ போகிறேன் அப்பா.."என்று அண்ணனின் அறையை நோக்கி ஓடிச் சென்றாள் அனு.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள்.. மெல்ல நடந்து சென்று.. கட்டிலின் மீது சீரான மூச்சுடன் உறங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞனின் அருகே அமர்ந்தாள். அவன் நெற்றியில் கை வைத்து.."அண்ணா..."என்று மெதுவாக அழைக்க.. திடுக்கிட்டு கண் விழித்தவன் தங்கையைக் கண்டதும் வேகமாக எழுந்தமர்ந்து "அனு.. என்ன டா.., இந்த நேரத்தில்.. என்னவாயிற்று...?"என்று பதற்றத்துடன் வினவினான்.

களைந்து போயிருந்த அவனது அலை அலையான கேசத்துடனும்... பரபரப்பைத் தேக்கிய விழிகளுடனும்.. கூரான நாசியுடனும்.. ஒரு ஆண்மைக்குரிய அத்தனை கம்பீரங்களுடன் காணப் பட்டவனை ஆயிரமாவது முறையாக இவன் என் அண்ணன் என்று பெருமையுடன் நோக்கிய அனு.. "அண்ணா.. ரிலாக்ஸ்.. நீ பதட்டப் படுமளவிற்கு.. ஒன்றுமாகவில்லை.. ஆனால்.. இப்போது.. என்னுடன் வா... வா அண்ணா..."என்ற படி அவன் கைப் பற்றி இழுத்துச் சென்றாள்..

அறையை விட்டு வெளியே வந்ததும் அவன் கண்களை அவள் தன் இரு கைகளாலும் மூடிக் கொள்ள.. "ஏய்.. அனு.. என்ன இது.. என்ன செய்கிறாய் நீ..?"என்று அதட்டியவனை அசட்டை செய்து விட்டு கேக் வைக்கப் பட்டிருந்த டேபிளின் முன்னே சென்று நிறுத்தி மெதுவாகக் கைகளை விலக்கினாள்.

DO NOT COPY

அதற்குள் ஹாப்பி பர்த்டே டு யு.. என்று நால்வரும் பாட ஆரம்பிக்க நன்றாக முறுவலித்தபடி "அனு.. என்ன டா இதெல்லாம்..."எனத் தொடங்கியவன் தங்கையின் கட்டளைக்குக் கீழ் படிந்து கேக்-ஐ கட் செய்து அவளுக்கு முதலில் ஊட்டி விட்டான்.

பின் தாய்,தந்தைக்கும்,தம்பிக்கும் ஊட்டியவன்.. அனுவின் புறம் திரும்பி "ஏய்.. குட்டி வாலு.. இதெல்லாம் நிச்சயம் உன் வேலையாகத் தான் இருக்கும்.. "என்று சிரித்தவன்... "நிஜமாகவே எதிர்பார்க்கவே இல்லை டா.. அனு குட்டி.. சொல்லப் போனால் என் பிறந்த நாளே எனக்கு நினைவில்லை.. "என்றவனிடம் "தெரியும் அண்ணா.. நீ உன் பிறந்த நாளை எப்போதுமே சிறப்பாகக் கொண்டாடியதில்லை.. அனைவரையும் அழைத்து ஆடம்பரமாகக் கொண்டாட எனக்கும் ஆசை தான்.., ஆனால்...உனக்குத் தான் அதெல்லாம் பிடிக்காதே.. அதனால் தான் இந்த சின்ன surprise .. happy -ah அண்ணா நீ..?"என்றி வினவ..

"ரொம்ப ரொம்ப ஹாப்பி டா.. எனக்காக என் செல்லத் தங்கை வெகு நேரம் விழித்திருக்க நேரிட்டதே என்று தான் எனக்கு வருத்தமாக உள்ளது.."என்று கூறியவனிடம் "ஒரு நாள் விழித்ததில் கஷ்டம் ஒன்றுமில்லை அண்ணா.. பரீட்சைக்குப் படிக்கையில் விழிப்பதில்லையா..?, அது போல் எண்ணிக் கொள்கிறேன்.. "எனக் கூற "நீ பரீட்சைக்கு இது போல் கண் விழித்து நான் பார்த்ததே இல்லையே..?"என ஸ்ரீதர் இடை புகுந்தான்.. கோபத்துடன் அவனை முறைத்தவள் "நடு இரவை வாழ்நாளில் முதன்முறையாக இன்று தான் காண்கிறாய்.., நீ என்னைக் கேலி செய்கிறாயா..?"என்று வினவ..

"ஏய்.."என்றபடி அவன் மீண்டும் ஏதோ சொல்லத் துவங்க.. "ஸ்ரீதர்.. என்ன டா.. சின்ன பெண்ணிடம் சரிக்குச் சரியாக வம்பு வளர்த்துக் கொண்டிருக்கிறாய்.."என்று பிரபு அடக்க முயற்சிக்க "யார்..?, இவள் சின்னப் பெண்ணா..?, எப்போதும் அவளுக்குப் பரிந்தே பேசு.."என்று முணுமுணுத்துக் கொண்டே.. அவன் அறைக்குச் சென்று விட்டான் ஸ்ரீதர்.

"எப்போது பார்த்தாலும் என்னிடம் வம்பு செய்து கொண்டே இருக்கின்றான் அண்ணா.."என்று குற்ற பத்திரிக்கை வாசிக்கத் தொடங்கியவளை சிரிப்புடன் நோக்கி "உன்னை விட 2 வயது பெரியவனை வாடா,போடா என்றால் அவன் உன்னுடன் வம்பு வளர்க்கத் தானே செய்வான்..?, அண்ணா என்று கூப்பிட்டுப் பழகு அனு மா.. "என்று பொறுப்பான தமையனாய் அறிவுரை கூறியவனிடம்..

"ச்சி.. அவனைப் போய் அண்ணன் என்றழைப்பதா..?,"என்று அவள் முகத்தை சுருக்கிக் கொள்ள.. வாய் விட்டு சிரித்தவன் "அப்படியென்றால் உங்கள் இருவருக்குமிடையில் நடக்கும் இந்தப் போர் இந்த ஜென்மத்தில் முடிவுக்கு வரப் போவதில்லை..."என்று கூறினான். "சரி,சரி.. அண்ணனும்,தங்கையும் பாசமழையைப் பொழிந்தது போதும்.. தூங்கச் செல்லுங்கள்.."என்று சீதா கூற..

DO NOT COPY

"good night டா அனு.. thanks for your surprise .."எனச் சிரித்தபடி தன் அறைக்குச் சென்றான் ஷ்யாம் பிரபு.

**ஷ்யாம் பிரபு**. வீட்டிற்கு மூத்தவன் என்பதாலும்.. ராஜாராமனின் வம்சம் தழைக்கைப் பிறந்தவன் என்பதாலும்... அவரின் அன்னையின் ஆசைப்படி அவனை பிரபு என்றழைத்தனர். சீதா.. கிருஷ்ணனின் தீவிர பக்தை என்பதால் ஷ்யாம் என்ற பெயரையும் சேர்த்து ஷ்யாம் பிரபு என்று பெயரிட்டனர். பெயருக்கேற்றார் போல் ராஜாவைப் போல் வளர்க்கப் பட்டவன் தான்..

குலப் பெருமையுடன்,குடும்பப் பொறுப்பையும் சேர்த்து வளர்த்ததால்.. தந்தையின் எண்ணங்களைப் படித்தவன் போன்று அவனும்.. சிறு வயது முதல் தந்தை,தாய்க்கு உதவியாக.. தங்கை,தம்பியை வழி நடத்திக் கொண்டு.. பொறுப்பு நிறைந்தவனாகவே வளர்ந்தான். படிப்பை முடித்ததும் தந்தையின் தொழிலை ஏற்றுக் கொண்டதும் அப்படித் தான்.. ஏற்றுக் கொண்டதோடு மட்டுமில்லாமல் வெற்றிகரமான தொழில் முறைகளைக் கையாண்டு தந்தையின் தொழிலை மேலும் விரிவு படுத்தினான்.

வீடு,குடும்பம்,தொழில்.. இது மூன்றைத் தாண்டி.. வேறு எந்த எண்ணங்களுக்கும் அவன் இது வரை இடம் கொடுத்ததில்லை.. அனு கூட அடிக்கடி அவனைக் கேலி செய்வாள். "அண்ணா உனக்கு சைட் அடிப்பது என்றால் என்னவென்று தெரியுமா..?, பெண்களை நிமிர்ந்தேனும் பார்ப்பாயா..?, நானும் உன்னுடன் வெளியே வரும் போதெல்லாம் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.., உன் எதிரே வரும் பெண்கள் உன்னை வெறித்துப் பார்ப்பதைக் கூட உணராமல் நடந்து வருகிறாய்..?, ஏன் அண்ணா..?, உன் 28 வருட வாழ்க்கையில் ஒரு பெண் கூட உன்னை ஈர்த்ததே இல்லையா..?"என்று அவள் வினவியதற்கு..

அவனோ பொறுப்புள்ள அண்ணனாக மாறி "சைட்,பெண்கள் இதெல்லாம் என்ன வார்த்தை அனு மா..?, காலேஜ்-இல் இதைத் தான் கற்றுக் கொடுக்கிறார்களா..?, உனக்குப் பாதுகாப்பாக நான் உன்னுடன் வெளியே வந்தால்.. நீ என்னை நோட்டம் விடுகிறாயா..?, அனு.. நீ சின்னப் பெண்.. இது போலெல்லாம் பேசக் கூடாது.. புரிந்ததா..?"என்று அறிவுரை வழங்க வேறு வழி இல்லாமல் தலை ஆட்டி வைத்தாள் அனு.

அவன் சென்ற பின்பு அன்னையின் புறம் திரும்பி "அம்மா.. உன் பிள்ளை தேறாத கேஸ்.. சைட் என்பது கெட்ட வார்த்தையாம்.. கேட்டாயா..?,அண்ணன் இந்தக் காலத்து இளைஞன் போலவா நடந்து கொள்கிறான்..?, வரப் போகிற அண்ணி பாவம் அம்மா.., என்ன இப்படி வளர்த்து வைத்திருக்கிறீர்கள் உங்கள் மகனை என்று என்று உன்னைத் தான் பிலு பிலுவென்று பிடிக்கப் போகிறாள்..

DO NOT COPY

ஏம்மா.. அண்ணன் இப்படி சாமியாரைப் போல் இருக்கிறான்..?"எனக் கேள்வியை பிரபுவிடம் தொடங்கி அன்னையிடம் முடித்தாள்.

சீதாவும் சிரித்த படியே.. "அப்படி இல்லை அனு மா.., வீட்டுக்கு மூத்தவனான தான்.. தம்பிக்கும்,தங்கைக்கும் நல்லதொரு வழிகாட்டியாக.. உதாரணமாக இருக்க வேண்டுமென்று தான்.. இப்படி நடந்து கொள்கிறான்.. நீங்கள் இருவரும் வழி தவறிச் சென்று விடக் கூடாது என்பதற்காக.. அவனது மற்ற ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் பொறுப்பாக நடந்து கொண்டிருக்கிறான்.."என விளக்கம் தர..

"அண்ணன் அப்படி அவனுடைய ஆசைகளை அடக்க வேண்டிய அவசியம் என்னம்மா..?, அவனைப் பார்த்து வளர்ந்த ஸ்ரீதர் இன்னும் உருப்படாமல் தானே அலைகிறான்..?, அண்ணனின் பொறுப்பில் பாதியேனும் அவனுக்கு உள்ளதா..?, நாங்கள் இருவரும் எங்கள் விருப்பபடி வளர்ந்து கொண்டிருக்கையில்.. அண்ணன் மட்டும் அவன் ஆசைகளைத் தியாகம் செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது..?, அம்மா.. நான் நல்ல ஒரு பெண்ணாகப் பார்த்து அண்ணனை காதலிக்கச் சொல்லப் போகிறேன்..."என்று சிறுபிள்ளைத் தனமாகக் கூறியவளைக் கண்டு வாய் விட்டு சிரித்தார் சீதா.

அண்ணனைப் பார்க்கையில் அனுவிற்கு எப்போதும் ஆதங்கம் தான்.. raymonds மாடல்-ஐ போல் தோற்றம் கொண்டிருக்கும் தன்னுடைய பாசமான அண்ணன்.. குணத்தில் சாமியாரைப் போல் இருப்பது கண்டு வருத்தம் கொண்டாள்.. இவன் எதற்காகத் தியாகச் செம்மலைப் போல் இருக்க வேண்டும்.. வீட்டில் அனைவரது தேவைகளையும் விரல் நுனியில் வைத்திருப்பவன்..

அன்னை,தந்தையின் மருத்துவத் தேவைகளிலிருந்து அனுவின் காலேஜ் பீஸ் வரை அனைத்தையும் சரியாகக் கவனித்துக் கொள்பவன்.. ஷாப்பிங் செல்வதென்றால் கூட அனு அண்ணனுடன் தான் செல்வது.. அவனுடைய தேர்வு தான் அவளை எப்போதும் திருப்திப் படுத்தும்.. இப்படி ஒவ்வொரு விஷயத்திற்கும்.. குடும்பத்தின் ஒவ்வொருவரையும் சிரத்தையாகக் கவனித்துப்.. பாசமாய் நடந்து கொள்பவன்.. அவனுடைய ஆசைகளிலும்,தேவைகளிலும் கூட கவனம் செலுத்தவேண்டுமென்பது அனுவின் விருப்பம்.

அனுவிற்கு அனைத்துமே அண்ணன் மட்டும் தான்!! அண்ணன் ஜபம் செய்பவள்... அண்ணனின் புகழைப் பற்றி பிரச்சாரம் செய்யக் கூடத் தயங்க மாட்டாள். ஷ்யாமிற்கு அடுத்து 7 ஆண்டு இடைவெளியில் பிறந்த தங்கை என்பதால்.. சிறு வயதிலிருந்தே அவளைத் தூக்கிக் கொஞ்சி. வளர்த்த ஷ்யாமிற்கும் அனு என்றால் கொள்ளைப் பிரியம். தங்கை கேட்டால் எதையும் மறுக்க மாட்டான்...

DO NOT COPY

ஆனால் இவர்களிருவருக்கும் நேர் எதிரானவன் ஸ்ரீதர். பணக்காரத் திமிரும், ஊதாரித் தனமும் நிறைந்தவன்.. தந்தைக்கும்,அண்ணனுக்கும் பயந்தவன்.. வீட்டிலிருப்போர் அனைவரும் ஷ்யாமை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவது அவனுக்குப் பிடிக்காத ஒன்று.. 24 வயதில் தன் விருப்பப்படி நடக்க விடாமல் தந்தையின் தொழிலைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அழைக்கும் அண்ணன் மீது கோபம் தான்..

இந்த வீட்டில் அவன் வைத்தது தான் சட்டமா.., எதற்காக அனைவரும் அவன் பேச்சிற்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் உடனே தலை ஆட்டி விடுகிறார்கள்..?, என்னால் அப்படி இருக்க முடியாது என முடிவு செய்து.. பிரபுவுடன் பாக்டரி-க்குச் செல்வதை இது நாள் வரை தவிர்த்து வருகிறான். எத்தனை நாட்கள் இப்படியே ஊர் சுற்றித் திரிவான்..?, அவனாகவே உணரட்டுமென பிரபுவும் கண்டு கொள்வதில்லை.

அவன் அப்படி அமைதியாக இருப்பது தான் ஸ்ரீதரின் பயமே..! திட்டி,மிரட்டி விட்டால் ஏதேனும் பேசிச் சமாளித்துக் கொள்ளலாம்.. ஆனால் இவன் அமைதியாக இருப்பதைப் பார்த்தால்.. நிச்சயம் எனக்கென்று ஏதோ பெரிய திட்டம் வைத்திருக்கிறான்.. அதை எப்படி முறியடிப்பது.. என்று அவ்வப்போது யோசனைகளில் ஆழ்ந்து விடுவான்.. அண்ணனை எதிர்க்க வேண்டுமென்று அவன் செய்யும் செயலால் அவனது வாழ்க்கையும் பாதிக்கப் படுகின்றதென்பதை அவன் உணரவே இல்லை..

படிப்பு முடிந்து ஓராண்டாகியும் கூட.. வேலைக்குச் செல்ல வேண்டுமென்ற நினைப்பே இல்லாமல்.. வீட்டை அளந்து கொண்டும்.. அனுவுடன் வம்பு செய்து கொண்டும் திரிந்து கொண்டிருந்தான்.. கேள்வி கேட்பவர்களிடம் "இப்போது தானே படிப்பு முடித்திருக்கிறேன்.. future பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.. சொந்தமாக பிசினஸ் செய்யும் ஐடியா இருக்கிறது.. அதைப் பற்றி பிரபுவிடம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.."என்று சாதாரணமாகக் கூறி விடுவான்.

"அண்ணனிடம் எப்போதடா பிசினஸ்-ஐ பற்றிப் பேசினாய்...?"என்று அனு வினவியதற்கு "இது வரையில் பேசவில்லை.. இனிமேல் பேசுகிறேன்..."என்பானே தவிர ஒரு முறை கூட ஷ்யாமின் முகம் பார்த்துப் பேசியதில்லை.. அவன் வீட்டில் இருக்கும் வேளைகளில் அறையை விட்டு வெளியே தலை காட்ட மாட்டான். தந்தையும்,தமையனும் இல்லாத போது தான் வீட்டில் அவன் சுதந்திரமாக உலவுவதே..

பிரபுவும்,ராஜாராமனும் எதுவும் கூறாத நிலையில் சீதா ஸ்ரீதரின் விஷயத்தில் தலையிடுவதே இல்லை.. அவர் தலையிட்டாலும்.. அவரைச் சுலபமாகச் சமாளித்து விடுவான் என்பது வேறு விஷயம். வீட்டில் இருப்போர்

DO NOT COPY

அனைவருக்கும் சேர்த்து வைத்து.. அனுவிடம் தான் அவன் மானக் கேடாக திட்டு வாங்குவது.. தன்னை விட மூத்தவன் என்பதையெல்லாம் அவள் யோசித்தே பார்க்க மாட்டாள். அதனாலேயே இருவருக்கும் அடிக்கடி போர் நடந்து கொண்டே தான் இருக்கும்..

**ம**றுநாள் காலை எழுந்த ஷ்யாமிடம் மீண்டும் அனைவரும் பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவிக்க.. புன்னகையுடன் காலை உணவை முடித்துக் கொண்டு தந்தையுடன் அலுவலகம் நோக்கிப் பயணமானான்.

இருவரும் சென்று விட்டதை உறுதி செய்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்த ஸ்ரீதர் நேராக சமையலறைக்குச் சென்று அன்னையிடம் வம்பளந்து கொண்டிருந்தான். "ஏண்டா.. ஸ்ரீதர்.. என்னிடம் இப்படி வாயாடுவதற்கு உன் அண்ணன்,அப்பாவுடன் அலுவலகம் சென்றால் என்ன..?, எத்தனை நாட்களுக்கு இப்படி வெட்டியாகத் திரிவதாக உத்தேசம்..?, நீயும் அண்ணனைப் போல் பொறுப்பாக மாறி விட்டால்.. எனக்கு பாரம் குறைந்து விடும்.., இந்த அம்மாவிற்காகச் செல்ல டா கண்ணா... "என்று அவன் நாடியைப் பற்றிக் கொஞ்சியபடி கூற..

அவரது கையைத் தட்டி விட்டு அங்கே இருந்த மேடையின் மீது ஏறி அமர்ந்தவன் "அண்ணனைப் போல் என்னால்.. அப்பாவின் பாக்டரி-ஐக் கட்டிக் கொண்டு அழ முடியாது.. நான் தனியாக பிசினஸ் ஆரம்பித்து பிழைத்துக் கொள்வேன்.."என்று வீராப்பாகப் பேசியவனை.. "ஆமாம்.. படிப்பு முடிந்ததிலிருந்து இதைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறாய்... பிரயோஜனமாக எதையும் செய்வதாகத் தெரியவில்லை.. கேள்வி கேட்டால் விதண்டாவாதம் செய்கிறாய்.. உன்னை ஒன்றும் கேட்கப் போவதில்லை.. உன் விருப்பம் போல நடந்து கொள்.. என்றாவது ஒரு நாள் இதற்காக வருத்தப் படுவாய்.."என்றார் சீதா.

அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த அனு "அம்மா.., நீ ஏன் அவனுடன் போராடிக் கொண்டிருக்கிறாய்..?, இவன் இந்த ஜென்மத்தில் உருப்படியாக எதையும் செய்யப் போவதில்லை.., இப்படியே தெண்டமாக உட்கார்ந்து தின்று அப்பாவும்,அண்ணனும் சம்பாதித்த சொத்தை அழிப்பது தான் இவனது நோக்கமே.. நம் வீட்டில் இப்படி ஒரு பிறவி..?, இன்னும் ஒரு வருடத்தில் படிப்பை முடித்துவிட்டு நான் அண்ணனுடன் பாக்டரி-க்குச் செல்வேன்.. அப்போது.. நீ என்ன டா செய்யப் போகிறாய்..?, இப்படியே அம்மாவுடன் சேர்ந்து சமையல் கற்றுக் கொண்டு அடுப்படியில் கிடக்கப் போகிறாயா..?"என்று உச்சஸ்தாதியில் கத்தத் துவங்க..

"ஏய்.... என்னடி அதிகமாகப் பேசுகிறாய்..., நீ எனக்கு அறிவுரை கூறுகிறாயா..?,

DO NOT COPY

வயதுக்கேற்றார் போல் பேசக் கற்றுக் கொள்.. நீ படிப்பையே இன்னும் ஒழுங்காக முடித்தபாடில்லை.. இதில்.. வேலைக்குச் சென்று சம்பாதிக்கப் போகிறாயா..?" என்றபடி அவள் கையைப் பிடித்து திருக.. "ஆ.. அம்மா.. பாரும்மா.., கையை விடு டா.. ரவுடி..."

"அம்மா.. கையை விடச் சொல்லு மா.. "என்றபடி அவனிடமிருந்து கையை உறுவித் தேய்த்துக் கொண்டே முறைத்தவளிடம் "என்ன பார்க்கிறாய்..?, இனி இது போல் அதிகம் பேசினால் இப்படித் தான் தண்டிப்பேன்... கிளம்பு.. கிளம்பு.." என்றவன் நிறுத்தி நொடியில் மாறி "ஏய்.. அனு.. இப்போ மணி என்ன..?"என்று வினவினான்.

"ஏன்.. உனக்கு மணி பார்க்கத் தெரியாதா..?, கையைப் பிடித்து திருகினாயல்லவா..?, சொல்ல மாட்டேன்.., போடா.."என்று திரும்பியவளின் முடியைப் பற்ற.. "ஆ... காலேஜ்-இற்கு டைம் ஆயிற்று.. முடியைக் களைக்காதே டா.. மணி 9 ஆயிற்று.. விடு டா.."என்று அவனிடமிருந்து தப்பித்துச் சபித்தபடியே வெளியேறினாள் அனு.

"ஒன்பதாயிற்றா..?"என்றவன் அவசர அவசரமாக எங்கோ கிளம்பினான். கார் சாவியை எடுத்துக் கொண்டு வேகமாக அவன் ஓடுவதை ஆச்சர்யமாக நோக்கினார் சீதா. வெளியேறப் பார்த்தவனைத் தடுத்த அனு "ஸ்ரீதர்.. காரை எடுத்துக் கொண்டு போய் விடாதே டா.. நான் அதில் தான் காலேஜ் செல்ல வேண்டும்..,"என்று கெஞ்சத் துவங்க.. "உன் ஸ்கூட்டி என்னவாயிற்று..?,என்னுடன் எல்லாவற்றிலும் சண்டையிட்டுத் தான் ஆக வேண்டுமா..?,"என்றான் அவன் பொறுமையற்று..

"என் ஸ்கூட்டி சர்வீஸ்-க்கு கொடுதிருக்கிறேன்டா.., அட்லீஸ்ட் என்னை பஸ் ஸ்டாப்-இல் இறக்கி விடுடா.., ப்ளீஸ்.."என்று கெஞ்ச.."ஏறித் தொலை.."என்றவன் காரை ஸ்டார்ட் செய்து கிளம்பினான். பேருந்து நிறுத்தத்தில் அனுவை இறக்கி விட்டு விட்டு.. ஒரு வளைவில் திரும்பி யாருமற்ற அந்தத் தெருவின் ஓரத்தில் காரை நிறுத்தி இறங்கியவன்.. யாரையோ எதிர் பார்த்து.. தலையைத் தூக்கி தேடத் துவங்கினான்.

சிறிது நேரத்தில்.. சிவப்பு நிற சுடிதாரில் அழகான பெண்ணொருத்தி நடந்து வந்து கொண்டிருந்தாள். அவளையே எதிர்பார்த்தவன் போன்று முறுவலித்தபடியே நின்றிருந்த ஸ்ரீதர், அவள் அருகே வந்ததும் அவள் முன்னே சென்று நின்றான். தன் முன்னே வந்து நின்று கொண்டு வழிமறித்தவனைக் கோபமாக முறைத்து விட்டு கடந்து செல்லப் பார்த்தவளைக் கை நீட்டித் தடுத்து நிறுத்தினான்.

DO NOT COPY

"நில் ஆனந்தி... உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்"என்றவன் தொடர்ந்து "உன்னைக் காதலிப்பதாகக் கூறி நானும் கடந்த 6 மாதகாலமாக உன் பின்னாலேயே.. பைத்தியம் போல் திரிந்து கொண்டிருக்கிறேன்.. ஆனால் உன்னிடமிருந்து எந்த விதமான சாதகமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.., என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்..?,"என்று கோபமாக வினவினான்.

"இதோ பாருங்கள் ஸ்ரீதர்.. நான் உங்களிடம் இதற்கான பதிலை ஏற்கனவே கூறி விட்டேன்.., எனக்கு 2 மாதத்தில் திருமணம்.. உங்களை என்னால் நேசிக்க முடியாது.., தயவு செய்து.. இனி என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்..., நீங்கள் இப்படி என்னிடம் வம்பு செய்வதை எனக்குத் தெரிந்தவர் யாரேனும் பார்க்க நேர்ந்தால்.. விஷயம் விபரீதமாகி விடும்.. உங்களுக்கு என் குடும்பத்தைப் பற்றி தெரியாது ஸ்ரீதர்.. தயவு செய்து சென்று விடுங்கள்.. இனி என்னிடம் இது போல் நடந்து கொள்ளாதீர்கள்.."என்று கெஞ்சல் பாதியும்.. மிரட்டல் பாதியுமாய் கூறி முடித்து நகர்ந்து செல்ல முற்பட்டாள்.

அவளை நகர்ந்து செல்ல விடாமல் மீண்டும் வழி மறித்தபடி "இதோ பார் ஆனந்தி... நான் மிகவும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்.. நான் நினைத்தால் என் பணபலத்தை உபயோகித்து உன்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.. நினைவில் வைத்துக் கொள்.."என்றவனிடம் "நீங்கள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் தான் இவ்வளவு மரியாதையுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்.. இல்லையெனில் எப்போதோ என் கால் செருப்பு உங்களை பதம் பார்த்திருக்கும்.."என்று கூற "ஏய்..."என்றபடி கோபமாக அவள் கழுத்தைப் பற்றி காரின் மீது சாய்த்தான்.

"இங்கே பார்.. "நான் இவ்வளவு பொறுமையாக யாரிடமும் நடந்து கொண்டதே இல்லை.., நீ என்னுடைய பொறுமையைத் தேவைக்கு அதிகமாகவே சோதித்து விட்டாய்.., நான் ஆசைப் பட்டது எதையும் இது வரை அடையாமல் விட்டதே இல்லை.. நீயும் அதில் சேர்த்தி தான்.., கல்யாணம்,கருமாதி,குடும்பம் என்றெல்லாம் உளறுவதை விட்டு விட்டு என்னை விரும்புவதாக ஒத்துக் கொள். என்ன? நாளை இதே நேரம் இதே இடத்தில.. உன் பதிலை எதிர் பார்த்து.. நான் காத்துக் கொண்டிருப்பேன்.. நீ வரவில்லையென்றால்.. உன் வீட்டிற்கு வந்து உன் தந்தையைச் சந்திப்பேன்.. அதன் பின் என் வேலை மிகவும் சுலபமாகி விடும்.., பிறகு..."என்றவன் உல்லாசமாகச் சிரித்தபடி "நம் இருவருக்கும் திருமணம் நடக்கும்.. பின் ஹனி மூன் தான்.. "என்று கண்ணடிக்க..

"ச்சி.."என்று அவனை உதறியவள் செய்வதறியாது பயத்தில் நடுங்கிய உதடுகளைக் கடித்தபடி அவனை விட்டு முடிந்த அளவு விலகி நின்றாள். அவள் நடுங்குவதைக் கண்ட ஸ்ரீதருக்கு சிரிப்பாக வந்தது. பின்னே.. இதைப்

DO NOT COPY

போலத் தானே அவன் தந்தையின் முன்பும்,தமையனின் முன்பும் நடுங்கியபடி காட்சி தருவது, இப்போது.. தனக்குக் கூட ஒருத்தி பயப்படுவது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.. அதனாலேயே தன் மிரட்டலைத் தொடர்ந்தான்.

"நான் கூறியபடி நீ வரவில்லையென்றால் நான் உன் வீட்டிற்கு வருவது உறுதி... இதை நியாபகம் வைத்துக் கொள்.., இப்போது.. நீ போகலாம்.."என்று வழி விட விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள் அந்தப் பெண். அவள் செல்வதைப் பார்த்து விட்டு விசிலடித்தபடியே காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான் ஸ்ரீதர்.


அவனது கார் சாலையைக் கடக்கும் வரை பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்திருந்த ஆனந்திக்கு அதற்கு மேல் கட்டுப் படுத்த முடியாமல் அழுகை ஊற்றாகக் கிளம்பியது. இதென்ன கொடுமை..?, இவனுக்கு ஊரில் பெண்களே கிடைக்கவில்லையா..?, அவன் மட்டும் நாளை வீட்டிற்கு வந்தால் அப்பா அருவாளை எடுத்து இவளை வெட்டிப் போட்டாலும் ஆச்சர்யப் படுவதற்கில்லை.. ஆண்,பெண்ணுக்கிடையில் இது போன்ற பிரச்னை என்றால் பெண்ணிடம் மட்டுமே தவிறிருப்பதாக என்னும் கட்டுப் பெட்டி தந்தை.

இவனை எப்படிச் சமாளிப்பது..?, சில நாட்களில் திருமணத்தை வைத்துக் கொண்டு.. யாரிடம் இதற்குத் தீர்வு காண முடியும்..?, வீட்டிற்கும்,தந்தைக்கும் தெரியாமல் இதை முடிவுக்குக் கொண்டு வருவது எப்படி..? என்றெண்ணியவளுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது.

வேகமாக தன் செல் போன்-ஐ எடுத்து அதில் சுஜிப்ரியா என்று பெயரிடப் பட்டிருந்த எண்ணை அழுத்தி "ஹலோ.."என்றவள் "ப்ரியா.. நான் ஆனந்தி.. இப்போது வீட்டில் தானே இருக்கிறாய்..?, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.. உன் வீட்டிற்கு வருகிறேன்.."என்றவள் எதிர் முனை என்ன கூறியதோ.. அதுவரை இருந்த மனநிலை மாறி லேசாகப் புன்னகைத்தபடி "ஹ்ம்ம்,சரி.."என்று போன்-ஐ கட் செய்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் தோழியின் வீட்டினுள் நுழைந்தவளுக்கு அங்கே கண்ட காட்சி சிரிப்பை வரவழைத்தது..

DO NOT COPY



DOCOPY

Nindran kaathalai enni kalikkindren - Nivetha

# அத்தியாயம் – 2



**நீலக் கடலினிலே நின்றன்**

**நீண்ட குழல் தோன்றுதடி**

**கோல மதியினிலே நின்றன்**

**குளிர்ந்த முகம் காணுதடி**

**ஞால வெளியினிலே நின்றன்**

**ஞான ஒளி வீசுதடி**

**கால நடையினிலே நின்றன்**

**காதல் விளங்குதடி**!

"**ஆ**டி வா.. ஆடி வா.. ஆணழகைத் தேடி வா..பேரின்பம் காணலாம் வா......"என்ற படி பாடல் வரிகளுக்கேற்ப முகத்தில் அனைத்து ரசங்களும் சொட்டச் சொட்ட.. தலையில் துப்பட்டாவைக் கட்டிக் கொண்டு ஓர் புறம் அன்னையுடனும்.. மறுபுறம் தந்தையுடன் நடனமாடிக் கொண்டிருந்தாள் சுஜிப்ரியா. "ஐயோ.. விட்டுத் தொலையேண்டி.., காலை நேரத்தில் வேலையைச் செய்ய விடாமல் என்ன இது சின்னப் பிள்ளையாட்டம்...?"என்று தலையில் அடித்துக் கொண்ட பெண்மணியிடம்..

"Mrs . கோமள வள்ளி.., உங்களுக்கு டான்ஸ் நன்றாகத் தான் வருகிறது.. தாளம் தவறாமல் ஆடுகிறீர்கள்.., ஆனால்.. உங்கள் ஜோடி Mr .மஹா லிங்கம் அளவிற்கு நீங்கள் ஆட வேண்டுமானால்.. நிறைய ப்ராக்டிஸ் தேவைப்படும்.. உங்கள் வீட்டிலேயே ஒரு நடனப் புயலை வைத்துக் கொண்டு... என்ன

அப்படிப் பார்க்கிறீர்கள்..?, என்னைத் தான் கூறுகிறேன்! நீங்கள் இன்று வரை நடனம் கற்றுக் கொள்ளாமல் இருப்பது.. வெட்கக் கேடாக உள்ளது எனக்கு.., நாளையிலிருந்து மாலை ஆறிலிருந்து ஏழு வரை.. நோ,நோ .. அது சரி வராது.. ஒன்பதிலிருந்து பத்து வரை உங்களுக்கு ப்ராக்டிஸ் டைம்..,"

"இரவுச் சாப்பாட்டுக்கு சட்னி அரைக்க வேண்டும்.., வெங்காயம் உரிக்க வேண்டும் போன்ற சின்ன காரணங்களுக்காக ப்ராக்டிஸ்-ஐ தவிர்க்கக் கூடாது Mrs.கோமு.. Mr.லிங்கம் ஆடுவதைப் பார்த்தீர்கள் அல்லவா..?, ஒவ்வொரு முறையும் உங்களை விட அவர் தான் அதிகம் ஸ்கோர் செய்கிறார். அதனால் mrs .கோமு.. you should concentrate more .."என்று பொறுப்பான ஆசிரியையாகக் கூற அவள் முதுகில் ஒரு அடியை வைத்த கோமு..

"நான் இப்போது நடனம் கற்றுக் கொள்ளாதது ஒன்று தான் குறை... போடி.. நீ தான் சிறு பிள்ளை போல் ஆட்டம் போடுகிறாய் என்று பார்த்தால்.. உன் தந்தையும் சரிக்குச் சரியாக உன்னோடு சேர்ந்து ஆடிக் கொண்டு.. இதில் என்னை சேர்த்துக் கொள்ளும் படி வக்காலத்து வேறு.., ஏன் இப்படி இருக்கிறீர்கள்..?, வயது வந்த பெண்ணைப் போலவா உங்கள் மகள் நடந்து கொள்கிறாள்..?, இவளால் பக்கத்துக்கு வீட்டுக்காரர்களிடம் என் மானம் போகிறது.."என்று கணவரிடம் முறையிட்டவள்..

“நேற்று மார்க்கெட்டிலிருந்து வரும் வழியில் பக்கத்து வீட்டுக் குட்டிப்பிசாசு.. ஆன்ட்டி.. நீங்கள் நேற்று செய்த அந்த நாக்கு மூக்கா step sooper ஆன்ட்டி என்கிறாள்.., உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டதற்கு.. காலையில் உங்கள் வீட்டில் பாட்டுச் சத்தம் கேட்டாலே நாங்கள் ஜன்னலில் ஐக்கியம் ஆகி விடுவோம் ஆன்ட்டி.., அக்கா சொல்லித் தருவது போல் நீங்களும்,அங்கிள்-ம் ஆடுவது சூப்பர் ஆன்ட்டி என்கிறதுகள்.. எனக்குத் தானே தெரியும்.. இவள் சொல்லுவதை ஆடவில்லையென்றால் இவள் என்னைப் படுத்தும் பாடு.."என்று நொடித்துக் கொண்டார்.

அதற்கு ப்ரியாவோ தலையில் கட்டியிருந்த துப்பட்டாவைக் கழட்டிய படி "எஸ்,எஸ் mrs . கோமு.. நீங்கள் ஆடா விட்டால் உங்கள் அருமை மகன் சாப்பிடும் சாப்பாட்டில் உப்பைக் கலந்து விடுவேன்.. பின் அவன் அழுது வடிந்து சாப்பிடாமல் அலுவலகம் செல்வதைப் பார்த்து.. நீங்கள் தான் வருத்தப் பட வேண்டியிருக்கும்.."என்று துப்பட்டாவை சுற்றியபடியே கூற..

"ராட்சசி.. நீ எப்படியடி பெண்ணாகப் பிறந்தாய்..?, உன்னுடைய கொடுமை தாங்காமல் தான் என் மகன் நீ அலுவலகம் செல்லும் வரை வெளியே வருவதே இல்லை.. பாவம் என் தங்கம்!,"என்றவர் நினைவு வந்தவராக "என்னை விட்டு விட டி.. அவன் இன்று சீக்கிரமாகச் செல்ல வேண்டுமென்று

நேற்றே கூறியிருந்தான்.. அவனுக்குப் பிடித்த அடை தோசை இன்று.."என்று கெஞ்சிக் கேட்க.. "ம்ம்,"என்று யோசித்தவள் "ஓகே,ஓகே.. பிழைத்துப் போகட்டும்..., mrs . கோமு இன்று உங்களுடைய ப்ராக்டிஸ் முடிந்தது.., நீங்கள் செல்லலாம்.. நாளை இரவு 9 மணி... மறக்க வேண்டாம்"என்று விடை கொடுக்க தப்பித்தேன் என்றபடி உள்ளே ஓடிச் சென்றார் வள்ளி.

"mr. மஹா லிங்கம்.. இப்போது.. நான் உங்களுக்கு வெஸ்டர்ன் டான்ஸ்-ஐப் பற்றிச் சொல்லித் தரப் போகிறேன்.."என்று துவங்க.. அவ்வளவு நேரமாக அமைதி காத்த மகாலிங்கம் சற்றுக் கலங்கி "ஐயோ.. அது கொஞ்சம் கஷ்டமாயிற்றே மேடம்.. எனக்கு வராதே.."என்றபடி தலையைச் சொரிய.. "என்ன mr.லிங்கம்..?, நீங்கள் ஒரு versatile டான்சர் ஆக இருக்க வேண்டாமா..?, எல்லா ஸ்டைல்-யும் கற்றுக் கொள்ள வேண்டும்.. வாருங்கள்.."என்றவள் மீண்டும்..

"ஒரு கூடை சன் லைட்.. ஒரு கூடை மூன் லைட்..."என்று ஆடத் தொடங்க இப்போது ஆனந்தியால் சிரிப்பைக் கட்டுப் படுத்த முடியவில்லை.. வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தவள் யாரோ பின்னால் நிற்கும் அரவம் உணர்ந்து திரும்பினாள். ப்ரியாவின் தம்பி சக்தி அங்கே நடப்பவற்றைக் கண்டு முறைத்த படியே நின்றிருந்தான்.

"ஹாய்.. சக்தி..."என்றவளிடம் "பார்த்தீர்களா..?, இது செய்யும் அட்டகாசத்தை...?"என்றவன் விறு விறுவென நடந்து சென்று பாட்டை நிறுத்தி விட்டு இருவரையும் முறைத்தான். ஓசை நின்றதும் திரும்பிப் பார்த்தவள் தம்பியைக் கண்டதும் "டேய்.. எதற்காக பாட்டை நிறுத்தினாய்..?, நானும் mr.லிங்கமும் ப்ராக்டிஸ்-இல் இருப்பது தெரியவில்லை..?, "என்று வினவ..

"ஆமாம், நீ அவருக்கு training கொடுத்து உங்களில் யார் அடுத்த பிரபு தேவாவிற்கு அனுப்ப போகிறாய் பார்.., ஏன் டாடி.. அவள் தான் கிறுக்குத் தனமாக நடந்து கொள்கிறாள் என்றால் உங்களுக்கு என்னவாயிற்று..?, வீட்டில் அனைவருமே கழண்ட கேஸ்-ஆகத் திரிந்தால்.. குடும்பம் எப்படி உருப்படும்..?"என்றவனை இடை மறித்து "டேய்.. தம்பிப் பையா.., அதிகமாகப் பேசாதே.. நீ இன்று அணியப் போவது.. அந்த நீலச் சட்டை தானே...?, பார்த்துக் கொள்கிறேன்.."என்று வில்லத் தனமாகச் சிரிக்க..

"ஏய்.. ஏய்.."என்ற படி அவளருகே வந்தவன் "பார்த்தீர்களா அப்பா..?,உங்கள் அன்பு மகள் செய்வதை.. என்னுடன் வம்பு செய்வதையே பிழைப்பாக வைத்துக் கொண்டு திரிகிறாள்.., உனக்கு என்ன இன்று விடுமுறையா..?, நீ செல்லும் நேரம் பார்த்துக் கணக்கிட்டுத் தானே அறையை விட்டு வெளியே வந்தேன்..?"என்று யோசனையுடன் கூற..

DO NOT COPY

"ஹி ஹி இன்று எனக்கு afternoon shift டா தம்பிப்பையா.."எனக் கூறினாள். அவளது பதிலைக் கேட்டு மேலும் முறைத்தவன் "அப்பா.. தம்பிப்பையா என்று அழைக்க வேண்டாமென்று சொல்லுங்கள்.. அலுவலகத்திலும் கூட இப்படியே அழைக்கிறாள்.. என் டீம் மேட்ஸ் அனைவரும் சிரிக்கிறார்களப்பா.. எனக்கு அசிங்கமாக உள்ளது.."எனக்கூற..

"ஆமாம்.. பொல்லாத டீம் மேட்ஸ்.., அப்பா.. இவன் கூறுவதை நம்பாதீர்கள்.., எப்போது பார்த்தாலும்.. ஒரு குள்ள கத்திரிக்காயுடனே வலம் வந்து கொண்டிருக்கிறான்.. அவள் கண்ணும்,சப்பை மூக்கும்.. ச்சி ச்சி.. "என முகம் சுளிக்க "ஏய்.. வத்சலாவைப் பற்றி நீ பேசாதே.."என மீண்டும் பாய்ந்தான் சக்தி.

"கேட்டீர்களா..?, வத்சலாவாம்! டேய் சக்தி.. நீ கண்ணாடியில் உன்னைப் பார்த்திருக்கிறாய் தானே..?,ஸ்மார்ட் ஆகத் தானே டா இருக்கிறாய்..?, பின்னே ஏன் அப்படி ஒரு சப்பை ஃபிகர் உடன் உலா வருகிறாய்..?"என வினவ.. அவளது கேள்வியில் வெட்கம் கொண்டவன் புன்னகைத்த படியே "சுஜி.. நிஜமாகவே நான் ஸ்மார்ட்-ஆ?, அப்படியானால்.. உன் friend ரேகாவை எனக்கு அறிமுகம் செய்து வைக்கிறாயா..?"என்று வினவ...

"அடி ... ராஸ்கல்... ஏன் டா.. அழகான பெண்ணைப் பாரடா என்றால்.. நீ உனக்கு அக்கா வயதிலிருக்கும் பெண்ணிற்கு நூல் விடுகிறாயா..?"என்றபடி அவனை துரத்திக் கொண்டு ஓடியவள் வாசலருகே ஆனந்தி நிற்பதைக் கண்டு விட்டு ஓடுவதை நிறுத்தி மீண்டும் துப்பட்டாவை இடுப்புக்கு மாற்றி "தம்பிப் பையா உன் சண்டையை பிறகு வைத்துக் கொள்கிறேன்.."என்றவள்..

அவளருகே சென்று "ரதி.. தீ.. தீ.. ஆனந்தி.. ஆனந்தி.. ஆனந்தி.., நான் பில்லா,ரங்கா,பாட்ஷா தான்.. என் பிஸ்டல் பேசும் பேஷா தான்.. ஆனந்தி... தீ..."என்றபடி அவளைச் சுற்றி சுற்றி ஆடியவள் "என்ன தீ.. தீ.. ஆனந்தி.., முகத்தில் ஒரே சோகம்..?, பெயர் தான் ஆனந்தி..!!! நீயும் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரியவில்லை.. உன்னைச் சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதாகத் தெரியவில்லை. உனக்கு எதற்கு இந்தப் பெயர் தீ..?"என்று வினவ..

"ஏய்.. தீ என்று அழைக்காதே என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்..?"என்று ஆனந்தியும் அவள் பங்கிற்கு பாய அதைக் கேட்ட சக்தி மீண்டும் தந்தையின் புறம் திரும்பி “பார்த்தீர்களா டாடி..?, ஒருவரையும் விட்டு வைப்பதில்லை..,”என்று குறை கூற..

அப்போது.. சமையலறையிலிருந்து வெளியே வந்த வள்ளி “ஏன் சக்தி..?, அவரிடம் போய்... சுஜியைப் பற்றி குறை கூறுகிறாயே.., நீ என்ன கூறினாலும் என் மகள் தங்கம் என்பார் அவர்.. நல்ல இடம் பார்த்தாய் நீ..”எனக் கூற..

DO NOT COPY

“ஆமாம்.. ஆமாம்..”என்றவனிடம் “சக்தி.. அம்மா பேச்சிற்கு ஆமாம் போடுவதை.. எப்போதடா நிறுத்தப் போகிறாய்..?, “என்றவள் அன்னையின் புறம் திரும்பி “ஆனால் Mrs.கோமு.. நீங்கள் இவ்வளவு ஏமாளியாக இருக்கக் கூடாது..!, உங்களுக்குத் தெரியாமல்.. உங்கள் மகன் செய்யும் குற்றங்களை நான் பட்டியலிடட்டுமா..?”என ஆரம்பித்தவள் தொடர்ந்து..

“சன் டே ஆனதும் நீங்கள் ஆசையாக வடித்துக் கொட்டும் சிக்கன் பிரியாணியை விட உங்கள் மகனுக்கு நம் தெரு மூலையில் இருக்கும் பாய் கடை பிரியாணி தான் பிடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா..?”

“அடுத்தத் தெருவில் இருக்கும் முனியாண்டி விலாசில் உங்கள் மகனுக்கு அக்கௌண்ட் இருப்பது உங்களுக்குத் தெரியுமா..?, உங்களுக்காக ஒரு துரும்பைக் கூட தூக்கிப் போடாதவன் பக்கத்து வீட்டு மாமியின் பில்டர் காபிக்காக அவருடைய காய்,கறிப் பையை தெரு முனையிலிருந்து அவரது வீடு வரை சுமந்து வந்த கதை உங்களுக்குத் தெரியுமா..?”

கையில் சுருட்டி வைத்த மாத இதழோடு குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி நடிகர் விசு பாணியில் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தவள் நிறுத்தி அன்னையின் அருகே வந்து நின்று அவர் தோளைத் தட்டி “இதையெல்லாம் விட பெரிய அதிர்ச்சியான செய்தி ஒன்று உண்டு Mrs.கோமு.. ஆனால் அதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்களோ...”என்று இடைவெளி விட்டவள்..

“உங்கள் மகனுக்கு வத்சலா என்று ஒரு காதலி உண்டு..”என்று அவள் முடிப்பதற்குள் “யேய்... உன்னை..”என்றபடி பாய்ந்து அவள் கழுத்தைப் பற்றிய சக்தியைப் பொங்கி வந்த சிரிப்போடு தடுத்துக் கொண்டிருந்தார் மஹாலிங்கம்.

“சக்தி.. பேசிக் கொண்டிருக்கையில் இது என்ன டா கை நீட்டும் பழக்கம்..?”என்று அவர் அதட்ட.. “ஆமாம்.. இப்போது பேசுங்கள்.. இவ்வளவு நேரமாக அவள் வாயடிக்கும் போதெல்லாம் மௌனமாக இருந்து விட்டு.. நான் ஒன்று செய்தால் மட்டும் திட்டுவதற்கு வந்து விடுங்கள்..”என்று கோபித்துக் கொள்ள..

அதற்குள் அவனது தாக்குதலிலிருந்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டவள் “என்ன டா வாயடித்தேன்..?, அம்மா.. நான் கூறியது அனைத்தும் உண்மை.. இல்லையென்று உங்கள் மகனை சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்”என்று சவால் விட..

“அப்பா..”என்று பற்களைக் கடித்தான் சக்தி. “சுஜி.. போதும் விளையாடியது..”என்று அவளையும் அடக்கி விட்டு “நீ வாடா ஆனந்தி...”என்று அவள் புறம் சென்றார் மஹாலிங்கம்.



DO NOT COPY

அவர் சென்றதும் ப்ரியாவிடம் திரும்பிய வள்ளி “நீ எங்கே டி என் மகனைப் பார்க்கிறாய்..?, பெரிதாக அவனைக் குறை கூறுகிறாய்..?”என்று வினவ..

“அய்யோ கோமு.. நானும் அவனும் ஒரே ஐடி பார்க்கில் தான் வேலை பார்க்கிறோம்... இது உனக்குத் தெரியும் தானே..?, நானும்,என் தோழியும் வார வாரம் வெள்ளிக் கிழமைகளில் அனைத்து கம்பெனிகளுக்கும் பொதுவான அந்த Food Court-க்கு செல்வோம்.. அப்பொது இந்தத் தடியனும் அங்கே வருகிறான். அதுவும் அந்தக் குள்ளச்சியோடு...”என்று கூறிக் கொண்டிருக்கையில் “ஆமாம்.. இவள் ரொம்ப உயரம் பாரு”என சக்தி முணுமுணுக்க..

“கேட்டுக் கொள்ளுங்கள் Mrs.கோமு.. எப்படி வக்காலத்து வாங்குகிறான் பாருங்கள்.., சொந்த அக்காவை விட அந்த வத்சலா முக்கியமாகிப் போனாள்.”என்று முறைத்துக் கொண்டே குறை கூற..

“அக்காவாம்! அக்கா..”என்று தொடங்கியவனை இடை மறித்த வள்ளி “சக்தி.. அவள் பார்க்க அழகாக இருப்பாளாடா..?”என்று ஆர்வமாக வினவ.. தலையில் அடித்துக் கொண்டாள் ப்ரியா.

“ஒரு சப்பை ஃபிகருக்கு அம்மாவும்,பிள்ளையும் discussion-இல் இறங்கி விட்டார்கள்..”என்ற படி வெகு நேரமாகத் தனக்காகக் காத்திருக்கும் ஆனந்தியை தேடிச் சென்றாள் சுஜி ப்ரியா.

தன் தந்தையுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த ஆனந்தியருகே சென்றவள் “என்ன தீ.. அலுவலகம் இன்று விடுமுறையா..?, காலையிலேயே உன் காற்று இந்தப் பக்கம் வீசுகிறது..?”என்று வினவியவள் அவள் முகம் சோர்ந்திருப்பதைக் கண்டு “தீ.. நம் வினிதாவின் திருமண போட்டோஸ் மெயில் அனுப்பி இருக்கிறாள். பார்க்கலாம் வா..”என்று அவளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.

“என்னவாயிற்று தீ..?, என்ன டல் ஆக இருக்கிறாய்..?”என்று ப்ரியா வினவியது தான் தாமதம் தேம்பி தேம்பி அழத் துவங்கினாள். “ஆனந்தி.. என்ன அழுகை இது..?, அப்படி என்னடி ப்ரச்சனை..?, என் முன்னே அழுவது எனக்குப் பிடிக்காது என்பது உனக்குத் தெரியாது..?”எனக் கோபமாகக் கூற..

“ஆனால் எனக்கு இது வழக்கமான ஒன்றாயிற்றே..!”என்று விரக்தியாகக் கூற “பழக்கப் படுத்திக் கொள்ளாதே என்று தான் கூறுகிறேன்..., சரி, வாதம் செய்ய வேண்டாம்.., இப்போது என்னவாயிற்று.., கூறு..”எனக் கூற..

DO NOT COPY

“என்னைக் காதலிப்பதாகக் கூறிக் கொண்டு ஒரு கிறுக்கன் என் பின்னால் திரிகிறான் என்றேனல்லவா..?”என்று வினவியவளிடம் “யாரைச் சொல்கிறாய் நீ..?”என ப்ரியா கேட்க..

“அன்றொரு நாள் நாம் இருவரும் சிட்டி சென்டருக்கு ஷாப்பிங் சென்ற போது.. எஸ்கலேட்டரில் இருந்து தவறி விழ இருந்த ஒருவனைக் கைப் பிடித்து காப்பாற்றினேனல்லவா..?, நியாபகம் இருக்கிறதா.. உனக்கு..?”

“அந்த இடியட் என்னை ஒரு முறை பஸ் ஸ்டாப்பில் பார்த்து விட்டான். நான் அவனை கைப் பிடித்த நேரம் அவனுக்கு என் மேல் காதல் வந்து விட்டதாம். என்னைப் பல இடங்களில் தேடினானாம்.. கடைசியில் இந்த பஸ் ஸ்டாப்பில் சந்திக்க நேரிட்டதாகக் கூறி ப்ரபோஸ் செய்தானடி..,”என்றவளிடம்..

“உனக்கு 2 மாதத்தில் திருமணம் என்பதை அந்த தீவெட்டி தடியனிடம் தெரிவித்தாயா..?,”என்று சுஜி வினவ..

“அவன் என்னிடம் காதலைக் கூறும் போதே.. எனக்குத் திருமணம் என்கிற விஷயத்தை தெரிவித்து விட்டேனடி..., ஆனால் அவன் 6 மாதமாக என்னைப் பின் தொடர்வதை நிறுத்தவே இல்லையடி..., இன்று.. இன்று..”என்றவள் பேச்சை நிறுத்தி அழுகையைத் தொடர.. அவளை எரிச்சலுடன் நோக்கிய ப்ரியா..

“சொல்லி விட்டு அழேன்டி...”எனக் கூறினாள். அவளது அதட்டலில் காலை ஸ்ரீதர் பேசியதிலிருந்து ஆரம்பித்து அவன் கழுத்தைப் பற்றி மிரட்டியது வரை அனைத்தையும் கூறி முடித்தாள்.

அவள் முடித்ததும் கோபமாக ஏறிட்டவள் “அவன் மிரட்டும் வரை உன் கை என்ன பூப் பறித்துக் கொண்டு இருந்ததா...?, செருப்பைக் கழட்டி 4 சாத்து சாத்த வேண்டியது தானே...? அல்லது போலீஸில் புகார் கொடுக்க வேண்டியது தானே..?”என்றவளிடம்..

“என்னைப் பற்றித் தான் உனக்குத் தெரியுமே சுஜி.., அவன் திடீரென்று அப்படி நடந்து கொண்டதில் எனக்கு பயத்தில் கை,கால் உதறி விட்டதடி.. அது மட்டுமில்லாமல் அவன் பெரிய பணக்காரனடி.. அவன் நினைத்தால் என்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்..”என்றாள்.

“அப்படியென்று அவன் கூறினானா..?, அவன் விதவிதமான கார்களில் வலம் வருவதால்.. அவன் கூறியதை நம்பி விட்டாயா..?, சினிமாக்களில் வருவது போல் அவன் வாடகைக் காரில் வலம் வருபவனாக இருந்தால் என்ன செய்வாய்..?” என்று வினவ..

DO NOT COPY

“இல்லை ப்ரியா.. என் தோழி ஒருத்தி அவனைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் கூறினாள். சீதாராம் டெக்ஸ்டைல்ஸின் ஓனர் அவன்.. பெரிய பணக்காரன்.. அந்தத் திமிரில் தான் இப்படி ஆடுகிறான்.. நீ கூறுவது போல் போலிஸ் புகார் கொடுத்தால்.. சுலபமாக வெளியே வந்து விடுவான். வந்த பின் ஏதேனும் பெரிய பிரச்சனை செய்யத் திட்டமிட்டால்.. அதை என்னால் நிச்சயம் சமாளிக்க முடியாதடி..”

“அவன் கூறியது போல் நாளை மாலை அவன் என் வீட்டிற்கு வந்தால்.. என் நிலைமை என்ன ஆகும்.., அப்பா என்னை வெட்டிக் கூறு போட்டு விடுவார். உனக்குத் தான் அவரைப் பற்றித் தெரியுமே..?, அவன் உன்னிடம் இப்படிக் காதல் கொள்ளும் அளவிற்கு நீ அவனைத் தூண்டி இருக்கிறாய் என்று என்னையே தான் தப்பு சொல்வாரே தவிர அவனைத் தண்டிக்க மாட்டார்.., ப்ரியா எனக்கு மிகவும் பயமாக உள்ளதடி..”

“மாப்பிள்ளை வீட்டில் இந்த விஷயம் தெரிந்தால் திருமணத்தைக் கூட நிறுத்தி விடுவார்கள். என் வாழ்வே பாழாகப் போகிறது..”என்றபடி மேலும் மேலும் புலம்பிக் கொண்டு சென்றவளை நிறுத்தி “வேறு என்ன தான் செய்வதாக இருக்கிறாய்..?, வீட்டிலும் சொல்ல முடியாது.. போலீஸிடமும் செல்லக் கூடாது என்கிறாய்.. என்ன தான் செய்யலாம் என்கிறாய்..?”என்று வினவ..

“ஒரு வழி தோன்றுகிறது ப்ரியா...”என்று நிறுத்தியவளிடம் “சொல்லு தீ..”என சுஜி கூற.. “என் தோழி அவனது வீட்டைப் பற்றிக் கூறுகையில்.. அவனது பெற்றோர் மிகவும் கண்டிப்பானவர்கள் என்று கூறினாள். அதனால்.. அவனது அன்னையிடமோ.. தந்தையிடமோ.. இதைப் பற்றி கூறினால்.. நிச்சயம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்குமென்று தோன்றுகிறது...”என்றாள் ஆனந்தி.

அவளது பதிலைக் கேட்டு மலர்ந்த சுஜி “சரியாகச் சொன்னாய்.. அவனது தந்தையைப் பார்த்துப் பேசி.. அவனது லட்சணத்தைப் பற்றிக் கூறு.. ராஸ்கல்.. பணமிருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைப்பு.. இடியட்..”என்றவளிடம்..

“ப்ரியா.. அவன் வீட்டிற்கு செல்லப் போவது நான் இல்லை..”என்று தயங்கியவளிடம் “பின்னே..?”என்று ப்ரியா வினவ.. தலை குனிந்தபடி “நீ தான்டி..”எனக் கூற.. “நானா..”என்று திகைத்தாள் சுஜிப்ரியா.

பின் “என்னடி உளறுகிறாய்..?, சம்பந்தமே இல்லாமல்.. நான் எப்படி அவன் இல்லத்திற்குச் செல்ல முடியும்..?, அதெல்லாம் சரிப் படாது..”என்று கூறியவளை அவசரமாக இடைமறித்து.. “

DO NOT COPY

“சுஜி.. ப்ளீஸ் டி.. நான் சென்றால் நிச்சயம் ஏதேனும் உளறி வைத்துக் காரியத்தை கெடுத்து விடுவேன்.. பயத்தில் அழுகை வந்தாலும் ஆச்சர்யப்படுவதிற்கில்லை.. நீ சரியாகப் பேசி கட்சிதமாக முடித்து விடுவாய்... எனக்காக ப்ரியா.. ப்ளீஸ்டி.. உன்னை விட்டால் நான் யாரிடம் செல்வேன்..?ம்?, எனக்காக இந்த உதவியை செய்து கொடு.. ப்ளீஸ்டி..”என்று கெஞ்சத் துவங்க..

“இப்படி ப்ளீஸ் போட்டுத் தான் ஒன்பதாம் வகுப்பிலிருந்து என்னிடம் நினைத்த காரியத்தை சாதித்துக் கொண்டிருக்கிறாய் நீ..”என்று கூறியவள் தொடர்ந்து “சரிடி.. நானே செல்கிறேன். ஆனால் ஒன்று அவன் தந்தையிடம் கூறிய பின்பும் கூட பிரச்சனை முடியவில்லையென்றால்.. நிச்சயம் உன் வீட்டில் சொல்லி விடலாம்.. இது உனக்கு ஓகே என்றால்.. நான் செல்கிறேன்..”எனக் கூற வேறு வழி இல்லாமல் தலை ஆட்டி வைத்தாள் ஆனந்தி.

அதன்பின் ஆனந்தியின் தோழியின் மூலம் ஸ்ரீதரின் வீட்டு விலாசத்தைப் பெற்றுக் கொண்டார்கள். மாலையானதும் ஆனந்தியை அவளது வீட்டில் விட்டுவிட்டு ஸ்ரீதரின் வீட்டை நோக்கி தன் ஸ்கூட்டியில் பயணமானாள் சுஜிப்ரியா.



DO NOT COPY

## அத்தியாயம் - 3



**காதலடி நீ எனக்கு**

**காந்தம் அடி நான் உனக்கு**

**வேதமடி நீ எனக்கு**

**வித்தையடி நான் உனக்கு**

**போதமுற்ற போதினிலே**

**பொங்கிவரும் தீஞ்சுவையே**

**நாத வடிவானவளே**

**நல்ல உயிரே கண்ணம்மா...!**

DO NOT COPY

**அ**ன்று பிரதோஷம் என்பதால் அனுவைக் கல்லூரியிலிருந்து விரைவிலேயே வீட்டிற்கு வந்து விடும்படி சீதா கூறியிருந்தார். அதனால் அனு அன்று மதியம் 3 மணிக்கே வீட்டை அடைந்திருந்தாள். அடுத்த ஒரு மணி நேரத்தில் கோவிலுக்குச் செல்லத் தயாராகி வெளியே வந்தவள் ஷ்யாமின் அறையில் அரவம் உணர்ந்து "அம்மா அண்ணா வீட்டில் தான் இருக்கிறானா..?,"என்றபடி அவன் அறைக்குச் சென்றவள் 'அண்ணா.. என்ன இந்த நேரத்தில் வீட்டில் இருக்கிறாய்.., ஆச்சரியமாக இருக்கிறது.."என வினவ..

"அது நான் கேட்க வேண்டிய கேள்வி.. நீ என்ன இந்த நேரத்தில் வீட்டில் இருக்கிறாய்? உனக்கு கல்லூரி முடியும் நேரம் 5 மணி தானே..?, ஏன் விரைவிலேயே வந்து விட்டாய்..?, உடம்பு சரி இல்லையா அனு மா..?"என்றபடி அவள் கன்னத்தைத் தொட்டுப் பார்க்க.. "அய்யோ அண்ணா.. எனக்கு உடம்புக்கு

ஒன்றுமில்லை.. நன்றாக இருக்கிறேன். அம்மா இன்று கோவிலுக்குச் செல்ல வேண்டுமென்றார்கள், அதனால் தான் சீக்கிரம் வந்தேன்..”என்று கூறினாள்.

“ஆக மொத்தம்.., நீ படிப்பதே இல்லை..,அம்மா கோவிலுக்கு அழைத்ததும் ஓடி வந்து விட்டாய்.., ஆமாம், உனக்கு யார் அனுமதி கொடுப்பது..?, ஓ! அனுமதி வாங்குவதேயில்லை.., கட் அடித்து விட்டாய்.. அப்படித் தானே..?, படிப்பதை விட்டு விட்டு அம்மாவுடன் கோவில்,குலமென்று திரிந்து கொண்டிருக்கிராய்..!, என்ன..?”என்று சிரித்தபடியே வினவினான்.

“போ அண்ணா.. என்றோ ஒரு நாள் கட் அடித்ததற்குக் கூடத் திட்டுகிறாயே..,”என்று அனு சிணுங்கிக் கொள்ள.. மேலும் சிரித்தபடி அவள் தலையைப் பிடித்து ஆட்டியவன் “சரி டா... நீ கோவிலுக்குச் செல்.. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது... முடித்து விட்டு அலுவலகம் செல்கிறேன்.”என்றபடி கணினியின் முன்பு திரும்பினான் ஷ்யாம். “சரி அண்ணா..,”என்று படியிறங்கிச் சென்று விட்டாள் அனு.

ஆனந்தியின் தோழி கொடுத்த முகவரிக்குச் சென்றடைந்த சுஜிப்ரியா வண்டியை நிறுத்தி விட்டு அந்தப் பெரிய வீட்டை நிமிர்ந்து நோக்கினாள். வாசலில் நின்றிருந்த வாட்ச்மேனிடம் “ஸ்ரீதரைப் பார்க்க வேண்டும்..”என்று கூற.. அவனும் கேள்வி ஏதும் கேட்காமல் கதவைத் திறக்க உள்ளே நுழைந்தாள்.

வீட்டின் உள்ளே தெரிந்த பிரம்மாண்டம் அவள் எதிர் பார்த்தது தான் என்பதால் முகத்தில் ஒரு வித ஏளனம் பிறந்தது. அங்கே எதிர்பட்ட வேலையாளிடம் “ஸ்ரீதர் இருக்கிறாரா..?”என்று வினவினாள். “இதோ அழைத்து வருகிறேன்.., நீங்கள் அமருங்கள்”என்று கூறி விட்டு அவன் உள்ளே திரும்பினான்..

அங்கே இருந்த ரவி வர்மாவின் ஓவியத்தைப் பார்வையிட்டபடி நின்று கொண்டிருந்தவள் “இதோ.. அய்யா வந்து விட்டார்..”என்று வேலையாளின் குரல் மறுபடியும் ஒலிக்க..

இவனை அய்யா என்று தான் அழைப்பார்களா?.. பொறுக்கி புத்தி உள்ள ஒருவனை இப்படித் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள் என்று பொறுமியபடி ஓவியத்தின் மீது பதித்திருந்த பார்வையை மாடிப் படியில் இறங்கி வந்து கொண்டிருந்தவனின் மீது செலுத்தினாள்.

பார்க்க நன்றாகத் தான் இருக்கிறான்! அதற்காக எந்தப் பெண்ணாக இருந்தாலும் இவன் அழைத்ததும் இவன் காலடியில் விழுந்தாக வேண்டுமா என்ன..?, பொறுக்கி ராஸ்கல்...! இதோ வைக்கிறேனடா உனக்கு ஆப்பு!

DO NOT COPY

படியிலிருந்து கீழே இறங்கி வந்த ஷ்யாம் அங்கே புதிதாக ஒரு பெண் நின்று கொண்டிருப்பதையும் தன்னையே உறுத்து நோக்கிக் கொண்டிருப்பதையும் கண்டு வியந்த படி யார் இவள் ஏதேனும் பொருள் விற்க வந்திருக்கும் விற்பனைப் பெண்ணா..?, ஆனால் வீட்டிற்குள் விட மாட்டார்களே..!, எப்படி நுழைந்தாள்..?, பார்த்தால் விற்பனைப் பெண் போல் தெரியவில்லையே! ஒரு வேளை அனுவின் தோழியாக இருப்பாளோ!

இந்த எண்ணம் தோன்றியதும் அவன் வரவேற்பது போன்ற ஒரு புன்னகையை முகத்தில் தேக்கிக் கொண்டு அவளை நோக்க.. அவளோ அவனை மேலும் முறைத்து வேலையாள் உள்ளே சென்றதை உறுதி படுத்திக் கொண்டு அவனருகே வந்து நின்றாள். அவளது செய்கைகளை வினோதமாகவும் வியப்புடனும் நோக்கிக் கொண்டிருந்தான் ஷ்யாம் பிரபு.

"பணக்காரன் என்றால் தலையில் என்ன கொம்பா முளைத்திருக்கிறது?, உங்கள் இஷ்டப் படி உலகமே இயங்க வேண்டுமோ..?, பயந்த ஏழைப் பெண் ஒருத்தி சிக்கி விட்டால் போதுமே.., உங்கள் வீரத்தை அவளிடம் காட்ட ஆரம்பித்து விடுவீர்கள்..?"என்று முகவுரை ஏதுமில்லாமல் அதிரடியாக தாக்கத் துவங்க...

அவனோ மேலும் குழம்பியபடி "என்ன கூறுகிறாய்..?,யார் நீ..?, எதற்காக என் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறாய்..?, என்ன வேண்டும் உனக்கு..?"என்று எரிச்சலுடன் வினவ.. முதல் சந்திப்பிலேயே ஒருமையில் விளிக்கிறானே என்றெண்ணியபடி "ஓ!, சார்-க்கு நான் யாரென்று தெரியாதோ...?, ஆனந்தி தெரியுமா...?, எப்படி மறந்து போகும்..?, கழுத்தைப் பிடித்து மிரட்டி உங்கள் வீரத்தைக் காட்டியிருக்கிறீர்கள் அல்லவா..!, அதனால் மறக்காது.. "என்று எகத்தாளமாகக் கூறினாள்.

"ஆனந்தியா..?, யார் ஆனந்தி..?, நீ வீடு மாறி வந்திருக்கிறாய் என்று நினைக்கிறேன்.. ஆனந்தி என்று யாரையும் எனக்குத் தெரியாது.."என்று பொறுமையாகக் கூற.. அவனை நிமிர்ந்து நேராக நோக்கியவள் "சீதாராம் டெக்ஸ்டைல்ஸின் ஓனர் Mr.ராஜாராமன் வீடு தானே இது..?"என வினவ..

"ஆமாம்..."என்றவன் நிறுத்தி "ஆனால் எனக்கு ஆனந்தி என்கிற பெயரில் யாரையும் தெரியாதே!.."எனக் கூற அவனை அற்பமாக நோக்கியவள் "இப்படிக் கூற உங்களுக்கு வெட்கமாக இல்லை..?, காலையில் ஒரு பெண்ணிடம் என்னை நீ காதலித்தே ஆக வேண்டுமென்று கழுத்தைப் பிடித்து மிரட்டி விட்டு இப்போது அவள் யாரென்றே தெரியாது என்கிறீர்கள்..? என்ன பிறவி சார் நீங்கள்..?"என்று கேட்க...

DO NOT COPY

காதலிப்பதாக நான் மிரட்டினேனா..? இவள் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்..! "என்ன உளறுகிறாய்..?, நான் மிரட்டினேனா..? அதுவும் என்னைக் காதலிக்கச் சொல்லி!, இதோ பார்.., நீ கூறுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை.., நான் யாரையும் மிரட்டவில்லை.. எனக்கு ஆனந்தி என்கிற பெயரில் யாரையும் தெரியாது... பெண்களின் பின்னே சுற்றித் திரிவதற்கு நான் வேலையற்றவனுமில்லை, ரோட்டோர ரோமியோவும் இல்லை.. நீ என்ன திட்டத்தோடு என் வீட்டுக்குள் நுழைந்திருக்கிறாய்..?,யார் உன்னை அனுப்பியது..?, பணத்திற்காக யார் என்ன கூறினாலும்.. என்ன வேண்டுமானாலும் செய்வீர்களா..?"என ஏளனத்துடன் வினவ..

பொங்கிய சினத்துடன் வேகமாகச் சென்று அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றியவள் "என்னடா கூறினாய்..., நான்.. நான் பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யும் கூட்டமா..?, கீழ்த்தரமாக ஒரு பெண்ணை மிரட்டும் நீ நல்லவனா..?, ஆனந்தியைப் போல் நான் கோழை இல்லை.. நீ பேசுவதைக் கேட்டு வாயை மூடிக் கொண்டு செல்வதற்கு!, போலீஸில் புகார் செய்து முட்டிக்கு முட்டி தட்டி விடுவேன்..."என்று மிரட்ட ஆரம்பித்தாள்.

தன் வீட்டில் வைத்து தன்னையே சட்டையைப் பற்றி மிரட்டிக் கொண்டிருக்கும் அவளைக் கண்டு சிரிப்பும்,கோபமும் ஒரு சேர எழுந்தது ஷ்யாமிற்கு. தன் சட்டையின் மீது பதிந்திருந்த அவள் கரத்தை விலக்க முயன்றபடி "ஏய்... இதோ பார்... நான் சொல்வதைக் கேள்.."என்று அவளிடம் அவன் தன்னை புரிய வைக்க முயன்று கொண்டிருந்த வேளையில்...

கீழே ஆனந்தி,ஆனந்தி என்று தன்னுடைய காதலியின் பெயர் அடி படுவதைக் கண்டுத் தன் அறையிலிருந்து வெளியே எட்டிப் பார்த்த ஸ்ரீதர் ஷ்யாமின் சட்டையைப் பற்றியபடி ப்ரியா நின்று கொண்டிருப்பதைக் கண்டு இவள் ஆனந்தியின் தோழியாயிற்றே! என்ற படி பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தவன் "அண்ணா..."என்றழைக்க...

மாடியிலிருந்து மற்றுமொரு இளைஞன் இறங்கி வருவதைக் கண்டவள் திகைத்து ஷ்யாமை நோக்க.. அவள் இன்னும் தன் சட்டையிலிருந்து கையை விலக்காததைக் கண்டு தானே அவள் கைகளை விலக்கியவன்...

பதறி ஓடி வந்த ஸ்ரீதரையும்.. திகைத்து விழித்துக் கொண்டிருக்கும் அவளையும் நோக்கி விஷயத்தை யூகித்து விட்டான். அதற்குள் அவளே "இதில்... ஸ்ரீதர்...."என்று இழுக்க... "இவன் தான் ஸ்ரீதர்..., என்ன விஷயம் என்பதை இப்போதேனும் ஒழுங்காகக் கூறுகிறாயா..?"என்று கோபமாக வினவினான்.

DO NOT COPY

ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் ஆரம்பித்த சந்திப்பில் இருந்து தொடங்கி அவன் ஆனந்தியின் கழுத்தைப் பிடித்து மிரட்டியது வரை அனைத்தையும் விவரித்தாள். “உங்கள் தம்பி செய்த கீழ்த்தரமான காரியத்தைப் பாருங்கள் சார்..., ஆண் பிள்ளையென்றால்.. பெரிய பணக்காரனாக இருந்தால்.. தப்பு செய்தே ஆக வேண்டுமென்று கட்டாயம் எதுவுமில்லை..., இது தான் உங்கள் பெற்றோர் உங்களை வளர்த்த லட்சணமா..?,கூப்பிடுங்கள் அவர்களை.. நான் சந்திக்க வேண்டும்”என்று வினவியவளை கோபத்துடன் இடைமறித்தவன்..

“எங்கள் பெற்றோரின் வளர்ப்பைப் பற்றி நீ குறை கூற வேண்டிய அவசியமில்லை.., நீ யார்..?, ஆனந்தியின் சகோதரியா..?, அவளது உறவா..?, உன் பெயரென்ன..?”என்று வினவினான்.

“நான் ஆனந்தியின் தோழி என் பெயர் சுஜிப்ரியா..”என்றவள் “நான் உங்கள் பெற்றோரின் வளர்ப்பைப் பற்றி குறை கூறுவதற்கோ..., ஆராய்வதற்கோ.. வரவில்லை... என் தோழியின் பிரச்சனைக்கு முடிவு வேண்டும்.. அதற்கு நான் உங்கள் பெற்றோரை சந்தித்தாக வேண்டும்..., எங்கே அவர்கள்..?,:என்று மிடுக்காக வினவ..

அவளது தைரியத்தை உள்ளூர மெச்சியபடி “இதோ பார்.. என் வீட்டைப் பற்றியோ.. என் பெற்றோரைப் பற்றியோ உனக்கு என்ன தெரியும்..?, இந்த வீட்டிற்குள் நுழைந்ததிலிருந்து நீ போடும் சத்தத்திற்கும்.. கூச்சலுக்கும்.. உன்னை எப்போதோ கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பேன்.. ஒரு பெண்ணின் வாழ்வு சம்பந்தப் பட்ட விஷயம் என்பதால் தான் நான் பொறுமையாக இருந்ததே..!”

“அதை உனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு.. மேலும் மேலும் நீ பேசிக் கொண்டு சென்றால்.. நான் அமைதியாக இருப்பேன் என்று எண்ணாதே...”என்று மிரட்டலில் முடித்தான்.

அவனது பதிலில் மீண்டும் ஏளனத்தை முகத்திற்கு கொண்டு வந்த சுஜிப்ரியா “அண்ணனும்,தம்பியும் பெண்களை மிரட்டுவதையே பிழைப்பாக வைத்திருக்கிறீர்கள்..?,கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவீர்களா..?, தவறு செய்தவனைக் கொண்டாடும் குடும்பத்தை இங்கே தான் காண்கிறேன். ஆனால் இன்னுமொருமுறை உங்கள் தம்பி என் தோழியைத் தொந்தரவு செய்தால்.. ஜெயிலில் களி திங்க வேண்டியது தான்.. பொறுக்கி ராஸ்கல்...!, கேள்வி கேட்பதற்கு யாருமில்லையென்று எண்ணமா..?”

“உன் குடும்பத்தை மதித்துப் பேச வந்தால்.. உன் அண்ணன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன் என்கிறார்.. உன் தந்தையிடம் பேசி மட்டும் என்ன

DO NOT COPY

பெரிதாக ஆகிவிடப் போகிறது.. அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே..?”என்று கூற..

அதற்கு மேல் பொறுமையற்று கோபத்துடன் அவள் கைகளைப் பற்றியவன் தரதரவென இழுத்துக் கொண்டு வெளியே சென்றான். அவன் கை பற்றிய இடம் எரியத் துவங்க “கையை விடுங்கள்....”என்று வெடுக்கென்று உறுவியவள் “உண்மையைச் சொன்னால் எரிகிறதோ...?,சரியான காட்டுமிராண்டிக் கூட்டம்..”என்று முணுமுணுக்க.. “அதிகமாகப் பேசாதே... என் தந்தையைப் பற்றி பேசுவதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது..?,அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்..?, முட்டாள்! என் வீட்டுப் பிரச்சனையை எப்படி சமாளிப்பதென்று எனக்குத் தெரியும்... உன்னுடைய அறிவுரை தேவையில்லை.. இனி அவனால் உன் தோழிக்கு எந்த வித பிரச்சனையும் வராது.. அதனால் இத்தோடு முடித்துக் கொண்டு நீ செல்லலாம்.. அதிகப் ப்ரசங்கி!”என அமைதியான குரலில் அழுத்தமாக அவன் கூற..

“கலிகாலம் என்பது சரியாகத் தான் இருக்கிறது..., தவறும் செய்து விட்டு நியாயம் வேறு பேசுகிறார்கள்! காதல் என்கிற பெயரில் மிரட்டுகிறார்கள்!”என நக்கல் செய்தவள்.. “ஏன் சார்... நீங்கள் யாரையும் மிரட்டவில்லையா..?, பேசாமல் காதல் மிரட்டல் என்கிற பெயரில் அண்ணனும் தம்பியும் புத்தகம் எழுத வேண்டியது தானே...”என்று நிறுத்தாமல் பேசிக் கொண்டெ செல்ல..

“அப்படி மிரட்டுவர்களின் வீடுகளுக்குச் சென்று எப்படி கலாட்டா செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நீ புத்தகம் எழுதி விடு... செல்லப் போகிறாயா இல்லையா..?”என்று அவன் விரட்ட..

“ஹ்ம்ம்... காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவர்களெல்லாம் காதலிக்க வந்துவிட்டார்கள்.. ச்ச..”எனச் சத்தமாகப் புலம்பியபடி விறுவிறுவென நடந்து அந்த வீட்டை விட்டு வெளியேறித் தன் வண்டியை ஸ்டார்ட் செய்து கிளம்பினாள் சுஜிப்ரியா.

அவளது கடைசி வசனத்தைக் காரில் இருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த அனு விழி விரிய நோக்கியதை ப்ரியா கவனிக்கவே இல்லை..

யார் இந்தப் பெண்..?, இவ்வளவு கோபமாகச் செல்கிறாள்.. அதுவும் காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் அறியாதவர்கள் காதலிப்பதாகக் கூறினாளே... இங்கே யார் காதலிக்கிறார்கள்...? எனக் குழம்பியபடி வீட்டிற்குள் நுழைந்த அனு அங்கே கோபத்துடன் நின்று கொண்டிருந்த ஷ்யாமைக் கண்டு மேலும் திகைத்தாள்.

DO NOT COPY

அண்ணன் ஏன் கோபமாகத் தெரிகிறான்..?, அப்படியானால்... அவள் அண்ணனைத் தான் சந்தித்து விட்டுச் செல்கிறாளா..?என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே.. சீதா அவனிடம் “பிரபு.. இன்னும் அலுவலகம் செல்லவில்லையா கண்ணா..., காபி கொண்டு வரட்டுமா..?”என்று வினவினார்.

“வேண்டாம் அம்மா.. ஸ்ரீதரிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கிறது.. அதனால் தான்..”என்று அவனை முறைத்த படியே கூற.. அவனது பதிலைக் கேட்டு குஷியான அனு “பேசு அண்ணா.. இப்படி ஒரு நாளுக்காகத் தான் காத்துக் கொண்டிருந்தேன்.. நீ பேசினால் தான் அவன் உருப்படுவான்.. waste fellow..”என்றபடி அவனை நோக்க..

அவனோ தலை குனிந்து அமைதியாக நின்றிருந்தான். “பார்த்தாயாம்மா..?, அண்ணனிடம் அவனது பாச்சா பழிக்காது.. நல்லவன் மாதிரி நிற்கிறான் பார்.. fraud..”என அன்னையிடம் முணுமுணுத்தாள்.

“என் அறைக்கு வா..”என்றபடி அவன் முன்னே செல்ல பயத்துடன் நடுங்கியபடி அவன் பின்னே சென்றான் ஸ்ரீதர். அறைக்குள் நுழைந்ததும் தாழிட்டவன் அவன் புறம் திரும்பி “அந்தப் பெண் கூறியது அனைத்தும் உண்மையா...?”என்று வினவினான்.

அவனது கேள்விக்கு பதிலேதும் கூறாமல் அமைதியாக நின்றிருந்தவனைக் கண்டு சினம் தலைக்கேற அவன் கன்னத்தில் பளாரென அறைந்தான். அண்ணன் தன்னை அடிப்பான் என்று நினைத்தும் பார்த்திராத ஸ்ரீதர் தடுமாறி அங்கே இருந்த மேஜையைப் பற்றிக் கொண்டு நின்றான்.

“அப்பாவின் கௌரவத்தை.. நம் குடும்ப மானத்தை மொத்தமாகக் குழி தோண்டிப் புதைத்து விட வேண்டுமென்று நினைத்து விட்டாயா...?, ஒழுக்கக் கேட்டை மட்டும் அப்பா என்றும் சகித்துக் கொள்ள மாட்டார்.., நீ செய்த தவறை அவர் அறிய நேர்ந்தால்.. அவர் கொடுக்கும் தண்டனையைப் பற்றி நீ நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.. “

“பணக்காரன் எனக் கூறி மிரட்டுகிராயாமே.. ம்?, நீ சம்பாதித்தா சொத்தா..?, மூன்று வேலையும் மூக்குப் பிடிக்க தின்று.. உறங்கி.. சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் உனக்கு அது உழைப்பால் விளைந்த பணம் என்பது எப்படிப் புரியும்..?”

“அந்தப் பெண் கூறியது போல்.. போலீஸில் புகார் செய்திருந்தால்.. அப்பா நிச்சயம் உன்னை வெளியே எடுக்க ஒரு துரும்பைக் கூட அசைத்திருக்க மாட்டார். தவறு செய்தவன் தண்டனை அனுபவித்துத் தான் ஆக வேண்டுமென்று நேர்மையாக வாழ்க்கை நடத்துபவர் அவர்..”

"அப்படி ஒரு தந்தைக்கு இப்படி ஒரு கேடு கெட்ட மகன்.. கழுத்தைப் பிடித்து மிரட்டினாயாமே...! திருமணம் என்று அந்தப் பெண் கூறியபின்பும் பின்னாலேயே திரிந்திருக்கிறாய்.. பொறுக்கியாடா நீ..?"என்று அவன் கேட்டதும் "அண்ணா.."என்று கோபமாக ஸ்ரீதர் இடைமறித்தான்.

"விருப்பமில்லை என்று ஒரு பெண் கூறிய பின்பும்.. அசிங்கமாகப் பின்னாலேயே அலைந்து.. அவளை மிரட்ட வேறு செய்திருக்கிறாய்.. நீ நிச்சயம் பொறுக்கி தான் டா.., உன் தங்கையிடம் எவனாவது இப்படி நடந்து கொண்டிருந்தால்.. என்ன செய்திருப்பாய்..?"எனக் கூற..

"அண்ணா அனாவசியமாகப் பேசாதே.. நான் அவளைக் காதலிக்கிறேன். அதனால் தான் பின் தொடர்ந்தேன்.. நம்மைப் போன்ற பணக்காரர்கள் கிடைக்க அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. ஆனால் அவள் ஏனோ.. கொஞ்சம் அலட்டிக் கொள்கிறாள்.. நாளை நான் அவளிடம் பேசும் விதத்தில் பேசினால்.. என் வழிக்கு வந்து விடுவாள்..."என்று அவன் போக்கில் பேசிக் கொண்டே செல்ல..

கோபத்துடன் சுற்றும் முற்றும் நோக்கிய ஷ்யாமின் கண்களுக்குப் படுக்கையின் மீது கிடந்த பெல்ட் ஒன்று புலப்பட.. எடுத்து ஸ்ரீதரை விளாசித் தள்ளி விட்டான். வலியால் சுருண்டு கிடந்தவனைத் துச்சமாக நோக்கியவன்.. "ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நம் பெற்றோருக்குப் போய் நீ பிறந்திருக்கிறாயே..!, பணம்,பணக்காரன் என்கிற திமிருடன் திரிகிறாயா...?, அதை இருந்த இடம் தெரியாமல் அழித்தே விடுவேன்.. ஜாக்கிரதை.. காதலிக்கிறேன் என்றா கூறுகிறாய்..? நீ செய்வது.. காதலா..?, அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு..?, உன் கீழ்த்தரமான எண்ணங்களை.. ஆசைகளை.. காதல் எனக் கூறி பூசி மொழுகாதே.."

"இனி நான் சொல்வதைத் தான் நீ கேட்டாக வேண்டும்.. உன் இஷ்டப்படி நீ ஆடியது போதும்.. இனி உன்னால் அந்தப் பெண்ணிற்குப் பிரச்சனை என்று தெரிந்தால்... தம்பியென்று கூட பார்க்க மாட்டேன்..."எனக் கூறி அவன் முகத்திலேயே பெல்ட்டை எறிந்து விட்டு வெளியேறினான் ஷ்யாம்.

"**எ**ன்னடி அனு..?, என்னவாயிற்று உனக்கு?, இப்படி விழித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறாய்..?"என்றார் சீதா. "ம்.."என்றபடி நிமிர்ந்த அனு "அம்மா.. நாம் வீட்டுக்குள் நுழைந்த போது ஒரு பெண் சென்றாளல்லவா..?, அவளைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.. அண்ணன் ஏன் அந்தப் பெண்ணைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை..?, மறந்து விட்டானா..? அல்லது.. மறைத்து விட்டானா..?, அலுவலக விஷயமாக வந்து சென்றிருக்கிறாள் என்றால்.. குடிக்கத் தண்ணீர் கூடவா கொடுக்காமல் அனுப்பியிருப்பார்..?, உபச்சாரம்

நடந்ததாகவும் தெரியவில்லை...செல்லும் போது அந்தப் பெண்ணின் முகம் சரியில்லை.. உள்ளே வந்து பார்த்தால்.. இங்கே அண்ணனின் முகமும் சரியில்லை..” என விட்டத்தைப் பார்த்தபடி ஆராய்ச்சியில் இறங்கி விட்டிருந்த அனுவை நோக்கிய சீதா..

“நீ ஏனடி அந்தப் பெண்ணைப் பற்றியே யோசிக்கிறாய்..?”எனக் கேட்க.. “ஏனென்றால் அவள் ஒரு அழகான பெண் அம்மா..”எனக் கூறியவளிடம் “அதனால்..?, அதனால் என்னடி?, உன் அண்ணனைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தும் இப்படிப் பேசுகிறாய்..?, அவனுக்கு பெண்களிடம் வெறுப்பு எதுவும் இல்லையென்றாலும்.. எந்தப் பெண்ணையும் அவன் விருப்பத்துடனும் நோக்கியதாகவும் சேதியில்லை.. அவன் உலகமெல்லாம் குடும்பமும்,தொழிலும் மட்டும் தான்..”எனக் கூறினார்.

யோசனையுடன் முகம் சுருக்கியவள் “அதெப்படி அம்மா..?, அண்ணனுக்கு ஃபீலிங்ஸே இல்லையென்கிறாயா..?, காதல் இல்லாதவர்கள்.. காதலிக்காதவர்கள் என்று.. உலகத்தில் யாருமே இல்லைமா.. அதனால் அண்ணன் மனதுக்குள்ளும் நிச்சயம் ஆசைகள் இருக்கும்.. அந்தப் பெண் பேசியதைப் பார்த்தால்... அம்மா.. நீ வேண்டுமானால் பார்.. அந்தப் பெண் அண்ணனுடைய காதலியாகத் தான் இருக்க வேண்டும்..”என்று முடிக்க அவளை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு...

“நீ கூறும் வசனங்களைப் பார்த்தால்.. உன் அண்ணன் இல்லை.. நீ காதலிப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகிறது.. என்னடி அனு..?, அம்மாவிற்குத் தெரியாமல் அப்படி ஏதும் நடக்கிறதா..?”என்று வினவ.. “அய்யோ அம்மா..”என்று தலையில் அடித்துக் கொண்ட அனு...

“யாரைக் காதலிக்கச் சொல்லுகிறாய்...? என் கல்லூரியில் படிக்கும் நொள்ளையையும்,சொத்தையையுமா..? அம்மா எனக்கெல்லாம் இன்னும் வயதிருக்கிறது.. உன் பையன் காதலிக்கிறான் என்று கூறிக் கொண்டிருக்கிறேன்..., நீ அதைக் கவனிக்காமல்.. என்னைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டாய்..?,”எனக் கத்தத் தொடங்க..

“எப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகிறாய்..”என்று வினவினார் சீதா. “செல்லும் போது.. அந்தப் பெண் கூறிய வார்த்தைகள்.. அவள் முகத்தில் இருந்த கோபம்,அண்ணனின் முகத்திலும் இருந்தது.. அவர்கள் இருவருக்கும் ஏதேனும் ஊடலாக இருக்குமோ...?”என்று கூற..

“அனு.. நீயாக எதையேனும்.. இப்படி முட்டாள்தனமாக யூகித்துக் கொண்டே செல்லாதே... சினிமா பார்த்துக் கெட்டுப் போய் விட்டாய்.. அதனால் தான்

DO NOT COPY

இப்படி உளறுகிறாய்.. அப்படியேதும் இல்லையென்று இப்போதே நான் நிரூபிக்கிறேன்..”என்றவர்.. மாடிப் படியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த மகனிடம்..

“வா... ராஜா.. இதோ.. உனக்குத் தான் காபி கலக்கிக் கொண்டிருந்தேன்..”என்றவர் அவன் அருகே வந்து அமர்ந்ததும் “இப்போது பார்..”என்பது போல் மகளிடம் சைகை செய்து விட்டு “கண்ணா.. நாங்கள் கோவிலுக்குச் சென்றிருந்த போது.. யாரேனும் நம் வீட்டிற்கு வந்திருந்தார்களா..?”என்று சகஜமானக் குரலில் வினவினார்.

அன்னை ஊற்றித் தந்த காபியைப் பருகிக் கொண்டிருந்த ஷ்யாம் சலனமற்ற பார்வையால் நிமிர்ந்து நோக்கி “இல்லையே அம்மா... யாரும் வரவில்லையே.. ஏன் கேட்கிறீர்கள்..?”என்று அவரை விட சகஜமானக் குரலில் பதில் கேள்வி கேட்க..

மகளிடம் விட்ட சவால் புஷ் ஆகி விட்டதில் திகைத்து அவர் விழிக்க.. அனு அவசரமாக அண்ணனின் புறம் திரும்பி “இல்லை அண்ணா... அம்மாவின் தோழி.. மீரா ஆன்ட்டி இன்று நம் வீட்டிற்கு வருவதாகக் கூறியிருந்தார்கள்.. அதனால் தான்.. யாரேனும் வந்தார்களா.. என்று கேட்கிறார்கள்.., என்னம்மா..?”என்றபடி கண்களாலேயே அன்னைக்கு சைகைக் காட்ட “ஆமாம்.. ஆமாம்..”என்று அவரும் தலையை ஆட்ட..

“ஓ!”என்ற ஒற்றைச் சொல்லுடன் முடித்துக் கொண்டு “வருகிறேன் அம்மா.. பாய் அனு..”என விடைபெற்றுச் சென்று விட்டான் ஷ்யாம்.


அவன் சென்ற திசையையே நோக்கிக் கொண்டிருந்த அனுவிடம் பதறியபடி திரும்பிய சீதா “அனு.. என்னடி.. இப்படிக் கூறிவிட்டுச் செல்கிறான்..?, நீ கூறியது போல் மறைக்க முயற்சிக்கிறானோ..!, ஆனால் ஏன்..?, எதற்காக மறைக்க வேண்டும்..?, அப்படிப் பார்க்காதேடி... நீ கூறிய காதல்,கண்றாவியையெல்லாம் நான் நம்பவில்லை.. ஆனால் ஏன் மறைக்கிறான் என்று தான் எனக்கு உறுத்தலாக உள்ளது...”என்றார் கவலையுடன்.

“அய்யோ அம்மா.. காதல்.. கண்றாவியான விஷயம் என்று உனக்கு யார் கூறியது..?, அது ஒரு அழகான உணர்வு.. அண்ணன் என்ன டீன் ஏஜ் பையனா..?,இது காதல் இல்லை.. இனக் கவர்ச்சியென்று கூற..?, இப்போதேனும் காதலிக்கின்றானே என்று நான் சந்தோசப் பட்டுக் கொண்டிருக்கிறேன்.. நீ என்னடாவென்றால்...”என்று அன்னையை முறைத்தவள் தொடர்ந்து..

DO NOT COPY

“அண்ணன் அவனுடைய காதல் விஷயத்தைப் பற்றிக் கூறும் போது.. இப்படி முட்டாள்தனமாக உளறிக் கொண்டிருக்காமல்.. அவனது காதலை ஏற்றுக் கொள். குடும்பம்,தொழில் என்று அவன் வாழ்க்கையை நமக்காக அர்ப்பணித்து விட்டதாகக் கூறினாய் அல்லவா..?, இப்போது நாம் அவனுக்கு நம் நன்றியைக் காட்டும் சமயம் வந்து விட்டது.. நிச்சயம் அவனை அவனது காதலியுடன் சேர்த்து வைத்து விட வேண்டும்.. என்ன..?”என்று அதட்ட..

“நீ ஏனடி இப்படிப் பேசுகிறாய்..?, அவன் கூறாவிட்டாலும் நீயாக அனைத்தையும் முடித்து வைத்து விடுவாய் போல..!, உன்னுடையதெல்லாம் வெறும் யூகம் மட்டும் தான்.. நினைவில் இருக்கட்டும்.. அவன் யாரை விரும்புவதாகக் கூறினாலும் கண்ணை மூடிக் கொண்டு சம்மதம் சொல்ல நான் தயார்..”என்று கூறிய சீதாவும் உள்ளூர அனு கூறிய அனைத்தையும் நம்ப ஆரம்பித்து விட்டார்!



DO NOT COPY

## அத்தியாயம் – 4



**பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா**

**பேசும் பொன் சித்திரமே**

**அள்ளி அணைத்திடவே என்முன்னே**

**ஆடி வரும் தேனே!**

**ஓடி வருகையிலே கண்ணம்மா**

**உள்ளம் குளிருதடி**

**ஆடித் திரிதல் கண்டால் உன்னைப் போய்**

**ஆவி தழுவுதடி….!**

**அ**ன்று காலை அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த ராஜாராமன், அனு கல்லூரிக்குக் கிளம்பாமல் அமர்ந்திருப்பதைக் கண்டு "என்னம்மா.. காலேஜ் செல்லவில்லையா..?, மணியாயிற்றே.."என்று வினவியபடியே டைனிங் டேபிளில் வந்தமர..

"இல்லை டாடி…. உடம்பு சரியில்லை.. அதனால் இன்று நான் விடுமுறை எடுத்துக் கொண்டேன்.."எனக் கூற "சரிடா.. ரொம்பவும் முடியவில்லையென்றால்.. அம்மாவை அழைத்துக் கொண்டு ஹாஸ்பிட்டலுக்குச் செல்..:எனக் கூறிக் கொண்டிருக்கையில் "அதற்கெல்லாம் அவசியமே இல்லை டாடி.."என்றபடி தந்தையின் அருகே அமர்ந்த ஷ்யாம்..

“அவள் பாதி நாட்கள் கல்லூரிக்குச் செல்வதேயில்லை.. அம்மாவுடன் கோவில்,குலமென்று திரிகிறாள்.. அதுவுமில்லையென்றால்.. மொத்தமாக இப்படி கட் அடித்து விடுகிறாள்..”எனக் கேலி செய்து சிரிக்க.. “ஹலோ.. நான் கல்லூரிக்குச் சென்றாலும்.. செல்லா விட்டாலும் நன்றாகப் படித்துவிடுவேன்”என்று அனு ரோஷமாகக் கூற.. “அதற்காகத் தான் உன்னை யாரும் எதுவும் சொல்வதில்லை..”என நிறுத்திய ஷ்யாம் தொடர்ந்து..

“இன்றைக்கு என்ன அனுமா..?, ஷாப்பிங்கா..?, சினிமாவா..”என்று வினவியபடியே உண்ணத் துவங்கினான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த அனுவிற்கு அவனிடம் வம்பு செய்யத் தோன்ற.. “ம்ம்.. இன்று அண்ணி வேட்டை அண்ணா.., உனக்காக சென்னை முழுதும் சுற்றி அலைந்து அண்ணியைத் தேடப் போகிறேன்”எனக் கூறினாள்..

“அதற்கு இப்போது அவசியமில்லை அனுமா..”என்று கூறியவனிடம் “அவசியமில்லையா..?, ஏன் அண்ணா..?, நீயே அண்ணியைப் பார்த்து வைத்து விட்டாயா..?”எனக் கேட்க.. அவன் கண்டிப்புடன் அவளை நோக்கி “அனுமா.. என்ன பேச்சு இது...?”என்று அதட்டினான்.

நீ பேசு மகனே! எத்தனை நாட்களுக்கு நீ காதலிக்கும் விஷயத்தை மறைப்பாய்..! இந்த அதட்டல்களையெல்லாம் சுட்டுப் பொசுக்கத் தான் ஒருத்தி வந்து விட்டாளே..!, அண்ணா! இதை உன் வாயாலேயே ஒத்துக் கொள்ள வைக்கிறேன்..!என்றெண்ணியவள் தந்தையிடம்..

“ஏன் டாடி.. அண்ணன் துணி கம்பெனி ஓனரா..?,இல்லை இரும்பு கம்பெனி ஓனரா..?,”எனக் கேட்க.. அதற்கு கலகலத்துச் சிரித்த அவர் “எனக்கும் இந்தச் சந்தேகம் பல நாட்களாக இருக்கிறதம்மா... உன் அண்ணனுடைய பி.ஏ சுமலதாவை அலுவலகத்தில் அனைவரும் சைட் அடித்துக் கொண்டிருக்க அவளோ இவனது ஒற்றைப் பார்வைக்காக ஏங்கிக் கொண்டிருந்தாள். உன் அண்ணன் தான் சாமியாராயிற்றே!.., அவளை எனக்கு பி.ஏவாக மாற்றி விட்டு வேறு ஒரு ஆணை அவனுக்குப் பி.ஏவாக நியமித்துக் கொண்டான். கடைசியில் அந்தப் பெண் சுமலதா.. வேலையை விட்டே சென்று விட்டாள் என்றால் பாரேன்.. இப்படிப் பல பெண்கள் வலை விரிக்க முயன்றும் இந்தச் சுறா மீன் சிக்கவேயில்லை அம்மா..”எனக் கூறிச் சிரிக்க..

ஷ்யாமோ கோபமாகத் தந்தையை நோக்கி “என்ன டாடி.. சின்னப் பெண்ணிடம் எதையெதையோ கூறிக் கொண்டிருக்கிறீர்கள்..?,”எனத் திட்டத் துவங்க.. “நான் எஸ்கேப் ஆகிறேன் அனுமா..”என்றபடி அவர் ஓடி விட.. அனு விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கினாள்.”என்ன சிரிப்பு சீக்கிரம் சாப்பிட்டு விட்டு எழுந்து செல்..”என்கிற அதட்டலுடன் எழுந்தான் ஷ்யாம்.

ஷ்யாம் சென்றதும் வந்தமர்ந்த ஸ்ரீதரை நோக்கிய அனு.. “ஸ்ரீதர்.. நீயா டா..?, என்ன இது முழுக்கை சட்டை,பேண்ட் சகிதம்.. அலுவலகம் செல்பவனைப் போல் தயாராகியிருக்கிறாய்...?”என்று வினவ.. இல்லையென்றால்.. வாங்கிய அடி வெளியே தெரிந்து விடுமே.. என்று மனதுக்குள் எண்ணிய ஸ்ரீதர் பதில் கூறாமல் சாப்பிடத்தொடங்க..

“என்னடா... மணி 9 ஆயிற்று.. நீ எங்கேயோ அவசரமாகத் தினமும் இந்த நேரத்திற்கு வெளியே சென்று விடுவாயே..., இன்றைக்குச் செல்லவில்லையா..?”என்று வினவினாள்..

கையைத் துடைத்தபடியே வந்த ஷ்யாம் அனுவின் கேள்வியைக் கேட்டு ஸ்ரீதரை அழுத்தமாக நோக்க.. அண்ணனின் பார்வையில் தலை குனிந்தவன் “சண்டாளி.. இவன் இருக்கும் நேரம் பார்த்துத் தானா.. இதைக் கேட்டு வைக்க வேண்டும்.. இதற்கு.. எத்தனை அடிகள் கொடுப்பானோ..,!என்றெண்ணியவன் அனுவிடம் “சுண்டெலி.. உன்னைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்..”என்று அடிக் குரலில் சீறியவன் மீண்டும் தலையைக் குனிந்த படி உண்ணத்துவங்கினான்.

“என்னண்ணா ஆயிற்று இவனுக்கு..?”என்று ஷ்யாமிடம் வினவ “அது ஒன்றுமில்லை அனுமா.. 9 மணி வேலைக்கு நேற்றுடன் சுபம் போட்டாயிற்று.. அதனால் இனி சிறிது நாட்களுக்கு என்னுடன் அலுவலகம் வரப் போகிறான்.. “என்று கூறினான்..

சிறிது நாட்களுக்கா.. அப்படியென்றால்..? அதன் பின் என்னை என்ன செய்வதாகத் திட்டம் வைத்திருக்கிறான் இவன்? இவன் என் அண்ணன் அல்ல.. சத்ரு! என்றெண்ணிய ஸ்ரீதருக்கு உணவு உள்ளே இறங்க மறுத்தது. கஷ்டப் பட்டு விழுங்கி தண்ணீரைக் குடித்தவன்.. எழுந்து தமையனுடன் அலுவலுகத்திற்குப் புறப்பட்டான்.

“இனியேனும் வாழ்க்கையில் உருப்பட எனது வாழ்த்துக்கள் டா ஸ்ரீதர்..”என்று தன் கையைப் பற்றிய குலுக்கிய அனுவை முறைத்து.. “அண்ணனோடு அலுவலகம் செல்கிறாயா கண்ணா..?”என்று மகிழ்ச்சியுடன் வினவிய அன்னையையும் தவிர்த்துவிட்டு விறுவிறுவென வெளியேறினான் ஸ்ரீதர்.

“என்னடா பிரபு.. கோபமாகத் தெரிகிறானே..”என்று கவலையுடன் வினவிய தாயாரைத் தோளோடு சேர்த்தணைத்த ஷ்யாம் “ஒன்றுமில்லைம்மா... அவன் சரியாகி விடுவான்..”எனக் கூற.. “சரிடா..”என்று முறுவலித்த அன்னையிடம் விடைபெற்ற ஷ்யாம்.. இந்த அன்னையின் உண்மையான் பாசம்,அவன் நன்றாக இருக்க வேண்டுமென்று அவள் காட்டும் அக்கறை.. இவற்றை

DO NOT COPY

என்றேனும் அவன் புரிந்து கொள்வானா..என்றெண்ணியபடியே.. ஸ்ரீதருடன் புறப்பட்டான்.

காரில் ஏறிய பிரபு.. நேராக ஸ்ரீதரை அழைத்துச் சென்ற இடம்.. அவன் தினமும் ஆனந்தியை அழைத்துச் செல்லும் அந்த யாருமற்றத் தெரு.. அலுவலகத்திற்குச் செல்கிறோம் எனக் கூறி ஷ்யாம் இங்கே அழைத்து வந்ததைக் கண்டு ஸ்ரீதருக்கு பகீரென்றிருந்தது..

காரை நிறுத்தி விட்டு அவன் புறம் திரும்பிய ஷ்யாம் 'இப்போது அந்தப் பெண் இங்கே வருவாளல்லவா..?, அவளிடம் சென்று நீ செய்த அத்தனை தவறுகளுக்கும் மன்னிப்புக் கேள்..''எனக் கூறினான்.

இவன் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறான்..?, என்று உள்ளே டன்டன்னாய் கோபம் எழுந்தாலும் மறைத்துக் கொண்டு.. அண்ணன் மீதிருக்கும் பயத்தில் சரியெனத் தலையாட்டி வைத்தான் ஸ்ரீதர்.

சரியாக 9.10க்கு அந்தத் தெரு வளைவில் நுழைந்த ஆனந்தி அங்கே ஸ்ரீதரின் கார் நிற்பதைக் கண்டு பயந்து நின்று விட்டாள். "பாவி ப்ரியா.., பிரச்சனை முடிந்து விட்டது, அவனது அண்ணனிடம் பேசிவிட்டேன் என்றாளே...!"என்று புலம்பியவளுக்கு முந்தைய நாள் சுஜியிடம் பேசியது நினைவிற்கு வந்தது.

அவன் வீட்டிற்குச் சென்று விட்டு எரிச்சலுடன் திரும்பிய சுஜி நேராக ஆனந்தியின் வீட்டிற்குச் சென்றாள். "என்னடி ஆயிற்று..?"எனப் பதறிய ஆனந்தியைக் கண்டு சிரிப்பெழ... மேலும் அவளை சோதிக்க எண்ணி..

"ஷ்.. அப்பா.. தீ.. ஒரு கிளாஸ் காபி கிடைக்குமா..?, உன் வில்லன் ஸ்ரீதரிடமும்,அவனது அண்ணன் அக்னி மன்னனிடமும் பேசி டயர்ட் ஆகி விட்டது.."எனக் கூற.. ஓடிச் சென்று காபி எடுத்துக் கொண்டு வந்து நீட்டினாள் ஆனந்தி. "பரவாயில்லையே.. வெகு சீக்கிரம் கொண்டு வந்து விட்டாய்.."என்று காபியைப் பருகி முடித்தவளிடம்..

"சீக்கிரம் சொல்லுடி.. எனக்கு மிகவும் பயமாக உள்ளது.."என்று கையை உதறியபடி குதிக்க.. "வாவ்!, தீ... உன் கை மூவ்மென்ட் அழகாக உள்ளது.. உன் structure கூட டான்ஸ் ஆடுவதற்கு ஏற்றார் போல் தான் உள்ளது.. நீயும் என்னிடம் நடனம் கற்றுக் கொண்டாயானால்.. எதிர் காலத்தில் நீ மிகப் பெரிய டான்சராக வருவாய்.."எனக் கூறியவளை முறைத்தபடி கீழே குனிந்தவளை..

தடுத்து நிறுத்திய சுஜி "அய்யோ தீ.. இப்போதே.. நீ குருவின் கால்களில் பணிய வேண்டிய அவசியமில்லை.. அதற்கெல்லாம் நாளிருக்கிறது ஆனந்தீ...."எனக் கூற.. "உன்னை..."என்ற படி தலையணையை எடுத்து அடித்தாள்.

அவளது அடிகளிலிருந்து தப்பித்து ஓடிய ப்ரியாவிடம் “சுஜி.. ப்ளீஸ்டி.. என்ன நடந்தது கூறு.. “என்றவளிடம் அங்கே நடந்த அனைத்தையும் கூறி முடித்தாள். “அந்தக் கோட்டான் ஸ்ரீதர் அவனது அண்ணன் முன்பு பம்மியதைப் போலத் தான் தெரிந்தது. ஆனால்.. அந்த நாயகன் இருக்கிறானே.. அதான்டி அவனது அண்ணன்.. அவன் நல்லவனா.. கெட்டவனா என்றே புரியவில்லை.. ஆனால் ஒன்று தீ.. இனி உன் தோழிக்கு ஸ்ரீதரால் பிரச்சனை வராது என்று மட்டும் கூறினான்.. ஆக.. நீ இனி நிம்மதியாக இருக்கலாம்..”எனக் கூறி விடைபெற்றுச் சென்றாள்.

அவனது அண்ணன் நம்பிக்கை தெரிவித்ததாகத் தானே கூறினாள். பின்னே எப்படி அவன் இங்கே நின்று கொண்டிருக்கிறான்.. பேசாமல் வீட்டிற்குச் சென்று விடலாமா.. என்றெண்ணியவள் இல்லை.. இவன் என்ன பெரிதாக செய்து விடுவான்.. அதையும் பார்த்து விட வேண்டியது தான்.. ப்ரியா! இப்போதைக்கு நீ தான்டி என் குரு எனத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு தன் நடையைத் தொடர்ந்தாள்.

அவனது காரைக் கடந்து செல்ல முற்படுகையில்.. காரைத் திறந்து கொண்டு இறங்கிய நெடியவனையும்,அவனைத் தொடர்ந்து இறங்கிய ஸ்ரீதரையும் கண்டு திகைத்துப் போய் நின்று விட்டாள். அவள் பயத்துடன் மிரண்டு விழிப்பதைக் கண்ட ஷ்யாம்..

லேசான புன்னகையுடன் “பயப்படாதேமா.. உன்னிடம் வம்பு செய்ய நாங்கள் வரவில்லை.., நான் ஷ்யாம் பிரபு.. ஸ்ரீதரின் அண்ணன். இவன் உன்னைப் பின் தொடர்வது.. எங்களுக்கு முன்னமே தெரிந்திருந்தால்.. இவ்வளவு தூரம் பிரச்சனையை வளர விட்டிருக்க மாட்டோம்.. இப்போது உன்னைப் பார்க்க வந்ததே.. மன்னிப்பு கேட்கத் தான்.. எங்கள் வீட்டிலும் உன்னைப் போல் ஒரு தங்கை இருக்கிறாள். உன் பயத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. போலீஸ் கேஸ் அது,இதுவென்று பிரச்சனையைப் பெரிது படுத்தாமல் சமாளித்ததற்கு மிகவும் நன்றி..”எனக் கூறியவன் ஸ்ரீதரை ஒரு பார்வை பார்க்க..

அதுவரை தலை குனிந்த படியே நின்றிருந்தவன் நிமிர்ந்து எங்கோ பார்வையைப் பதித்து “உனக்குத் திருமணம் என்று நீ கூறிய பின்பும் கூட உன்னைத் தொந்தரவு செய்தது தவறு தான்.. மன்னித்து விடு..”எனக் கூறி விட்டு காருக்குச் சென்று அமர்ந்து கொண்டான்.

“இனி உன்னை அவன் தொந்தரவு செய்ய மாட்டான்.. தேங்க்ஸ்மா.. வருகிறேன்..”எனக் கூறிச் சென்று விட்டான் ஷ்யாம்.

DO NOT COPY

அவர்கள் சென்ற பின்பும் கூட அசையாமல் நின்றிருந்த ஆனந்திக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. உடனே ப்ரியாவிற்கு போன் செய்தவள்.. நடந்ததைத் தெரிவிக்க “அப்படியா..?, அந்தச் சின்னப்ப தாஸா மன்னிப்புக் கேட்டான்..?, ஆச்சரியமாக உள்ளதே...”எனக் கூற..

“சின்னப்ப தாஸா..?, அவர் பெயர் ஷ்யாம்டி..”என்று கூற “ஹா.. ஹா.. இல்லை தீ.. கடலோரக் கவிதைகள் படம் பார்த்துக் கொண்டிருந்தேன்.. சத்யராஜைப் பார்த்ததும் அவனது உயரம் நியாபகத்திற்கு வந்தது.. அதனால் தான் சின்னப்ப தாஸ் என்றேன்.. அதை விடு தீ.. உன் பிரச்சனை முடிந்து விட்டதல்லவா..?, எஞ்சாய்!”எனக் கூறிச் சிரித்தாள்.

பாவம்! அவளது பிரச்சனை முடிந்து விட்டது! ஆனால் தனக்கு இனிமேல் வரப் போகும் பிரச்சனையைப் பற்றி அறியாமல் சிரித்துக் கொண்டிருக்கிறாள் சுஜிப்ரியா.

**ஸ்ரீ**தரும்,ஷ்யாமும் அலுவலகத்திற்குச் சென்ற பின் தானும் உண்டு விட்டு அனுவைத் தேடிய சீதா அவள் செல்ஃபோனில் எதையோ உற்று நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு “அனு.. என்னடா.. நிஜமாகவே உடம்பு சரியில்லையா..?என்று வினவினார்.

“அம்மா.. அது அப்பாவிடம் கூறிய பொய்.”என்றவளிடம் “பொய்யா..?, எதற்காகப் பொய் சொன்னாய்..?”என்று கேட்க.. “இங்கே பார்..”என்று கையிலிருந்த காகிதத்தை எடுத்து அன்னையிடம் நீட்டினாள். “என்ன இது..?, ஏதோ முகவரியைப் போல் தெரிகிறதே.. யாருடையது..?”என்று வினவினார்.

“முகவரியே தான்.. அண்ணியின் முகவரி..”எனக் கூற “அண்ணியா..?”என்று வாயைப் பிளந்த சீதா “அனு.. விஷயத்தை முழுதாகத் தெரிந்து கொள்ளாமலே இப்படி அதிவேகமாகப் பிரயாணிக்கிறாயே..?, எனக்கென்னவோ.. உன் அண்ணன் காதலிக்கிறானென்று தோன்றவில்லை.. நீயாக எதையேனும் கற்பனை செய்து கொண்டு.. அதிகப்ரசங்கித்தனமாக ஏதேனும் செய்து வைத்து விடாதே..”என்று எச்சரித்தார்.

“அம்மா.. அண்ணன் காதலிக்கவில்லையென்றால்.. எதற்காக நம்மிடம் பொய் கூற வேண்டும்.. அந்தப் பெண் யாரென்பதைத் தெரிவித்திருக்கலாமே!”என்றவளை இடைமறித்து “ஆனால் அந்தப் பொய்யை அவன் கூறியபோது.. அவனது முகத்தில் எந்தவித உறுத்தலோ.. உணர்ச்சியோ இல்லையேடி..”என்று சீதா கூற..

“அம்மா.. அவனுக்கு எதற்காக உறுத்த வேண்டும்..?, இப்போதைக்கு விஷயத்தை வீட்டில் தெரிவிக்க வேண்டாமென்று நினைத்திருப்பார்..

DO NOT COPY

ஸ்ரீதரும்,நானும் செட்டில் ஆக வேண்டுமென்பதற்காகக் கூட மறைத்திருப்பான். அவன் தான் எங்களது நலம் விரும்பியாயிற்றே!"என்று கூறினாள்.

"என்னவோ.., உன் யூகம் உண்மையாக இருக்க வேண்டுமென்று தான் நானும் ஆசைப் படுகிறேன்.."என்று கூறிய சீதாவிடம் "உண்மையா.. பொய்யா என்று நான் கண்டுப் பிடித்துச் சொல்கிறேன் அம்மா... முகவரி கிடைத்தாகி விட்டதே!, இனி அடுத்தகட்ட நடவடிக்கையை எடுத்து விட வேண்டியது தான்.."என்றாள்.


"முகவரி உனக்கு எப்படிக் கிடைத்தது"என்று சீதா வினவியதற்கு சிரித்தபடி "நேற்று நாம் வீட்டினுள் நுழைந்த போது வாசலில் நின்றிருந்த வண்டியைப் பார்த்தேன்.. எதார்த்தமாகத் தான் நம்பரைப் பார்த்தேன்.. 7879 என்றிருந்தது. சுலபமாக நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய எண்களாக உள்ளதே என்றெண்ணினேன். அப்போது.. தற்செயலாகப் பார்த்தது.. இன்று பெரும் உபயோகமாக முடிந்து விட்டது.."

"ஆம் அம்மா.. அந்த எண்களை வைத்துத் தான் முகவரியைக் கண்டறிந்தேன்.. என் தோழி ரியாவின் தந்தை RDO ஆ்ஃபிஸில் தானே வேலை செய்கிறார்..?, அவர் மூலமாக விசயம் சுலபமாக முடிந்து விட்டது.. அண்ணி பெயர் என்ன தெரியுமா..?, சுஜிப்ரியா!, cute name இல்லையா அம்மா.."எனக் கூறிச் சிரிக்க அவளை வினோதமாக நோக்கி..

"உன் அண்ணன் மேல் நீ வைத்திருக்கும் பாசம் உன்னை இப்படி பைத்தியம் போல் அலையச் செய்து விட்டதேடி..!"என்று கன்னத்தில் கை வைத்தவர் அனு முறைப்பதைக் கண்டு "சரி, இந்த முகவரியை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்..?"என்று வினவினார்.

"ம்..?, அதைப் பற்றித் தான் மம்மி யோசித்துக் கொண்டிருக்கிறேன்...!, எப்படியாவது அண்ணியுடன் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.. ஷ்யாமின் தங்கையாக அல்ல.. வெறும் அனுவாக!, பின்பு நடக்கும் விளையாட்டுக்களை பொறுத்திருந்து பார்.."என்று கூறினாள்.

"அனு நீ கூடிய விரைவிலேயே கீழ்ப்பாக்கம் செல்லப் போகிறாய்.. அது மட்டும் நன்றாகத் தெரிகிறது..:எனக் கூற.. "அண்ணனுக்காக எங்கே வேண்டுமானாலும் செல்வேன்.. போம்மா.."எனக் கூறிச் சென்றவளைக் கண்டு சிரிப்புடன் நின்று கொண்டிருந்தார் சீதா.



## அத்தியாயம் – 5



**கத்தும் குயிலோசை சற்றே வந்து**

**காதில் பட வேண்டும்-என்றன்**

**சித்தம் மகிழ்ந்திடவே நன்றாய் இளம்**

**தென்றல் வர வேண்டும்**

**பாட்டும் கலந்திடவே அங்கே ஒரு**

**பத்தினிப் பெண் வேணும்-எங்கள்**

**கூட்டுக் களியினிலே கவிதைகள்**

**கொண்டு தர வேணும்**!

**அ**ன்று காலை அலுவலகத்திற்கு விரைவாகச் செல்ல வேண்டியிருந்ததால் தனது டான்ஸ் ப்ராக்டிஸை மறு நாள் ஒத்தி வைத்த ப்ரியா, வேக வேகமாக காலை உணவை முடித்துக் கொண்டு தனது வண்டியை ஸ்டார்ட் செய்தாள். 2,3, முறை முயற்சி செய்தும் வண்டி அசையாததை உணர்ந்து எரிச்சலுடன் திரும்பியவள் அருகே வந்து நின்ற சக்தியைக் கண்டு சாந்தமான புன்னகையை வீசினாள்.

அவளைப் புருவம் உயர்த்தி பார்த்த சக்தி ‘என்ன இவள் அமைதியாகப் புன்னகைக்கிறாளே..!, ம்..’ என்று யோசித்தவன் ‘அப்படியானால் நிச்சயம் ஏதோ தில்லாலங்கடி வேலை பார்த்திருக்கிறாள்..’என்று முடிவு செய்து கொண்டு வேகமாகத் தன் சட்டையை ஆராய்ந்தான். ஒன்றும் தெரியவில்லையே..!

DO NOT COPY

கால் ஷூ,அலுவலகத்திற்குக் கொண்டு செல்லும் லாப்டாப் பை,வண்டி என்று அவன் அனைத்தையும் சோதனை போடுவதைக் கண்ட ப்ரியாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

“டேய் சக்தி.. நான் இன்று எதுவுமே செய்யவில்லை.. நீ ஆராய்ச்சி செய்வதை நிறுத்து.”எனக் கூற.. “அப்படியா...?, அப்படியானால் எதற்காக இப்படி அமுல் பேபி போல் முகத்தை சாந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறாய்..?,சக்தி என்று வேறு அழைக்கிறாய்..?”எனத் தாடையைத் தடவிய படி யோசனையுடன் வினவ..

கண்டுபிடித்து விட்டான் பாவி! “அது ஒன்றுமில்லைடா தம்பிப் பையா.., என் வண்டி ஸ்டார்ட் ஆகவில்லை...”என்று அவள் முடிப்பதற்குள் “ஹா ஹா.. ஹி ஹி.. ஹோ ஹோ..”என்று சிரித்த சக்தி “எத்தனை முறை நான் அவசரமாக அலுவலகத்திற்குச் செல்லும் போது என் வண்டியின் டயரை பன்ச்சர் செய்திருப்பாய்..?, நன்றாக அனுபவி.. டாட்டா..”என்று செல்லப் பார்த்தவனின் சட்டையைப் பற்றி..

“சக்தி.. போய்விடாதேடா.. ப்ளீஸ் டா.. இன்று முக்கியமான மீட்டிங் இருக்கிறது, நான் சென்றே ஆக வேண்டும்.. என்னை டிராப் செய்யடா.. ப்ளீஸ்..”என்று கெஞ்சத் துவங்க அவனோ சாவகாசமாகப் புன்னகைத்த படி “உன் நிலைமையை நினைத்தால் எனக்குப் பாவமாக உள்ளது சுஜி... பூனைக்கு ஒரு காலம் வந்தால் யானைக்கும் ஒரு காலம் வரும் என்பது எவ்வளவு அப்பட்டமான உண்மை..”என்று கூற..

யாரடா பூனை..?,தடியா உன்னைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்.. ஈவ்னிங் டிஃபன் மிளகாய் பஜ்ஜி தானே அம்மாவிடம் செய்யச் சொன்னாய்.. மவனே.. அதில் காரத்தை அதிகமாகக் கலந்து வாழ்க்கையில் நீ மிளகாய் பஜ்ஜியை நினைத்துப் பார்க்காத அளவிற்கு செய்து விடுகிறேன்.. என்று கறுவிக் கொண்டவள்.. அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு “என்னையும் கூட்டிச் செல்லடா..”எனக் கேட்க..

மீண்டும் யோசித்தவன் “ஹ்ம்ம், ஓகே.. அழைத்துச் செல்கிறேன்.. ஆனால் ஒரு கண்டிஷன்..!”எனக் கூற “எல்லாம் தலையெழுத்து சொல்லித் தொலை..”என்றவளை முறைத்து “நீ மரியாதை இல்லாமல் பேசுகிறாய்.. நான் கிளம்புகிறேன்.. நீ ஆட்டோவில் சென்று கொள்..”என்று பைக்கை உதைக்க..

“வேண்டாம்.. வேண்டாம்.. என்ன கண்டிஷன் என்று சொல்லடா.. நீ சொல்வதைப் போல் செய்கிறேன்..”என்று சரண்டர் ஆகி விட “ம்,அந்த பயம் இருக்கட்டும்.”என்றவன் சிறிது இடைவெளி விட்டு அவளை நன்றாகச் சோதித்து “வத்சலாவை இனி குள்ளக் கத்திரிக்காய் என்று சொல்ல மாட்டேன்..

DO NOT COPY

என்று 3 முறை கூறு.. அப்படிக் கூறினால் உன்னை அழைத்துச் செல்கிறேன். இல்லையென்றால் நீ ஆட்டோவில் சென்று கொள்"எனக் கூற.. அந்தச் சப்ப மூக்கிக்காக என்னிடம் வம்பு செய்கிறாயா என்று பொங்கியவளிடம் இப்போதைக்கு வேறு வழி இல்லை சுஜி என்று மனசாட்சி கூற.. அவன் கூறியதைப் போலவே. 3 முறை "வத்சலாவை இனி குள்ளக் கத்திரிக்காய் என்று சொல்ல மாட்டேன்.."என்று பள்ளி மாணவி ரைம்ஸ் சொல்வதைப் போல் சொல்லி முடித்தாள்.

"ம்,வெரி குட்.. சுஜி.. இப்படி நீ தினமும் என் பேச்சைக் கேட்டு நல்ல பெண்ணாக நடந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்..?, ஏறிக் கொள்.."எனக் கூற "அடப் பேராசைக் காரா..!, பொறுத்துக் கொள் சுஜி.. இவனை.. பிறகு கவனித்துக் கொள்ளலாம்.. இப்போதைக்கு உனக்கு காரியம் ஆக வேண்டும்.." என்று நினைத்துக் கொண்டு அமைதியாக அமர்ந்தாள்.

பாதி தூரம் வரை அமைதியாக வந்தவள் அதற்கு மேல் தாங்காமல் "ஏன் டா சக்தி.. நீ அந்த வத்சலாவின் மூக்கைப் பார்த்ததேயில்லையா..?"எனக் கேட்க.. "ஏய்.. அக்கா என்று கூடப் பார்க்க மாட்டேன்.. வண்டியிலிருந்து கீழே தள்ளி விட்டு விடுவேன்.. ஜாக்கிரதை.."என்று மிரட்டினான்.

"ரொம்பத் தான் பண்ணிக் கொள்ளாதே.. போடா.."என்றவள் சிக்னலில் வண்டி நிற்பதைக் கண்டு சுற்றும்,முற்றும் பார்வையைச் செலுத்தினாள். பக்கத்து வண்டியில் சீருடையில் அன்னையுடன் அமர்ந்திருந்த சிறுமியைக் கண்டு இவள் முறுவலிக்க.. வெட்கத்துடன் அன்னையின் மீது சாய்ந்து முகம் புதைத்து தன்னை அந்தச் சிறுமி மறைத்துக் கொள்ள.. அதைக் கண்டு அக்காவும்,தம்பியும் சிரித்துக் கொண்டிருந்தனர்.

ஏதோ உறுத்த சட்டெனத் திரும்பிப் பார்த்த ப்ரியா.. பின்னால் நின்றிருந்த காரின் டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்தவன் தன்னையே வெறிப்பதைக் கண்டு யார் இவன்.. என்றபடி நோக்க.. உள்ளே அமர்ந்திருந்த ஷ்யாமைக் கண்டு பதறிப் போனாள். இதேதடா வம்பு..! இவன் எதற்காக இப்படி முறைத்துப் பார்க்கிறான்.. என்று மறுபடியும் திரும்பி அவனைப் பார்க்க..

இப்போது அவனது பார்வையில் அப்பட்டமான ஏளனம் தெரிந்தது.. காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவர்கள் காதலிப்பதாகத் தன் வீட்டில் குறை கூறினாளே.. இப்போது.. காதலைப் பற்றி முழுதாக அர்த்தம் தெரிந்தவனுடன் தான் இப்படிச் சுற்றுகிறாளா..? என்று நினைத்தபடி அவளை ஏளனமாக நோக்க..

அவனது எண்ணங்களை அறியாத ப்ரியா எதற்காக இப்படிப் பார்க்கிறான் என்று நெளியத் துவங்கினாள். அவள் அசைவதை உணர்ந்த சக்தி, "ஏய்.. ஆடாமல்

உட்கார்..”என்று அதட்ட.. மீண்டும் திரும்பிப் பார்க்கத் தூண்டிய மனதை அடக்கி அசையாமல் அம்ர்ந்தாள் சுஜிப்ரியா.அதற்குள் சிக்னலும் மாறி விட.. நிம்மதியாக மூச்சு விட்டவள்..

எதற்காக ஏளனமாக நோக்கினான்...?, அப்படி என்னத் தவறு செய்து விட்டேன் நான்..?,அவனது தறுதலைத் தம்பியைக் கேள்வி கேட்டது தவறா..?, எப்படியோ ஒழியட்டும்..!, சரியான காட்டுமிராண்டிக் கூட்டம்! இவனைப் பற்றி நான் யோசிக்க என்ன இருக்கிறது! இப்படியே மறந்து விட வேண்டியது தான் என்று அவள் முடிவு செய்த வேலையில் சக்தி அவளது அலுவலகக் கட்டிடத்தின் முன்பு வண்டியை நிறுத்தியிருந்தான்.

சிரிப்புடன் வண்டியை விட்டு இறங்கியவள் “தேங்க்ஸ்டா தம்பிப் பையா.. ஆனாலும் அந்தச் சப்ப மூக்கு,குள்ளக் கத்திரிக்காய் வத்சலாவிற்காக நீ என்னை மிரட்டியது கொஞ்சம் ஓவர் தான்..”என்றதும் “ஏய்..”என்று உறுமிய சக்தி.. ப்ரியாவின் பின்னே நடந்து வந்து கொண்டிருந்த ரேகாவைக் கண்டு முகத்தை மாற்றி.. ஈ என்று இளித்தான்.

யாரைப் பார்த்து இவன் இப்படி வாட்டர் ஃபால்ஸை திறக்கிறான் என்றெண்ணியபடி திரும்பிப் பார்த்த சுஜி அங்கே ரேகா வருவதைக் கண்டு தம்பியை முறைத்தாள். அவள் அருகே வந்ததும் “சுஜி.. அறிமுகப் படுத்தி வை.. ப்ளீஸ்..”என்று கெஞ்சியவனிடம் தலையாட்டி..

“ரேகா.. இவன் என் தம்பிப் பையன்.. பெயர் சக்தி..”என்று கூற.. “ஹாய் சக்தி.. எப்படி இருக்கிறீர்கள்..”என்று வினவினாள் ரேகா. “எதற்கு இவனுக்குப் போய் மரியாதையெல்லாம் கொடுக்கிறாய்..?, உனக்கும் இவன் தம்பி மாதிரி தான்..”என்று அழுத்தமாகக் கூறியவளை சக்தி முறைக்க..

“வேலை எப்படிப் போகிறது சக்தி.. பேக்கேஜ் எப்படி இருக்கிறது உன் கம்பெனியில்..?”என்று வேலை பற்றி ரேகா விசாரிக்கத் துவங்க.. அவளுக்கு பதில் கூறி விட்டு.. தமக்கையிடம் “உனக்கு இருக்கிறது.. நீ வீட்டுக்கு வா,..”என்று மிரட்டிவிட்டு விடை பெற்றான் ஸ்ரீதர்.

“பார்ப்போம்.. பார்ப்போம்.. போடா..”என்றவள் தோழியிடம் உரையாடியபடியே அலுவலகத்திற்குள் நுழைந்தாள். அதன்பின் ஷ்யாம் என்ற ஒருவனைச் சந்தித்த நிகழ்வை மறந்தே போனாள்.

DO NOT COPY

**அ**ந்த வார விடுமுறை நாளான சனிக்கிழமையன்று காலையிலேயே.... வெளியே செல்லத் தயாராகி தன் அறையை விட்டு வெளியே வந்த அனுவைப் பார்த்த சீதா “என்னடி.. விடுமுறையானால் போதுமே!, வெளியே சுற்றத் தொடங்கி விட வேண்டியது..”என்று நொடித்துக் கொள்ள.. “மம்மி.. இப்போது நான் செல்வது எனக்காக அல்ல.. உன் அருமை மைந்தனுக்காக..”என்று கூறினாள்.

“ஓ!, அண்ணனுக்காக ஷாப்பிங் செல்கிறாயா..?, அவனையும் அழைத்துச் செல்லவேண்டியது தானே..?”என்றவரை முறைத்து “அய்யோ அம்மா..”என்று தலையில் அடித்துக் கொண்டவள்.. குரலைத் தணித்து “அம்மா.. நான் இப்போது செல்லப் போவது அண்ணியின் இல்லத்திற்கு.. அட்ரஸ் வாங்கியது பூஜை செய்வதற்காகவென்று நினைத்தாயா..?, அவர்களின் காதல் கதையைக் கண்டறிந்து அவர்களிருவரையும் சேர்த்து வைக்க வேண்டாமா..?”

“அதனால் துப்பறியும் சாம்பு, நரேந்திரன்-வைஜெயந்தி, விவேக்-ரூபலா வரிசையில் அனுதரணியும் இணைந்து விட்டாள்.”எனக் கூற.. “அனு.. விளையாட்டல்ல இது.. நீயாக எதையேனும் செய்து வைக்காதே.. எதற்காக இந்த டிடெக்டிவ் வேசம்..?, நேராக உன் உடன்பிறப்பிடம் சென்று நீ காதலிக்கிறாயா..?என்று கேட்பதை விட்டு விட்டு கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொட முயல்கிறாயே..?”என்று வினவினார்.

“ஆமாம்.. நான் கேட்டதும் உன் புத்திரன் அப்படியே கூறி விடுவான் பார்.. அனு மா.. என்ன பேச்சு இது.. படிக்கிற பெண் காதலைப் பற்றிப் பேசுவதா எனக் கேட்டு என் மேல் பாய்ந்து விடுவான். சைட் என்கிற வார்த்தையைக் கேட்டாலே.. வானத்திற்கும்,பூமிக்கும் குதிப்பவன்!, காதல் என்கிற வார்த்தையைக் கேட்டால்.. தரையில் கால் பதிக்க மாட்டான்.. அந்தரத்தில் நர்த்தனம் ஆடி விடுவான்.. அம்மா.. நான் செல்வது தான் சரியான பாதை..”

“அண்ணியுடன் பழகி விஷயத்தைக் கண்டறிந்த பின்.. அண்ணனின் முன்பு நிறுத்தி.. அவருக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கப் போகிறேன்.. எங்களுக்காக நீ தியாகம் செய்ததெல்லாம் போதுமடா அண்ணா மடையா.. இனி அண்ணியுடன் உன் வாழ்க்கையை அனுபவி என்பேன்..”எனக் கண்களில் கனவு மின்னக் கூறுபவளைப் பார்த்து மென்னகை புரிந்தார் சீதா.

இந்தப் பெண்ணிற்குத் தான் அண்ணன் மீது எவ்வளவு அன்பு! இவள் எண்ணப்படியே.. ஷ்யாம் முழு மகிழ்ச்சியுடன் அவனது வாழ்க்கையைத் தொடர வேண்டுமென பிரார்த்தித்துக் கொண்டார்.

அதன்பின் அன்னையிடம் விடைபெற்றுக் கொண்டு.. ஏற்கனவே குறித்து வைத்திருந்த சுஜிப்ரியாவின் முகவரியை எடுத்துக் கொண்டு தனது ஸ்கூட்டியில் விரைந்தாள்.

அந்த முகவரி இருந்த தெருவிற்குள் நுழைந்து.. சுஜிப்ரியாவின் வீட்டிற்கு சற்றுத் தள்ளி வண்டியை நிறுத்தியவள்.. எப்படி வீட்டிற்குள் நுழைவது.. என்று யோசித்தாள்.'விற்பனைப் பெண்ணைப் போல் நுழைந்து விடலாமா.. கையில் எந்தப் பொருளும் இல்லாமல் என்னத்தை விற்பது.. அனு! உனக்கு அறிவே இல்லை.. முன்பே யோசிக்காமல்.. இப்போது வந்து இப்படி விழித்துக் கொண்டு நிற்கிறாயே.! இறைவா! எனக்கு வழி காட்டு..! என்று அவள் தனக்குள்ளே புலம்பிக் கொண்டிருந்த வேளையில்.. பின்னால் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பியவள்..

"அய்யோ.."என்று பதறியபடி அருகே ஓடினாள். ஏனெனில் அங்கே ஒரு பெண்மணியைச் சைக்கிளில் சென்ற ஒரு சிறுவன் இடித்து விட்டுச் சென்று விட.. அவர் கையில் இருந்த காய்,கறிப் பை சிதறி கீழே விழுந்து விட்ட நிலையில்.. தடுமாறித் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து நிற்க முயன்று கொண்டிருந்தார்.

"பார்த்து ஆன்ட்டி.."என்று அவரைப் பற்றி நிறுத்திய அனு கீழே குனிந்து சிதறிய காய்களை அள்ளி கூடைக்குள் போடத் துவங்கினாள். அதற்குள் அந்தப் பெண்மணியும் தன்னைச் சீர்படுத்திக் கொண்டு தானும் காய்களைப் பொருக்கிக் கூடைக்குள் போட்டார்.

"இந்த வாண்டுகளின் அட்டகாசம் வர வர அளவில்லாமல் சென்று கொண்டிருக்கிறது.. வயதானவள் என்று கூட நினைக்காமல்.. எப்படி இடித்து விட்டுப் போகிறதுகள் பார்!, விடுமுறை என்றாலே.. இதுகள் என்ன செய்யக் காத்திருக்கிறதுகளோ என்று எனக்கு பயமே வந்து விடுகிறது.."

"தோட்டத்து வழியாக வீட்டுக்குள் புகுந்து.. எங்கள் வீட்டு ஃப்ரிட்ஜில் உள்ள பொருட்களைத் தின்று விட்டு ஓடி விடுகிறதுகள்.. இதற்கெல்லாம்.. எங்கள் வீட்டு ராட்சசி துணை போகிறாள்.. அவளை அடக்க இந்த வையகத்தில் எவன் பிறந்திருக்கிறானோ!"என்று புலம்பிக் கொண்டே செல்ல..

அவர் கூறுவதைக் கேட்டுச் சிரித்த அனு "நீங்கள் கூறுவது காமெடியாக இருக்கிறது ஆன்ட்டி.."என்று கூறினாள். அவள் சிரிப்பதை நிமிர்ந்து பார்த்தவர் "எங்கள் வீட்டுப் பிசாசு கூட இப்படித் தான் சொல்கிறாள்.. ஆனால் இது காமெடியில்லையம்மா.. ட்ராஜெடி..."எனக் கூற.. மேலும் சிரித்த அனு...

"உங்கள் வீடு எங்கே இருக்கிறதென்று கூறுங்கள் ஆன்ட்டி.., நானே உங்களை என் வண்டியில் டிராப் செய்கிறென்.."எனக் கூற.. அதற்கு முறுவலித்த அந்த

ஆன்ட்டி.. “ரொம்பத் தொலைவு இல்லையம்மா.. இதோ.. இந்த வீடு தான்..”என்று அவர் கை காட்டியது சாட்சாத் சுஜிப்ரியாவின் வீடே தான்..

ஆஹா!, கடவுள் இவ்வளவு நல்லவராக இருக்கிறாரே!, கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று மனதுக்குள் பாடிக் கொண்டிருந்தவளை “வாம்மா.. வீட்டிற்கு வந்து ஏதேனும் சாப்பிட்டு விட்டுச் செல்..”எனக் கூற.. “கண்ணா 2 லட்டு தின்ன ஆசையா…!”என்று மனசாட்சி குத்தாட்டம் போட.. “கண்டிப்பாக ஆன்ட்டி..”எனக் கூறி அவரது காய்,கறிக் கூடையை அவர் மறுக்க மறுக்கத் தானே சுமந்தபடி.. அவர் வீட்டை நோக்கி நடந்தாள் அனு.

“பிசாசு,ராட்சசி என்றெல்லாம் கூறினீர்களே.. யாரை ஆன்ட்டி..?”எனக் கேட்க.. “நான் பெற்ற மகளைத் தானம்மா.., அவள் தம்பியைப் போல் அல்லாது.. இவள் அதிக சேட்டை செய்பவளாகப் பிறந்து விட்டாளம்மா.., தம்பியின் சாப்பாட்டில் உப்பையும்,காரத்தையும் கலந்து விடுவது, தினமும் காலையில் நடனப் பயிற்சி என்கிற பெயரில் என்னையும்,என் வீட்டுக்காரரையும் கொடுமை செய்வது.. பக்கத்து வீட்டு வாண்டுகளுடன் சேர்ந்து கொண்டு காலனியில் வருவோர்,போவோரையெல்லாம் வம்பு செய்வது போன்ற.. பல நற்காரியங்களை செய்து வருபவள் தான் என் அருமை மகள் சுஜிப்ரியா..”எனக் கூறினார்.

அவர் சொன்ன அனைத்தையும் முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த அனு, பிரபு அண்ணாவிற்கு அப்படியே நேர் எதிராக இருப்பாள் போலவே என்று நினைத்துக் கொண்டு ஆவலுடன் அவர்களின் வீட்டுப் படியேறினாள்.

“உள்ளே வாம்மா..”என்றழைத்துச் சென்று சோபாவில் அமரச் சொன்னவர் “ஒரு நிமிடம் ஜூஸ் எடுத்துக் கொண்டு வருகிறேன்..”எனக் கூறி உள்ளே சென்று மறைந்தார். ஜூஸா ஆன்ட்டி முக்கியம்..? நான் தேடி வந்த செவ்வந்திப் பூ இன்னும் கண்ணில் படக் காணோமே.. என்றெண்ணிக் கொண்டிருந்த வேளையில் பின்னாலிருந்து “ஹாய்..”என்று யாரோ கூறத் திரும்பிப் பார்த்தவள் அங்கே நின்று கொண்டிருந்த சுஜிப்ரியாவைக் கண்டு விழி விரித்தாள்.

முழு நீள ஸ்கர்ட்டும்,டாப்பும் அணிந்திருந்தவளின் முகத்தில் தெரிந்த கள்ளம் கபடமற்ற புன்னகையும், குறும்புடன் தன்னையே நோக்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய விழிகளும், ஆப்பிள் கன்னங்களும் அவளைப் பேரழகியாகக் காட்ட.. அண்ணனுக்கு ஏற்ற ஜோடி தான் என்று நினைத்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் அனு.

DO NOT COPY

பதிலுக்கு ஹாய் சொல்லாமல் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவளின் முன்பு கை நீட்டி சொடுக்கிட்டு “ஹாய்.. “என்று சுஜி மீண்டும் கூற.. அதற்குள் சுய நினைவு பெற்று விட்ட அனு “ஹாய்..”என்றாள்.

“வாத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்களா...?”என்று சுஜி வினவ.. “வாத்தா...?”என்று விழித்த அனு “உங்கள் வீட்டில் வாத்து கூட வளர்க்கிறீர்களா..?”என்று வினவ.. அதற்கு பக்கென்று சிரித்த சுஜி “இல்லையில்லை.. என் தம்பி சக்தியை நான் வாத்து என்று தான் அழைப்பேன்.. அவனைப் பார்க்க வந்திருக்கிறீர்களோ என்று கேட்டேன்..”என்று கூறிக் கொண்டிருக்கையிலேயே வள்ளி வந்து விட..

“ஜூஸ் எடுத்துக் கொள்ளாம்மா..”என்று அவளிடம் நீட்டியவர் சுஜியிடம் “இதோ பார்.. இவள் என் கெஸ்ட்.. உன் வம்பு வேலையெல்லாம் இவளிடம் காட்டி விடாதே.. பயந்து விடப் போகிறாள்... “என்று மிரட்டினார். “ஓ! உன் கெஸ்ட்டா..?, யார் கோமு?. என் நடனப் பள்ளியில் சேர்த்து விடுவதற்காக அழைத்து வந்திருக்கிறாயா..?”என்று வினவினாள்.

“ஆமாம், அந்தக் கொடுமையை நான் அனுபவிப்பது போதாதென்று.. இன்னொரு ஆளை வேறு அழைத்து வருவேனா..?”என்றவர் அனுவிடம்.. “உன் பெயரைக் கூட நான் கேட்கவில்லையேம்மா..?,உன் பெயரென்ன..?,என்ன செய்து கொண்டிருக்கிறாய்..?”என்று வினவ..

“என் பெயர் அனுதரணி... பி.எஸ்ஸி மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருக்கிறேன்... இங்கே ஒரு வேலையாக வந்தேன்.. அப்போது தான் உங்களைப் பார்க்க நேர்ந்தது..”எனக் கூற “அம்மா.. அப்படியானால் இந்தப் பெண்ணை உனக்குத் தெரியாதா..?, எப்படிப் பழக்கமானீர்கள்..?”என்று சுஜி வினவியதற்கு.. தெருவில் நடந்த கூத்தைத் தெரிவித்தார் வள்ளி.

“உன் வானரக் கூட்டத்தால்.. வந்த வினை தான் இது.. ஏண்டி..?, தெரியாமல் தள்ளி விடப் பார்த்தானா..?, அல்லது நீ சொல்லித் தான் தள்ளி விடப் பார்த்தானா..?”என்று கேட்க... “நோ.. நோ.. கோமு.. இதில் என் பங்கு எதுவுமே இல்லை.. நேற்று.. நீ அவர்களுக்கு ரஸ்னா கலக்கிக் கொடுக்கும் போது.. அந்த வினோத்.. கூடுதல் ஐஸ் கேட்டதற்கு நீ கொடுக்கவில்லையல்லவா..?, அதனால் தான் பழி வாங்கி விட்டானென்று நினைக்கிறேன்.. விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கிறேன் கோமு.. யூ டோன்ட் வொரி...”என ஆறுதல் கூறினாள் சுஜிப்ரியா.

“ஆமாம், உன்னை வளர்ப்பது போதாதென்று ஊரில் திரியும் அத்தனை வாண்டுகளையும் அழைத்து வந்து விடுகிறாய்.. பாவமே என்று உண்ணக் கொடுத்தால்.. பழி வாங்குகிறதுகளா..?, வரட்டும் நாளை.. பார்த்துக் கொள்கிறேன்..”என்றுக் கறுவிக் கொள்ள..

இதைக் கண்ட அனுவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் சிரிப்பை அடக்க முயன்று தோற்றுக் கொடுப்பதைக் கண்ட படி அறையிலிருந்து வெளிப் பட்ட மகாலிங்கம் "பரவாயில்லையம்மா.. சிரித்து விடு.. குடும்பமே மென்டலாக இருந்தால்.. பார்ப்பவர்களுக்குச் சிரிப்பு வரத் தானே செய்யும்..?"எனக் கூற.. நன்றாக முறுவலித்த அனுவிடம்.. தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் லிங்கம்.

"என் மனைவியைக் கீழே விழாமல் காப்பாற்றி வீடு வரைக்கும் அழைத்து வந்ததற்கு மிகவும் நன்றி அம்மா.."எனக் கூறிக் கொண்டிருக்கையில் இடை புகுந்த சுஜி "ஆமாம்.. ஆமாம்.. என் அம்மாவின் 65 கிலோ எடையைத் தாங்கியிருக்கிறாய்.. அதற்கு நன்றி கூறியே ஆக வேண்டும்.."எனக் கூறிய ப்ரியாவைக் கண்டு "நீங்கள் மிகவும் காமெடியாகப் பேசுகிறீர்கள் ப்ரியாண்... என்று தொடங்கியவள் நிறுத்தி ப்ரியா.."என்றாள்.

"ஹி ஹி.. பார்த்தாயா கோமு... என் பேச்சையும் ரசித்துச் சிரிக்கிறார்கள்.. உனக்குத் தான் என் அருமை புரியவில்லை..."என்று சிணுங்கிக் கொள்ள மேலும் சிரித்த அனுவிடம் "எந்த கல்லூரியில் படிக்கிறாய்..?"என்று விசாரித்தாள் ப்ரியா.

தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறியவள் சுஜியைப் பற்றியும் விசாரித்தாள். தான் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஐடி கம்பெனியைப் பற்றிய விவரங்களை சுஜியும் எந்தவிதத் தயக்கமுமின்றித் தெரிவித்தாள். அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அனுவின் பார்வை சுவரில் தெரிந்த ராஜா ரவி வர்மாவின் ஓவியத்தின் மீது பதிந்தது..

"ரவி வர்மாவின் ஓவியம்!"எனக் கூற தானும் திரும்பிப் பார்த்த சுஜி முறுவலித்து "ஆமாம்.. ரவி வர்மாவின் ஓவியங்கள் என்றால் எனக்கு உயிர்.. அதனால் தான்.."என்றவளிடம் "என் அண்ணனுக்கும் ரவி வர்மாவின் ஓவியங்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்று அனு கூறினாள்..

"அப்படியா..?"என்று சிரித்த சுஜி "இன்னும் சில ஓவியங்கள்.. என் அறையில் வைத்திருக்கிறேன்.. நான் வரைந்த ஓவியங்களும் இருக்கின்றன.. வாயேன்.. பார்க்கலாம்.."என்றழைக்க.. சிரித்தபடி அவளைத் தொடர்ந்தாள் அனு.

அவள் அறைக்குச் சென்று பார்வையிட்டவள் அறை மிகவும் சுத்தமாக பளீரென்று காட்சியளிப்பதைக் கண்டு வியந்தாள். அழகான ஓவியங்கள் சுற்றிலும் மாட்டப் பட்டிருக்க படுக்கை,மேஜை,நாற்காலி,அலமாரி என அறை மிகவும் கிளாசிக்காகத் தோற்றமளித்தது.

அவள் வரைந்த ஓவியங்களைக் கண்ட அனுவிற்கு மேலும் வியப்பாகிப் போனது.. அனைவரையும் கலாட்டா செய்து கொண்டு சிறு பிள்ளையாகத்

DO NOT COPY

திரிந்தாலும்.. அண்ணிக்கு நல்ல ரசனை.. அதிலும் அந்த கண்ணன், ராதை படத்தைக் கண்டவள்.. கண்ணனாக தன் அண்ணனையும், ராதையாக ப்ரியாவையும் கற்பனையே செய்யத் துவங்கி விட்டாள்.

வெகு நேரமாக அமைதியாக அமர்ந்திருந்த அனுவை உலுக்கி "என்ன..?"என்று சுஜி வினவ.. சுய நினைவிற்கு வந்தவள் "ப்ரியா.. என்ன சொல்வதென்றே புரியவில்லை.. உங்களுக்கு அருமையான ரசனை உணர்வு.. நீங்கள் வரைந்திருக்கும் ஓவியமெல்லாம் உயிர் நிறைந்ததாக இருக்கிறது.. எனக்கு வார்த்தைகளே வரவில்லை.."எனக் கூற.. கலகலவெனச் சிரித்த சுஜி...

"மிகவும் நன்றி... என் ஓவியத்திற்கு கிடைத்த மிகச் சிறந்த பாராட்டாக இதை எண்ணிக் கொள்கிறேன்.."எனக் கூறி மேலும் முறுவலித்தாள். அடுத்த சில மணி நேரங்கள் அரட்டையும்,கும்மாளமுமாகக் கழிய.. இருவருக்கும் நீண்ட நாட்கள் பழகி விட்ட உணர்வு தோன்றியது.

அதை வாய் விட்டே ப்ரியா கூற.. தானும் ஆமோதித்தாள் அனு. அதன்பின் சாப்பிட்டுச் செல்லக் கோரியவர்களிடம் மறுத்து விட்டு "மீண்டும் ஒரு முறை கட்டாயம் வர வேண்டும்.."என்று ப்ரியாவின் செல்லக் கண்டிப்பையும் பெற்றுக் கொண்டு வெளியேறினாள் அனு.

மனம் முழுக்க மகிழ்ச்சி பரவ.. உதட்டில் உறைந்த புன்னகையுடன் தன் வீட்டிற்குள் நுழைந்தாள் அனு. நேராக அன்னையைத் தேடிச் சென்று "ஓ அண்ணி.. ஓ அண்ணி..!"என்று பாட அவளை விசித்திரமாக நோக்கிய சீதா "என்னடி....?"என விசாரித்தார்..

"அண்ணியைச் சந்தித்து விட்டேன் அம்மா..., எவ்வளவு ஸ்வீட்டாகப் பேசுகிறாள் தெரியுமா..?, பெரிய சேட்டைக்காரிம்மா..., என்னைப் போல்.. பெரிய வாயாடியும் கூட..."என்று அளந்து கொண்டே சென்றவளை ஆச்சரியமாக நோக்கி "நிஜமாகவே அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்றாயா..?"எனக் கேட்டார்..

"அம்மா என் மேல் நம்பிக்கையில்லையா..?, 100% அக்மார்க் உண்மை.. நான் அவர்களின் வீட்டிற்குச் சென்று சந்தித்தேன்.."என்று ஆரம்பித்து நடந்தவை அனைத்தையும் தெரிவித்தாள்.

"அண்ணி,ஆன்ட்டி,அங்கிள்.. எல்லாருமே சூப்பர் அம்மா.. நம்மைப் போல.. இல்லையில்லை.. நம்மை விட கல கல குடும்பம்.. அனைவருமே அருமையாகப் பழகுகிறார்கள்.. வெரி ஸ்வீட் மம்மி.. அண்ணியைப் பற்றி இன்று முழுவதும் பேசிக் கொண்டிருந்தாலும் போதாது.. சூது வாதற்ற.. எதார்த்தவாதி.. புன்னகையை மட்டும் முகத்தில் பூசிக் கொண்டு.. எப்படித் தான் நாள் முழுதும் உலா வருகிறாளோ... ஆனால் அம்மா.. அவள் எவ்வளவு

விளையாட்டுத் தனமாக நடந்து கொள்கிறாளோ... அதற்கு அப்படியே நேர் மாறாக இருக்கிறது அவள் ரசனை.. அவள் ஓவியங்கள் அனைத்தும்... அவ்வளவு அருமை.. என்னவொரு அழகு! அண்ணியை எனக்கு மிகவும் பிடித்து விட்டதம்மா.. "எனக் கூற.. "அனு,அனு, என்னையும் ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லடி.. எனக்கும் அவளைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது.."எனக் கெஞ்ச...

"அம்மா... நீ கவலையே படாதே.. கூடிய விரைவில்.. நான் அண்ணியை நம் வீட்டிற்கு அழைத்து வருகிறேன்.. நிச்சயம் அண்ணனை ப்ரியா அண்ணியுடன் ஜோடி சேர்த்து வைத்து விட வேண்டும்.. அது தான் என் லட்சியம்"என சூளுரைத்துக் கொண்டாள் அனுதரணி.



DO COPY

## அத்தியாயம் – 6



**வான மழை நீ எனக்கு**

**வண்ணமயில் நான் உனக்கு**

**பானமடி நீ எனக்கு**

**பாண்டமடி நான் உனக்கு**

**ஞானஒளி வீசுதடி**

**நங்கை நின்றன் சோதிமுகம்**

**ஊனம் அறு நல் அழகே**

**ஊறு சுவையே கண்ணம்மா!**

DO NOT COPY

**அ**ன்று காலை தனது வழக்கமான ஜாகிங்கை முடித்து விட்டு வீட்டிற்குள் நுழைந்த ஷ்யாம் கையில் காபி கப்புடன் பேப்பர் படித்துக் கொண்டிருந்த தந்தையின் அருகே சென்றமர்ந்தான். அவன் வந்து விட்டதைக் கண்ட ராஜாராமன் "சீதா.. பிரபு வந்து விட்டான் பார்.. அவனுக்கு காபி கொண்டு வா.."என்று குரல் கொடுக்க...

"தேங்க்ஸ் டாடி.." என்றபடி துவாலையால் முகத்தைத் துடைத்தவனிடம் காபியை நீட்டினார் சீதா. நன்றி கூறி பெற்றுக் கொண்டவன்.. "அம்மா,டாடி..., உங்களிருவரிடமும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும்.."எனக் கூற.. அவனை நிமிர்ந்து நோக்கினர் இருவரும்,

"டாடி.. ஶ்ரீதரை ருத்ரன் சித்தப்பாவின் வீட்டிற்கு அனுப்பி வைக்கலாம் என்று நினைக்கிறேன்.. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்..?"என்று வினவியவனை ராஜாராமன் யோசனையாக நோக்க.. சீதாவோ.. கவலை நிறைந்த முகத்துடன்

"ஏன் கண்ணா..?,அவன் தவறு ஏதும் செய்து விட்டானா..?, திடீரென்று எதற்காக சிங்கப்பூர் வரை அவனை அனுப்ப வேண்டுமென்கிறாய்..?,"எனக் கேட்க..

அவரை முறுவலுடன் நோக்கிய ஷ்யாம் "அம்மா.. உங்கள் மகன் தவறேதும் செய்யவில்லை.. ஆனால் சொல்லிக் கொள்ளும் படியாக எந்த நல்ல காரியமும் செய்வது போல் தெரியவில்லையே.. எத்தனை நாட்களுக்கு அவனை இப்படியே விட முடியும்..?, அவனுக்கும் வயதாகி விட்டதே.. தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டாமா..?, இங்கேயே இருந்தால்.. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு.. கூத்தடித்துக் கொண்டு வெட்டியாகத் திரிவானே தவிர நம் சொல் படி நடந்து கொள்ள மாட்டான்.. "

"ருத்ரன் சித்தப்பாவிடம் அனுப்பினால்.. நிச்சயம் அவர் அவனைத் திருத்தி விடுவார்.. அவரைப் பற்றித் தான் உங்களுக்கு தெரியுமே அம்மா.., ஸ்ரீதருடைய வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமென்றால்.. நிச்சயம் அவனுக்கு இப்போது இட மாற்றம் தேவை.."என்றவன் அமைதியாக அமர்ந்திருந்த தந்தையிடம் திரும்பினான்.

"டாடி.. என்ன சொல்லுகிறீர்கள்..?, அனுப்பலாமா..?"என்று வினவ "ம்க்கும்" என்று தொண்டையைச் செறுமிய ராஜாராமன் "அவன் தவறேதும் செய்யவில்லை என்று நீ கூறுவது.. உன் அன்னையைச் சமாதானப் படுத்துவதற்காகத் தான் என்று தெரிகிறது.. அவன் என்ன தவறு செய்தான் என்று நான் கேட்கப் போவதில்லை.. உன் தங்கை,தம்பிக்கான முழுப் பொறுப்பும் பல நாட்களுக்கு முன்பே உன்னைச் சார்ந்ததாகி விட்டது ஷ்யாம்.. அதனால்.. அவர்களைப் பொறுத்தவரை நீ எடுக்கும் எந்த முடிவையும் நான் நான் மறுக்கப் போவதில்லை.."என்று கூற..

"நிச்சயமாக டாடி... அவர்களைப் பற்றிய முழுப் பொறுப்பும் என்னைச் சார்ந்தது தான்.. இது நான் எனது சிறு வயதிலேயே.. விரும்பி ஏற்றுக் கொண்ட பொறுப்பு.. அவர்களுக்கு நிச்சயம் நல்ல வழி காட்டுவேன் டாடி.."என்றவன் தொடர்ந்து "அடுத்த மாதம் அவனை சிங்கப்பூர் அனுப்ப முடிவு செய்திருக்கிறேன்.. ருத்ரன் சித்தப்பாவிடம் இன்னும் ஸ்ரீதரின் சிங்கப்பூர் பயணத்தைப் பற்றி தெரிவிக்கவில்லை.. அவரிடமும் தெரிவித்து விடுகிறேன்.." என்றவன் இத்துடன் பேச்சு முடிந்து விட்டது என்பது போல்.. "குளித்து விட்டு வருகிறேன் மம்மி.. இன்று சீக்கிரம் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.."எனக் கூறி விட்டுத் தன் அறைக்கு விரைந்தான்.

அவன் செல்வதைக் கண்ட ராஜாராமன் மனைவியிடம் "சீதா.. ஸ்ரீதரும், ஷ்யாமைப் போல் மாறி விட்டால்.. நான் உலகத்திலேயே மகிழ்ச்சி நிறைந்த தந்தையாக இருப்பேன்.. அனுவைப் பற்றிக் கூட எனக்கு கவலையில்லை... அண்ணன் பேச்சுக்கு மறுபேச்சு பேசாமல் அவன் வழியில் தானும் செல்பவள்

அவள்.. ஆனால் ஸ்ரீதர்.. இருவருக்கும் நேர்மாறாக வளர்ந்து விட்டானே... “என்று கவலையுடன் கூற.. கதவருகே மறைந்து நின்று கொண்டு அவர்கள் மூவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதருக்கு நெஞ்சம் பற்றி எரிந்தது.

வழக்கத்திற்கு மாறாக அன்று காலை விரைவிலேயே கண் விழித்து விட்ட ஸ்ரீதர்.. எவ்வளவோ படுக்கையில் புரண்டு முயன்று பார்த்தும் தூக்கம் வரவில்லை. எப்படியும் 9 மணிக்கு பிரபுவுடன் அலுவலகம் சென்றாக வேண்டுமே என்றெண்ணியவன் காபி குடிப்பதற்காக சமையலறையில் அன்னையைத் தேடினான். அன்னையும்,தந்தையும் முற்றத்தில் இருப்பதாக வேலையாள் கூற.. அங்கே சென்றவனுக்கு ஷ்யாம் கூறிய அனைத்தையும் கேட்க நேர்ந்தது.

இந்தச் சண்டாளன் இன்னும் என்ன கொடுமைகளையெல்லாம் செய்யக் காத்திருக்கிறான்..? சிங்கப்பூரில் இருக்கும் ருத்ரன் சித்தப்பாவின் வீட்டிற்கா..?, அதற்கு திகார் ஜெயிலுக்குக் கூடச் சென்று விடலாமே..! அந்தக் காட்டுவாசி ருத்ரன் கடுமைவாதியாயிற்றே! அவருடன் எப்படி நாட்களைக் கடத்துவது..! இதிலிருந்து தப்பிக்கவே முடியாதா..? என்று சிந்தித்தவனுக்கு பிரபுவின் மீது கோபம் எழுந்தது.

நல்ல வழி காட்டுவதாகக் கூறிக் கொண்டு இப்படிக் கொடுமைக்கு உள்ளாக்கும் இவன் அண்ணனா..?, இவனை நம்பி அப்பா எங்கள் இருவரது பொறுப்பையும் விட்டு விட்டாரா..?, இந்த வீட்டில் என்ன தான் நடக்கிறது...?, குடும்ப பாரத்தை சுமக்கின்றேன் என்கிற பெயரில் அவன் ஒரு ராஜ்யமே நடத்திக் கொண்டிருக்கிறான்.

அப்பாவிலிருந்து ஆரம்பித்து வீட்டு வேலையாள் வரை.. அனைவரும் அவன் சொல் படி தான் நடந்து கொள்கிறார்கள்.. போதாததற்கு இவனது பெயரையே 24 மணி நேரம் ஜபம் செய்யும் தங்கை வேறு! அண்ணன் என்றும் பாராமல் அவனைக் கொன்று விட வேண்டுமென்று வெறியே எழுந்தது ஸ்ரீதருக்குள்.

அன்று அலுவலகத்திலிருந்து விரைவிலேயே தனது நண்பர்களைச் சந்திக்கப் புறப்பட்டான். அவன் வேகமாக வெளியேறுவதைக் கண்டும் ஷ்யாம் எதுவும் கூறமாலிருந்தது அவனுக்குச் சாதகமாகிப் போயிற்று.

நகரின் அந்தப் பிரபலமான ஹோாட்டலில் நண்பர்கள் பட்டாளத்துடன் அமர்ந்திருந்த ஸ்ரீதர் பொங்கிய சினத்துடன் சிகரெட்டை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தான். “என்னடா..?, என்னவாயிற்று..?”என்று வினவிய நண்பர்களிடம் “ம்,குடி முழுகிப் போயிற்று..., ராட்சசன் அந்தப் பிரபுவினால்

DO NOT COPY

என் வாழ்க்கைப் பாழாகி விட்டது..”எனக் கூற.. அந்தக் கூட்டத்திலும் நல்லவன் ஒருவன்..

“உன் அண்ணன் நிச்சயம் உன் வாழ்வைப் பாழாக்க மாட்டான்.. அவன் பேச்சைக் கேட்டிருந்தால் நீ எப்போதோ... முன்னேறியிருப்பாய்..”எனக் கூற வேகத்துடன் எழுந்து சென்று அவனது சட்டையைப் பற்றியவன்..

“நான் எதற்காக அவன் பேச்சைக் கேட்க வேண்டும்..?, நான் என்ன அவனது அடிமையா..?, என் விருப்பம் போல் நான் என் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நினைப்பது தவறா..?, அவன் எதற்காக என்னுடைய விஷயத்தில் தலையிட்டு ஒவ்வொரு முறையும் குட்டையைக் குழப்ப வேண்டும்..?, நான் என்ன சிறுவனா..?, என் வழியைப் பார்த்துக் கொள்ளத் தெரியாத முட்டாளா..?”

“அப்பாவின் தொழிலில் ஈடுபாடில்லாததால் சொந்தத் தொழில் செய்ய எண்ணுவது தவறாடா..?”எனக் கேட்க.. அவனது கையை விலக்கியபடியே.. “என்ன தொழில் செய்ய நினைக்கிறாய் என்று கேட்டால் மட்டும் எந்த பதிலும் வராது..”என்று முணுமுணுக்க “என்னடா சொல்கிறாய்..:என்று வினவியவனிடம் “ஒன்றுமில்லை...”எனக் கூறி விட்டு அவன் வெளியேறி விட்டான்.

“தொழில் பற்றிய விஷயத்தைக் கூட விட்டு விடலாம்.. ஆனால் ஆனந்தி.. அவளை நான் உயிருக்கு உயிராக நேசித்தது உங்களுக்குத் தெரியும் தானே.. ஏதேதோ பேசி அவளை மிரட்டி என் வழிக்கு கொண்டு வந்திருந்தேன்.. காரியம் கை கூடும் வேளையில் வந்து தாழியை உடைத்து விட்டான் படு பாவி!, என் அண்ணன் எனக்கு ஜென்ம விரோதி.. “

“என் நேசத்தைக் குலைத்ததோடு நில்லாமல் என்னையே அடிக்க வேறு செய்கிறானடா.., பெல்ட்டால் அடித்துக் காயப் படுத்தி விட்டான்..!. எவ்வளவு ஆத்திரம் வந்தது தெரியுமா எனக்கு..?”எனக் கூற இன்னொரு தறுதலை ஒன்று..

“இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை..?, தோளிற்கு மேல் வளர்ந்து விட்ட ஆண் பிள்ளையை அடிப்பதா..?, உன் பெற்றோராக இருந்தால் கூடப் பரவாயில்லை.. உன் அண்ணன் தானே..?, திருப்பி அடிப்பதற்கு என்ன..?”என்று கூற.. “அவனை அடிப்பதா..?”என்று எச்சில் விழுங்கிய ஸ்ரீதர்..

“ஆறடி உயரத்தில்.. ஆஜானுபாகுவான தோற்றம் கொண்டிருப்பவனை எப்படியடா அடிக்க முடியும்..?, அவனது ஒரு அறையிலேயே.. என் உடலின் ஒட்டு மொத்த நரம்பும் வலி எடுத்து விடுகிறது.. இதில் நான் அவனை அடிப்பதா..?”என்று நடுங்கியபடி கூறினான்.

“இவ்வளவு கொடுமைகளையும் செய்தது போதாதென்று.. என்னை சிங்கப்பூர் ருத்ரன் சித்தப்பாவின் வீட்டிற்கு அனுப்பப் போகிறானாம்..”என்று கூற “அப்படியானால்.. விடுதலை தானே டா ஸ்ரீ..?,இனி உன் அண்ணன் முகத்தில் விழிக்கத் தேவையில்லை..?”என்று சிரித்தான் நண்பன்.

“சிரிக்காதே டா.., அந்த அரக்கன் ருத்ரன் சித்தப்பாவிற்கு.. என் அண்ணன் ராட்ச்சனே தேவலாம்.. அவர் திருமணமாகாத ஒரு தனி கட்டை டா... உலக வாழ்க்கையைத் துறந்த முனிவரைப் போல் வாழ்பவர்.. அங்கே சென்றால் சரியான சாப்பாடு கூட கிடைக்காதடா..காலையிலிருந்து மாலை வரை அவருடன் உழைக்க வேண்டும்.. முடியாதென்று கூறினால் மனிதன் நொங்கெடுத்து விடுவார்.. அவர் ஒரு காட்டுவாசிடா..,”

“இங்கே கிடைக்கும் பாக்கெட் மணி.., நல்ல சாப்பாடு,நண்பர்கள் வட்டமென்று எதுவும் அங்கே கிடைக்காது.. அது ஒரு ஜெயில் டா.., நான் எப்படி அங்கே சமாளிக்கப் போகிறேன் என்றே தெரியவில்லை..”எனக் கவலையுடன் கூறியவன் ஆத்திரத்துடன் நிமிர்ந்து “ஆனந்தியைப் பற்றிய விஷயம் என் வீட்டிற்குத் தெரிந்து விடாமல்.. கடைசி வரை காப்பாற்றி வந்தேன்.. அந்தப் பெண் சுஜிப்ரியா.. அவளால் வந்தது வினை.. அனைத்தையும் அந்த வில்லன் பிரபுவிடம் ஒப்பித்துவிட்டுச் சென்று விட்டாள்.. எமகாதகி!”

“ஆனால் ஒன்று நான் நரகத்திற்கே சென்றால் கூட.. என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய என் அண்ணனையும், தேவையற்ற குழப்பத்தை உண்டாக்கிய அந்தப் பெண் சுஜிப்ரியாவையும் பழி வாங்காமல் விட மாட்டேன்....”என்று கோபத்துடன் மேஜையைக் குத்தினான் ஸ்ரீதர்.

**அ**டுத்த வந்த ஒரு வாரமும் அமைதியாகக் கழிய அந்த வார இறுதியில் மீண்டும் ப்ரியாவைச் சந்திக்க எண்ணி அவளது வீடு நோக்கிப் பயணமானாள் அனு. ப்ரியாவின் வீடு இருந்த தெரு வரை வந்தபின் தான் அனுவிற்கு லேசான தயக்கம் எட்டிப் பார்த்தது..

என்ன காரணத்தைச் சொல்லி உள்ளே செல்வது..?, இப்போது அவர்கள் வீட்டிற்குள் அடி எடுத்து வைத்தால்.. சுஜி நிச்சயம் இன்முகத்துடன் வரவேற்பாள் தான்.. ஆனால் காரணமில்லாமல் செல்வது.. அனுவை சங்கடத்தில் ஆழ்த்தியது...

விழித்தபடியே வண்டியில்.. ப்ரியாவின் வீட்டை நோட்டம் விட்டபடி.. 3 முறை முன்னும் பின்னுமாக வலம் வந்தாள். மூன்றாவது முறை.. அவள் வீட்டின் வாசற்கதவைப் பார்த்தபடி மெதுவாக வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தவளை.. யாரோ வேகமாக வந்து வழி மறிக்க.. தடுமாறிச் சமாளித்து கோபத்துடன் நிமிர்ந்தவள் திகைத்தாள். ஏனெனில் அவளை விடக்



DO NOT COPY

கோபத்துடன் இடுப்பில் கை வைத்து முறைத்தபடி சக்தி நின்று கொண்டிருந்தான்.

யாரோ ஒரு இளைஞன் தன் வண்டியை மறித்து நிறுத்தியதோடல்லாமல் தன்னை முறைத்துக் கொண்டு வேறு நிற்பதைக் கண்டு எரிச்சலுடன் நோக்கிய அனு "என்ன சார்..?, யார் நீங்கள்..?, எதற்காக என் வண்டியை வழி மறிக்கிறீர்கள்..?"என்று வினவ...

"ம்,உன்னிடம் லைசென்ஸ் இல்லையென்றால் லஞ்சம் வாங்கி பிரியாணி சாப்பிடத் தான்.."என்றான். (பயபுள்ள இப்ப கூட உனக்கு பிரியாணி தானா..!!!) "ஆமாம்.. இது பெரிய மெயின் ரோடு.... லைசென்ஸ் செக் செய்வதற்கு.."என்று முணுமுணுத்த அனுவிடம்..

"எதற்காக அந்த வீட்டையே நோட்டம் விட்ட படி 3 முறை உலா போகிறாய்..?, என்ன திருட்டு கும்பலா..?, நீ ஒருத்தி மட்டும் தான் வந்திருக்கிறாய்..?, உன் கூட்டத்தில் இருப்பவர்களெல்லாம் எங்கே..?, பகலில் கொள்ளையடிப்பவர்களா..? அல்லது இரவில் அனைவரும் உறங்கியபின் வந்து திருடிச் செல்வதற்காக இப்போதே நோட்டம் விடுகிறாயா..?"என்று நிறுத்தாமல் பேசிக் கொண்டே செல்ல.. மேலும் எரிச்சல் பொங்க அவனை நிறுத்திய அனு..

"நான் திருடியா..?,என் வீட்டில் குவிந்திருக்கும் சொத்தை உட்கார்ந்து தின்பதற்கே எனக்கு என் வாழ்நாள் முழுமையும் போதாது.. நான்.. நான் அடுத்தவர்களின் வீட்டைக் கொள்ளை அடிப்பவளா..?, என்னைப் பார்த்தால் கொள்ளையடிப்பவள் போலவா தெரிகிறது..?"எனக் கூற..

அவளை மேலிருந்து கீழ் வரை நோக்கியவன் வேகமாகத் தலையசைத்து "இப்போதெல்லாம்.. திருடுபவர்கள் கூட இப்படி மாடர்ன் டிரஸ் அணிந்து கொண்டு தான் திருட வருகிறார்களாம்.., ஏய்.. உண்மையைச் சொல்... நீ எதற்காக அந்த வீட்டை நோட்டம் விடுகிறாய்..?, உன் திட்டம் என்ன..?"என்று கேட்க...

"சார்.. எனக்கு எந்த நோக்கமும் இல்லை.. நான் நோட்டம் விடுவதற்கு அது ஒன்றும் யாரோ ஒருவரின் வீடு அல்ல.. எனக்குத் தெரிந்தவரின் வீடு தான்.."என்று பதில் கூறினாள்.

அவளது பதிலைக் கேட்டு வாயைப் பிளந்த சக்தி... அடிப்பாவி! என் வீட்டையே உனக்குத் தெரிந்தவரின் வீடு என்று பொய் கூறுகிறாயா..?, இப்போதே உன் வேசத்தைக் களைக்கிறேன்... என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டவன்..

"அப்படியா..?, உனக்குத் தெரிந்தவர்களின் வீடா..?, அதையும் பார்த்து விடுவோம்..?"என்றவன் அவள் சற்றும் எதிர் பார்க்காத வேளையில் அவளது

DO NOT COPY

கையைப் பற்றி இழுத்துக் கொண்டு தன் வீட்டிற்குள் நுழைந்தான். "ஏய் Mr., கையை விடு.. எங்கே இழுத்துச் செல்கிறாய்.. கையை விடுடா.."என்ற அனுவின் அர்ச்சனைகளை கண்டு கொள்ளாது தன் வீட்டிற்குள் நுழைந்தான் அவன்.

மகன் யாரோ ஒரு பெண்ணை வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வருவதைக் கண்ட வள்ளி வேகமாக எழுந்து வந்து பார்க்க அவன் கையில் சிக்கியிருப்பது அனு என்பதை அறிந்து "அனு... எப்போது வந்தாய்..?"என்றபடி அருகில் செல்ல.. அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு.. அவனது கையை உதறி விட்டு "ஆன்ட்டி.."என்றபடி அவர் அருகே சென்றாள் அனு.

புதிதாக வந்தப் பெண்ணை அன்னை பெயர் சொல்லி அழைப்பதைக் கண்ட சக்தி.. அடப் பாவிங்களா..! கடைசியில் பல்பு வாங்கியது நான் தானா..?, இவளுக்கு ஏற்கனவே அம்மாவைத் தெரியுமா..?, அய்யோ! இந்த விஷய்ம் மட்டும் அந்தப் பிசாசு சுஜிக்குத் தெரிந்தால் 1 மாதத்திற்கு கேலி செய்வாளே.. என்று அப்போதும் அவன் தமக்கையைப் பற்றி எண்ணத் தொடங்கினான்.

"அனு என்னவாயிற்று..?"என்று கேட்ட வள்ளிக்கு பதில் கூறாமல் "என்ன சிஐடி சார்... அமைதியாக நிற்கிறீர்கள்..?, இப்போதேனும் நம்புவீர்களா..?, இது எனக்குத் தெரிந்தவரின் வீடு தானென்று?, ஆமாம்.. உங்களுக்கென்ன அப்படி ஒரு அக்கறை..?, இப்படித் தான் ரோட்டில் போகிற,வருகிறவர்கள் அனைவரும்.. எந்த வீட்டைப் பார்க்கிறார்களென்று கண்டறிந்து நியாயம் கேட்பது தான் உங்கள் வேலையா..?"

"அப்படியானால் நீங்கள் என்ன இந்த ஏரியா இன்ஸ்பெக்டரா...?, யூனிஃபார்ம் எங்கே சார்..?, வாடகைக்கு விட்டு விட்டீர்களா..?, இல்லையில்லை.. அக்கறையாக நியாயம் கேட்பது போல்.. அடுத்தவர்களின் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடிக்கும் திருட்டுக் கும்பல் தானே நீங்கள்..?"என்று பழிக்குப் பழி வாங்கி விடும் வெறியுடன் அவள் பேசிக் கொண்டே செல்ல..

அங்கே நின்று கொண்டிருந்த வள்ளியும்.. சத்தம் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்த சுஜியும் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருக்க.. அவர்களிருவரும் சிரிப்பதைக் கண்ட சக்தி எரிச்சலுடன் "சரியான லூசு.."எனக் கூறி விட்டு விறுவிறுவென நடந்து உள்ளே சென்றான்.

அவன் லூசு என்றதைக் கேட்ட அனு மேலும் கோபத்துடன் "யாரடா லூசு...?, நீ தான் டா லூசு.. பைத்தியம்.. ஃப்ராட்.. டியூப் லைட்..."எனக் கத்தியவள் அவன் உரிமையுடன் உள்ளே நுழைந்ததைக் கண்டு.. "ஆன்ட்டி.. அவன் ஒரு ஃப்ராட் ஆன்ட்டி...., ப்ரியா.. என்ன நீங்கள் கூட சிரிக்கிறீர்கள்...?, அவனைப் போலீஸில் ஒப்படைக்கலாம்.. பிடியுங்கள்.."எனப் பொறிய..

அவளைச் சமாதானப் படுத்திய ப்ரியா.. "அவனை எதற்காக போலீஸில் ஒப்படைக்கச் சொல்கிறாய்..?, சொந்த வீட்டிலேயே திருடுவதற்கு அவன் என்ன முட்டாளா..?"என்று சிரித்தபடியே வினவினாள்..

"சொந்த வீடா..?"என்று விழி விரித்தவளிடம் மேலும் புன்னகைத்தபடி "என் வாத்துத் தம்பி சக்தி.. இவன் தான்.."எனக் கூற.. அசடு வழிந்தபடி தலை குனிந்து நின்றாள் அனு. அவனது வீட்டை யாரோ ஒரு பெண் நோட்டம் விட்டால்.. அவன் கேள்வி கேட்காமல் என்ன செய்வான்..?, அய்யோ! இஷ்டத்திற்கு அவனை வாடா.. போடா.. என்று சகட்டு மேனிக்கு விளாசித் தள்ளியாயிற்று! இடியட் அனு... என்று அவளே அவளை திட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில்.. உள்ளே சென்று தம்பியை அழைத்து வந்த சுஜி... அனுவை அவனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.

அறிமுகம் முடிந்ததும் நடந்ததை விசாரித்தவள்.. தம்பி கூறியதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கினாள். "நீ எப்போதடா.. அவள் நம் வீட்டை 3 முறை கடப்பதைப் பார்த்தாய்..?:எனக் கேட்டதற்கு "நான் மாடியில் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கும் போது தான்... இவள் திருடுபவர்கள் நோட்டம் விடுவதைப் போல் நம் வீட்டைப் பார்த்ததைக் கவனித்தேன்.."எனக் கூற.. அவனது பதிலில் எரிச்சலடைந்த அனுவிற்கு அவ்வளவு நேரமாக மட்டுப் பட்டிருந்த கோபம் தலைக்கேற..

"இன்னொரு முறை.. திருடி என்று சொல்ல வேண்டாமென்று சொல்லுங்கள் ப்ரியா.."எனக் கூறியவளிடம் "பின்னே எதற்காக அத்தனை முறை உலா போனாளாம்..?, நேராக நம் வீட்டிற்கே வந்திருக்க வேண்டியது தானே..?"என்று வினவினான் சக்தி.

"அது.. அது.."என்றிழுத்தவளுக்கு தெரு முனையில் கண்ட போஸ்டர் ஒன்று சட்டென நினைவிற்கு வர "இங்கே.. 'Peaceful Mind' யோகா சென்டரைத் தேடி அலைந்து கொண்டிருந்தேன்.. அதை உங்கள் தம்பி பார்த்து விட்டு நான் உங்கள் வீட்டை நோட்டம் விட்டதாகக் கூறுகிறார்.."எனக் கூறி சமயோசிதமாக யோசித்த தன் மூளைக்கு ஷொட்டு வைத்துக் கொண்டாள்.

அவள் கூறியதைக் கேட்ட படியே உள்ளே வந்த வள்ளி "அனு மா.. நம் சுஜி கூட அந்த யோகா சென்டருக்குத் தான் செல்கிறாள். உனக்கு விவரம் வேண்டுமென்றால்.. இவளிடமே கேட்டிருக்கலாமே!"எனக் கூற எனக்கே இப்போது தானே ஆன்ட்டி இந்த ஐடியா வந்தது! இதில் நான் எங்கே சுஜியிடம் கேட்க.. என்றபடி அசட்டுச் சிரிப்பை உதிர்த்தாள்.

"நீங்கள் அங்கே யோகா கற்றுக் கொண்டிருக்கிறீர்களா..?"என்று வினவிய அனுவிடம் "அங்கே யோகா கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.."எனக்

கூற.. “வாவ்!” என்ற அனு “இன்னும் உங்களுக்குள் எவ்வளவு திறமைகள் ஒளிந்திருக்கிறது ப்ரியா..?, நீங்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்”என மனம் விட்டுப் பாராட்டினாள்.

“சரி,சரி, எனக்கு ஏற்கனவே ஜல்பாக இருக்கிறது... இதில் நீ வேறு ஐஸ் பெர்க்கை என் தலையில் வைக்காதே.. உனக்கும் அங்கே சேர்ந்து யோகா கற்றுக் கொள்ள ஆசையா..?, பக்கத்துத் தெருவில் தான் இருக்கிறது.. நான் தினமும் மாலை 7 லிருந்து 8 வரை செல்வேன்.. உனக்கு அந்த டைமிங் ஓகே என்றால்.. நீயும் வரலாம்.. நானே உனக்குக் கற்றுத் தருவேன்..”எனக் கூற..

ஆஹா! தேடி வந்த அதிர்ஷ்டத்தை விட்டு விடக் கூடாது என முடிவு செய்த அனு.. “கட்டாயம் ப்ரியா.. நாளைக்கே வந்து சேர்ந்து கொள்கிறேன்..”என முறுவலித்தபடி திரும்பியவள் சக்தி தன்னை இன்னும் சந்தேகத்துடன் நோக்குவதைக் கண்டு.. ப்ரியாவிடம்...

“உங்கள் தம்பி.. தங்கக் கம்பிக்கு என் மேல் இருந்த சந்தேகம் தீரவில்லையென்று நினைக்கிறேன்.. என்னுடைய ஐடி ப்ரூ∴ப் ஏதேனும் காட்ட வேண்டுமா என்று கேட்டு சொல்லுங்கள்.. காட்டுகிறேன்..”எனக் கூற.. “அதெல்லாம் தேவையில்லை..”என்று முணுமுணுத்தவனிடம் “பின்னே எதற்காக அப்படிப் பார்க்கிறாராம்..?”என்று அனு சிணுங்கிக் கொள்ள..

“நீ அழகாக இருக்கிறாய் அல்லவா அனு.. அதனால் தான் சைட் அடித்து விட்டான்.. மன்னித்துக் கொள்”என்று சுஜி கூற.. “யார்..?. உங்கள் தம்பியா..?, டீசன்ட்டாக ட்ரஸ் செய்திருக்கும் பெண்களைத் திருட்டு கும்பலாக இருக்குமோ என்கிற சந்தேகக் கண்ணுடன் நோக்குபவர்.. அவராவது.. சைட் அடிப்பதாவது..”எனக் கூறி முடித்தவளுக்கு அதிகமாகப் பேசி விட்டோமோ! என்று தோன்ற..


உதட்டைக் கடித்தபடி தயக்கத்துடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள். அதுவரை அவளை எரிச்சலுடனே பார்த்துக் கொண்டிருந்த சக்திக்கு அவளது செய்கை சிரிப்பை வரவழைக்க.. “சரியான லூசு..”என்றபடி அவள் முன் நெற்றியில் தட்டி விட்டுச் சென்றான்.

அவனது பேச்சும் செய்கையும் அனுவுக்குப் பிடித்துப் போக.. தானும் சிரித்தபடி நின்றிருந்தவளைக் காபி சாப்பிடுமாறு வள்ளி அழைக்க அவருடன் அடுக்களைக்குச் சென்றாள். அவள் செல்வதைக் கண்டு விட்டு சக்தியின் அறைக்குள் நுழைந்த சுஜி... கண்ணாடி முன்பு நின்று கொண்டிருந்த தம்பியின் தோளை இடித்து “என்னடா கண்ணா..?, அனுவுடன் உன் கெமிஸ்ட்ரி அதி வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது போல...”என வினவ..

DO NOT COPY

எதுவும் கூறாமல் முறுவலித்த சக்தியைக் கண்டு “வழிவதைப் பார்.. உன்னைச் சொல்லி குற்றமில்லை.. அந்தச் சப்பை மூக்கு வத்சலாவிற்கே உயிரைக் கொடுப்பவன் நீ.. இப்படி ஒரு சூப்பர் ஃபிகர் கிடைத்தால்.. சைக்கிள் கேப்பில் லாரி ஓட்டி விடுவாய்..”என்றாள்.

“இதோ பார் சுஜி.. வத்சலாவிடம் நான் சகோதரனைப் போல் பழகி வருகிறேன்.. நீயாக எதையேனும்.. உளறி வைக்காதே..”எனக் கூற.. “அடப்பாவி..”என்று வாயைப் பிளந்த சுஜி “அண்டப் புழுகு.. ஆகாசப் புழுகு என்றால் இது தான் போலும்... வத்சலா... உன் சகோதரியா..?, பாவி சக்தி! ஒரு சூப்பர் ஃபிகர் கிடைத்ததும்.. உன் நீண்ட நாள் ஃபிகர் வத்சலாவையே ஓரங்கட்டி விட்டாயே..?, நீ உருப்படவே மாட்டாய்..”எனச் சபிக்க வாய் விட்டுச் சத்தமாக சிரித்துக் கொண்டிருந்தான் சக்தி.



## அத்தியாயம் – 7



**வெண்ணிலவு நீ எனக்கு**

**மேவுகடல் நான் உனக்கு**

**பண்ணு சுதி நீ எனக்கு**

**பாட்டு இனிமை நான் உனக்கு**

**எண்ணி எண்ணி பார்த்திடில் ஓர்**

**எண்ணம் இலை நின் சுவைக்கே**

**கண்ணின் மணி போன்றவளே**

**கட்டி அமுதே கண்ணம்மா…!**

DO NOT COPY

**வீ**ட்டிற்கு வந்து அன்னையிடம் யோகா சென்டருக்குச் செல்லப் போவதை விவரித்த அனு "அம்மா.. ப்ளீஸ்மா… அண்ணனிடம் எப்படியாவது இதைப் பற்றிக் கூறி எனக்கு அனுமதி வாங்கிக் கொடு.."எனக் கெஞ்ச.. "என்னடி அனு.. நம் ஏரியாவில் இருக்கும் யோகா சென்டர்களையெல்லாம் விட்டு விட்டு அவ்வளவு தூரத்திற்குச் சென்றாக வேண்டுமென்று அடம் பிடிக்கிறாய்… பிரபு கேட்டால்.. என்ன சொல்வதாக இருக்கிறாய்..?,"என வினவ..

"என் தோழி அஞ்சலியும் அதே யோகா சென்டருக்குச் செல்வதால்.. நானும் அங்கே செல்கிறேன் என்று கூறுவேன்.."என்றவளிடம் "அவ்வளவு தூரம் சென்று கற்றுக் கொள்ள வேண்டாமென்று அண்ணன் ஒரேடியாக மறுத்து விட்டால்..??"என்று வினவினார் சீதா.

“மறுத்தால் அண்ணியைச் சந்திக்கத் தான் செல்கிறேன்.. அனுமதி தருவாயா.. மாட்டாயா.. எனக் கேட்டு சண்டை போடுவேன்..”என்று அனு கூற “அய்யோ.. அப்படியேதும் செய்து வைத்து விடாதே.. எப்படியேனும்.. அவனிடம் அனுமதி வாங்கித் தருகிறேன்..”என்றார் சீதா.

அன்று இரவுச் சாப்பாட்டின் போது... பிரபுவிடம்.. அனுவின் விருப்பத்தை சீதா தெரிவிக்க.. தங்கையைக் கேள்வியுடன் நோக்கிய பிரபு “அவ்வளவு தூரம் செல்ல வேண்டிய அவசியம் என்ன அனு..?, இங்கேயே அருகிலேயே நல்ல சென்டர்கள் உள்ளனவே..?”எனக் கேட்க..

தயங்கியபடியே “இல்லை அண்ணா.. அங்கே எனது தோழி அஞ்சலியும் வருகிறாள். இருவரும் சேர்ந்து சென்றால்... எனக்குக் கொஞ்சம் இலகுவாக இருக்கும்.. ப்ளீஸ் அண்ணா..”எனக் கெஞ்ச.. சிரித்தபடியே தலை ஆட்டி “நீ ப்ளீஸ் போட வேண்டிய அவசியம் என்ன அனுமா..?, எத்தனை மணிக்குச் செல்ல வேண்டும்..? என்பதை டிரைவர் அண்ணாவிடம் கூறிவிட்டாயானால்.. அவரே உன்னை அழைத்துச் செல்வார்..”எனக் கூறியவனை அவசரமாக இடை மறித்து “அதற்கெல்லாம் அவசியமில்லை அண்ணா... நானே என் வண்டியில் சென்று கொள்வேன்.. என் தோழியும் வருகிறாள் என்றேனே.. நான் பார்த்துக் கொள்வேன் அண்ணா..”எனக் கூற..

“சரி...”எனத் தலையாட்டியவன் “சிறிது தாமதமானாலும் முத்து அண்ணாவிடம் கூறி காரில் தான் வர வேண்டும்...”என்று உறுதி பெற்றுக் கொண்டு எழுந்து சென்றான். அவன் சென்றதும் பெரு மூச்சு விட்ட அனு.. “எப்படியோ.. அண்ணனிடம் அனுமதி வாங்கியாயிற்று... ஹே!!!!”என குதிக்க...

“அனு.. விளையாட்டுத் தனமாகவே அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறாய்.. வினையாகி விடப் போகிறது.. உன் பாதுகாப்பு எனக்கு மிகவும் முக்கியமடி..”என்று அன்னை வருத்தத்துடன் கூற “அம்மா.. ஒரு 20 நிமிட பிரயாணத்திற்கு நீயும் அண்ணனும் கொடுக்கும் பில்ட் அப் தாங்க முடியவில்லை... நிறுத்துகிறாயா..?”எனக் கோபமாகக் கேட்டாள் அனு..

“உனக்கென்ன.. பெற்றவளுக்குத் தானே வேதனை புரியும்..”என்று புலம்பியபடியே திரும்பியவர் “சுஜியின் தம்பியைப் பார்த்ததாகக் கூறினாயே.. அவனும் நன்றாகப் பழகுகிறானா..?”எனக் கேட்க..

அவனுடனான தனது சந்திப்பை எண்ணி அசடு வழிந்த அனு.. நடந்தவை அனைத்தையும் அன்னையிடம் கூறினாள். “நல்லவேளை... சக்தியாக இருக்கப் போய் உன்னைச் சும்மா விட்டிருக்கிறான்.. வேறு யாராகவேனும் இருந்திருந்தால்.. போலிஸிடம் தெரிவித்து விட்டுத் தான் உன்னிடம் பேச்சு

கொடுத்திருப்பார்கள்" என்று சிரிக்கத் துவங்க.. உடன் சேர்ந்து தானும் சிரித்த அனு "சக்தியும் நன்றாகத் தான் பழகுகிறாரம்மா.."எனக் கூறி முறுவலித்தாள்.

அதன்பின் அடுத்து வந்த நாட்கள் முழுவதும் அனுவிற்கு விரைவாகச் சென்றது.. கல்லூரியிலிருந்து வந்த பின் யோகா செண்டருக்குக் கிளம்பி விடுவாள். முழுதாக 1 மணி நேரம் சுஜிப்ரியா கற்றுக் கொடுக்கும் யோகக் கலையை கற்றுக் கொண்ட பின்.. சிறிது நேரம்..அருகிலிருக்கும் பார்க்கிற்குச் சென்று இருவரும் அரட்டை அடிப்பார்கள். அல்லது.. சுஜியின் வீட்டிற்குச் சென்று வள்ளி கொடுக்கும் சிற்றுண்டியைத் தின்றபடி அரட்டையில் இறங்குவார்கள்.

இந்தச் சில நாட்களாக சுஜியுடன் பழகியதிலிருந்து அவள் மனதிலிருக்கும் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை அனுவினால். எதைப் பற்றிய கவலையுமில்லாமல்.. அனைவரையும் மகிழ்வித்துக் கொண்டு.. சந்தோசத்துடன் துள்ளித் திரிபவளிடமிருந்து எதைத் தெரிந்து கொள்வது?

ஷ்யாமுடன் நடந்த ஊடல் சரியாகி விட்டதா என்ன..?, பின் எதற்காக அன்று அப்படிச் சண்டையிட்டுச் சென்றாள்..?, என்றெண்ணியவளுக்கு மேலும் குழப்பம் அதிகமானதே தவிர தீர்ந்த பாடில்லை. அவளிடம் இதைப் பற்றி ஜாடை,மாடையாகக் கேட்பதற்கும் தைரியம் வரவில்லை.

இருக்காதா பின்னே?, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல்.. குடும்பமே அனுவின் மீது அன்பைப் பொழிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில்.. எதையேனும் பேசி வைத்து காரியத்தை கெடுத்து விடக் கூடாதே என்கிற பயம் இருக்கத் தான் செய்தது அவளுக்குள். ஆனால் எப்படியேனும்.. விரைவிலேயே விஷயத்தைக் கறந்து விட வேண்டுமென்பதில் மட்டும் உறுதியாக இருந்தாள்.

ஷ்யாமுடனான அந்தக் கார் சந்திப்புக்குப் பின் சுஜிப்ரியாவிற்கு அவனிடம் வம்பு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏதும் அமையவில்லை. அவனைப் பற்றிய நினைவுகள் ஏதும் சொல்லிக் கொள்ளும் படியாக அவளுக்கு இல்லையென்றாலும்.. முழுதாக மறந்து விட்டாள் என்றும் கூறுவதற்கில்லை.

அன்னை,தம்பியைத் தவிர யாரிடமும் தானாகச் சென்று வம்பு செய்யாவிடிலும் வழிய வரும் வம்புச் சண்டையைச் சாதாரணமாக விட்டு விடுபவள் அல்ல சுஜிப்ரியா! அவளைப் பற்றியும்,அவளது எண்ணங்களைப் பற்றியும் அறியாத ஷ்யாம் தானாகவே அவளிடம் வந்து மாட்டிக் கொண்டான்.

**ந**ண்பன் ஒருவனைச் சந்திப்பதற்காக நகரின் அந்தப் பெரிய ஷாப்பிங் மாலிற்கு வருகை தந்திருந்தான் ஷ்யாம். நண்பனுடன் அங்கே இருந்த உணவகத்தில் உண்டபடியே உரையாடலை முடித்துக் கொண்டு வெளியே வந்தவன்..

DO NOT COPY

“எனக்குக் கொஞ்சம் பர்ச்சேசிங் செய்ய வேண்டியிருக்கிறதடா..”எனக் கூறி நண்பனை அனுப்பி விட்டு அந்தக் கடைக்குள் நுழைந்தான்.

அனு நீண்ட நாட்களாக அவனிடம் வாங்கித் தரும் படி நச்சரித்துக் கொண்டிருந்த பொம்மைகளின் பக்கம் சென்றவன் புலம்பிய படியே பார்வையிட்டுக் கொண்டிருந்தான் “பொம்மை வைத்து விளையாடும் வயதா இது... 7 கழுதை வயசாகி விட்ட பின்பும் இன்னும் சிறு பிள்ளை போல்..”என்றபடி பார்த்துக் கொண்டே வந்தவன்.. அங்கே கீழே கிடந்த டெட்டி பொம்மையின் மீது கவனமில்லாமல் கால் பதித்து விட்டான்.

**வி**டுமுறை நாள் என்றாலே.. வீட்டில் இருப்பது சுஜிக்கு மிகவும் போரான விஷயம். அப்படியே எப்போதேனும் வீட்டில் இருக்க நேரிட்டு விட்டாலும் அன்னையும்,தம்பியும் “நீ தயவு செய்து வெளியே எங்கேனும் சுற்றி விட்டு மாலையில் வீடு வந்து சேர் புண்ணியவதியே என்று காலில் விழுந்து கெஞ்சாத குறையாகக் கேட்பதால்.. போனால் போகட்டுமே என்று பாவம் பார்த்து கிளம்பி விடுவாள்.

கெஞ்ச மாட்டார்களா பின்னே..?, ஹோம் தியேட்டரில் ரஜினி படத்தை ஓட விட்டு விசிலும்,கைதட்டலும்,கூச்சலுமாக அராத்து வேலை பார்த்து வைப்பாள். அத்தோடு நில்லாமல் தோட்ட வேலை பார்க்கிறேன் என்கிற பெயரில் சக்தி அழகாக வளர்த்து வைத்திருக்கும் செடிகளைப் பிடுங்கி போட்டு.. சேறும்,சகதியுமாய் வந்து நிற்பாள்.

இதை விட பெரிய கொடுமை... வள்ளியை அடுக்களையில் போடப் பட்டிருக்கும் சேரில் அமர வைத்து தனது துப்பட்டாவால் கையைக் கட்டிப் போட்டு விட்டு தானே சமையலில் இறங்கி விடுவாள். சக்தியோ,தந்தையோ வந்து பார்த்து திட்டி வள்ளியை மீட்டால் ஒழிய.. சுஜியின் அட்டகாசத்திற்கு அளவே இருக்காது.. அதற்காகவே அவள் வீடு தங்குகிறாள் என்றால் அனைவரும் பீதி ஆகி விடுவார்கள்.

அந்த வார விடுமுறையில் “இன்று எங்கேயும் செல்லப் போவதில்லை Mrs.கோமு.., உங்களுடன் சேர்ந்து ஆப்பம் சுடுகிறேன்..”எனக் கூற “அம்மா.. வேண்டாம்.. ஆப்பம் சாப்பிட வேண்டுமென்று நான் சென்ற வாரத்திலிருந்து ஆசையாகக் காத்திருக்கிறேன்.. இந்தப் பிசாசை உள்ளே விடாதே..”என்று சக்தி அலறும் வேளையில் ரேகா போன் செய்து விட “தம்பிப் பையா.. உனக்கு இன்று என் ஆப்பம் தான்..”என்று தனது அறைக்குச் சென்றவள்..

திரும்பி வருகையில் வெளியே செல்வதைப் போல் தயாராகி வர வள்ளியும்,சக்தியும் நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றினர். “தம்பிப் பையா.. வெரி சாரி டா.. எனக்கு இன்று ஆப்பம் செய்து கொடுக்க நேரமில்லை..

DO NOT COPY

ஆனால் நிச்சயம் ஒரு முறை செய்து கொடுத்தே தீருவேன்.. சரியா..?, அக்கா செய்து கொடுக்கவில்லையே என்பதற்காக நீ சரியாகச் சாப்பிடாமல் இருந்து விடாதே கண்ணா...”என்று கொஞ்ச..

“ச்சி.. கையை எடு..”என்று தட்டி விட்டவனை “போடா.. போடா.. எப்படியும் மாலை சிற்றுண்டி நான் தான் தயாரிப்பேன்..”எனக் கூறி அவனை அலற வைத்து விட்டுத் தான் வீட்டிலிருந்து புறப்பட்டாள்.

ரேகாவும்,சுஜியும்.. அந்த ஷாப்பிங் மாலிற்குச் சென்று ஒரு கடையை விடாமல் அலசி ஆராய்ந்தவர்கள்.. கடைசியாக அந்தக் கடைக்குள் நுழைந்தனர். சுஜிக்கு டெட்டி பொம்மைகள் என்றால் மிகவும் பிரியம்.. அவளுடைய கடைசி ஆண்டு பிறந்த நாளைக்குக் கூட சக்தி பெரிய டெட்டி பொம்மை ஒன்றைத் தான் பரிசளித்திருந்தான். ஆனாலும் அவளுக்கு டெட்டியின் மீதிருந்த மோகம் மட்டும் குறையவேயில்லை.

விதவிதமான டெட்டி பொம்மைகள் வீட்டை நிறைத்திருந்தாலும்.. உள்ளே நுழைந்தவுடன் கண்டு விட்ட அந்த பிங்க் நிற டெட்டி உள்ளத்தைக் கொள்ளை கொள்ள... அதை எடுத்து ட்ராலியில் ஏற்கனவே வாங்கிய பொருட்களுடன் வைத்தவளை ரேகா அழைக்க.. அவசரமாக ட்ராலியை அதே இடத்தில் நிறுத்தி விட்டு அவளிடம் விரைந்தாள்.

அவசரத்தில் ட்ராலியின் நுனியில் டெட்டியை வைத்து விட்டு அவள் சென்று விட.. சில நிமடங்கிளிலேயே அந்தப் பொம்மை கீழே விழுந்தது.. பொம்மை கீழே விழுந்து விட்டதை அறியாமல் தோழி காண்பித்த ஃபேஸியல் க்ரீமைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டிருந்தாள் சுஜிப்ரியா.

பொம்மைகளைப் பார்வையிட்டபடியே வந்து கொண்டிருந்த ஷ்யாம் இவை அனைத்தையும் அறியாமல் பொம்மையின் மீது கால் பதித்து விட்டான். பதித்த வேகத்திலேயே கால்களை அகற்றிவிட்டவனைக் கவனித்து விட்ட சுஜிப்ரியா.. வேகமாக ஓடி வந்துக் கீழே கிடந்த பொம்மையைக் குனிந்து எடுத்தாள்.

பொம்மையின் மீது பட்டிருந்த தூசியைத் துடைத்த படியே நிமிர்ந்து அவனை நோக்கியவள்.. இவனா..?, இந்த அந்நியன் எதற்காக இங்கே வருகை தந்திருக்கிறான்..?, அது சரி, இந்தக் கடைக்கு சுஜிப்ரியா மட்டுமே வருகை தர வேண்டுமென்று போர்ட் வைத்திருக்கிறார்களா என்ன..?, அன்று ஏளனமாக அப்படி நோக்கியவன் இப்போது திருட்டு முழி முழிப்பதைப் பார்! கோபமாக அவள் வாயைத் திறக்கும் முன் “சாரி.. சாரி.. தெரியாமல் மிதித்து விட்டேன்.. சாரி”என்று அவன் கூற.. மேலும் கோபமுற்றவள்..

DO NOT COPY

“இவ்வளவு பெரிய டெட்டி கீழே கிடப்பது கூடத் தெரியாமல் அப்படியென்ன நினைவில் நடந்து வருகிறீர்கள்.., ஆமாம், என்ன பெரிய நினைப்பாக இருந்து விடப் போகிறது... நாளை எந்தத் தெருவில் எந்தப் பெண்ணின் கழுத்தைப் பிடிக்கலாம் என்றெண்ணியிருப்பீர்கள்..”எனக் கூற..

அவளது பதிலில் எரிச்சலடைந்த ஷ்யாம் பிரச்சனையை சுமூகமாக முடித்து விட்ட பின்பும் இவள் என்ன அதைப் பற்றியே பேசிக் கோபப் படுத்துகிறாள் என்றெண்ணியவன் “முடிந்து போன விஷயத்தைத் திரும்பத் திரும்பப் பேசி பிரச்சனையைப் பெரிது படுத்தாதே... அதிகப்ரசிங்கி.. ஒரு பொம்மையை மிதித்ததற்கு இப்படிக் குதிக்கிறாய்..?”எனக் கேட்டவனை வேகமாக இடை மறித்தவள்..

“என் டெட்டியை பொம்மை என்று சொல்லாதீர்கள்.. எனக்குக் கோபம் வரும்”எனக் கூற.. இடது கையால் பொம்மையை இறுக அணைத்தபடித் தன் முட்டைக் கண்களை விரித்தவளைக் கண்டு சிரிப்பாக வந்தது ஷ்யாமிற்கு.. ஆனலும் மறைத்துக் கொண்டு “இது வேறா..?”என்று தலையில் அடித்துக் கொண்டவன்..

“இப்போது என்ன தான் செய்ய வேண்டுமென்கிறாய்..?, இந்த டெட்டியின் விலையைக் கூறு... பணத்தைக் கூட நான் கொடுத்து விடுகிறேன்.. நீ தயவு செய்து எனக்கு வழி விடு..”என்று கூறினான்.

அவனது பதிலைக் கேட்டு மீண்டும் வெகுண்டெழுந்த சுஜி “என்ன பணத்தைக் கொடுத்து சரி செய்து விடலாம் என்றெண்ணுகிறீர்களா..?, அது ஏன்..?, அண்ணனுக்கும்,தம்பிக்கும் ஒரே புத்தி.. எப்போது பார்த்தாலும் பணத்தைப் பற்றியே பேசிக் கொண்டு.., பணம் இருந்தால் எதுவும் செய்து விடலாம் என்கிற நினைப்பு! ச்ச.. எனக்கு உங்கள் பணம் தேவையில்லை..”என்று வெடுக்கென்று கூற..

“பணம் வேண்டாமென்றால்.. வேறு என்ன வேண்டும்..?..”என்று எரிச்சலுடன் வினவியவனிடம் “ஏன்? பெரிதாக சலித்துக் கொள்கிறீர்கள்..?, தவறு செய்தால் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்ற புத்தி உங்கள் பரம்பரைக்கே கிடையாதா..?, அதெப்படி.. தவறும் செய்து விட்டு.. அதட்டவேறு செய்கிறீர்கள்..?”என்று வினவினாள்.

“அய்யோ..”என்று தலையிலடித்துக் கொண்டவன் “மன்னிப்பு தான் ஆரம்பத்திலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேனே...”என்று கூற.. இவனை இப்படியே விடுவதா.. தவறு செய்தது மட்டுமில்லாமல்.. பணத்தைக் கொடுத்து சரி செய்து விட நினைக்கின்றான்.. எகத்தாளமான பேச்சு வேறு!

DO NOT COPY

மன்னிப்புக் கேட்டானா..?, என்ன பெரிதாக கேட்டு விட்டான்?, சாரி,தெரியாமல் மிதித்து விட்டேன்.. என்றால்.. மன்னிப்பு கேட்பதா..?, ஒரு பணிவு வேண்டாம்? (அடேங்கப்பா!!!) இது தான் மன்னிப்பு கேட்கும் முறையா..?, அதை விட பெரிய குற்றம் தான் ஆசை ஆசையாக வாங்கிய டெட்டியை பொம்மையென்று சாதரணமாக அழைக்கின்றான், படு பாவி! என்று கோபமாக எண்ணியவளின் கண்கள் எதேச்சையாக டெட்டியின் மீது பாய.. "மவனே.. நீ இன்று தொலைந்தாய்..!"என்றெண்ணிக் கொண்டவள்..

அவனை நிமிர்ந்து நோக்கி "மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதுமா..?, இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்..?"என்றபடி டெட்டியை அவன் புறம் நீட்டினாள், அவன் மிதித்ததில் அவனது கால் ஷூவில் இருந்த அழுக்கு சின்னப் பொட்டளவிற்கு பொம்மையின் மீது பதிந்திருந்தது.

அவன் பதில் ஏதும் கூறாமல் அவளையே நோக்க.. அவன் பார்வையை உதாசீனம் செய்து விட்டு "நான் ஆசையாக வாங்கிய புது டெட்டியை அழுக்கு செய்து விட்டு.. மன்னிப்பு என்கிற ஒரு வார்த்தையைக் கூறி விட்டுத் தப்பிக்கப் பார்க்கிறீர்களா..?, எனக்கு உங்கள் மன்னிப்பும் வேண்டாம், பணமும் வேண்டாம்.. இதே பொம்மை அழுக்கில்லாமல் வேண்டும்.."என்று சிறு பிள்ளை போல் பிடிவாதம் பிடித்தாள்.

அதற்குள் சுற்றியிருந்தோர் அனைவரும் இவர்களிருவரை வித்யாசமாகப் பார்க்கத் தொடங்க.. தன் போக்கில் விரல்களை ஆட்டி ஆட்டிப் பேசிக் கொண்டே சென்றவளின்.. விரலைப் பற்றி "சுஜூ.. சுஜூ.. ப்ளீஸ்.. எல்லாரும் நம்மைத் தான் பார்க்கிறார்கள்.. வீணாகக் காட்சிப் பொருளாக வேண்டாம்.. பிடிவாதம் பிடிக்காதே.."என்று பொறுமையாக விளக்கத் துவங்க..

முருங்கை மரத்தை விட்டு கீழே இறங்காத வேதாளமாய்.. அவள் பிடியிலேயே நின்றாள். இவளிடம் பொறுமையாகப் பேசினால் வேலைக்கு ஆகாது என்றெண்ணியவன் பற்றியிருந்த விரல்களால்.. அவளது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பொம்மைகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த இடத்திற்குச் சென்று அதே பிங்க் நிறத்திலிருந்த மற்றொரு டெட்டியை எடுத்துக் கொண்டு பில் போடும் இடத்திற்குச் சென்றான்.

தன் கால் பட்டதால் அழுக்குப் பட்டிருந்த டெட்டிக்கும் சேர்த்தே பணம் கொடுக்க "அதற்கு நீங்கள் ஒன்றும் பணம் கொடுக்க வேண்டாம்.. நானே வாங்கிக் கொள்வேன்.."என்றவளை "சுஜூ.."என்று அவளது விரல்களை அழுத்தி அவன் அடக்க முயற்சிக்க.. அவனது முயற்சியைக் கண்டு கொள்ளாமல்..

அந்த விற்பனைப் பெண்ணிடம் "இந்த பொம்மைக்கு நீங்கள் இவரிடம் பணம் வாங்காதீர்கள்.. நான் கொடுக்கிறேன்" எனக் கூற "வாயை மூடிக் கொண்டு

அமைதியாக இரு..”என்றவன் அந்தப் பெண்ணிடம் பணத்தைக் கொடுத்து 2 பொம்மைகளையும் வாங்கி விட்டான்.

கோபத்துடன் அவன் முன்னே வந்து நின்றவள் “சொல்லச் சொல்ல கேட்காமல்.. எதற்காகப் பணம் கொடுத்தீர்கள்..?, உங்கள் பணக்காரத் திமிரை என்னிடம் காட்டுகிறீர்களா..?, எனக்கு உங்கள் பணம் தேவையில்லை.. பிடித்துக் கொள்ளுங்கள்...”என்று கைப்பையிலிருந்து பணத்தை எடுத்து அவன் கையில் திணித்தவள் பொம்மைகளை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு வெளியேறினாள்.

“ராட்சசி.. திமிர் பிடித்தவள்..”என்று முணுமுணுத்த ஷ்யாம் எரிச்சலுடன் வந்த வேலை முடியாமலே கடையை விட்டு வெளியேறினான்.

ஃபேஸியல் க்ரீமைக் கையில் கொடுத்து விட்டு வேறு எங்கேயோ சென்று விட்ட ரேகாவை ஃபோனில் அழைத்தவள் “நான் வீட்டிற்குச் செல்கிறேன்.. நீ உன் ஷாப்பிங்கை முடித்து விட்டுச் செல்..”என்றவளிடம் “சுஜி என்னவாயிற்று.. குரல் கோபமாகத் தெரிகிறதே.. என்று ரேகா வினவ..

“ம்.. ஒரு சூனா பானா என் ஷாப்பிங் மூடைக் கெடுத்து விட்டான்.. நான் வீட்டிற்குச் செல்கிறேன்..”எனக் கூறி விட்டு வீட்டிற்குச் சென்று விட்டாள். வீட்டில் வள்ளி “ஒரே நிறத்தில் எதற்கு 2 பொம்மை வாங்கியிருக்கிறாய்..?”என்று வினவ “அம்மா.. நீ வேறு என்னைக் கோபப்படுத்தாதே.. ஏற்கனவே நான் எரிச்சலில் இருக்கிறேன்..”என்று பொறிந்து விட்டு தன் அறைக்குச் சென்று விட்டாள். “என்னடா சக்தி.., இப்போது என்ன கூறி விட்டேனென்று கோபமாகச் செல்கிறாள்..?”என்று மகனிடம் முறியிட்டார் வள்ளி..

அவனோ.. “நல்ல வேளை மம்மி.. ஈவ்னிங் டிஃபன் செய்வதாகச் சொன்னதை மறந்து விட்டாள் போலும்.. வெங்காய பக்கோரா நிம்மதியாகச் சாப்பிடலாம்..”என்று சிரிக்க.. “அம்மா.. நான் வெங்காயப் பக்கோரா செய்யப் போகிறேன்..”என்று உள்ளேயிருந்தபடியே சுஜி குரல் கொடுக்க.. “அய்யோ....”என்று அலறினான் சக்தி.

அன்றைய இரவு உணவை முடித்து விட்டு புத்தகத்தில் மூழ்கியிருந்த சுஜி.. ஏதோ தோன்ற அருகே இருந்த டெட்டியை நோக்கியவளுக்கு மாலையில் நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது.. திமிர் பிடித்தவன்! அகங்காரன்! சாப்பாட்டுக்கு பதிலாக தினமும் 500 ரூபாய் நோட்டை விழுங்கிக் கொள்வான் போலும்.. பணத்திமிர்!, பாவம் டெட்டி! அதை மிதித்ததோடு மட்டுமில்லாமல் எவ்வளவு எகத்தாளமாகப் பேசினான்!

DO NOT COPY

மவனே இன்னொரு முறை நீ என்னிடம் மாட்டினால்.. காதைத் திருகி விடுவேன்.. கண்ணை நோண்டி விடுவேன்.. மீசையைப் பிடித்து இழுத்து வலியில் கதற வைத்து விடுவேன்... என்றெல்லாம் கறுவிக் கொண்டு டெட்டியை அணைத்தபடியே உறங்கிப் போனாள்.

மறு நாள் அலுவலகத்தில் வேலை நேரத்தைத் தாண்டியும் கூட வேலை தொடர அன்று சுஜியால் யோகா கிளாஸிற்குச் செல்ல முடியவில்லை. வகுப்பில் சுஜியைக் காணாமல்.. வீட்டிற்கே தேடி வந்தாள் அனு.

ஹாலில் அமர்ந்திருந்த சக்தியைக் கண்டு கொள்ளாமல் "ஆன்ட்டி.."என்றபடி உள்ளே சென்றவள் அங்கே வள்ளியும் இல்லாததைக் கண்டுத் தயங்கியபடியே வெளியே வந்தாள்.

காதில் ஹெட் செட்டை மாட்டிக் கொண்டு பாட்டுக் கேட்டபடி கண் மூடி சாய்ந்திருந்தவனின் அருகே சென்று "ம்க்கும்" என்றாள். அவன் கண் விழிக்காததைக் கண்டு "சக்தி..."என்றழைத்துப் பார்த்தாள். அதற்கும் அவனிடமிருந்து எந்தவித பதிலும் இல்லாமல் போக..

அவன் தோள் பற்றி உலுக்கினாள்.. திடுக்கிட்டு கண் விழித்தவன் அவளைக் கண்டதும் பதறி எழுந்தான்.. தோளில் பதிந்திருந்த அவள் கரத்தைத் தட்டி விட்ட படி "ஏய்.. என்ன செய்கிறாய்....?"என்று கோபமாக வினவ.. முதலில் விழித்த அனு "இ..இல்லை.. ஆ.. ஆன்ட்டி.."என்று தயங்கியவளுக்கு அவனது செய்கையின் அர்த்தம் விளங்க..

முகம் முழுக்க கோபத்துடன் அவனை நோக்கியவள் "நீங்கள் என்னைப் பற்றி என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..?,உங்களை அப்படி என்ன செய்து விடுவேனென்று என் கையைத் தட்டி விட்டீர்கள்..?, என்னை அவமானப் படுத்துவது தான் உங்கள் நோக்கமா..?"என்று பொறியத் துவங்கினாள்.

நெற்றியைத் தடவியபடியே "போச்சுடா.., தொலைந்தேன்.."என்றவன் அவளிடம் "அனுமா.. சாரிடா.. நான் ஏதோ நியாபகத்தில்... சாரி டா.. ப்ளீஸ்.."என்று கெஞ்சத் துவங்க.. கோபம் அடங்காத அனு "இதைக் காதில் மாட்டிக் கொண்டு விஸ்வாமித்திரர் தவத்தில் மூழ்கியது போல்.. ஆழ்ந்து விட்டால்.. நான் காட்டுக் கத்தலாகக் கத்தியது எப்படிக் கேட்கும்?,ம்?,"என்று வினவ..

அவனோ நன்றாகச் சிரித்தபடி "ஓ! அதனால் தான் நீ மேனகையைப் போல் வந்து என் தவத்தைக் களைக்கப் பார்த்தாயா அனுமா..?"என்று அவள் தோளை இடித்தான். அவனது பதிலில் மேலும் அவனை முறைத்தவள் "மேனகையின் நோக்கப் படி அந்த விஸ்வாமித்திரர் அவளிடம் மயங்கி விட்டார்.. ஆனால்

DO NOT COPY

இந்த விஸ்வாமித்திரர் அப்படியில்லையே! கையைத் தட்டி விட்டு பத்தடி தூரம் தள்ளி நிற்பார்"என்று கூற..

"அடிக் கள்ளி!" என்ற படி அவளருகே வந்த சக்தி "அப்படியானால் நான் மயங்காதது தான் உனக்கு கோபமா..?"என்று ஆர்வத்துடன் வினவ "ச்சி... என்ன பேச்சு இது..?"என்று முகம் சுளித்தவள் தொடர்ந்து "இனி உங்கள் வீட்டுப் பக்கம் சத்தியமாக காலடி எடுத்து வைக்க மாட்டேன்.. போதும் சாமி..!,"என்றபடியே வெளியே செல்ல எத்தனிக்க அவள் கையைப் பற்றி "அனு நில்.. நான் தான் சாரி என்கிறேனே.. நான் வேறு ஏதோ யோசனையில் இருந்தேன்.. சாரி டா.." என்று மறுபடியும் கூற..

"என்ன பெரிய யோசனை..?., வத்சலாவுடன் டூயட்டில் இருந்திருப்பீர்கள்!., வேறு என்ன..?, என் வாழ்க்கையில் இது போல் யாரிடமும் அவமானப் பட்டதேயில்லை.. உங்கள் சகவாசமே வேண்டாம்.., நான் செல்கிறேன்.."என்று அடம் பிடித்தவளை..

"வத்சலாவா..?, அய்யோ அனு.. சுஜி சொல்வதையெல்லாம் நம்பாதே! வத்சலா எனக்கு அக்கா மாதிரி.. ப்ளீஸ்.. மன்னித்து விடு.. இனி ஒரு போதும் உன்னை அவமதிப்பது போல் நடந்து கொள்ள மாட்டேன்... இந்த ஒரு முறை மன்னித்து விடு.. ப்ளீஸ்.."என்று கெஞ்ச.. "நீயும்,உன் மன்னிப்பும் போடா.."என்றபடி கோபத்துடன் வெளியேறிச் சென்று தன் வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

"போடாவா..?"என்று திகைத்த சக்தி "யாரைப் போடா என்கிறாய்..?, நீ போடி.."எனக் கோபமாகக் கூற "போடா.. போடா.. விரைவிலேயே பிரியாணியில்லாத காட்டுக்குச் செல்வாய்.."என்று சபித்து விட்டுச் சென்றாள் அனு.

அவள் செல்வதைக் கண்ட படியே வீட்டிற்குள் நுழைந்த சுஜி "சக்தி.. என்னடா.. அனு சென்று விட்டாளா..?, அவள் முகமே சரியில்லையே!, ஒரு 5 நிமிடம் உட்காரச் சொல்லியிருக்க வேண்டியது தானே டா..?"என்று வினவ..

"அவள் என்னிடம் சண்டையிட்டுச் செல்கிறாள்.., இனி நம் வீட்டிற்கு வர மாட்டாளாம்.."என்று முகத்தைச் சுருக்கியபடியே கூறியவனைக் கண்டு சிரித்தவள் "உங்கள் இருவரின் டாம் அண்ட் ஜெர்ரி சண்டை எப்போதடா தீரப் போகிறது..?, அது இருக்கட்டும்.. அனு 2 நாட்களில் சரியாகி விடுவாள்.. சக்தி நீ என் நீண்ட நாள் கேள்விக்கு இப்போது பதில் கூறு.."என்றவள் தொடர்ந்து

"அந்த சப்பை மூக்கு,குள்ளக் கத்திரிக்காய் வத்சலாவை விவாகரத்து செய்து விட்டாயா..?"என்று வினவ.. கோபத்துடன் அவள் மீது பாய்ந்த சக்தி "ஏய்.. சுடிதார் போட்ட சகுனி.. நீ தான் அனுவிடம் தேவையில்லாத விஷயங்களைக்

DO NOT COPY

கூறி எங்களிருவருக்குமிடையில் சண்டையை மூட்டி விடுகிறாயா..?”என்று வினவினான்.

“ச்ச,ச்ச சக்தி.. உனக்குத் தான் தெரியுமே டா.. நான் யாரிடமும் பொய் கூற மாட்டேனென்று.. அதனால் தான் அனு என்னிடம் உன்னைப் பற்றி விசாரித்ததும் வத்சலாவிலிருந்து ஆரம்பித்து பிரியாணி வரை சகலத்தையும் கொட்டி விட்டேன்..”என்று கூற..

“ஏய்.. வத்சலா எனக்கு சகோதரியைப் போல் என்று கூறி விட்டேன்.. தேவையில்லாமல் என்னைப் பற்றி வதந்தியைப் பரப்புவதை நிறுத்தி விடு..”என்று கத்தியவனிடம் “ஆனாலும் சக்தி.. உனக்கு மிகவும் பேராசைடா.. அருக்காணியுடன் டூயட் பாட வேண்டியவனுக்கு ஐடி கேர்ள்ஸ் கேட்கிறதோ!”என்று வினவ..

அதற்கு சக்தி பதில் கூறும் முன்.. அப்போது வீட்டிற்குள் நுழைந்த வள்ளி “ஏய்.. யாரை அருக்காணியுடன் டூயட் பாடச் சொல்கிறாய்..?, என் மகனின் அழகிற்கும், அறிவிற்கும் இவ்வையகத்தில் இருக்கும் பெண்கள் அனைவரும் வரிசையில் நின்று மாப்பிள்ளை கேட்க வேண்டும்..”என்று கூற..

“நிறுத்துங்கள் Mrs.கோமு.. உங்கள் மகனைக் கண்டாலே பெண்கள் அனைவரும் அலறி ஓடுகிறார்கள்.. அவனது லீலைகளை எடுத்து விடுகிறேன்.. கேளுங்கள்..”என்றவள் நிறுத்தி பின் “நம் தெரு முக்கில் இருக்கும் வானதி உன் மகன் வீதியைக் கடக்கையில் விளக்குமாறை கையில் எடுத்துக் கொண்டு அந்தத் தட்டு தட்டுகிறாள்.. இதை ஒரு நாள் நான் கவனித்து விட்டேன்.. என்னடாவென்று இந்தப் பிரகஸ்பதியிடம் விசாரித்த பின்பு தான் விசயம் புரிந்தது..”

“இந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளை.. மார்க்கெட்டில் அவளிடம் ‘வானதி... போன ஜென்மத்தில் நீ கொடும்பாளூர் இளவரசி வானதியாகவும்.. நான் அருள் மொழி வர்மனாகவும் பிறந்ததாக ஜாதகம் கூறுகிறது.. அதனால் வா கண்ணே.. நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டு இந்த நாட்டையே ஒரு குடை நிழலில் ஆளலாமென்று பீலா விட்டிருக்கிறான்.., ஹா ஹா.. அன்று விளக்குமாறைக் கையில் எடுத்தவள்.. இன்னும் விடாமல் தட்டிக் கொண்டிருக்கிறாள்..”என்று கேலியாகக் கூற..

“பேச்சில் உன்னை வெல்ல முடியுமா..?, போடி..”என்று சலித்த அன்னையிடம் “உன் மகனின் புதிய பறவை யாரென்று தெரியுமோ கோமு...?”என்று வினவ.. “யாரடி..”என்று கண்களில் ஆர்வத்துடன் கேட்டவரைக் கண்டு சிரித்தபடியே.. “வேறு யார்.., நம் கூட்டுக்குள் புதிதாகச் சேர்ந்திருக்கும் பச்சைக் கிளி அனு தான்..”என்றாள்.

“அனுவாடா சக்தி..?”என்ற அன்னையின் கேள்விக்கு வெட்கப்பட்ட சக்தி “ஆமாம்மா..”எனக் கூற “என் ராஜா..?”என்று நெட்டி முறித்தவர் “அனு மட்டும் உன்னைக் காதலிக்கச் சம்மதித்து விட்டால்.. நம் குல தெய்வத்திற்கு.. குடும்பத்துடன் சென்று பொங்கல் வைக்க வேண்டுமடா..”என்று துள்ளியபடி கூற “நல்ல குடும்பமடா சாமி!”என்று தலையில் அடித்துக் கொண்டாள் சுஜி.



## அத்தியாயம் – 8



**கண்ணன் மன நிலையைத் தங்கமே தங்கம்**

**கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்-பின்னர்**

**எண்ணம் உரைத்துவிடில் தங்கமே தங்கம்**

**ஏதெனிலும் செய்வமடி தங்கமே தங்கம்!**

**வா**ழ்க்கை அதன் போக்கில் இடைவெளியே இல்லாமல் சுறு சுறுப்பாக இயங்கிய படி இருக்க.. சுஜியும் அதன் போக்கில்.. அதன் வேகத்திற்கு ஈடு கொடுத்த படி துள்ளலுடனே வலம் வந்து கொண்டிருந்தாள். ஆனால் என்னவொரு குறையென்றால்.. இப்போதெல்லாம் அலுவலக வேலைப் பளு காரணமாக அவளுடைய காலை நடனப் பயிற்சியைத் தொடர முடிவதில்லை.

அதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பது வள்ளி தான்! அலுவலகம் சென்று விட்டுத் திரும்பினால் யோகா சென்டருக்குச் சென்று விடுவாள். அதன் பின் அனுவுடன் அரட்டை அடிக்கத் தான் நேரம் சரியாக இருக்கும். சக்தியுடன் சண்டை போட்ட பின்பு அனுவும், சுஜியின் வீட்டு வாசற்படியைக் கூட மிதிப்பதில்லை. சுஜியும்,வள்ளியும் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் கூட வர மறுத்து விட்டாள்.

“எல்லாம் உன்னால் தான் டா தம்பிப் பையா..”என்று சக்தியின் தலையில் அடித்தால்.. அவன் என்னவோ 4 நாள் தாடியுடன் நந்தா சூர்யாவைப் போல் டெர்ரராகத் தலையசைத்து மிரட்டுகிறான். “என்னடா இது கோலம்..” என்றதற்கு.. “அனுவைப் பார்க்காத ஏக்கத்தில் தாடி வளர்க்கிறேன்” என்கிறான்.. “வத்சலா,வானதிக்காகவெல்லாம் நீ இதைப் போல் வளர்க்கவில்லையே” என்று கேட்டதற்கு.. “அதெல்லாம் விளையாட்டுக்குச் செய்தது.. ஆனால் அனு அப்படியல்ல.. அவள் என் வாழ்க்கை” என்கிறான்..

DO NOT COPY

“நாளைக்கே எவளேனும் ருசியாக பிரியாணி செய்து கொடுத்தால் பின்னாலேயே சென்று விடுவான்.. இவனாவது.. ஒரு பெண்ணை காதலிப்பதாவது.. என்று தோன்றினாலும் இன்னொரு புறம் அவனைப் பார்க்க பாவமாகத் தான் இருக்கிறது...

தன் அறைக்குள் நுழைகையில் அந்த 2 டெட்டி பொம்மைகளைக் காணும் போதெல்லாம் அன்று நடந்த சம்பவமும் அதைத் தொடர்ந்து ஷ்யாமின் நினைவும் தன்னாலே ஆட்கொள்ளத் தொடங்கியது சுஜிப்ரியாவிற்கு. ஆனால் அன்று ஏன் அவன் சுஜூ என்று அழைத்தான்..?, இது வரை யாரும் தன்னை இப்படி அழைத்ததே இல்லையே..! சட்டையைப் பிடித்து சண்டையிட்டும் செல்லப் பெயர் சொல்லி அழைக்கிறான்..!, சரியில்லையே! சமயம் கிடைக்கும் போது இவனுக்கு சீக்கிரமே பேயோட்டி விட வேண்டியது தான் என்று முடிவு செய்து கொண்டாள். அவள் எண்ணி வைத்திருந்த அந்தச் சமயம் அவளுக்கு விரைவிலேயே கிட்டியது...

**அ**னு அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்து முழுதாக ஒரு வாரமாகி விட்டது. இந்தப் பெண்ணிற்கு அப்படியென்ன பிடிவாதம்..?, ஏதேனும் தாஜா செய்து அழைத்து வா.. என்று இந்த லொட லொட தகர டப்பா சுஜியிடம் கூறினால் ரொம்பத் தான் பண்ணிக் கொள்கிறாள்.. பேசாமல் நானே நேரில் சென்று அவளைச் சந்தித்தாலென்ன..?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது நம் பிரியாணிப் பிரியன் சக்தி தான்! நினைத்ததோடு மட்டுமில்லாமல் செயல் படுத்தவும் தொடங்கினான். முதல் வேலையாக அன்னையின் செல் ஃபோனில் இருந்து அனுவின் மொபைல் எண்ணை திருடிக் கொண்டு விரைவிலேயே அலுவலகம் புறப்பட்டான்.

மாலையில் அவளது கல்லூரி முடியும் நேரத்தைக் கணக்கிட்டு அலுவலகத்திலிருந்து கிளம்பியவன்.. கல்லூரி வாசலிலேயே அவள் வருகைக்காகத் தவமிருந்தான்.. கல்லூரி முடிந்து 30 நிமிடத்திற்கும் மேலாக அவள் வெளியே வராததைக் கண்டு யோசித்தான்.

என்ன இவள்..?,இன்னும் வரவில்லையே! ஒரு வேளை.. கேன்டீனில் விற்கும் சொஜ்ஜி,பஜ்ஜிகளையெல்லாம் காலி செய்து விட்டுத் தான் வருவாளோ..! அடிப் பாவி! இவளுக்காக அன்னை செய்யும் முந்திரி பக்கோராவைத் தியாகம் செய்து விட்டு வந்து பசியோடு காத்திருந்தால்.. இவள் கேன்டீனை காலி செய்து விட்டு வருவாளா..? என்றபடி தனது செல்லில் அவளை அழைத்தான்.

புதிய எண்ணாக இருக்கிறதே என்றபடி “ஹலோ..”என்றவள் எதிர் முனையில் பேசுவது சக்தி என்றறிந்து “ஓ!, விஸ்வாமித்திரர் சார்.. நீங்களா..?”என்று

DO NOT COPY

வினவ.. “யெஸ் மேனகை நானே தான்.. உன் கல்லூரி வாசலில் அரை மணி நேரத்திற்கும் மேலாகக் காத்திருக்கிறேன்.. தயவு செய்து வெளியே வந்து காட்சி தருவாயா தாயே..”என்று கெஞ்ச.. “அதெல்லாம் முடியாது..”என்று முதலில் மறுத்தவள் பின்பு “சரி” என்று ஒப்புக் கொண்டு அடுத்த 5 நிமிடத்தில் அவன் முன்பு நின்றாள்.

புருவத்தைத் தூக்கி அவளை மேலிருந்து கீழ் வரை ஆராய்ந்தவன் பின் “என்னைப் பார்க்காத சோகத்தில் ஒரு சுற்று இளைத்து விட்டாற்போல் தெரிகிறாயே மேனகை..!, கன்னம் கூட வற்றி விட்டதைப் போல் தெரிகிறதே..”என்றபடி அவள் கன்னத்தைத் தொட முயற்சிக்க.. கையில் இருந்த நோட்டினால் அவன் கையைத் தட்டி விட்டவள் “எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்..?, எங்கள் கல்லூரிப் பெண் எவளையேனும் புதிதாகப் பிடித்திருக்கிறீர்களா..?”என்று வினவ..

“அய்யோ!, அய்யோ!”என்று நெஞ்சில் அடித்துக் கொண்ட சக்தி “அந்த சூர்ப்பனகை சுஜிப்ரியாவின் பேச்சை நம்பி என்னையே சந்தேகிக்கிறாயே கண்ணே.., உனக்கு அத்தானைப் பற்றி தெரியாதா..?”என்றான்.

“ஓ! நன்றாகத் தெரியுமே!, வீட்டிற்கு வந்தால் வானதி.. அலுவலகத்திற்குச் சென்றால் வத்சலா.. இது தானே..?, எனக்கு நன்றாகத் தெரியும்..”எனக் கூற “அனுமா.. அவர்கள் இருவரும் என் உடன் பிறவா சகோதரிகள்.., நான் ஏக பத்தினி விரதன்.. அனுவின் ராமன்!”எனக் கூற..

கோபம் மறந்து கலகலவென்று சிரித்தாள் அனு. அவள் சிரிப்பதைக் கண்ட படியே நின்றிருந்தவனின் முன்பு சொடுக்கிட்டு “என்ன கனவிற்குச் சென்று விட்டீர்கள்..”என்றவளிடம்..

“கனவாவது.. மண்ணாங்கட்டியாவது... உன்னைக் காண வேண்டுமென்கிற ஆர்வத்தில் ஈவ்னிங் டிஃபன் கூட சாப்பிடவில்லை.. பக்கத்தில் ஏதேனும் ஹோட்டல் இருந்தால் அழைத்துச் செல்.. பசி வயிற்றைக் கிள்ளுகிறது”என்றவனை முறைத்த அனு..

“அனுவின் ராமன் என்று தவறாகக் கூறி விட்டீர்கள்.. நீங்கள் ஒரு சாப்பாட்டு ராமன்.. வாருங்கள்..”என்று அருகே இருந்த உணவகத்திற்கு அழைத்துச் சென்றாள். அடுத்த 1 மணி நேரம் இருவரும் அரட்டை அடித்த படியே உண்டு முடித்து ஹோட்டலை விட்டு வெளியே வந்தனர்.

“அனு டார்லிங்.. இனியேனும் தினமும் வீட்டிற்கு வருவாய் தானே..?, உன்னைப் பார்க்கா விட்டால்.. நாள் முழுமையடையாததைப் போல்

DO NOT COPY

தோன்றுகிறதடா..”என்று அவன் கூற.. “ஏன்..?, வத்சலா,வானதியைத் தான் தினமும் பார்க்கிறீர்களே..?”என்று அனு நொடித்துக் கொள்ள..

“அவர்களும் நீயும் ஒன்றா டா அனு..?”என்றவனிடம் “ஏன்..?, நான் மட்டும் என்ன ஸ்பெஷல்..?”என்று வினவியவளிடம்... “நீ என் பச்சைக் கிளி.. பவளக் கொடி.. என் அழகு சுந்தரி.. என் ஆசை மைதிலி..”என்று அவள் கன்னத்தைக் கிள்ளிய படியே கூறிக் கொண்டிருந்தவனின் கடைசி வார்த்தையில் விழித்துக் கொண்ட அனு..

“ஏய்... யாரடா மைதிலி.. யூ சீட்... ஃப்ராட்... “என்று அவன் காலரைப் பற்ற.. “அனு.. அனு.. எனக்கு மைதிலி என்று யாரையும் தெரியாது.. தொடர்ச்சியாக வாயில் வந்து விட்டது.. இதற்கும் சேர்த்து பழி வாங்கி விடாதே கண்மணி..”என்று கெஞ்ச... அதற்கு அனுவோ.. “யாரந்த மைதிலி என்பதை சுஜியிடமே கேட்டுக் கொள்கிறேன்..” என்று கூறினாள்.

அவளது பதிலில் மேலும் அலறிய சக்தி “அனுமா.. என் எதிரியிடம் கூட என்னைப் பற்றிக் கேள்.. ஆனால் சுஜியிடம் மட்டும் கேட்காதே.. அவள் இல்லாததையும்,பொல்லாததையும் சொல்லி நம் இருவரையும் பிரித்து விடுவாள்..”என்று கூற..

“ப்ரியா உன்னைப் போல்.. பொய் கூற மாட்டார்கள்.. எப்போதும் உண்மையை மட்டும் தான் பேசுவார்கள்.. நான் அவளிடமே கேட்டுக் கொள்கிறேன்..”எனக் கூற.. ப்ரியா உண்மையை மட்டும் தான் பேசுவாளா..? என்று அதிர்ச்சியடைந்த சக்தி அவளை மட்டும் எப்படி இந்த உலகம் நம்புகிறது.. என்று யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

இரண்டு முறை அழைத்துப் பார்த்தும் அவனிடமிருந்து எந்த பதிலும் இல்லாமல் போக.. “நீ எப்படியோ போடா..”என்றபடி அனுவும் கிளம்பி விட்டாள்.

சக்தியிடமிருந்து விடை பெற்று நேராக யோகா சென்டருக்குச் சென்றவள்.. அங்கே சுஜி.. வகுப்பை ஆரம்பித்து விட்டதைக் கண்டு அவசர அவசரமாக உள்ளே நுழைந்தாள். நேர்த்தியாக வளைந்து நெளிந்து.. நளினத்துடன் பயிற்றுவிப்பவளை.. எப்போதும் போல்.. ஆச்சரியத்துடனே நோக்கியவள்.. இவளிடம் எப்படி விஷயத்தைக் கறப்பது என்று யோசனையில் ஆழ்ந்தாள்.

வகுப்பு முடிந்த பின்பும் கூட யோசித்த படியே.. ப்ரியாவுடன் இணைந்து நடந்து கொண்டிருந்தவள்.. இவளிடம் நேரடியாக.. நீ பிரபுவைக் காதலிக்கிறாயா.. என்று கேட்டு விட முடியாது.. மெது மெதுவாகத் தான் கறந்தாக வேண்டும்..

DO NOT COPY

என்று முடிவு செய்தவள்.. துணிவைத் திரட்டி அவளை நோக்கி நிமிர்ந்து "சுஜி.. உங்களிடம் ஒன்று கேட்கலாமா..?"என்று வினவினாள்.

"ஒன்றென்ன.. இரண்டு கூட கேட்கலாம்.."என்று தனக்கே உரிய பாணியில் கூறி நகைத்துவிட்டு "கேள்.."என்றாள் சுஜி. "ம்..."என்று இழுத்த அனு "கா.. காதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்..?, நீ.. நீங்கள் யாரையேனும் காதலிக்கிறீர்களா..?"என்று ஒருவாறு தயங்கி தயங்கி அவள் கூறி முடித்த வினாடி விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள் சுஜிப்ரியா.

எதுவும் புரியாதவளாக "ஏ..ஏன் இப்படி சிரிக்கிறீர்கள்..?"என்றாள் அனு. "பின்னே உன் கேள்வி அப்படி அனு!"என்றவள் தொடர்ந்து "காதல்.. ஒரு அழகான விஷயம்.. காதலிக்காத வரை..! அதனால் காதலை நான் அழகான விஷயமாகவே பார்க்க விரும்புகிறேன் எனக்கு கல்யாணமாகும் வரை..! எப்படி என் வசனம்..?"என்று கண்ணடித்தவளை.. முறைத்த அனு "ப்ளீஸ் பீ சீரியஸ் சுஜி.."எனக் கூற..

"ஓகே,ஓகே..."என்றவள் சிறிது இடைவெளி விட்டு யோசித்து "ம்.. காதலைப் போல்.. உலகில் ஒப்பற்ற மகிழ்ச்சியைத் தரும் விஷயம் உலகத்தில் வேறு எதுவுமில்லையென்று தான் நினைக்கிறேன்.."என்றவள் தொடர்ந்து "இது வரை யாரையும் காதலிக்க வேண்டுமென்று தோன்றவில்லை அனு.. இந்த ஆயிரம் தலை வாங்கும் அபூர்வ சிந்தாமணிக்கு ஏற்ற ஒருவன் இன்னும் வரவில்லையென்று தான் நினைக்கிறேன்.."எனக் கூறி முறுவலித்தாள்.

அடிப் பாவி அண்ணி! எவ்வளவு சாதரணமாகப் பொய் கூறுகிறாய்! இன்னும் எவனும் வரவில்லையா..? என் அண்ணன் வஞ்சிக் கோட்டை வாலிபன் ஒருவன் இருக்கிறானே! அவனை மறைத்துப் பொய்யா சொல்கிறாய்..?, ஆனால் ஏன் மறைக்க வேண்டும்..,?, கூடிய சீக்கிரத்தில் உன் குட்டை உடைக்கிறேன் அண்ணி! என்று அவள் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் இருவரையும் உரசியபடி அருகே வந்து தன் வண்டியை நிறுத்தினான் சக்தி.

தம்பியைக் கண்டதும் முகம் மலர்ந்த சுஜி "என்னடா தம்பிப் பையா..?, அனுவைத் தேடி இங்கேயே வந்துவிட்டாயா..?"என்று வினவினாள். "ச்சி,ச்சி, இந்த இஸ்திரிப் பெட்டியைத் தேடி ஒன்றும் நான் வரவில்லை.. உன்னை அழைத்துவரச் சொல்லி அம்மா என்னை அனுப்பினார்கள்.., நீ உன் வண்டியில் வரவில்லையாமே.. அதனால் தான்.."என்று கூற..

அடப்பாவி! என்று வாயைப் பிளந்த அனு 2 மணி நேரத்திற்கு முன்னால் வெள்ளம் ஓடும் அளவிற்கு வழிந்தவன் இப்போது... என்னைக் காண வரவில்லையென்கிறான்.. என்றெண்ணியபடியே அவனை முறைக்க.. அவள் முகத்தைக் கண்ட சுஜி, "அப்படிப் பார்க்காதே அனு.. என் தம்பி உனக்காக

தாடியெல்லாம் வளர்த்து வைத்திருக்கிறான்..”என்று அவன் தாடியைத் தடவியபடியே கூறியவளிடம்..

“ஏன்..?,சவரம் செய்யக் காசு இல்லையா..?, நான் வேண்டுமானால் கொடுக்கட்டுமா..?”எனக் கேட்க.. “ஏய்.. என்ன நக்கல் செய்கிறாயா..?”என்று பாயத் தயாரான சக்தியிடம் “தம்பிப் பையா.. நீ உன் சண்டையைத் தொடரு.. நான் 5 நிமிடத்தில் வருகிறேன்..”எனக் கூறி விட்டு சென்டருக்குள் நுழைந்தாள் சுஜி.

அவள் நகர்ந்ததும் முகத்தை மாற்றி வாயெல்லாம் பல்லாக அனுவின் புறம் திரும்பியவன் “என்னடா பச்சைக் கிளி.. அத்தானை நடு ரோட்டில் விட்டு விட்டு வந்து விட்டாயே..”என்று வினவ..

“அடப் பாவி.. உன் அக்காவின் முன்னிலையில் இஸ்திரிப் பெட்டி, இப்போது பச்சைக் கிளியா..?, உன்னை நம்பவே கூடாது.. ஏமாற்றுக் காரன்..”என்று திட்ட.. “நான் தான் கூறினேனே அனுமா.. என் அக்கா ஒரு சகுனி.. நம் இருவரையும் பிரித்து வைத்து விடுவாள்.. அதனால் தான் அப்படி நடந்து கொண்டேன்..” என்று வழிந்தான்..

“போதும்.. துடைத்துக் கொள்ளுங்கள்.. உங்கள் அக்கா வந்து விட்டார்கள்..”என்று அனு கூற உடனே முகத்தை மாற்றிக் கொண்டவன் “வா.. வா.. சீக்கிரம்.. இந்த பெண் ரௌடியிடம் எவ்வளவு நேரம் என்னால் பேச முடியும்..?”என்று அவன் சலித்துக் கொள்ள..

அவனைக் கிண்டலுடன் நோக்கிய சுஜி “தம்பிப் பையா.. நடித்தது போதும்.. நீ வழிந்ததில் பெய்த மழையில் 4 பேர் நனைந்து விட்டார்கள்.. இப்போதேனும் வீட்டிற்குச் செல்வோமா,..?”எனக் கேட்க.. அசடு வழிந்த படியே அனுவிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான் சக்தி.

**ம**றுநாள் அலுவலகத்தில் காலை நேர இடைவெளியின் போது.. தோழிகளுடன் வெளியே வந்த சுஜி.. கையில் ஏந்திய ஜூஸ் கப்புடன் அந்த மரத்தடி பெஞ்சில் அமர்ந்திருந்தாள்.

தோழிகளுடன் சலசலத்த படியே அமர்ந்திருந்தவள்.. பின்னால் கார் நிற்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அந்த வெள்ளை நிறக் காரிலிருந்து ப்ளூ ஜீன்ஸ்,கருப்பு டீ-சர்ட் சகிதம்.. கண்களில் அணிந்திருந்த கண்ணாடியைக் கழட்டிய படியே இறங்கிக் கொண்டிருந்தான் ஷ்யாம்.

அதற்குள் சுஜியின் தோழிகளனைவரும் அவனைப் பார்த்து விட.. “வாவ்..!, சுஜி.. சூப்பர்டி.. ஆள்! நல்ல ஹேண்ட்சம்மாக இருக்கிறான்..”எனக் கூறினர்.

DO NOT COPY

“ஹேண்ட்சம்மாக இருந்து என்ன பிரயோஜனம்..?, சரியானத் திமிர் பிடித்தவன்!” என்று பல்லைக் கடித்தாள்..

கிடைத்திருக்கும் வாய்ப்பை விட்டு விடக் கூடாதே..! என்ன செய்யலாம்! என்று யோசித்தவள்.. கையில் இருந்த ஜூஸ் கப்பைப் பார்த்தாள்.. தோழியின் கையிலிருந்த சாஸ் பாக்கெட்டும் கண்ணில் பட.. விலை உயர்ந்த காரில் கதா நாயகனைப் போல் வலம் வருகிறாயா..?, அந்தக் காரை என்ன செய்கிறேன் பார்... என்று கறுவியவள்.. எழுந்து நடந்தாள்.

ஜூஸையும்,சாஸையும் எடுத்துக் கொண்டு காரின் அருகே செல்பளைக் கண்டு தோழிகள் அனைவரும் பதறித் தடுக்க “ஏய்.. எனக்கும் அவனுக்கும் இருக்கும் நீண்ட நாள் பகையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.. நீங்கள் செல்லுங்கள்.. நான் அவனைப் பழி வாங்கி விட்டுத் தான் வருவேன்..”எனக் கூற..

“நீ எப்படியோ போ.. நாங்கள் செல்கிறோம்..”என்று அனைவரும் சென்று விட.. தனி ஆளாக இறங்கி விட்டாள் சுஜி. சுற்றும்,முற்றும் யாருமில்லாததை உறுதி செய்து கொண்டு கப்பில் இருந்த ஜூஸ் அனைத்தையும் கார் கண்ணாடியில் ஊற்றினாள். சாஸால் பானெட்டின் மீது கோலமிட்டவள் ஓடிச் சென்று அந்த மரத்தின் பின்னே மறைந்து கொண்டாள்.

வந்த வேலையை முடித்துக் கொண்டு காரின் அருகே வந்த ஷ்யாம்.. கார் இருக்கும் கோலத்தைக் கண்டு திகைத்தான். எந்த முட்டாள்.. காரின் மீது உட்கார்ந்து சாப்பிட்டு இப்படி அலங்கோலம் செய்து வைத்திருப்பது.. அவசரமாகச் செல்ல வேண்டுமே.. என்றபடி.. யாரேனும் இருக்கிறார்களா.. சுத்தம் செய்வதற்கு உதவி செய்ய என்று சுற்றும், முற்றும் பார்வையை செலுத்தியவனின் கண்களுக்கு..

மரத்தின் பின்னே மறைந்திருந்த சுஜிப்ரியாவின் காற்றில் ஆடிக் கொண்டிருந்த நீளப் பாவாடையும்,அவள் அணிந்திருந்த துப்பட்டாவும் பட்டு விட.. “அடி அல்லி ராணி..! நீ தானா இந்தக் காரியத்தை செய்தது..?”என்று கோபத்துடன் முணுமுணுத்தான்..

அதுவரை யாரோ.. காரின் மீது வைத்து சாப்பிட முயற்சித்து.. அது அவர்கள் அறியாமல் கொட்டி விட்டது போலும் என்றெண்ணியிருந்த ஷ்யாமிற்கு.. சுஜிப்ரியாவைக் கண்டதும் இது நிச்சயம் அவள் கைங்கரியம் தான் என்பது புரிந்து விட்டது.

தெரியாமல்.. அந்த 500 ரூபாய் பொம்மையை மிதித்ததற்கு அந்தக் குதி குதித்தாளே.. இப்போது,. 50 லட்ச ரூபாய் காரை இந்த கதிக்கு ஆளாக்கி வைத்திருக்கிறாள்.. இவளை எந்தப் புண்ணியவான் கட்டிக் கொண்டு அவதிப்



DO NOT COPY

படப் போகிறானோ! பெண்ணா இவள்! ராட்சசி! 2 முறை சந்தித்தத்ற்கே.. இப்படிப் படுத்தி வைக்கிறாள்... சரியான இம்சை..! என்றபடி யோசித்தவன்..

அவள் பார்க்காத வேளையில் அந்த இடத்தை விட்டு மறைந்தான். மரத்தின் பின்னே இருந்து எட்டிப் பார்த்த சுஜி அவனைக் காணாததைக் கண்டு.. எங்கே தொலைந்து விட்டான் என்று தலையைத் தூக்கித் தேட.. பின்னால் யாரோ.. தன் தோளைத் தட்டுவதை உணர்ந்து "ஏய் ரேகா.. வந்து விட்டாயா,..?, இருடி.. அந்தக் காட்டுப்பூனை என்ன ஆனானென்று பார்த்து விட்டு வருகிறேன்.."என்று திரும்பிப் பார்க்காமல் பதில் கூறியவள்.. மீண்டும் யாரோ.. இந்த முறை சற்று பலமாகத் தட்டுவதை உணர்ந்து "ஆ!"என்று வலியில் முகத்தைச் சுருக்கியபடியே திரும்பியவளுக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று...

அவன் தட்டியதில் வலித்த தோளைத் தடவியபடியே பேந்த பேந்த விழித்துக் கொண்டிருந்தவளை.. உறுத்து நோக்கிய ஷ்யாம்.. "காரை அசிங்கப் படுத்தியது நீ தானா..?"என்று அமைதியுடன் வினவினான்.

பதில் கூறாமல் நின்றிருந்தவளிடம் "கேட்கிறேனல்லவா..?"என்று அவன் குரலை உயர்த்த அரண்டு போன சுஜி வேகமாக ஆமாம் என்று தலையசைத்தாள். "வா.. "என்றழைத்தவனிடம் "எங்கே..?"என்று அவள் வினவ..

அவளது முழங்கையைப் பற்றித் தர தரவென இழுத்துச் சென்று காரின் அருகே நிறுத்தியவன் "சுத்தம் செய்து கொடு.."என்று கூறி விட்டு கையைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டான்.

"சு..சுத்தமா..?,எப்படி..?,"என்று உள்ளே சென்று விட்ட குரலில் அவள் வினவ.. "ஏன்..?, ஜூஸை ஊற்றி அசிங்கப் படுத்தத் தெரிகிறது..!, சுத்தம் செய்யத் தெரியாதா..?"என்றவன் அவள் எதிர் பாராத வேளையில் அவளது துப்பட்டாவை உறுவி அவள் கையிலேயே கொடுத்து "இதை வைத்துத் துடை.."என்றான்.

அவன் உறுவியதும்.. "அய்யோ.."என்று பதறித் தடுத்தவள் மேலும் அவன் கூறியதைக் கேட்டு.. 2000 ரூபாய் உடை.. உனக்குக் கார் துடைக்கும் அழுக்குத் துணியா.. என்று பொறுமியவளைக் கண்டு "இப்போது.. துடைக்கப் போகிறாயா..?, இல்லையா..?"என்று அவன் அதட்ட..

வேறு வழி இல்லாமல் தன் துப்பட்டாவினாலேயே காரைத் துடைக்கத் தொடங்கினாள். உம்மென்று தூக்கி வைத்த முகத்துடன் துடைப்பவளைக் கண்டு பரிதாபமாக இருந்தாலும்.. இவளை இப்படியே விட்டு விட்டால்.. மேலும்.. மேலும் வம்பு செய்வாள்.. ஒரேடியாக வாலைக் கத்தரித்து விட வேண்டும்.. என்றபடி அமைதியாக நின்றிருந்தவன்..

DO NOT COPY

துடைத்துக் கொண்டிருந்தவளைத் தடுத்து “வெறும் துணியால் துடைத்தால்.. அந்தப் பிசு பிசுப்பு போகாது.. உள்ளே.. தண்ணீர் பாட்டில் இருக்கிறது பார்.. அதை ஊற்றித் துடை..”எனக் கூற.. இவன் என்ன என்னை இவன் வீட்டு வேலைக்காரி என்றெண்ணிக் கொண்டானா..?”என்று இடுப்பில் கை வைத்த படி அவள் அவனை முறைக்க.. “என்ன பார்வை..?,ம்?, தண்ணீரை ஊற்றித் துடை போ..”என்றான் அவன்..

எதுவும் பேசாமல் உள்ளே இருந்த பாட்டிலில் இருந்த தண்ணீரை ஊற்றி காரைத் துடைத்து முடித்தாள். சுத்தம் செய்த பின் நிமிர்ந்து அவனை நோக்க.. அதுவரை கையைக் கட்டிக்கொண்டு அவள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அவளருகே வந்து “பரவாயில்லையே.. சுத்தமாகத் துடைத்து விட்டாய்.. வெரி குட்..”என்றவன் “ஐடி தொழில் கை விட்டாலும்.. கை வசம் இந்தத் தொழிலை வைத்திருக்கிறாய்.. பிழைத்துக் கொள்வாய்..”எனக் கூறினான்.

“டேய்....”என்றபடி அவன் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டுமென்கிற ஆசை எழுந்தாலும் அடக்கிக் கொண்டு அமைதியாக இருந்தாள். அவளது அமைதியான கோலம் அவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.. மேலும் அவளிடம் வம்பு செய்ய எண்ணி அவளருகே வந்து.. “தேங்க் யூ சோ மச் சுஜூ.. யூ ஆர் சோ ஸ்வீட்..”என்று கூறி விட்டு காரில் ஏறி “பாய்..”என்று சென்று விட்டான்.

அவன் சென்ற பின் ஆத்திரத்துடன் கையிலிருந்த துணியை வீசி எறிந்தவள் கோபத்துடன் அலுவலகத்திற்குள் நுழைந்தாள். “ஏய்.. சுஜி.. இதென்னடி கோலம்.. காய்ந்து கருவாடாய் வந்திருக்கிறாய்.. துப்பட்டா எங்கேடி..?”என்று வினவிய தோழிகளிடம் “ம்,காற்றில் பறந்து போய் விட்டது..”என்று சிடுசிடுத்தவள் பின் நடந்தவை அனைத்தையும் எரிச்சலுடனே கூறினாள்.

சுஜியின் முகத்திற்காக சிரிப்பை அடக்கிப் பார்த்தவர்கள் முடியாமல் போகவே வாய் விட்டு சிரித்தனர். “உனக்கு இதெல்லாம் தேவையா..?, நாங்கள் அழைத்த போதே.. வந்திருக்க வேண்டியது தானே..?, சரி, திட்டம் போட்ட படி.. ஜூஸை அவன் காரில் ஊற்றியதுடன்... வேலை முடிந்ததென்று வந்திருக்க வேண்டியது தானே..?, உன்னை யார் அங்கேயே நின்று உளவு பார்க்கச் சொன்னது..?, சுஜி.. எங்களுக்கு சிரித்து சிரித்து.. வயிற்று வலியே வந்து விடும் போலிருக்கிறதடி..” என்று அடக்க மாட்டாமல் நகைக்கத் தொடங்கினர்.

“சிரிக்கிறீர்களா..?, சிரியுங்கள்.. என்றேனும் ஒரு நாள்.. அந்த ஷ்யாம் பிரபு.. என் கையில் மாட்டத் தான் போகிறான்.. அப்போது பார்த்துக் கொள்கிறேன்..”என்று கறுவிக்கொண்டாள்.

DO NOT COPY

**அ**ன்று இரவு அன்னையுடன் உரையாடிக் கொண்டிருந்த அனு.. "அம்மா.. அண்ணன் விசயத்தில் என்னுடைய.. அடுத்த ஸ்டெப் என்ன தெரியுமா..?, அண்ணனிடமும், அண்ணியிடமும் கொஞ்சம்,கொஞ்சமாக போட்டு வாங்குவது தான்..!"என்றாள்.

"எதைப் போட்டு எதை வாங்கப் போகிறாய்..?, முதலில் உன் வயிற்றுக்கு எதையேனும் போட்டுக் கொள்.. சாப்பிட வாடி.."என்றழைத்துச் சென்றார் சீதா. ஷ்யாம் தந்தையுடன் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருப்பதைக் கண்ட அனு.. தன் விளையாட்டை இப்போழுதே துவங்கி விட வேண்டியது தான் என்று குதூகலத்துடன் சென்றமர்ந்தாள்.

அனைவரும் அமைதியாக உணவில் ஈடுபட்டிருந்த போது.. தொண்டையைச் செறுமிய அனு.. "அப்பா.. நான் சென்று கொண்டிருக்கும் யோகா சென்டரில் புதிதாக எனக்கொரு தோழி அறிமுகமாகியிருக்கிறாள்.. மிகவும் நல்ல பெண்.. புத்திசாலி,திறமை மிக்கவள்,வாயாடி.."என்று கூறிக் கொண்டே சென்றவள் நிறுத்தி "அவள் பெயர் சுஜிப்ரியா.."எனக் கூறி விட்டு சட்டென பிரபுவின் முகத்தை நோக்கினாள்.

அண்ணனின் முக மாற்றங்கள் எப்படியிருக்கும் தன் காதலியின் பெயர் கூறும் போது.. என்றெண்ணித் தான் அவன் முகத்தை நோக்கினாள். ஆனால் அவனோ சலனமே இல்லாமல் சப்பாத்தியை வாயில் திணித்துக் கொண்டிருந்தான். ஏமாந்தவளாக சலிப்புடன் அன்னையை நோக்க... அவரும் அந்த நேரத்தில் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ம்.. புதிதாகக் கிடைத்த சினேகிதி என்று அரட்டை அடித்துக் கொண்டு ஊர் சுற்றித் திரியாமல்.. விரைவாகக் கோர்ஸை முடிக்கின்ற வழியைப் பார்..."என்றதோடு ராஜாராமன் எழுந்து சென்று விட.. கை கழுவி விட்டு எழுந்த பிரபுவிடம் "ஏன் அண்ணா..?, என் புது சினேகிதியைப் பற்றி நீ எதுவுமே கூறவில்லையே..?"என்று ஏமாற்றத்துடன் வினவினாள்.

புன்னகைத்தபடியே தங்கையின் அருகே வந்தவன் யோசிப்பது போல் பாவனை செய்து விட்டு "சமீபகாலமாக எனக்கும் அந்தப் பெயருக்கும் ஏழாம் பொருத்தம் தான் அனுமா.. அதனால் அந்தப் பெயர் கொண்ட உன் சினேகிதியைப் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.. அப்பா கூறியது போல் கோர்ஸை நல்ல படியாக முடி.."என்று அவள் தலையை ஆட்டி விட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் "அம்மா..."என்று கூவியவள் "நான் கூறினேனல்லவா அண்ணனுக்கும்,அண்ணிக்கும் சண்டைம்மா.. எப்படி கூறுகிறான் பார்!, ஏழாம் பொருத்தமா..?, இரு இரு.. 10 பொருத்தத்தையும் நான் பொருந்தி வரச் செய்து


DO NOT COPY

இருவரையும் சேர்த்து வைக்கிறேன்..”என்று கூறி விட்டு மகிழ்ச்சியுடன் உறங்கச் சென்றாள்.

மறு நாள் யோகா சென்டரில் பயிற்சி முடிந்ததும் வெளியே வந்த சுஜியிடம் இவளிடம் எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்தபடியே ஓரக் கண்ணால் சுஜியை நோக்கிய அனு.. பின் சிரித்தபடி “சுஜி.. நம் சென்டரில் புதிதாக ஒரு சிறுவன் சேர்ந்திருக்கிறான்.. ரொம்பவும் க்யூட்டாக இருக்கிறான்!,அவன் பெயர் என்ன தெரியுமா..?”என்று கேட்டாள் அனு,

“ம்,ம், அப்படியா..?, என்ன பெயர்..?”என்று வினவிய சுஜியை அழுத்தமாகப் பார்த்தபடி “ஷ்யாம் பிரபு..”என்று கூறினாள். “ஓ!, பையன் க்யூட் தான்.. ஆனால் பெயர் தான் சரியில்லை..”என்று முகம் சுளித்தவளிடம் ஏனென்று அனு வினவ.. “சமீபகாலமாக எனக்கும் இந்தப் பெயருக்கும் ஏழாம் பொருத்தம் அதனால் தான்..”என்று கூறு விட்டு அவள் முன்னே நடந்து விட..

அவளது பதிலைக் கேட்டு நின்று விட்ட அனு “அட,அட,அட.. வார்த்தைகள் உபயோகிப்பதில் கூட என்ன ஒற்றுமை இருவருக்கும்! அண்ணன் கூறிய அதே வார்த்தைகளை இவளும் கூறுகிறாள்..!, என்ன பொருத்தம்! என்றெண்ணிக் கொண்டு சிரித்தபடியே நின்றிருந்தாள்.




DO NOT COPY

## அத்தியாயம் – 9



**நீ எனது இன்னுயிர் கண்ணம்மா – எந்த**

**நேரமும் நின்றனைப் போற்றுவேன் – துயர்**

**போயின போயின துன்பங்கள் நினைப்**

**பொன் எனக் கொண்ட பொழுதிலே-என்றன்**

**வாயினிலே அம்து ஊறுதே- கண்ணம்மா**

**என்ற பேர் சொல்லும் போழ்திலே!**

**அ**ன்று மாலை கல்லூரி முடிந்ததும் வெளியே வந்த அனு.. கல்லூரி வாசலில் சக்தி காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு சிரித்தபடியே அவனருகே சென்றாள். "என்ன விஸ்வாமித்திரர் சார்..., காலேஜ் பக்கமெல்லாம் வருகை தந்திருக்கிறீர்கள்..?, என்ன விஷயம்..?"என்று வினவ..

"அது வந்து டா வெல்லக் கட்டி.... அன்று நாம் இருவரும் சென்ற ஹோட்டலில் வெஜ் மஞ்சூரியன் நன்றாக இருந்ததா..?, எனக்கு இன்றும் அதைச் சாப்பிட்டே ஆக வேண்டுமென்று ஆவல் பிறந்து விட்டது.. அதனால் தான் வந்தேன்.. சரி,வந்ததும் வந்தாயிற்று.. அனுவையும் பார்த்து விட்டுச் செல்லலாமே என்று தான் இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன் எனக் கூற..

அவனது பதிலைக் கேட்டு எரிச்சலடைந்த அனு அவனை முறைத்தபடி "அது தானே?, சோழியன் குடுமி சும்மா ஆடுமா..?, சாப்பாடு,சாப்பாடு, எப்போது பார்த்தாலும் அதே பேச்சு தானா..?, எப்படியெப்படி..?, போனால் போகட்டுமே என்று என்னைப் பார்க்க வந்தீர்களாக்கும்..?, அப்படியொன்றும் என்னைப் பார்த்தாக வேண்டிய அவசியமில்லை.. நீங்கள் சென்று மஞ்சூரியனைச்

DO NOT COPY

சுவையுங்கள்.. நான் செல்கிறேன்..”எனக் கூறி விட்டு சென்றவளைக் கைப்பற்றித் தடுத்த சக்தி..

“அப்படியில்லையடா செல்லக் குட்டி… மஞ்சூரியனும் முக்கியம் தான்.. ஆனால் அதை விட முக்கியம் என் மஞ்சக் காட்டு மைனா அனுக் குட்டி தான்..”எனக் கூறிச் சிரிக்க.. “இதற்கொன்றும் குறைச்சலில்லை..”என்று திரும்பிக் கொண்டவளிடம்..

“பின்னே என்ன..?, வீட்டில் உன்னைத் தனியாகச் சந்திக்கும் சந்தர்ப்பமே அமைவதேயில்லை…. எப்போது பார்த்தாலும் அம்மாவுடனோ அல்லது அந்தப் பூசணிக்காயுடனோ திரிகிறாய்.. சேர்ந்தார் போல்.. ஒரு 4 வார்த்தை கூட பேச முடிவதில்லை.. அதனால் தான் இன்று எப்படியேனும்.. உன்னைச் சந்தித்தாக வேண்டுமென்று.. மதியமே 2 பிளேட் பிரியாணியை விழுங்கி விட்டு.. இங்கே வந்து 1 மணி நேரமாகக் காத்திருக்கிறேன்” என்றான்.

அவன் கூறிய அனைத்தையும் அதுவரை ஒரு வெட்க முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த அனு அவனது கடைசி வாக்கியத்தைக் கேட்டுத் தலையில் அடித்துக் கொண்டவள் “பிரியாணி,பிரியாணி.. எப்போதும் பிரியாணி தானா..?”என்று சலித்துக் கொள்ள..

“சரி சரி விடு அனுமா.., உனக்குத் தான் அத்தானின் பிரியாணி ஆசையைப் பற்றித் தெரியுமே..”என்று கூறியவனின் தலையில் அடித்தபடியே அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தாள் அனுதரணி.

ஆர்டர் செய்த உணவுகள் அனைத்தையும் பேரர் வைத்து விட்டுச் சென்றபின் ஆர்வத்துடன் ருசித்த சக்தி, “என்ன இருந்தாலும் மஞ்சக் காட்டு மைனாவை விட மஞ்சூரியன் சூப்பர் டா அனுமா..”எனக் கூற.. “அப்படியானால் என்னை விட உங்களுக்கு மஞ்சூரியன் தான் முக்கியமா..?”என்று ஆதங்கத்துடன் வினவினாள் அனு.

ஸ்பூனைத் தட்டில் போட்டு விட்டு சிறிது நேரம் யோசித்தவன்.. அவளை உற்றுப் பார்த்து விட்டு “மஞ்சூரியன் தான் முக்கியம் அனுமா..”எனக் கூற.. “நீ.. திருந்தவே மாட்டாய்.. ஃப்ராட்..”என்று அனு அவன் காதைத் திருகிய வேளையில் அவளது செல்ஃபோன் அழைக்க.. எடுத்துப் பார்த்தவள்.. “சுஜி தான்..” என்றபடி “ஹலோ..”என்றாள்.

“அனு நான் ப்ரியா பேசுகிறேன்… நீ ஃப்ரீ என்றால்.. என்னுடன் ஷாப்பிங் வர முடியுமா..?, தோழி ஒருத்திக்குப் பிறந்த நாள்.. டிரஸ் வாங்க வேண்டும்.. அதனால் வெஸ்ட் சைட் செல்ல வேண்டும்.. நீ வருகிறாயா..?”என்று வினவினாள்.

ஷாப்பிங் என்றதும் குஷியாகி விட்ட அனு “கண்டிப்பாக வருகிறேன்.. எனக்கும் பர்ச்சேஸ் செய்ய வேண்டும்..”எனக் கூறி விட்டு ஃபோனைக் கட் செய்தாள். புன்னகை முகத்துடன் வேக வேகமாக கட்லட்டை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தவளிடம் “ஷாப்பிங் என்றதும் வேகத்தைப் பார்..”என்று சக்தி கேலி செய்ய..

“போடா.. நீ மட்டும் பிரியாணியென்றால் குஷியாவதில்லையா..?, அது போலத் தான்..”என்று பதிலடி கொடுத்து விட்டு உணவை முடித்துக் கொண்டு அவனுடனே புறப்பட்டாள்.

அனுவின் வருகைக்காக வாசலிலேயே காத்துக் கொண்டிருந்த சுஜி.. வரிசையாக வந்திறங்கிய இருவரையும் கண்டு வாயைப் பிளந்தாள்... “என்ன அப்படிப் பார்க்கிறாய்..?,”என்று அவள் தோளை இடித்து விட்டுச் சென்றான் சக்தி.

அவனைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த அனுவை சோகமான முகத்துடன் வரவேற்ற சுஜி “இப்படி நடக்குமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை அனு.. நீ... இவ்வளவு அழகான நீ.. போயும்,போயும் இந்தத் தடியனையா..?, அய்யகோ!, நெஞ்சு பொறுக்குதில்லையே!” என்று நெஞ்சில் அடித்துக் கொள்ள.. அசடு வழிந்த படியே சிரித்த அனு.. “என்னைக் கேலி செய்தது போதும்.. நேரமாகி விட்டது.. புறப்படலாம்.. வாருங்கள்..”என்று அவளை இழுத்துக் கொண்டு சென்றாள்.

கடைக்குச் சென்று ஆடை தேர்வில் இறங்கியிருந்த போதே.. அனுவுக்கு ஒரு யோசனை தோன்றியது.. இந்தக் கடையிலிருந்து சரியாக 10 நிமிட பயணத்தில் நம் வீட்டை அடைந்து விடலாம்..இவ்வளவு தூரம் ப்ரியாவை அழைத்து வந்து விட்ட பின்பும்.. வீட்டிற்கு அழைத்துச் செல்லாமல் இருப்பதா..?

அனு, ஷ்யாமின் தங்கை என்பதை அறிந்த பிறகு ப்ரியாவின் மனநிலை எப்படியிருக்கும்..?, எத்தனை நாட்களுக்குத் தான் இருவரும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுவார்கள்..?, இதற்கு என்று தான் தீர்வு..?, விதி பதில் சொல்லும் என்று அமைதியாகக் காத்திருந்தால்.. வேலை நடக்காது.. மதியை உபயோகித்துத் தான் ஏதேனும் செய்தாக வேண்டும்.

இப்போதே.. ப்ரியாவை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டியது தான்.. அதன் பின் நடக்கப் போகும் விசயங்களை உடனே அறிந்து கொள்ள வேண்டுமென்று தோன்ற.. தாமதிக்காமல் களமிறங்கி விட்டாள் அனு.

அந்த நீல நிறச் சுரிதாரை தேர்ந்தெடுத்து எப்படியிருக்கிறது என்று அனுவிடம் அபிப்ராயம் கேட்ட சுஜி, அனுவும் நன்றாயிருப்பதாய்க் கூறி விட.. அதையே

DO NOT COPY

பில் போடக் கொடுத்து விட்டு மற்ற ஆடைகளின் புறம் பார்வையைச் செலுத்தினாள்.

வீட்டிற்கு வரச் சம்மதிப்பாலோ என்னவோ என்று கலங்கிய படியே “சுஜி..” என்றழைத்த அனு.. “என் வீடு இங்கே பக்கத்தில் தான் இருக்கிறது.. பத்தே நிமிடம் தான்.. சென்று விடலாம்.. நீங்கள் கட்டாயம் என் வீட்டிற்கு வர வேண்டும்.. அம்மா உங்களைப் பார்க்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக என்னை நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.. ப்ளீஸ் ப்ரியா.. மறுத்து விடாதீர்கள்..”என்று கெஞ்ச.. அதற்கு வாய் விட்டு சிரித்த ப்ரியா..

“அனு.. உன் வீட்டிற்கு நான் வருகை தருவதற்கு.. நீ இப்படிக் கெஞ்ச வேண்டுமா..?, கட்டாயம் வருகிறேன்.. உன் அன்னையிடம் சொஜ்ஜி,பஜ்ஜியெல்லாம் தயாரிக்கச் சொல்.. இன்று வேட்டை தான் சுஜி உனக்கு..”எனக் கூறிச் சிரிக்க..

அதில் மேலும் கலங்கிய அனு.. இப்போது சிரிக்கிறாள்..! வீட்டைப் பார்த்தவுடன் என்ன அட்டகாசம் செய்யப் போகிறாளோ.. என்று மனதுக்குள் புலம்பியபடி பதிலுக்குச் சிரித்து வைத்தாள். அன்னைக்கு ஃபோன் செய்து.. ப்ரியா வரவிருக்கும் விசயத்தைத் தெரிவித்து விட்டு.. வீட்டில் பிரபு இருப்பதை உறுதி செய்து கொண்டு ஃபோனைக் கட் செய்தாள். இன்று வீட்டில் ஒரு இலவசப் படம் பார்க்கலாம் என்றெண்ணிக் கொண்டு பாதி கலக்கத்துடனும்,மீதி பயத்துடனும் கடையை விட்டு வெளியேறினாள் அனு.

வண்டியை ஸ்டார்ட் செய்த படியே அனுவின் புறம் திரும்பிய சுஜி..”உன் வீட்டில் இப்போது யாரெல்லாம் இருப்பார்கள் அனு..?”என்று வினவ.. அனுவும் உற்சாகத்தை வரவழைத்த குரலில்.. “ம்.. அம்மா,அப்பா.. என் 2 அண்ணன்கள்.. வேலைக்காரர்கள், நாய்க்குட்டி “என்று அடுக்கிக் கொண்டே செல்ல..

“போதும்.. போதும்..”என்றூ அவளை நிறுத்திய ப்ரியா.. “விட்டால்.. உன் வீட்டுக் கிச்சனில் இருக்கும் பூண்டு,வெங்காயத்தைக் கூடக் கூறுவாய் போல.. “என்று கலகலவென்று நகைத்தாள்.

அய்யோ! இவள் வேறு சிரித்து சிரித்து வயிற்றில் புளியைக் கரைக்கிறாளே! வீட்டையும்,வீட்டிலிருப்பவர்களையும் கண்ட பின் எப்படி மாறப் போகிறாளோ! என்று பதறிய அனு.. மனதில் நினைப்பதை வெளிக் காட்டாமல்.. சுஜியுடன் சேர்ந்து தானும் சிரித்தபடி.. புறப்பட்டாள்.

DO NOT COPY

**அ**னுவின் வீடு இருக்கும் தெருவில் நுழைந்த போதே திகைத்த சுஜி.. ச்ச.. ச்ச.. இந்தத் தெருவிற்குள் அந்த ஒரு வீடு தானா இருக்கிறது.. அந்தக் கடுவன் பூனைக்கு இப்படி ஒரு புள்ளி மான் தங்கையாக இருப்பாளா..?, வாய்ப்பேயில்லை.. என்றெண்ணிய ப்ரியா... முன்னால் சென்று கொண்டிருந்த அனு ஷ்யாம் பிரபுவின் வீட்டின் முன்னே வண்டியை நிறுத்தியதைக் கண்டு வாயடைத்துப் போனாள்.

அனு கூறிய அந்த 2 அண்ணன்கள் ஸ்ரீதரும்,ஷ்யாமும் தானா..? அடிப்பாவி அனு.. நீ அந்த ரோபோ ஷ்யாமின் தங்கை என்று முன்னமே தெரிந்திருந்தால்.. நீ இருக்கும் திசையில் கூடத் தலை வைத்துப் படுத்திருக்க மாட்டேன்.. அவனிடம் பட்ட அசிங்கம் போதாதா..?, அவனது வீட்டிற்கே சென்று வேறு தனியாக வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமா..?, அய்யோ எப்படித் தப்பிப்பது..? என்று விரைவாக யோசித்த சுஜி..

“அ..அனு.. எனக்கு மிக முக்கியமான அவசர வேலையிருப்பது இப்போது தான் நியாபகத்திற்கு வருகிறது.. நான்.. நான் இன்னொரு நாள் உன் வீட்டிற்கு வருகிறேன்.. தவறாக எடுத்துக் கொள்ளாதே.. பாய்..”என்று நழுவப் பார்க்க.. அவள் கையைப் பிடித்திழுத்துத் தடுத்த அனு....

“சுஜி.. என்ன விளையாட்டு இது..?, வீடு வரை வந்து விட்டு.. உள்ளே வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறீர்கள்..?, நீங்கள் சொஜ்ஜி,பஜ்ஜி கூட சாப்பிட வேண்டாம்.. என் அம்மாவிடம் ஹாய் சொல்லி விட்டுச் சென்றால் போதும்.. என்று வற்புறுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள்.

நான் விளையாடுகிறேனா..?, உள்ளே வந்தால் உன் அண்ணன் விளையாடி விடுவானே!, அவள் கையைப் பற்றித் தடுத்து அடம் பிடித்துப் பார்த்தும் முடியாமல் போக.. வேறு வழியின்றி உள்ளே சென்றாள் சுஜி.

ஹாலில் அமர்ந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த தந்தையைக் கண்டு “ஹாய் டாடி..” என்று அனு கூறிக் கொண்டிருக்கையில்.. தன்னிச்சையாக மாடியைப் பார்வையிட்ட சுஜி.. அங்கே ஷ்யாம் வந்து கொண்டிருப்பதைக் கண்டுத் திகைத்து.. அய்யோ! ஆண்டவா! முகத்தை எங்கேயும் மறைத்துக் கொள்ள முடியாதா.. என்றெண்ணியபடியே அனுவின் பின்னே மறைந்தாள்.

மாலைக் காபிக்காக கீழே வந்த ஷ்யாமும் அவளை இங்கே எதிர்பார்க்காததால் அடி அல்லி ராணி! அனு பக்கம் பக்கமாக வர்ணித்த அந்த சுஜிப்ரியா நீ தானா..?, என்று திகைத்தவன் இவள் திட்டமிட்டு என்னைப் பழி வாங்கத் தான் இங்கே நுழைந்திருக்கிறாளோ..? என்று யோசிக்கத் தொடங்கினான்.

DO NOT COPY

அவள் முகத்திலிருக்கும் திகைப்பையும்,பயத்தையும் பார்த்தால்.. அவளும் இதை எதிர்பார்க்கவில்லையென்று தான் தெரிகிறது.. என்று முடிவு செய்து செய்து கொண்டவன்.. அவ்வளவு நேரமாகத் திகைத்துப் படியிலேயே நின்று விட்டதை உணர்ந்து கீழே இறங்கி வந்தான்.

இருவரது முகமாற்றத்தையும் திருப்தியுடன் நோக்கிய அனு... "வாங்க ப்ரியா.." என்றபடி தந்தையிடம் அழைத்துச் சென்றாள். படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு இருவரையும் நோக்கிய ராஜாராமன் "வாம்மா.. நீ தான் இந்த வாலு புதிதாகப் பிடித்திருக்கும் சினேகிதி என்று நினைக்கிறேன்.."எனக் கூற.. "அப்பா...."என்று அவரை அடக்கியவள்..

"சுஜி.. இவர் என் டாடி.. தி கிரேட் ராஜாராமன்!"எனக் கூற.. புன்னகைத்தபடி "ஹலோ அங்கிள்.."என்றாள். 2 நிமிடம் கூட தொடர்ச்சியாக அமைதி காக்க முடியாத.. தெரியாத.. சுஜி.. இன்று அளவாகப் பேசுவதைக் கண்டு திகைத்த படியே.. அனு நிற்க..

"சதா உன்னைப் பற்றிய பேச்சு தானம்மா.. சுஜி இதைச் செய்தாள்,அதைச் செய்தாளென்று.. உன் கொள்கைப் பரப்புச் செயளாலராக மாறிப் போய் விட்டாள் அனு.."எனக் கூறிச் சிரித்தவர் தொடர்ந்து "அவள் அண்ணன் கூட அடிக்கடி கேலி செய்வான்.. நீ கோர்ஸ் படிக்கச் செல்கிறாயா.. இல்லை அவளுடன் அரட்டை அடிக்கச் செல்கிறாயா.. என்பான்.. அதனால் உன் பெயர் என் வீட்டில் மிகப் பிரபலம்"என்று அவர் சிரிக்க..

இங்கே சுஜியோ.. ஏன் சொல்ல மாட்டான்..?, இஸ்திரி செய்யப்பட்ட சட்டையைப் போல் எப்போதும் விறைப்பாக திரிபவனுக்கு அரட்டை என்கிற வார்த்தைக்கு அர்த்தமே தெரிந்திருக்காது.. அதட்டவும்,திட்டவும் கொடுமைப் படுத்தவும் மட்டும் தான் தெரியும்! என்று பொறுமியவள்.. வேறு வழியில்லாமல் ஈயென்று பல்லைக் காட்டி வைத்தாள்.

பேச்சு சத்தம் கேட்டு வெளியே வந்த சீதா.. வந்திருப்பது சுஜியென்பதை அறிந்து கொண்டு ஆர்வமாக அவளை நோக்கினார். கத்தரிப்பூ நிற சுடிதாரில் சிரிப்புடன் நின்றிருந்தவளைக் கண்டு.. தன் வருங்கால மருமகள் என்கிற எண்ணம் தலைக்கேற.. அவளருகே வந்து.. கையைப் பற்றி முகம் வருடினார் சீதா.

அவரது செய்கையின் பொருள் விளங்காமல்.. சுஜி புருவத்தை சுருக்கி புரியாத பார்வையுடன் புன்னகைத்தபடி அனுவை நோக்கினாள். அனுவும் சிரித்தபடியே அன்னையின் அருகே வந்து "அம்மா.."என்று கையை அழுத்த சுதாரித்துக் கொண்டவரின் தோளைப் பற்றி..

DO NOT COPY

“சுஜி.. இவர் என் அம்மா.. பெயர் சீதா.. “எனக் கூற.. “வீட்டில் அனைவரும் சுகமா சுஜிம்மா..?, நீ மிகவும் அழகாக இருக்கிறாய்..”என்று சீதா கூற.. மேலும் விரிந்த சிரிப்புடன்.. “நன்றி ஆன்ட்டி..”என்றாள்.

அனு இவரைப் போல் பிறந்து விட்டாள் போலும்!, சாந்தமான முகத்துடன் புன்னகைத்தபடியே இருக்கிறாரே! இவருக்குப் பிறந்த அவன் மட்டும் ஏன் கருங்கல்லைப் போல் இருக்கிறான்.. என்று சிந்தித்துக் கொண்டிருந்தவளை.. கைப் பற்றி அனு நேராக அழைத்துச் சென்றது ஷ்யாமிடம்.

அதுவரை.. இங்கே நடக்கும் எதற்கும்.. எனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் டைனிங் ஹாலில் அமர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தவன்.. அனு அருகே வந்து “அண்ணா..”என்றழைத்து “இவள்..”என்று தொடங்கும் முன்..

“சுஜிப்ரியா...! என்று நீ சொல்லாமலே தெரிகிறது அனுமா...”என்று புன்னகைத்தவன் சுஜியின் புறம் திரும்பி “ஹலோ..”எனக் கூறிப் புன்னகைத்தான். எதையுமே வெளிக் காட்டாமல் மிகச் சாதரணமாக.. இப்போது தான் அவளை முதன்முதலாகச் சந்திப்பதைப் போல் பேசுபவனை அட! நடிகர் குலத் திலகமே!!! என்று அவள் வாயடைத்துப் போய்ப் பார்க்க... அவனோ சலனமற்ற விழிகளுடன் அவளின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

திகைத்த விழிகளுடன் நிற்பவளின் தோளை அனு இடிக்க.. முன்னே விழுந்த கற்றை முடியைக் காதோரம் ஒதுக்கியபடி.. நடுக்கத்தை மறைத்தவள்.. அவனிடம் பதிலுக்கு முறுவலித்து “ஹலோ..”என்றாள். அதன் பின் அனைவரும் டைனிங் ஹாலுக்கு வந்து விட.. “உட்காருங்கள் ப்ரியா..”என்று அவன் அருகிலேயே சுஜியை அமரச் செய்தாள் அனு.

அனைவரும் அவரவர் போக்கில் பேசியபடியே அமர்ந்திருக்க.. அவள் புறம் குனிந்த ஷ்யாம்.. “ஏய்.. அல்லி ராணி.. நீ எதற்காக மறுபடியும் என் வீட்டுக்குள் நுழைந்திருக்கிறாய்..?, இப்போது என்ன திட்டம் வைத்திருக்கிறாய்..?, ம்?, இந்தக் காபியை என் தலையில் ஊற்றப் போகிறாயா..? அல்லது.. இந்தக் காராபூந்தியை என் கண்ணில் தேய்க்கப் போகிறாயா..?”என்று வினவ..

எரிச்சலுடன் அவனை நோக்கிய சுஜி.. “நீங்கள் இந்த ஊரில் இருப்பதால்.. இந்த ஊரை விட்டே காலி செய்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பவள் நான்..!, நான் எதற்காக உங்கள் வீட்டில் நுழைவதற்கு திட்டம் போட வேண்டும்..?, திட்டம் போட்டு.. வீதி.. வீதியாகச் சென்று பெண்களை மிரட்டுவது.. நீங்கள்..! நான் அல்ல..,”எனக் கூற..

“திமிர் பிடித்தவள்..!, ராட்ச்சசி! “என்று முணுமுணுத்தவனிடம் “யார்..?, நான் திமிர் பிடித்தவளா..?, அப்படியென்றால்.. நீங்கள் என்ன..?, புத்தர்,ஏசுவின்

DO NOT COPY

வரிசையில் வரும் நல்ல உள்ளமா..?,"என்று வினவ.. "வாயை மூடு.. நம்மை யாரேனும் கவனித்து விடப் போகிறார்கள்" என்று கூறி அவளை அடக்கியவனைக் கண்டு.. எரிச்சலுடன் முகத்தைத் திருப்பினாள் சுஜி.

இவர்களிருவரையும் கவனிப்பதையே தொழிலாக வைத்திருக்கும் அனுவும்,சீதாவும் இருவரும் முணுமுணுப்பதைக் கண்டு பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய ஸ்ரீதர் டைனிங் ஹாலில் குவிந்திருந்த அனைவரையும் கண்டவன்.. ஷ்யாமின் அருகில் அமர்ந்திருந்த சுஜியைக் கண்டு ஆடித் தான் போனான். இவள் எதற்காக மறுபடியும் இங்கே முளைத்திருக்கிறாள்..?, இவள் போட்டுக் கொடுத்து விட்டுச் சென்ற பின் ஆனந்தியைச் சந்திக்கவேயில்லையே...!

பின் எதற்காக வந்திருக்கிறாள்..?. அன்னை,தந்தை இருவரிடமும் கூறி விட்டாளா.. என்ன..?, இன்னும் என் வாழ்க்கையில் என்னவெல்லாம் செய்யக் காத்திருக்கிறாள்.. இந்தச் சண்டாளி! என்று புலம்பியபடியே படியேறப் பார்த்தவனை.. "ஸ்ரீதர் நில்..."என்று அருகில் வந்த அனு..

"இவள் என் தோழி ப்ரியா.."என்று அறிமுகப் படுத்தினாள். இந்த உருப்படாத தெண்டத்திற்கு.. ஹாய் சொல்லாதது ஒன்று தான் குறை என்று உள்ளே திட்டினாலும்.. மறைத்து.. எதையும் காட்டிக் கொள்ளாமல் சிரித்து வைத்தாள் ப்ரியா. அவள் சாதாரணமாகச் சிரிப்பதைக் கண்ட ஸ்ரீதரும் கவலை அகன்று.. சிரித்து விட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான்.

"இது தான் எங்கள் வீடு ப்ரியா.. அம்மா,அப்பா மிகவும் கலகலப்பானவர்கள்.. ஷ்யாம் அண்ணன் எங்களனைவருக்கும் எதிரான குணமுடையவன்.. என்னுடைய சின்ன சின்ன தேவைகள்,ஆசைகள் அனைத்தையும் பூர்த்தி செய்பவன்.. சொல்லப் போனால்.. அவனுக்கு நான் தான் செல்லம்... தொழிலைப் பார்த்துக் கொள்வது அப்பாவும்,அவனும் தான்.. எங்கள் வீட்டின் அனைத்துப் பொறுப்பும் அண்ணனைச் சார்ந்தது தான்.. அவன் தான் எல்லாம்!"

"ஆனால் இந்த ஸ்ரீதர் இருக்கிறானே! எப்போதும் என்னுடன் சண்டையிட்டுக் கொண்டு தான் திரிவான் ப்ரியா.. வீட்டின் பெரிய ஏழரை அவன் தான். என்னவோ தெரியவில்லை.. இப்போதெல்லாம்.. பொறுப்பாக அண்ணனுடன் அலுவலகம் செல்கிறான்.. அதற்கடுத்த குழந்தை.. வீட்டின் கடைக் குட்டி நான் தான்.. என்னைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்.."எனக் கூறி முறுவலித்தாள்.

DO NOT COPY

உனக்கென்னம்மா..!, உற்சாகமாக உன் குடும்ப வரலாறைக் கூறிக் கொண்டிருக்கிறாய்.. ஆனால் உன் அண்ணன்.. நடிகர் திலகம் ஷ்யாம் பிரபு.. என்னையே முறைத்துக் கொண்டிருக்கிறானே..! அது உன் கண்ணிற்கு படவேயில்லையா..?, என்று நினைத்த ப்ரியா...

முறுவலித்தபடியே.. "நேரமாயிற்றே அனு.. நான் கிளம்பட்டுமா..?"என்று வினவ.. அவளருகே வந்த சீதா.. "அதற்குள்ளாகவா.. ப்ரியா..?, சாப்பிட்டு விட்டுச் செல்லலாமே.."என்று கூற.. "இல்லை ஆன்ட்டி...., இன்னொரு முறை வருகையில் சாப்பிடுகிறேன்..."என்று கூறிக் கொண்டிருக்கையிலேயே... பிரபு தொண்டையைச் செருமினான்..

என்னவாயிற்று..?, அய்யோ..! இன்னொரு முறை வருகிறேன் என்று கூறி விட்டேனோ! கேட்டு விட்டானா..?, இவனுக்கு மூக்கு வியர்த்து விடுமே! என்று சலித்துக் கொண்டாள்.

சீதாவும்,அனுவும் வாசல் வரை வந்து வழி அனுப்ப.. உள்ளே இருந்தபடி அவளையே முறைத்துக் கொண்டிருந்த ஷ்யாமின் பார்வையைச் சகித்துக் கொண்டாக வேண்டிய தனது தலை எழுத்தை நொந்து கொண்டு இருவரிடமும் விடை பெற்றாள் சுஜி.

அவள் சென்ற சிறிது நேரத்திலேயே பிரபுவும் சென்று விட.. அம்மாவும், மகளும் தங்களது மந்திராலோசனையைத் தொடங்கினர். "பார்த்தாயா அம்மா.. அண்ணன்,அண்ணியின் முகங்களை.. அப்பப்பா!, என்னவொரு திகைப்பு! அண்ணி வாசலிலேயே தப்பித்து விட முயன்றாள் அம்மா.. உள்ளே வரவழைப்பதற்கு நான் பட்ட பாடு இருக்கிறதே!"என்றவள் தொடர்ந்து..

"2 நிமிடம் கூட அவளால் அமைதியாக இருக்க முடியாதம்மா.. ஆனால் அண்ணனைக் கண்டதும் மௌனச் சாமியாராக மாறி விட்ட விதத்தைப் பார்.. பாவம்மா.. ப்ரியா அண்ணி!, இன்று இப்படி ஒரு அதிர்ச்சியை எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.. அன்றொரு முறை நம் வீட்டிற்கு வந்த போது.. அவள் முகத்திலிருந்த கோபமென்ன?, இன்று திகைத்து விழித்து பதறி அடித்து ஓடியதென்ன..?"

"அண்ணாவுடன் ரகசியமாக நடந்த பேச்சு வார்த்தையைக் கவனித்தாயா அம்மா..?, ஆனால் இருவரும் இன்னும் கோபத்துடன் பேசிக் கொள்வதைப் போல் தான் தெரிகிறது.. அன்று நம் வீட்டிற்கு வந்த போது ஆரம்பித்த சண்டை.. இன்னுமா தீர்க்கப் படவில்லை..?"

"எப்படியோ.. என்னுடைய இரண்டாவது படி.. அழகாக முடிந்து விட்டது.. இனி இந்த இரண்டு மீன்களும் வலையில் சிக்கித் தான் ஆக வேண்டும்.. இனித்



DO NOT COPY

தப்பிக்கவே முடியாது..”என்று அனு கூறிக் கொண்டிருந்த நேரத்தில்.. மாடியிலிருந்து கீழே வந்த ஸ்ரீதர் இவர்களிருவரின் உரையாடலைக் கேட்டு அப்படியே நின்று விட்டான்.

அவர்கள் பேசியது முழுவதையும் கேட்டவனுக்குத் தன்னாலே முறுவல் அரும்பியது. இவ்வளவு பெரிய முட்டாள்களா..?, அம்மாவும்,அனுவும்? என்று சிரித்தவன்.. இந்தக் கதையின் மீதியைத் தான் எழுதினால் என்ன..? என்று சிந்தித்தான்.

தன் காதலை உடைத்த அண்ணனையும்,அதற்குக் காரணமாயிருந்த சுஜியையும் பழி வாங்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைந்தவன்.. கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்திக் கொண்டே ஆக வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான்!

இந்தப் பொய்யை உண்மையாக்கி.. இல்லாத இந்தக் காதலை மெய்யென்று பரப்பி.. பிரபுவிற்கும், ப்ரியாவிற்கும்.. நிச்சயம் அவப்பெயர் கிட்ட வைத்து மானத்தை வாங்கி விட வேண்டும்... ஆனால் எந்த வகையில் இருவருக்கும் காதலிருப்பதாய் நிரூபிப்பது...?, என்று யோசனையில் ஆழ்ந்தான் ஸ்ரீதர்.




DO NOT COPY

# அத்தியாயம் – 10



DO NOT COPY

**சோலை மலரொளியோ – உனது**

**சுந்தரப் புன்னகை தான்!**

**நீலக் கடலலையை – உனது**

**நெஞ்சின் அலைகளடி**

**கோலக் குயிலோசை – உனது**

**குரலின் இனிமையடி**

**வாலைக் குமரியடி – கண்ணம்மா**

**மருவக் காதல் கொண்டேன்!**

**பி**ரபுவின் வீட்டிலிருந்து தப்பித்தோம்,பிழைத்தோமென.. வழியில் சிக்னலுக்குக் கூடக் காத்திராமல் விரைவாக வண்டியைச் செலுத்தி வீடு வந்து சேர்ந்த சுஜி, தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள். விதி வலியதென்பது இது தானோ! ஒவ்வொரு முறையும் அவனைச் சந்திக்கும் போதெல்லாம்.. கடவுளே இவனை இன்னொரு முறை சந்திக்கும் வாய்ப்பை அளித்து விடாதே என்று வேண்டிக் கொள்ளும் தனக்கு இப்படி ஒரு சோதனையா..?

இவள் எந்தக் கிரகத்திலிருந்து வந்திருக்கிறாள் என்பதைப் போல் அவன் பார்த்த பார்வையும்! இது தான் இவர்களிருவருக்கும் முதல் சந்திப்பு என்று அவர்களைக் காண்போர் அடித்துச் சொல்லும் அளவிற்கு.. புன்னகையுடன் ஹலோ சொன்னதும்.. படு பாவி! எப்படி நடிக்கிறான்! அண்ணனும்,தம்பியும் பயங்கரமான தில்லாலங்கடிகளாக இருக்கிறார்கள்!

உலகத்திலுள்ள கேடிகளுக்கெல்லாம் ஒட்டுமொத்த வாரிசாக விளங்கும் இவனுக்கு இப்படி ஒரு தங்கையா..?, இனிமையே உருவாக.. கருணையே வடிவாக.. சிரிக்க சிரிக்கப் பேசியபடி.. அவனுக்கு அப்படியே எதிர்த் துருவமாக இருக்கிறாளே அனு!

தானாகவே வலியச் சென்று அவனைச் சீண்டி.. இழுத்து வைத்துக் கொண்ட சண்டையும்,பழி வாங்கும் படலமும் ஒரு புறம் இருக்க.. இவை அனைத்தையும் தூக்கிச் சாப்பிட்டு விடும் அளவிற்கு.. அனு அவனது தங்கை என்று தலையில் விழுந்ததே ஒரு இடி! அதை நம்புவது சுஜிக்கு மிகக் கடினமான விஷயமாக இருந்தது.

அனு! பாதகி! அவளின் அறிமுகம் மட்டும் கிட்டாமல் இருந்திருந்தால்.. இப்படி ஒரு அவமானத்திற்கு ஆளாக நேரிட்டிருக்குமா..?, ஏளனத்தை மட்டுமே விழிகளில் தேக்கி நோக்குபவன்.. திட்டம் போட்டு அவனது வீட்டிற்குள் நுழைந்து விட்டதாகத் தான் நினைத்திருப்பான். அது மட்டும் உறுதி!

தம்பி பெண்களைத் தேடி தேடி மிரட்டுபவன் என்றால்.. அண்ணன்.. அவனை மயக்குவதற்காகவே ஊரில் உள்ள பெண்கள் அனைவரும் வீதியில் நடப்பதாக எண்ணும் மன்மதனாக இருக்கிறான்.. அப்படிப் பட்ட அண்ணன்மார்களுக்குத் தங்கையாக.. ஒரு நல்லவள் பிறந்திருக்கிறாள்!

அவளும் அவர்களைப் போலவே பிறந்திருந்தால்.. உன் சகவாசமே வேண்டாம் தெய்வமே என்று ஒரேடியாகத் தலை முழுகி விட்டு விலகி விடலாம்.. ஆனால் அவள் அநியாயத்திற்கு நல்லவளாக இருந்து தொலைக்கிறாளே! என்று பெருமூச்சை வெளி விட்டவள்..

ச்ச,ச்ச சுஜி.. உன்னிடம் உண்மையாக.. உயிராக.. பழகி வரும் அனுவை.. அவனது அண்ணன் இடிச்ச புளி ராமசாமிக்காக விலக்க நினைப்பது சரியா..?, அவள் என்ன தவறு செய்தாள்.. கேப்டன் பிரபாகரனுடனும், மன்சூர் அலி கானுடனும் உடன் பிறந்தது அவள் தவறா..?,

அண்ணனாக இருந்தால் என்ன...?, ஆவக்காயாய் இருந்தால் என்ன..?, நமக்கு முக்கியம் அனுவின் நட்பு மட்டுமே! இனி அவள் தரையில் புரண்டு அழுதால் கூட.. அவள் வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைக்கக் கூடாது சுஜிப்ரியா! என்று உறுதி எடுத்துக் கொண்ட பின் தான் சுஜியினால் நிம்மதியாக உறங்க முடிந்தது.

**ம**றுநாள் ஷ்யாமுடன் காரில் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த அனு.. ப்ரியா தன் வீட்டிற்கு வந்து சென்ற நிகழ்வைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒருவரையொருவர் அறியாதவர்கள் போன்று எப்படி

DO NOT COPY

நடிக்கிறார்கள்! நான் தடுக்கில் பாய்ந்தால்.. அவர்கள் கோலத்தில் பாய்கிறார்கள்! எப்படித் தான் இவர்களிருவரின் குட்டை உடைப்பது! என்று தலையைப் பிய்த்துக் கொண்டாள்.

பின் அண்ணனின் புறம் திரும்பி "அண்ணா..?, என் புது தோழி எப்படி..?,"என்று புன்னகையுடன் வினவ.. அவனோ புருவத்தைச் சுருக்கி "எப்படியென்றால்.. என்ன கேட்கிறாய்..?, புரியவில்லை.."என்றான். "எப்படியென்றால்... நன்றாகப் பழகுகிறாளல்லவா என்று கேட்கிறேன் அண்ணா..?"என்று கூறினாள்.

ஆமாமாம்! மிக நன்றாகப் பழகும் நல்லவள் அவள்! சண்டி ராணி! இம்சை! தலைவலி! 2,3 முறை சந்தித்ததற்கே.. பாடாய்ப் படுத்தி உயிரை வாங்கி விட்டாள்.. இவளைப் பற்றி அபிப்ராயம் சொல்லாதது ஒன்று தான் குறை! என்றெண்ணியவனின் முகம் மாறிய விதத்தைக் கண்டு அனு புரியாமல் பார்க்க.. தங்கையின் புறம் திரும்பியவன்..

"இங்கே பார் அனுமா.. நான் அவளிடம் பழகிப் பார்க்கவுமில்லை.. அதற்கு அவசியமுமில்லை. ஆனால்.. நீ ஏன் எப்போது பார்த்தாலும் அவளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய்..?"என்று எரிச்சலுடன் வினவினான்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத அனு திகைத்தாள். "அது..அது.."என்று தயங்கியவள் "என்ன அண்ணா..?, என் தோழி எப்படிப் பழகுகிறாள் என்று கேட்பது தவறா..?, அபிப்ராயம் தெரிந்து கொள்ளத் தான் அண்ணா.. வேறு ஒன்றுமில்லை.."என்று சமாளித்து வைத்தாள்.

"அபிப்ராயமா..?, அவளைப் பற்றியா..?"என்றவன் "அவளைப் பற்றி அபிப்ராயம் கூறுவதற்கு ஒன்றுமில்லை அனுமா.."என்று முடித்து விட்டான். அதற்கு மேல் எதுவும் விசாரித்தால் நிச்சயம் எரிந்து விழுவான் என்று முடிவு செய்து அமைதியாகி விட்டாள் அனு.

அப்படியென்ன இருவருக்குள்ளும் பனிப் போர் நடந்து கொண்டிருக்கிறது..?, ஒருவர் பெயரை மற்றொருவர் கேட்க நேர்ந்தாலே.. முகம் மாறி விடுகிறதே? ம்.. இதற்கு என்ன தான் தீர்வு..? இருவரும் பிடி கொடுக்க மாட்டேன் எங்கிறார்களே! சீக்கிரமே ஒரு முடிவு வர வேண்டும் இறைவா என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

அன்று மாலை யோகா சென்டரில் சுஜியை சந்தித்த போதும், அவளிடமும் எந்த வித மாற்றமும் இல்லாததைக் கண்டு திகைத்துத் தான் போனாள் அனு. காதலர்கள் சண்டையிட்டால் இப்படித் தான் நடக்குமா..?, திரைப் படங்களில் வருவது போல் விட்டத்தை பார்த்துக் கொண்டு சோக முகத்துடன் காட்சி தருவார்கள் என்று எண்ணமிட்டிருந்த அனுவிற்கு இவர்களது நிலை

DO NOT COPY

ஆச்சரியமாக இருந்தது.. எப்படியாயினும் என்றேனும் ஒரு நாள் உண்மை வெளி வரத் தானே வேண்டும் என்றெண்ணியவள்.. அனுவின் புறம் திரும்பி..

“சுஜி.. உங்களை என் வீட்டில் அனைவருக்கும் மிகவும் பிடித்துப் போய் விட்டது.. அதனால் வரும் ஞயிற்றுக் கிழமை என் அம்மா உங்களுக்காக விருந்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உங்கள் குடும்பத்துடன் நீங்கள் கட்டாயம் வர வேண்டும்..”என்று அழைத்தாள்.

என்னது?. இவள் வீட்டிற்கு நான் குடும்பத்துடன் வர வேண்டுமா..?, திட்டம் போட்டு அவனது இல்லத்திற்குள் புகுந்து விட்டதாக இவள் அண்ணன் உத்தமசீலன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதில் நான் குடும்பத்துடன் வருகை தந்து மேலும் இழுத்து வைத்துக் கொள்ள வேண்டுமா..?

“இ..இல்லை அனு.. இந்த வாரக் கடைசியில் என் மாமா வருகிறார்.. அதனால் என்னால் எங்கேயும் வெளியே வர முடியாது.. சாரி..”என்று நழுவி விட்டாள். ஆனால் யாரைக் காண வேண்டி வருமென்று இதைத் தவிர்த்தாலோ.. விரைவிலேயே அவனைச் சந்தித்தாள்.

யோகா சென்டரிலிருந்து கிளம்பிய இருவரும் நேராக சுஜியின் வீட்டை அடைந்தனர். வாசலில் நின்று நண்பனுடன் செல்ஃபோனில் உரையாடிக் கொண்டிருந்த சக்தி அனுவைக் கண்டதும் முகம் மலர்ந்து “லட்டு... என்னடா 2,3 நாட்களாக உன்னைப் பார்க்கவே முடியவில்லை.. அத்தானைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையே உனக்கு இல்லையா..?, போடா குட்டி..”என்று கோபித்துக் கொள்ள.. அவன் பேசுவதைக் கேட்டு விழி விரித்த சுஜி..

அடப்பாவி! தம்பிப் பையா.. இந்த விஷயம் இவளது அண்ணன் வீரப்பனுக்குத் தெரிந்தால்.. உன்னை சுட்டுப் பொசுக்கி விடுவான். பின் லட்டு என்ன..?, பூந்தி கூட மிஞ்சாது.. வேண்டாமடா சக்தி! என்று கலங்கியவள் திரும்பி அனுவை நோக்கினாள்.

அவளோ புன்னகையுடன் அவனை நோக்கி “ஆமாம்.. என்னைப் பாராமல்.. உருகி இளைத்து விட்டது போல்.. பெரிதாக வசனம் பேசுகிறீர்களே..! எத்தனை தட்டு பிரியாணி உள்ளே போனதோ.. போடா..”எனக் கூற.. “ஏய்.. வாடா,போடாவென்று அழைக்காதே என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்..?”என்று அவன் பாய.. “அப்படித் தான் சொல்வேன் போடா.. போடா..”என்று கூறி விட்டு கிளுகிளுத்துச் சிரித்தபடி உள்ளே ஓடியவளை “உன்னை...”என்றபடி சக்தி துரத்திக் கொண்டு ஓடினான்.

இந்தக் கதை எங்கே முடியப் போகிறதோ! என்று தலையில் அடித்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள். வள்ளியுடன் சேர்ந்து கிச்சனில்

DO NOT COPY

சமையலில் ஈடுபட்டிருந்த அனுவைக் கேலி செய்த படி சமையலறை மேடை மீது அமர்ந்திருந்தான் சக்தி.

“ஏன்டா லட்டு.. இது என்ன டிஷ்..?,ஏதோ புதுவகையான ரெசிபி என்று கூறி விட்டு.. பாட்டி சுட்ட வடையைச் செய்து கொண்டிருக்கிறாய்..?., அய்யோ! என் அம்மாவின் கைச் சமையலை சாப்பிட்டு ருசியாக வளர்ந்தவன் நான்.. நீ சமைக்கும் சாப்பாட்டையெல்லாம் எப்படி காலம் முழுதும் சாப்பிடுவேன் லட்டு?”எனக் கூற..

“அம்மா சமையல் மட்டுமா..?, தெருக் கோடியில் இருக்கும் பாய் கடை, பக்கத்துத் தெரு முனியாண்டி விலாஸ்.. இதெல்லாம் எந்தக் கணக்கில் சேர்த்தி..?”என்று அனுவும் அவனுக்கு பதிலடி கொடுத்து வம்பளந்து கொண்டிருந்தாள்.

ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த சுஜி... அனுவின் செல்ஃபோன் அழைப்பைக் கேட்டு “அனு.. உனக்கு ஃபோன்..”என்று குரல் கொடுத்தாள். சமையலறையில் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்த அனுவோ.. “நீங்களே பேசி வைத்து விடுங்கள் சுஜி.. நான் இப்போ பிஸி..”என்று கூற..

“சரி..”என்றபடி ஃபோனை எடுத்துப் பார்த்தவள் அதில் பளிச்சிட்ட “பிரபு அண்ணா”என்கிற பெயரைக் கண்டு பதறி “அனு.. உன் அண்ணாவிடம் இருந்து கால் வருகிறது..”என்று மறுபடியும் கூவினாள். உள்ளே மாவு பிசைந்து கொண்டிருந்த அனுவோ.. நல்ல வாய்ப்பாயிற்றே! என்று குதூகலமாகி “அதனாலென்ன பிரியா..?, நீங்களே பேசுங்கள்..”எனக் கூறி விட..

வேறு வழியின்றி பட்டனை அழுத்தி ஃபோனைக் காதில் வைத்தாள். அந்தப் பக்கம் பிரபுவோ இவளிடமிருந்து ஒரு ஹலோவைக் கூட எதிர்பார்க்காமல் “இவ்வளவு நேரமா அனு ஃபோனை எடுப்பதற்கு..?, அப்படியென்ன செய்து கொண்டிருக்கிறாய்..?,உன் தோழி அந்தக் குள்ள வாத்துடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பாய்..?, வேறு என்ன செய்து விடப் போகிறாய்..?, ஆனால் ஒன்று அனுமா.. அந்த சுஜிப்ரியாவுடன் பழகும் எவரும் வாழ்க்கையில் உருப்படுவார்கள் என்கிற நம்பிக்கையே எனக்கு இல்லை..”என்று அவன் போக்கில் பேசிக் கொண்டே சென்றான்.

அடச் சண்டாளா! நான்.. நான்.. குள்ள வாத்தா..?, இவன் பனை மரம் போல பாரபட்சம் பார்க்காமல் வளர்ந்து தொலைத்திருக்கிறான்.. அதற்காக ஊரில் இருப்போர் அனைவரையும் குள்ளவாத்து என்று அழைப்பதா..?, படுபாவி! என்றெண்ணியவள் எதுவும் பேசாமல் அமைதியாக இருக்க..

DO NOT COPY

அவனும் தங்கையிடம் பொரிந்து தள்ளிவிட்டதால் தான் அமைதியாக இருக்கிறாள் என்று நினைத்து “சரி அதை விடு அனுமா.. அவளைப் பற்றிப் பேசி நமக்கு என்ன ஆகப் போகிறது..?, நீ எப்போது வீட்டிற்கு வருவாய்..?, என் நண்பனுக்குத் திருமணம் என்று கூறியிருந்தேனல்லவா..?, கி∴ப்ட் வாங்க வேண்டும்.. நீ தான் இதிலெல்லாம் கைதேர்ந்தவள் ஆயிற்றே! அதனால் உன்னையே அழைத்துச் செல்லலாம் என்றிருக்கிறேன்.. வருகிறாயா..?”என்று வினவினான்.

அதுவரை எதுவும் பேசாமல் அமைதி காத்த சுஜி அவன் பதிலுக்காக காத்திருப்பதை உணர்ந்து “க்கும்..”என்று தொண்டையைச் செறுமியவள் “ஹலோ Mr.துஷ்யந்தன்....”என்று கூற.. எதிர்முனையில் காத்திருந்த ஷ்யாம்.. குரல் வித்தியாசத்தை உணர்ந்து ஓ! இந்த ராட்சசி தான் இவ்வளவு நேரம் பேசியதா.. என்றெண்ணியவன்.. அவளைப் போலவே தானும் தொண்டையைச் செருமி..

“சொல் சகுந்தலா..”எனக் கூற.. அவன் பதிலில் எரிச்சலடைந்த சுஜி “நீங்கள் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..?”எனக் கேட்க.. “ஹ்ம்ம்...”என்று யோசித்தவன் “உன்னை எப்போது தூக்கிச் செல்லலாம் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் கண்ணே..”எனக் கூற மேலும் எரிச்சலடைந்தவள்.. “என் பெயர் சகுந்தலா அல்ல.. சுஜிப்ரியா..”என்று வெடுக்கென்று கூறினாள்.

“ஏன்..?, என் பெயரைத் தெரிந்து வைத்திருந்தும் நீ என்னை துஷ்யந்தா என்று அழைக்கவில்லை..?, அதைப் போலத் தான் நானும் சகுந்தலா என்றேன்..”எனக் கூற.. “அது.. அது.. நான் ஏதோ உங்களை கேலி செய்யக் கூறினேன்.. அதற்காக நீங்கள் என்னை சகுந்தலா என்பீர்களா..?, உங்களைப் போல் ஒரு துஷ்யந்தனுக்கு நான் சகுந்தலாவாக இருக்க விரும்பவில்லை..”எனக் கூற..

“பேராசைப் படுகிறாயே சுஜூ.., உன்னைப் போல் ஒரு இம்சை சகுந்தலாவிற்கு துஷ்யந்தனாக இருக்க நானும் ஆசைப் படவில்லை...” என்றவன் தொடர்ந்து “என் தங்கை எங்கே..?, இன்னும் உன்னுடன் தான் சுற்றிக் கொண்டிருக்கிறாளா..?, ஆமாம், நீ என்ன திட்டத்துடன் அவளுடனான நட்பை வளர்த்துக் கொண்டிருக்கிறாய்..?, உனக்குப் பரிந்து பக்கம்,பக்கமாக பேசுமளவிற்கு நீ என்ன செய்து விட்டாய்..?, தொல்லை.. இம்சை..”என்று அவனது வழக்கமான வசை மொழிகளை அவன் துவங்கினான்.

இந்த கொம்பேரி மூக்கன் என்னை இம்சை என்கிறான்! நேரமடா சாமி! என்று தலையில் அடித்துக் கொண்டவள்.. “ஆமாம்.. திட்டம் போட்டு.. உங்கள் வீட்டிலிருக்கும் வெள்ளைப் பூண்டைத் திருடுவது தான் என் வேலை..”என்றவள் தொடர்ந்து “உங்கள் தங்கை என் அன்னையுடன்

இருக்கிறாள்.. வந்ததும் கூறுகிறேன்..”என்று கூறி ஃபோனை கட் செய்து விட்டாள். சரியான சண்டி ராணி! என்றபடி சென்று விட்டான் அவன்.

அவனுடன் பேசி விட்டுக் கோபமாகத் தன் அறையை விட்டு வெளியே வந்தவளை கவனித்த அனு “என்ன ப்ரியா..?, அண்ணன் என்ன கூறினார்..?” என்று விசாரிக்க... வாம்மா பாசமலரே! என்று பல்லைக் கடித்த சுஜி “கிஃப்ட் வாங்கச் செல்ல வேண்டுமாம்.. அதனால் உன்னை வீட்டிற்கு வரச் சொன்னார்” என்று கூற..

இதைச் சொல்வதற்கு எதற்காக இஞ்சி தின்ன குரங்கைப் போல் முகத்தை வைத்துக் கொள்ள வேண்டும்..? என்னவோ நடந்திருக்கிறது! கேட்டால் சொல்லவா போகிறாள்..?, மூடி மறைப்பதைத் தானே முழு நேரத் தொழிலாக வைத்திருக்கிறார்கள் இருவரும்!

“சரி ப்ரியா.. அப்படியானால் நான் கிளம்புகிறேன்..”எனக் கூறி விடை பெற்று வெளியே வந்தவள்.. தன் வண்டியின் அருகே நின்று கொண்டிருந்த சக்தியைக் கண்டு புருவத்தைச் சுருக்கியபடி சிரிப்புடன் சென்றாள்.

“என்ன சாப்பாட்டு ராமன்..?, வானதி செல்கிறாளா..?, வாசலில் நின்று கொண்டிருக்கிறீர்கள்!”என்று வினவ.. “என்ன நக்கலா..?, உன்னிடம் பேசத் தான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன்..”என்று சீரியசான முகத்துடன் கூறினான்.

இவனுக்கு சுஜியின் விவரம் ஏதும் தெரியுமோ என்று யோசித்த அனு “என்ன பேச வேண்டும்..?”என்று வினவினாள். கையைப் பின்னால் கட்டிக் கொண்டு இரண்டு முறை முன்னும் பின்னும் நடை பயின்றவன் “லட்டு குட்டி.., என்னடா சமையல் இது..?, கண்றாவி! வாயில் வைக்க முடியவில்லை. இப்படி நீ சமைத்தால் மாமா.. 4 நாட்களில் 40கிலோ இழந்து விடுவேனே!, சீக்கிரம் சமையல் கற்றுக் கொள்ளடா தங்கம்.. டிவியில் கூட..?”என்று தொடர்ந்தவனை கீழே கிடந்த மட்டையால் அடித்தவள்..

“இதைப் பேசத் தான் அப்படி முகத்தை வைத்துக் கொண்டீர்களா..?, சரியான சாப்பாட்டு ராமன்.. இட்லி,தோசையைத் தவிர எதுவும் பேசத் தெரியாதா.?”என்று அடித்தவளின் கைப் பற்றித் தடுத்தவன்.. “போடா செல்லக் குட்டி.. மாமாவின் தேவையை நீ புரிந்து கொள்ளவேயில்லை..”என்று சலித்துக் கொண்டான்.

“மாமாவின் தேவை முனியாண்டி விலாஸ் தானே..?, நன்றாகத் தெரியுமே.. நான் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.., வழியை விடுங்கள்..”எனக் கூறி விட்டுத் தன் வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அனு.

DO NOT COPY

அவள் சென்றதும் கோபத்துடன் படுக்கையில் விழுந்த சுஜி.. ஷ்யாம் பேசியதை எண்ணி எரிச்சலானாள். தொல்லை,இம்சை என்னவெல்லாம் சொல்கிறான்..! திமிர் பிடித்தவன்! இவன் சகவாசமே வேண்டாமென்று தலை முழுகி விடலாம் என்று நினைத்தால்.. அனு ரூபத்தில் சகலமும் தொடர்கிறது..

கோபத்தில் முகம் திருப்பியவளின் கண்ணில் அவனிடம் சண்டையிட்டு வாங்கிய பொம்மை பட்டு விட.. அதன் மூக்கைப் பிடித்து ஆட்டி.. "நீ.. நீ என்னை தொல்லையென்கிறாயா..?, நீ தானடா இம்சை.. என்.டி ராமாராவைப் போல் அமுல் பேபி முகத்தை வைத்துக் கொண்டு செய்வதெல்லாம் நம்பியார் வேலை.. பாவி! உன்னை மொத்தமாகப் பழி வாங்குவதற்கும் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.. பார்..?"என்று காதைத் திருகினாள்.

அடுத்து வந்த நாட்கள்.. எந்தவித பாதிப்புமின்றி அமைதியாகக் கழிய.. சுஜியைப் போன்ற ஒரு புயல் பெண்ணின் வாழ்க்கை எப்படி அமைதியாகச் செல்லலாம் என்று விதி தன் அடுத்த அம்பை எய்தது.

அன்று அலுவலகத்தில் மதிய இடைவேளையின் போது.. தன் தோழியுடன் அருகே இருந்த உணவகத்திற்கு வந்திருந்தாள் சுஜி. பாதிச் சாப்பாட்டிலேயே மொபைல் அழைக்க.. யாரென்று ஃபோனை ஆன் செய்து "ஹலோ.."என்றாள். "நான் ஷ்யாம் பேசுகிறேன்.. உன்னிடம் பேச வேண்டும்.. நீ சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஹோட்டலுக்கு எதிரில் உள்ள சாலையில் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.. வா.."என்றான்.

"என்னிடம் பேச என்ன இருக்கிறது..?, நான் எதற்காக வர வேண்டும்..?"என்றவளிடம் "இருக்கிறது.. உனக்கு இங்கே பேசுவது உசிதமில்லையென்றால்.. உன் வீட்டிற்கு வருகிறேன்.. என்ன?, சரிதானா..?" எனக் கேட்க.. கோபத்துடன் "வந்து தொலைக்கிறேன்.."என்று கட் செய்தாள் சுஜி. "இதோ வந்து விடுகிறேன்.."என்று தோழியிடம் கூறி விட்டு ஹோட்டலை விட்டு வெளியே வந்தவள்.. எதிர்ப்புற சாலையில்.. காரின் மீது சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தவனைக் கண்டு போஸைப் பார்.. இதற்கெல்லாம் குறைச்சலே இல்லை.. என்று முணுமுணுத்தபடி அருகே சென்றாள்.

"என்னை எதற்காக வரச் சொன்னீர்கள்..?"என்று எரிச்சலுடன் வினவியவளை உணர்ச்சியற்ற பார்வையால் அழுத்தமாக நோக்கியவன்.. "ம், உன்னை ஒரு நாள் பார்க்காவிட்டால்.. சரியாகத் தூக்கம் வருவதில்லை அதனால் தான்.."எனக் கூற.. என்ன உளறுகிறான் என்று கோபம் வந்தாலும் மனம் படபடவென அடித்துக் கொண்டது சுஜிக்கு.

அவள் தடுமாறுவதைக் கண்டவனுக்கு சிரிப்பு பொங்கியது. "ஏன் சுஜூ.. நான் கூறிய காரணம் நம்பும் படியாக இல்லையா..?"என்றபடி அருகில் வர.. "என்ன..

DO NOT COPY

என்ன பேசுகிறீர்கள் நீங்கள்..?”என்று கார் கதவைப் பற்றியபடி அவள் பின்னே செல்ல..

அவள் செய்கையைக் கண்டு வாய் விட்டு சிரித்தவன் பின் குரலை மாற்றி “கனவில் கூடப் பார்த்து விடக் கூடாது என்று நினைக்கும் உன் முகத்தை.. நேரில் பார்க்க ஆசைப் படுவேனா சுஜூ..?”என்றவனிடம் “பின்னே எதற்காக வரச் சொன்னீர்களாம்..?”என்று வினவினாள் சுஜிப்ரியா.

“ம்.. அனுவின் மிகப் பிரியமான புதிய சினேகிதி சுஜிப்ரியா நீ தான் என்பது.. எனக்கு ஒரு இனிமையான ஆச்சரியம் தான்..”என்றவனை தீப் பார்வை பார்த்தவளைக் கண்டு முறுவலித்தபடியே தொடர்ந்தான் ஷ்யாம்.

“உனக்கும் அதிர்ச்சியாகத் தான் இருந்திருக்கும்..”என்றவனை இடைமறித்து “அழைத்த காரணத்தை தயவு செய்து கூறுகிறீர்களா..?”என்று எரிச்சலுடன் கூறினாள் சுஜி. “கூறுகிறேன்..”என்றவன் சட்டெனக் கடினமுற்று..

“ஸ்ரீதரின் விசயத்தைப் பற்றி இதுவரை நீ அனுவிடம் கூறவில்லையென்று தெரிகிறது.. இனிமேலும் எதுவும் கூறக் கூடாது.. என்ன..?”என்று அதட்ட.. “அவ்வளவு தானே..?, போகட்டுமா..?”என்று செல்லப் பார்த்தவளிடம் “இன்னுமொன்று...”என்றவன் பேண்ட் பாக்கெட்டினுள் இரு கைகளையும் நுழைத்தபடி அவளருகே வந்து..

“அனுவின் தோழி என்ற சாக்கில்.. அடிக்கடி என் வீட்டிற்கு வருவதைக் கட்டாயமாகத் தவிர்த்தாக வேண்டும்.. “என்றான் ஒரு கோணல் பார்வையுடன்..

என்ன என்ன சொல்கிறான் இவன்..?அடிக்கடி இவன் வீட்டிற்கு வரக் கூடாதென்றால்.. அவள் என்ன இவனைச் சந்திக்கவா வரப் போகிறாள்? பெரிய மகாமன்மதன்! பேச்சையையும்,பார்வையும் பார்! கிராதகன்! என்றவள் அவனை நிமிர்ந்து நோக்கி..

“ஆனந்தி விசயத்தில் எங்களுக்குச் சாதகமாக நடந்து கொண்டீர்கள் என்ற ஒரே காரணத்துக்காகத் தான் உங்களிடம் இவ்வளவு மரியாதையாகப் பேசுகிறேன் ம்ர்.!”என்றவள் முடிக்கும் முன்.. “மரியாதையாக..?, நீ..?”என்றவன் தொடர்ந்து “இல்லாத சேட்டையெல்லாம் செய்து விட்டு பேச்சைப் பார்..”என்றவனை முறைத்தபடியே நடந்தவள்.. கல் தடுக்கித் தடுமாறிக் கீழே விழப் பார்க்க..

“ஏய்..”என்றபடி அவள் கைப் பற்றி நிறுத்தியவன் “பார்த்து நடக்கத் தெரியாதா..?”என்று கடிந்து கொள்ள.. அவளோ.. “கையை விடுங்கள்..”என்றபடி உறுவிக் கொள்ள முயல.. “ஏன்..?, கீழே விழப் பார்த்தவளைப் பிடித்தது தவறா..?, வேண்டுமென்றே உன் கையைப் பிடித்திழுத்தது போல்.. முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்..?”என்று வாதம் செய்யத் துவங்கினான்.

DO NOT COPY

அவன் இன்னும் பற்றிய கையை விடாததைக் கண்டு "தவறில்லை தான்.. கையை விடுங்கள் ஷ்யாம்.." என்று கெஞ்சியபடியே.. கண்ணை மறைத்த கூந்தலை ஒதுக்கியவளின் முகத்தை வெகு அருகில் கண்ட ஷ்யாம் கொஞ்சம் தடுமாறித் தான் போனான்.

நேர்த்தியாகத் திருத்தப்பட்ட புருவங்களுடன் மையிடப் பட்டிருந்த அந்தக் கண்களுக்கு காந்த சக்தி இருப்பதாகவே தோன்றியது அவனுக்கு. இடது புருவத்தின் ஓரத்தில் கடுகளவில் வாகாக அமர்ந்திருந்த அந்த அழகு மச்சத்தைத் தொட எத்தனித்து கைகளை உயர்த்தியவனை "ஷ்யாம்...."என்ற சுஜியின் குரல் நடப்பிற்குக் கொண்டு வர அவசரமாக அவளை விலக்கியவன்..

அவள் முகம் பார்க்காமல் திரும்பி நின்று "சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்.."என்றபடி காருக்குச் சென்று கதவைச் சாத்தினான். இவனுக்காகவே ஊரில் இருக்கும் பெண்கள் அனைவரும் ஏங்கிக் கொண்டிருப்பதைப் போல்... இந்த சீன் சின்னப்பா அடங்கவே மாட்டான் போலும்! இவனாயிற்று! இவன் குடும்பமாயிற்று! எப்படியோ ஒழியட்டும்! என்று புலம்பியபடி அலுவலகத்திற்குச் சென்றாள் சுஜி.

சுஜியும்,ஷ்யாமும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு விட்ட ஸ்ரீதரின் நண்பன் ஒருவன் அவசரமாக அவனுக்கு ஃபோன் செய்து தெரிவிக்க.. அடுத்த அரை மணி நேரத்தில் நண்பனின் முன்பு அமர்ந்திருந்தான் ஸ்ரீதர்.

"என்ன..?, என்னடா சொல்கிறாய்..?, என் அண்ணன் சுஜிப்ரியாவைச் சந்தித்தானா..?"என்று ஆச்சரியமாக வினவ.. "ஆமாம்டா.., அவள் கம்பெனியில் தானே நானும் வேலை பார்க்கிறேன்..?, மதிய சாப்பாட்டுக்கு வெளியே வந்த போது தான்.. அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.. ஆனால் உன் அண்ணன் அவளிடம் கோபமாகப் பேசியதைப் போல் தோன்றியது.."எனக் கூற..

"கோபமாகப் பேசினானோ.. பாசமாகப் பேசினானோ!,எனக்கு அது தேவையில்லாத ஒன்று.. மச்சி.. நீ எனக்கு ஒரு உதவி செய்தாக வேண்டும்.. இனி அவர்களிருவரை எங்கே பார்க்க நேர்ந்தாலும்.. யோசிக்காமல் உன் செல்லில் ஃபோட்டோ எடுத்து விடு.. மறக்காதே.."

"அவர்களிருவரையும் பழி வாங்க இது தான் நல்ல வாய்ப்பு.. விட்டு விடக் கூடாது.. இன்னும் 10நாளில் அவன் என்னை நாடு கடத்தி விடுவான். அதற்குள் நான் நினைத்த காரியத்தை சாதித்தாக வேண்டும்.. மறந்து விடாதே.. இருவரையும் ஜோடியாக எங்கே பார்க்க நேர்ந்தாலும் புகைப்படமெடுத்து எனக்கு அனுப்பி வைக்க வேண்டும்.."எனக் கூற "சரிடா.. நிச்சயம்.."என்றபடி அவன் விடை பெற்றான்.

DO NOT COPY

ஷ்யாம் பிரபு! உன் வாழ்க்கையும் ஆட்டம் காணப் போகிறது..! பார்..! என்றபடி பழி வாங்கிவிடமென்ற வெறியுடன் அமர்ந்திருந்தான் ஸ்ரீதர்.



# அத்தியாயம் – 11



**பாலும் கசந்ததடி - சகியே!**

**படுக்கை நொந்ததடி**

**கோலக் கிளிமொழியும் செவியில்**

**குத்தல் எடுத்ததடி....!**

**உணவு செல்லவில்லை - சகியே!**

**உறக்கம் கொள்ளவில்லை**

**மனம் விரும்பவில்லை - சகியே**

**மலர் பிடிக்கவில்லை!**

"**என்** சந்தோசத்தை, எனது விருப்பத்தை அறிந்து கொள்ள நினைக்கும் ஒரு உயிர் கூட இந்த வீட்டில் இல்லையா?, எப்படி எதுவுமே நடவாதது போல் உங்கள் அனைவரால் எப்போதும் போல் வலம் வர முடிகிறது..?, இங்கே நான் என் காதலியைக் காண முடியாமல் பசலை நோயால் வாடுவது உங்களுக்குப் புரியவில்லையா..?" என்றபடி நடு வீட்டில் அமர்ந்து குரலை உயர்த்தி வசனம் பேசிக் கொண்டிருந்தான் சக்தி.

அவனது பேச்சைக் கேட்டு எரிச்சலுற்ற சுஜி "டேய் தடியா..?, என்னடா உன் விருப்பத்தை நாங்கள் புரிந்து கொள்ளவில்லை..?, காலை டி∴பனுக்கு நீ கேட்ட பனியாரத்தைத் தான் அம்மா செய்து கொடுத்தார்களே..! இன்னும் என்னடா வேண்டும் உனக்கு..?"என்று அதட்ட..

DO NOT COPY

“சுஜி.. உன் தம்பி வாடுவது பசலை நோயால்.. காதல் நோய்..”என்று வள்ளி கூற.. “உனக்கு ஏன்டா பசலை நோய் வரவேண்டும்..?, நேற்று கூடப் பார்த்தேனே.. ஆ.ஃபிஸில் வத்சலாவுடன் டீ குடிக்க வந்தாயே.., காலையில் வானதியைப் பார்த்தபடி தானே அலுவலகம் செல்கிறாய்..?, பிறகென்னடா..?, உன் இரண்டு காதலிகளையும் தினமும் தரிசிக்கும் உனக்கு ஏண்டா பசலை நோய்.. ?”என்று வினவ..

“அம்மா.. இவளை தயவு செய்து வாயை மூடச் சொல்.. வானதியின் வீடிருக்கும் பக்கம் கூட இப்போதெல்லாம் நான் செல்வதேயில்லை.. வத்சலாவிற்கு கல்யாணம் முடிவாகி விட்டது.. அவள் எனக்கு தங்கை மாதிரி.. “என்றவனிடம் “பின்னே யாரைப் பார்க்காமல் உனக்கு பசலை நோய் வந்து விட்டது..?”என்று சுஜி வினவியதற்கு..

“என் ஆசைக் குயில்.. என் அழகுமயில்.. என் உயிரில் கலந்து உள்ளத்தில் நிறைந்து விட்ட அனுதரணி!”என்றவன் இருவரையும் பார்த்து விட்டு மேலும் தொடர்ந்தான். “என் லட்டு குட்டி நம் வீட்டிற்கு வந்து 2 நாட்கள்.. முழுதாக 2 நாட்களாகி விட்டது.. யோகா சென்டருக்கும் வரவில்லை.. ஃபோன் செய்து பார்த்தால்.. அதுவும் எடுக்கப் படவில்லை.. எனக்கு விவரம் தெரிந்தாக வேண்டும்.. அவளைக் காணாமல் நான் தவிக்கும் தவிப்பை உணர்த்தியாக வேண்டும்..”என்று தன் வசனத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தான் சக்தி.

ஆம்! அன்று அவளது அண்ணன் அழைப்பதாகக் கூறி விடை பெற்றுச் சென்றவள்.. அதன்பின் 2 நாட்களாக வீட்டிற்கும் வரவில்லை, யோகா சென்டருக்கும் வரவில்லை.. அவள் அண்ணன் போக வேண்டாமென்றூ தடுத்திருப்பன் என்று எண்ணினாலும் ஒரு புறம்.. தடுக்க வேண்டுமென்றால்.. இவளைக் கண்ட அன்றே தடுத்திருக்கலாமே! அதன்பின் நன்றாகத் தானே வந்து கொண்டிருந்தாள்?, என்னவாயிற்று.. என்று சுஜியும் 2 நாட்களாக யோசித்துக் கொண்டு தான் இருக்கிறாள்.

அவள் அண்ணனைப் போல் அல்லாமல் பழகுவதற்கு முக இனிமையானவள் அனு.. சுஜி,சுஜி என்றபடி தன்னுடனே திரிந்து கொண்டிருப்பவள் அருகில் இல்லாதது சுஜிக்கும் வருத்தமாகத் தான் இருந்தது.. ஆனால் அதையெல்லாம் விட அனு வராத இந்த 2 நாட்களும் இந்த சக்தி செய்யும் அட்டகாசத்தைத் தான் வீட்டில் ஒருவராலும் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

“டேய் தம்பிப்பையா.. நானும் அவளது மொபைலுக்கு அழைத்துப் பார்த்து விட்டேன்.. எடுக்கப்படவில்லை.. என்னை என்ன செய்யச் சொல்கிறாய்..?”என்றவளை “மீண்டும் முயற்சித்துப் பார்..”என்று சக்தி கூற.. அவனை முறைத்தபடியே.. எண்களை அழுத்தினாள்..

DO NOT COPY

ஆச்சரியமாக இந்த முறை அழைப்பு எடுக்கப் பட்டு விட.. சந்தோசத்துடம் “அனு..” என்றவளுக்குப் பதிலாக எதிர்முனையில் சீதாவின் குரல் ஒலித்தது. அனுவிற்கு இரண்டு நாட்களாக பயங்கரக் காய்ச்சல் என்றும் அதனால் தான்.. அவளால் வரமுடியவில்லை என்றவர்.. சுஜியை வீட்டிற்குக் கட்டாயம் வர வேண்டுமென்றூ அழைப்பு விடுத்தார்.

அவரிடம் பேசி முடித்து விட்டு வெளியே வந்த சுஜியிடம் “அனுவிற்கு என்ன..” என்று விசாரித்த சக்தி விவரம் அறிந்து “என் பஞ்சு மிட்டாய்க்குக் காய்ச்சலா..?, சுஜி.. உடனே அவளைப் பார்த்தாக வேண்டும்.. வா..வா..”என்று பரபரக்க.. தம்பியை அதட்டி.. அடக்கிய சுஜி.. அவள் வீட்டிற்கு எப்படிச் செல்வதென்று யோசனையில் ஆழ்ந்தாள்.

அனுவின் நட்பைச் சாக்காக வைத்து என் வீட்டுப் பக்கம் தலை நீட்டாதே என்று அவன் அவ்வளவு ஏளனமாகக் கூறி விட்ட பின்பும் எப்படி அவன் வீட்டுப் படியேறுவது..?, ஆனால் அனுவையும் பார்த்தாக வேண்டும்.. என்றெண்ணியவள்.. அந்த ஜேம்ஸ்பாண்ட் என்ன கூறினாலும் சரி! அனுவை நிச்சயம் பார்த்தாக வேண்டும் என்று முடிவு செய்து அவள் வீட்டிற்குக் கிளம்பினாள்.

வண்டியை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரனவளின் அருகே வந்து தன் வண்டியை நிறுத்திய சக்தி “ஏய்.. பப்ளிமாஸ்.. எதற்காக 2 வண்டி..?, வா என் வண்டியிலேயே செல்லலாம்”எனக் கூற..

அடேய்! அவள் அண்ணன் மல்யுத்த வீரன் ஷ்யாம் பிரபு.. என்னையே கழுத்தைப் பிடித்து வெளியே துரத்தி விடுவானோ.. என்கிற பீதியுடன் நான் சென்று கொண்டிருக்கிறேன்.. இந்த லட்சணத்தில் நீ வேறா..?”என்று நினைத்து அவனை முறைத்தவள்..

“சக்தி.. நீ வானதியிடம் விளக்குமாற்றால் அடி வாங்கியும் கூட உன் சேட்டையைக் குறைத்துக் கொள்ளவே மாட்டேன் என்கிறாயே..?, அனுவின் வீட்டிற்கு நான் உன்னை அழைத்துச் செல்ல வேண்டுமா..?, அவள் குணமாகி வந்த பின் பார்த்துக் கொள்.. இப்போது வழியை விடு..”என்று கூற.. “சரி..”என்று தொங்கிய முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தவன் மீண்டும் தமக்கையிடம் வந்து..

“சுஜி.. இதையேனும் அவளிடம் கொடுத்து விடு..”எனக் கூறி ஒரு பூங்கொத்தை நீட்டினான். சிரித்தபடி “சரி டா.. கொடுத்து விடுகிறேன்..”எனக் கூறிப் புறப்பட்டாள்.

DO NOT COPY

அனுவின் வீட்டு வாசலின் முன்பு வண்டியை நிறுத்தி விட்டு தயக்கத்துடன் உள்ளே நுழைந்தவளை வரவேற்ற வேலையாள்.. “நீங்க உட்காருங்கம்மா.. சீதாமாவும்,பாப்பாவும் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க.. இப்போ வந்துருவாங்க.. உட்காருங்க..”என்று அமரச் செய்து விட்டு வெளியே சென்று விட்டான்.

நல்ல வேளை! அந்த அலெக்ஸாண்டர் இல்லை என்று நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றியவள்.. டீபாயின் மீது கிடந்த புத்தகத்தை எடுத்துப் புரட்டத் துவங்கினாள். எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ.. திடீரெனக் காலடி ஓசை கேட்டு அனுவாக இருக்குமோ என்றபடி நிமிர்ந்தவள் எதிரே வந்தவனைக் கண்டு திகைப்புற்றாள்.

என்ன கூறி அவமானப் படுத்தப் போகிறானோ என்று அவள் அசைவற்று அமர்ந்திருக்க.. தனது வழக்கமான வேக நடையுடன் உள்ளே நுழைந்த ஷ்யாம் அவள் ஒருத்தி அங்கு அமர்ந்திருப்பதைக் கண்டு கொள்ளாமல்.. அவளுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்து..

சட்டைக் காலர் பட்டனைக் கழட்டி.. தலை முடியைப் பின்னுக்குக் கோதி.. பெருமூச்செரிந்தபடியே கண்மூடி சாய்ந்தான்.

அவனது வினோதமான செய்கைகளைப் புரியாத பாவனையுடன் பேந்த பேந்த விழித்தபடி பார்த்துக் கொண்டிருந்த சுஜி.. இவன் ஏதோ கோபத்தில் இருக்கிறான்.. அதனால் தான் இப்படி நடந்து கொள்கிறான்.. நிச்சயம் அவனது இந்தக் கோபத்தின் காரணம் தானாகத் தான் இருக்க முடியும் என்று முடிவு செய்து மெதுவாக எழுந்தவள்.

“அ..அனுவிற்குக் காய்ச்சல் என்று தான் உங்கள் வீட்டிற்கு வந்தேன்.. அவள் 2 நாளாக சென்டருக்கு வரவில்லை.. ஆன்ட்டி தான் அவளுக்குக் காய்ச்சல்.. என்றார்கள்.. என்னை இங்கே வரவழைத்ததும் அவர் தான்.. வ..வந்து., சாரி..”என்ற படி தயக்கத்துடன் நிற்கவும்..

இப்போது உன்னை என்ன சொல்லிவிட்டேன் எங்கிற தினுசில் அவளை நோக்கியவனைக் கண்டு “இ..இல்லை.. கோபமாகத் தெரிகிறீர்களே..?, கட்டாயம் கோபத்தின் காரணம் நானாகத் தான் இருக்க முடியும்.. நான் வருகிறேன்..”என்றபடி நடக்க முற்பட்டவளை..

“ஏய்..ஏய்..”என்று தடுத்து “காரணம் அதுவல்ல..”என்று எரிச்சலுடன் மொழிந்தவன்.. “வேலை டென்ஷன்..”என்றபடி “வேலு…”என்று சமையல்காரனை அழைத்தான். உள்ளே இருந்து எந்த பதிலும் வராததைக்

DO NOT COPY

கண்டு மறுபடியும் குரல் கொடுக்க முற்பட்டவனைத் தடுத்து அவசரமாக "வேலு அண்ணா.. வெளியே சென்று விட்டார்.."என்றுகூறினாள் சுஜி.

அவளது பதிலைக் கண்டு "ஓ!"என்றவன் தொடர்ந்து "உன்னால் முடிந்தால் ஒரு உதவி செய்கிறாயா..?"எனக் கேட்க.. என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தவளிடம் "பயங்கரமான தலைவலி.. ஒரு கப் காஃபி போட்டுத் தருகிறாயா....?"என்று வினவினான்.

ஆச்சரியமாக அவனை விழி விரித்து நோக்கிய சுஜி.. இவன் என்ன மாதிரி மனிதன்?, என் வீட்டிற்குள் அனாவசியமாக நுழையாதே எனக் கூறி அன்று அவமானப் படுத்தியதென்ன..?, இன்று காஃபி போட்டுத் தருகிறாயா.. என்று வக்கணையாகக் கேட்பதென்ன,,?"என்று யோசித்தபடி அவள் அசைவற்று அமர்ந்திருக்க.... அவனோ தொடர்ந்து "முடியாதென்றால் வேண்டாம்.. பரவாயில்லை.."எனக் கூறினான்.

அவனை நன்றாக முறைத்தவாறு நிமிர்ந்தவள் "உங்கள் வீட்டில் எலி மருந்து, பூச்சி மருந்து ஏதேனும் எங்கே இருக்கிறது என்று தெரியுமா..?"என்று கேட்டாள். "எதற்கு..?"என்றவனிடம் "ம்.. காஃபியில் கலந்து உங்களுக்குக் கொடுத்து விடத் தான்.."எனக் கூறி விட்டு அவனது பதிலுக்குக் காத்திராமல் கிச்சனுக்குள் நுழைந்தாள்.

காஃபியுடன் அவனருகே வந்தவள்.. கண் மூடி சாய்ந்திருந்தவனை நோக்க.. செதுக்கினாற் போன்ற நாசியுடனும்,அலை அலையான கேசத்துடனும் கம்பீரமாகக் காணப் பட்டவனை இது நாள் வரையில்லாது,,, புதுவிதமாகப் பார்த்தவள்.. சட்டென் சுதாரித்து "காஃபி.."என்றாள்.

"எலிமருந்து போடவில்லையா..?"என்றப்டியே காஃபியைப் பருகி முடித்தவன் "சுமாராக உள்ளது.."எனக் கூறி கப்பை அவள் புறம் நகர்த்தியவனை அவள் கோபத்துடன் முறைக்க.. அவனும் சற்றும் சலிக்காமல் அவளையே நோக்கினான்.

"இதற்கெல்லாம் நிச்சயம் ஒரு நாள் அனுபவிப்பீர்கள்.. எனக்கு மட்டும் வாய்ப்பு கிடைத்தால்.. உங்கள் தலையில் அம்மிக் கல்லைப் போட்டேனும் கொன்று விடுவேன்.."என்று ஆத்திரமாகக் கூறவும் பக்கென்று சிரித்து விட்டான் அவன்.

"அப்படியொரு வாய்ப்பு அமையும் போது.. அம்மிக் கல்லைப் போட்டுக் கொள்ளலாம்.. காஃபிக்கு நன்றி சுஜூ.."என்றபடி எழுந்து சென்று விட்டான் அவன். சிரிப்பைப் பார்! பெரிய புன்னகை மன்னன்! ஒரு பெண்ணிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றே தெரியவில்லை! இவனெல்லாம் பிசினெஸ்மேன்-ஆம்! இவனைப் பெருமையாகப் பேசிக் கொண்டு திரியும்

தங்கை! அதற்கு ஒத்து ஊதும் பெற்றோர்! என்று பொருமிக் கொண்டிருந்தவளை மேலும் சோதிக்காமல் அனுவும்,சீதாவும் வந்து விட.. அவளை நலம் விசாரித்து விட்டு சக்தி கொடுத்த பூங்கொத்தையும் அவளிடம் நீட்டி விட்டு வீடு வந்து சேர்ந்தாள் சுஜிப்ரியா.

வீட்டிற்குள் நுழைந்ததும் "அனு எப்படி இருக்கிறாள்..."என்று நச்சரித்த சக்தியிடம் அவள் நன்றாக இருப்பதைத் தெரிவித்து விட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

அவள் சென்றதும் அனுவிற்கு ஃபோன் செய்த சக்தி "லட்டு.. எப்படியிருக்கிறாய்..?, உனக்கு காய்ச்சல் என்றதும் மாமா சாப்பிடவே இல்லைடா.. தெரியுமா உனக்கு..?"எனக் கேட்க.. எதிர் முனையில் அனு விழுந்து விழுந்து சிரித்தாள்.

"நீங்கள் சாப்பிடவில்லையா..?, அதிசயம் தான்.. எனக்கு காய்ச்சல் சரியாகி விட்டது.. நாளை சென்டருக்கு வந்து விடுவேன்.."என்றவளிடம் "அப்படியா..?, சீக்கிரம் வந்து விடு அனுமா.. பயங்கர பசியாக உள்ளது..நான் போய் தோசை சாப்பிடுகிறேன்.."எனக் கூற.. "அய்யோ பாவம்! சாப்பிடுங்கள்..!"எனக் கூறி சிரித்தபடியே ஃபோனைக் கட் செய்தாள்.

மறுநாள் அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகி வெளியே வந்த சுஜிக்கு அப்போது தான் இரவே வண்டி ரிப்பேராகி விட்டது நினைவிற்கு வந்தது. "ஊப்ஸ்"என்றபடி தலையைத் தட்டிக் கொண்டவள்.. இப்போது என்ன செய்வது! சக்தியையும் அழைக்க முடியாது.. நைட் ஷிஃப்ட் முடிந்து இப்போது தான் உறங்கிக் கொண்டிருக்கிறான். எழுப்பினால் குதறிக் கடித்து விடுவான். அப்பாவும் அலுவலகம் சென்றாயிற்று. பஸ்ஸில் சென்று விட வேண்டியது தான் என முடிவெடுத்துக் கிளம்பினாள்.

காலை நேரத்தில் கூட்டமாகச் சென்று கொண்டிருந்த பேருந்துகளைக் காண்கையிலேயே தலை சுற்றியது சுஜிக்கு. வேறு வழியில்லை ஆண்டவா..! என்றபடி கிடைத்த பேருந்தில் ஏறி விட்டாள். கூட்ட நெரிசலில் அடிதடிக்கிடையில் இடி வாங்கி எரிச்சலுடன் அருகே இருந்த கம்பியைப் பற்றி நின்று கொண்டிருந்தாள்.

பேருந்து நகரத் தொடங்கிய பின்பு தான் சுஜியினால் சீராக மூச்சு விட முடிந்தது. அவஸ்தையுடன் கழிந்த அடுத்த பத்து நிமிடத்தையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி கழித்தவள்.. அருகே நின்று கொண்டிருந்த பெண் பயத்துடன் நெளிவதைக் கண்டாள்.

DO NOT COPY

என்னவாயிற்று இவளுக்கு..?, ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறாள்.. என்று நினைத்து திரும்பிப் பார்க்க.. அங்கே எவனோ ஒரு காவாலி அந்தப் பெண்ணிடம் சில்மிஷம் செய்த படி கோணல் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான்.

பொறுக்கி! ஊர் மேய்வதற்கென்றே திரிகிற காவாலி நாய்கள்! அக்கா,தங்கச்சிகளைக் கூட உரசக் கூசாத.. தெரு நாய்கள்! கோபத்துடன் அவனை முறைத்து விட்டு அந்தப் பெண்ணைத் தன் அருகே நிறுத்திக் கொண்டாள்.

மறுபடியும் அந்தப் புண்ணாக்குப் பரதேசி அந்தப் பெண்ணை நெருங்கி நின்று உரசத் துவங்க அந்தப் பெண் இதோ வந்து விடுவேன் என்று கண்ணீர் குளம் கட்டிய கண்களுடன் நின்று கொண்டிருந்தாள்.

ஆத்திரம் தலைக்கேற.. கோபத்துடன் திரும்பிய சுஜி "பொறுக்கி நாயே.."என்றபடி அவன் சட்டையைப் பற்றினாள். "உனக்கு உரச வேண்டுமென்றால்.. உன் அம்மாவிடம் செல்ல வேண்டியது தானே.. ஊரில் இருக்கும் பெண்கள ஏன்டா தொந்தரவு செய்கிறாய்.. நாயே.. நாயே.. நீயெல்லாம்... பூமிக்கு பாரமாக ஏன் உயிருடன் இருக்கிறாய்..?,"என்று சரமாரியாகத் தாக்கத் துவங்க..

"பஸ்ஸை நிறுத்துங்கள்.. தினமும் இதே வேலையாய் போயிற்று.."என்று எரிச்சலுடன் புலம்பியபடி கண்டக்டர் வண்டியை நிறுத்தச் சொல்லி விட்டு கீழே இறங்கினார். பஸ்ஸில் இருந்த அனைவரும் சலசலத்தபடியே அவனை அடித்துத் துவைத்து வெளியே இறக்க.. அவனோ ஆங்காரத்துடன் சுஜியிடம் பாய்ந்தான்.

"என்னவோ உன்னை உரசியது போல் துள்ளுகிறாய்!, என்னடி..?, இனி ஒரு முறை இந்த பஸ்ஸில் நீ எப்படி வந்து போகிறாய் என்று நானும் பார்க்கிறேன்.. அவளை உரசினால்.. நீ தவ்வுகிறாய்..! ஓ! உன்னை உரசவில்லை என்கிற வருத்தமா..?"என்று அருகே வர..

"என்னடா சொன்னாய்..?, ராஸ்கல்.. உன்னை உயிருடன் விடுவதே தவறு.. "என்று கால் செருப்பைக் கழட்டி அவன் மீது எறிந்து பளாரென்று அறைந்தாள். மிதமிஞ்சிய கோபத்தில் அவனைப் புரட்டிப் போட்டு அடித்துக் கொண்டிருந்தவளை சுற்றியிருப்போர் அனைவரும் வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருக்க..

காரில் அலுவலகம் சென்று கொண்டிருந்த ஷ்யாம் இந்தக் காட்சியைக் கண்டு பதறி வண்டியை நிறுத்தி விட்டு அவளருகே ஓடினான். "சுஜூ.. சுஜூ.. ஸ்டாப்

DO NOT COPY

இட்..”என்று அவள் தோளைப் பற்றித் தன் புறம் இழுக்க முயன்ற ஷ்யாமை நிமிர்ந்து பார்த்த சுஜி.. “விடுங்கள் ஷ்யாம்.. இவன்..இவனை உயிருடன் விடக் கூடாது..”என்று மீண்டும் பாய.. “சுஜூ.. வேண்டாம்.. போகலாம்.. வா..”என்று அவளை இழுத்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான்.

வெறி அடங்காமல்.. மேல் மூச்சு.. கீழ் மூச்சு வாங்க.. ஆத்திரத்துடன் நின்று கொண்டிருப்பவளை.. கோபத்துடன் நோக்கிய ஷ்யாம்.. “ஏய்.. உனக்கென்ன ஜான்சி ராணி என்று நினைப்பா..?, நடு ரோட்டில் அவன் சட்டையப் பிடித்து சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாய்..?, அறிவில்லை..?, நாளை அவனால் ஏதேனும் பிரச்சனை என்றால் என்ன செய்வாய்..?, முட்டாள்!”எனக் கூற..

“அதற்காக...?, இதையெல்லாம் கண்டும் காணாமல் நிற்கச் சொல்கிறீர்களா..?, பொறுக்கி நாய்.. இப்படியெல்லாம் கேள்வி பட்டாலே என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.. இதில் என் கண் முன்னே அந்தப் பெண்ணிடம் அவன்.. பாஸ்டர்ட்..”என்று பல்லைக் கடித்தவள்..

“பாவம் அந்தப் பெண்..!, எதுவும் செய்ய முடியாமல் அழுகையுடன் நின்று கொண்டிருக்கிறாள்.. கேள்வி கேட்ட என்னிடம்.. உன்னை உரசாதது தான் உனக்கு கோபமா என்று அசிங்கமாகக் கேட்கிறான்..” என்றவளுக்கு ஆத்திரத்தில் கண்ணோரம் சுருங்கி அழுகை எட்டிப் பார்க்க..

தன் கரத்தைப் பற்றியிருந்த அவன் இடது கையை இறுகப் பற்றி அவன் தோளில் சாய்ந்து விசும்பினாள். அவளது கோபத்தில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்ட ஷ்யாமும் “சுஜூ..”என்றபடி அவள் தோள் பற்றி.. “இங்கே பார்... சுஜூ.. என்னைப் பார்.. இதற்கு ஆத்திரப்பட்டு அழுதால் எப்படி..?, தினமும் உன்னைப் போல் பலர்.. இந்த மாதிரி இம்சைகளைச் சகித்துக் கொண்டு தான் சென்று வருகிறார்கள்.. இதையெல்லாம் மாற்ற முடியாது சுஜூ.. உன்னைப் போன்ற யாரேனும் அவ்வப்போது தட்டிக் கேட்டால் தான் உண்டு.. அழாதே..”என்று சமாதானப் படுத்த..

“ம்,ம்..”என்று முனங்கியபடியே.. அவன் தோளில் முகத்தை அழுத்தி கண்ணீரைத் துடைத்தவள்.. சட்டெனத் தோன்றிய உணர்வுடன் அவனை விட்டு விலகினாள்.. “தே.. தேங்க்ஸ்.. நான் செல்கிறேன்..”என்றபடி நடந்து சென்றவளை.. “நில் சுஜூ..”என்று அவள் கை பற்றி நிறுத்தியவன்..

“இன்னொரு முறை தனியே சென்று பிரச்சனையை இழுத்துக் கொள்ளாதே தாயே.. நானே உன்னை அலுவலகத்தில் டிராப் செய்கிறேன்.. தயவு செய்து என்னுடன் வா..”என்று அழைத்துச் சென்றான்.

DO NOT COPY

இருவரும் சேர்த்து திரியும் நிகழ்விற்காகவேக் காத்துக் கொண்டிருந்த ஸ்ரீதரின் நண்பன் குமார்.. சுஜி.. ஷ்யாமின் தோள் சாய்ந்ததையும், அவன் அவளது கை பற்றியதையும் படபடவென தனது செல்ஃபோன் கேமராவில் க்ளிக்கித் தள்ளி விட்டான்.

எடுத்த ஃபோட்டோக்கள் அனைத்தையும் உடனடியாகத் தன் நண்பனுக்கு அனுப்பி வைத்தான். தன் செல்லுக்கு வந்து சேர்ந்த புகைப்படங்களைக் கண்ட ஸ்ரீதருக்கு மகிழ்ச்சி பொங்கியது.. இதை வைத்தே ஒரு நாடகம் நடத்துகிறேன் என்று கறுவிக் கொண்டான்.



# அத்தியாயம் – 12



**தேனை மறந்து இருக்கும் வண்டும் – ஒளிச்**

**சிறப்பை மறந்துவிட்ட பூவும்**

**வானை மறந்து இருக்கும் பயிரும் – இந்த**

**வையம் முழுதும் இல்லை தோழி!**

**அ**ந்த வாரக் கடைசியில் சுஜி ஆவலுடன் எதிர்பார்த்த அவளுடைய செல்ல சரவணன் மாமா வீட்டிற்கு வருகை தந்திருந்தார். "மாமா.."என்று ஓடி வந்து கட்டிக் கொண்டவளை "எப்படி இருக்கிறாய் டார்லிங்..?"என்றவரிடம் நன்றாக முறுவலித்து "நான் நன்றாக இருக்கிறேன் டார்லிங்.."எனக் கூற.. சிரிப்புடன் இருவரையும் நோக்கிய சக்தி..

"ஏன் மாமா..?, இன்னுமா அவளை நீங்கள் டார்லிங் என்றழைப்பதை விடவில்லை..?, அருமையான அத்தை கிடைத்த பின்பும் இவளைப் போய் டார்லிங் என்று அழைக்கிறீர்கள்..?"என்றான். "டேய்.. பிறந்த போது ரோஜாவைப் போன்ற மென்மையுடன் என்னைப் பார்த்து பொக்கை வாயுடன் சிரித்தவள் என் ராஜாத்தி.. எப்போதும் அவள் தான் என் டார்லிங்.. உனக்கென்னடா..?"எனக் கேட்க..

அவரை உபசரித்து கா∴பியை நீட்டிய வள்ளி "ஆமாம்.. பிறந்ததிலிருந்து அவளைச் செல்லம் கொடுத்து கெடுத்து வைத்தது நீ தாண்டா.., உன் குசும்பெல்லாம் அவளுக்கும் இருக்கிறது...."என்று சலித்துக் கொள்ள.. "நீ சிங்கம்டா..,"என்று அவள் தோள் தட்டிக் கொடுத்தார் சரவணன்.

"நான் Mrs.கோமுவின் வார்த்தைக்கெல்லாம் பயப்படுவதில்லை டார்லிங்.. இந்த சக்தி பையன் தான் அவ்வப்போது என் விசயத்தில் குறுக்கிடுகிறான்.." எனக்

DO NOT COPY

கூற.. அதற்கு சக்தி “ஆமாம்.. செய்வதெல்லாம் உருப்படியில்லாத வேலை.. இதில் அவரை வேறு ஜோடி சேர்க்கிறாயா..?”எனக் கேட்க...

“டேய்.. அவள் நம் வீட்டில் இருக்கும் வரை தானே டா.. இந்த ஆட்டமெல்லாம்.. கல்யாணமாகி வேறொருவரின் வீட்டிற்குச் செல்லப் போகிறாள்.. அக்காவிடம் கோபித்துக் கொள்ளாதேடா..”என்றார் சரவணன். “யார் அந்த துரதிஷ்டசாலி என்று தான் தெரியவில்லை..”என்று சக்தி எழுந்து சென்று விட..

சரவணனின் பேச்சைக் கேட்டு சிரித்த சுஜி “ஹை,ஹை எனக்குக் கல்யாணமா மாமா..?, வாழ்க்கை ஒரு சுவாரசியமே இல்லாமல்.. டல்லாகச் செல்கிறதே என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன்.. கல்யாணம் த்ரில்லான விசயம் தான்.. இல்லையா டார்லிங்..?”என்று தனக்கே உரித்தான கேலியுடன் கேட்க..

“அப்பாடா..!”என்று நிம்மதிப் பெரு மூச்சை வெளியிட்ட சரவணன்.. “நல்ல வேளை பாப்பா.. எங்கே உன்னை திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க நான் பாடு பட வேண்டுமோ என்று எண்ணியிருந்தேன்.. நீ சுலபமாகச் சம்மதித்து விட்டது எனக்கு மகிழ்ச்சி தான்.. மாப்பிள்ளைப் பையனை இப்போது வரச் சொல்லியிருக்கிறேன்.. நீ எப்படியும் பெண் பார்க்கும் படலத்திற்கெல்லாம் சம்மதிக்க மாட்டாய் என்று தான் இப்படி ஒரு முடிவு..”என்று தயங்கிய படியே கூறி முடித்தார்.

“ஓ!”என்று புருவம் உயர்த்திய சுஜி “இவ்வளவு ஏற்பாடு நடந்து விட்டதா..?, அம்மா.அப்பாவிற்கு எல்லாம் தெரியுமா..?, என்னிடம் எதையுமே கூறவில்லை டாடி..”என்று தந்தையிடம் வினவியவள்.. மாமனிடம் திரும்பி “எனக்கு ஓகே தான் மாமா.. எப்போ வருகிறார் மாப்பிள்ளை சார்..?”எனக் கேட்க..

“வந்து கொண்டே இருக்கிறான் பாப்பா.. அவனும்,அவன் அப்பாவும்..”என்றவர் அக்கா கணவரிடம் திரும்பி “மாமா... நான் ஏற்கனவே தெரிவித்தது போல்.. பையன் கிரானைட் பிஸினெஸ் செய்கிறான்.. வளமான குடும்பம்.. சுஜியின் எதிர்காலம் நிச்சயம் நன்றாக அமையும்..”எனக் கூற..

அவர் கூறுவதைக் கேட்டபடியே அருகே வந்த சக்தி “அப்படியானால் நிஜமாகவே இந்த வாலுக்கு கல்யாணமா மாமா..?, இவள் சென்று விட்டால் பாதி தொல்லை குறைந்து விடும் என்றாலும்.. எனக்கு மிகவும் போர் அடிக்குமே..”என்று யோசித்தவன் பின் “மாமா.. பேசாமல் சுஜியின் திருமணத்தோடு சேர்த்து என் திருமணத்தையும் முடித்து விடுங்களேன்.. எதற்காக இந்தச் சின்னப் பையனின் மனதை வருத்தப் படுத்த வேண்டும்..? ம்?, எப்படி என் ஐடியா..?”எனக் கேட்டான்.

DO NOT COPY

“எப்படி பிட் போடுகிறான் பார்த்தீர்களா மாமா..?, டேய்.. உனக்குத் திருமணம் செய்து வைத்து ஒரு பெண்ணின் வாழ்வை வீணாக்கச் சொல்கிறாயா..?, போடா..”எனக் கூற..

“ஏய்.. உன் ரூட் தான் கிளியர் ஆகி விட்டதே.. நீ என் விசயத்தில் தலையிடாதே! வில்லி! மாமா.. என்னையும் கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்கள்.. ப்ளீஸ்..”என்றான். “டேய்.. உனக்கு இன்னும் வயதிருக்கிறதடா.. இப்போது வரப் போகும் மாப்பிள்ளையிடம் ஒழுங்காக நடந்து கொள்ளப் பார்..”என்று மகாலிங்கம் அதட்ட.. “ம்,ம்.. எனக்குப் பிடிக்கவில்லையென்றால் இந்தத் திருமணத்திற்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்..”என்று கூற.. “உனக்கு ஏன் டா பிடிக்க வேண்டும்..?, லூசு..”என்று தம்பியுடன் சண்டையிட்டபடியே உள்ளே சென்றாள் சுஜி.

சிறிது நேரத்தில் மாப்பிள்ளையும்,அவனது தந்தையும் வீட்டிற்குள் நுழைய.. எழுந்து சென்று அனைவரும் வரவேற்றனர். எப்போதும் போல்.. நீளப் பாவாடை,சட்டை,துப்பட்டாவுடன்.. கூடவே அவளுக்கே உரித்தான புன்னகையுடன் நின்று கொண்டிருந்த சுஜியிடம்..

“ஹாய்.. ஐ ஆம் சுந்தர்....”என்று தன் வலது கையை நீட்டினான் அவன்- மாப்பிள்ளை என்று அறிமுகம் செய்யப்பட்டவன். சுஜிப்ரியா என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட பின்.. இருவரும் அமர்ந்தனர். பெரியவர்களின் பேச்சு முடிந்ததும் சுஜியின் புறம் திரும்பிய சுந்தர் “எங்கே வேலை பார்க்கிறாய்..?”என்று வினவினான்.

தான் வேலை பார்க்கும் அலுவலகத்தைப் பற்றிய விவரத்தை சுஜி கூறியதும் “ஓ!”என்றவன் “ஆனால்.. எப்படி இந்த ஐடி இன்டஸ்டிரியில் வேலை பார்க்கிறீர்கள்..?, செய்த வேலையை திரும்பத் திரும்பச் செய்து கொண்டு கீபோர்டை தட்டிக் கொண்டு.. மானிட்டருக்குள்ளேயே வாழ்க்கை முடிந்து விடுமே.. எனக்கு என்னவோ இந்த வேலையில் அப்படியொன்றும் ஈடுபாடு இல்லை..”எனக் கூறியவன் தொடர்ந்து..

“கிரானைட் பிஸினெஸ் பற்றி உனக்கு ஏதேனும் ஐடியா இருக்கிறதா ப்ரியா..?,” என்று ஆரம்பித்து அடுத்த 15 நிமிடங்கள் அவனது தொழிலைப் பற்றியே பேச.. அய்யயோ! இவன் கதி என்ன ஆகப் போகிறதோ என்று கதி கலங்கிய படி அனைவரும் சுஜியை நோக்க அவளோ சிரித்த முகம் மாறாமல்.. கைகளைக் கட்டிக் கொண்டு பொறுமையாக அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு வழியாக அவன் பேசி முடித்ததும் அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தனர். “Mr.சுந்தர்.. இங்கே அமர்ந்திருக்கும் சக்தி,நான்,சரவணன் மாமா அனைவரும் ஐடியில் வேலை பார்ப்பவர்கள் தான்.. இத்தனை பேரையும்

DO NOT COPY

அவமதிப்பது போல்.. நீங்கள் பேசினால் எப்படி..?, உங்கள் தொழிலை நீங்கள் மதிப்பது போல்.. எங்கள் தொழிலை நாங்கள் மதிக்கிறோம்.. உடன் இருப்பவர்களைப் புரிந்து கொண்டு.. யார் மனதையும் நோகடிக்காமல்.. யாரையும் இழிவாக நினைக்காமல்.. சமமாக வழி நடத்த வேண்டுமென்கிற எண்ணம் உங்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லையே.. நீங்கள் பிஸினெஸில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறீர்கள் என்பதை நம்பவே முடியவில்லையே....” எனக் கூற..

அவனோ திகைத்து விழித்தபடி.. தந்தையை நோக்க.. அவரோ நமுட்டுச் சிரிப்புடன் வேறு பக்கம் பார்த்தார். அதற்குள் சுஜியின் செல்ஃபோன் குரல் கொடுக்க “எக்ஸ்க்யூஸ் மீ..”என்றபடி தன் அறைக்குச் சென்று விட்டாள்.

அவள் நகர்ந்ததும் தான் பேசியதை யோசித்துப் பார்த்த சுந்தருக்குப் புன்னகை பூத்தது.. சரி தான்! யாராக இருந்தாலும் அவர்கள் செய்யும் தொழிலைப் பற்றிக் குறை கூறினால் கோபம் வரத் தானே செய்யும்.. அதை அவள் வெளிப் படுத்திய விதமும்.. பதிலடி கொடுத்த விதமும் அவனுக்குப் பிடித்துப் போக.. அவளிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க எண்ணினான்.

அவனிடம் பேசி விட்டு சென்றவள் அறையை விட்டு வெளியே வராததைக் கண்டு வேறு அவனுக்குத் தயக்கமாக இருந்தது.. கிளம்பும் நேரம் வந்த பின்பும் அவள் வராததைக் கண்டு.. “அங்கிள்.. நான் ப்ரியாவிடம் பேசி விட்டு வருகிறேன்..”எனக் கூறி விட்டு அவள் அறைக்குச் சென்று கதவைத் தட்டினான்.

“ம்.. வருகிறேன்..”என்றபடி கதவைத் திறந்தவள் வெளியே நின்று கொண்டிருந்தவனைக் கண்டு விழிக்க.. அவன் கையை நீட்டி “உள்ளே வரலாமா..?”என்று வினவினான். “ம்..”என்றபடி அவள் வழி விட.. உள்ளே நுழைந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றவன்.. “நீ.. என்னைப் பற்றி என்ன முடிவு செய்திருக்கிறாய்..?”என்று நேரடியாகவே வினவினான்.

அவனது தயக்கத்தைப் புரிந்து கொண்ட சுஜிக்கு சிரிப்பாக வந்தது.. அவனை வம்பிழுக்க எண்ணி “ம்.. உண்மையைக் கூறட்டுமா...?”என்று வினவியவளிடம் “ம்..சொல்..”என்று அவன் கூற.. “நீங்கள் விடும் பீலாவைக் கேட்பதற்கே எனக்கு தனியாக 2 காது தேவைப்படும் போலவே என்று எண்ணினேன்..”என்று சிரித்தபடி கூற.. “அய்யோ!”என்றபடி.. பின் தலையில் கை வைத்து முடியைக் கோதியவன்..

“சாரி ப்ரியா..., நான்.. புண்படுத்த வேண்டுமென்று எதையும் பேசவில்லை. இழிவாக பேசியதற்கு சாரி.. ரொம்பவே சாரி.. என் தப்பை நீ சுட்டிக் காட்டியது எனக்குப் பிடித்திருந்தது.. நீ என் வாழ்க்கைத் துணையாக வந்தால்..

DO NOT COPY

நன்றாகயிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.. என்னவோ தெரியவில்லை.. உன்னை மிஸ் செய்யக் கூடாது என்று தோன்றுகிறது....”எனக் கூற..

“ம்ஹ்ம்ம்.. அப்படியா?”என்று தலை சரித்து அவள் வினவ.. “உன்னுடைய பதில் எனக்குச் சாதகமாக இருக்குமென்று நம்புகிறேன்.. வருகிறேன்..”எனக் கூறி விட்டு அவன் சென்று விட்டான்.

அவன் சென்றதும் உள்ளே நுழைந்த சரவணன் “என்னடா சுஜிகுட்டி.. சுந்தர் என்ன சொன்னான்..?, உனக்கு அவனைப் பிடித்திருக்கிறதா....?”என்று வினவ.. அவள் பொறுமையாக அவர் முகத்தை நோக்கினாள்.

ஒரு நல்ல சம்பந்தத்தை விட்டு விடக் கூடாதென்கிற தவிப்பு! அவள் ஒப்புக் கொள்ள வேண்டுமென்கிற பயம்! அனைத்தையும் கண்டு விட்டு சிரித்தபடி “எனக்கு சுந்தரைப் பிடித்திருக்கிறது மாமா.. நான் அவரைத் திருமணம் செய்து கொள்ள முழு மனதுடன் சம்மதிக்கிறேன்..”எனக் கூற..

மகிழ்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டவர் அவள் நெற்றியில் முத்தமிட்டு “தேங்க்ஸ்டா குட்டி..”என்றார். பாக்கெட்டிலிருந்து சுந்தரின் ஃபோட்டோவை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு “எஞ்சாய்டா குட்டிமா..”எனக் கூறி அவள் தலையை வருடிவிட்டு சென்று விட்டார்.

அவர் நீட்டிய ஃபோட்டோவைப் பார்த்தவள் புருவத்தை உயர்த்தி விட்டு.. ஷ்யாமைப் போல்.. உயரம்,கண்கள்,சிரிப்பு என்று இல்லாவிட்டாலும் ஓகே தான்.. என்று நினைத்தவள்.. ச்ச,இது என்ன நினைப்பு.. அவனை எதற்காக இப்போது நினைத்தேன்.. என்று குழம்பியவள்.. ஃபோட்டோவைக் கீழே வைத்து விட்டு பால்கனிக்குச் சென்றாள்.

சிறிது நேரத்தில் “சுஜி.. சுஜிம்மா..”என்றபடி வள்ளியையும், அவளைத் தொடர்ந்து மகாலிங்கமும், சக்தியும் அறைக்குள் நுழைய.. “என்னம்மா....”என்றபடி வந்தவளை “என் கண்ணு.. என் செல்லம்”என்று கொஞ்சிய வள்ளி “எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறதடா.. நீ கல்யாணத்திற்கு சம்மதம் சொன்னது..”எனக் கூற..

தந்தையோ எதுவும் கூறாமல்.. “நீ படிப்பில் முதல் மார்க் வாங்கியதை விட.. காலேஜ் படிக்கையில் வேலை கிடைத்து விட்டதாக நீ கூறியதை விட.. சேட்டை செய்து.. உன் குணத்தால் அனைவரையும் சந்தோசப் படுத்தியதை விட.. இந்த நொடி.. நீ திருமணத்திற்கு சம்மதம் சொன்ன இந்த நிமிடம்.. நான்.. மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்..”என்று கண் கலங்க..

“டாடி.. கூல் டாடி...”என்று அவரைச் சமாதானப் படுத்தியவளின் கண்களிலும் நீர் துளிர்க்க.. சூழ்நிலையை மாற்றும் விதமாக சக்தி.. “இனி.. சாம்பாரில்

DO NOT COPY

உப்பை அள்ளிக் கொட்டுவது.. பக்கோரா செய்கிறேன் என்கிற பெயரில் கிச்சனில் நீ படுத்தும் கொடுமை.. இதையெல்லாம் அனுபவிக்கப் போகும் சுந்தரை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் பாவமாகத் தான் இருக்கிறது.. " எனக் கூற... "போடா.. நெட்டைக் கொக்கு... சாப்பாட்டு ராமா.."என்று திட்டிய படியே அவன் தலையில் கொட்டிச் சிரித்தாள் சுஜி. குடும்பமே அன்றைய தினத்தை மிக மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடியது...

கல்யாணம் நிச்சயமான விசயத்தை ஆனந்தியிடம் தெரிவித்த சுஜி, அனுவிடமும் தெரிவிக்க எண்ணி.. அவளை செல்ஃபோனில் அழைத்தாள். விசயத்தைக் கேட்ட அனு ஆடிப் போய் சோபாவில் அமர்ந்து விட.. "ஹலோ.. ஹலோ.."என்று 2 முறை அழைத்துப் பார்த்த சுஜி எந்த பதிலும் இல்லாமல் போக.. ஃபோனைக் கட் செய்து விட்டாள்.

அவள் ஃபோனை வைத்ததும் அழுகை பீறிட்டது அனுவிற்கு. கண்ணைக் கசக்கிக் கொண்டு அமர்ந்திருந்தவளை நோக்கிய சீதா.. "என்னடி அனு.. என்னவாயிற்று... அழுகிறாயா..?, என்ன நடந்தது..?"எனக் கேட்க..

"ப்ரியா.. ப்ரியாவிற்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டதாம்.. கடைசி வரையில் அவர்களிருவருக்கிடையில் நடந்த பிரச்சனையை என்னால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.. அந்தப் பிரச்சனை தான் இருவருக்கும் எமனாகி பிரித்து விட்டது.. இருவரும் நிரந்தரமாகப் பிரியப் போகிறார்கள்.. என்னால்.. என்னால்.. எதுவுமே செய்ய முடியவில்லையே அம்மா..." என்று மீண்டும் அழத் துவங்க..

சீதாவும் கண் கலங்கியபடி "முட்டாள்தனமாக அழுவதை நிறுத்து அனு.. உன்னை விட பாதிப்பு அவர்களிருவருக்கும் தான்.. பிரபு என்ன செய்கிறானென்று பார்ப்போம்... பொறுமையாக இரு.. நல்லதே நடக்கும்.."என்று சமாதானப் படுத்த.. தேம்பியபடியே தலை ஆட்டினாள் அனு.

இவர்களிருவரும் தனியாகப் பேசத் தொடங்கினாலே ஒழிந்திருந்து ஒட்டுக் கேட்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த ஸ்ரீதர்.. அனு கூறிய அத்தனையையும் கேட்டு விட்டு வேகமாகத் தன் அறைக்குச் சென்று அலமாரியைத் திறந்து.. அந்தப் புகைப்படங்களை எடுத்தான்.

ஒரு வாரத்திற்கும் மேலாக அவனது அலமாரிக்குள் உறங்கிக் கிடந்த.. அந்தப் புகைப்படங்களை.. உபயோகப்படுத்துவதற்கான நேரம் வந்து விட்டதாக உணர்ந்தவன்.. நண்பன் குமாருக்குக் கால் செய்து.. சுஜிப்ரியாவுக்கு முடிவு செய்திருக்கும் மாப்பிள்ளையயின் வீட்டு முகவரியைப் பற்றி விசாரிக்கச் சொன்னான்.

DO NOT COPY

அடுத்த 2 நாட்களில் சுந்தரைப் பற்றிய விவரத்தையும், அவனது வீட்டு விலாசத்தையும் குமார் தெரிவித்து விட.. சிங்கப்பூர் செல்லும் அன்று.. நண்பனுடன் சென்று.... புகைப்படங்கள் அடங்கிய அந்தக் கவரை போஸ்ட் செய்து விட்டு ஏர்போர்ட்டிற்குக் கிளம்பினான் ஸ்ரீதர்.




DO NOT COPY

# அத்தியாயம் – 13



**கண்ணன் முகம் மறந்து போனால் – இந்தக்**

**கண்கள் இருந்து பயன் உண்டோ?**

**வண்ணப் படமும் இல்லை கண்டாய் – இனி**

**வாழும் வழி என்னடி தோழி?**

DO NOT COPY

**தி**ருமணத்தை விரைவிலேயே முடித்து விட வேண்டுமென்று சுந்தர் தெரிவித்து விட்டதால்.. சுஜியின் வீடே கோலாகலமாகக் காட்சி அளித்தது. அவன் பெண் பார்த்து விட்டுச் சென்ற பின்.. சுஜியின் தரப்பிலிருந்தும் சாதகமான பதில் கிடைத்து விட... உடனடியாக சில உறவினர்களை மட்டும் அழைத்து பாக்கு-வெற்றிலை மாற்றிக் கொண்டனர்.

சுஜியின் குணத்தையும்,அவளது பிடிவாதத்தையும் புரிந்து கொண்ட சுந்தர் அவள் வேலைக்குச் செல்வதைத் தடுக்கவில்லை. அதனால் திருமண பரபரப்பு ஒரு புறம் இருந்தாலும்.. எப்போதும் போல்... வேலைக்கு சென்று கொண்டிருந்தாள் சுஜி.

திருமணம் நிச்சயமாகி விட்ட விசயத்தைக் கேள்வி பட்டதிலிருந்து தோழிகள் அனைவரையும் சுஜியின் வீட்டிற்குப் படையெடுத்த வண்ணமிருக்க.. தன் புதிய சினேகிதி அனுவிடமிருந்து எந்த வித தகவலும் இல்லாததைக் கண்டு கொஞ்சம் வருத்தமாக இருந்தது சுஜிக்கு.

எத்தனையோ முறை சக்தியும்,சுஜியும் ஃபோனில் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. “அவளை என்னடா செய்தாய்..?”என்று சக்தியை மிரட்டிக் கேட்டால்... “அய்யோ அக்கா.. நான் உன் தம்பி.. சமத்து.. என்னைப் போல்

சந்தேகப் படுகிறாயே..?"என்று அக்கா என்று அழைத்து நெஞ்சைத் தொட்டு விட்டதால்.. அதன் பின் அவள் அவனை எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

அவனும் ஒரு நாளைக்கு ஓராயிரம் முறை ஃபோன்,மெஸேஜ் என்று அவளது எண்ணிற்கு அனுப்பித் தள்ளிக் கொண்டு தான் இருக்கிறான். ஆனால் அவனது பிரியமான லட்டுவிடமிருந்து எந்த பதிலும் இல்லை. அவளது காலேஜ் வாசலில் காத்திருந்தும் கூட எந்தப் பலனும் இல்லையென்கிறான். என்ன தான் செய்வது..?, திடீரென்று என்னவாகி விட்டது அவளுக்கு..?, என்று அவன் கோபப் படுவதைக் காண்கையில்.. பாவமாகத் தான் இருந்தது சுஜிக்கு.

தனக்குத் திருமணமா..?, சுந்தருடனா..?, எனக்கு அவனைப் பிடித்திருக்கிறதா..? என்றெல்லாம் பல கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டு பதில் கிடைக்காமல் அல்லாடும் சுஜி ஒரு புறம்.. அனுவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாததைக் கண்டு.. தனக்கு மிகப் பிடித்தமான பிரியாணியையே வெறுத்துத் தள்ளி விட்ட சக்தி ஒரு புறம்.. என்று சுஜியின் வீடு.. சந்தோசத்தையும் தவிப்பையும் சேர்ந்து சந்தித்துக் கொண்டிருந்தது.

சக்தியும்,சுஜியும் அலுவலகம் சென்று விட்ட பின்... வள்ளியும்,மகாலிங்கமும் சுஜியின் கல்யாணப் பத்திரிக்கையில் குறிப்பிடப் பட வேண்டிய பெயர்களை எழுதிக் கொண்டு.. தங்களது புது மருமகனைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர்.

மாப்பிள்ளை வீட்டாரும்,இன்னும் சில உறவினர்களும் திரண்டு வர.. முகம் முழுதும் சிரிப்புடன் இருவரும் எழுந்து சென்று வரவேற்றனர். தங்களது மகிழ்ச்சியான வரவேற்பிற்கு.. வருகை தந்திருந்தவர்களின் முகங்களில் எந்த வித பிரதிபலிப்பும் இல்லாததைக் கண்டு திகைத்து ஒருவரையொருவர் பார்த்த படி வள்ளியும்,மகாலிங்கமும் விழிக்க..

வந்திருந்தவர்களில் வெள்ளை வேட்டி,சட்டையுடன் நாட்டாமை போல் இருந்த பெரிய மனிதர் ஒருவர் முன்னே வந்து "உங்கள் வீட்டிற்கு விருந்து சாப்பிட நாங்கள் வரவில்லை மகாலிங்கம்.. எத்தனை நாளாக எங்களை அவமானப் படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருந்தாய்..?, கௌரவமான எங்கள் குடும்பத்திற்கு இப்படி ஒரு அசிங்கத்தை ஏற்படுத்தி விட்டாயே..?,"

"நல்ல வேளை.. கெட்டதிலும் ஒரு நல்ல விசயம் நடந்திருக்கிறது. பத்திரிக்கை அடித்து ஊரைக் கூட்டிய பின் இந்த அசிங்கத்தைப் பற்றி தெரிய வந்திருந்தால்.. என்னவாயிருக்கும்?, பெண்ணை வளர்த்திருக்கும் விதத்தைப் பார்.. என்ன விழிக்கிறீர்கள்..?, இந்தத் திருமணத்தை நிறுத்த வந்திருக்கிறோம்"எனக் கூற..

அதுவரை எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த இருவரும் திகைத்து சுந்தரின் தந்தையை நோக்க.. அவர் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றிருந்தார். "என்னவாயிற்று ராமனாதன்..?,இவர்.. இவர் என்ன கூறுகிறார்..?, எனக்கு ஒன்றுமே புரியவில்லை.."என்று மகாலிங்கம் வினவ..

"என்னை மன்னித்து விடுங்கள் மகாலிங்கம்.. உங்களைப் புண்படுத்துவது எனது நோக்கமல்ல.. உங்கள் மகள் செய்த தவறுக்கு நீங்கள் என்ன செய்ய முடியும்..?, அவர் பேசியதற்கு மன்னித்து விடுங்கள்.. ஆனால் அவர் கூறிய அனைத்தும் உண்மை.. சொந்தங்களின் மத்தியில் தலை காட்ட முடியவில்லை. எனக்கு இருப்பது ஒரே பையன். அவன் கௌரவமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான் எனது ஆசை. மன்னித்து விடுங்கள்" எனக் கூற..

"அய்யோ எனக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே புரியவில்லை. என்ன நடந்தது..?, என் மகள் என்ன தவறு செய்தாள்..?"என்று மகாலிங்கம் கோபத்தில் சத்தமிட்ட பின் அந்த வெள்ளை வேட்டி மனிதர் மீண்டும் "வீட்டை விட்டு வெளியே செல்லாத காலத்திலேயே பெண்கள் விசயத்தில் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்வார்கள்.. இப்போது ஐடி,கா.ஃபி ஷாப்,லிப் ஸ்டிக் என்று மாறி விட்ட இந்தக் காலத்தில் பெண்ணை சர்வ ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டாமா மகாலிங்கம்..?, ஊராரை ஏமாற்றி உன் பெண் அடிக்கும் கூத்தைப் பார்.." என்று 4 புகைப் படங்களை நீட்டினார் அவர்.

புகைப்படத்தை வாங்கிப் பார்த்த மகாலிங்கம் ஆச்சரியத்தின் உச்சத்திற்கே சென்று விட்டார். தன் மகள் யாரோ ஒருவனின் தோளில் சாய்ந்த படி.. கை பற்றிய படி.. எப்படி சாத்தியம்..? நம்பும் படியாக இல்லாத படியால்.. நம்பத் தோன்றாத படியால்.. நிமிர்ந்து வந்தவர்களைக் கோபமாகப் பார்த்தார்.

"யாரோ ஒரு காவாளி ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுப்பதற்காக இப்படிப் பட்ட புகைப்படங்களை அனுப்பினால் நீங்கள் அதை அப்படியே நம்பி விடுவீர்களா..?, இந்தக் காலத்தில் போலியாக எப்படி வேண்டுமானாலும் படங்களைத் தயாரிக்கலாம்.. இதைக் காரணமாகக் காட்டி கல்யாணத்தை நிறுத்துமளவிற்கு கேவலமான ஆட்களா..?"என்று கோபமாகக் கேட்க..

"இதோ பாருங்கள் மகாலிங்கம்.. இது உண்மையா பொய்யா என்று ஆராய்ந்து பார்க்க நாங்கள் விரும்பவில்லை மகாலிங்கம்.. சொந்தங்களுக்கிடையே விசயம் பரவி விட்டது.. இப்படி ஒரு கெட்ட பெயரோடு உங்கள் மகள் என் வீட்டில் நிம்மதியாக எப்படி வாழ முடியும்..?, வேண்டாம் மகாலிங்கம்.. திருமணத்தை நிறுத்து விடுவோம்"

DO NOT COPY

“உங்கள் மகள் மீது அநியாயமாக பழி போடுவதாக எண்ண வேண்டாம்.. இந்தக் காலத்துப் பிள்ளைகளின் விருப்பத்தை அறிந்து கொள்வது மிகக் கடினம். தேவைக்கேற்ப எண்ணங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.. இந்தக் காலத்தில் யார் தான் ஒழுக்கமானவர்கள்..?”எனக் கூறீயவரை வள்ளி கோபமாகத் தடுக்க..

“என்னை மன்னித்து விடுங்கள் மகாலிங்கம்.. உங்களுடைய நல்ல குணத்திற்காகத் தான் இவ்வளவு அமைதியாக பேசுகிறோம்.. நாங்கள் வருகிறோம்..”எனக் கூறி விடை பெற்றனர்.

அவர்கள் சென்றதும் வள்ளி தலையில் அடித்துக் கொண்டு அழ.. அவரைத் தேற்றத் தோன்றாமல்.. ஆடிப் போய் நின்றிருந்தார் மகாலிங்கம். மகள் இப்படி ஒரு தவறை வீட்டிலிருப்போர் அனைவரிடமும் மறைத்து செய்திருப்பாள் என்பதை அவரால் நம்பவே முடியவில்லை.

சின்ன சின்ன விருப்பங்களைக் கூட அன்னை,தந்தை,தம்பியிடம் தெரிவித்து மகிழ்ச்சியுடன் நிறைவேற்றிக் கொள்ளும் சுஜி இதைச் செய்திருப்பாள் என்பதை அவர் நம்பவேயில்லை. அப்படியே அவள் யாரையேனும் விரும்பியிருந்தால்.. நிச்சயம் அவள் எப்போதோ தனது விருப்பத்தைக் கூறி விட்டிருப்பாள்.

அவளுடைய குணம் என்ன..?, கள்ளம் கபடமில்லாத.. யாருக்கும் தீங்கு நினைக்காத.. உன்னதமானவளை யாரோ 4 பேர் ஏதேதோ கூறி பிதற்றி விட்டுச் சென்றதினால் அவள் மீது வைத்திருந்த பரி பூர்ண நம்பிக்கையை மாற்றிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

ஆனால் ஒரு பாவமும் அறியாத, எந்தத் தவறும் செய்யாதவளின் மீது ஏற்பட்டிருக்கும் இந்தப் பழியை.. இந்தக் களங்கத்தை நீக்குவது எப்படி என்று புரியாமல் தவித்தார். இந்த விசயம் சுஜிக்குத் தெரிந்தால்.. அவள் எப்படித் தாங்கிக் கொள்வாள்..?, மகிழ்ச்சியை மட்டுமே இதுவரை வாழ்வில் கண்டு வளர்ந்தவள் அவள்..

ஊரார் இப்படி ஒரு பழியை அவள் மேல் போட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தால்.. திருமணத்தையே வெறுத்து விடுவாள். கடைசி வரை அவள் கன்னியாக இருப்பதைப் பார்ப்பதற்காகவா.. தந்தை என்கிற பெயரில் தான் உயிருடன் இருந்து என்ன பிரயோஜனம்..?

அவர் யோசனையில் மூழ்கி விட்டிருந்த சமயத்தில் புலம்பிக் கதறிக் கொண்டிருந்த வள்ளி “அப்படியென்ன படம் அது..?, என்ன இருக்கிறது அதில்..?, ஒரு பாவமும் அறியாத என் மகள் மீது பழி போடுமளவிற்கு என்ன

DO NOT COPY

நடந்தது..?”என்றபடியே மகாலிங்கத்தின் கையிலிருந்த புகைப்படங்களைப் பிடுங்கிப் பார்த்து..

அதில் இருந்த உருவத்தைக் கண்டு திகைத்தவர் “என்னங்க.. இது,.. இந்தத் தம்பி அனுவின் அண்ணன் ஷ்யாம் பிரபு.. போன வாரம் வந்த போது தான் அவரது வீட்டினர் அனைவரின் படங்களையும் காட்டினாள்.. இவன்.. சீதாராம் டெக்ஸ்டைல்ஸின் முதலாளி.. இவனுக்கும் சுஜிக்கும் எப்படிப் பழக்கமானது..? இது எதுவுமே உண்மையில்லை.. என் மகள் தவறு செய்யவில்லையென்பதை எப்படி நிரூபிப்பேன்..?, அய்யோ..?”என்றபடி அழத் தொடங்க..

வள்ளி சொன்னதைக் கேட்டு.. ஒரு முடிவுடன் இருக்கையை விட்டு எழுந்த மகாலிங்கம் “ப்ரியாவிடம் இதைப் பற்றி எதுவும் கூறாதே.. வருகிறேன்..”என்று வெளியே நடந்தார். “எங்கே செல்கிறீர்கள்..?,”என்ற வள்ளியின் கேள்விக்குப் பதில் கூறாமல் அவர் நேராகச் சென்றது சீதாராம் டெக்ஸ்டைல்ஸ்.

மனம் முழுக்க பற்பல எண்ணங்களுடனும், சந்தேகங்களுடனும் சீதாராம் டெக்ஸ்டைல்ஸில் கால் பதித்த மகாலிங்கம்.. அங்கே இருந்த ரிசப்டனிஸ்டிடம் ஷ்யாமைப் பார்க்க விரும்புவதாகக் கூறி விட்டுக் காத்திருந்தார், சிறிது நேரத்திலேயே அவனிடமிருந்து அழைப்பு வர எழுந்து உள்ளே சென்றார்.

தன்னைப் பார்க்க விரும்புவதாகக் கூறி உள்ளே நுழைந்த புதியவரைக் கண்டு ஷ்யாம் வரவேற்பானப் புன்னகையை உதிர்த்து “உட்காருங்கள் சார்..”என்றவன் அவர் அமர்ந்ததும் “நீங்கள்...”என்று இழுத்தான். அவனது கேள்விக்குப் பதில் கூறாமல் அவனையே பார்த்தபடி தன் கையிலிருந்த புகைப்படங்களை அவன் முன்பு நீட்டினார்.

புகைப்படத்தை வாங்கிப் பார்த்தவனின் முகத்தில் வியப்பின் ரேகை ஒன்று ஓடியது. அவன் எதுவும் கூறாமல் மகாலிங்கத்தை நிமிர்ந்து நோக்க.. “நான் சுஜிப்ரியாவின் தந்தை. இது உண்மையென்று நம்பியோ.. உங்களிடம் சண்டையிடுவதற்காகவோ நான் வரவில்லை தம்பி.. சுஜி யாரையேனும் காதலித்திருந்தால் நிச்சயம் என்னிடம் தெரிவித்திருப்பாள்.. அது எனக்கு நன்றாகத் தெரியும்.. அப்படியே இது உண்மையென்றாலும் உங்களிருவரையும் சேர்த்து வைக்க நான் தயாராக இருக்கிறேன்” என்றவரை..

“உங்கள் மகள் கூறினாளா..?, நான் அவளைக் காதலிப்பதாக..?”என்று உணர்ச்சியற்ற குரலில் வினவியவன் தொடர்ந்து.. “சார்.. இந்த ஃபோட்டோ முற்றிலும் பொய்யான ஒன்று.. உங்கள் மகளுக்கும் எனக்குமிடையில் எந்தக் கண்றாவியுமில்லை..”என்றவன் சுஜியைச் சந்தித்தலிருந்து ஆரம்பித்து.. பஸ்ஸில் நடந்த கலாட்டா வரை அனைத்தையும் தெரிவித்தான்.

“உங்கள் மகளைப் பற்றி நீங்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறீர்களே சார்.. அதற்கு மேல் விளக்கம் எதற்கு..?, 4 முறை நடந்திருக்கும் எங்கள் சந்திப்பு.. அதற்கு மேல் எதுவுமேயில்லை...” என்று முடித்து விட..

“எதுவுமேயில்லையா..?, என் மகளின் வாழ்க்கை வீணாகிவிட்டதே தம்பி.., அவளுக்குத் திருமணம் முடிவாகியிருந்தது. இந்தப் புகைப்படங்களினால்.. திருமணத்தை நிறுத்தி விட்டனர் மாப்பிள்ளை வீட்டார். சொந்தபந்தங்களோடு.. வீட்டிற்கு வந்து.. என் மகளைத் திட்டி அவமானப் படுத்தி.. வீண் பழியைச் செலுத்தி விட்டு சென்று விட்டார்கள்..”

அவர் கூறியதைக் கேட்டு.. சுஜிக்குத் திருமணமா.. என்று திகைத்த ஷ்யாம் பின் அவரைச் சமாதானப் படுத்தும் விதமாக “சார்.. இந்த ஃபோட்டோ யார்.. எதற்காக அனுப்பியிருக்கிறார்கள்..?, அவர்களது நோக்கமென்ன என்பதை நிச்சயம் நான் கண்டு பிடிக்கிறேன்.. கவலைப் படாதீர்கள்..”எனக் கூற..

அவரோ விரக்திப் புன்னகையை வெளியிட்டு “யார்,ஏன்,எதற்காக என்று ஆரைந்து பார்த்து என்ன பிரயோஜனம் தம்பி..?, இவற்றால் நின்று போன என் மகளின் திருமணமும்,சூது,வாதற்ற என் பெண்ணின் மீது ஏற்பட்டிருக்கும் இந்த அவப் பெயரும் மாறவா போகிறது..?”

“தனது அறிவினால்.. அழகான பேச்சினால்.. அனைவரிடமும் புத்திசாலி,நல்லவள் என்று பெயர் வாங்கியவள் அவள்.. இதுவரை,.. எறும்புக்குக் கூட துரோகம் நினைக்காத அவளுக்கு இப்படி ஒரு பிரச்சனையா..?”என்று அவர் கதற..

உணர்ச்சி துடைத்த முகத்துடன் அமைதியாக சலனமற்று அமர்ந்திருந்தான் ஷ்யாம். தன் போக்கில் புலம்பிக் கொண்டிருந்தவர் பின் ஆவேசத்துடன் அவன் புறம் நிமிர்ந்து “இவையெல்லாம் எதனால் நிகழ்ந்தது தம்பி..?, இந்த ஃபோட்டோவினால்.. உங்களுடன் ஏற்பட்ட பழக்கத்தினால்.. மகிழ்ச்சியாக கவலையற்றுத் திரிந்தவளின் வாழ்வில் முதன்முறையாக விதி விளையாடிக் கொண்டிருக்கிறது”

“நீங்கள் கூறுவது அனைத்தும் சரி தான் தம்பி.. இருவர் மீதும் எந்தத் தவறு இல்லை என்பது வரையில் சரி.. ஆனால்.. ஆனால்.. இப்போது.. என் மகளின் வாழ்க்கை பாதிக்கப் பட்டுவிட்டதே.. என் மகளிற்குத் தெரிந்தால் நிச்சயம் கவலைப் பட மாட்டாள்.. இதற்கு வருத்தமா டாடி என்று என்னையே சமாதானப் படுத்தப் பார்ப்பாள்.”

DO NOT COPY

“அதன் பின் திருமணம் என்ற சடங்கையே வெறுத்து விடுவாள். அவளிடம் அப்படி ஒரு மாற்றத்தைப் பார்ப்பதற்காகவா தம்பி அப்படி சீராட்டி வளர்த்தேன்..?,”என்றவரைப் பாவமாகப் பார்த்து..

“சார் எடுத்துக் கூறினால் நம்புவார்கள் சார்..”என்றான் ஷ்யாம். அவன் கூறியதற்கு மறுத்துத் தலையாட்டியவர் தொடர்ந்து “எத்தனை பேர் விளக்கத்தை ஏற்பார்கள் ஷ்யாம்..?,சாத்தியமான விஷயமா..?, நீங்கள் ஆண் பிள்ளை! பணக்காரர் வேறு! நீங்கள் என்ன செய்தாலும் இந்த சமூகம் ஏற்றுக் கொள்ளும்.. நாங்கள் அப்படியல்ல.. தவறே செய்யவில்லையென்றாலும் ஒதுக்கி வைத்து விடுவார்கள்.. அதிலும் பெண் பிள்ளைகள் என்றால்.. கேட்கவே வேண்டாம்..,”

“நானும் புரட்சிகரமாக பேசுபவன் தான் தம்பி..ஆனால் என் பெண்ணுடைய வாழ்க்கை என்று வருகையில்.. என்னால் எனது கொள்கையை கடை பிடிக்க முடியவில்லையே... பாசம் கண்ணை மறைத்து விடுகிறது.. “என்று அவர் கண் கலங்க..

“கவலைப் படாதீர்கள் சார்.., இந்த மாப்பிள்ளை இல்லையென்றால் என்ன..?, உங்கள் மகளைப் பற்றி புரிந்து கொண்ட இருவன் நிச்சயம் வருவான்.. ப்ரியா மிகவும் நல்லவள். எனக்குத் தெரியும்,,. நீங்கள் கவலைப் படாதீர்கள்..”என்று அக்கறையுடன் ஆறுதல் படுத்தியவனை நிமிர்ந்து நோக்கியவர்.. “அப்படியானால் நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா..?”என்று வினவினார்.

சட்டெனத் திகைப்புற்று அவரை நோக்கிய ஷ்யாம் “என்ன..?, என்ன சார் சொல்கிறீர்கள்..?”என்று திகைப்பு மாறாமல் வினவினான். “ஆமாம்.. உன்னால் தானே என் மகளுக்கு இப்படியொரு நிலைமை,..?, உன்னைச் சந்திக்காமல் இருந்திருந்தால்.. அவள் இப்படி ஒரு கதிக்கு ஆளாக நேர்ந்திருக்குமா..?, உன்னால் சீரழிந்த ஒரு பெண்ணின் வாழ்வை நீயே நேராக்குவது தான் நியாயம்.. எத்தனை பேரிடம்.. இந்தப் புகைப்படம் உண்மையல்ல.. பொய் என்று நிரூபிப்பேன்..?, என் மகளின் ஒழுக்கத்தை ஏலம் விடச் சொல்கிறாயா..?,”என்று ஆவேசமாகக் கத்தியவர்.. அவன் சற்றும் எதிர்பார்க்காத விதமாய் அவனது காலில் விழுந்தார்.

இதை முற்றிலும் எதிர்பார்த்திராத ஷ்யாம் பதறி விலகி அவரைத் தூக்கி நிறுத்தி.. அவரோ அவனைக் கையெடுத்துக் கும்பிட்டு கண்ணீருடன் “இதற்கு மேல் என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை தம்பி.. என் மகளது எதிர் காலம் வளமாக இருக்க வேண்டும்.. தினம் தினம் நான் கடவுளிடம் பிரார்த்திக்கும் ஒன்று இது மட்டும் தான்.. யாரிடமும் எடுத்துச் சொல்லி.. விளக்கம் கொடுத்து திருமணம் செய்வதை என் மகள் நிச்சயம் விரும்ப மாட்டாள்.. அவள் காலம் முழுதும் கன்னியாக இருப்பதைப் பார்க்க நான்

DO NOT COPY

உயிருடன் இருக்க மாட்டேன்.. என் மகளின் வாழ்வு உங்கள் கையில் தான் இருக்கிறது.. நல்ல முடிவைச் சொல்லுங்கள்.. நான் வருகிறேன்..”எனக் கூறி விட்டுச் சென்று விட்டார் மகாலிங்கம்.

அவர் சென்ற பின் சுற்றி நடப்பதை உணர்ந்து கொள்ள முடியாமல் மேஜையின் மீது கிடந்த ஃபோட்டோக்களை வெறித்த படி திகைத்து அமர்ந்திருந்த ஷ்யாம்.. வெகு நேரமாகத் தன் செல்ஃபோன் அழைப்பதைக் கேட்டு நடப்பிற்கு வந்தான். தந்தையிடமிருந்து வந்த அழைப்பு என்றதும்.. :சொல்லுங்கள் டாடி..”என்றான்.

“ஷ்யாம்.. எங்கே இருக்கிறாய்..?, அலுவலகத்தில் தானே..?, உன்னிடம் ஒரு முக்கியமான விசயம் பேச வேண்டும்.. இப்போதே வீட்டிற்கு வா..”எனக் கூறி விட்டு கட் செய்தார். சுஜியின் தந்தையின் வரவால் ஏற்கனவே குழம்பிப் போயிருந்த ஷ்யாம்.. ராஜாராமனின் இந்த அழைப்பைக் கேட்டு மேலும் குழம்பியபடி வீட்டிற்குக் கிளம்பினான்.

ஷ்யாம்-சுஜி சேர்ந்திருந்த புகைப்படங்களை சுஜியின் மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பியதோடு மட்டுமல்லாமல் தன் வீட்டிற்கும் சேர்ந்தே தான் போஸ்ட் செய்திருந்தான் ஸ்ரீதர். மாப்பிள்ளை வீட்டாரின் கையில் கிடைத்த அதே நேரம் அந்த புகைப்படங்கள் அனைத்தும் ஷ்யாமின் வீட்டையும் அடைந்திருந்தது.

அன்றைய தபால்கள் அனைத்தையும் பிரித்து பார்த்துக் கொண்டிருந்த ராஜாராமன் வித்தியாசமாக உரையிடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை முதலில் பிரித்தார். உள்ளே இருந்த புகைப்படங்களைப் பார்த்தவரின் விழிகள் வியப்பில் மூழ்கியது. ஷ்யாமின் தோளில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த அந்தப் பெண் சுஜிப்ரியாவா..? என்றெண்ணியவருக்கு மகிழ்ச்சியும்,சந்தேகமும் ஒரு சேர எழுந்தது.

ஷ்யாம் இவளைக் காதலிக்கிறானென்றால் இதுவரை ஏன் வெளிப்படுத்தவில்லை..?, இந்தப் புகைப்படங்களை அனுப்பியவனின் நோக்கம் என்ன..? என்று யோசித்தவருக்கு இது நிச்சயம் உண்மையாக இருக்கும் என்று தோன்றவில்லை. ஏனென்றால்.. பெண்கள் பக்கம் திரும்பியும் பார்க்காத சாமியார் ஷ்யாம் காதலிப்பதற்கு வாய்ப்பேயில்லை. ஆனால் இந்தப் புகைப்படம்..? இருவரும் காதலர்களைப் போலல்லவா காட்சி தருகிறார்கள்..?

அப்படியே இது உண்மையாக இருக்கும் பட்சத்தில்.. ஷ்யாம் எதற்காக இதை வீட்டினரிடம் வெளிப்படுத்தவில்லை..? தாடையைத் தடவிய படி யோசனையில் மூழ்கியவரை “டாடி.. டாடி..”என்று உலுக்கிய அனு “காஃபி..”என்று நீட்டினாள்.

தீவிரமான யோசனையில் இருந்தவரை வித்தியாசமாகப் பார்த்தபடி "என்ன டாடி..?, என்னவாயிற்று..?,கூப்பிடுவது கூடத் தெரியாமல் யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்..?, கையில் என்ன ஃபோட்டோ..,?,யாருடையது..?"என்றபடி அவர் கையிலிருந்த ஃபோட்டோவைப் பிடுங்கிப் பார்வையிட்டவள்..

அதில் தெரிந்த உருவங்களைக் கண்டு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். "அம்மா.. அண்ணாவுக்கும்,அண்ணிக்கும் இடையே இருந்த பிரச்சனை தீர்ந்து விட்டது போலும்.. இருவருடைய ரொமான்ஸைப் பாருங்கள் இங்கே.. இப்போது தான் எனக்கு சந்தோசமாக இருக்கிறதும்மா.. நான் நினைத்தபடியே அண்ணாவும்,அண்ணியும் ஜோடி சேரப் போகிறார்கள்.."என்று குதித்துக் கொண்டிருந்தவளை "உஷ்.. உஷ்.. அப்பா டி.."என்று சீதா அடக்க முயன்று தோற்றுப் போக..

அனு கூறிய அத்தனையையும் கேட்டு மேலும் திகைத்த ராஜாராமன் "அனு நீ என்ன சொல்கிறாய்..?, ஷ்யாம் சுஜியை விரும்புகிறானா..?"என்றூ வினவினார். தந்தை முன்பு உளறிக் கொட்டி விட்டதை எண்ணி நாக்கைக் கடித்துக் கொண்டவளை கோபத்துடன் நோக்கிய ராஜாராமன்..

"அனு.. என்ன நடந்தது..?, என்ன நடக்கிறது..?, உனக்கும்,அம்மாவுக்கும் எல்லாம் தெரியுமா..?, ஏன் என்னிடம் மறைத்தீர்கள்..?,"என்று கேள்விகளை அடுக்க.. "அது வந்து டாடி.."என்றூ முதலில் தயங்கிய அனு.. ஆரம்பத்தில் சுஜியைக் கண்டதிலிருந்து ஆரம்பித்து.. அதன்பின் சுஜியின் நட்பு கொண்டு இருவரைப் பற்றியும் தெரிந்து கொள்ள முயன்றது வரை அனைத்தையும் கூறி முடித்தாள்.

"அவர்களிருவருக்கும் ஏதோ பிரச்சனை இருந்தது டாடி. எப்போதும் சண்டையிட்ட வண்ணம் திரிந்து கொண்டிருந்தார்கள்.. சுஜிக்கு திருமணம் முடிவாகியிருப்பதாகத் தெரிவித்தாள். அதன் பின் தான் அண்ணன் சமாதானமாகியிருப்பான் என்று நினைக்கிறேன். இந்தப் புகைப்படங்களைப் பார்த்தால் அப்படித் தான் தெரிகிறது.."என்று குதூகலித்தவளிடம்..

"ஆனால் இதை யார் அனுப்பினார்கள்..?,அனுப்பியவரின் நோக்கமென்ன என்பது தெரியவில்லையே அனு..?"என்று ராஜாராமன் கூற.. "டாடி.. இதை அனுப்பியது யாரென்று தெரிந்தால் நான் கோவில் கட்டிக் கும்பிடுவேன்.. நாங்கள் எங்கள் வாழ்வில் முன்னேறும் வரை திருமணம் வேண்டாமென்றிருந்த அண்ணனை நம் வழிக்கு கொண்டு வர இந்த ஃபோட்டோ உதவியதற்காக.. நன்றி தான் கூற வேண்டும்.. இந்த சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்திக் கொள்ளாவிட்டால் அண்ணனைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைப்பது கஷ்டம் டாடி.. இன்னும் சில நாட்கள் செல்லட்டுமென்று இழுத்தடித்துக் கொண்டு தான் இருப்பான்"

“இப்போதே இருவரையும் அழையுங்கள் டாடி.. உண்மையை அவர்களின் வாயிலிருந்தே கேட்போம்.. நான் சுஜியை அழைக்கிறேன்.. நீங்கள் அண்ணனைக் கூப்பிடுங்கள்”எனக் கூறி விட்டு தனது செல்ஃபோனை எடுத்தாள்.

பல நாட்களாக தகவலற்றுப் போன அனுவிடமிருந்து வந்த அழைப்பை மறுக்க முடியாமல் உடனே வருவதாகக் கூறிக் கிளம்பி விட்டாள் சுஜி.

ஷ்யாம் தனது வீட்டினுள் நுழைகையில் தனது வண்டியை ஸ்டாண்ட் போட்டபடி சுஜி நின்று கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும்.. புன்னகைக்கலாமா.. வேண்டாமா. என்று பட்டிமன்றம் நடத்தி.. ஒரு வழிஹ்யாக நிமிர்ந்து அவன் விழிகளைச் சந்திக்கையில் அவனோ அவளையே பார்த்தபடி நின்றிருந்தான்.

ஏன் இப்படிப் பார்க்கிறான் என்று அவள் குழம்பிய வேளையில்.. அவன் வேறா விதமான எண்ணங்களோடு குழம்பிக் கொண்டிருந்தான். இவளது திருமணம் நின்றா விட்ட விசயம் இவளுக்குத் தெரியுமா..?, எப்போதும் இருக்கும் அந்தப் புன்னகையுடனே நிற்கிறாளே.. அப்படியானால் புகைப்பட விசயம் இவளது செவிகளுக்கு இன்னும் எட்டவில்லை போலும்! என்றெண்ணிய ஷ்யாம் வரவேற்பான புன்னகையை உதிர்த்து விட்டு அவளுடனே வீட்டிற்குள் நுழைந்தான்.

ஜோடியாக வந்த இருவரையும் கண்டு மூவரும் மகிழ்ச்சியுடன் பார்வை பரிமாற்றம் செய்து கொண்டனர். உள்ளே வந்ததும் “அனு.. எப்படியிருக்கிறாய்..?, உடனடியாக வருமாறு நீ அழைத்ததும் என்னவோ ஏதோ என்று நான் பயந்து விட்டேன்.. அன்று போல் காய்ச்சல் ஏதுமில்லையே..?”என்று அக்கறையுடன் விசாரிக்க..

அதற்கு அனு பதில் கூறும் முன் குறுக்கிட்ட ராஜாராமன் “பயப்படுமளவிற்கு துக்க செய்தியை நாங்கள் கூறப் போவதில்லை சுஜிமா.. சந்தோசமான செய்தி சொல்லப் போகிறோம்.. மிகமிக சந்தோசமான செய்தி.. முக்கியமாக உனக்கு..”எனக் கூற..

“சந்தோசமான செய்தியா..?”என்று விழி விரித்த சுஜி.. என்ன என்பது போல் நோக்க.. அவரோ அவளைப் பார்த்து நகைத்து விட்டு.. மகனின் புறம் திரும்பி “ஷ்யாம்.. இத்தனை நாட்களாக.. இதை ஏன் எங்களிடமிருந்து மறைத்தாய்..?, தம்பி,தங்கையின் நல் வாழ்விற்காகத் தானே..?, இருவருக்காக நீ உன் ஆசைகளை ஒத்திப் போட வேண்டுமென்று எந்த அவசியமும் இல்லை.. ஒரு நல்ல காரணத்திற்காக நீ மறைத்தாய் என்பதினால் நான் உன்னை மன்னித்து விடுகிறேன்..”என்று மேலும் சிரித்தவரிடம் “என்ன மறைத்தேன் என்று கேட்க

நா எழுந்தாலும்.. விசயத்தை ஒருவாறு யூகித்து அமைதியாக நின்றிருந்தான் ஷ்யாம். அவனது கவனமெல்லாம்.. சுஜிப்ரியாவின் மீது படிந்திருந்தது.

அவர் கூறிய எதுவும் புரியாமல் பேந்த பேந்த விழித்தபடி நின்றிருந்த சுஜியிடம்.. "நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லையம்மா.. எங்கள் பிரபுவின் விருப்பத்திற்கு நாங்கள் ஒரு நாளும் தடை கூறியதேயில்லை. என் மனைவி,மகள் அனைவருக்குமே இதில் பரிபூர்ண சம்மதமிருக்கிறது.." எனக் கூற..

ஒன்றுமே விளங்காமல் தலையைப் பிய்த்துக் கொண்ட சுஜி.. "எதில்..?"என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைக்க.. அதற்கு கல கலவென்று சிரித்த அனு "இப்போதும் எதுவுமே தெரியாததைப் போல் நிற்பதைப் பாருங்கள் டாடி.. இருவருக்கும் ஆஸ்கார் கொடுக்கலாம்.. சுஜி.. இனியும் மறைத்து என்னைக் கலங்கடிக்காதீர்கள்.. எதில் என்றா கேட்டீர்கள்..?, இதோ பாருங்கள்.. இதில் தான்.."எனக் கூறிச் சிரிக்க.. அவள் கையிலிருந்த புகைப்படத்தைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டாள் சுஜி.

அவ்வளவு நேரமாக அவள் முகத்தில் நிலைத்திருந்த புன்னகை மறந்து இருள் சூழ்ந்து விட்டதை உணர்ந்த ஷ்யாம் எதைப் பற்றியும் சிந்திக்காமல் சட்டென்று அவள் கையைப் பற்றி.. "ஆமாம் டாடி.. நானும் சுஜியும் ஒருவரையொருவர் நேசிக்கிறோம்.. இத்தனை நாட்களாக மறைத்ததற்கு மன்னித்து விடுங்கள்.. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்.."என்று உணர்ச்சியற்ற குரலில் கூறி முடிக்க..

அவனது பதிலைக் கேட்டு துள்ளிக் குதித்து "ஹை,அண்ணன் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டான்.. கங்கிராட்ஸ் அண்ணி.."என்று கை பற்றி உலுக்கிய அனுவின் தொடுகையைக் கூட உணராமல்.. திகைப்பில் வாயடைத்துப் போய் செய்வதறியாது சுஜி ஷ்யாமை நோக்க.. அவளது கையை இறுகப் பற்றிய படி நின்று கொண்டிருந்த ஷ்யாமும் அப்போது அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

DO NOT COPY




Nindran kaathalai enni kalikkindren - Nivetha

# அத்தியாயம் - 14



**ஏடி சாத்திரங்கள் வேண்டேன் – நினது**

**இன்பம் வேண்டுமடி கனியே – நின்றன்**

**மோடி கிறுக்குதடி தலையை – நல்ல**

**மொந்தைப் பழைய கள்ளைப் போலே…**

**அ**ண்ணன் கல்யாணத்திற்குச் சம்மதித்து விட்டானென்று துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த அனுவைக் கண்டு மிரண்டு விழித்த படி தன் கையைப் பற்றியபடி நின்று கொண்டிருந்த ஷ்யாமை நோக்கினாள் சுஜி, அவன் சலனமற்றிருப்பதைக் கண்டுத் திகைத்துப் பற்களைக் கடித்தபடி “என்ன உளறல் இது..?, நான் எப்போது உங்களைக் காதலிப்பதாகக் கூறினேன்..?, எனக்கு ஏற்கனவே திருமணம் நிச்சயமாகி விட்டது.., தயவு செய்து இந்த உண்மையை உங்கள் பெற்றோரிடம் கூறி விடுங்கள்.. அல்லது என்னையேனும் கூற விடுங்கள்..”எனக் கூறிய படி அவனிடம் சிக்கியிருந்த கைகளை விடுவிக்க முயன்றாள்.

அவனோ அவள் கையை மேலும் இறுகப் பற்றி “சுஜூ.. வேண்டாம்.. அப்படியேதும் செய்து வைத்து விடாதே.. நான் சொல்வதைக் கேள்.. சிறிது நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இரு.. அம்மா நம்மை கவனிக்கிறார்கள்..”என்று அவன் முணுமுணுத்த வேளையில் சீதா… சுஜியின் அருகே வந்து.. “இங்கே வாம்மா.. எத்தனை நாட்களாக இதற்காக காத்திருந்தோம் தெரியுமா..?”என்றபடி அழைத்துச் செல்ல.. ஷ்யாமைத் திரும்பிப் பார்த்தபடி அவருடன் சென்றமர்ந்தாள்.

“அம்மா.. அண்ணி முகத்தைப் பார்.. அண்ணன் கையை விட மனமில்லை போலும்.. அண்ணா நீயும் அண்ணி அருகிலேயே அமரலாம்.. வா..”என்று அவனை இழுத்து சுஜியின் அருகில் அமர வைத்தாள். எரிச்சலுடன் தலை

DO NOT COPY

குனிந்தவளை நிமிர்த்தி “ஆமாம்மா.. இந்த நாளுக்காகத் தான் நானும் அனுவும் வெகு நாட்களாகக் காத்திருந்தோம்.. நீ முதன்முதலாக எங்கள் வீட்டிற்கு வந்த போது கோபமாக நீ ஷ்யாமிடம் பேசிய போதே ஓரளவு யூகித்திருந்தோம். அதன் பின் தான் அனு உன் வண்டி நம்பரை வைத்து உன் வீட்டைக் கண்டறிந்து உன்னுடன் பழகி.. கடைசியில் நாங்கள் நினைத்தவாறு உங்கள் சண்டையைத் தீர்த்து இருவரையும் சேர்த்து வைத்து விட்டாள்...”எனக் கூற..

அடப்பாவிகளா! குடும்பமே இப்படியா..? என்றவாறு ஷ்யாமை சுஜி முறைக்க அவனோ “அப்படிப் பார்க்காதே.., எனக்கும் இப்போது தான் தெரியும்..”என்றான். அன்னை கூறியதை சிரித்தபடியே கேட்டுக் கொண்டிருந்த அனு சுஜியிடம் “ஆமாம் சுஜி.. நீங்கள் அண்ணனுடன் ஏதோ சண்டையில் இருக்கிறீர்கள் என்று நினைத்தோம்.. அதை என்னவென்று கண்டு பிடித்து இருவரையும் சேர்த்து வைக்க வேண்டுமென்று எண்ணினேன் நான்.. ஏனென்றால் அண்ணன் எனக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்பவன்.. அவனுக்காக ஏதேனும் செய்ய எண்ணினேன். அதனால் தான் உங்கள் வீட்டைக் கண்டு பிடித்து உங்களுடன் பழகினேன்..”

“ஆனால் ப்ரியா.. உங்களுடன் பழகிய பின்பு.. நீங்கள் தான் அண்ணனுக்கு ஏற்றவர் என்று முடிவு செய்து விட்டேன். ஆன்ட்டி,அங்கிள்,சக்தி என்று அனைவருமே நல்ல குணமுடையவர்களாக.. என் குடும்பத்திற்கு ஏற்றவர்களாகத் தெரிந்தீர்கள்.. இருவரில் யார் அதிர்ஷ்டசாலியென்றே கூற முடியாது.. உங்கள் இருவருக்கும் அப்படியொரு குணம்..”

“அண்ணா.. உன்னிடம் ஆரம்பத்திலேயே இதைப் பற்றித் தெரிவிக்காதது தப்பு தான்.. நான் கூறியிருந்தால்.. நீயும்,ஸ்ரீதரும் செட்டில் ஆக வேண்டும் அனுமா.. அதன்பின் தான் என் கல்யாணம் எனக் கூறி என்னைச் சமாளித்திருப்பாய்.. எங்கள் இருவரின் நலனுக்காக நீ உன் வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டிய அவசியமில்லை அண்ணா.. அண்ணியுடன் சந்தோசமாக வாழலாம்..” எனக் கூற..

இவளுடன்.. சந்தோசமாக..?, நான்..?, ஆண்டவா..! என்று இவளைச் சந்தித்தேனோ அன்றிலிருந்து ஏகப்பட்டப் பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.. ஆனால் அனு.. நீ படிப்பதைத் தவிர அனைத்து வேலையும் செய்கிறாயே.. உன்னை.....

இப்படியெல்லாம் மனதுக்குள் எண்ணினாலும் வெளியே எதையும் வெளிப்படுத்த முடியவில்லை ஷ்யாமினால். வேறு வழியில்லாமல் தங்கையிடம் இளித்து வைத்தான். தன் அருகில் அமர்ந்திருந்த சுஜிப்ரியாவின் உஷ்ணமான பார்வையை வேறு சமாளித்தாக வேண்டிய தன் தலையெழுத்தை

DO NOT COPY

எண்ணி.. எப்போதோடா இங்கே இருந்து நகரலாம் என்ற படியே அமர்ந்திருந்தவன்.. அன்னையிடம்..

“அம்மா.. நீங்கள் பேசியது போதும்.. உங்கள் மருமகள்.. வாழ்நாள் முழுதும் நம் வீட்டில் தான் இருக்கப் போகிறாள்.. பிறகு பேசிக் கொள்ளுங்கள்.. நான் அவளை வீட்டில் விட்டு விட்டு வருகிறேன்..”எனக் கூறிவனிடம் சலித்துக் கொண்ட சீதா.. “என்ன தம்பி.. நீ தான் வேலை,வேலை என்று அலைந்து கொண்டு என்னுடன் அமர்ந்து 4 வார்த்தை பேச யோசிப்பாய்.. இப்போது என் மருமகளையும் என்னுடன் பேச விடாமல் பண்ணுகிறாயே..”என்றார்.

4 வார்த்தையென்ன..?, விட்டால் 400 வார்த்தைகள் கூடப் பேசுவாள்.. ஆனால் அதன் பின் வரப் போகும் பிரச்சனையை யார் சமாளிப்பது..?, “இல்லைம்மா.. இருவருக்கும் அவசரமான வேலையிருக்கிறது.. செல்கிறோம்..”என்றபடி பதிலை எதிர்பாராமல் சுஜியின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவனது வீட்டை விட்டு சற்று தூரம் வந்ததும் கையை உறுவிக் கொண்டவள்.. கோபமாக அவனிடம் “நீங்கள் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..?, அந்த ஃபோட்டோ யார் அனுப்பியது..?, என்னைக் காதலிப்பதாக ஏன் பொய் கூறினீர்கள்..?, உங்கள் தங்கை என்னிடம் திட்டமிட்டுத் தான் பழகினாளா..?, எதற்காக இந்த நாடகம்..?, கடவுளே!, பதில் கூறுங்கள்.. எனக்கு ஒன்றுமே புரியவில்லை..”

“உங்கள் தம்பியின் தவறைச் சுட்டிக் காட்டியதற்குத் தான் என்னை பழி வாங்கத் திட்டமிட்டீர்களா..?, யார் அந்தப் புகைப்படத்தை அனுப்பியது..?, சொல்லுங்கள்..”என்று தன் சட்டையைப் பற்றி உலுக்கியவளின் கைகளை விலக்கி.. “சுஜூ.. நான் சொல்வதைத் தயவு செய்து பொறுமையாகக் கேள்.. கத்தி ஆர்ப்பரிப்பதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.. விஷயம் கை மீறிப் போய் விட்டது..”என்றவன் சிறிது இடைவெளி விட்டு பெரு மூச்சுடன் தொடர்ந்தான்.

“இன்று மாலை உன் தந்தை என் அலுவகத்திற்கு வந்திருந்தார்...”என்றவனை “அப்பா.. வந்தாரா..?, ஏன்..?, அவர் எதற்காக உங்களைப் பார்க்க வர வேண்டும்..?, அப்படியானால்.. அந்த ஃபோட்டோ.. என் வீட்டிற்கும்...”என்றவளுக்கு கண்ணீர் எட்டிப் பார்க்க அவன் அமைதியாக இருப்பதை உணர்ந்து “ம், அப்படித் தானே..?, சொல்லுங்கள்..”என்று அழுத படியே வினவினாள்.

எப்போதும் சிரித்தபடி.. அனைவரையும் வம்பு செய்த படி. கலகலப்புடன் திரியும் சுஜி.. இன்று கண்ணீர் விடுவதைக் கண்டு உள்ளே ஏதோ பிசைய..

DO NOT COPY

“சுஜூ...”என்றபடி அவள் அருகே சென்றவன்.. அவள் கையைப் பற்றி.. “ஆம் சுஜூ... என் வீட்டிற்கு அனுப்பியது போலவே.. சுந்தரின் வீட்டிற்கும் இந்தப் புகைப்படங்களை அனுப்பியிருக்கிறார்கள்.. அதனால்.. அதனால்.. சுந்தரின் வீட்டார் இந்தத் திருமணத்தை நிறுத்தி விட்டார்களாம்.. “என்றவனை ஆத்திரத்துடன் இடை மறித்தவள்..

“கேவலம் 4 புகைப்படங்கள்.. என்னுடைய நடத்தையை,ஒழுக்கத்தை தீர்மானித்து விடுமா..?, கல்யாணம் நின்று போனதற்கு இது தான் காரணமென்றால்.. இந்தத் திருமணம் நடக்காமல் போனதில் எனக்கு மகிழ்ச்சி தான்.. “என்று ரோஷமாகக் கூற..

பிரபுவோ.. மகாலிங்கம் கூறியது நூற்றுக்கு நூறு சரியென்றெண்ணினான். இவள் ரோஷம் பார்ப்பவள்.. தன் ஒழுக்கத்தை சந்தேகிக்கும் ஒருவன் கணவனாக வருவதை விரும்பாதவள்.. அதனால் இந்தத் திருமணம் நின்று போனதில் நிச்சயம் வருத்தப் பட மாட்டாள். ஆனால் இதன் பின்.. திருமணமே வேண்டாம் என்று எண்ணினால்...?

தன் எண்ணங்களை மறைத்து அவள் பேசுவதைக் கவனித்தான். “இதே ஃபோட்டோக்கள்.. திருமணத்திற்குப் பிறகு கிடைத்திருந்தால்.. என்ன செய்திருப்பார்கள்..?, என்னை வீட்டை விட்டு துரத்தியிருப்பார்களா..?, நம்பிக்கையில்லாமல் எப்படித் தன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கிறார்கள்..?, ஒரு பெண்ணின் ஒழுக்கத்தைச் சந்தேகிக்கும் எந்த ஆணும் ஆணே அல்ல.. என் சேலை,நகையெல்லாம் எடுத்துக் கொடுக்கிறேன்.. இந்த ஃபோட்டோவை அனுப்பிய நல்லவனும்,இதற்காக திருமணத்தை நிறுத்திய உத்தமர்களும் மாட்டிக் கொள்ளட்டும்.. ஈவு,இரக்கமற்ற அரக்கர்கள்.. ராட்சசர்கள்.. ச்சி.. இனி என் வாழ்வில் திருமணத்தைப் பற்றி நினைத்தேனும் பார்ப்பேனா..?, கல்யாணமாவது.. மண்ணாங்கட்டியாவது..”என்று கண்ணீருடன்... கோபமாகப் புலம்பியவளிடம்..

“இது தான்.. இது தான் உன் தந்தையின் பயமே.. நீ கல்யாணமே வேண்டாமென்று வெறுத்து விடுவாய் என்று அவர் சரியாகத் தான் கூறினார். சுஜூ... யாரோ ஒருவன் அனுப்பிய இந்தப் புகைப்படங்களை நம்பி திருமணம் வேண்டாமென்று கை விட்டவனுக்காக.. நீ காலம் முழுதும் கன்னியாக இருப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது.. அவன் இதையெல்லாம் மறந்து வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு சந்தோசமாகத் தான் இருப்பான். நீ உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டு கன்னியாக இருப்பாயா..?, முட்டாள்தனம்..”எனக் கூறினான்.

அவள் பதிலேதும் பேசாமல் அமைதியாக இருப்பதைக் கண்டு “நான் சொல்வதைக் கேள் சுஜூ.. உணர்ச்சி வேகத்தில் முட்டாள்தனமாக

முடிவெடுப்பதை விடுத்து நிதானமாக யோசி..”என்றவனை நிமிர்ந்து நோக்கியவள்..

“என்னைத் திருமணம் செய்து கொள்ளும் படி என் தந்தை உங்களிடம் கூறினாரா..?”என்று வினவினாள். அவளது கேள்விக்கு பதில் கூறத் தயங்கியவன்... “சுஜூ.. இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் குழப்பத்தைத் தீர்க்க.. நம் திருமணத்தைத் தவிர வேறு வழியில்லை.. என் வீட்டிலும் நாம் இருவரும் நேசிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. தயவு செய்து உன் தந்தையின் இந்த முடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்காதே... சுஜூ.. நில்.. எங்கே செல்கிறாய்... ஏய்...”என்று அவன் சத்தமிட்டதைப் பொருட்படுத்தாமல் தன் வண்டியில் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

“இடியட்..”என்று மனதுக்குள் திட்டியவன் சுஜியின் தந்தைக்கு ஃபோன் செய்து நடந்த அனைத்தையும் தெரிவித்தான். “என் வீட்டில் நாங்கள் இருவரும் விரும்புவதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் சார்.. இந்த ஃபோட்டோக்களைக் கண்டு முடிவே செய்து விட்டார்கள்.. அதனால் நான் சுஜியைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக அவர்களிடம் தெரிவித்து விட்டேன்.. ஆனால்.. ஆனால் சுஜிக்கு இதில் ஈடுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.. நான் கூறிய எதையும் அவள் காதில் வாங்கவேயில்லை.. கோபமாகக் கிளம்பி விட்டாள்.. எனக்கு.. எப்படி அவளைச் சமாளிப்பதென்றே புரியவில்லை சார்.. என்னால்.. என்னுடன் பழகியதால்.. அவள் இன்று இத்தனைப் பிரச்சனைகளை சந்திப்பதைக் கண்டு எனக்கு உறுத்தலாக இருக்கிறது சார்...”என்றபடியே தலை கோதியவனை..

“ஷ்யாம்.. நீ வருத்தப் படுவதற்கோ.. உறுத்தலாக உணர்வதற்கோ.. இதில் உன் தவறு ஏதுமில்லை.. ஏன்..?, உங்கள் இருவருடைய தவறுமே இல்லை.. அந்தப் புகைப்படங்களை அனுப்பியவனது நோக்கம் என்னவென்பது நமக்கு இன்னும் புரியவில்லையே.. அவனது நோக்கம் உன்னை அவமானப்படுத்துவதா..?, அல்லது சுஜியை அவமானப் படுத்துவதா..?, இதையெல்லாம் யோசிப்பதற்கு இப்போது நேரமில்லை தம்பி.. கூடிய விரைவில் உங்கள் இருவருக்கும் திருமணத்தை முடித்தாக வேண்டும்.. சுஜியை நான் சம்மதிக்க வைக்கிறேன்..”என்றவர் சிறிது இடைவெளி விட்டு “நன்றி தம்பி..”என்று நா தளுதளுக்கக் கூற.. அவருக்குப் பதிலேதும் கூறாமல் “சுஜியிடம் பேசுங்கள் சார்..”என்று ஃபோனைக் கட் செய்தான்.

வண்டியில் சென்று கொண்டிருந்த சுஜியின் மனமோ உலைக் களமாகக் கொதித்துக் கொண்டிருந்தது. புகைப்படத்தைக் காட்டி திருமணத்தை நிறுத்தி விட்டுச் சென்ற மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றி அவளுக்கு எந்த வருத்தமும் இல்லை. இப்படியொரு நம்பிக்கையற்ற ஒருவனுடன்.. அவனது

DO NOT COPY

சொந்தங்களுடன் வாழ்க்கை நடத்த நேர்ந்திருந்தால்.. அப்படியொரு பேரழிவிற்கு இன்றைய நிலை தேவலாம் தான்..!

ஆனால்.. ஆனால்.. அப்பா எதற்காக ஷ்யாமைச் சந்திக்க வேண்டும்..?, என்னைத் திருமணம் செய்து கொள்ளும் படி எதற்காகக் கேட்க வேண்டும்..?, அப்பாவிடம் தெளிவாகக் கூறி விட வேண்டியது தான் யாரோ ஒருவன் என் மேல் பரிதாபப் பட்டு எனக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று!

ஏதேதோ எண்ணங்களுடன் வீடு வந்து சேர்ந்தவளை வாசலிலேயே வரவேற்றார் மகாலிங்கம். அமைதியாக வீட்டினுள் நுழைபவளை வள்ளி அழுகையுடன் பார்த்துக் கொண்டிருக்க.. அன்னையின் புறம் திரும்பிய சுஜி "அம்மா.. எதற்காக அழுகிறாய்..?, என்ன நடந்து விட்டது இப்போது..?, யாரோ ஒரு பொருக்கி 4 புகைப் படங்களை அனுப்பி விட்டதால் என் வாழ்க்கையே வீணாகி விட முடியுமா என்ன..?, என்னுடன் பழகிய... என்னைப் பற்றி நன்றாக அறிந்த யாரேனும் இதை நம்புவார்களா..?, நான் தவறு செய்யவில்லை.. திருமணம் நினறததற்காக வருத்தப் படவுமில்லை. நீ அழுது.. அழுது.. என்னை பலவீனப் படுத்தாதே.. ப்ளீஸ்.."எனக் கூற..

"நாங்களும் அதை நம்பவில்லை சுஜிம்மா.. ஆனால்.. வீணான கெட்டப் பெயருக்கு ஆளாக நேரிட்டு விட்டதே என்று தான் எனது வருத்தம்.. நான் அழவில்லையம்மா.. அழவில்லை.."என்று சேலை முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு "உனக்கு காஃபி கொண்டு வருகிறேன்.."என்று உள்ளே சென்றார் வள்ளி.

அன்னை நகர்ந்ததும் தந்தையை கோபத்துடன் நோக்கிய சுஜி "நீங்கள் ஷ்யாமின் அலுவலகத்திற்குவ் சென்றீர்களாப்பா..?, ஏன் அப்பா..?, எதற்காகச் சென்றீர்கள்..?, யாரோ ஒருவனிடம் கெஞ்சி வாழ்வைப் பெறும் அளவிற்கு உங்கள் மகள் கேவலமாகிப் போனாளா..?, ஏன் டாடி இப்படி செய்தீர்கள்.."என்று கதற..

எதைக் காணக் கூடாதென்று மகாலிங்கம் பாடு பட்டாரோ.. அதை.. தன் அன்பு மகளின் கண்ணீரைக் காண வேண்டிய கட்டாயத்தைக் கண்டு நொந்து.. வேகமாக அவளருகே சென்று "ப்ரியா.. வேண்டாம் கண்ணே.. நீ கண்ணீர் விடுவதற்கா உன்னைச் செல்லமாக.. உன் போக்கில் வளர்த்தேன்...?, ஏதோ கெட்ட நேரம்.. அந்தப் புகைப்படங்களின் உருவில் உன் வாழ்வில் விளையாடிக் கொண்டிருக்கிறது.. இந்தப் பிரச்சனையெல்லாம் விரைவில் தீர்ந்து விடும்.."

DO NOT COPY

“நான் எண்ணியதைப் போல்.. ஷ்யாம் கூறியதைப் போல்.. நீ அவனையே திருமணம் செய்து கொள்ளம்மா.. இந்த விஷயம் சுந்தர் வீட்டாரின் ரூபத்தில் நம் சொந்தங்களுக்கிடையே பரவும் முன் இந்தத் திருமணத்தை முடித்து விடுவோம்.. என் மானத்தைப் பற்றிக் கவலைப் பட்டோ... நம் குடும்ப கௌரவத்தைக் கருத்தில் கொண்டோ நான் இந்த முடிவை எடுக்கவில்லை சுஜிம்மா..”

“எனக்கு உன் வாழ்வு.. உன் நலன்.. உன் சந்தோசம் இது மட்டும் தான் முக்கியம்.. அது உனக்கு புரிகிறது தானேடா...?, என் ஆயுள் முழுதும் நீ மகிழ்ச்சியாக வாழ்வதைப் பார்க்க வேண்டும்.. உன் சிரிப்பைப் பார்த்துக் கொண்டே தான் நான் கண் மூட வேண்டும்.. உன்னைத் தவிர எனக்கு எதுவுமே பெரிதில்லை கண்ணா.. அப்பா உனக்கு நல்லது மட்டும் தான் செய்வேன்.. என் மேல் நம்பிக்கை வைத்து இந்தத் திருமணத்திற்கு சம்மதம் சொல்லம்மா..”என்று அவள் கை பற்றிக் கெஞ்சியவர் அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு..

“நீ சம்மதிக்கவில்லையென்றால்.. உன் அப்பா.. உயிருடன் இருந்தாலும்.. பிணமாக நடமாடுவதைத் தான் நீ காண வேண்டி வரும்....”என்று முடித்து விலகப் பார்த்தவரை “அப்பா...”என்று கதறியவள்.. “நான்.. நான் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன்.. உங்கள் விருப்பம் போல்.. செய்யுங்கள்..” எனக் கூறிவிட்டு அழுது கொண்டே தன் அறைக்கு ஓடினாள்.

சுஜி அழுது கொண்டே செல்வதைப் பார்த்தபடியே உள்ளே நுழைந்த சக்தி “டாடி.. என்னவாயிற்று..?, சுஜி அழுகிறாளா..?, உங்கள் முகமும் சரியில்லையே.. என்ன நடந்தது டாடி.. அம்மா..”என்றழைத்தபடியே சமையலறைக்குள் நுழைந்தவன்.. அங்கே வாயை மூடிக் குலுங்கி அழுது கொண்டிருந்த அன்னையைக் கண்டு பதறி.. அருகே ஓடினான்.

“அம்மா.. ஏன்.. ஏன் அழுகிறாய்... என்ன நடந்தது..?, அம்மா.. அழுகையை நிறுத்து.. இந்தத் தண்ணீரைக் குடி..”என்று அவரைச் சமாதானப் படுத்தியவன் “என்னம்மா.. என்ன நடந்தது..?”என்று வினவினான். ஃபோட்டோ பற்றிய விவரங்களைக் கூறி சுந்தரின் வீட்டார் திருமணத்தை நிறுத்தியதிலிருந்து ஆரம்பித்து அனுவின் அண்ணன் சுஜியைத் திருமணம் செய்யச் சம்மதித்தது வரை அனைத்தையும் தெரிவித்தார்.

அவர் கூறியதைக் கேட்டுக் கோபமுற்ற சக்தி தந்தையிடம் வந்து “அப்பா.. யார் இதை அனுப்பியதென்று கண்டறியாமல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்..?, அந்த சுந்தர் அன்று எப்படி பேசிச் சென்றான்.. இன்று இந்த ஃபோட்டோக்களை நம்பி மனதை மாற்றிக் கொண்டானா..?, சூழ்நிலைக்கேற்றார் போல் மாறிக் கொள்கிறான்..? பச்சோந்தி.. அப்பா.. வாங்கப்பா.. அவனை செருப்பால்

DO NOT COPY

அடித்தால் தான் என் மனம் ஆறும்..”என்று கோபத்தில் பொங்கியவனை.. “சக்தி.. அவனை அடிப்பதால்.. கோபப் படுவதால்.. நடந்த எதையும் மாற்ற முடியாது.. சுந்தர் வீட்டாரிடம் பகைத்துக் கொள்வதால் நமக்கு ஆகப் போவது ஏதுமில்லை.. இனி நமக்கு ஷ்யாம்-சுஜியின் திருமணம் மட்டுமே முக்கியம். அதில் மட்டும் கவனத்தை செலுத்து..”என்றவரிடம்..

“அப்பா.. எப்படிப்பா..?, சூழ்நிலைக் கைதிகளாக மாட்டிக் கொண்டிருக்கும் இருவரையும் எப்படிப்பா சேர்த்து வைக்க முடியும்..?, அப்பா.. கல்யாணம் என்பது ஆயுசு முடியும் வரை தொடரக் கூடிய புனிதமான பந்தம்.. கட்டாயத்தின் பேரில் இருவரும் எப்படி ஒன்றிணைவார்கள்..?, இது முட்டாள்தனம்...”என்று சக்தி கூற..

“சக்தி.. ஷ்யாம் மிகவும் நல்லவன்.. புத்திசாலி.. அவனுடன் உன் அக்காவின் வாழ்வு மிகச் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.. இவர்களிருவரும் இணைய வேண்டுமென்று விதி இருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்..?, இவர்களிருவரும் நேசிப்பதாகவே ஷ்யாமின் வீட்டில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்...”என்றவர் ஷ்யாம் கூறிய அனைத்தையும் தெரிவித்தார்.

“அனு நம் வீட்டிற்கு வந்தது.. நம்முடன் பழகியது.. அனைத்துமே சுஜியைக் கருத்தில் கொண்டு தான்.. நம் வீட்டிற்கு ஃபோட்டோக்களை அனுப்பியது போல்.. அந்தக் கயவன் ஷ்யாமின் வீட்டிற்கும் அனுப்பியிருக்கிறான்.. அப்போது தான் தங்கையிடமிருந்து அனைத்து உண்மைகளும் தெரிய வந்திருக்கிறது ஷ்யாமிற்கு.. ஆக.. அவன் வீட்டிலும் இப்போது.. சுஜியை ஷ்யாமிற்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று உறுதியாக இருக்கிறார்கள்.. இந்த விதியின் விளையாட்டை என்னவென்று சொல்ல முடியும் சக்தி..?, நடப்பது எல்லாம் நன்மைக்குத் தான்.. ஆத்திரப்படாமல்.. உன் அக்காவைச் சமாதானப் படுத்து.. போ..”என்று அவனை அனுப்பி வைத்தார்.

சுஜியின் அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்த சக்திக்கு சோர்வுடன் படுக்கையில் சாய்ந்திருந்தவளைக் கண்டு நெஞ்சு விம்மியது.. காய்ச்சல்,தலைவலி என்றால் கூட இப்படிச் சோர்ந்து போக மாட்டாள்.. அவளருகே சென்று “சுஜி..”என்றழைத்தான். “ம்..”என்றபடி திரும்பியவள்.. சக்தியைக் கண்டு எழுந்தமர்ந்தாள்.

“அப்படியொரு நல்லவனுடனான திருமணம் நின்று போனதற்கு நீ இப்படி சோர்ந்து போக மாட்டாய் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும் சுஜி.. அப்பாவின் இந்த முடிவு உனக்குப் பிடிக்கவில்லையென்றால் கூறி விடு.. உன் வாழ்க்கைக்கு உன்னுடைய விருப்பம் மிக மிக முக்கியம். சொல் சுஜி..”என்று கேட்க..

DO NOT COPY

“எனக்குச் சம்மதம் தான் டா.. நீ என்ன பெரிய மனிதனைப் போல் கேள்வியெல்லாம் கேட்கிறாய்..?, போடா.. இப்போது தான் ஆஃபிஸில் இருந்து வந்தாயா..?, உடை கூட மாற்றவில்லை..?, அம்மா செய்த உப்புமாவைச் சுவைக்கவில்லையா..?”என்று வரவழைத்த சிரிப்புடன் வினவ..

அவளை அழுத்தமாக நோக்கிய சக்தி “அப்பா கூறியதற்காக நீ உன் வாழ்வைத் தியாகம் செய்தாக வேண்டிய அவசியமில்லை.. என்னிடம் நடிக்காதே.. உண்மையைச் சொல் சுஜி..”என்று மீண்டும் வினவினான்.

அவசரமாக மறுத்துத் தலையாட்டியவள் “இல்லை சக்தி.. நான் என் வாழ்வைத் தியாகம் செய்ய நினைக்கவில்லை.. அதற்காக அப்பாவின் விருப்பத்தையும் என்னால் மறுக்க முடியாது.. அனாவசியமாகக் கேள்வி கேட்காதே சக்தி.. இனி நடக்கப் போவதை கவனிப்போம்.. நீ இப்படிப் பேசி அம்மாவையும்,அப்பாவையும் வருந்தச் செய்யாதே..”என்று கண்டிப்புடன் முடித்தாள்.

“என்னவோ செய்..”என்று எரிச்சலுடன் எழுந்து சென்றவனை “சக்தி ஒரு நிமிஷம்..”என்று நிறுத்திய சுஜி “இந்த உண்மைகளையெல்லாம் அனுவிடம் கூறி விடாதே.. அவர்களின் வீட்டில் நாங்கள் இருவரும் விரும்புவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. இதையெல்லாம் கூறி வீணான குழப்பங்களை உண்டாக்க வேண்டாமென்று அவர் நினைக்கிறார்..”என்று தயங்கித் தயங்கி கூறி முடித்தாள்.

அவளை ஆச்சரியமாக நிமிர்ந்து நோக்கிய சக்தி.. குழப்பமான பார்வையை அவள் மீது செலுத்தி விட்டு.. “அவளிடம் சொல்வதொன்று தான் குறை இப்போது..”என்று முணுமுணுத்தபடியே வெளியேறினான் சக்தி.

மகள் வாழ்க்கை சிறக்க வேண்டுமென்று யாரோ ஒருவனின் காலில் விழுந்து இந்தத் திருமணத்தை நடத்த எண்ணியிருக்கும் மகாலிங்கம் ஒரு புறம்... தன் வாழ்வில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதையே புரிந்து கொள்ள முடியாமல் சூழ்நிலைக் கைதியாகியிருக்கும் சுஜி ஒரு புறம்..

அந்தப் புகைப்படத்தை அனுப்பிய அந்தக் காவாலியை கண்டந்துண்டமாக வெட்டிப் போட வேண்டுமென்று துடிக்கும் சக்தி ஒரு புறம்.. நீண்ட நாளைக்குப் பிறகு ஷ்யாம் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டதை எண்ணி மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் ஷ்யாமின் குடும்பம் ஒரு புறம்.. இதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல்.. இப்போதைய குழப்பத்தைத் தீர்த்தாக வேண்டுமென்று.... அடுத்து நடக்கப் போகும் விஷயங்களைப் பற்றிச் யோசித்துக் கொண்டிருக்கும் ஷ்யாம் ஒரு புறம் என்று.. 2 குடும்பங்களும் பல விதமான உணர்ச்சிக் கொந்தளிப்பில் புரண்டு கொண்டிருந்தது.

**அ**ந்த வாரக் கடைசியிலேயே ஷ்யாமின் குடும்பத்தைத் தன் வீட்டிற்கு அழைத்திருந்தார் மகாலிங்கம். இருவரின் பெற்றோரும் திருமணத்தை விரைவில் முடித்து விட வேண்டுமென்று தீர்மானித்திருந்ததால் அன்றே நிச்சயதார்த்தம் செய்து விடலாமென்று முடிவு செய்திருந்தனர். இருவருடைய வீட்டினரும் கலந்துரையாடிய பின்.. அந்த ஃபோட்டோ பற்றிய விசயத்தை மறந்தே போனார்கள்.

சனிக்கிழமை காலை தன் வீட்டிற்குள் நுழைந்த அனுவின் குடும்பத்தைச் சிறிது தயக்கத்துடனே வரவேற்றான் சக்தி. வாசலில் அரவத்தை உணர்ந்து வெளியே வந்து மகிழ்ச்சியுடன் வருகை தந்திருந்தவர்களை வரவேற்றனர் மகாலிங்கமும்,வள்ளியும்... அனைவரிடமும் வரவேற்பான முறுவலைச் செலுத்திய சக்தி.. தன் புறம் திரும்பாததைக் கண்டுத் திகைப்புற்ற அனு.. என்னவாயிற்று இந்தச் சாப்பாட்டு ராமனுக்கு..? முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறான்..?, என்று யோசித்தபடியே சென்றமர்ந்தவளின் பார்வை அவனையே சுற்றி வந்தது.

முதன்முதலாக சுஜியின் வீட்டிற்கு வருகை தந்திருந்த ஷ்யாமின் மனதோ பற்பல எண்ணங்களில் மூழ்கியிருந்தது. தன் கை விரல்களைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தவனைக் கண்டு "சக்தி.."என்று மகனை அழைத்த மகாலிங்கம் "சுஜியை அழைத்து வாப்பா.."என்று அனுப்பினார்.

சக்தியுடன் நடந்து வந்த சுஜியைக் கண்ட அனு "வாவ்...!"என்றபடி அவளருகே ஓடி.. "அண்ணி.. இந்தப் புடவை உங்களுக்கு எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா..?, இவ்வளவு நாட்களாக.. ஸ்கர்ட்,ஜீன்ஸில் பார்த்த உங்களை புடவையில் பார்க்க எவ்வளவு நன்றாக இருக்கிறது தெரியுமா..?, அண்ணன் அசந்து போகப் போகிறான்.. ஹா ஹா.."என்று சிரித்தவள்.. சக்தியின் தோளை இடித்து "என்ன Mr.ராமன் நான் கூறியது சரி தானே..?"எனக் கேட்க.. அவனோ உச்சுக் கொட்டி விட்டு விலகிச் சென்று விட்டான். "போடா.."என்றபடி "நீங்க வாங்க அண்ணி.."என்றழைத்துச் சென்றாள்.

நீல நிறப் புடவையில்.. தலை நிறைய மல்லிப் பூவுடனும்.. காதில் ஜிமிக்கியுடனும்.. நடந்து வந்தவளை நோக்கிய ஷ்யாமிற்கு... தன்னாலேயே.. இவள் என்னவள் என்கிற எண்ணம் மனதில் விருட்சமாக வளர்ந்தது. வரவழைத்த முறுவலுடன் அனைவரையும் வரவேற்றவள்.. ஷ்யாமின் புறம் பார்வையைக் கூடச் செலுத்தவில்லை. இவளுக்கு நான் ஒருவன் மட்டும் தான் கெட்டவனாகத் தெரிவேன்..?, என்றேனும் இவள் என்னைப் புரிந்து கொள்வாளா..? என்றெண்ணிய ஷ்யாம் அவளை முறைத்தபடி எரிச்சலுடன் எழுந்தான்.

DO NOT COPY

தன் எண்ணங்களுடன் போராடி.. சுற்றியிருப்போரை மறந்து சட்டென இருக்கையை விட்டு எழுந்த ஷ்யாம்.. அனைவரும் தன்னை நோக்குவதை உணர்ந்து.. "இ..இல்லை.. அ..அது.. அந்த ரவிவர்மாவின் ஓவியத்தைப் பார்க்க எழுந்தேன்.."என்றபடி ஓவியத்தின் அருகே சென்றான்.

அவன் நகர்ந்ததும் மகளிடம் "எல்லாருக்கும் அந்தக் கா∴பியை எடுத்துக் கொடும்மா.."என்று வள்ளி கூற.. எழுந்து சென்று அனைவரிடமும் கொடுத்தவள்.. சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த ஷ்யாமின் அருகே சென்றாள்.

தன்னிடம் டிரேயை நீட்டியவளை நிமிர்ந்து நோக்கிய ஷ்யாம்.. "தேங்க்ஸ்.."என்றபடி கா∴பியை எடுத்துக் கொண்டான். அதன் பின் நகரப் பார்த்தவளை "நில்.."என்று நிறுத்தியவன்.. யாருக்கும் கேட்டு விடாத படி.. தணிந்த குரலில்.. "முகத்தை ஏன் இப்படி வைத்திருக்கிறாய்...?, காதலனைக் கைப் பிடிக்கப் போகும் காதலியின் முகமா இது..?"என்று நக்கலாக வினவியவன் தொடர்ந்து "என் வீட்டில் இருப்பவர்கள் அனைவரும் நாம் காதல் மணம் புரிவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. தயவு செய்து முகத்தை சிரித்தாற் போல் வைத்துக் கொள்.. அவர்கள் மனம் நோவதையோ... வருத்தப் படுவதையோ.. கண்டிப்பாக நான் அனுமதிக்க மாட்டேன்.."எனக் கூறினான்.

"உங்கள் குடும்பத்தினரின் சந்தோசம் கெடக் கூடாது.. யார் எப்படிப் போனாலும் பரவாயில்லை.. யார் மனதையும் நோகடித்தாலும் பரவாயில்லை.., எனக்கென்று எந்த வருத்தமோ.. கோபமோ இருக்கக் கூடாது.. அப்படித் தானே..?"என்று கோபமாக வினவ..

யாரேனும் பார்த்து விட்டார்களோ என்று அனைவரையும் திரும்பிப் பார்த்த ஷ்யாம் அவர்கள் அனைவரும் பேச்சில் மும்முரமாக இருக்க.. அவளைக் கோபமாக நோக்கியவன் "சத்தம் போட்டு பேசாதே... யார் காதிலேனும் விழுந்து விடப் போகிறது.. நிலைமையைப் புரிந்து நடந்து கொள் சுஜூ.. இப்போது உண்மை தெரிந்தால்.. வீண் குழப்பம் தான் மிஞ்சும்.. தயவு செய்து நான் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்க முயற்சி செய்.."என்று பொறுமையுடன் விளக்கியவனை.. அவள் கோபமாகத் தடுக்க..

என்ன கூறியிருப்பாளோ..?, மகாலிங்கம் "சுஜிம்மா.."என்றழைத்து அவளது வேகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.. மற்றதை மறந்து "என்னப்பா..?"என்று வினவியவளிடம் "உன் அறையிலிருக்கும் ஓவியங்களை எல்லாம் ஷ்யாமை அழைத்துச் சென்று காண்பி.."என்று கூற.. "சரிப்பா.."என்றவள் ஒரு தலையசைப்புடன் அவனை அழைத்து விட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

அவள் அறைக்குள் நுழைந்தவனைக் கோபமாக ஏறிட்டவள்.. “என்னை கட்டுப் படுத்தும் உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தது..?, ஆணையிடுகிறீர்களா..?, நீங்கள் வாழ்க்கைப் பிச்சை போட்டு விட்டதால்.. காலம் முழுதும் உங்கள் காலடியில் விழுந்து கிடப்பேனென்று என்ணினீர்களா..?, நான் நினைத்தால் இப்போதே உங்கள் பெற்றோரிடம் அனைத்தையும் கூறி இந்தத் திருமணத்தை நிறுத்த முடியும்..”என்றவளை “ஏய்..”என்று உறுமியபடி அருகே வந்த ஷ்யாம்.. கோபத்துடன் அவளை ஏறிட்டு “இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசினால்.. பல்லை உடைத்து விடுவேன்...”என்றவன் தொடர்ந்து “திமிர் பிடித்தவள்.. போய் சொல்லேன்.. அதன் பின் என்ன நடக்குமென்பதைக் கொஞ்சமேனும் யோசித்துப் பார்த்தாயா..?, 2 குடும்பமும் வருத்தத்தில் ஆழ்ந்து விடும்.. என் குடும்பத்தை விடு.. நீ முதலில் உன் தந்தையைப் பற்றி யோசி..”

“அவர் என்னிடம் பேசியதைப் பற்றி உன்னிடம் கூறினாரா..?, தன் மகள் வாழ்விற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருக்கும் அவரைப் பற்றி உனக்குத் தெரியுமா..?, அவர் செய்த காரியத்தைப் பற்றி உனக்குத் தெரியுமா..?, அப்படிப்பட்ட ஒரு தந்தைக்காக.. அவருடைய குணத்திற்காக மட்டுமே நான் இந்தத் திருமணத்தை ஏற்றேன்.. இல்லையென்றால்.. உன்னைப் போன்ற ஒரு தலைவலியைக் காலம் முழுதும் முதுகில் சுமக்க எனக்கென்ன தலையெழுத்தா..?” என்று வினவ..

தன்னிரக்கம் தலைக்கேற அவனைக் கண்ணீர் ததும்பிய விழிகளால் நோக்கிய சுஜி “என் அப்பாவிற்காக.. யாரும் எனக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டிய அவசியமில்லை.. அந்த அளவிற்கு நான் தரமிறங்கிப் போய் விடவில்லை.. பிடிக்காத திருமணத்தில் சிக்கிக் கொண்டு இந்த.. இந்தத் தலைவலியை நீங்கள் காலம் முழுதும் சுமக்க வேண்டிய தேவையில்லை..”என்று தேம்பலுடன் முடித்தவளைக் கண்டு..

சட்டைக் காலர் பட்டனைக் கழட்டித் தலை முடியைப் பின்னே கோதியவன்.. அவள் புறம் திரும்பி.. “பிடிக்கவில்லையென்று நான் சொன்னேனா..?”என்று அமைதியாக வினவினான். அவனது கேள்வியை முழுமையாக உணர முடியாமல்.. விழித்தவளின் அருகே வந்து அவளது இடது கையைப் பற்றி.. அவளது தோளில் நெற்றியைப் பதித்து அழுத்தியவன்.. “ப்ளீஸ் சுஜூ.. நீ வேறு என்னைப் படுத்தாதே” எனக் கூறி விட்டு அவளை விட்டு விலகி அந்த அறையை விட்டு வெளியேறினான். அவன் சென்றபின் தன்னிலை மறந்து சிலையாக நின்று விட்ட சுஜி அன்னையின் குரல் கேட்ட பின்பு தான் நடப்பிற்கு வந்தாள்.

சுஜியின் பாடு திண்டாட்டமாக இருக்க அங்கே அனுவின் நிலைமையோ வெகு மோசமாக இருந்தது. அன்றைய மதிய விருந்துக்கு கறிவேப்பிலை பறித்து வரச் சொல்லி அனுவைத் தோட்டத்திற்கு அனுப்பியிருந்தார் வள்ளி.

DO NOT COPY

தோட்டத்தில் கறிவேப்பிலைகளைப் பறித்து கூடைக்குள் போட்டவள்.. சிகரெட்டின் வாசனையை உணர்ந்து முகம் சுளித்தபடி திரும்பிப் பார்த்தவள் அங்கே அமர்ந்திருந்த சக்தியைக் கண்டு "அய்யோ,அய்யோ.."என்று வாயில் அடித்துக் கொண்டவள் அவனருகே சென்று அவன் தலை முடியைப் பிடித்து ஆட்டி.. "பாவி..பாவி.. உனக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருக்கிறதென்று ஏன்டா என்னிடம் கூறவில்லை..?, சதிகாரா.."எனக் கேட்க..

அவனோ அவளது கைகளை விலக்கி அவளை விட்டுத் தள்ளி நின்று கொண்டு "ஏன்..?, முன்னமே தெரிந்திருந்தால்.. உன் திட்டப்படி சுஜியிடம் மட்டும் பழகியிருப்பாயாக்கும்..?"என்றான். அவனது கேள்வி புரியாமல் விழித்தவள் "என்ன பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்கிறது.. காலைச் சாப்பாடு போடவில்லையா ஆன்ட்டி..?, அல்லது.. என்னிடம் இத்தனை நாளாக அடி வாங்காததால் குளிர் விட்டுப் போனதோ..?"என்றபடி அவனருகே வர..

அவன் மேலும் இரண்டடி பின்னால் நகர்ந்து "என் அருகில் வராதே.. என்னிடம் உரிமை கொண்டாடும் அளவிற்கு உனக்கும் எனக்கும் என்ன இருக்கிறது..?, நீ நினைத்த காரியம் நடக்கவில்லையென்றதும்.. என் வீட்டுப் பக்கம் வருவதையும்,என்னைப் பார்ப்பதையும்,என்னுடன் பேசுவதையும் தவிர்த்தாயே..?, உன் திட்டம் சுஜியுடன் பழகுவது மட்டும் தானே..?, என்னுடன் எதற்காக அப்படிப் பழகினாய்..?, எல்லாம் வேசம், உன் எண்ணம் நிறைவேறுவதற்காக மட்டுமே ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தாய்.. இதில் அனாவசியமாக பலிகடா ஆனது நான் தான்.."என்று தலையில் அடித்துக் கொள்ள.. அவனை ஆத்திரத்துடன் நோக்கிய அனு..

"வாய்க்கு வந்ததையெல்லாம் பேசாதீர்கள்.. திட்டம் போட்டேனா..?, திட்டம் போட்டு உங்கள் சொத்துக்களை சுருட்டிச் செல்வதற்காகவா வந்தேன்..?, என்றேனும் வித்தியாசமாக நடந்து கொண்டிருக்கிறேனா..?, நான் பொய்யாகப் பழகினேனா..?, நாக்கு அழுகிப் போய் விடும் ஜாக்கிரதை.. என்னை.. என் மனதைப் புரிந்து கொள்ளாமல்.. அறிந்து கொள்ள முயற்சிக்காமல்.. அபாண்டமாகப் பேசுகிறீர்கள்..?, இனி உங்கள் முகத்தில் விழிக்கவே மாட்டேன்.."என்று கோபத்துடன் கத்தி விட்டு அவள் உள்ளே சென்று விட..

தங்கை முகம் சுளித்தபடி உள்ளே நுழைவதைப் பார்த்தபடியே தோட்டத்திற்கு வந்தான் ஷ்யாம் பிரபு. அங்கே கடுகடுப்புடன் நின்று கொண்டிருந்த சக்தியைக் கண்டவன்... முறுவலித்தபடி "ஹாய் சக்தி.."என்றான். அங்கே அவனை எதிர்பார்க்காததால்.. திகைத்து.. ஒருவாறு நிமிர்ந்து "ஹலோ.."என்றான் சக்தி.

"என்ன சக்தி.. ஒரு புன்னகைக்குப் பஞ்சமா..?, உனக்கும் உன் அக்காவிற்கும் இந்த விசயத்தில் ரொம்பவும் ஒற்றுமை போல..?, என்னைக் கண்டவுடன் எண்ணைச் சட்டியை முகத்திலேயே வைத்திருப்பவள் போல் சூடாகி

DO NOT COPY

விடுகிறாள். அவளது உஷ்ணத்தில் என் கை,கால்களெல்லாம் கருத்து விட்டது..”என்று கைகளைத் திருப்பிப் பார்த்தவனைக் கண்ட சக்தி தமக்கையைக் கேலி செய்வதற்கு இன்னொரு ஆள் கிடைத்தாயிற்று என்று மகிழ்ச்சியாக உணர்ந்தான்.

ஆனாலும்... அவன் தயங்கியபடியே நிற்பதைக் கண்ட ஷ்யாம் “என்ன தயக்கம் சக்தி..?, எதுவாயிருந்தாலும் கூறி விடு.. உலகத்திலேயே கஷ்டமான விஷயம் எனக்கு உன் அக்காவைச் சமாளிப்பது மட்டும் தான்.. அவள் என்னைப் படுத்தும் பாடு போதாதா..?, நீ வேறு வாரி வழங்க வேண்டுமா..?, சொல் சக்தி..”என்று சிரித்தபடியே வினவ.. வசீகரமான அந்தச் சிரிப்பைக் கண்டபடி...

“கட்டாயத்தின் பேரில் நடக்கும் இந்தத் திருமணம் எத்தனை நாட்கள் நீடிக்கும் மாமா..?, பெற்றோர்களின் விருப்பத்திற்காக உங்கள் இருவரின் வாழ்க்கையை நீங்கள் தியாகம் செய்வதில்.. யாருக்கு என்ன லாபம்..?, இது காலத்துக்கும் உடன் வரக் கூடிய பந்தமல்லவா..?, திடீர்த் தீர்வாக இதைக் கொண்டு இப்போதைய பிரச்சனையை முடித்து விட்டு.. கல்யாணத்திற்கு பின் வரப் போகும் பிரச்சனைகளை யார் சமாளிப்பது..?, இருவருக்கும் விருப்பம் இருப்பது போலத் தெரியவில்லையே மாமா..?”என்று கூற..

அவனது கேள்வியைக் கேட்டு சிரித்த ஷ்யாம் “எங்கள் இருவரின் விருப்பத்தை விடு.. உனக்கு இதில் இரட்டிப்பு சந்தோசம் போலும்.. விருப்பமில்லாமலா மாமா என்றழைக்கிறாய் சக்தி..?, என்னை மாமா என்று கூப்பிடச் சொல்லி உன்னை நானோ,உன் பெற்றோர்களோ வற்புறுத்தவில்லையே..?, என்னை உன் அக்காவின் கணவனாக நீயே உன் மனதில் பதிவு செய்து கொண்டாய்.. அதனால் தன்னாலேயே உனக்கு அந்த உரிமை வந்து விட்டது.. அப்படித் தானே..?, எனக்கு நம்பிக்கை இருக்கிறது சக்தி.. நானும்,உன் அக்காவும் நீங்கள் விரும்புவதைப் போல மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வோம்.. அதற்கு நான் கியாரண்டி..”

“திருமணம் செய்தாக வேண்டுமென்கிற கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டவர்கள் தான் நாங்கள் இருவரும்.. பெற்றோர்களின் மகிழ்ச்சிக்காக மட்டுமே இந்தக் கல்யாணத்தை ஏற்றுக் கொண்டோம்.. அதற்காக திருமணம் முடிந்தபின் இதைப் போல் எந்தப் பிரச்சனை வந்தாலும்... நானோ.. அவளோ பிரிவைப் பற்றி நிச்சயம் யோசிக்க மாட்டோம்... இந்த ஜென்மத்தில் என் வாழ்வு உன் அக்காவோடு மட்டும் தான்.. என்ன..?, நம்பிக்கை வந்துவிட்டதா..?, இப்போது சிரிக்கலாம் தானே..?”என்று கேட்க..

நிம்மதியுடன் வாய் விட்டு சிரித்த சக்தி நிச்சயம் ஷ்யாமிடம் ஏதோ மாயசக்தி இருப்பதாவே உணர்ந்தான்.. நிமிடத்தில் மனதை மாற்றி நம்பிக்கையை வளர்த்து விட்டானே! சுஜியும் இப்படித் தான்.. கஷ்டமான சூழ்நிலைகளில்

DO NOT COPY

நம்பிக்கையூட்டும் விதமாகப் பேசித் தான் மனதை மாற்றுவாள். அவளுக்கு ஏற்ற ஜோடி தான்..! நடப்பது எல்லாம் நன்மைக்கே என்பது.. எவ்வளவு சத்தியமான உண்மை..! சுந்தருடனான திருமணம் நின்று போனதால் தானே.. இப்படியொரு அருமையான வாழ்வு கிட்டியிருக்கிறது சுஜிக்கு! தேங்க்யூ பகவானே! என்று பாடியபடியே நடந்து வந்த சக்தி அனு நின்று கொண்டிருப்பதை அறியாமல் இடித்து விட்டான், அவனை முறைத்தபடி விலகியவளைக் கண்டு சிரிப்பு வந்தது சக்திக்கு.

சுஜியின் பிரச்சனை தான் தீர்ந்தாகி விட்டதே! இனி நம் லட்டுவைக் கவனிக்க வேண்டியது தான்.. ஆஹா! அம்மா செய்ய்யும் பிரியாணி மணம் வேறு ஒரு புறம் இழுக்கிறதே! நோ சக்தி.. நோ.. முதலில் இந்த ஜிஞ்ஜுக் குட்டியை சமாதானப் படுத்த வேண்டும்.. பின்பு தான் பிரியாணி.. என்றெண்ணியவன்.. தண்ணீர் குடிக்கும் சாக்கில் அவளருகே சென்று வேண்டுமென்றே இடித்தான்..

"ஏய்.. புல்டோசர்.. அவ்வளவு இடத்தையும் நீயே அடைத்துக் கொண்டால்.. கிச்சனுக்குள் வேறு யாரும் வந்து போக வேண்டாம்..?, போ..போ.. கடையைக் காலி பண்ணு.."எனக் கூற.. அவனை நன்றாக முறைத்தவள்.. வள்ளியிடம் "ஆன்ட்டி.. என்னிடம் யாரும் பேச வேண்டிய அவசியமில்லை.. உங்கள் மகனை வந்த வேலையை மட்டும் பார்க்கச் சொல்லுங்கள்.."என்று பதிலளிக்க..

"ஏய்.. அதென்ன..?, என் அம்மாவிடம் சொல்கிறாய்..?, இங்கே நான் ஒருவன் நின்று கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா..?, ஓ! கண் தெரியவில்லையா...?, அய்யோ.. கண்ணாடி அணிந்தால் உன் முகத்தைப் பார்க்கச் சகிக்காதே லட்டுக் குட்டி.."என்று வம்பிக்கிழுத்தான்.

அவன் கூறியதைக் கேட்டு எரிச்சலடைந்த அனு "ஆன்ட்டி.. நான் செல்கிறேன்.. ஏதேனும் உதவி தேவைப்பட்டால் கூப்பிடுங்கள்.."எனக் கூறிச் செல்ல "நீ கிச்சன் பக்கம் வராமல் இருப்பதே பெரிய உதவி தான்.."என்று கேலி செய்த சக்தியைத் தீப் பார்வை பார்த்தபடியே தன் தந்தையின் அருகே சென்றமர்ந்தாள்.

அவளைச் சிரிப்புடன் பின் தொடர்ந்த சக்தி ராஜாராமனிடம் "அங்கிள்.. உங்கள் வீட்டில் சாப்பாட்டுச் செலவு மாதமாதம் பல லட்சங்களை எட்டி விடுகிறதாமே.. உண்மையா..?"என்று வினவினான். "என்னை ஏன் தம்பி வம்புக்கிழுக்கிறாய்..?"என்று புன்னைகைத்த ராஜாராமன் "பல லட்சங்களா?, ஏன் அப்படிக் கேட்கிறாய்..?"என்று கேட்க..

"இல்லை அங்கிள்.. உங்கள் வீட்டில் ஒரு பெருச்சாளி.. அரிசி மூட்டை அனு இருக்கையில்.. சாப்பாட்டுச் செலவு பல லட்சங்களைத் தாண்டித் தானே ஆக வேண்டும்..?"என்று புன்னகைக்க.. கோபத்துடன் எழுந்த அனு.. "உங்கள் வீட்டில்

கோடிகளைத் தாண்டி சென்று கொண்டிருக்கிறதாம்.. தெரியாதா உனக்கு..?, சாப்பாட்டு ராமன்.. என்னையே கேலி செய்கிறாயா..?, இப்போது கூட பாருங்கள் டாடி.. பிரியாணியை வாசம் பிடித்துக் கொண்டு அடுக்களை வாயிலிலேயே நின்று கொண்டிருப்பதை.. பிரியாணிப் பிரியன்.. சாப்பாட்டு ராமன்..”என்று வசை மொழிகளை வாரி இறைக்க.. எப்போதும் போல்.. ஷ்யாம் அவளை “அனும்மா.. என்ன பேச்சு இது..?”என்று அடக்க முயல..

அவளோ சிலிர்த்துக் கொண்டு “நீ தலையிடாதே அண்ணா.. இது.. எனக்கும் அவனுக்கும் இருக்கும் பிரச்சனை...”எனக் கூறி முடிப்பதற்குள்.. “ஏய்.. அவன்,இவன் என்று சொன்னாயானால்.. பல்லைத் தட்டி விடுவேன்...”என்று அவன் சண்டைக்குக் கிளம்ப.. “அப்படித் தாண்டா சொல்வேன்.. என்னடா செய்து விடுவாய்..?”என்று அவளும் வரிந்து கட்டிக் கொண்டு ஆயத்தமாக... இருவரையும் கண்டு அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

சதங்கை ஒலியாய்.. கிண்கிணி நாதமாய்... கிளுகிளுத்துச் சிரிக்கும் சுஜியை.. விழி விரித்தபடி.. இமைக்க மறந்து நிறைவுடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஷ்யாம் பிரபு.




DO NOT COPY

# அத்தியாயம் – 15



**காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்**

**கலவியிலேயே மானுடர்க்குக் கவலை தீரும்**

**காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்**

**கானம் உண்டாம் சிற்பமுதல் கலைகள் உண்டாம்**

**ஆதலினால், காதல் செய்வீர் உலகத்தீரே!**

**வ**ண்டியில் அலுவலகம் சென்று கொண்டிருந்த சுஜி.. இனிதே நடந்து முடிந்த.. இரு குடும்பங்கள் மட்டுமே கலந்து கொண்ட அந்தச் சிறிய அளவிலான நிச்சயதார்த்தத்தைப் பற்றி நினைத்துக் கொண்டே... சென்று கொண்டிருந்தாள். விதி எப்படியெல்லாம் விளையாடுகிறது..? இவனுடன் ஏற்பட்ட.. முதல் சந்திப்பென்ன..?, அதன் பின் காணும் போதெல்லாம் முட்டிக் கொண்டதென்ன..?, இப்படியொரு நிகழ்விற்காகத் தான் அவன் சந்திப்பு என் வாழ்வில் ஏற்பட்டதா..?

யாரைக் குற்றம் சொல்ல முடியும்..?, பிரச்சனை என்று தன்னிடம் கண்ணீர் விட்ட.. தீ.. தீ.. ஆனந்தியையா..? அல்லது.. அந்தச் சந்திப்பை மட்டுமே வைத்து ஷ்யாமும்,சுஜியும் ஒருவரையொருவர் காதலிப்பதாக முடிவே செய்து விட்ட அனுவையா..?, அன்றி... இருவரது வாழ்க்கையையும் பாழாக்கி விட வேண்டுமென்று புகைப்படங்களை எடுத்தனுப்பிய அந்த முகம் தெரியாத கயவனையா..?

நாம் திட்டமிடும் ஏதும் வாழ்க்கையில் நடக்கிறதோ இல்லையோ.. விதி வேறு திட்டத்துடன் நம்முடன் பயணிக்கிறது.. நடப்பது எல்லாம் நன்மைக்குத் தான் என்கிறார்களே..! இந்த விசயத்தில் தேடிப் பார்த்தாலும் நன்மை ஏதும் தென்படவில்லையே.. ஷ்யாமுடனான வாழ்வு எப்படியிருக்கும்..?,

மகிழ்ச்சியைத் தருமா..?, இனி இவன் தான் என் கணவனா..?, கணவன் என்கிற வார்த்தையே சிரிப்பை வரவழைக்க.. புன்னகைத்தபடியே சாலையில் பார்வையைச் செலுத்தியவள்.. எண்ணங்களின் நாயகனே நேரில் நிற்பதைக் கண்டுத் திகைத்து வண்டியை நிறுத்தினாள்.

“எ.. என்ன.. இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்..?,”என்று வினவ.. அவளுக்கு பதில் கூறாமல்.. அவள் முகத்தை நோக்கிய ஷ்யாம்.. அதில் தெரிந்த புன்னகையைக் கண்டு கொண்டு “மேடமிற்கு என்ன அப்படியொரு சிரிப்பு..?, வடிவேல் காமெடி எதையும் நினைத்துக் கொண்டாயா..?”என்று வினவினான்.

அவனது கேள்விக்கு மேலும் சிரித்தபடி வண்டியை விட்டு இறங்கியவள் “அதையெல்லாம் விட மிகப் பெரிய காமெடியை நினைத்தேன்.. அதனால் தான் சிரிப்பு வந்து விட்டது..”என்றவளை என்ன என்பது போல் பார்த்தவனிடம் “நீங்கள் தான் இனி என் கணவன்... என்று நினைத்தேனா..?, சிரிப்பை அடக்க முடியவில்லை.. அதனால் தான்..”என்று கணவன் என்ற வார்த்தையை அழுத்தத்துடனும்.. அபிநயத்துடனும் கூறி விட்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தாள் சுஜி.

அவள் சிரிப்பை வியப்புடன் பார்த்த ஷ்யாம்.. 2 நாளைக்கு முன்பு ரோஷத்துடன் அழுததென்ன..?, திருமணம் வேண்டாமென்று ஆர்ப்பரித்ததென்ன..? புகைப்படங்களைக் கண்டு நொந்து போகாமல்.. வாழ்க்கையே வீணாகி விட்டதென்று புலம்பித் தள்ளாமல்.. எனக்கும்,என்னைச் சார்ந்தவர்களுக்கும் நான் எப்படிப்பட்டவளென்று தெரியும்.. வேறு யாரிடமும் என்னை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லையென்று நிமிர்வுடன் கூறி விட்டு.. அதைப் பற்றி சிந்திப்பதை விடுத்து.. சிரிப்புடன் நிற்பவளை தட் இஸ் சுஜூ.. என்று பெருமையாக நோக்கிய ஷ்யாம்..

அவள் கூறியதன் அர்த்தத்தை உணர்ந்து சிரிப்புடன்.. “உன்னை....”என்று அவள் கையைப் பற்றி அருகிலிழுத்து காதைத் திருகியவன்.. “நீ என் பொண்டாட்டி என்று நினைத்தால் எனக்கும் சிரிப்பு வரத் தான் செய்கிறது.. இதற்கெல்லாம் என்ன செய்ய முடியும் சுஜூ...”என்று புன்னகைத்தபடியே “அந்த காஃபி ஷாப்பிற்குச் செல்லலாம் வா..”எனக் கூறி பற்றிய கையை விடாமல் சாலையைக் கடந்து அந்தக் கடைக்குள் நுழைந்தான்.

காஃபியைப் பருகிய படியே நிமிர்ந்த ஷ்யாம் “அங்கிள்,ஆன்ட்டி எப்படியிருக்கிறார்கள்..?, நிலைமை சுமூகமாகி விட்டதா..?,”என்று விசாரித்தான். “ம்.. புது மாப்பிள்ளையிடம் தான் அனைவரும் மயங்கிக் கிடக்கிறார்களே.. மற்றதைப் பற்றி எப்படி யோசிப்பார்கள்..?, மகளுக்கு நல்ல வாழ்வு அமைய வேண்டும் என்பது தான் அவர்களின் எண்ணம்.. உங்களையும்,உங்கள் வீட்டாரையும் கண்டு விட்ட பின்பு.. மற்ற அனைத்தையும் மறந்து விட்டார்கள்

என்று தான் சொல்ல வேண்டும்..”என்றவள் தொடர்ந்து “அங்கே... உங்கள் வீட்டில் அனைவரும் எப்படியிருக்கிறார்கள்..?,”என்று வினவினாள்.

அவள் கூறுவதை சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தவன் “என் வீட்டில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமென்ன..?, அவர்களின் அருமை மகன்.. காதலித்த பெண்ணையே மணமுடிக்கப் போகிறான் என்கிற சந்தோசத்தில் இருக்கிறார்கள்.. அதிலும் அந்தக் காதல் கை கூடுவதற்குக் காரணம் தான் என்பதால் அனு மிக மிகக் குஷியாக இருக்கிறாள்..”என்று சிரித்தபடியே கூறினான்.

“ஆனால்.. இவற்றில் எதுவுமே உண்மையில்லையே....?”என்றவளிடம் “உண்மையாக்கி விடலாம்..”என்று ஷ்யாம் கூற.. புரியாமல் விழித்தவள்.. “என்ன கூறுகிறீர்கள்..?”என்று வினவ.. அவனோ “ஒன்றுமில்லை சுஜூ.. கா ஃபியைக் குடி..”என்றான்.

“ம்..”என்று தலையாட்டியவள் தொடர்ந்து “நான்.. நான் ஒன்று கேட்கட்டுமா..?”என்று வினவியவள்.. அவன் “கேள்..”என்றதும்... சிறிது தயங்கி “அந்த.. அந்த ஃபோட்டோக்களை அனுப்பியது.. யாரென்று தெரிந்ததா..?”என்று கேட்டாள்.

“அந்தப் புகைப்படம் அனுப்பப்பட்ட போஸ்ட் ஆஃபிஸில் விசாரித்தேன் சுஜூ.. உபயோகமான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.. அது மட்டுமில்லாமல்.. இந்தப் புகைப்படம் கிடைத்த மறு நாள்.. சுந்தரையும் சந்தித்தேன்..”என்றவனிடம் “நீங்கள் எதற்காக அங்கே சென்றீர்கள்..?”என்று கோபமாக வினவினாள்..

“உன்னை ஏற்றுக் கொள்ளச் சொல்லிக் கேட்பதற்காகச் செல்லவில்லை சுஜூ.. உன்னைப் பற்றிய அவர்களது எண்ணத்தை மாற்ற வேண்டுமென்று எண்ணினேன்.. அதனால் தான் அவனைச் சந்தித்தேன்.. நடந்த அனைத்தையும் தெரிவித்தேன்.. ஆனால்.. அவன்.. இதை எத்தனை பேரிடம் சென்று புரிய வைக்க முடியும் என்கிறீர்கள்... என் வீட்டில் அனைவரும் பழமைவாதிகள்.. இதையெல்லாம் நம்ப மாட்டார்கள்.. என்று கூறி விட்டான்... “என்று அவன் முடித்ததும்..

“என்னை அவர்கள் நம்ப வேண்டிய அவசியமில்லை ஷ்யாம்.. இதை நான் பல தடவை கூறி விட்டேன்... இனி ஒரு முறை எனக்குத் தெரியாமல் இப்படி ஏதும் செய்யாதீர்கள்..”என்று கூற.. முகத்தைச் சுளித்தபடி.. வேறு புறம் திரும்பி அமர்ந்திருந்தவளைக் கண்டு சிரிப்பெழுந்தது ஷ்யாமிற்கு.

“சுஜூ..”என்றழைத்தும் அவள் திரும்பாததைக் கண்டு “இங்கே பார் சுஜூ...”என்று நாடியைப் பற்றி அவளைத் தன் புறம் திருப்பினான். “இனி ஒரு

DO NOT COPY

முறை உனக்குத் தெரியாமல்.. எதையும் செய்ய மாட்டேன் சரி தானா..?"என்று வினவ.. உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு "ம்.."என்று தலையாட்டியவளிடம் சிரித்தபடி அவளைப் போலவே தலையாட்டி "ம்"என்றவன்.. அவள் மூக்கைப் பிடித்து ஆட்டி.. "இன்னும் சிறு பிள்ளையாகவே இருக்கிறாய் சுஜூ.."என்று கூற.. அதற்கு கலகலத்துச் சிரித்தவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான் ஷ்யாம்.

அவள் கை பற்றியபடி நடந்து செல்வது இதுவரை அனுபவித்திராத.. வித்தியாசமான.. சுகமான.. அனுபவமாக இருந்தது ஷ்யாமிற்கு.. ஏன் இந்த உணர்வு... அவளும் இதைப் போல் உணர்வாளா.. என்றெண்ணியபடி அவள் புறம் திரும்பினான். சாலையைக் கடப்பதில் குறியாய் இருந்த சுஜி இவை எதையும் உணராமல்.. அவன் கையை இறுகப் பற்றி.. விரைவாக நடந்து கொண்டிருந்தாள்.

கஷ்டம் தான்.. கடவுளே! மக்கு சுஜூ... என்று சிரித்துக் கொண்டவன்... அவள் வண்டியை ஸ்டார்ட் செய்து புறப்படும் வரை காத்திருந்து.. அதன்பின் அலுவலகம் சென்றடைந்தான்.

அடுத்த 2 வாரத்தில் திருமணத் தேதி குறிக்கப்பட்டிருக்க.. ஒரு வாரம் முழுவதையும் வேலையை ராஜினாமா செய்வதிலும்.. கல்யாணத்திற்குப் புடவை எடுப்பதிலும் கழிந்தது சுஜிக்கு. கா.ஃபி ஷாப்பில் சந்தித்ததற்குப் பிறகு ஷ்யாமைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதற்கிடையே அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த திருமண நாளும் வந்தது.

நிச்சயத்திற்கும் திருமணத்திற்கும் இடையே குறுகிய கால இடைவெளி தான் என்பதால் ராஜாராமனால் நினைத்தவர்களையெல்லாம் அழைக்க முடியவில்லை. வீட்டின் முதல் கல்யாணம். அதுவும் தனது அன்பு மகனின் காதல் திருமணம் வேறு! மிகப் பிரம்மாண்டமாகச் செய்ய ஆசை தான் அவருக்கு. ஆனால் மகாலிங்கமும்,ஷ்யாமும் தொடர்ந்து வற்புறுத்தியதால் மிகவும் எளிமையாக இல்லாவிடினும் கொஞ்சம் பிரம்மாண்டமாகவே ஏற்பாடு செய்திருந்தார். திருமணத்தின் முதல் நாள் ரிசப்ஷன் போல் ஒரு ஏற்பாட்டைச் செய்து விட்டு மறு நாள் காலை முதல் முகூர்த்தத்தில் மங்கல நாண் பூட்டும் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

வீட்டின் முதல் திருமண விழாவிற்கு வீட்டினர் அனைவரும் இருக்க வேண்டுமென்று சீதா ஆசைப் பட.. பிரபு.. சிங்கப்பூரிலிருந்து ஸ்ரீதரை வரவழைக்கலாமென்று தந்தையிடம் வினவினான். ஆனால் அவரோ "அவன் சென்று ஒரு மாதம் கூட ஆகவில்லை. அவன் இங்கே வந்து என்ன செய்யப் போகிறான்..?, ருத்ரனிடம் விசாரித்தேன். அவனை இப்போது அனுப்புவது நல்லதிற்கில்லை என்று விட்டான். உன் தம்பி அங்கே என்ன தில்லு முல்லு

DO NOT COPY

வேலைகளெல்லாம் செய்து கொண்டிருக்கிறானோ..?, அவனை இப்போது வரவழைக்க முடியாது" என்று தீர்மானமாகக் கூறி விட்டார்.

அன்னையின் ஆசைக்காக என்று தந்தையிடம் கேட்டு விட்டாலும் அவனுக்குமே ஸ்ரீதர் இப்போது தாயகம் திரும்புவதில் விருப்பமில்லை. இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் குழப்பம் போதாதென்று அவன் வந்து வேறு எதையேனும் இழுத்து வைத்து விடுவானோ என்று பயமாக இருந்தது அவனுக்கு. இந்தத் திருமணத்திற்கு எந்த விதத்திலும் தடங்கல் வந்து விடக் கூடாதென்று தன் மனம் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறதென்று அவனுக்கு புரியவேயில்லை. அதைப் பற்றி சிந்திக்க விடாமல் அடுத்தடுத்த நிகழ்வுகள் விரைவாக நடந்து கொண்டிருந்தது.

**ந**கரின் அந்தப் பிரபலமான ஹோட்டலில் திருமண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்க.. விதவிதமான அலங்காரங்களுடன் மண்டமே ஒளி வெள்ளத்தில் தகதகத்துக் கொண்டிருந்தது. பார்ப்பவரின் கண்ணைப் பறிக்குமளவிற்கு முகப்பு அலங்காரமே அசரடித்தது. அனைத்து அலங்காரங்களையும் வடிவமைப்பவர்களுடன் சக்தியும்,அனுவும் சேர்ந்து கொண்டு தங்களது கலைத் திறமையை வெளிப் படுத்தியிருந்தனர்.

முதலில் ஆர்வம் காட்டியதென்னவோ அனு மட்டும் தான்.. அவளுடன் பேசி வம்பு செய்து விளையாடலாம் என்றெண்ணி சக்தியும் கலந்து கொண்டான். மாலையானதும் கூட்டம் கூடத் துவங்க.. நீல நிற ஷர்வாணியில் வரவேற்பில் நின்று கொண்டிருந்த சக்தி.. அனு உபயோகிக்கும் சென்ட்டின் மணத்தை உணர்ந்து திரும்பினான்.

நீல நிற காக்ரா சோளியில்.. வைர அணிகலங்களுடன் ஜொலிப்புடன் அவனருகே வந்தவளை திறந்த வாயுடன் பார்த்துக் கொண்டிருந்த சக்தி.. அவள் அருகில் வந்ததும் "அதெப்படி டா லட்டு குட்டி.. பத்தடி தூரத்தில் நீ இருந்தாலும் உன் சென்ட்டின் நாற்றம் மட்டும் குப்பென்று தூக்குகிறது..?, சென்ட்டிலேயே குளித்து விட்டாயா..?"என்று வம்பு செய்ய..

"யூ... ராஸ்கல்.."என்று அழகாய் கோபப்பட்ட அனு "5000 ரூபாய் சென்ட்.. உனக்கு நாற்றமடிக்கிறதா..?,ஹ்ம்ம், கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை..?"என்று வினவ.. அவளது பேச்சின் பின்பாதியை ஒதுக்கி விட்ட சக்தி வாயில் கை வைத்து "அடிப்பாவி.. சென்ட்டிற்கே 5000 ரூபாய் செலவழிப்பாயா..?, மாமா அவ்வளவு பெரிய பணக்காரன் இல்லையேடா தங்கம்.."என்று பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு கூறினான்.

அவளோ எதற்கும் அசராமல் "அதனால் தான்.. என் மாமா மகன் கௌதமுடன் ஜோடி சேரலாம் என்று இருக்கிறேன்.. அவன் கோடிகளில் பிஸினஸ்

செய்பவன்.. இப்போது வரப் போகிறான்.. நீங்கள் கொஞ்சம் ஒதுங்குகிறீர்களா..?" என்று வினவ..

கோபமாக முறைத்த சக்தி "ஏய்.. மாமா மகனாவது மாங்காயாவது..!, அவனை இட்லியை நசுக்குவது போல் நசுக்கி.. சப்பாத்தி மாவு போல் பிசைந்து.. ரொட்டி தட்டி.. எண்ணைச் சட்டிக்குள் போட்டு விடுவேன் ஜாக்கிரதை.."என்று கூறினான்.

"சொல்வதைப் பார்.. இட்லி,சப்பாத்தி,ரொட்டி.. சரியான சாப்பாட்டு ராமன்.." என்று முணுமுணுத்தவள்.. "சீக்கிரம் இடத்தைக் காலி செய்யுங்கள்.. கௌதம் வந்து விடுவான்.. இந்த டிரஸ் வேறு அவனுக்குப் பிடிக்குமோ.. பிடிக்காதோ.." என்றபடி துப்பட்டாவை சரி செய்தவளிடம் "கடுப்பாக்காதே.. எனக்கு இந்த டிரஸ் பிடிக்கவில்லைடி.. உன் மாமன் மகனுக்குப் பிடித்தால் எனக்குப் பிடிக்காது.."என்று சக்தி கூற..

அவளோ அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு "உங்களுக்கு எதற்காக பிடிக்க வேண்டும்..?, எனக்கும் கௌதமிற்கும் பிடித்தால் போதும்.."என்று கூற.. "போடி.. போ.. உன் மாமன் மகனைக் கட்டிக் கொண்டு அழு.. இனி நீயாக வந்து பேசினாலொழிய நான் உன்னிடம் பேச மாட்டேன்.. இது நான் உயிராக நேசிக்கும் பிரியாணியின் மீது சத்தியம்.."என்று கூறிச் சென்று விட.. அவன் சென்றதும்.. அவன் சத்தியத்தை நினைத்து.. நினைத்து குலுங்கி குலுங்கிச் சிரித்தாள் அனு.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மணமக்கள் வந்து சேர்ந்தனர். வெங்காய நிறச் சேலையில்.. மணமகளுக்கே உரித்தான.. அலங்காரங்களுடன்.. கூடவே சிறிது வெட்கமும்,.. தயக்கமும் கலந்த புன்னகையுடன் பிரபுவின் கை பற்றிய படி படியேறியவளை.. அரங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் நிமிர்ந்து நோக்கினர்.

"அண்ணி இன்று ஜொலிக்கிறார்கள்.. இல்லையாம்மா..?, இவர்களின் ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்து என் கண்ணே பட்டு விடும் போலிருக்கிறது.. பிரமாதம் அம்மா.."என்ற அனுவைச் சிரிப்புடன் பார்த்த சீதா.. "உன் அண்ணி அழகி தான்.. அதை ஊரே ஒப்புக் கொள்ளும்.. நீ தனியாக தண்டோரா போட வேண்டாம்.."என்று கேலி செய்தார்.

மகாலிங்கமும்,வள்ளியும் மன நிறைவுடனும்,கண்ணீருடனும் பார்த்துக் கொண்டிருக்க.. ராஜாராமனும்,சக்தியும் புன்னகையுடன் இருவரையும் கலாட்டா செய்த படி நின்று கொண்டிருந்தனர்.

DO NOT COPY

உறவினர்கள் அனைவரும் வாழ்த்து தெரிவிக்கவும், புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் மேடை ஏற ஆரம்பிக்க.. அடுத்த 2 மணி நேரம் உட்காரக் கூட நேரமில்லை இருவருக்கும்.. சுஜியின் அலுவலகத் தோழிகள்,கல்லூரித் தோழிகள் என்று அனைவரும் வருகை தந்திருந்தனர்.

சுஜியின் சிறு வயதிலிருந்தே அவளுடன் பயின்ற.. ஷ்யாமும்,சுஜியும் இணைவதற்குக் காரணமாயிருந்த தீ.. தீ.. ஆனந்தி அவர்களை வாழ்த்த சிரிப்புடன் அருகே வந்து தோழியை அணைத்துக் கொண்டாள். “நீ என் திருமணத்திற்கு வராவிட்டாலும்.. கோபித்துக் கொள்ளாமல் நான் வந்து விட்டேன் பார்த்தாயா..?”என்றவளிடம்..

“ஏய்.. பஸ் வசதி கூட இல்லாத ஒரு கிராமத்தில் திருமணத்தை நடத்தினால் யார் வருவார்களாம்..?, ரிசப்ஷன் சென்னையில் என்றாய்.. இன்னும் அழைப்பைக் காணோம்..”என்ற சுஜியிடம் அசடு வழிந்த ஆனந்தி “அப்பா குல தெய்வக் கோவிலில் திருமணத்தை முடிக்க வேண்டுமென்று வேண்டியிருந்தாரடி.. அதனால் தான்.. அவரது வேலையின் காரணமாகத் தான் ரிசப்ஷன் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது.. தேதி முடிவு செய்ததும் தெரிவிக்கிறேன்... கண்டிப்பாக உன் அவருடன் வந்து விடு..”என்றவள்.. ஷ்யாமின் புறம் திரும்பி..

“உங்கள் இருவருக்குமிடையே காதல் என்று என்னால் நம்பவே முடியவில்லை அண்ணா.. சுஜி கூறிய போது எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.. ஆனாலும் நீங்கள் பாவம் அண்ணா.. இப்படியொரு அறுந்த வாலுடன் எப்படித் தான் வாழ்க்கை முழுதையும் ஓட்டப் போகிறீர்களோ..”என்று கூறினாள்.

அவள் காதல் என்ற போதே சுஜியின் புறம் திரும்பிய ஷ்யாம்.. அவள் தயக்கத்துடன் தலை குனிவதைக் கண்டு.. மீண்டும் ஆனந்தியை நோக்கி “பரவாயில்லை தங்கச்சி.. உன் தோழியைச் சமாளிக்கும் அளவிற்கு எனக்கு தைரியம் இருக்கிறது.. அவள் சமையலைச் சாப்பிடும் வித்தை, என் வண்டி டையரில் காற்றைப் பிடுங்கி விட்டால்.. புது ஸ்டெப்னியைக் கைவசம் வைத்திருப்பது போன்ற பல விசயங்களுக்கு எப்போதோ தீர்வை யோசித்து வைத்து விட்டேன்.. அதனால் நீ கவலைப் படாதேமா..”எனக் கூறி அனுப்பி வைத்தான்.

அவள் நகர்ந்ததும் “இவளிடமும் உண்மையைக் கூறவில்லையா..?”என்று சுஜியிடம் வினவினான். அதற்கு மறுத்துத் தலையசைத்த சுஜி “இல்லை.. அவளுக்கு உண்மை தெரிந்தால் அவளால் தான் என் வாழ்வு பாழாகிப் போய் விட்டதாக எண்ணி வருத்தப் படுவாள்.. அதனால் தான்.. நாம் இருவரும் உண்மையிலேயே காதலிப்பதாகப் பொய் கூறினேன்..”என்று சுஜி கூற..

DO NOT COPY

“என்னைத் திருமணம் புரிந்து கொண்டால்.. உன் வாழ்வு பாழாகி விடுமா..?”என்று அவன் விழி விரிக்க.. அவசரமாக அவனைத் தடுத்து “இல்லையில்லை.. நான் அப்படிச் சொல்லவில்லை..”என்றவளிடம்.. “வேறு எப்படியென்பதை பிறகு கேட்டுக் கொள்கிறேன்.., இப்போது.. வருபவர்களைக் கவனி..”என்று முடித்து விட்டான்.

இந்த நாட்டாமை ஷ்யாம் பிரபு கூறும் அனைத்தையும் வாழ்நாள் முழுதும் கேட்டாக வேண்டும் போலும்.. என்று பெரு மூச்சு விட்டவளுக்கு.. ஷ்யாம் தலையில் ஒரு கொண்டையுடன் ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பது போலவும்.. தான் ஒரு சொம்புடன்.. கண்டாங்கிச் சேலையுடன் அவனருகே நிற்பது போலவும் கற்பனை தோன்ற.. களுக்கென்று சிரித்து விட்டாள்.

அப்போது பார்த்து உறவினர் ஒருவர் அவனுடன் அதி முக்கியமாக ஏதோ பேசிக் கொண்டிருக்க.. இவள் சிரிப்பதைக் கண்ட ஷ்யாம் அவள் கையைப் பற்றி அழுத்தி “என்ன சுஜூ...”என்று அதட்ட.. சிரிப்பை அடக்கி வந்தவர் கூறியதைக் கவனித்தாள்.

முழுதாக 3 மணி நேரம் தொடர்ந்து மேடையில் நின்றிருந்த ஷ்யாமும்,சுஜியும் களைத்துப் போக.. அவர்களைச் சாப்பிட அழைத்துச் சென்றாள் அனுதரணி. அண்ணன்,அண்ணியை கோட்டா செய்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த அனுவின் அருகே அமர்ந்த சக்தி.. அவள் இலையில் இருந்த லட்டுவை எடுத்து உண்ணத் தொடங்கினான்.

“யூ.. ஃபூல்.. உனக்கு வேண்டுமென்றால்.. பரிமாறுபவர்களிடம் வாங்கிக் கொள்ள வேண்டியது தானே..?, என் இலையிலிருந்து ஏன் டா எடுக்கிறாய்..?”எனக் கேட்க.. “உன் எச்சில் பட்ட சுவை அதில் வராதேடா கண்ணுக் குட்டி..”என்று வழிந்தவனிடம் “நீ பேசினாலொழிய நான் பேச மாட்டேனென்று பெரிதாகப் பேசினீர்கள்..?, இப்போது என்ன..?, ம்..?”என்று வினவினாள்.

“ஹி..ஹி.. அது வந்து டா அனுக் குட்டி.. நீ சொன்ன அந்த மாமன் மகன்.. கௌதமிற்கு.. வயது 4 தான் என்பதைக் கண்டு எனக்குக் கோபம் போய் விட்டது.. நீ கூறியது போல் அவன் கோடிகளில் தான் புரள்கிறான்.. பலூன் வேண்டுமென்று தெருக் கோடியில் புரண்டு அப்படி அழுதான்..”என்று கூற.. பக்கென்று புரை ஏறுமளவிற்குச் சிரித்த அனு.. “உங்களை என்ன செய்தால் தகும்..?, சேட்டை செய்வதை நிறுத்தவே மாட்டீர்களா..?”என்று அவன் கையைப் பற்றிக் கிள்ளினாள்.

“அப்பாடி..! சிரித்து விட்டாயா..?, நான் பேசியது தவறு தான்... சாரிடா லட்டு.. இனி ஒரு போதும்.. உன் மனம் நோகுமளவிற்கு பேச மாட்டேன்..”எனக் கூற..

"ம்..."என்றபடி சிரித்தவள்.. "லட்டு சாப்பிடலாமா நாம் இருவரும்..?, கமான்.. "என்று அவனுடன் சாப்பாட்டு அறையில் வம்பு செய்து கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை திருமண நேரம் நெருங்க நெருங்க.. படபடவென்று அடித்துக் கொண்டது நெஞ்சம் சுஜிப்ரியாவிற்கு. இத்தனை நாட்களாக.. அன்னை,தம்பியுடன் இல்லாத சேட்டையெல்லாம் செய்து கொண்டு.. சிறு பிள்ளையாக வளர்ந்தாயிற்று.. இப்போது வேறு ஒரு வீட்டில்.. வேறு ஒருவனுடன் எப்படி இருப்பது..? தன் வீட்டில் இருக்கும் சுதந்திரம் அங்கே எப்படியிருக்கும்..?, எதிர் பாராமல்.. பல விசயங்கள்.. அடுத்தடுத்து நடந்து.. இன்று திருமணத்திலேயே வந்து நின்று விட்டதே..! இப்போது என்ன செய்வது..? என்று பரிதாபமாக விழித்தாள் சுஜி.

அன்னையையும்,தந்தையையும் கண்டதும் அழுகை வந்தது.. சக்தியைக் காணும் போது.. கதற வேண்டும் போல் இருந்தது. ஆனால்.. இவை ஏதுமில்லாமல்.. கல்யாணப் பரபரப்பில் அனைவரும் ஓடிக் கொண்டிருக்க.. மனதை சாந்தப்படுத்தி.. தயாரானாள். அதன் பின் அனுவும் வந்து விட்ட படியால்.. மற்றதை மறந்து அவளுடன் அரட்டை அடித்த படி புறப்பட்டாள்.

சிவப்பு நிறப் புடவையில் சிங்காரமாக வந்தவளை நிமிர்ந்து பார்த்தபடி மந்திரத்தை தவற விட்ட ஷ்யாம்.. அவள் அருகே வந்து அமர்ந்ததும்.. "புடவை மிகவும் அழகாக இருக்கிறது..."என்று கூறினான். அதுவரை அனுவுடன் அரட்டையில் இறங்கியிருந்த சுஜி அந்த மனநிலையுடனே இருக்க.. எப்போதும் தோழிகளுடன் கேட்பதைப் போல்.. "சேலை மட்டும் தானா..?"என்று தன் பெரிய விழிகளை விரித்தபடி கேட்க... அதில் மதி மயங்கி விழுந்து விட்ட ஷ்யாம்.. "நீ உடுத்திய பின்பு தான் இந்த சேலை அழகானது போல் தோன்றுகிறது..."என்று கூற.. அவன் முகமும்,குரலும் மாறிய விதத்தைக் கண்டு... படபடத்த இமைகளையும், தடதடத்த நெஞ்சத்தையும் தலை குனிந்து மறைத்துக் கொண்டாள் சுஜி. அவள் தடுமாறுவதைக் கண்டு புன்னகையுடன் திரும்பினான் ஷ்யாம்.

"கல்யாணம் முடிந்த பின்பு தான் சாப்பிட வேண்டுமா..?, என்ன கொடுமை இது..?, 4 மணிக்கே எழுப்பி விட்டு வெறும் கா஁பியை மட்டும் கொடுத்து விட்டு இந்த அம்மா எங்கே போய் விட்டார்கள்..?, அய்யோ பசிக்கிறதே.. 4 இட்லிகளை யாருக்கும் தெரியாமல் அபேஸ் பண்ணி விடலாமென்று பார்த்தால்... இந்த லட்டுவை வேறு காணவில்லை"என்றபடியே அனுவை தேடிக் கொண்டிருந்த சக்தி... தழையத் தழைய புடவை கட்டி.. தலையில் பூச்சரத்தைச் செறுகியபடி.. அவனை நோக்கிச் சிரித்த அனுவைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டான்.

இது நாள் வரை பாவாடை,சட்டையிலும், சுடிதார்,ஜீன்ஸிலும் வலம் வந்தவள்.. இன்று சேலை,பூ,பொட்டுடன்.. பெண்மையின் முழு உருவமாகக் காட்சி தர.. அன்று வரை அவளைக் கேலி செய்து வம்பிழுத்துக் கொண்டிருந்தவனுக்கு வேறு விதமான உணர்வுகளும் மனதில் எழ ஆரம்பித்தன.

பதிலேதும் கூறாமல்.. தன்னையே பார்த்தபடி பின்னால் வந்து கொண்டிருந்தவனை வியப்புடன் நோக்கி "என்னவாயிற்று உங்களுக்கு..?, ஏன் இப்படி என் பின்னாலேயே வருகிறீர்கள்..?, பசிக்கிறதென்று மெசேஜ் அனுப்பியிருந்தீர்கள்..?, இட்லி வேண்டுமா..?"என்று கேட்க.. இல்லையென்பது போல் தலையசைத்தவனிடம் "வேண்டாமா..?, பின்னே.. வேறு என்ன வேண்டும்..?"என்று வினவ..

அவளைத் தனியே அழைத்துச் சென்றவன்.. "அனு... இத்தனை நாளாக இருந்தது போலல்லாமல்.. இப்போது ஏதோ.. புது விதமாகத் தோன்றுகிறது.."என்று கூற.. அவனது மன நிலையையோ.. மாற்றத்தையோ.. புரிந்து கொள்ளாத அனு.. "என்ன..?, என்ன தோன்றுகிறது..?"என்று வினவ..

அவள் இடையைப் பற்றி அருகிலிழுத்து "உன்னை முத்தமிட வேண்டுமென்று தோன்றுகிறது.."என்றபடி அவள் முகம் நோக்கிக் குனிந்தான். "முத்தமா...?"என்று வாயைப் பிளந்தவளை மேலும் சிரித்தபடி நெருங்கியவன் அவள் கன்னங்களில் அழுந்த முத்தமிட்டான்.

அவனது முத்தத்தில் திளைத்து.. மயங்கி.. அவன் தோளில் சாய்ந்தவள்.. அவன் சட்டை பட்டனைத் திருகியபடி.. "முத்தமிட்டால் மட்டும் போதுமா..?, நீங்கள் எதுவும் கூறவில்லை..?"என்று கேட்க.. தன் மீது சாய்ந்திருந்தவளின் காதோர முடியை ஒதுக்கி "என்ன கூறவேண்டும்...?"என்று வினவினான்.

"அது தான்...."என்று மேலும் இழுத்தவள்.. "அந்த 3 எழுத்து வார்த்தை.."என்று தயங்கியபடியே கூற.. "எந்த 3 எழுத்து வார்த்தை..?"என்று யோசித்த சக்தி... "இட்லியா அனுமா..?, உப்புமா.. அது 4 எழுத்தாயிற்றே..!"என்றவனைக் கிள்ளிய அனு.. "ஐ லவ் யூ என்று சொல்ல மாட்டீர்களா..?"என்று கேட்க.. அதற்கு வாய் விட்டு சிரித்த சக்தி.. "ஐ லவ் யூ.. ஐ லவ் யூ.. ஐ லவ் யூ லட்டு...."என்று அணைத்துக் கொள்ள.. "ஐ லவ் யூ டூ..."எனக் கூறி சந்தோசத்துடன் முறுவலித்தாள் அனு.

கெட்டி மேளச் சத்தத்தைக் கேட்டு.. பதறி விலகிய அனு... அய்யோ யாரேனும் பார்த்து விட்டார்களா.. என்ற படி சுற்றும் முற்றும் பார்க்க.. அவள் விலகியதைக் கண்டு "என்ன டார்லிங்.."என்று மீண்டும் தன்னருகே இழுக்க முற்பட்டவனை..

DO NOT COPY

"ஹலோ.. என்ன..?, எங்கே இருக்கிறீர்கள் என்பதையே மறந்து விட்டீர்களா..?, உங்கள் உடன் பிறப்பின் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது.. வாருங்கள் போகலாம்.."என்று அவனை இழுத்துச் சென்றவள்.. அவனைக் காதலுடன் நோக்கி "இனி உங்கள் பெயர் சாப்பாட்டு ராமன் இல்லை.. ரொமான்ஸ் ராமன்.." எனக் கூறிச் சிரித்தபடியே அவனுடன் நடந்தாள் அனுதரணி.



# அத்தியாயம் – 16



**கண்டது ஒரு காட்சி கனவு நனவு என்று அறியேன்**

**எண்ணுதல் செய்யேன்; இருபது பேய் கொண்டவன் போல்**

**கண்ணும் முகமும் களி ஏறிக் காமனார்**

**அம்பு நுனிகள் அகந்தே அமிழ்ந்து இருக்க**

**கொம்புக் குயில் உருவம் கோடி பல கோடியாய்**

**ஒன்றே அதுவாய் உலகம் எலாம் தோற்றமுற**

**நாள் ஒன்று போவதற்கு நான் பட்ட பாடு அனைத்தும்**

**தாளம் படுமோ? தறி படுமோ? யார் படுவார்?**

DO NOT COPY

**கெ**ட்டி மேளச் சத்தம் 4 புறத்திலிருந்தும் காதைக் கிழிக்க.. மண்டபத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அட்சதையைத் தூவ.. "இனி உன் வாழ்வில் வரப் போகும் சந்தோசத்திலும் துக்கத்திலும் பங்கு கொள்ள.. நான் இருக்கிறேன்.. நான்-உன்னவன்.. என்று உறுதி அளித்து.. மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டத் தங்கத் தாலியை சுஜியின் பொன் கழுத்தில் அணிவித்தான் ஷ்யாம் பிரபு.

மனதில் திடுக்கென்று ஓர் உணர்வு ஏற்பட்டாலும் கழுத்தில் ஏறிய அந்தச் சுமை இதயத்தில் ஒரு சுகமான உணர்வையே ஏற்படுத்தியது அவளுக்கு. விவரிக்க முடியாத.. புரியாத அந்தப் புதிய உணர்வில்.. திளைத்த படியே அனைத்துச் சடங்குகளிலும் கலந்து கொண்டாள் சுஜி.

அதன்பின் அவன் கைப் பற்றி 3 முறை அக்னி வலம் வந்த போதும்.. அம்மி மிதித்தத் தன் பாதத்தில் அவன் மெட்டி அணிவித்த போதும்.. வானத்தை

அண்ணாந்து நோக்கி அருந்ததியைக் கண்ட போதும்.. சுகமான.. மயக்கமான அந்த உணர்வே சூழ்ந்திருந்தது சுஜிப்ரியாவிற்கு.

தன் மனதில் தோன்றியிருக்கும் இந்த மயக்கம் அவனுக்குள்ளும் இருக்கிறதா என்றெண்ணியபடி.. ஆஜானுபாகுவான தோற்றத்துடன் தன்னருகே நின்றிருந்தவனை திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையையும், அவள் எண்ணங்களையும் உணர்ந்தவன் போன்று அவள் கையைப் பற்றி அழுத்திப் புன்னகை புரிந்தான் அவன். வெண் பற்கள் பளிச்சிடும் அந்த மாயப் புன்னகையில் விழி விரித்து அவனையே நோக்கிக் கொண்டிருந்தவளை ஃபோட்டோகிராஃபர் “இங்கே பாரும்மா..”என்றழைக்க பார்வையைத் திருப்பினாள்.

கேளிக்கைகளும்,விளையாட்டுக்களும் அடுத்த சில மணி நேரங்களுக்குத் தொடர.. மாலையானதும் நல்ல நேரம் பார்த்து மாப்பிள்ளையையும், பெண்ணையும் மண்டபத்திலிருந்து அழைத்துச் சென்றனர். ஷ்யாமின் வீட்டிற்குள் வலது கால் எடுத்து வைக்கும் போது.. முதன்முறை அவன் வீட்டிற்கு வந்தது நினைவிற்கு வந்தது சுஜிக்கு.

கேலிகளுக்கும்,கோட்டாக்களுக்கும் நடுவில் சுஜியை அன்றைய இரவிற்காகத் தயார் படுத்தினர். அவர்களிருவரின் அறையை அழகு படுத்திக் கொண்டிருந்த அனுவைத் தேடி வந்த சக்தி படுக்கையில் கிடந்த பூக்களை எடுத்து அவள் மீது எறிந்தான். “என்ன...?”என்றவளிடம்.. “மல்லிப்பூவின் மணம் ஆளைத் தூக்குகிறது கண்மணி..”என்றபடி அவள் தலையில் சூடியிருந்த பூவை நுகர.. “ஏய்..”என்றபடி அவனை விலக்கித் தள்ளியவள்.. “என் வீட்டில் இருக்கிறோமென்பதை மறந்து விடாதீர்கள்..”என்று மிரட்டியபடி அலங்கரித்து முடித்தாள்.

சுஜியைத் தயார் படுத்தி ஷ்யாமின் அறைக்குள் அனுப்பி வைத்து விட்டு “ஆல் தி பெஸ்ட் அண்ணி..”என்று அணைத்து விட்டுச் சென்று விட்டாள். நீல நிறப் புடவையில் கையில் பால் சொம்புடனும் தடதடத்த இதயத்துடனும் தன் அறைக்குள் நுழைந்த சுஜியை பிரம்மிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஷ்யாம். தன்னுள் இருந்த ஆண்மையை அவளது நளினம் எளிதாக தட்டியெழுப்புவதை வியப்பு கலந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அமைதியாக அவனருகே வந்தமர்ந்தவள் கையிலிருந்த பால் சொம்பை நீட்டி “இ..இதைக் குடிக்கச் சொன்னார்கள்....”என்று தயங்கியபடி கூற.. புன்னகையை அடக்க முயன்றபடி அதை வாங்கி அருகே இருந்த மேஜை மீது வைத்தவன் “உன்னிடம் பேச வேண்டும் சுஜூ.. அதை முதலில் செய்யலாமா...?”என்றவன் தொடர்ந்து..

“எதிர்பாராத சூழ்நிலையில்.. எதிர் பார்க்காமல் நடந்த ஒன்று நம் திருமணம்.. முழுக்க.. முழுக்க.. நம் பெற்றோர்களின் மகிழ்ச்சிக்காக.. அவர்களது விருப்பத்திற்காக நடந்த ஒன்று தான்... ஒத்துக் கொள்கிறேன். ஆனால்.. இந்த பந்தம்.. நீ என் மனைவி என்கிற இந்த உறவு.. என் ஆயுள் முழுதும் தொடர வேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன்... உன்னை எதற்காகவும் நான் வற்புறுத்தப் போவதில்லை.. இயல்பாக.. அழகாக.. உன்னோடு ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமென்பது எனது விருப்பம்..”என்று கூற..

அவன் கூறிய அனைத்தையும் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சுஜி ஒன்றும் கூறாமல் இருக்க.. அவன் அவளது முகத்தை நிமிர்த்தி “ஏதாவது புரிந்ததா..?, நீ ஏதேனும் சொல்ல ஆசைப் படுகிறாயா..?”என்று கேட்டான்..

அவன் கை பட்ட இடம் தகிப்பது போல் தோன்ற.. மீண்டும் தலை குனிந்து “வ..வந்து.. எ.. எனக்கு கொஞ்சம்.. ப..பயமாக இருக்கிறது..”என்று தடுமாறியபடி கூறினாள். அவளது பதிலைக் கேட்டு வாய் விட்டு சிரித்தவன் “சுஜூ...”என்றழைத்தான். அவள் நிமிராததைக் கண்டு “இங்கே பார்.. நிமிர்ந்து பார் சுஜூ..”என்றவன்.. அவள் நிமிர்ந்ததும்.. அவள் முன்பு தன் கையை நீட்டி..

“என் கையைப் பிடித்துக் கொள்..”என்றான்.. அவள் புரியாமல் நோக்க.. “என் கையைப் பற்றிக் கொள் சுஜூ... இங்கே வா..”என்றழைத்தான். அவன் கூறியதைப் போல் அவன் கரத்தில் தன் கரத்தைப் பதித்து அவனருகே அமர்ந்தாள்.

அவள் கையை இறுகப் பற்றி “இதோ பார் சுஜூ.. உன்னை நான் எதற்கும் வற்புறுத்தப் போவதில்லை என்று கூறினேனே.. நீ அநாவசியமாக பயப்பட வேண்டிய அவசியமில்லை. என்னிடம் தயங்கவும் வேண்டாம்.. உன் எண்ணங்களை.. விருப்பங்களை அறிந்து கொள்ள நான் ஆவலாக இருக்கிறேன்... நீ வழக்கம் போல்.. உனது சேட்டைகளை.. விளையாட்டுக்களை இங்கேயும் தொடரலாம்.. எதற்காகவும் பயப்பட வேண்டாம்... உன் சுதந்திரத்தில் யாரும் தலையிட மாட்டார்கள்.. எல்லாத்தையும் மீறி... உனக்காக நான் இருக்கிறேன் என்பதை எப்போதும் மறக்காதே..”என்று முடிக்க.. அது வரை இருந்த பய உணர்வு மாறி வரிசைப் பற்கள் மின்ன புன்னகைத்தாள் சுஜிப்ரியா.

அந்த இரவில்.. அலங்காரமான அறையில்.. நீலப் புடவையில்.. மல்லிகையின் மணத்திற்கிடையில்.. சிற்பம் போல் அமர்ந்திருந்தவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டுமென்று உணர்வெழுந்தது அவனுக்கு. தன் கை மீது பதிந்திருந்த அவள் கரத்தின் மென்மையே... மனதில் சாரலை ஏற்படுத்த.. சிரிப்புடன் அவளை நோக்கியவன்..

DO NOT COPY

“இப்போது தூங்குகிறாயா..?, 2 நாள் பரபரப்பில் சரியாக உறங்கியிருக்க மாட்டாய்.. குட் நைட்..”என்று அவளது கையை அழுத்தி எழுந்தவனை “ஒரு நிமிஷம்..”என்று தடுத்தவள்.. “அந்தப் பாலைக் குடிக்கவேயில்லையே..”என்று நினைவுறுத்த.. மேலும் விரிந்த சிரிப்புடன் அவளுக்கும் கொடுத்து விட்டுத் தானும் பருகினான்.

அன்றைய இரவில் இருவரும் அதிகம் பேசாவிடினும்.. ஒருவரின் அருகாமையை மற்றவர் நிம்மதியாக உணர்ந்த படி உறங்கிப் போயினர்.

ஷ்யாம்-சுஜிப்ரியாவிற்குத் திருமணம் என்பதை அறிந்த ஸ்ரீதர் சிறிது ஆடித் தான் போனான். சுஜிப்ரியாவிற்கு ஏற்கனவே நிச்சயம் செய்திருந்த மாப்பிள்ளை வீட்டார் அந்தப் புகைப்படங்களைக் கண்டு அவளை அவமானப் படுத்துவார்கள். அவளது குடும்பத்திற்கே தலை குனிவு ஏற்படும்.. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்காமல்.. ஊர் பிரச்சனைக்கெல்லாம் பஞ்சாயத்து நடத்திக் கொண்டிருக்கும் அவளுக்கு இது தான் சரியான தீர்வு என்றெண்ணினான்.

அதே போல் தன் காதலியுடன் தன்னை இணைய விடாமல்.. அவள் முன்னே மன்னிப்பு கேட்க வைத்து அவமானப் படுத்தி.. பெல்ட்டால் அடித்து அசிங்கப் படுத்தி.. இன்று இப்படி ஒரு ஜெயிலில் கைதி போன்ற நிலைக்கு ஆளாக்கியிருக்கும் ஷ்யாம் பிரபுவின் பெயர் கெடும் என்றெண்ணியிருந்தான். வீட்டில் அவனது மதிப்பு குறையும், எல்லா விசயத்திற்கும் அவனைத் தலையில் தூக்கி வைத்து ஆடாத குறையாகக் கொண்டாடும் அப்பா.. நிச்சயம் அவனை கேள்வி கேட்பார் என்றெல்லாம் எண்ணி வைத்திருந்தான்.

அவனது எண்ணங்களுக்கெல்லாம் நேர்மாறாக.. ஃபோட்டோ கைக்குக் கிடைத்த 2 வாரங்களில் இருவரது திருமணமே முடிந்து விட்டது என்பதை நினைக்கையில்.. அவனுக்கு கோபமும்,ஆத்திரமும் எழுந்தது. இங்கு வந்து சேர்ந்த முதல் நாளே செல்ஃபோனைப் பறித்துக் கொண்டார் ருத்ரன் சித்தப்பா. அவரது வீட்டிலிருக்கும் ஃபோனைக் கூட உபயோகப் படுத்த முடியாத நிலை.

ஏனென்றால் எனது நண்பர்களால் தான் நான் கெட்டுப் போகிறேனாம்.. அதனால் எனக்கு யாருடைய சகவாசமும் இருக்கக் கூடாதாம்.. எதற்கும் வழியில்லாமல் செய்து விட்டானே! படுபாவி! அங்கே சூழ்நிலையென்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டதே! என்று புலம்பினான்..

அந்தப் புகைப்படத்தில் அவர்களிருவரும் நெருக்கமாகக் காணப்பட்டாலும்.. உண்மையில் அவர்களிருவரும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களென்பதை அவன் நம்பவில்லை. இந்த சுஜிப்ரியாவின் தந்தை தான் என் மகள் வாழ்வு

DO NOT COPY

அப்படி,இப்படியென்று நாடகம் நடித்து ஏதேனும் குளறுபடியைச் செய்திருக்க வேண்டும். அவர்களின் திருமணம் நிச்சயம் பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காக நடந்ததாகத் தான் இருக்க வேண்டும்.. விருப்பமில்லாத பந்தத்தில் சிக்கிய இருவரின் வாழ்வும் நிச்சயம் மகிழ்ச்சியாக இருக்காது என்று முடிவு செய்து கொண்ட பின்பு தான் ஸ்ரீதரினால் நிம்மதியாக உறங்க முடிந்தது.

**ம**று நாள் காலை துயில் எழுந்த சுஜி நீராடி விட்டுக் கீழே சென்றாள். சமையலறையில் மும்முரமாகச் சமையலில் ஈடுபட்டிருந்த சீதாவிடம் "குட் மார்னிங் அத்தை.."என்று புன்னகையுடன் கூற.. அவள் புறம் திரும்பிய சீதா.. மருமகளின் அழகைக் கண்டு பிரம்மிப்பில் ஆழ்ந்தார். பொன் மஞ்சள் கயிறு கழுத்தை நிரப்பியிருக்க... செந்நிறக் குங்குமம் அவளது நெற்றியை அலங்கரித்திருக்க.. ஊதா நிறப் புடவையில் மின்னிக் கொண்டிருந்தவளை..விழி விரித்து நோக்கினார்.

"அத்தை.."என்று சுஜி உலுக்கியதும்.. அவள் முகத்தைத் தன் இரு கைகளாலும் வழித்துச் சொடுக்கிட்டவர் "கல்யாணம் ஒரு பெண்ணை எவ்வளவு அழகாக மாற்றி விடுகிறது..?,இந்த மஞ்சள் கயிறும்,குங்குமமும் உன் முகத்திற்கு புதுப் பொலிவைத் தந்து விட்டது சுஜிம்மா.."என்றவரை சுஜி முறுவலுடன் பார்த்துக் கொண்டிருக்க.. அவர் தொடர்ந்து "உன் அன்னை,தந்தை உன் வரவிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.. போம்மா.."என்று அனுப்பி வைத்தார்.

வள்ளியும் சீதா கூறியது போல்.. அவளை வர்ணிக்க.. "போதும் Mrs.கோமு.. எத்தனை தடவை தான் இதையே கூறுவீர்கள்..?, தம்பிப் பையன் வீட்டிற்கு போய் விட்டானா..?, இங்கேயே இருக்கச் சொல்ல வேண்டியது தானே..?, அவனை வம்பிழுத்தால் தான் இன்றைய நாள் எனக்கு சுபிக்ஷமாக இருக்கும்." என்று கூற.

வள்ளி அவளை முறைத்து "சுஜி.. இனி நீ சின்னப் பெண் இல்லை. இதுவரை இருந்தது போலல்லாமல்.. இனி பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.. மாமியார்,மாமனார் அனைவரிடமும் மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்.. கணவனின் தேவை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.. என்ன?"என்று கூற..

நாடியில் கை வைத்து யோசித்த சுஜி "கோமு.. இந்த பாலிஸி அனைவருக்கும் பொருந்தும் தானே..?"என்று கேட்க.. "ஆமாம்.. ஏன்..?"என்றவரிடம் "பின்னே நீ மட்டும் ஏன்.. அப்பா தேங்காய் சட்னி கேட்டால்.. தக்காளிச் சட்னியை செய்து வைத்து விட்டு.. இது தான் என்னால் செய்ய முடியும்,,. முடிந்தால் சாப்பிடுங்கள். இல்லையென்றால் ஹோட்டலுக்குச் செல்லுங்கள் என்று

DO NOT COPY

அதட்டுகிறாயே..! இது தான் கணவனின் தேவையை நிறைவேற்றுகிற விதமா..?, என்ன கோமு..?"என்று சிரிக்க..

அப்போது அங்கே வந்த ராஜாராமனும் மருமகள் கூறியதைக் கேட்டு நகைக்கத் துவங்கினார். பின் வள்ளியிடம் "அவள் கூறியதும் சரிதானேம்மா..?, இந்தக் காலத்து இளசுகளிடம் நாம் தான் கவனமாகப் பேச வேண்டும்.. அனுவும் இப்படித்தான் ஏட்டிக்குப் போட்டியாகத் தான் பதில் கூறுவாள்.." என்று முறுவலிக்க..

"இனி இருவரையும் நீங்கள் எப்படி சமாளிக்கப் போகிறீர்களோ தெரியவில்லை அண்ணா.."எனக் கூறி வள்ளியும் முறுவலித்தார். "சரி சரி, எங்களுடன் அரட்டை அடித்தது போதும்,.. உள்ளே சமையலறையில் அத்தைக்கு உதவி செய் போ.."என்று சுஜியை விரட்டினார் வள்ளி.

சமையலறைக்குள் நுழைந்த சுஜி சீதாவிடம் "அத்தை.. நான் உங்களுக்கு ஏதேனும் உதவி செய்யட்டுமா..?"என்று வினவ.. அவரைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்த சீதா "எந்த மாதிரி உதவி சுஜிம்மா..?, நன்றாக இருக்கும் சாம்பாரில் காரத்தைக் கலப்பது.. கூட்டில் உப்பைக் கலப்பது.. இது தானே..?"என்று வினவ..

அசடு வழிந்த சுஜி "அய்யோ நீங்கள் உண்ணும் உணவில் எதையும் கலக்க மாட்டேன் அத்தை.. உங்கள் அருமை மகனது சாப்பாட்டில் மட்டும் தான்.. அதனால் நீங்கள் பயப்பட வேண்டாம்.."என்று கூற.. "சரி தான்.. இனி உன் பாடு,, அவன் பாடு.. அவன் எழுந்து விட்டான்.. உனக்கு காஃபி போடத் தெரியும் தானே..?,இனிப்புக் காபியோ.. உப்புக் காபியோ.. எதை வேண்டுமானாலும் கொடு.. நான் உன் மாமாவிற்குக் கஞ்சி கொடுக்கச் செல்கிறேன்.."என்று நழுவி விட்டார்.

ச்ச,ச்ச, நாட்டாமை ஷ்யாம் பிரபுவை முதல் நாளே பயமுறுத்த வேண்டாம்.. அதற்கெல்லாம் காலமிருக்கிறது சுஜி.. என்றெண்ணிக் கொண்டு காஃபியைக் கலந்தாள். சற்று நேரத்தில் அவளைத் தேடி.. சமையலறைக்கு வந்த ஷ்யாம் அவள் காஃபி கலப்பதில் முழுமூச்சுடன் இறங்கி விட்டதைக் கண்டு விட்டு..

சமையல் மேடையின் அருகே இருந்த டோரைத் திறந்து எதையோ தேடத் துவங்கினான். அவன் வந்ததை உணர்ந்து "குட் மார்னிங்"என்றவள்.. அவன் தீவிரமாகத் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டு "எ..என்ன தேடுகிறீர்கள்..?,"என்று வினவினாள்.

அவனோ யோசனையுடன் "இ..இல்லை.. அம்மிக்கல் எங்கள் வீட்டில் உபயோகப் படுத்துவதில்லை.. அதனால் அது இங்கே இருக்காது.. ஆனால்

DO NOT COPY

பூச்சி மருந்து.. அது தான் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. வாய்ப்பு கிடைத்து விட்டது என்பதற்காக நீ என் சாப்பாட்டில் அதைக் கலந்து விட்டால் என்ன செய்வது.. முன்னெச்சரிக்கையாக இருக்கட்டுமே என்று தான்..”என்று தீவிரமான குரலில் கூற..

அவனை முறைத்த சுஜி “உங்களைக் கொல்வதற்கு... பூச்சி மருந்து தேவையில்லை.. நானே போதும்..”எனக் கூற.. “ஆமாமாம்.. உன் பேச்சே போதும்..”என்று அவனும் வம்பு செய்ய.. “இந்தாருங்கள்.. பூச்சி மருந்து கலக்காத.. நல்ல கா:பி..”என்று நீட்ட.. “நம்பலாம் தானே சுஜூ..?”என்றபடியே கா:பியைப் பருகினான்.

அண்ணியத் தேடி சமையலறைக்கு வந்த அனு இந்தக் காட்சியைக் கண்டு விட்டு ஷ்யாமை வியப்புடன் நோக்கி.. “அண்ணா நீயே தானா..?, நம் வீட்டில் கிச்சன் எந்த மூலையில் இருக்கிறது என்று கூட நேற்று வரை அறியாத நீ.. இன்று அண்ணியுடன் இங்கே நின்று அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாய்..?, அண்ணி வந்த முதல் நாளே உன்னை இந்த அளவிற்கு மாற்றி விட்டார்களா..?, என்ன அண்ணி அதற்குள் அண்ணனைக் கைக்குள் போட்டாயிற்றா..?”என்று சுஜியின் தோளை இடித்தாள்..

அவள் பேச்சைக் கேட்ட ஷ்யாம் “அனும்மா...”என்று தொடங்கும் முன் இடை மறித்த அனு “அனும்மா.. என்ன இது..?, வயதுக்கேற்றார் போல் பேசக் கற்றுக் கொள்.. உன் கல்லூரியில் இதைத் தான் உனக்கு சொல்லித் தருகிறார்களா..?”என்று அவனைப் போலவே வினவ.. தங்கையை முறைக்க முயன்று தோற்று வாய் விட்டு சிரித்தான் ஷ்யாம்.

அதன்பின் காலைச் சாப்பாட்டிற்கு அனைவரும் கூட.. சுஜியின் அன்னையும் தந்தையும் சாப்பிட்டுச் சென்ற பின் சுஜியை அமர வைத்துத் தானே பரிமாறினார் சீதா. ஷ்யாமின் எதிரே அமர்ந்து கேசரியை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தவளை.. “அண்ணி,அண்ணா.. நீங்கள் இருவரும் இன்று எங்களுடன் உங்களது காதல் கதையை கட்டாயம் பகிர்ந்து கொண்டே ஆக வேண்டும்.. இத்தனை நாட்களாகத் தான் ஏதோ.. சாக்கு போக்கு சொல்லி மறுத்துக் கொண்டே இருந்தீர்கள்.. இப்போதேனும்.. சொல்லுங்கள்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.. “என்ற அனு தொடர்ந்து தமையனிடம் திரும்பி..

“அண்ணா.. நீ சொல்.. முதன்முதலில் அண்ணியை எப்போது பார்த்தாய்..?, எப்போது இருவரும் காதலைப் பகிர்ந்து கொண்டீர்கள்..?, நீ முதலில் கூறினாயா..?, அண்ணி முதலில் கூறினாளா..?”என்று ஆர்வமாக வினவினாள்.

DO NOT COPY

கேசரியைச் சுவைத்து உண்டு கொண்டிருந்த சுஜிக்கு இதைக் கேட்டுப் புரை ஏற... ஷ்யாமோ.. வாயில் அடைத்த வடையுடன்.. இதற்கு என்ன கூறிச் சமாளிப்பது என்று யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

பின் நிமிர்ந்து "அனும்மா.. அந்தக் கதையெல்லாம் இப்போது எதற்கு..?, நானும் உன் அண்ணியும் இப்போது தான் ஒன்று சேர்ந்தாயிற்றே.. பழைய கதையெல்லாம் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் அனும்மா..?" என்றவன் தங்கை இன்னும் விடாது கேள்வி கேட்பதை உணர்ந்து..

"இதோ பார் அனு.. ஏற்கனவே.. நீ பல நல்ல காரியங்களை செய்து வைத்து என்னை முழிக்க விட்டிருக்கிறாய்... அதற்கே என்னிடமிருந்து எந்த தண்டனையும் பெறாமல் தப்பித்து விட்டாய்... இனியும் நீ பேசிப் பேசி மேலும் எதையேனும் இழுத்துக் கொண்டு போகாதே அனும்மா... உன் அண்ணனால் சமாளிக்க முடியாது..."என்றவன் "இவளைச் சமாளிப்பதற்கு பதில்.. நான் ஒரு தமிழ் படம் எடுக்கலாம் போலவே.."என்று முணுமுணுத்தான்.

ஒருவாறு இறுமித் தன்னைச் சமாளித்து நிமிர்ந்து ஷ்யாமின் முகத்தைக் கண்ட சுஜிக்கு.. அவன் முழித்த முழியில்.. முணுமுணுத்ததில்.. சிரிப்பு தலைக்கேற... அனுவின் புறம் குனிந்து "உன் அண்ணன்.. முழிப்பதைப் பார்.. பாண்டியராஜன் தோற்றுப் போய் விடுவார்.. அய்யோ.. ஹா ஹா ஹா.."என்று சிரிக்கத் துவங்க..

அவள் சிரிப்பதைக் கண்டு முறைத்த ஷ்யாம் பாவி! நான் பதில் கூற முடியாமல் மாட்டிக் கொண்டு விழிப்பது.. உனக்கு ஆனந்தமாக இருக்கிறதா.. இரு இரு என்று கறுவிக் கொண்டவன்.. அனுவிடம் "அனும்மா.. நாங்கள் இருவரும் முதன்முதலாக சந்தித்துக் கொண்ட கதை.. காதலித்த கதை.. கை பிடித்த கதை.. அனைத்தையும் என்னை விட நன்றாக.. உன் அண்ணி கூறுவாள்.. அவளிடமே கேட்டுக் கொள்.."எனக் கூறி விட்டு.. "நானா..?"என்று சுஜி விழி விரிப்பதைப் பொருட்படுத்தாமல் சென்று விட்டான் ஷ்யாம்.

அண்ணன் சென்றதும் அனு சுஜியைப் பிடித்துக் கொள்ள.. "அ.. அது வந்து அனு.. உன் அண்ணன் கூறியதைப் போல்.. அந்தக் கதையெல்லாம் இப்போது எதற்கு,,?, நாங்கள் இருவரும் தான் ஒன்று சேர்ந்து விட்டோமே..?, அந்தப் பேச்சை விடு.. தக்காளிச் சட்னி மிகவும் சுவையாக இருக்கிறது பார்.. நீயும் போட்டுக் கொள்.."எனக் கூறிக் கணவனைத் தொடர்ந்து தானும் ஓடி விட்டாள் சுஜி.

இவர்களிருவரும் எதற்காக இப்படி பதறுகிறார்கள் என்று யோசித்த அனு.. எது எப்படியோ.. அண்ணனும்,அண்ணியும் சந்தோசமாக இருந்தாலே போதும்.. என்று நினைத்துக் கொண்டாள்.

அறைக்குள் நுழைந்த சுஜியை முறைத்த ஷ்யாம் “ஏய்.. நான் மாட்டிக் கொள்வதில் உனக்கு அப்படியென்ன சந்தோசம்..?, சிரிக்கிறாயா..?”என்று கேட்க.. அதற்கு அவள் “ம்,சந்திரமுகிப் பேயை விடப் பெரிதாக விழித்தால்.. சிரிப்பு வரத் தான் செய்யும்.. அதற்காக.. என்னை அப்படி மாட்டி விடுவீர்களா..?, எனக்கு வேறு பொய் கூற வேண்டுமென்றாலே உடம்பெல்லாம் நடுங்கி விடும்..”என்று அபாண்டமாகக் கூற..

“அடிப்பாவி.. உனக்கு பொய் கூற பயமா..?, இந்த நூற்றாண்டில் மிகச் சிறந்த பொய் இதுவாகத் தான் இருக்க முடியும்.. ஃப்ராட்..”எனக் கூற.. “ஹலோ.. யார் ஃப்ராட்..?,நீங்கள் தான் ஃப்ராட்.. சீட்..”என்று அவளும் கூற.. “உன்னை....”என்று அவன் அவள் மீது தலையணையை வீச..

தானும் தன் அருகிலிருந்த தலையணையை எடுத்து அவன் மீது வீசினாள். இருவரும் சிரிப்பும்,கும்மாளமுமாக ஒருவரையொருவர் தலையணையைத் தூக்கி எறிந்து விளையாட.. அங்கே வந்த மகாலிங்கத்திற்கும்,வள்ளிக்கும் இதைக் கண்டு மனம் நிறைந்தது.

அன்னையும்,தந்தையும் அறை வாசலில் நிற்பதை உணர்ந்து “அ..அப்பா...”என்றபடி அவரருகே ஓடியவள்.. “என்ன கோமு.. எவ்வளவு நேரமாக நிற்கிறீர்கள்..?, அழைக்க வேண்டியது தானேப்பா..?, அது சரி, எங்கே கிளம்பி விட்டீர்கள் இருவரும்..?”எனக் கேட்க..

அவள் தலையை வருடிய மகாலிங்கம் “நம் வீட்டிற்குப் போக வேண்டாமா பாப்பா..?,எத்தனை நாட்களுக்கு இங்கேயே இருக்க முடியும்..?,சக்தி எங்களை அழைத்துப் போக வந்து விட்டான்.. அதனால் தான் உன்னிடம் விடை பெற வந்தோம்..”என்று கூறினார்.

அவ்வளவு நேரமாக இருந்த சந்தோச மனநிலை மாறத் துவங்க.. மனைவியின் முகம் கண்டு.. அவளது வாட்டத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல்.. மாமனாரிடம் திரும்பி “ஏன் மாமா..?, இன்னும் 4,5 நாட்கள் இங்கேயே இருக்கலாமே.. அவளுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்..”என்று கூறினான்..

“இல்லை ஷ்யாம்.. என்றாயினும் கிளம்பத் தானே வேண்டும்..?, என் மகளை இது வரை எந்தவொரு விசயத்திற்கும் நான் திட்டியதோ அடித்ததோ இல்லை. செல்லமாகவே,.. அவள் போக்கிலேயே வளர்த்து விட்டோம்.. இனி அவள் உங்கள் பொறுப்பு.. இருவரும் நீண்ட நாட்கள் மனமொத்து வாழ வேண்டுமென்று ஆசைப் படுகிறேன் தம்பி..”என்று மகாலிங்கம் கூற..

அனுவுடன் பேசியபடி மேலே வந்த சக்தி தந்தையின் உணர்ச்சிவசமான பேச்சைக் கண்டு நெகிழ்ந்து தமக்கையின் முகம் நோக்கினான். கண்களில்

DO NOT COPY

தேக்கிய கண்ணீருடன் நிற்பவளைக் கண்டு சூழ்நிலையை மாற்ற எண்ணி.. "அப்பா.. இதையெல்லாம் நம் மாப்பிள்ளையின் அப்பா.. சுஜியிடம் கூற வேண்டும்.. ஏனென்றால்.. அவளிடம் மாட்டிக் கொண்டு அவர் என்ன பாடு படப் போகிறாரோ..!"என்று கூற.. அனைவரும் சிரித்தனர்.

மாமனாரின் கையைப் பற்றிய ஷ்யாம் "என் வாழ்வு முழுமைக்கும் உங்கள் மகளை அருமையாகப் பார்த்துக் கொள்வேன் மாமா.. நீங்கள் கவலைப் படாமல் செல்லுங்கள்.."எனக் கூற நெகிழ்ச்சியுடன் தலையசைத்தார்.

அவன் கூறி முடித்ததும் சக்தியின் அருகே சென்ற சுஜி, "ஏன் டா தம்பிப் பையா..?, அக்கா செல்கிறாளே என்று உனக்குக் கொஞ்சம் கூட வருத்தமே இல்லையா..?"என்று கேட்க.. தீவிரமாக யோசித்த சக்தி "இல்லையே பப்ளிமாஸ்.. நான் ஏன் கவலைப் படப் போகிறேன்..?, நீ வீட்டில் செய்த அட்டகாசம் கொஞ்ச நஞ்சமா..?, இனி வாரத்தில் ஒரு நாள் உன் சமையலைச் சாப்பிட்டாக வேண்டிய கட்டாயமே வராது.. நானும் என் அம்மாவும் நிம்மதியாக இருப்போம்.. "என்று கூற..


"டேய்.. இங்கே நீ வரும் போதெல்லாம் என் சமையலைத் தான் சாப்பிட்டாக வேண்டும்.. நினைவில் வைத்துக் கொள்.."என்று அவள் சண்டையிட.. "ஹி..ஹி.. அதற்குத் தான் நான் கல்யாணத்திற்கு முன்னாடியே அத்தையுடன் அக்ரிமென்ட் போட்டு விட்டேன்.."என்று சிரித்தான்.

"அக்ரிமென்ட்டா..?, என்ன அத்தை,,?"என்று சீதாவிடம் கேட்க.. அவர் "ஆமாம் சுஜி.. சக்தி இங்கே வரும் போது.. நீயோ,அனுவோ சமைக்கக் கூடாதாம்.. உங்கள் கையால் சமைத்ததை மட்டும் தான் சாப்பிடுவேன் அத்தை என்று கூறி விட்டான்.."என்று கூற.. "அடப்பாவி.."என்றபடி இடுப்பில் கை வைத்து முறைத்த அனுவும்,சுஜியும் அவன் தலையில் நங்கென்று குட்டு வைத்தனர்.

"மாமா உங்கள் பாடு திண்டாட்டம் தான்.. 2 குரங்குகளுடன் தினம்.. தினம்.. வாழ்க்கை நடத்த வேண்டும்.."என்ற சக்தி அனுவின் "ஏய்.."என்ற குரலுக்குப் பயந்து "உன்னையில்லைடா லட்டு.. சரி ஒரு குரங்குடன்.. போதுமா..?"என்று கூற..

மனைவியின் தோளில் கை போட்டு அருகிலிழுத்த ஷ்யாம் "சக்தி.. என் அழகு மனைவியைக் குரங்கு என்கிறாயா..?,"என்று கேட்க.. புன்னகையுடன் தலை குனிந்தவளைக் கண்டு சக்தி "சுஜி.. நீயா.. வெட்கப்படுவது..?. நம்பவே முடியவில்லை.. மாமா.. யூ ஆர் கிரேட்.... சுஜியையே வெட்கப் பட வைக்கிறீர்களே..?. உனக்கு இதெல்லாம் கூட வருமா அக்கா..?"என்றி கேலி செய்தவனை துரத்தி துரத்தி அடித்தாள் சுஜிப்ரியா.

DO NOT COPY




Nindran kaathalai enni kalikkindren - Nivetha

## அத்தியாயம் – 17



**ஓடி வருகையிலே கண்ணம்மா**

**உள்ளம் குளிருதடி..**

**ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப் போய்**

**ஆவி தழுவுதடி..!**

**உச்சிதனை முகர்ந்தால் – கருவம்**

**ஓங்கி வளருதடி**

**மெச்சி உனை ஊரார் – புகழ்ந்தால்**

**மேனி சிலிர்க்குதடி..!**

"**ஏ**ன் மிஸ்டர்.ராமன்.. இந்தக் காதலர்கள் அனைவரும் பொதுவாகச் செல்லும் சினிமா தியேட்டர்,பீச்,பார்க் இது போன்ற இடங்களுக்கெல்லாம் நீங்கள் ஏன் என்னை அழைத்துச் செல்வதில்லை..?, எப்போது பார்த்தாலும் ஹோட்டலுக்குச் செல்லலாம் என்றே கூறுகிறீர்களே..?, என்ன காரணம்..?"என்று ஜாமூனை வாயில் திணித்தபடி சக்தியிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள் அனுதரணி.

ஷ்யாம்-சுஜியின் திருமணம் முடிந்த இரண்டு வாரங்களுக்குப் பின் இப்போது தான் இருவருக்கும் தனியே சந்தித்துக் கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது. தொடர்ச்சியாக விருந்து ஏற்பாடுகள் நடந்த வண்ணம் இருந்ததால் இருவருக்கும் நேரம் கிடைக்காமல் போனது. நீண்ட நாளைக்குப் பிறகு காதலியைச் சந்திக்கப் போகும் காதலன்.. ஹோட்டலுக்கு வரச் சொல்லி இப்படியா ஜாமூனைச் சுவைத்துக் கொண்டிருப்பான்.. என்கிற சந்தேகத்தில் தான் அனு இந்தக் கேள்வியைக் கேட்டதே!

DO NOT COPY

அவனோ.. அதற்கு முறுவலித்து “அது வந்து டா லட்டுக் குட்டி... தியேட்டரில் கிடைக்கும் பாப் கார்ன்,பப்ஸ், பீச்சில் கிடைக்கும் சுண்டல்.. இவையெல்லாம் உன் மாமனை திருப்தி படுத்தாதே.. எனக்கு ஹெவியாக சாப்பிட்டுத் தான் பழக்கம் கண்மணி.. அதனால் தான் எப்போதும் உன்னை ஹோட்டலுக்கே வரச் சொல்கிறேன்..” என்று சிரிக்க..

கோபத்துடன் அவனை முறைத்துத் தலையிலடித்துக் கொண்ட அனு “சாப்பாட்டு ராமன்.. 24 மணி நேரமும் இதே நினைப்பு தான்.. தூக்கத்தில் புலம்பினால் கூட இட்லி,பூரி என்று தான் கூறுவாய்.. என்னடா..?”என்று திட்டத் துவங்க..

“அதை விடு அனும்மா.. மாமனைப் பற்றித் தான் உனக்குத் தெரியுமே.. எங்கள் வீட்டு பப்ளிமாஸ் எப்படி இருக்கிறாள்..?, இதுவரை எத்தனை பேர் அவளது தாக்குதலில் பலியானார்கள்..?”என்று வினவ..

அதற்கு கலகலவென்று சிரித்த அனு “ச்ச,ச்ச அண்ணியின் நோக்கம் அண்ணனைத் தாக்குவது மட்டும் தான்.. அவன் தான் தினம்,தினம் பலியாகிறான்.. அய்யோ கடவுளே..”என்று சிரித்த அனு.. சுஜி கல்யாணமாகித் தன் வீட்டில் அடியெடுத்து வைத்த பின் நடந்த கூத்துகளை சக்தியிடம் கூறத் துவங்கினாள்.

**அ**ன்று காலைக் குளியல் முடிந்து கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டிருந்த சுஜிக்கு.. தன் உருவத்தைத் தாண்டி.. கட்டிலில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த ஷ்யாமின் முகம் கண்ணில் பட்டு விட.. அவன் முகத்தில் குடியிருந்த நிம்மதியையும்,அந்த அடர்த்தியான புருவங்களையும், நேரான நெற்றியையும், செதுக்கினாற் போன்ற முக அமைப்பையும்.. இவன் என் கணவன் என்ற கர்வத்தில் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதன் பின் இயல்பான துடுக்குத்தனம் தலை தூக்க.. இந்த சீவலப்பேரிப் பாண்டியை வம்புக்கிழுத்துப் பல நாட்களாயிற்றே..! என்ன செய்யலாம்..? என்று யோசித்தவளின் கண்களுக்குப் பக்கத்தில் இருந்த தண்ணீர் ஜக் பார்வையில் பட்டு விட.. மெதுவாக அருகே சென்றாள்.

ஜக்கில் இருந்தத் தண்ணீரைக் கொஞ்சமாகக் கையில் ஊற்றி... அவன் முகத்தில் தெளித்தவள்.. சட்டென்று வேறு புறம் திரும்பி நின்று கொண்டாள். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தவனின் முகத்தில்.. தண்ணீர் பட்டவுடன் பதறி அடித்துக் கொண்டு விழித்தவன்.. அருகில் நின்று கொண்டிருந்த சுஜியைக் கண்டு... கோபமாக முறைத்தான்.

DO NOT COPY

அவளோ.. முகத்தைப் பாவமாக மாற்றி.. “அய்யயோ.. என்ன ஷ்யாம் இது.. முகம் முழுக்கத் தண்ணீர்..?, அது ஒன்றுமில்லை ஷ்யாம்.. இவ்வளவு நேரமாக மழை பெய்து கொண்டிருந்தது. அந்தச் சாரல் தான்.. நம் பால்கனி வழியாக.. அப்படியே உள்ளே வந்து.. உங்கள் முகத்தில் பட்டு விட்டதென்று நினைக்கிறேன்..”என்று கூற.. அவள் முகத்தில் பிரதிபலித்த சிறு பிள்ளைத் தனமான அபிநயங்களைக் கண்டு பலமான சிரிப்பு வந்தது ஷ்யாமிற்கு.

இம்சை! அழகான இம்சை! என்ன? கொஞ்சம் மக்கு! என்றெண்ணிய ஷ்யாம் “அப்படியா..?, நீ சொன்னால் சரி தான் சுஜூ..”எனக் கூறி விட்டு எழுந்து சென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டான். அவன் செல்வதைக் கண்ட சுஜி “பேக்கு,பேக்கு அப்படியே நம்பி விட்டது.. ஹா ஹா...”என்று சிரித்துக் கொண்டாள்.

சிறிது நேரத்திலேயே குளியலறையிலிருந்த ஷ்யாமிடமிருந்து சத்தம் வர.. வேகமாக ஓடியவள்.. கதவைத் தட்டி “ஷ்யாம்.. ஷ்யாம்... என்னவாயிற்று..?”என்று வினவ.. கதவைத் திறந்து “சு..சுஜூ...”என்றபடி அவன் கை நீட்ட.. அவன் கரத்தைப் பற்றி “என்னவாயிற்று ஷ்யாம்..”என்று பதறிப் போய் வினவியவளைக் கண்டு நன்றாக முறுவலித்துத் தன் அருகே இழுத்தான்...

ஷவர் திருகியிருப்பதைக் கண்டு ஒருவாறு விசயத்தை யூகித்து சுதாரித்து அவள் விலகும் முன் அவளை ஷவரடியில் நிறுத்தியிருந்தான் ஷ்யாம். “நான்.. ஏற்கனவே குளித்து விட்டேன்.. வேண்டாம்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.. “என்று அவள் போராடியது அவன் காதிலேயே விழவில்லை..

தொப்பலாக அவள் நனைந்து முடித்ததும் ஷவரை நிப்பாட்டியவன்.. அவனை முறைத்த படி நின்று கொண்டிருந்தவளைக் கண்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான். “எப்படி.. எப்படி.. மழை பால்கனி வழியாக வந்து என் முகத்தில் பட்டு விட்டதா..?, மக்கு சுஜூ.. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாம்..?”என்று சிரிக்க..

அவள் அவனை மேலும் முறைத்து “அது தான்.. பழி வாங்கி விட்டீர்களே.. இன்னும் என்ன சிரிப்பு..?”என்று முகத்தைச் சுருக்கிக் கொண்டு... முழுதாக நனைந்து விட்டிருந்த சேலையைக் குனிந்து பார்த்தவள்.. இடுப்பில் கை வைத்து அவனைக் கோபமாக முறைத்தாள்.

அவளது கோபம் அவனுக்கு உற்சாகத்தைத் தர.. மீண்டும் ஷவரைத் திருகி மனைவியுடன் சேர்ந்து தானும் நனைந்தான். “ஷ்யாம்.. போதும்.. ப்ளீஸ்...” என்று விலகப் பார்த்தவளின் கையைப் பற்றி அவன் அருகிலிழுக்க.. மொத்தமாக அவன் மேல் சாய்ந்தாள் சுஜிப்ரியா.

தண்ணீரில் நனைந்து விட்டிருந்த அவளது சேலையும்.. இடை வரை பரவிக் கிடந்த ஈரக் கூந்தலும் கிறக்கத்தைக் கொடுக்க.. சிரித்தபடியே.. அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவனது எண்ணம் அறியாமல்.. மேலும் விலக எத்தனித்தவளின் அருகே வந்து.. அவள் முகம் பற்றி.. கன்னத்தில் பற்கள் பதியக் கடித்தான்.

அவனது முதல் தொடுகையில் சிலிர்த்து விலகியவள்.. அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி ஓடி விட்டாள். அவள் சென்றதும்.. தண்ணீரை நோக்கி முகத்தைத் திருப்பியவனின் மனமும்,உடலும் குளிர்ந்திருந்தது.

உடை மாற்றிக் கீழே வந்தவளிடம் சீதா.. "என்ன சுஜிம்மா.. மறுபடியும் குளித்தாயா..?"என்று வினவ.. "உங்கள் பையன் தான் அத்தை.. நான் அவர் முகத்தில் தண்ணீர் தெளித்ததற்கு என்னை ஷவரில் நனைய வைத்து விட்டார்.."எனக் குறை கூற.. அனு வாயை மூடிக் கொண்டு சிரித்தாள். சீதாவும்,ராஜாராமனும் ஒருவரையொருவர் நோக்கிப் புன்னகைத்துக் கொள்ள.. ஏன் இப்படிச் சிரிக்கிறார்கள்.. என்று குழம்பியபடி சமையலறைக்குள் நுழைந்தாள் சுஜி.

ஈரக் கூந்தலைக் கீழே முடிச்சிட்டவள்.. கோபத்துடன் புலம்பினாள். முகத்தில் கொஞ்சமே கொஞ்சம் தண்ணீர் தெளித்ததற்கு.. அநியாயமாகக் குளிக்க வைத்து விட்டானே..! என்று பொருமியபடியே திரும்பியவள்...சிறு சிறு கிண்ணங்களில்.. அழகாக ஊற்றி அடுக்கி வைக்கப் பட்டிருந்த.. ஃப்ரூட் கஸ்டர்டைக் கண்டு விட்டாள்.. நொடியில் மூளை அதி வேகமாக இயங்கி விட.. அருகே இருந்த உப்பு டப்பாவை எடுத்து.. யாரும் பார்க்கிறார்களா.. என்று சோதித்து விட்டு.. ஒரு கிண்ணத்தில் உப்பைக் கலந்து.. அதில் ஒரு அடையாளத்தையும் இட்டு வைத்தாள்..

சாதித்து விட்ட திருப்தியுடன்.. அடுக்களையை விட்டு.. அவள் வெளியே வரும் வேளையில்.. குளித்து முடித்து ஷ்யாம் உள்ளே நுழைந்தான். அவனை அங்கே எதிர்பாராததால்.. விழித்துத் தடுமாறியவள்.. பின் சமாளித்து.. இளித்தபடியே நகர்ந்து விட்டாள்.

என்ன அப்படியொரு சிரிப்பு! முழியைப் பார்.. என்றபடியே டைனிங் டேபிளை நோக்கி நடக்கத் தொடங்கியவன்.. நின்று.. அடுக்களைக்குள் நுழைந்தான். சுற்றி நோட்டம் விட்டவன்.. அங்கே அடுக்கி வைக்கப் பட்டிருந்த கிண்ணங்களைக் கண்டு விட்டு.. அனைவருக்கும் உப்புக் காபி கொடுப்பாயே சுஜூ.. இன்று உனக்கு.. உப்பு கஸ்டர்ட் கொடுக்கிறேன்.. என்று சிரித்துக் கொண்டவன்.. சில நிமிட போராட்டத்திற்குப் பின்.. ஒரு வழியாக உப்பைக் கண்டறிந்து ஒரு கிண்ணத்தில் கொட்டினான்.

DO NOT COPY

அதன் பின் அனைவரும் சாப்பிட அமர.. உண்டு முடித்தபின்.. கஸ்டர்ட் கிண்ணங்களை எடுத்து ஒவ்வொருவரிடமும்.. நீட்டினார் சீதா. "நான் கொடுக்கிறேன் அத்தை.."என்று அவசரமாக அவரிடமிருந்து தட்டைப் பறித்துத் தானே அனைவருக்கும் கொடுத்தாள். அடையாளமிட்டிருந்த கிண்ணத்தை அவனிடம் கொடுத்து விட்டு அனுபவி ராஜா! என்று சிரிப்புடன் அவள் அமர.. தான் உப்பைக் கொட்டி வைத்த கிண்ணத்தை அவள் எடுத்துக் கொண்டதைக் கண்டு.. அவனும் சிரிப்புடனே அமர்ந்திருந்தான்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடியே.. ஸ்பூனை வாயில் வைத்த மறு நொடி.. இருவரின் முகமும் அஷ்டகோணலானது.. திடீரென்று இருவரும் எழுந்து வாஷ்பேசனை நோக்கி ஓடுவதைக் கண்டு அனைவரும் திகைப்புடன் நோக்க.. கோபத்துடன் சுஜியை முறைத்துக் கொண்டிருந்தான் ஷ்யாம்.

"ஏய்.,. ராட்சசி! இம்சை.. நீ தான் உப்பைக் கொட்டி வைத்தாயா..?"என்று வினவ.. அவளும் அவனுக்கு இணையான கோபத்துடன்.. "நீங்கள் ஏன்.. என் கிண்ணத்தில் உப்பைக் கொட்டினீர்கள்..?"என்று வினவ.. இருவரையும் கண்டு சிரித்த அனு.. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை.. என்கிற பழமொழி இருப்பது உண்மை தான்.. அதை நீங்கள்.. இந்த அளவிற்குக் கடைபிடிக்க வேண்டுமென்று அவசியமில்லை.. கொஞ்சம் உப்பைக் குறைத்துக் கொள்ளலாம்.."என்றவள் அண்ணனின் புறம் திரும்பி..

"அண்ணா.. உனக்கு என்ன வயதாயிற்று..?, இப்படி சிறு பிள்ளை போல் நடந்து கொள்கிறாய்..?, உன் அலுவலகத்தில் இதைத் தான் கற்றுத் தருகிறீர்களா..?" என்று வினவ.. "ஹி..ஹி.. வெல் செட் அனு.. "என்று அவளிடம் கை குலுக்கிக் கொண்ட சுஜியை முறைத்த ஷ்யாம்.. "ஏய்.. உன்னால் தான் இந்தக் குட்டி பிசாசு கூட என்னைக் கேலி செய்கிறது.. உன்னை..."என்றவன்.. "உன்னை ஒன்றும் செய்ய முடியாது.."என்று கூறி விட்டு அன்னையிடம்...

"அம்மா... இனி இவளைத் தயவு செய்து.,. சமையலறைப் பக்கம் அனுப்பாதீர்கள்.. என் காலைச் சாப்பாடே கெட்டு விடும் போலவே! சரியான இம்சை,..!"என்றபடியே.. மேலே சென்றவன்.. சென்ற சிறிது நேரத்திலேயே.. "சுஜூ.."என்று குரல் கொடுக்க... அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

சுஜி தன் வீட்டில் புரியும் அட்டகாசத்தை சக்தியிடம் கூறிக் கொண்டிருந்த அனு.. "இப்படித் தான் தினமும் அண்ணனும்,அண்ணியும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.. ஆனால்.. ஒருவரை விட்டு மற்றொருவர் இருப்பதில்லை.. அழகான காதல்.. அப்படித் தானேடா..?"எனக் கேட்க..

உண்மை தெரிந்த சக்தி.. இது எந்த அளவிற்கு நிஜம் என்றெண்ணியபடி.. எதுவும் கூறாமல்.. "ம்,ம்.."என்று தலையசைக்க.. "சரி கிளம்பலாம் நீங்களும்

DO NOT COPY

வாருங்கள்.. உங்களைக் கண்டால்.. உங்கள் உடன்பிறப்பு சந்தோசப் படுவார்கள்"எனக் கூறி அவனுடன் புறப்பட்டாள்.

அனுவுடன் உள்ளே நுழைந்த சக்தியை சிரிப்புடன் வரவேற்ற ஷ்யாம்.. "வா சக்தி.. எப்படியிருக்கிறாய்.. அத்தை,மாமா நலமா..?"என்று குசலம் விசாரித்தவன் "சுஜூ.."என்று குரல் கொடுத்தான்.. "அத்தை ஒரே ஒரு வடை.. ஒன்று மட்டும் நான் போடுகிறேன்.."என்று சீதாவுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்த சுஜி.. ஷ்யாமின் அழைப்பைக் கேட்டு வெளியே வந்தாள்.

தம்பியைக் கண்டது முகம் மலர்ந்து "தம்பிப் பையா.. எப்போதடா வந்தாய்.. ஓ! அனுவுடன் வந்தாயா..?, அம்மா ரவா லட்டு கொடுத்து விடுகிறேன் என்றார்களே... கொண்டு வந்தாயா..?"என்று வினவ.. "ஆமாம்.. உங்கள் தம்பி.. தங்கக் கம்பி மிச்சம் வைத்து விட்டுத் தான் மறு வேலை பார்ப்பார்.."என்ற அனுவின் முணுமுணுப்பைத் தவிர்த்து விட்டு..

அவனை அமர வைத்துப் பேச்சைத் தொடர.. அவளது கேள்விக்குப் பதில் கூறி விட்டு.. ஷ்யாமின் புறம் திரும்பிய சக்தி.. "என்னிடம் நலம் விசாரிப்பதெல்லாம் இருக்கட்டும்... உங்கள் நலனைத்தான் மாமா நான் விசாரித்தாக வேண்டும்.. இந்தக் கடன்காரி.. செய்யும் கொடுமையையெல்லாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருப்பது நீங்கள் தானே..?"என்றவன் தொடர்ந்து "உங்களுக்கு எப்படிச் சமாதானம் சொல்வதென்றே புரியவில்லை மாமா.. இப்படி இவளிடம் மாட்டிக் கொண்டீர்களே..?"என்று வராத கண்ணீரைச் சுண்டி எரிய..

"என்ன செய்வது.. சக்தி.. உன் அக்கா இம்சை அரசி... 24 மணி நேர தொல்லை சர்வீஸ்.. சுஜிப்ரியாவுடன் என் தலையெழுத்து அமைந்தாக வேண்டுமென்றிருக்கிறது..."என்று சலிப்புடன் கூற. அவனருகே அமர்ந்திருந்த சுஜி.. "நான் உங்களுக்குத் தொல்லையாகத் தெரிகிறேனா..?"என்று கோபித்துக் கொண்டு எழ முயற்சிக்க "ஏய்.. சுஜூ.. நில்..."என்று அவள் கையைப் பற்றி அமர வைத்தான் ஷ்யாம்.

"நான் போகிறேன்.. இந்தத் தடியனுடன் சேர்ந்து கொண்டு என்னைத் தொல்லையென்று கேலி செய்கிறீர்கள்..?"என்று முகம் திருப்பியவளை.. "ச்ச.. ச்ச.. நீ என் அழகான இம்சைடா சுஜூ.."என்று கொஞ்சியவனை "ம்க்கும்.." என்று தொண்டையைச் செறுமிய அனு..

"அண்ணா.. ரொம்பத் தான்.. உன் காதல் மனைவியின் முகம் வாடுவதைக் கூடக் காணப் பொறுக்கவில்லையாக்கும்..?"என்று கேலி செய்தாள். இருவரையும் கண்ட சக்தி விரைவில் நேசிக்கத் தொடங்கி விடுவார்கள் என்று மகிழ்ச்சியுடன் முடிவு செய்து கொண்டான்.

DO NOT COPY

மேலும் சிறிது நேரம் அரட்டை அடித்து விட்டு விடை பெற்றுக் கிளம்பினான். வாசல் வரை வந்து விட்டவன் திரும்பி.. தன்னைத் தொடர்ந்து பின்னால் வந்த அனுவிடம்.. “பாய் டா லட்டு..”என்று கூற அவளும் சிரித்தபடி தலையசைத்தாள்.

அவன் நகராமல் இருப்பதைக் கண்டு “என்ன நின்று கொண்டே இருக்கிறீர்கள்..? செல்லவில்லையா..?”எனக் கேட்க.. “இல்லடா லட்டு.. அது வந்து... மாமாவிற்கு ஸ்பெஷல் கவனிப்பு ஏதுமில்லையா..?”என்று அவளது துப்பட்டாவைச் சுற்றிய படி கேட்டான்.

“அடச்சை...”என்று தலையிலடித்துக் கொண்டவள்.. “என் வீட்டில் நின்று கொண்டு என்னிடம் முத்தம் கேட்கிறாயா..?, தைரியம் தான்.. என் அண்ணனிடம் சொல்லட்டுமா... ம்..?”என்று வினவ.. “மாமாவை நான் சமாளித்துக் கொள்கிறேன்... நீ மட்டும் சரியென்று சொல்...”என்று அருகில் வந்தான்.

“விளையாடாதே டா.. யாரேனும் பார்த்து விடப் போகிறார்கள்...”என்று அவள் குழையத் தொடங்கவும்.. அவளது விருப்பம் அறிந்தவன் சிரித்தபடியே அவள் கன்னத்தில் முத்தமிட்டு “பாய் லட்டு..”என்று சென்று விட்டான்.

மறுநாள் காலை அலுவலகத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்த ஷ்யாம் “ஏய்.. பப்ளிமாஸ்.. என்னுடைய சட்டையில் நீ தான் கா∴பியைக் கொட்டி வைத்திருக்கிறாயா..?”என்று தன் அறையிலிருந்து சத்தமிட்டுக் கொண்டிருந்தான். “ஆமாம்.. நான் தான் கொட்டினேன்.. நேற்று இரவு நான் உறங்கிய பின் எதற்காக என் காதருகே அலாரத்தை வைத்து அலற வைத்தீர்கள்..?, அதற்காகத் தான் இந்தப் பழிக்குப் பழி..”என்று கீழேயிருந்தபடியே குரல் கொடுத்தாள் சுஜி.

“ராங்கி.. என்னைப் படுத்தி எடுப்பதையே முழு நேரத் தொழிலாக வைத்திருக்கிறாள்..”என்று கா∴பிக் கரை பட்ட சட்டையைத் தூக்கி எறிந்தான். கீழே விழுந்த சட்டையைக் குனிந்து எடுத்தபடியே உள்ளே நுழைந்த சீதா.. “என்னடா ஷ்யாம்..?, நீ எதற்காக அவளிடம் வம்பு செய்து கொண்டே இருக்கிறாய்..?அவள் பதிலுக்கு செய்தால் மட்டும் திட்டுகிறாயே.. இருவரும் புது மணத் தம்பதிகள் போலவா நடந்து கொள்கிறீர்கள்..?, எப்போதும் சண்டையிட்டுக் கொண்டு..”

“கல்யாணமாகி இத்தனை நாட்களாயிற்று.. அவளை எங்கேனும் அழைத்துச் சென்றிருக்கிறாயா..?, அவளுக்குப் பிடித்ததை வாங்கிக் கொடுத்திருக்கிறாயா..? நீ காதல் மணம் புரிந்து என்ன பிரயோஜனம்..?”என்று அவர் முறைத்துக் கொள்ள..

DO NOT COPY

“அம்மா..”என்று அவரருகே வந்தவன்.. “உன் மருமகள் கூட.. என்னை ஏன் வெளியே அழைத்துச் செல்லவில்லை என்று இதுவரை சண்டையிட்டதில்லை.. உண்மையிலேயே சுஜூ மிகவும் அதிர்ஷ்டசாலிம்மா.. உங்களைப் போல் ஒரு மாமியார் அமைந்ததற்கு..”என்று சிரிக்க.. “என்னைப் பாராட்டுவது இருக்கட்டும்.. நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்..” என்று கூறி விட்டுச் சென்றார்.

அலுவலகத்திலும் அன்னை கூறியதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த ஷ்யாம் சுஜிக்கு என்ன வாங்கிக் கொடுப்பது என்று பலவாறு யோசித்தான். மாலை வீடு திரும்புகையில்.. இருவரும் சண்டையிட்டுக் கொண்ட ஷாப்பிங் மால் கண்ணில் பட.. இது தான் சரி.. என்றபடி அதே கடைக்குள் நுழைந்தான்.

அவளுக்குப் பிடித்த பிங்க் நிற டெட்டியை வாங்கியைக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். சுஜிக்குத் தெரியாமல்.. தங்கள் அறைக்குள் நுழைந்து படுக்கையின் மீது டெட்டியை வைத்து விட்டு எதுவும் நடவாதது போல்.. அமர்ந்து கொண்டான். இரவு உணவை முடித்து.. அனுவுடன் அரட்டை அடித்து விட்டு வெகு நேரம் கழித்து அறைக்குள் நுழைந்தவளை எரிச்சலுடன் நோக்கியவன்..

தூங்குவதற்கும்,குளிப்பதற்கும் தவிர இந்த அறைப் பக்கம் நுழைவதே இல்லை காலை கீழே செல்பவள்.. இரவு தான் அறைக்குள் நுழைகிறாள். அப்படி என்ன தான் பேசுவாளோ.. வாய் ஓயாமல்.. என்று முணுமுணுத்த ஷ்யாம் அவள் தன் அருகே வைத்து விட்டுச் சென்ற பால் டம்ளரை எடுத்து பருகத் தொடங்கினான்.

இரவு உடைக்கு மாறித் தன் படுக்கையருகே வந்த சுஜி.. படுக்கையின் மீது வைக்கப் பட்டிருந்த டெட்டியைக் கண்டு “வாவ்!!!”என்று துள்ளிக் குதித்தாள். “நீங்கள் தான் வாங்கி வந்தீர்களா ஷ்யாம்..?, ஏன் என்னிடம் கூறவில்லை.. நான் என் வீட்டிலிருக்கும் டெட்டிகளையெல்லாம் சக்தியிடம் எடுத்து வரச் சொல்லியிருந்தேன்,. அந்தத் தடியன் மறுத்து விட்டான்.. மிகவும் நன்றி ஷ்யாம்..”என்று பொம்மையை அணைத்தபடியே கூறினாள்.

வாங்கி வந்தது நான்! பொம்மையை அணைத்துக் கொள்கிறாள்.. அய்யோ! என்று தலையில் அடித்துக் கொண்டான் ஷ்யாம். இந்தத் தத்தியை வைத்துக் கொண்டு என்ன செய்வதோ.. என்று புலம்பியபடியே.. படுக்கையில் சாய்ந்தான். பொம்மையை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த சுஜி.. ஷ்யாமின் அருகே நகர்ந்து டெட்டியை மறுபுறம் வைத்து அணைத்துப் படுத்துக் கொண்டாள்.

அவள் தன்னை ஒட்டி நகர்ந்ததும் சிரித்தபடியே அவள் புறம் திரும்பிய ஷ்யாம் “சுஜூ.. இந்தக் கலர் உனக்குப் பிடித்திருக்கிறதா..?, வெள்ளை நிற டெட்டி கூட இருந்தது.. ஆனால் உனக்கு இந்த நிறம் தானே பிடித்தம்..?”என்றபடியே கையை நீட்டி டெட்டியைத் தொட முயல.. அவன் கையைத் தட்டி விட்டவள்

“என் டெட்டியை யாரும் தொடக் கூடாது..”என்று பொம்மையை இறுகப் பற்றிக் கொண்டாள். “ரொம்பத் தான்.. போடி..”என்றவன் மறுபுறம் திரும்பிக் கொள்ள.. சிரிப்புடன் இருவரும் உறங்கத் தொடங்கினர். அன்று இரவு முழுதும் அவளை உரசிக் கொண்டே உறங்க நேர்ந்ததில்.. சுகமாக உணர்ந்தான் ஷ்யாம் பிரபு.



DO NOT COPY

# அத்தியாயம் – 18



**மேனி கொதிக்குது அடி – தலைசுற்றியே**

**வேதனை செய்குதடி**

**வானில் இடத்தை எல்லாம் இந்த – வெண்ணிலா**

**வந்து தழுவுது பார்**

**மோனத்து இருக்குதடீ – இந்த வையகம்**

**மூழ்கித் துயிலினிலே**

**நான் ஒருவன் மட்டிலும் பிரிவு என்பதோர்**

**நரகத்து உழலுவதோ?**

**ஷ்**யாம் வாங்கி வந்த பொம்மையை வீட்டில் அனைவரிடமும் காண்பித்துக் கொண்டிருந்தாள் சுஜிப்ரியா. "எவ்வளவு அழகு பார்த்தாயா அனு..?, எனக்குப் பிடித்த நிறம் இது.. தெரியுமா..?"என்று ஏதோ அப்பொழுது தான் முதன் முறையாக டெட்டியைப் பார்ப்பவள் போல் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தாள்.

அவளது புகழுரைக்கு நேர்மாறாக அண்ணனை முறைத்துக் கொண்டிருந்தாள் அனு. "ஏன் அனு.. அப்படிப் பார்க்கிறாய்..?, உனக்குப் பிடிக்கவில்லையா..?" என்று சுஜி வினவ.. அவள் ஷ்யாமிடம் திரும்பி "அண்ணா.. எத்தனை முறை எனக்கு ஒரு டெட்டி பொம்மை வாங்கித்தாவென்று கெஞ்சியிருப்பேன்..?, கழுதை வயதாகி விட்டது.. உனக்கு எதற்கு பொம்மை என்பாயே..?, உன் மனைவிக்கு மட்டும் வாங்கி வந்திருக்கிறாய்..?, ம்?"என்று இடுப்பில் கை வைத்துக் கோபமாக வினவ..

DO NOT COPY

“உன் அண்ணியால் தான் போன முறை பொம்மை வாங்க முடியாமல் போனது... திட்டுவதாய் இருந்தால் அவளைத் திட்டு..”என்று கழண்டு கொண்டான் ஷ்யாம்.

சுஜி சமாதானமாக “அனு.. நீ வேண்டுமானால் இந்தப் பொம்மையை வைத்துக் கொள்கிறாயா..?, நான் உன் அண்ணனிடம் கூறி வேறு வாங்கிக் கொள்கிறேன்.. என்று கூற.. அன்புடன் அவளை நோக்கி “மை ஸ்வீட் அண்ணி.. இது உங்கள் கணவர் உங்களுக்கு ஆசையாக வாங்கி வந்த முதல் பரிசு.. அதனால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்..”என்று அவளை அணைத்தபடியே கூற.. இருவரும் சிரித்த முகத்துடன் உரையாடுவதைப் பார்த்தபடியே வெளியேறினான் ஷ்யாம்.

அடுத்த வந்த நாட்களில்.. இரவில் பொம்மையை அணைத்த படி உறங்கும் சுஜியை வேடிக்கை பார்ப்பது ஷ்யாமின் வழக்கமான ஒன்றாகி விட்டது. அவள் கன்னம் தொட்டு.. கூந்தல் வருடி.. இதழ்களைத் தொடும் போது.. அவளைக் காதலிக்க ஆரம்பித்து விட்டதை இனிமையாக உணர்ந்தான்.

முதன்முறை சந்தித்த போதே மனதுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியவள்.. அதன் பின் அவன் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.. அதனால் தான் அடுத்த சந்திப்பின் போது தன்னை அறியாமல் சுஜூ என்றழைத்திருக்கிறான். அவள் மீது கொண்ட நேசம் தான் சுஜியின் தந்தை திருமணத்திற்காகக் கேட்ட போது அவனைத் தலையாட்ட வைத்திருக்கிறது..

பொறுப்பானவன் என்று வீட்டில் பெயர் வாங்கி வைத்திருக்கும் ஷ்யாம்.. அவளிடம்.. அவளுக்கு இணையாக வம்பு செய்து கொண்டு திரிந்திருக்கிறான்.. அவளது கோபத்தை,அழுகையைக் கண்ட போது அதைத் தடுத்தாக வேண்டுமென்று உள்ளே எழுந்த வேகம்.. அவள் புன்னகையில் மெய் மறந்த வேளை.. தன்னவளாக அவளைக் காண நேர்கையில் உள்ளே உண்டான மயக்கம்.. திருமணம் முடியும் வரை அவனுள் இருந்த தவிப்பு.. எந்தத் தடையும் வந்து விடக் கூடாதென்பதில் அவனுக்கிருந்த பயம்.. இவையனைத்தும் தெள்ளத் தெளிவாக அவனது நேசத்தை அவனுக்கு இடித்துரைத்து விட்டது..

இரக்கப் பட்டு என்னை நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டாமென்று அழுது ஆர்ப்பாட்டம் செய்தவள், அதன் பின் தந்தையின் பேச்சிற்காக சம்மதம் தெரிவித்து... இப்போது மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியிருந்தாலும்.. காதல் என்கிற உணர்வை அவளுக்குப் புரிய வைப்பது கஷ்டமென்றே உணர்ந்தான் அவன். விளையாட்டுத் தனமாக.. சிறு பிள்ளை போல் அலைந்து கொண்டிருப்பவளை.. எப்படி யோசிக்க வைப்பது என்று தவித்துத் தான் போனான். “சுஜூ.. உன்னை விட்டுப் பிடிக்கலாமென்று எண்ணுவது முட்டாள்தனம்.. என் வழியில் சென்று தான் பிடித்தாக வேண்டும்..” என்று

சிரித்தவன்.. வருடிக் கொண்டிருந்த அவள் கன்னத்தை பலமாகக் கிள்ளி விட.. தூக்கத்தில் முனகியபடி.. மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள் சுஜி.

மறுநாள் காலை கண் விழித்த பின்னும் படுக்கையை விட்டு எழாமல் சுஜியின் நடமாட்டத்தைக் கவனித்தபடி படுத்திருந்த ஷ்யாம்.. டிரெஸ்ஸிங் டேபிளின் முன்பு அமர்ந்து தலை துவட்டிக் கொண்டிருந்தவளை புன்னகையுடன் நோக்கினான்.. மெல்ல எழுந்து சென்று அவளருகே நிற்க.. அரவம் உணர்ந்து திரும்பிய சுஜி மலர்ந்த சிரிப்புடன்.. "எழுந்தாயிற்றா..? குட் மார்னிங் ஷ்யாம்.." என்று கூறினாள்.. பதிலேதும் சொல்லாமல்.. அவளையே நோக்கியவன்.. மேலும் அவளை நெருங்கி நின்றான்.

அவனது செய்கைகளைப் புரியாமல் நோக்கியவள்.. பின் நகர முயன்று தோற்று.. தடுமாற்றத்துடன் "எ..என்ன..?,"என்று வினவ.. அவன் அவளது முகம் நோக்கிக் குனிந்து.. தோளில் விரிந்து படர்ந்திருந்த கூந்தலின் வாசம் பிடித்தான். சிலிர்த்து நடுங்கியவளைப் பற்றி.. அவள் பின் கழுத்தில் முத்தமிட.. துள்ளி விலகிய சுஜி மறு புறம் திரும்பி நின்று கொண்டு "கூ..கூசுகிறது ஷ்யாம்.."என்று கூற.. தன் கன்னத்தை அவள் கன்னத்தில் அழுத்தி "மக்கு சுஜூ.." எனக் கூறி விலகிச் சென்றான். கழுத்தில் அவன் பதித்த முத்தத்தில் உண்டான கூச்சம் உடல் முழுதும் பரவி விட்டதாக உணர்ந்த சுஜி.. சிலிர்ப்புடன் அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று இரவு படுக்கையில் அமர்ந்து கொண்டு.. பொம்மையையும் மடியில் வைத்துக் கொண்டு.. தன்னருகே படுத்திருந்த ஷ்யாமிடம்.. தன் வீட்டில் சக்திக்குத் தான் செய்த கொடுமைகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள். சிரிப்புடன் அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஷ்யாம்.. கை நீட்டி.. அவள் கன்னக் குழியைத் தொட.. அதுவரை வாயாடிக் கொண்டிருந்தவள் நிறுத்தி.. "எ..என்ன ஷ்யாம்.."என்று வினவினாள்.. "உன் சிரிப்பு அழகாக இருக்கிறது சுஜூ.."என்று அவன் கூற.. மேலும் சிரித்து.. "தேங்க்ஸ்.."என்றாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு தயக்கத்துடன் "குட் நைட் ஷ்யாம்.."என்றவள்.. வழக்கம் போல் பொம்மையை அணைத்துப் படுத்துக் கொள்ள..

அவன் அவள் புறம் திரும்பி அவளை அணைத்து.. அவள் உச்சியில் கன்னம் பதித்து படுத்துக் கொண்டான். ஆச்சரியத்துடன் விழி விரித்தவளை "என்ன சுஜூ.. ஏன் இப்படிப் பார்க்கிறாய்..?, நீ தினமும் இரவு உன் பொம்மையை அணைத்துத் தானே படுத்துக் கொள்கிறாய்..?, என்னிடம் பொம்மை இல்லையல்லவா..?, அதனால் தான் நான் உன்னை அணைத்துக் கொள்கிறேன்.." என்று விளக்கம் கொடுக்க.. "ஓ!"என்றவள்..

“ஷ்யாம்..”என்று அவனை விளித்து “நான் வேண்டுமானால் உங்களுக்கு ஒரு டெட்டி வாங்கித் தரட்டுமா..?,”என்று வினவினாள். அவள் கேட்ட விதத்தில் சிரிப்பு வந்தாலும்.. அடக்கி.. “வேண்டாம்.. எனக்கு நீ தான் வேண்டும்..”என்று மேலும் இறுக அணைத்தபடி கூற.. அவனது அணைப்பின் கிறக்கத்திலேயே உறங்கிப் போனாள்.

அன்று அலுவலகத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த ஷ்யாமை செல்போன் அழைக்க.. எடுத்துப் பார்த்தவன் சுஜியின் தந்தை பெயர் ஒளிர்வதைக் கண்டு “சொல்லுங்கள் அங்கிள்..”என்றான். “ஹலோ ஷ்யாம்.. எப்படி இருக்கிறாய்..?, என் மகள் உன்னை நன்றாக கவனித்துக் கொள்கிறாளா..?”என்று உற்சாகமான குரலில் வினவினார் மகாலிங்கம்.

அவரது கேள்வியைக் கேட்டுச் சிரித்த ஷ்யாம் “அங்கிள்.. உங்கள் பெண்ணை நான் நன்றாக கவனித்துக் கொள்கிறேனா இல்லையா என்று தானே நீங்கள் விசாரிக்க வேண்டும்?, அப்படியே எதிர்மாறாகக் கேள்வி கேட்கிறீர்களே..?”என்று மேலும் சிரித்தான். “என்ன செய்வது தம்பி?,என் பெண் மிகப் பெரிய வேதாளமாயிற்றே! இதுவரை எத்தனை கொடுமைகளுக்கு உங்களை ஆளாக்கியிருக்கிறாளோ!”எனக் கூற.. “அங்கிள்.. உங்கள் மகளின் அட்டகாசங்களுக்கு ஈடுகொடுக்க.. இப்போது நானும் பழகிக் கொண்டேன். அதனால் நீங்கள் கவலையே பட வேண்டாம்..”என்று புன்னகைக் குரலில் கூறி முடித்தான்.

“நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்கவே நிம்மதியாக இருக்கிறது ஷ்யாம்.. விரைவிலேயே சுப செய்தியைக் கூறி விட்டீர்களானால்.. இந்தப் பிறவியின் பயனை அடைந்து விடுவேன்..”என்று உணர்ச்சி ததும்பக் கூற.. லேசாக நகைத்த ஷ்யாம் காலையில் நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டு “உங்கள் எதிர்பார்ப்பை விரைவிலேயே நிறைவேற்றுகிறோம் அங்கிள்..”எனக் கூறினான். அவனது பதிலிலேயே திருப்தி அடைந்து விட்டவராக.. “மிக்க மகிழ்ச்சி ஷ்யாம்..”எனக் கூறியவர்.. மேலும் சிறிது நேரம் உரையாடி விட்டு “ஒரு முக்கியமான விசயத்திற்காகத் தான் தம்பி போன் செய்தேன்.. நாளை சுஜியின் பிறந்த நாள்.. உங்களிடம் தெரிவித்திருக்க மாட்டாள் என்று நினைக்கிறேன்..”என்றவரிடம்..

“பிறந்த நாளா..?”என்று திகைத்தவன்... “அவள் என்னிடம் கூறவில்லை.. தேங்ஸ் அங்கிள்.. முன்னமே தெரிவித்ததற்கு..”எனக் கூறி அவருடன் பேச்சை முடித்துக் கொண்டு விரைவாகச் சிந்தித்தான். பிறந்த நாளென்று கூறவேயில்லையே ராட்சசி.. வாய் ஓயாமல்.. பிறர் பேச இடமளிக்காமல்.. அவ்வளவு பேசுவாளே! உருப்படியாக எதையேனும் கூறுகிறாளா.. என்று வழக்கம் போல் அவளைத்திட்டித் தீர்த்த ஷ்யாம்.. வீட்டிற்கு போன் செய்தான்.

DO NOT COPY

அவன் எதிர்பார்த்தது போல் சுஜிப்ரியா போனை எடுக்க.. அவ்வளவு நேரமாக அவள் மீது இருந்த கோபம் மாறி.. புன்னகை பூத்தது அவனுக்கு,, "ஏய்.. இம்சை,. என்ன செய்து கொண்டிருக்கிறாய்..?"என்று வினவினான். எதிர் முனையில் அவள்.. "ஷ்யாம்.. அலுவலகத்திலிருந்தா போன் செய்கிறீர்கள்..?, எதையேனும் மறந்து விட்டீர்களா..?,டிரைவர் அண்ணாவிடம் கொடுத்து விடட்டுமா..?"என்று வினவினாள்.

"மறந்தது நான் இல்லை, நீ தான்.. இன்னும் சிறிது நேரத்தில் நான் வீட்டிற்கு வந்து விடுவேன்.. தயாராக இரு. நாம் இருவரும் வெளியே செல்கிறோம்.."எனக் கூற.. "வெளியே செல்கிறோமா...?"எனக் குதூகலமானவள்.. "அனுவையும் தயாராகச் சொல்லட்டுமா..?,அவளையும் அழைத்துச் செல்லலாம் ஷ்யாம்.."எனக் கெஞ்சலுடன் முடித்தாள்.

"அனு மட்டும் போதுமா சுஜூ..?,அம்மா,அப்பா,வீட்டில் வேலை பார்ப்பவர்கள் அவர்களையும் அழைத்துச் செல்லலாமே..?"என்று ஷ்யாம் கூற.. அவள் மேலும் குஷியாகி "நிஜமாகவா ஷ்யாம்..?, நான் இப்போழுதே அனைவரிடமும் விசயத்தைத் தெரிவிக்கிறேன்.."என்று ஓடப் பார்க்க.. அய்யோ! என்று தலையலடித்துக் கொண்டவன்..

"சுஜூ.. நீயும்,நானும் முதன்முறையாக வெளியே செல்கிறோம்.. நாமிருவர் மட்டும் செல்ல வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.. நீ என்னடாவென்றால்.. அம்மாவிடம் கூறி விட்டுத் தயாராக இரு,. நான் வந்ததும் கிளம்ப வேண்டும்.." எனக் கூறி கட் செய்தான்.

போனை வைத்து விட்டுத் திரும்பிய சுஜிக்கு சீதாவிடம்.. வெளியே செல்வதாகக் கூறத் தயக்கமாக இருந்தது. எப்போதும் அனுவுடனே.. அலைந்து திரிபவள்.. இப்போது அவளை விட்டுவிட்டுச் செல்வதா..?, தயங்கியபடியே "அத்தை.."என்றழைத்து விசயத்தைத் தெரிவித்தாள். "ஒரு வழியாக உன்னை வெளியே அழைத்துச் செல்ல முடிவு செய்து விட்டானா அவன்..?, அவனது எண்ணம் மாறுவதற்குள்.. சீக்கிரம் கிளம்பு..."என்று அவர் விரட்டியடிக்க.. "இ..இல்லை அத்தை.. வந்து.. அனுவையும் அழைத்துச் செல்லட்டுமா..?"எனக் கேட்டாள்...

அதற்கு அனு "அண்ணி... என்னை என்ன பூஜை வேளைக் கரடி என்று நினைத்தீர்களா..?,நீங்களும் அண்ணனும் முதன் முறையாக வெளியே செல்கிறீர்கள்.. நான் எதற்கு..?, நான் என் தோழியின் வீட்டிற்குச் செல்கிறேன்.. நீங்கள் சென்று வாருங்கள்.."என்று கூற.. தயக்கம் சென்று மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள் சுஜி.

அடுத்த அரைமணி நேரத்தில் தயாராகி அவள் வெளியே வர எத்தனிக்க.. அப்போது சரியாக அறைக்குள் நுழைந்தான் ஷ்யாம். சேலை அல்லாது.. அவளது வழக்கமான.. அவளுக்குப் பிடித்தமான.. ஸ்கர்ட்,சட்டை,துப்பட்டாவுடன் அவள் நிற்பதைக் கண்டு.. அவனுக்கு.. அவளுடன் வம்பு செய்த சம்பவங்கள் நினைவிற்கு வந்தது.

சிரித்தபடி அவள் துப்பட்டாவைப் பற்றி.. அவளை அருகிலிழுத்து.. "வெகு நாட்களுக்குப் பிறகு.. இந்த உடையில் காட்சி தருகிறாயே சுஜூ.. என்ன இருந்தாலும் சேலை தான் கம்ஃபர்ட்டபிள்.."என்று அவள் இடையை அழுத்தி... மூக்கை உரச.. அவள் வழக்கம் போல்.. "கூ..கூசுகிறது ஷ்யாம்.."என்றபடி முகம் திருப்பினாள்.

"சரி.. நேரமாகி விட்டது.. வா..வா.."என்று அவள் கரம் பற்றி.. அழைத்துச் சென்றான். வீட்டில் அனைவரிடமும் விடை பெற்று.. நகரின் மிகப் பெரிய அந்தத் துணிக் கடைக்கு அழைத்துச் சென்றான். அவன் கைகளைப் பற்றிக் கொண்டு சுற்றும்,முற்றும் பார்த்தபடியே நடந்தவள்.. "இங்கே எதற்காக அழைத்து வந்திருக்கிறீர்கள் ஷ்யாம்..?"எனக் கேட்க..

அவளுக்கு பதில் கூறாமல்.. அங்கே அடுக்கி வைக்கப் பட்டிருந்த சேலைகளை நோக்கியவன்.. "அந்த நீல நிறப் புடவையை எடுங்கள்.."என்று கடை சிப்பந்தியிடம் கேட்டுக் கொண்டிருந்தான். "புடவையா..?,யாருக்கு ஷ்யாம்..?"என்று ஆரம்பித்தவள் அவன் பார்வையில் அடங்கி.. சேலைகளின் பக்கம் பார்வையைத் திருப்பி.. "அந்தப் பச்சை நிறப் புடவையை எடுங்கள்.." என்று அவனைப் போலவே குரல் கொடுத்தாள். சிரிப்புடன் அவளை நோக்கியவன்.. "வாலு..வாலு.. சரியான சேட்டைக்காரி.."என்று புன்னகைத்தான்.

அடுத்த சில மணி நேரங்களில் ஷ்யாமிற்குப் பிடித்த கரு நீல நிறத்தில் அழகான புடவையைத் தேர்ந்தெடுத்த சுஜிப்ரியா.. "அத்தைக்கும், அனுவிற்கும் கூட வாங்கலாம் ஷ்யாம்.."எனக் கோரி அவனிடம் அனுமதி பெற்று அவர்களிருவருக்கும் வாங்கிக் கொண்டே கடையிலிருந்து புறப்பட்டாள்.

கடையிலிருந்து நேராக அவளைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றான் ஷ்யாம். கடற்கரை என்றதும் குஷியாகி விட்ட சுஜி.. மகிழ்ச்சியுடன் அவனோடு வலம் வந்தாள். "சுண்டல் ஷ்யாம்.. சோளம் ஷ்யாம்.."என்று வரிசையாக.. வருவது போவது அனைத்தையும் வாங்கிக் கொறித்தபடி நடந்தவள்.. அலைகளின் அருகே சென்றதும்.. ஷ்யாமை ஓரக் கண்ணில் நோக்கினாள்.

கடற்கரைக்குள் நுழையும் போதே அலையில் ஆடக் கூடாது சுஜூ.. என்று அவளிடம் கண்டிப்பாகக் கூறியிருந்தான் அவன். அலைகளை விட்டுத் தள்ளியே.. வேடிக்கை பார்த்தபடி அவளுடன் நடந்து கொண்டிருந்தான். 

வாரத்திற்கொரு முறை தோழிகளுடன் கடற்கரைக்கு வந்து.. அட்டகாசம் செய்பவள் அவள். அவளை அலைகளுடன் விளையாடக் கூடாதென்று கூறினால்.. அவள் கேட்பாளா..?, இந்த வீரப்பன் என்ன சொன்னாலும் சரி.. பாய்ந்து விடு சுஜி... என்று மனதுக்குள் கூறிக் கொண்டு.. அவன் கையைப் பற்றி அலைகளுக்குள் இழுத்து விட்டாள். திடீரென்று அவள் இழுத்துக் கொண்டு ஓடவும்.. சற்றுத் தடுமாறி.. அவள் கையைப் பற்றி கால் ஊன்றிய ஷ்யாம்.. “ஏய்.. எத்தனை முறை கூறினேன்..?, தண்ணீரில் ஆடாதே என்று! நாளை பிறந்த நாளும் அதுவுமாக.. உடம்பு சரியில்லாமல் போனால்.. என்ன செய்வது..?, சுஜூ.. போதும்..”என்று அவன் கத்தத் துவங்க..

அதுவரை அவன் மீது... நீரை அள்ளித் தெளித்து விளையாடிக் கொண்டிருந்தவள் நிறுத்தி.. திகைத்து விழித்து “உங்களுக்கு எப்படித் தெரியும் என் பிறந்த நாளென்று..?,சக்தி கூறினானா..?”என்று வினவினாள். “ம்..”என்றபடி அவளை முறைத்தவன்.. “சக்தி கூறவில்லை.. அங்கிள் கூறினார்.. நீ ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை சுஜூ..?, அங்கிள் சொன்னதும்.. எனக்கு எவ்வளவு கோபமாக வந்தது தெரியுமா..?, “எனக் கேட்க..

அவளோ.. நன்றாக முறுவலித்து “என் பிறந்த நாளென்று நான் எப்படி கூற முடியும்..?, நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்..”என்றபடி தண்ணீரை அள்ளி அவன் மேல் தெளித்தாள். “அது தான் கண்டு பிடித்தாயிற்றே..!, நீ சொல்லாவிட்டாலும் தெரிந்து விட்டது பார்த்தாயா..?, நல்லவேளை மாமா இன்றே தெரிவித்தார். அவருக்குத் தான் நன்றி கூற வேண்டும்..”எனக் கூறிக் கொண்டே.. அவளைத் தண்ணீரிலிருந்து வெளியே இழுத்தான். “இன்னும் கொஞ்ச நேரம் ஷ்யாம்.. ப்ளீஸ்.. ப்ளீஸ்..” என்று அவன் தோளைப் பற்றிக் கெஞ்சியவளை.. “பத்தே நிமிடம் தான்.. அதற்கு மேல் விளையாடக் கூடாது..” என்று கூறி விட்டு.. சற்றுத் தள்ளிச் சென்றமர்ந்தான்.

அங்கே விளையாட வந்த இரு சிறுமிகளுடன் சேர்ந்து கொண்டு அவர்களின் கையைப் பற்றிய படி விளையாடிக் கொண்டிருந்தவளை புன்னகையுடன் நோக்கியவன்.. “ஐ லவ் யூ சுஜூ...”என்று முணுமுணுத்தான்.

வீட்டிற்குச் சென்று அனைவரிடமும் சுஜியின் பிறந்த நாளை ஷ்யாம் தெரிவிக்க.. “இந்தச் சாப்பாட்டு ராமன் கூட என்னிடம் கூறவில்லை அண்ணி.. அவனைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்...”என்று கறுவிக் கொண்ட அனு.. “அண்ணா.. இப்போதே அனைவருக்கும் விசயத்தைக் கூறிப் பெரிதாகக் கொண்டாடலாமா..?,ப்ளீஸ்..”எனக் கெஞ்ச.. ஷ்யாம் பதில் சொல்வதற்குள் இடைப் புகுந்த சுஜி “அனு அதெல்லாம் வேண்டாம்.. பிறந்த நாளை எதற்காக ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டும்..?, வேண்டாமே..”எனக் கூற..

DO NOT COPY

“அண்ணனும்,நீங்களும்.. இந்த விசயத்தில் ஒற்றுமையாக இருக்கிறீர்கள் அண்ணி.. அண்ணனுக்கும் ஆடம்பரமாகக் கொண்டாடப் பிடிக்காது.. சரி, வீட்டிலேயே.. ஏற்பாடு செய்கிறேன்..”என்று எழுந்து சென்றாள். அவள் செல்வதை சிரிப்புடன் கண்ட ஷ்யாம் “இந்த மாதிரி விசயங்கள் என்றால் அனு மிகவும் குஷியாகி விடுவாள்..”என்று சிரித்தான்.

இரவுச் சாப்பாடு முடித்துக் கொண்டு உறங்கிப் போனவளை.. சரியாக 12 மணி அடித்ததும்.. தொட்டு எழுப்பினான் ஷ்யாம். கண்ணைக் கசக்கியபடியே விழித்தவளிடம்.. “என் அழகான இம்சைக்கு.. இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்...”என்றபடியே ஒரு பெட்டியை நீட்டினான்.

“தேங்க் யூ ஷ்யாம்..”என்று புன்னகைத்தவள் அவன் நீட்டிய பெட்டியைக் கண்டு “என்ன இது..?”என்றபடி வாங்கித் திறந்தவள்.. திகைத்து விழி விரித்தாள். அது ஒரு விலை உயர்ந்த வைர நகை! அந்த இருளில்.. மங்கிய வெளிச்சத்தில் கண்ட போதே.. மின்னியது.. பிறந்த நாளுக்காகப் பல லட்சங்களைச் செலவழித்து இதை வாங்குவதா..?, ஆனால் எப்போது வாங்கினான்..?, சேலைக் கடைக்குத் தானே அழைத்துச் சென்றான்..?, இதை எப்படி வாங்கினான்..? என்று யோசித்தபடி அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

அதுவரை அவள் முகத்தில் தோன்றிய பிரம்மிப்பு.. கோபம்.. கேள்வி.. போன்ற உணர்வுகளைக் கண்டவன்.. “உன் பிறந்த நாளென்று அங்கிள் சொன்ன போதே.. நகை வாங்க வேண்டுமென்று எண்ணினேன்.. உன்னையும் அழைத்துச் சென்று வாங்கலாம் என்று தான் முதலில் நினைத்தேன். பின்.. சேலை உன்னை அழைத்துச் சென்று வாங்கலாம் என்றும்.. நகையை நானே சென்று வாங்குவதென்றும் முடிவு செய்தேன்.. உனக்குப் பிடித்திருக்கிறதா சுஜூ..?”என்று வினவினான்.

“மிக மிக அழகாக.. பிரம்மாண்டமாக உள்ளது ஷ்யாம்.. ஆனால்.. பிறந்த நாளுக்காக இவ்வளவு செலவழிப்பதா..?,”என்றவளிடம்.. “இந்த முகத்தில்.. ஒரு நிமிடம்.. ஆச்சரியம் தோன்றியதே..! அதற்காக.. எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கலாம்..”என்று கை பற்றி அவளை எழுப்பியவன்.. கண்ணாடியின் முன்பு அமர வைத்து.. அந்த நகையை அணிவித்தான்.

உறக்கத்தைத் தொலைத்து மயக்கம் ஏறியிருந்த அவள் விழிகளில்.. அந்த மயக்கத்தை மீறித் தோன்றிய மினுமினுப்பு.. வைரத்தின் ஜொலி ஜொலிப்பை மிஞ்சியது... இரவு ஒளியின் வெளிச்சத்தில் பளபளத்த அந்தச் செந்நிறக் கன்னம்.. வைரத்தின் பளபளப்புடன் போட்டியிட்டது.. கண்ணாடியில் பிரதிபலித்தத் தன் முகத்தை நிமிர்ந்து நோக்கிய சுஜியின் பார்வை.. தன் தோளில் கரம் பதித்து நின்றிருந்தவனின் முகம் நோக்கிச் சென்றது.

DO NOT COPY

இமைக்க மறந்து தன்னையே பார்த்தபடி நின்றவனின் விழிகளுடன் தன் விழிகளைக் கலக்க விட்ட சுஜியும்.. தன்னை மறந்து நிற்க.. அவள் கழுத்தை வருடிக் குனிந்து அவள் காதோரத்தில் முத்தமிட்டான் அவன்.

கூச்சத்துடன் விலகியவளைப் பற்றிக் கூந்தலில் கை நுழைத்து இதழ் நோக்கிக் குனிந்தவனை.. கதவு தட்டும் ஓசை தடுத்து நிறுத்தியது.. கண் மூடித் தன்னை நிதானத்திற்குக் கொண்டு வந்தவன்.. அவசரமாக அவளைப் பற்றி.. கன்னத்தில் முத்தமிட்டு.. “ஹாப்பி பெர்த்டே சுஜூ...”என்று கூறி விட்டுக் கதவை நோக்கிச் சென்றான் ஷ்யாம்.

அவன் கதவைத் திறந்ததும் அங்கே புன்னகையுடன் நின்று கொண்டிருந்த அனு “சாரி அண்ணா.. டிஸ்டர்ப் செய்து விட்டேனா..?”எனக் கேட்க.. “கதவைத் தட்டி அனைத்தையும் கெடுத்து விட்டாயே.. இன்னும் என்ன கேள்வி...?”என்று தொடங்கியவன்.. மேலும் ஏதும் கூறிவிடும் முன் அவனைத் தடுத்த சுஜி “அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அனு.. நீ உள்ளே வா..”என்று அழைக்க.. அவள் கழுத்திலிருந்த நகையைக் கண்டு “வாவ்....”என்று விழி விரித்த அனு..

“அண்ணி.. இந்த நகை எவ்வளவு அழகு தெரியுமா..?,உங்கள் கழுத்தில் வாகாகப் பொருந்தியிருக்கிறது.. அண்ணனுடைய செலக்சன் எப்போதும் சூப்பர் தான்.. நகையிலிருந்து தொடங்கி.. அண்ணி வரை..”என்று பாராட்டியவள் “சரி.. இருவரும் வாருங்கள்.. கீழே அனைவரும் காத்திருக்கிறார்கள்.. கேக் கட் செய்ய வேண்டும்..”என்று அழைத்துச் சென்றாள்.

சீதா,ராஜாராமன்,அன்னை,தந்தை,சக்தி என்று அனைவரும் கூடியிருப்பதைக் கண்ட சுஜி அன்னையிடம் ஓடிச் சென்றாள். “அம்மா.. அப்பா.. நீங்கள் எப்போது வந்தீர்கள்..?, என்னிடம் கூறவேயில்லையே..?”எனக் கேட்க.. “அனு தானம்மா.. எங்களை வரவழைத்தாள். நீ உறங்கிய பின்பு தான் வர வேண்டுமென்று கண்டிஷன் வேறு..”என்று மகாலிங்கம் கூற.. சிரித்தபடியே.. அனுவை அணைத்து “ரொம்ப தேங்க்ஸ் அனு..”என்று சுஜி தன் நன்றியைத் தெரிவிக்க.. ஷ்யாம் காதில் புகை வந்தது,

அவளருகே சென்று குனிந்து யாருக்கும் கேட்காத படி.... “ஏன் சுஜூ.. நானும் ஒரு சர்ப்ரைஸ் கொடுத்தேனே.. எனக்கு இது போல் நன்றி தெரிவித்தாயா..?, இது என்ன ஓரவஞ்சனை..?, இப்படிப் பாரபட்சம் பார்க்கிறாயே..?”எனக் கூற.. வெட்கத்துடன் முறுவலித்தபடியே.. ஓடிச் சென்று விட்டாள் சுஜிப்ரியா.

அவள் செல்வதையே காதலுடன் நோக்கியவனின் அருகே வந்த சக்தி ஷ்யாமின் தோளை இடித்து “அப்புறம் மாம்ஸ்.. ஒரே ரொமான்ஸ் தான் போல..”என்று சிரிக்க.. அதற்கு அவன்.. சக்தியை முறைத்து “எங்கே..?, அதைத் தான் உன் ஆள் அனுதரணி வந்து கெடுத்து விட்டாளே..!”எனக் கூற.. சக்தி

DO NOT COPY

அதற்கு நன்றாக முறுவலித்து “அந்த தத்தி தான் உங்கள் ரொமான்ஸிற்கு கரடியாகி விட்டாளா..?, அடிப்படையில் அவளுக்கு அறிவு கொஞ்சம் கம்மி மாமா.. அதனால் அவ்வப்போது இப்படித் தான் நடந்து கொள்வாள்..”என்று கூறிக் கொண்டே போனவன்.. ஷ்யாம் அவனை ஒரு மாதிரியாகப் பார்ப்பதை உணர்ந்து என்ன கூறினோம் என்று விழித்தான்.

உன் ஆள் அனுதரணி என்றா கூறினார்..?, அய்யோ இப்போது என்ன செய்வது..? இவருக்கு எப்படி விசயம் தெரிந்தது..?, என்று பேய் முழி முழித்த சக்தியைக் கண்டு வாய் விட்டு நகைத்த ஷ்யாம்.. “ரொம்பவும் பயப்படாதே சக்தி.. உன் அக்கா.. ஓட்டை வாய் சுஜிப்ரியா.. எங்கள் திருமணம் முடிந்த சில நாட்களிலேயே.. உங்கள் இருவரின் காதலைப் பற்றி வீட்டில் அனைவரிடமும் கூறிச் சம்மதமும் வாங்கி விட்டாள்.. இந்த விசயம் அனுவிற்குத் தெரியாது.. உன்னிடமும் கூறக் கூடாது என்று தான் அவள் கூறியிருந்தாள்.. இருவருக்கும் இன்னமும் கல்யாண வயது வரவில்லையாம்.. நான் கூறவில்லை.. என்னை முறைக்காதே.. அவள் தான் கூறினாள்..”என்று ஷ்யாம் கூற..

“பார்த்தீர்களா மாம்ஸ்.. எனக்கு எப்போதும் வில்லி.. இந்த சுஜிப்ரியா தான்.. அவள் ஒரு நைட்டி போட்ட சகுனி மாமா..”என்று முறைத்துக் கொண்டவன்.. சற்றுத் தயங்கி.. “வந்து.. உங்களுக்கும்.. அத்தை,மாமாவிற்கும் இதில் சம்மதம் தானே..?”எனக் கேட்க.. “ம்..”என்று யோசித்த ஷ்யாம்.. “அனு அளவிற்கு நீ அழகாக இல்லாவிடினும்..”எனத் தொடங்கியவன்.. “மாம்ஸ்...”என்று பல்லைக் கடித்த சக்தியைக் கண்டு சிரித்து.. “அனைவருக்கும் சம்மதம் தான் மாப்பிள்ளை சார்...”எனக் கூற.. “தேங்ஸ் மாம்ஸ்..”எனச் சிரிப்புடன் சென்றான்.

அவன் மகிழ்ச்சியுடன் செல்வதைக் கண்டு புன்னகையுடன் திரும்பிய ஷ்யாம் இடுப்பில் கை வைத்து முறைத்தபடி சுஜி நிற்பதைக் கண்டு.. “என்னடா சுஜூ..”என்ற படி அவள் காதோரக் கூந்தலை ஒதுக்கியபடி கேட்க.. “உங்களை யார் இப்போது அவனிடம் அனைத்தையும் ஒப்பிக்கச் சொன்னது... இப்போது கூற வேண்டாமென்று நான் சொன்னேனல்லவா..?”என்று வினவினாள்.

“அதனால் என்னடா சுஜூ.. அக்காவைப் போல்.. சக்தி ஒன்றும் மக்குப் பையன் அல்லவே.. அவன் புத்திசாலித்தனமாகத் தான் நடந்து கொள்வான்..”எனக் கூற.. அவள் கோபத்துடன் “நான்.. நான் மக்கா..?”என்று சிலிர்த்தெழுந்த வேளையில்.. “அண்ணி.. வாருங்கள் கேக் வெட்டலாம்..”என்று அனு அழைக்க.. அவனை முறைத்து விட்டுச் சென்றாள்.

அனைவரும் வாழ்த்து பாட.. கேக் கட் செய்தது.. சிரிப்பை வரவழைத்தது சுஜிக்கு.. புன்னகைத்தபடியே கேக்கை கட் செய்து.. தள்ளி நின்று கொண்டிருந்த ஷ்யாம் அருகே சென்று ஊட்டி விட்டாள்.. மனைவி தனக்கு முதலில்

DO NOT COPY

ஊட்டுவாளென்று நினைத்திராத ஷ்யாம்.. திகைப்பும்,மகிழ்ச்சியுமாய்... அவளுக்கும் ஊட்டித் தன் வாழ்த்தைத் தெரிவித்தான்.

அதன் பின் அன்னை,தந்தை,அத்தை,மாமா,சக்தி,அனு என்று அனைவருக்கும் கேக்கை ஊட்டினாள். இரு குடும்பங்களும் கலந்து கொண்டாடிய இந்தப் பிறந்த நாளை.. வாழ்வில் என்றென்றும் மறக்க முடியாதென்றே உணர்ந்தாள் சுஜி. இவையனைத்திற்கும் காரணமான.. ஷ்யாமைத் திரும்பி நோக்கியவள்.. அவன் சிரிப்புடன் தந்தையுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு.. அவனையே காதலுடன் நோக்கினாள்.

மாப்பிள்ளை என்று ஒருவனை தந்தை அறிமுகம் செய்து வைத்த போது.. மனம் அவனை அவ்வளவு சீக்கிரம் கணவனாக ஏற்றுக் கொள்ளவில்லையே..! ஆனால் இவனுடன் எப்படி ஒன்றி விட்டது..?, இவனுடன் தான் இனி வாழ்வு என்று முடிவானதும்.. இயல்பாக ஏற்றுக் கொண்டதே.. எப்படி..?,

அவசர..அவசரமாக.. கட்டாயத்திற்காக நடக்கப் பட்டத் திருமணம் என்று இங்கே எவருக்கேனும் உறுத்தல் இருக்கிறதா..?, எப்படி இயல்பாக அமைந்து விட்டது..?, திருமண பந்தம் ஜென்ம,ஜென்மமாகத் தொடர்வது என்கிறார்களே.. அது உண்மையா..?, ஷ்யாமுடனானத் தன் பந்தம் ஜென்மங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறதா..?, என் கணவன்... எனக்கே எனக்கானவன்.. என் உள்ளம் நிறைந்தவன்.. என் மனம் கவர்ந்தவன்.. என்னை வென்றவன்... என்னவன்..

அன்பும்,காதலும் நிறைந்த பார்வையைத் தன் மீது செலுத்திக் கொண்டிருக்கும் மனைவியை புன்னகை ததும்பும் கண்களில் நோக்கிய ஷ்யாம்.. என்ன என்று புருவம் தூக்கி கேட்க.. பதிலேதும் கூறாமல்.. அவனருகே சென்றவள்.. “தேங்க்ஸ் ஷ்யாம்..”எனக் கூற.. அவன் புரியாமல் “எதற்கு..?”என்று வினவினான். “எல்லாத்திற்கும்...”என்று கூற.. அவள் தோள் பற்றி அழுத்தித் தன் மீது சாய்த்தான் ஷ்யாம்.. அவன் தோளில் முகம் புதைத்தவளின் கூந்தலை வருடி.. முத்தமிட்டவன்.. “உனக்கும் தேங்க்ஸ்...”என்று கூற.. முகத்தை நிமிர்த்தி “எனக்கு எதற்கு தேங்ஸ்...?”என்று வினவினாள்.. தன் நெற்றியை அவள் நெற்றியில் அழுத்தி “எல்லாத்திற்கும்...”என்று அவளைப் போலவே கூறிச் சிரித்தான் ஷ்யாம் பிரபு..

DO NOT COPY



DO NOT COPY

# அத்தியாயம் – 19



**கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான்**

**கள்வெறி கொள்ளுதடி..**

**உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா**

**உன்மத்தம் ஆகுதடி..**

"**சுஜூ**.. என் டை எங்கே வைத்தாய்..? இன்று அலுவலகத்தில் மீட்டிங் இருக்கிறதென்று நேற்றே கூறினேனே..?, நேரமாயிற்று.. சீக்கிரம் எடுத்து வா" என்று காலை நேர பரபரப்பில் சத்தமிட்டுக் கொண்டிருந்த ஷ்யாம் அவளிடமிருந்து பதிலில்லாது போக.. பேச்சை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். அவள் அறையிலேயே இல்லை.. கீழே சென்று விட்டாள்.

அவள் சென்றது மேலும் கோபத்தைத் தர.. "ஓடி விட்டாள்.. கீழே சென்று அன்னையுடன் சமையலறையில் அட்டகாசம் செய்வது... அல்லது.. அனுவுடன் அரட்டையில் இறங்கி விடுவது... தாலி கட்டிய கணவனைக் கவனிப்பதைத் தவிர.. அனைத்துக் கடமைகளையும் செவ்வனச் செய்கிறாள்.. முன் ஜென்மப் பாவம் போலும் இவளுடன் குடும்பம் நடத்துவது..!"என்று புலம்பியபடிக் கட்டிலில் டையைத் தேடியவன்.. அங்கே கிடந்த டெட்டி பொம்மையைக் கண்டு விட்டு.. அதைக் கோபமாக முறைத்தான்.

"என்னைக் கூட அவ்வளவு இறுக்கமாக அவள் கட்டிக் கொண்டதில்லை.. ஆனால் இந்தப் பொம்மையை மட்டும் தினமும் அணைத்துக் கொள்கிறாள்! கேட்டால்.. பொம்மை இருந்தால் தான் தூக்கம் வருமாம்! இன்று உன்னைக் கதற விடுகிறேன் சுஜூ.."என்று கறுவிக் கொண்டவன்.. பொம்மையை பரண் மீது போட்டு... ஒளித்து வைத்து விட்டுச் சென்று விட்டான்.

DO NOT COPY

அவன் அலுவலகம் சென்ற பின் அறைக்குள் நுழைந்த சுஜி.. ஷ்யாம் கோபத்தில் கீழே எறிந்து விட்டுப் போன பொருட்களையெல்லாம் எடுத்து ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தாள். அனைத்தையும் ஒதுக்கிய பின்பு அறையில் ஏதோ குறைவது போல் தோன்ற.. சுற்றும் முற்றும் நோக்கினாள்.

படுக்கை மீது பார்வை சென்றதும்.. அங்கே டெட்டியைக் காணாது.. பதறி.. கட்டிலின் கீழே குனிந்து தேடினாள். அறை முழுதும் தேடியும் கிடைக்காததால்... ஒழுங்கு படுத்தி வைத்த பொருட்களனத்தையும் மீண்டும் இழுத்துப் போட்டு.. அட்டகாசம் செய்து கொண்டிருந்தாள்.

மீட்டிங் முடிந்து மதியம் வீட்டிற்கு வந்த ஷ்யாம்.. ஹாலில் சுஜி இல்லாததைக் கண்டு "சுஜூ எங்கே அனு..?"என்று விசாரித்தான். "நீ சென்ற பின் அறைக்குச் சென்றவள்.. அதன் பின் கீழே வரவில்லை.. தூங்குகிறாளோ என்னவோ..."என்று சீதா கூற.. "இந்த நேரத்தில் தூங்க மாட்டாளே.."என்றபடி தன் அறைக்குச் சென்ற ஷ்யாம் அங்கே மனைவி நின்று கொண்டிருந்த கோலத்தைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

அறையிலிருந்த அத்தனைப் பொருட்களையும் இழுத்துப் போட்டு.. குப்பை,கூளங்கள் சூழ.. நடுவில் வீற்றிருந்தாள் சுஜி. எந்தப் பொருளையும் மிதித்து விடாமல்.. தாவித் தாவி.. அவளருகே வந்த ஷ்யாம்.. "ஏய்.. சுஜூ.. என்ன இது..?, அறையைச் சுத்தம் செய்கிறாயா..?, நன்றாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் பொருட்களையெல்லாம் களைத்துப் போட்டுத் தான் உங்கள் ஊரில் சுத்தம் செய்வார்களா..?"என்று சிரித்தவன் அவள் முறைப்பதைக் கண்டு நிறுத்தி.. "என்ன..?"என்றான்.

"என்னைக் கோபப்படுத்தாதீர்கள் ஷ்யாம்.. நானே என் டெட்டியைக் காணவில்லையென்று தேடிக் கொண்டிருக்கிறேன்.. நீங்கள் என்ன கேலி செய்கிறீர்கள்..?"என்று கோபத்துடன் கேட்க.. "ஓ!"என்ற ஷ்யாம்.. பரணில் கிடக்கும் டெட்டியின் மீது பார்வையைச் செலுத்தினான். கீழே இப்படித் தேடுபவள்.. மேலே தேடியிருந்தால் கிடைத்திருக்குமே.. நீ மக்காக இருப்பது.. சமயத்தில் எனக்குச் சாதமாகத் தான் இருக்கிறது சுஜூ.. என்று சிரித்துக் கொண்டவன்..

அவள் புறம் திரும்பி.. "அதைத் தான் இப்படி தேடுகிறாயா..?, பொம்மை தானே சுஜூ.. போனால் போகட்டும்.."எனக் கூற.. "என்ன,,.?,:என்றபடி அவன் மீது பாய்ந்தாள். "என் டெட்டியை பொம்மையென்று கூறாதீர்களென்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்..?, போனால் போகட்டுமென்றா கூறுகிறீர்கள்..?,"என்று அவன் சட்டையைப் பற்றி உலுக்க... புன்னகையை அடக்க முயன்று தோற்று.. சத்தமாகச் சிரித்தான் ஷ்யாம்.

DO NOT COPY

“சரி.. உன் டெட்டி தான் காணாமல் போய் விட்டதே சுஜூ.. இப்போது என்ன செய்வதாக இருக்கிறாய்..?, இப்படி அறையைக் குப்பையாக்குவதால் போன உன் டெட்டி திருப்பிக் கிடைத்து விடுமா என்ன..?”என்று மேலே நோட்டம் விட்டபடி கூற.. பற்றியிருந்த அவன் சட்டையை விடுவித்து.. “எங்கே போய் விட்டது என் டெட்டி..?,என் டெட்டியை அணைத்துக் கொள்ளாமல்.. நான் எப்படி உறங்குவேன்..?”என்று அவள் புலம்ப..

“இது தான் உன் பிரச்சனையா..?, என்னை வேண்டுமானால் கட்டிக் கொள் சுஜூ.. இப்போது தயவு செய்து இதையெல்லாம் சுத்தப் படுத்து”என்று கூறிவனிடம்.. “எனக்கு என் டெட்டி தான் வேண்டும்..”என்று அடம் பிடித்தவள்.. “நான் சென்று முத்துவை அழைத்து வருகிறேன் சுத்தம் செய்வதற்கு..”எனக் கூற.. அவள் கைப் பற்றித் தடுத்தவன்.. “அனைத்தையும் இழுத்துப் போட்டு.. அறையை அசிங்கப் படுத்தியவள் நீ.. சுத்தம் செய்ய மட்டும் முத்து வர வேண்டுமா..?, நீயே செய்.. அப்படியேனும்.. இந்த பப்ளிமாஸ் சைஸ் குறையட்டும்...”என்று கேலி செய்ய..

அவனைக் கோபமாக முறைத்தவள்.. “இந்த சக்திப் பயலுடன் சேர்ந்து கொண்டு நீங்கள் என்னை ரொம்பத் தான் கேலி செய்கிறீர்கள்.. நான் பப்ளிமாஸா..?, எங்கள் காலேஜில் நான் மிஸ்.குயினாக்கும்! தெரியுமா உங்களுக்கு.,,?”என்று ரோஷமாகக் கூற.. “ம்ம்,ஆமாம்.. உனக்கு நல்ல ஷேப்..”என்று அவன் அவளது இடையைக் கிள்ள,,. “ஆ!”என்று துள்ளி விலகியவள்.. “கூ..கூசுகிறது ஷ்யாம்..” எனக் கூற..

“ஏய்...”என்றபடி அவளருகே வந்தவன்.. “அதென்ன நான் எப்போது தொட்டாலும் இதையே சொல்கிறாய்..?, கூசுகிறது ஷ்யாம்.. கூசுகிறது ஷ்யாம் என்று!. எங்கேயிருந்து கற்றுக் கொண்டாய் இந்த டையலாக்கை..?”என்று அவன் வினவ.. அவள் கீழே குனிந்தபடி “கூசினால்.. கூசுகிறதென்று தானே சொல்ல முடியும்..?”என்று கூற.. “இப்போது கூசுகிறதா என்று பார்க்கலாம்....”என்றவன்.. அவள் முகம் பற்றி அருகிலிழுத்து சரமாரியாக முத்தமிடத் துவங்கினான்.

“இப்போது... இப்போது கூசுகிறதா..?”என்றபடி அவன் அடுத்தடுத்து முத்தமிட.. கூச்சத்தில் முனகியபடி அவன் சட்டையை இறுகப் பற்றினாள். கண் மூடி நெகிழ்ந்து நின்றவளின் முகத்தை நிமிர்த்தி பார்வையிட்டவன்.. “சுஜூ...”என்று மெல்லிய குரலில் அழைத்தான். “ம்..”என்றவளிடம்.. “கண்ணைத் திறந்து என்னைப் பார் சுஜூ..”என்று அவள் கண்களில் முத்தமிட்டவன் அவள் இமை திறந்ததும்.. “இப்போது கூச்சம் போய் விட்டதா..?”என்று வினவினான்.

அவன் கண்களைச் சந்தித்ததும் வெட்கம் சூழ்ந்து கொள்ள... விரிந்த புன்னகையுடன் அவனை விட்டு விலகி ஓடினாள். “ஏய்,.,. நில் சுஜூ...”என்றபடியே அவளைத் தொடர்ந்து ஓடியவன்... அவள்

DO NOT COPY

சமையலறைக்குள் நுழைந்ததைக் கூட உணராமல்.. பின்னோடு சென்று.. “சுஜூ...”என்று கிறங்கியபடியே அவளை இறுக அணைத்தான்.

“ஷ்யாம்.. ஷ்யாம்..”என்று அவனை உலுக்கி அவள் விலக்கிய பின்பு தான் சுய உணர்வே வந்தது அவனுக்கு.. பதறி விலகியவன்.. பின்னால் இருந்து கை தட்டியபடி நடந்து வந்து கொண்டிருந்த அனுவின் மீது இடித்துக் கொண்டான். “அண்ணா.. இது பூலோகம் தான்.. நீ கந்தர்வ லோகத்திலிருந்து இப்போது தான் ஃப்ளைட் பிடித்து வந்திறங்கியிருக்கிறாய் போல...,”என்று கேலி செய்ய..

என்ன செய்வதென்று யோசித்தவன்.. பின்பு குரலை மாற்றி.. “அனும்மா.. என்ன இது..”என்று தொடங்குவதற்குள்.. அவள் முந்திக் கொண்டு “அதையே தான் நானும் கேட்கிறேன்.. என்ன இது..?,என்ன நடக்கிறது இங்கே..?, இது கிச்சன்.. ரொமான்ஸ் பிளேஸ் அல்ல.. புரிந்ததா..?, என்ன ஒரு சிரிப்புச் சத்தம்.. என்ன ஒரு ஓட்டம்! என்ன ஒரு அணைப்பு...! ஒரு கன்னிப் பெண் இருக்கும் வீட்டில் இப்படித் தான் நடந்து கொள்வீர்களா..?”என்றி வினவ..

“அ.. அது வந்து..”என்று மேலும் முழித்தான் ஷ்யாம். அண்ணன் முகம் போன போக்கைக் கண்டு சிரித்த அனு.. “அய்யோ.. பாவம்.. அண்ணா.. நீ போகலாம்.. நான் அண்ணியைக் கவனித்துக் கொள்கிறேன்..”எனக் கூற.. விட்டால் போதுமென்று விழுந்தடித்துக் கொண்டு ஓடி விட்டான் ஷ்யாம்.

எதுவும் கூறாமல்.. மறுபக்கம் திரும்பி நின்றிருந்த சுஜியை.. “ம்க்கும்..”என்று தொண்டையைச் செறுமி “மிஸஸ்.சுஜிப்ரியா..”என்றழைத்தாள் அனு. அப்போது தான் அவளைக் கவனிப்பவள் போல் விழி விரித்த சுஜி “அனு.. நீ எப்போது வந்தாய்..?, என்ன வேண்டும்.., கா..ஃபியா..?, நான் வேண்டுமானால் தரட்டுமா..”எனக் கேட்க.. “அடிப்பாவி அண்ணி...”என்ற அனு.. “அப்படியானால்.. அண்ணனும் நீங்களும்..”என்று அவள் முடிப்பதற்குள் இடை புகுந்தவள்.. “என்ன.. உன் அண்ணன் வந்தாரா..?, எப்போது..?, நான் அவரைப் பார்த்து விட்டு வருகிறேன்...”என்று அவள் சிரித்தபடி ஓடி விட.. மூக்கில் விரலை வைத்தாள் அனுதரணி. “சக்தி உங்களை ஃப்ராட் என்கிறானே.. அதில் எந்தத் தவறும் இல்லை..”என்று கூறிச் சிரித்தாள்.

**இ**ருவரும் ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்கிய பின்.. வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக.. சுவாரஸ்யமாகச் செல்வதாக உணர்ந்தாள் சுஜி. கோடி சுகம் என்கிறார்களே...! இது தானா..?, மெய் மறக்கச் செய்து.. விட்டத்தை வெறித்தபடி அமரச் செய்கிறதே.. இது தான் காதலா..?, தண்ணீர் கேட்டால்.. கா..ஃபியை நீட்டுகிறாள்.. ஆப்பிள் தோலைச் சீவி.. பழத்தைக் குப்பையில் போட்டு விட்டு.. தோலை உண்ணக் கொடுக்கிறாள்.. அனுவும்,சக்தியும் பல முறை கேலி செய்து விட்டார்கள்.. ஆனால்.. என்ன செய்வது.. முறுக்கு மீசை.. ஷ்யாமுக்குள் இருக்கும் காதல் மன்னன் அவளைப் பாடாய்ப் படுத்தி எடுக்கிறான்..

DO NOT COPY

இந்தத் தீரா இம்சையை அனுபவிக்கையில்.. சுகமாக வேறு இருந்து தொலைக்கிறதே.. ஷ்யாம் தன் அருகிலேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது.. ஆனால் அவன் அருகில் இருந்தால்.. ஏனோ.. இந்த வெட்கம் வந்து.. அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு ஏதோ மாயத்தைச் செய்து விடுகிறது..

சென்ற 2 நாட்களாக.. அவன் கேட்கும் கேள்விகளுக்கு.. அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்காமலே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறாள்... அவனும் அவளை எந்தக் கேள்வியும் கேட்பதில்லை.. ஆனால் அவன் பார்க்காத போது.. அவனை ரசிப்பது.. அவளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகி விட்டது.. அவன் உறங்கிய பின்.. அவனைப் பார்த்தபடியே கண் மூடுவதை வழக்கமாகி விட்டிருந்தாள்.

மனைவியின் மாற்றங்களை.. நன்றாகவே கண்டு கொண்ட ஷ்யாம்.. சுஜூ.. நீ நான் நினைத்த அளவு நீ மக்கு இல்லை.. கொஞ்சம் புத்திசாலியாகத் தான் இருக்கிறாய்.. என்றெண்ணிக் கொண்டான்.. 2 நாட்களாக.. தான் காணாத போது.. காதலுடன் நோக்கும் சுஜியை அவன் பலமுறை கவனித்து விட்டான். அப்படிக் காண்கிற வேளையில்.. ஓடிச் சென்று அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொள்ள வேண்டுமென்று உணர்ச்சியெழும் அவனுக்குள். ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு.. அவள் அவளது நேசத்தை வெளிப்படுத்தும் வேளைக்காகக் காத்திருந்தான்.

அதன் பின்பும் அவள் மௌனம் தொடரவே.. இது சரி வராது என்று நினைத்துத் தானே.. அவளது மௌனத்தை உடைத்தான் ஷ்யாம், டெட்டி தொலைந்து போனதற்கு முன்பு வரை.. இரவில் அவளை அணைத்த படியே உறங்கும் ஷ்யாம்.. அவளது இந்த மோன நிலைக்காகவே 2 நாட்களாகத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டிருந்தான்.

அவள் இதே நிலையைத் தொடர்வதைக் கண்டு அன்றிரவு தானாகவே அவளை அணைத்துக் கொண்டான். தோழி ஒருத்தியின் பிறந்த நாளிற்குச் செல்ல வேண்டுமென்று அனு கூறியிருந்ததால்.. அவளது உடை தேர்விற்காக... அவளுடைய அறையிலேயே வெகு நேரம் செலவிட்ட சுஜி.. நேரம் கழித்துத் தான் அறைக்குள் நுழைந்தாள். அவள் வந்து விட்ட அரவம் உணர்ந்த ஷ்யாம்.. அவள் புறம் திரும்பி.. அவளைத் தன் அருகிலிழுத்து.. அணைத்துக் கொள்ள.. இதைச் சற்றும் எதிர்பாராததால்.. திகைத்து விழித்தவளை.. "உன் டெட்டி இல்லாததால்.. என்னைக் கட்டிக் கொள் என்றேனே.. மறந்து விட்டதா சுஜூ..?" என்று அவன் கேட்க.. வெட்க முறுவலுடன் கண் மூடியவளை.. தன்னோடு சேர்த்து மேலும் இறுக்கிய படி.. உறங்கிப் போனான்..

மறுநாள் காலை கண் விழிக்கையில்.. தன் தோளில் முகம் புதைத்து.. ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தவளைக் காண்கையில் சிரிப்பெழுந்தது ஷ்யாமிற்கு. அவள் உறக்கம் களையாத வண்ணம்.. அவளிடமிருந்து தன்னை உறுவிக் கொண்டவன்.. பரண் மீதிருந்த டெட்டியை எடுத்து அவளருகே வைத்து விட்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

அவள் கண் விழிக்கையில்.. கண்ணாடி முன்பு நின்று கொண்டு தலை வாரிக் கொண்டிருந்தான் ஷ்யாம். அவள் விழித்தெழுந்ததைக் கண்டு "குட் மார்னிங் சுஜூ.."என்று முறுவலித்தான். "குட் மார்னிங் ஷ்யாம்.."என்றவள்.. அருகேயிருந்த டெட்டியைக் கண்டுத் திகைத்து.. தொலைந்து போன டெட்டி.. எப்படி வந்தது,.. என்று நம்ப முடியாமல்.. கண்களைக் கசக்கிக் கொண்டு.. மீண்டும் நோக்கினாள்.

அவள் செய்கையைக் கண்டு சிரித்த ஷ்யாம்.. அவளருகே வந்து கன்னத்தைக் கிள்ளி.. "சுஜூ.. இது கனவல்ல.. நிஜம்.. இது உன் டெட்டி தான்.."என்று புன்னகைத்தான். "என் டெட்டியா..?,"என்று விழி விரித்தவள்.. "அப்படியானால்.. இதை நீங்கள் தான் ஒளித்து வைத்தீர்களா ஷ்யாம்..?"என்று எழுந்து நின்று கோபமாக வினவினாள்.

"ஆமாம்.. நான் தான் ஒளித்து வைத்தேன்.. என்ன செய்து விடுவாயாம்,,?"என்று அவன் கேட்க.. "ஏன் ஒளித்து வைத்தீர்கள் ஷ்யாம்.. பாவம் என் டெட்டி.."என்று அதை எடுத்து அணைத்துக் கொள்ள... அவன் எரிச்சலுடன் நோக்கி.. "இதற்காக,,. இதற்காகத் தான் ஒளித்து வைத்தேன்.. ஒரு முறையேனும் இப்படி என்னைக் கட்டிப் பிடித்திருக்கிறாயா..?, அதை மட்டும் அணைத்துக் கொள்கிறாயே...?"என்று அவன் வினவ.. சிரிப்புடன் மறுபுறம் திரும்பி கொண்டாள் சுஜி. "இதைக் கேட்டால் மட்டும் மறுபுறம் திரும்பிக் கொள்.. என்னை விட.. அந்த டெட்டி தான் உனக்கு முக்கியம்... எப்படியோ போ.."எனக் கூறிச் சென்று விட்டான் அவன்.

குளித்து விட்டுக் கீழே வந்தவள் அவனிடம் கா..பியை நீட்டும் போதும் முகத்தை உர்ரென்றே வைத்திருந்தான். அதைக் கண்டு விட்ட அனு.. "என்ன அண்ணி.. உங்கள் மணவாளன் கோபமாக இருக்கிறார் போல.. அவர் கோபத்தைத் தணிக்க.. ஜில்லென்று ஏதேனும் கொடுக்காமல்.. இப்படிக் கா..பியை நீட்டுகிறீர்களே...!"என்று அவள் சலித்துக் கொள்ள..

"ஜில்லென்றா..?, ஆப்பிள் ஷேக் கொடுக்கட்டுமா அனு..?"என்று வினவியவளிடம் தலையிலடித்துக் கொண்ட அனு.. "நீங்கள் சரியான தத்தி அண்ணி.."எனக் கூறி விட்டுச் சென்று விட்டாள். என்ன அண்ணனும்,தங்கையும் தத்தி,தத்தி என்கிறார்கள்..! என்று குழம்பிய சுஜி..

DO NOT COPY

“ஆமாம் இவர்களிருவருக்கும் கூர்மையான் புத்தி பார்..”என்று முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள்.

அவள் உணவு பரிமாறும் வேளையில்.. அவள் பரிமாறியச் சட்னியை அவன் சாப்பிடாமல் இருப்பதைக் கண்டு “தக்காளிச் சட்னி இல்லாமல் நீங்கள் சாப்பிட மாட்டீர்களே.., இன்று ஏன் அதை ஒதுக்கி வைத்து விட்டீர்கள்..?,”என்று அவள் வினவியதற்கு.. “உன் டெட்டிக்கு வையேன்.. அது சாப்பிடும்..”என்றான் அவன்.

கோபத்துடன் சட்னியை அள்ளி.. அள்ளி.. அவன் தட்டில் கொட்டினாள். “ஏய்... என்னடி செய்கிறாய்...?,”என்று உறுமியவனை அவள் கண்டுகொள்ளாமல் சென்று விட.. மகன் நிலைமையைக் கண்டு நமுட்டுச் சிரிப்பு சிரித்தார் ராஜாராமன்.. “சம்சார சாம்ராஜ்யம் கொடுமை வாய்ந்தது மகனே.. வேறு வழியேயில்லை.. அனுபவித்துத் தான் ஆக வேண்டும்..”என்று சிரிக்க.. “ராட்சசி!” என்று பல்லைக் கடித்தான் ஷ்யாம்.

உண்டு முடித்து.. கையைக் கழுவி விட்டு.. அவள் தன்னையே முறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டுத் தானும் அவளையே நோக்கியபடி.. அங்கேயிருந்த டவலை எடுத்துக் கையைத் துடைத்தவன்.. அடுத்த நொடியே.. “ச்ச..”என்றபடி துணியைக் கீழே போட்டான்.. ஏனெனில் அவனது அழகான இம்சை சுஜிப்ரியா.. அந்தத் துவாலையில் மிளகாய்ப் பொடியை அப்பி வைத்திருந்தாள்.

“ராங்கி.. இது இவள் வேலை தான்...”என்று அவளை நிமிர்ந்து பார்க்க.. அவள் “ஹி ஹி..”என்று இல்லாத காலரைத் தூக்கிக் காட்டி.. அழகு காட்டிக் கொண்டிருந்தாள்.. கோபமாக அவளருகே சென்றவன்.. அவளது சேலை முந்தானையைப் பற்றி.. கையைத் துடைக்க.. “அய்யோ..வேண்டாம் ஷ்யாம்..” என்று பதறியவளைக் கண்டு கொள்ளாமல்.. அவன் பொறுமையாகத் துடைத்து விட்டு.. அதை அவள் முன்பு உதறி.. “தேங்ஸ்...”என்றான்.

அவன் உதறியதும் தெறித்த மிளகாய்ப் பொடி.. எரிச்சலைக் கொடுக்க.. “ஹச்..” என்று தும்மினாள்.. அவள் தும்மியதும் அவளைப் போலவே.. “ஹி ஹி..”என்று காலரைத் தூக்கிய ஷ்யாம்.. “உங்களை....”என்று அவள் பல்லைக் கடிப்பதைப் பொருட்படுத்தாமல்.. ஓடி விட்டான்.

அன்றிரவு.. இரவு உணவை விரைவிலேயே முடித்து விட்டு கண்ணயர்ந்து விட்டவனைக் கண்டபடி.. அருகே வந்த சுஜி.. அவன் தோளில் சாய்ந்து.. கண் மூடிக் கொள்ள.. அவளது ஸ்பரிசம் உணர்ந்து.. கண் திறந்தவன்.. தன் மீது சாய்ந்திருந்தவளைக் கண்டு விட்டு... என்ன என் மீது சாய்ந்திருக்கிறாள்.. என் எதிரி டெட்டி எங்கே.. என்றபடி நிமிர்ந்து நோக்கினான். கட்டிலின் மறு ஓரத்தில் தன்னந்தனியே டெட்டி பாவமாகக் கிடக்க.. “சுஜூ..”என்று அவள் கரம் பற்றினான். “ம்...”என்றவளிடம்..

சிரித்தபடியே.. "என்ன சுஜூ.. உன் டெட்டியை இப்படி அனாதையாக விட்டு விட்டாய்..?, பார்.. அது என்னையே முறைத்துப் பார்க்கிறது.."என்று சிரிக்க.. அவள்.. மேலும் அவன் தோளில் முகத்தை ஆழப் புதைத்து.. "எனக்கு இது தான் பிடித்திருக்கிறது ஷ்யாம்.."எனக் கூற.. மேலும் புன்னகை விரிந்தது அவனுக்கு. புன்னகைத்தபடியே.. அவளை அணைத்துக் கொண்டவன் அவள் காதருகே குனிந்து "தேங்ஸ் சுஜூ.."என்றான்..

**ல**ட்டு.. என்றுத் தன் செல்போனில் பதிவு செய்யப் பட்டிருந்த எண்ணிற்கு.. அந்த நாளில் இருபத்தியோராவது முறையாக டயல் செய்து கொண்டிருந்தான் சக்தி. "எங்கே சென்று தொலைந்தாள் என்றே தெரியவில்லை.. இப்பொழுதெல்லாம் சந்திப்பும் குறைந்து போயிற்று.. பேசுவதும் குறைந்து போயிற்று.. கேட்டால்.. கடைசி வருடம்.. ப்ராஜக்ட் செய்கிறேன்.. அதனால் அஞ்சனா வீட்டிற்குச் செல்கிறேன் என்கிறாள்... இன்றோடு.. 3 வாரமாகி விட்டது அவளை நேரில் சந்தித்து.. இன்று ஒரு முடிவு கட்டுகிறேன்.."என்று கறுவிக் கொண்டவன்.. தன் முயற்சியை நிறுத்தி விட்டு.. அவள் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

ஹாலில் அமர்ந்து.. எதையோ நொறுக்கிக் கொண்டிருந்த அனு.. சக்தி வருவதைக் கண்டு "ஏய்.. லட்டுப் பையா.. என்ன இந்த நேரத்தில்...?"என்று வினவ.. "ஏய்.. நீ உன் மனதில் என்ன தான்டி நினைத்துக் கொண்டிருக்கிறாய்..? இப்படி நொறுக்குவதற்கெல்லாம் நேரமிருக்கிறது.. என்னுடன் பேசுவதற்கும்.. என்னைப் பார்ப்பதற்கும் நேரமில்லையாக்கும்..?"என்று வினவ..

"ஓ! அழைத்திருந்தாயா..?, காலையிலிருந்து அஞ்சனாவின் வீட்டில் தான் இருந்தேன்.. இப்போது தான் வீட்டிற்கு வந்தேன்.. மொபைல் சைலன்ட்டில் இருந்தது போலும்..நான் பார்க்கவில்லை.."என்று பதில் கூறினாள். அவன் அதற்கும் கோபப் பட்டு.. "ம், அஞ்சனா...?, நீ அவளுடன் ப்ராஜக்ட் செய்கிறாயா..?, இல்லை அவள் காதலுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறாயா..?, முதலில் உன் அண்ணன்,அண்ணி.. இப்போது உன் தோழியா..?, இதை முழு நேரத் தொழிலாக வைத்திருக்கிறாயா..?"என்று கேட்டவனைக் கோபத்துடன் இடை மறித்தவள்..

"அதிகமாகப் பேசாதே... இடியட்... நானும் அவளும் ப்ராஜக்ட் செய்யத் தான் போகிறோம்.."எனக் கூற.. "ஏய் ஒருமையில் அழைக்காதே என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்.. இதில் இடியட் என்று வேறு திட்டுவாயா..?, காலையிலிருந்து உனக்கு 21 முறை கால் செய்யும் நான் முட்டாளா..?, இது சரி வராது.. இப்போழுதே.. உன் அண்ணனிடம் பேசித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.. அப்போது தான் உனக்கு பொறுப்பு வரும்.."எனக் கூற..

DO NOT COPY

அவளோ தோளைக் குலுக்கி.. "இப்போதே திருமணம் செய்து கொள்வதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.. உனக்குத் தைரியமிருந்தால்.. என் அண்ணனிடம் பேசிக் கொள்.."என்று திரும்பியவள்.. தன் அண்ணனே எதிரில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு விழி விரித்தாள்..

அனைத்தையும் கேட்டு விட்டானா..?, சக்தி படுபாவி.. எல்லாம் இவனால் வந்தது.. என்று திட்டியபடியே... சக்தியின் பின்னால் சென்று நிற்க.. ஷ்யாமிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.. ஆனாலும் முகத்தைத் தீவிரமாக மாற்றி.. "இங்கே என்ன நடக்கிறது..?"என்று வினவினான்.

அனு பதில் கூறும் முன் சக்தி "உங்கள் தங்கைக்குக் கொஞ்சம் கூட பொறுப்பேயில்லை மாம்ஸ்.. 2 நாட்கள்.. முழுதாக 2 நாட்கள்... என்னிடம் பேசாமல் இருக்கிறாள்.. என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாளென்று நீங்களே கேளுங்கள்.."எனக் கூற.. "அய்யோ... இப்படி உளறி வைக்கிறானே.. அண்ணன் இதை எப்படி எடுத்துக் கொள்வானோ..."என்று பயத்துடன் அனு சக்தியின் கரம் பற்ற.. அவள் பயத்தை உணர்ந்த சக்தி.. எதுவும் கூறாமல்.. ஷ்யாமை நிமிர்ந்து நோக்க... அவனோ.. பேசாமல் இரு.. என்பது போல் சைகை செய்தான்.

"அ..அது வந்து அண்ணா... நான்.. நானும் சக்தியும்..."என்று தடுமாறியவளை.. "ம்,நீயும்,சக்தியும்...?"என்று மேலே கூறுமாறு அவன் ஊக்குவிக்க.. "நானும் சக்தியும் ஒருவரையொருவர் நேசிக்கிறோம்.. திருமணம் செய்து கொள்ள விரும்புகிறோம்.."என்று ஒரு வழியாக விசயத்தைக் கூறி முடிக்க..

"என்னடா சக்தி.. இவள் கூறுவதனைத்தும் உண்மையா....?"என்று ஷ்யாம் சக்தியிடம் வினவினான் ஷ்யாம். "ஆமாம் மாம்ஸ்.. உண்மை தான்.. நானும்,இவளும் விரும்புகிறோம்.. இவளுக்கு 2 வருடம் கழித்துத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம்.. ஆனால் எனக்கு இப்போதே திருமணம் செய்து கொள்ள வேண்டும்.."என்று அனு அவன் கையைக் கிள்ளியதைப் பொருட்படுத்தாது ஷ்யாமிடம் கூறி விட்டான் சக்தி.

"உனக்கு எதற்காக.. 2 வருடம் வேண்டும்..?"என்று அவன் அனுவிடம் வினவ.. "நான் மாஸ்டர் டிகிரி முடிக்க வேண்டும்.. "என்று கூறியவளிடம்.. "அதுவரை..?"என்று மீண்டும் ஷ்யாம் கேள்வி கேட்க.. "அதுவரை என்ன அதுவரை..? அதுவரை இப்படியே காதலித்துக் கொண்டிருக்க வேண்டியது தான்..."என்று சிரித்தவள்.. தமையன் தன்னை முறைப்பதைக் கண்டு சிரிப்பை நிறுத்தினாள்.

"என் தங்கை மிகவும் ஆசைப் படுகிறாள்.. அதனால் 2 வருடம் நீ காத்திருந்து தான் ஆக வேண்டும் சக்தி.."என்று ஷ்யாம் கூற.. "ஆமாம்.. நீங்கள் உங்களின்

DO NOT COPY

அருமைத் தங்கையின் பேச்சைத் தானே கேட்பீர்கள்..!”என்று சக்தி அலுத்துக் கொள்ள.. “சக்தி..” என்று அவனருகே வந்த ஷ்யாம்.. “நீ ஏனடா கல்யாண பந்தத்தில் சிக்கிக் கொள்ள அவசரப் படுகிறாய்..?, சம்சாரம் ஒரு மின்சாரம் என்று தெரியாதா உனக்கு,.,?, அதிலும் உன் அக்காவைப் போல்.. என் தங்கையைப் போலெல்லாம் மனைவி அமைந்து விட்டால்... சொல்லவே வேண்டாம்.. உப்பு,மிளகாய்ப் பொடி கொடுமையையெல்லாம் அனுபவித்தாக வேண்டும்...”என்று அவன் கூறிக் கொண்டிருந்த வேளையில் சுஜி.. “யாரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள் ஷ்யாம்..?”என்று வினவிய படியே அருகே வர..

“அது ஒன்றுமில்லை சுஜூ.. நம் பக்கத்து வீட்டுப் பரிமளாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்..”என்று அவன் கூற.. “என்ன பக்கத்து வீட்டுப் பரிமளாவா..?, இதற்குத் தான் இந்தத் தடியனுடன் கூட்டு சேராதீர்களென்றேன்.. அவனுடன் சேர்ந்ததால் தான் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்..”என்று சுஜி கத்தத் துவங்க..

“அடேங்கப்பா.. இல்லையென்றாலும்.. உங்கள் கணவர் யாரையும் பார்க்க மாட்டாராக்கும்..? தேவையில்லாமல்.. இவரைப் பற்றித் தவறாகப் பேசாதீர்கள்..” என்று அனு சக்தியின் கையைப் பற்றிக் கொள்ள.. “அடிப்பாவி..”என்று வாயைப் பிளந்த சுஜி “சாப்பாட்டு ராமன்.. தகர டப்பா தலையன்.. என்றெல்லாம் அவனை ஏசுவாயே.. இப்போது.. அவர் என்கிறாய்..?, என் கண் முன்னே நிற்பது.. அனுதரணி தானா..?”என்று சுஜி சிரிக்க.. “ச்சி,போங்கள் அண்ணி...”என்று வெட்கப்பட்டவளை “இதற்குத் தான் மாம்ஸ் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்கிறேன்..”என்று கூறி விட்டு.. “சாரிடா லட்டு...”என்று அனுவுடன் பேசியபடியே நகர்ந்து சென்றான் சக்தி.

அவர்களிருவரும் சென்றதும் சுஜியிடம் திரும்பியவன்.. “நாமும் காதலித்து மணம் புரிந்திருந்தால்.. நன்றாக இருந்திருக்கும் அல்லவா சுஜூ..?”என்று வினவ.. பதிலேதும் கூறாமல் முறுவலித்தாள் அவள். பின்பு அவன் “திருமணத்திற்குப் பிறகு காதலிக்கத் தொடங்கினாலும் தவறில்லையே.. நாம் இப்போது காதலிக்கலாமா சுஜூ..?”என்று அவன் வினவ..

“இப்போது காதலிப்பதா..?, எ..எப்படி..?”என்று அவள் விழிக்க.. “வேண்டுமானால்.. அவர்களிருவரிடமும் சென்று கேட்டு வருகிறாயா..?”என்று அவன் வினவவும்.. “ம்..சரி..”என்று செல்லப் பார்த்தவளை “மக்கு சுஜூ..”என்று தடுத்து நிறுத்தினான் அவன். “என்ன எப்போது பார்த்தாலும்.. மக்கு,மக்கு என்கிறீர்கள்..?, நான் ஒன்றும் மக்கு இல்லை..”என்று அவள் சிணுங்கிக் கொள்ள..

அவளது நீண்ட பின்னலைப் பற்றி அருகிலிழுத்தவன்.. அவள் சூடியிருந்த மல்லிகையை வாசம் பிடித்து.. “ஆமாம்.. மக்கு இல்லை.. புத்திசாலி...”எனக்

கூறி அவள் நாடியில் முத்தமிட்டு... கழுத்து வளைவில் முகம் புதைத்தான். “சுஜூ...:என்று கிறங்கிய குரலில் அவளை அழைத்தவன்.. “நீ இப்படியே என்னைக் கிறுக்கனாக அலைய வைத்து விடுவாய் போலவே... என் மேல் கொஞ்சம் இரக்கம் காட்டக் கூடாதா..?”என்று வினவ.. முகத்தை நிமிர்த்தி அவனை நோக்கியவள்.. புரியாமல்.. “இரக்கம் காட்ட வேண்டுமா..?, அப்படியென்றால்..?”என்று பதில் கேள்வி கேட்க..

“கிழிஞ்சது...!”என்று தலையிலடித்துக் கொண்டு... “ஒன்றுமில்லை சுஜூ.. நீ உன் இல்லாத மூளையைக் கசக்கிக் கொள்ள வேண்டாம்..”என்று கூற.. “என்ன ஷ்யாம்.. சொல்லுங்கள்.. ப்ளீஸ்..”என்று மீண்டும் சிணுங்க.. “அது வந்து.. நீ இப்படி அழகாய்ச் சிணுங்கும் போது.. நான் இப்படி முத்தமிட்டால்.. நீ அதைத் தடுக்கக் கூடாதென்று அர்த்தம்..”என்று கூறி.. அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட... ஒரு நிமிடம் விழித்தவள்.. பின்பு புரிந்து கொண்டு.. “ச்சி..”என்றபடி அவன் தோள் சாய... “என்ன புரிந்ததென்று வெட்கப் படுகிறாயோ..!, கடவுளுக்குத் தான் வெளிச்சம்..”என்று அவளைக் கேலி செய்தான் ஷ்யாம்.

“என்ன மாம்ஸ்.. கடவுளைக் கூப்பிடுகிறீர்கள்..?”என்று சக்தியின் குரல் கேட்டதும்.. அவசரமாக விலகினர் இருவரும். அவனை எரிச்சலுடன் நோக்கிய ஷ்யாம்.. “ஏன்டா.. நீயும்,அனுவும் இப்படி கரடி வேலை பார்க்கிறீர்கள்..?”என்று சலித்துக் கொள்ள.. அசடு வழிந்த சக்தி “ஹி ஹி.. சாரி மாம்ஸ்.., நாங்கள் வேண்டுமானால்.. சென்று விட்டு.. அப்புறமாக வருகிறோம்..”என்று கூற..

“அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை.. உன் அக்கா ஏன் இப்படி தத்தியாக இருக்கிறாள்..?”என்று அவனிடம் கேள்வி கேட்டான். அதற்கு சக்தி நன்றாக முறுவலித்து “அது வந்து மாம்ஸ்.. என் வீட்டில் என்னைத் தவிர அனைவருக்கும் கம்மியான அறிவைப் படைத்து விட்டார்.. அதனால் தான் இப்படி.. உங்கள் வீட்டில் உங்கள் தங்கை அனு உங்களைப் போல் அல்லாது.. கொஞ்சம் தத்தியாகப் பிறக்கவில்லை..?,அது போலத் தான்.. எனக் கூற..

பின்னால் இருந்து முறைத்த சுஜியும்,அனுவும்.. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அங்கே கிடந்த குஷன்களை எடுத்து இருவர் மீதும் எறிந்தனர். அதைப் பிடித்து மறுபடியும் அவர்களிருவர் மீதும் சக்தியும்,ஷ்யாமும் எறியத் துவங்க.. நால்வரும் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இந்த மகிழ்ச்சியை.. இந்த சந்தோசத்தை.. இந்த ஒற்றுமையை சோதித்துப் பார்ப்பதற்காகவே.. ஆண்டவன்.. விரைவிலேயே.. ஸ்ரீதரை அனுப்பி வைத்தான்.

DO NOT COPY




DO NOT COPY

## அத்தியாயம் – 20



**பச்சைக் குழந்தையடி கண்ணில்**

**பாவையடி சந்திரமதி**

**இச்சைக்கு இனிய மது- என்றன்**

**இரு விழிக்குத் தேனிலவு**

**நச்சுத் தலைப் பாம்புக்குள்ளே நல்ல**

**நாகமணி உள்ளதென்பார்**

**துச்சப்படு நெஞ்சிலே நின்றன்**

**சோதி வளருதடீ!**

"**ஷ்**யாம்..."என்றழைத்தபடி.. பச்சை நிறப் பட்டுப் புடவையில்... தன் நீண்ட குழலில் மல்லிகைச் சரத்துடன்.. காது தொங்கட்டான்கள் அசைந்தாட.. புன்னகையுடன் வந்து நின்றாள் சுஜிப்ரியா. கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டிருந்தவன்.. அவளது மதி முகத்தைக் கண்டு... சிரிப்புடன்.. என்னவென்று வினவ..

"அனு என்னை முருகன் கோவிலுக்கு அழைக்கிறாள்.. நான் செல்லட்டுமா..?"என்று வினவினாள். "ஹ்ம்ம், டிரைவர் அண்ணாவிடம் சொல்லி காரைத் தயார் செய்யச் சொல்லுங்கள்.."என்று அவன் கூற.. "இல்லை ஷ்யாம்.. அனு என்னை ஸ்கூட்டியில் அழைத்துச் செல்வாள்.."என்று கூறினாள்.

"ஸ்கூட்டியில்... நீங்கள் இருவரும்..?, அதெல்லாம் வேண்டாம்.. காரில் செல்வதாயிருந்தால் செல்லுங்கள்.. இல்லையென்றால்... கோவிலுக்கே செல்ல

DO NOT COPY

வேண்டாம்..”என்று அவன் முடித்து விட.. அவசரமாக.. “இல்லையில்லை ஷ்யாம்.. காரிலேயே செல்கிறோம்..”என்று அவனிடம் சம்மதம் வாங்கிக் கொண்டு புறப்பட்டாள் சுஜி.

கோவிலில் தரிசனம் முடிந்து.. இளைப்பார சிறிது நேரம் அமர்ந்திருந்தனர் இருவரும். “அண்ணி.. இன்றைக்கு எனக்கு ஒரு அசைன்மென்ட் முடித்தாக வேண்டும்.. எனக்கு உங்கள் உதவி தேவை.. எப்போது நீங்கள் ஃப்ரீயாக இருப்பீர்கள்..?”என்று வினவினாள் அனு. “என்னம்மா.. என்னிடம் உதவி கேட்கிறாய்..?,உன் சாப்பாட்டு ராமன் என்னவானான்..?”என்று சுஜி சிரிப்புடன் வினவ..

“அவன் ரொம்பத் தான் பண்ணிக் கொள்கிறான் அண்ணி. அவனுக்கு முக்கியமான வேலை இருக்கிறதாம்.. அதனால் ஒரு வாரத்திற்கு என்னைத் தொந்தரவு செய்யாதே என்று கூறி விட்டான். நைட் ஷிஃப்ட் வேறு பார்க்கிறானாம்.. என்னவானாலும் சரி.. நாளை காலை நான் அவனைச் சென்று சந்திக்கத் தான் போகிறேன்..”என்று கூறிக் கொண்டிருந்தவளிடம்.. “சரி தான்..” எனக் கூறிச் சிரித்த ப்ரியா.. தூரத்தில் கண் மூடி பிரார்த்தனையில் ஈடு பட்டிருந்த சரவணன் மாமா கண்ணில் பட.. “அனு.. இங்கேயே அமர்ந்திரு.. 5 நிமிடத்தில் வந்து விடுகிறேன்..”எனக் கூறி அவர் அருகே விரைந்தாள்.

அவர் முன்பு சென்று கை கட்டி நின்று கொண்டவளை.. பிரார்த்தனை முடிந்து கண் விழித்த சரவணன் கண்டு விட்டு.. “சுஜி கண்ணா...”என்று புன்னகையை பெரிதாக்க.. தானும் சிரித்தபடி.. “மாமா.. உங்களுக்கு என் மீது கொஞ்சம் கூட பாசமேயில்லை.. கல்யாணத்திற்கு வந்ததோடு சரி.. அதன் பின் வீட்டுப் பக்கம் எட்டி கூட பார்க்கவில்லை.. என் பிறந்த நாளைக்குக் கூட வாழ்த்து கூறவில்லை..”என்று அவள் கோபித்துக் கொள்ள..

“மன்னித்து விடு சுஜிம்மா.. பிறந்த நாளைக்கு வாழ்த்தாதது என் தவறு தான்..’ என்றபடி பாக்கெட்டினுள் கை நுழைத்து ரூபாய் நோட்டுகளை அள்ளி.. அவளிடம் கொடுத்து வாழ்த்தினார். இது சிறு வயதிலிருந்தே அவருக்கு இருக்கும் பழக்கம்.. பிறந்த நாளென்றாலே சக்தியும்,சுஜியும் இவரிடம்.. ஆசீர்வாதம் பெற்று.. காசைக் கரப்பதில் குறியாக இருப்பார்கள்.. அந்தப் பழக்கம் இன்று வரை தொடர்வதைக் கண்டு சுஜி சிரித்தாள்.

அதன் பின் அவருடன் சேர்ந்து நடந்த படி.. “ஒரு தவறுக்கு பிரயாச்சித்தம் செய்து விட்டீர்கள்.. இன்னொரு தவறுக்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்கள்..?” என்று கேட்க.. தலை குனிந்தவர்.. “ஒரு உறுத்தல் தான் சுஜிம்மா.. சிட்டுக் குருவி போல்.. கவலையற்றுப் பறந்து திரிந்து கொண்டிருந்த உன்னை.. தேவையில்லாத சங்கடத்தில் மாட்டி விட்டு விட்டோமோ என்று உறுத்தல்..” என்று கூறினார்.

DO NOT COPY

“உறுத்தலா..?, புரியவில்லை..”என்று அவள் வினவியதற்கு.. “பிரச்சனையற்று சென்று கொண்டிருந்த உன் வாழ்வில்.. திருமணம் என்ற சடங்கைக் கொண்டு வர நினைத்து.. உன்னை தேவையற்ற அவமானத்திற்கு ஆளாக்கியது நான் தானேம்மா..?”எனக் கேட்க.. அவள் சாந்தமாகப் புன்னகைத்து.. “மாமா.. அந்தப் பிரச்சனையெல்லாம்.. போன ஜென்மத்தில் நடந்து முடிந்ததைப் போல் உள்ளது எனக்கு... எத்தனையோ நாட்களுக்கு முன் நடந்த விசயத்தை இன்னும் எதற்காக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..?,சொல்லப் போனால்.. அப்படியொரு பிரச்சனை நடந்ததில் எனக்கு மகிழ்ச்சி தான்.. அந்தப் புகைப் படங்கள் கிடைத்ததால் தானே.. ஷ்யாமுடன் என் வாழ்க்கை இணைந்தது.. நான் என் ஷ்யாமுடன் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன் மாமா.. உங்களுக்கு முக்கியம் என் மகிழ்ச்சி தானே..?, இனி உறுத்தல்,அது இது என்று உளறிக் கொண்டு என்னைப் பார்க்காமல் இருக்காதீர்கள்.. சரியா..?”என்று முறுவலிக்க..

என் ஷ்யாமா...? என்று திகைத்தார் அவர்.... அவள் முகத்திலிருந்த மகிழ்ச்சியும்.. கண்களில் தென்பட்ட தெளிவும்.. பேச்சில் தெரிந்த முதிர்ச்சியும் ஆச்சரியத்தைக் கொடுக்க.. ஷ்யாம்.. நீ சுஜியை இவ்வளவு மாற்றிவிட்டாயா..?, சுஜி மிகவும் அதிர்ஷ்டசாலி.. என்றெண்ணியவர்.. தானும் சிரித்து.. “சுஜி.. லேகியம் எதுவும் சாப்பிடுகிறாயா அறிவு வளர்ச்சிக்கு...?, தெளிவாகப் பேசுகிறாயே..?, எப்படி..?, அது மட்டுமில்லாமல்.. எப்போதும்.. ஒரு லங்கோடிப் பாவாடையுடன் தானே திரிந்து கொண்டிருப்பாய்.. இப்போது அம்சமாகச் சேலை வேறு கட்டியிருக்கிறாய்..?” என்று கேலி செய்யத் துவங்க.. “மாமா....”எனச் செல்லச் சிரிப்புடன் அவரை அடக்கினாள் சுஜி.

அதன்பின்.. அனுவிடம் அவரை அறிமுகப் படுத்தி விட்டு.. மேலும் சிறிது நேரம் அரட்டை அடித்து விட்டுப் புறப்பட்டாள் சுஜி. “நானும்,சக்தியும் சிறு வயதிலிருந்து முழுக்க முழுக்க.. அவரது வளர்ப்பில் தான் ஆளானோம்.. நானென்றால் அவருக்கு அவ்வளவு இஷ்டம்.. அன்பான மாமா..”என்று அனுவிடம் கூறிக் கொண்டிருந்தாள் சுஜி.

இந்த அன்பான மாமா தான்.. வரும் காலத்தில் மிகப் பெரிய.. ஆபத்திலிருந்து அவளைக் காப்பாற்றித் தன் அன்பை மீண்டும் நிலை நாட்டப் போகிறார் என்பதையறியாமல்..

அன்று இரவுத் தான் சரவணன் மாமாவைச் சந்தித்த விவரத்தை ஷ்யாமிடம் தெரிவித்துக் கொண்டிருந்தாள் சுஜிப்ரியா. “மாமா.. மிகவும் சங்கடப் படுகிறார் ஷ்யாம்.. என்னைத் தேவையில்லாத அவமானத்தில் சிக்க வைத்து விட்டதாக.. பாவம்..”என்று சுஜி கூற.. “ம்ம்.. திருமணத்தன்று கூட என்னிடம் அப்படித் தான் கூறினார்.. எந்தவித உறுத்தலும் வேண்டாம்.. எப்போதும் போல் வந்து

DO NOT COPY

செல்லுங்கள் என்று அவரிடம் கூறினேனே... நல்ல மனிதர்..”என்று ஷ்யாம் கூறினான்.

“ஆமாம்.. ஷ்யாம்... உறுத்தலாக இருக்கிறதென்று தான் என்னிடமும் கூறினார்.. நீங்கள் கவலையே பட வேண்டாம்.. நான் என் ஷ்யாமுடன் மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்.. இந்த உறுத்தலையெல்லாம்.. மறந்து விட்டு.. வீட்டுக்கு வாருங்களென்று அழைத்திருக்கிறேன்..”என்றபடி தன் போக்கில்.. தலையணை உறையை மாற்றிய படியே சொல்லிக் கொண்டிருந்தவளை...

தடுத்து நிறுத்தி.. “என்ன.. என்னவென்று கூறினாய்..?”என்று சிரிப்புடன் வினவினான் ஷ்யாம். “என்ன கூறினேன்..?”என்று விழித்தவள்.. “என் ஷ்யாமுடன் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறினேன்...,”என்றவள்.. “ஏன் ஷ்யாம்...?”என்று தன் பெரிய கண்களை விரித்துக் கேட்க..

“மறுபடியும் சொல்..”என்று அவளைத் தன் அருகே நிறுத்தி மீண்டும் வினவினான். தான் கூறிய வார்த்தைகளின் அர்த்தம் உணராமலேயே.. கிளிப் பிள்ளை போல் மறுபடியும் கூறியவளைக் கண்டுச் சிரித்து... தன்னோடு சேர்த்தணைத்தவன்.. “சுஜூ.... என்னைப் பிடித்திருக்கிறதா உனக்கு...?”என்று வினவினான்.

வெட்கத்துடன் தலை குனிந்து.. “ம்...”என்றவளிடம்.. “என்ன ம்..?, ம் என்றால் போதுமா... பிடித்திருக்கிறதென்று நிரூபிக்க வேண்டாமா..?”என்று அவன் வினவ.. “எப்படி நிரூபிக்க..?”என்று விழித்தவளிடம்.. “எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறதென்று நான் நிரூபிக்கட்டுமா..?”என்றவன் அவளை இழுத்து முத்தமிட.. ஒரு நிமிடம் திகைத்து அவன் தோள் பற்றியவள்.. சற்றுத் தயக்கத்துடனே.. எட்டி.. அவன் கன்னத்தில் அழுந்த இதழ் பதித்தாள்.

மனைவியின் முதல் முத்தத்தில்.. தன்னை இழந்து விட்ட ஷ்யாம்.. “சுஜூ...” என்ற அழைப்புடன்.. அவளை இறுக அணைத்துக் கொள்ள.. அந்த அழைப்பின் பின்னே இருந்த கிறக்கத்தில் தானும் சொக்கித் தான் போனாள் அவள்

**சு**ஜியிடம் கூறியது போல்.. மறுநாள் சக்தியை அவனது வீட்டிற்குச் சென்றே சந்தித்தாள் அனுதரணி. வெகு நாட்களுக்குப் பின் தங்கள் இல்லம் தேடி வந்தவளை.. மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் மகாலிங்கமும்,வள்ளியும்.. “வாம்மா அனு.. உன் அண்ணி இருந்த வரை.. தினமும் வீட்டிற்கு வருவாய்.. இப்போதெல்லாம் வருவதேயில்லையே..?”என்ற லிங்கத்திடம்..

“மாமா.. வாழ்நாள் முழுமைக்கும் இங்கே தானே இருக்கப் போகிறேன்..?, அங்கே உங்கள் பெண்ணுடன் அரட்டை அடிப்பதற்கே நேரம் சரியாக உள்ளது..

அதனால் தான் வர முடியவில்லை..”என்றவள்.. வள்ளியிடம்.. “அத்தை எங்கே உங்கள் அருமருந்தன்ன புத்திரன்..?”என்று வினவினாள்.

“அவன் நைட் ஷிஃப்ட் முடிந்து வந்து இப்போது தான் உறங்கிக் கொண்டிருக்கிறான்.. தயவு செய்து அவனை எழுப்பி விடாதே அனு...”என்று அவர் கெஞ்சியதைப் பொருட்படுத்தாது உள்ளே நடந்தாள் அனு.. “பாவம் என் மகன்,.. இது வரை சுஜியின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருந்தான். இனி வாழ் நாள் முழுதும் உன் கொடுமையைச் சகித்தாக வேண்டும்..”என்று கூற..

“உங்கள் மகன் செய்வதெதும் உங்கள் கண்ணிலேயே படாதே.. எங்களை மட்டும் குறை கூறுங்கள்.. முதலில் அவனைக் கவனித்து விட்டு.. பின்.. உங்கள் சண்டைக்கு வருகிறேன்..”என்றபடி அவன் அறைக்குள் நுழைந்தாள் அனு. தலையிலிருந்து கால் வரை இழுத்து போர்த்தி ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கி இருந்தவனைக் கண்டு இரக்கம் எழுந்தாலும்.. இத்தனை நாட்களாக கண்டு கொள்ளாமல் இருந்ததற்கு சும்மா விடுவதா..?, இவன் மட்டும் அன்று தன் வீட்டிற்கு வந்தானே..! என்றெண்ணிக் கொண்டு...

போர்வையை.. விலக்கி.. அவன் தோளைத் தட்டி.. “ஹலோ.... மிஸ்டர்.ராமன்... மிஸ்டர்,சாப்பாட்டு ராமன்..” என்று எழுப்ப முயற்சித்தாள். அவன் கண் திறக்க முயன்று தோற்று.. “லட்டு.. கனவில் கூட.. கோபமாகத் தான் பேசுவாயா..?, அருகில் வாயேன்...”என்று அவள் கை பற்றி இழுத்து.. தன்னருகே சாய்த்து.. கழுத்தில் முகம் புதைத்துக் கொண்டான்.

பதறி விலக நினைத்த அனு.. அவன் அணைப்பு இறுகுவதைக் கண்டு.. “சக்தி.. வெளியே அத்தை,மாமா அனைவரும் இருக்கிறார்கள்.. கையை எடுங்கள்.. பார்த்தால் அசிங்கமாகி விடும்..”என்று கதற.. அவன் அதையெல்லாம் கண்டு கொள்ளாமல்.. “அனு...”என்றபடி முத்தமிட.. மேலும் பதறி.. “சாப்பாட்டு ராமா.. இது கனவல்ல.. நிஜம்.. விடு டா.. உன் அறைக்குள் நுழைந்ததே தவறு...”என்று எழ எத்தனிக்க..

அவன் மேலும் அவளை இறுகப் பற்றி.. “நல்ல பர்ஃப்யூம் அனு... மயக்குகிறாயே....”என்றபடி முகமெங்கும் முத்தமிட.. அவனை விலக்கித் தள்ளினாள் அனு. அவள் தள்ளியதில் பதறி அடித்து விழித்தவன்.. அவளைக் கண்டு.. “ஏய்.. இங்கே என்னடி செய்கிறாய்..?, அதுவும் என் பெட்டில் வேறு அமர்ந்திருக்கிறாய்..?, அப்பா,அம்மா பார்த்தால் என்ன நினைப்பார்கள்..?, எழுந்திரு...”என்று அவளை அதட்ட..

“அடப்பாவி...”என்றபடியே எழுந்த அனு.. “உன்னை எழுப்ப வந்த என்னை இழுத்து.. படுக்கையில் தள்ளி.. சொல்ல சொல்லக் கேட்காமல்.. முத்தமிட்டு விட்டு.. இப்போது என் மேல் பழி போடுகிறாயா..?. ராஸ்கல்..”என்று வினவ..

DO NOT COPY

அவன் தன் 32 பற்களையும் காட்டி முறுவலித்து “லட்டு.. அது கனவில்லையா..?, நிஜமா..?, அய்யோ.. நான் முழுச் சுய நினைவுடன் இல்லாத போது நடந்து விட்டதே..! வேண்டுமானால்.. இன்னொரு முறை முயற்சிக்கலாமா..?”என்று அவள் கையைப் பற்ற.. கீழே கிடந்த புத்தகத்தால் அவனை அடித்தாள் அனு.

“பிஸி,பிஸி என்கிறாயே.. சரி போனால் போகிறதென்று உன்னைப் பார்க்க வந்தால்.. நீ.. நீ.. இடியட்..”என்று மேலே கூற முடியாமல் முகம் சிவக்க.. “நான்.. நான்.. என்னடா செய்தேன் லட்டு...?”என்றபடி அருகில் வர.. வெளியே வள்ளி “அனு,,,”என்றழைக்கும் குரல் கேட்டு.. “வருகிறேன் அத்தை..”என்று ஓடி விட்டாள் அனு.

DO COPY



# அத்தியாயம் – 21



**தூண்டில் புழுவினைப் போல் வெளியே**

**சுடர் விளக்கினைப் போல்**

**நீண்ட பொழுதாக எனது**

**நெஞ்சம் துடித்ததடி**

**கூண்டுக் கிளியினைப் போல் தனிமை**

**கொண்டு மிகவும் நொந்தேன்**

**வேண்டும் பொருளை எல்லாம் மனது**

**வெறுத்து விட்டதடீ...!**

**த**ன் முன்னே வைக்கப்பட்டிருந்த ரொட்டியையும்,பழத்தையும் வெறித்து நோக்கினான் ஸ்ரீதர். மனதுக்குள்.. துக்கமும், கோபமும் ஒருங்கே எழுந்தது அவனுக்கு. துக்கம்.. தனது இன்றைய நிலையைக் கண்டு.. கோபம்.. ஷ்யாம்,சுஜியின் மீது... தன்னை இப்படியொரு அவல நிலைக்கு ஆளாக்கி விட்டு அவர்களிருவரும் அங்கே மகிழ்ச்சியுடன் காலம் கழிப்பதா..? எதுவும் செய்ய இயலாதத் தன் நிலையைக் கண்டு அவனுக்கே அவமானமாக இருந்தது,

எத்தனையோ முறை.. இந்த ரொட்டியை ருத்ரன் சித்தப்பாவின் முகத்தில் எறிந்து தன் கோபத்தை வெளிப் படுத்தியிருக்கிறான். ஆனால் அதற்கு பிரதிபலனாக அவரிடம் கிடைத்தத் தண்டனையை நினைத்தால் இன்னமும்

DO NOT COPY

உடல் நடுங்கியது அவனுக்கு. அதன் பின்.. அவர் சொல்படி கேட்டு.. நல்லவனாக நடந்து கொண்டான்.

இதை அவர் தந்தையிடம் தெரிவித்த போது.. இப்படியே நடித்தாலொழிய இங்கேயிருந்து வெளியேற முடியாதென்பதை அவன் புரிந்து கொண்டான். அதனால் அவர் சொல் படி.. இந்தக் காய்ந்து போன ரொட்டிகளைத் தின்று கொண்டு.. அவரது ஃபேக்டரியில் வேலை செய்து.. அவரிடமே சம்பளம் பெற்று.. வார இறுதியில்.. அவர் அலைந்து திரியும் காடு,மலைகளுக்கெல்லாம் உடன் சென்று.. ஓரளவு நல்ல பெயரைத் தக்க வைத்துக் கொண்டான்.

அவர் கொடுக்கும் வேலைகளனைத்தையும் செய்வது கூட அவனுக்கு பெரிய கஷ்டமாகத் தெரியவில்லை.. ஆனால் தான் ஜென்ம எதிரியாக நினைத்துக் கொண்டிருக்கும்.. ஷ்யாம் பிரபுவைப் பற்றி அவர் பெருமையாகப் பேசுவதைத் தான் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

பொறுப்பானவனாம்! கண்ணியமானவனாம்! ஒழுக்கமானவனாம்! திறமைசாலியாம்! நீயும் அவனைப் போல் நடந்து கொள்ளடா.. தூய எண்ணங்களை வளர்த்துக் கொள்.. அனைவரையும் மதிக்கப் பழகு.. யாரையும் கேவலமாக எடை போடாதே.. பணம் இன்று வரும், நாளை போகும்.. ஒழுக்கம் மிக மிக முக்கியம்.. என்றெல்லாம் அவர் அறிவுரை கூறும் போது... சைத்தான் வேதம் ஓதுவதைப் போல் தான் இருந்தது அவனுக்கு.. ஆனால்.. எதிர்த்து எதையும் கூற முடியாததால்.. அமைதியாகத் தலையாட்டி விடுவான்.

தினம்,தினம் அல்லல் படும் அவன்.. சரியான சந்தர்ப்பத்திற்காகப் பதுங்கியிருக்கும் புலியைப் போல்.. தன் கோப,தாபங்கள் அத்தனைக்கும் தீனி போட்டு வளர்த்து.. அவர்களிருவரையும் பழி வாங்கப் போகும் சரியான நேரத்திற்காகக் காத்திருந்தான். இங்கேயிருந்து எதையும் செய்ய முடியாமற் போனதால்.. வீடு போய் சேர்வதற்கானச் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். அந்த சந்தர்ப்பம் அவனுக்கு விரைவிலேயே கிட்டியது.

ருத்ரனுக்கு அவரது வேலை விசயமாக மலேசியா செல்ல வேண்டிய தேவை வந்தது. முதலில் தான் அங்கே செல்வதென்றும்.. ஸ்ரீதரை இங்கே பார்த்துக் கொள்ளச் சொல்லலாமென்றும் நினைத்திருந்தார். சிங்கப்பூர் வந்து சேர்ந்த புதிதில் கோபத்தையும்,ஆத்திரத்தையும் மட்டுமே காட்டிக் கொண்டிருந்தவன்.. அதன் பின் போகப் போக.. அமைதியுடன்.. அவர் கூறுவதனைத்தையும் கேட்டுக் கொள்வதைக் கண்டு.. அவருக்கு அவன் மீது லேசான நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதன் பின் ஃபேக்டரி விசயத்தில் அவனது திறமையைக் கண்டு விட்டு.. அவன் மீது முழுதான நம்பிக்கையே பிறந்து விட்டது அவருக்கு,



DO NOT COPY

அதனால் தான் வெளியூர் செல்லும் இந்த ஒரு மாதத்திற்கு அவனை இந்தியாவிற்கு அனுப்பி வைக்கலாமென்று முடிவு செய்திருந்தார். அவனது விருப்பத்திற்காக அல்ல.. சீதாவின் வேண்டுதலுக்காக.. மகனை ஒரு முறையேனும் அனுப்பி வையுங்கள் என்று அவர் விடாமல் வற்புறுத்துவதால் இந்த முடிவுக்கு வந்திருந்தார். தான் நினைத்ததை ஸ்ரீதரிடம் தெரிவித்த போது.. அவனுக்குச் சந்தோசம் தாள முடியவில்லை..

“நிஜமாகவா சித்தப்பா..?”என்று அவன் மறுபடி வினவ.. “ஆமாம்.. ஒரு மாதத்திற்கு.. நீ அங்கே சென்று விட்டு.. நான் சிங்கப்பூர் திரும்பியதும் வந்து விடு.. உனது ஃப்ளைட் டிக்கெட்டுகளுக்கு ஏற்பாடு செய்கிறேன்..”எனக் கூறி அவர் சென்று விட.. மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். வருகிறேனடா ஷ்யாம் பிரபு... உன் மண வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைக்க.. என்றெண்ணியவனின் முகம் குரோதத்தில் ஜொலித்தது.

**அ**ந்த வாரக் கடைசியில்.. சீதா,அனு மற்றும் அன்னையுடன் ஷாப்பிங்கில் ஈடு பட்டிருந்த சுஜி.. அனு தேர்ந்தெடுத்த சிவப்பு நிறக் குர்த்தியைக் கண்டு சிரித்துக் கொண்டிருந்தாள். “அனு.. இதை மாட்டிக் கொண்டு ஊசி,பாசி வாங்குறீங்களா சாமியோவ்! என்று கூவிப் பாரேன்.. சாலையில் செல்லும் அனைவரும் நிச்சயம் திரும்பிப் பார்ப்பார்கள்..”எனக் கூற.. “போங்கள் அண்ணி..”என்ற அனு.. கடைக்காரரிடம் திரும்பி “இந்த நிறத்தில்.. வேலைப் பாடுகள் சற்றுக் கம்மியாக இருக்கும் உடையைக் காண்பியுங்கள்..”என்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளைத் தேர்ந்தெடுக்க விட்டு விட்டு.. ஆண்களின் ஆடைகள் பக்கம் சென்ற சுஜிக்கு.. அங்கே பொம்மையில் மாட்டி விடப் பட்டிருந்த நீல நிறச் சட்டைப் பிடித்து விட.. இதை ஷ்யாம் அணிந்தால் நிச்சயம் நன்றாக இருக்கும்.. என்று முடிவு செய்து வாங்கிக் கொண்டாள்.

வீட்டிற்குள் நுழைந்ததும்.. ஹாலில் அமர்ந்து யாருடனோ செல்லில் உரையாடிக் கொண்டிருந்த ஷ்யாமைக் கண்டு.. துள்ளிக் குதித்து ஓடி.. “வந்து விட்டீர்களா ஷ்யாம்..?”என்று வினவ.. ஒரு கையால் அவள் தோளைப் பற்றிய படியே உரையாடி முடித்தவன்.. பின் அவள் புறம் திரும்பி..

“என்னடா புஜ்ஜூ.. ஷாப்பிங் எல்லாம் முடிந்ததா..?, 2 வாரத்திற்கொரு முறை கடைப் பக்கம் செல்லவில்லையென்றால்... தூக்கமே வராதே.. உங்களால் தான் எங்களைப் போன்ற துணி வியாபாரிகளுக்கெல்லாம் வாழ்வு கிடைக்கிறது..” என்று சிரித்தபடி கூற.. அவன் தோளில் இடித்த சுஜி.. “நான் உங்களுக்கு ஒன்று வாங்கியிருக்கிறேனே...”எனக் கூறி.. பையிலிருந்த சட்டையை எடுத்து “டண்டடைங்...”என்ற இசையுடன்.. அவன் முன்பு நீட்ட..

DO NOT COPY

“வாவ்! சட்டை வாங்கினாயா சுஜூ...?, ஆனால் இந்தக் கலர் எனக்குப் பிடிக்காதே...”என்று அவளை வம்பு செய்யும் எண்ணத்துடன் அவன் கூற.. அவளுக்கோ.. வருத்தத்தில் முகம் சுருங்கிப் போனது.. “வேற என்ன கலர் பிடிக்கும் ஷ்யாம்..?, உங்களைக் கேட்காமல் எடுத்து விட்டேன்.. சாரி ஷ்யாம்.. என்ன கலர் என்று சொல்லுங்கள்.. இப்போதே சென்று மாற்றி வாங்கி வருகிறேன்..”எனக் கூற..

“என் அழகு புஜ்ஜூ....”என்று அவளை இழுத்துத் தன் மடி மீது சாய்த்தவன்.. “நீலம் எனக்கு மிகவும் பிடித்த நிறம் சுஜூ.. சரியாகத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய்..”என்று கூற.. முகம் மலர்ந்தவள்.. “அப்படியானால் நாளை இந்தச் சட்டையைத் தான் அணிந்து கொள்ள வேண்டும்..”என்று கூற சிரிப்புடன் தலையசைத்தான்.

மறுநாள் சுஜி கூறிய படியே அவள் வாங்கித் தந்த சட்டையை அணிந்து கொண்டான். அவன் அணிந்து முடித்துத் தயாராகி வரும் வரைக் காத்திருந்தவள்.. அவன் வெளியே வந்ததும்.. “அழகாக இருக்கிறது ஷ்யாம்..”என்று கூறி.. “பரவாயில்லை.. நீங்கள்.. கொஞ்சம்.. கொஞ்சமே கொஞ்சம் ஹேண்ட்சம் தான்..”எனக் கூறிக் கலீரென்று சிரிக்க.. அவள் காதைத் திருகி.. மேலும் சிறிது நேரம் வம்பு செய்து விட்டே சென்றான் அவன்.

அவளுக்குப் பிடித்த.. அவள் தேர்ந்தெடுத்த சட்டையை அணிந்தது.. அவள் உடன் இருப்பதைப் போன்ற உணர்வைக் கொடுத்தது ஷ்யாமிற்கு.. எப்போதும் போலல்லாமல்.. அன்று முழுவதும்.. அலுவலகத்தில் வேலையைத் தொடர முடியாமல்... சட்டையைத் தடவி.. “நன்றாக இருக்கிறது ஷ்யாம்..”எனக் கூறிய.. அவளது பெரிய விழிகள்.. அவனை இம்சித்தது..

காதலை மட்டுமே தேக்கி வைத்திருக்கும் அந்தக் கண்கள்.. முத்தமிடும் போது சிவக்கும் அந்தக் கன்னம்.... வெட்கப்படுகையில் துடிக்கும் அந்த இதழ்... இடை வரை நீண்டு.. தன் மணத்தால் சுகம் பரப்பும் அந்தக் கூந்தல்.. அவளது ஒவ்வொரு அணுவும்.. கிளர்ச்சியை ஏற்படுத்த.. செய்வதறியாமல் தவித்தான். அவனது மயக்கத்தை மேலும் அதிகப் படுத்தும் வகையில்.. வானம் மழையைப் பொழிந்து.. அவனை மேலும் சூடேற்றியது... இதற்கு மேல் தாங்க முடியாது என்றபடி அலுவலகத்திலிருந்து வீட்டிற்குக் கிளம்பினான்.

வரும் வழியிலிலெல்லாம்.. குளிர் பரப்பிக் கொண்டிருந்த மழையைக் கண்டு விட்டு... அவள் நிச்சயம் தோட்டத்தில் செடிகளுக்கிடையில் ஆடிக் கொண்டிருப்பாள் என்று நினைத்தான்.

அவன் எண்ணியது போல்.. அனுவுடன் சேர்ந்து மழையில் நனைந்து கொண்டு.. கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் அவன் மனைவி. அதன் பின் சீதா

இருவரையும் விரட்ட.. அறைக்குச் சென்று சுடு நீரில் நீராடி விட்டு.. தன் அடர் கூந்தலை விரித்துக் காய வைத்த படி.. பால்கனியின் முன்பிருந்த அறை வாசலில் நின்று கொண்டு மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

வீட்டிற்குள் நுழைந்த ஷ்யாம்.. தோட்டத்தில் அவள் இல்லாததைக் கண்டுத் தன் அறைக்குச் சென்றான். கதவைத் திறந்ததும்.. நேராக பால்கனியில் பார்வை போக.. அங்கே அடர் சிவப்பு நிறச் சேலையில்.. தன் ஆறடிக் கூந்தலைக் கைகளால் கோதிய படி.. நிலப் படியில் சாய்ந்து... அழகான ஓவியமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தாள் சுஜிப்ரியா.

வெளியே பொழிந்து கொண்டிருந்த மழையும்... சிவப்பு நிற ரோஜாவாகச் சாய்ந்திருந்த மங்கையும்.. கிறக்கத்தையும்,மயக்கத்தையும் ஒரு சேரக் கொடுக்க.. மெதுவாக நடந்து அவள் முன்னே சென்று நின்றான். கணவனைக் கண்டதும் கண்களில் ஒளி பெற்ற சுஜி.. “வந்து விட்டீர்களா ஷ்யாம்..?, மழை பார்த்தீர்களா..?, நானும் அனுவும் தோட்டத்தில் நனைந்தோம்.. ஆனால் அத்தை தான் எங்களைப் பாதியிலேயே தடுத்து விட்டார்கள்..”என்றவளிடம் அவன் பதிலேதும் கூறாமல்.. அவளது ஈரக் கூந்தலை வருட..

“மழையைப் பாருங்கள் ஷ்யாம்.. இனம் புரியாத குதூகலத்தைக் கொடுக்கிறதல்லவா இந்த மழை..?, ம்..?”என்று வினவியவள் அவனிடமிருந்து பதிலற்றுப் போக.. அவனைத் திரும்பிப் பார்த்தாள்.. மழை மீதல்லாது.. அவன் பார்வை தன் மீது இருப்பதைக் கண்டு “என்ன ஷ்யாம்..?”என்று உள்ளே சென்று விட்ட குரலில் அவள் வினவ..

மனைவியின் மனம் இப்போதேனும் மாறுகிறதே.. என்று மகிழ்ச்சியுற்ற ஷ்யாம்.. “சுஜூ...”என்றழைத்து.. அவள் கன்னத்தில் தன் கன்னம் பதித்து.. மழையின் புறம் திரும்பி.. “இந்த மழையைப் பார்த்ததும் உனக்கு என்ன தோன்றுகிறது..?”என்று வினவினான்.

“ஹ்ம்ம்..”என்று யோசித்தவள்.. பின்.. “மழையில் நனைய வேண்டுமென்று தோன்றுகிறது..”என்றாள்.. “பிறகு...?”என்று அவன் துருவ.. அவள் மேலும் யோசித்துப் பின் நிமிர்ந்து “ம்.. மிளகாய் பஜ்ஜி சாப்பிட வேண்டுமென்று தோன்றுகிறது ஷ்யாம்..”என்று கூற.. “மக்கு..மக்கு..”என்று அவள் தலையில் குட்டினான் ஷ்யாம்.

வலியில் முனகியபடி.. “ஆ!..”என்றவளிடம்.. “இங்கே பார்.. என்னைப் பார்..”என்று அவள் முகத்தைத் தன் முகம் நோக்கித் திருப்பியவன்.. “நான் யார்..?”என்று வினவினான். அவனது கேள்வியைக் கேட்டுக் கேலியாகச் சிரித்தவள்.. “ஷ்யாம்..”என்று அவன் கன்னத்தில் ஆள் காட்டி விரலால்

DO NOT COPY

அழுத்திக் கூற.. அவன் அவளது விரலைப் பற்றி.. “யாருடைய ஷ்யாம்..?”என்று வினவினான்.

சிறிதும் யோசியாமல்.. “என்னுடைய ஷ்யாம்..”என்று அவள் பதில் கூற.. அதில் திருப்தி அடைந்தவன்.. “இப்படியொரு மாலை நேரத்தில்.. மழை பொழிந்து கொண்டிருக்கும் இந்த அழகான சமயத்தில்.. உன்னுடைய ஷ்யாம் உன் அருகில் இருக்கும் போது.. உனக்கு என்ன தோன்ற வேண்டும்..?”என்று அவன் தெளிவாக வினவ..

அவள்.. மேலும் குழம்பி.. “எ..என்ன தோன்ற வேண்டும்..?”என்று அவனை மறு கேள்வி கேட்டாள்.. பொறுமையற்று அவளை முறைத்தவன்.. “உனக்கு என்ன தோன்றுகிறதென்று கேட்டது என் தவறு தான்.. எனக்கு என்ன தோன்றுகின்றதென்பதை செயலில் காட்டுவது தான் சரி..”என்றவன்..

அவள் இடையைப் பற்றித் தன் அருகிலிழுத்தான்.. விரிந்து கிடந்த கூந்தல்.. முன்னால் விழுந்து அவள் முகத்தை மறைக்க.. அதை விலக்கி.. அவளது பட்டுக் கன்னத்தை வருடியவன்.. குனிந்து அவள் செவ்விதழ்களில்.. அழுந்த முத்தமிட்டான். வெகு நேரம் தொடர்ந்த அந்த முத்தத்தில் இருவருமே தங்களைத் தொலைத்திருக்க.. தன் மீது சாய்ந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தினான்.

வெட்கத்தில் விழி மூடித் தன்னைக் காத்துக் கொண்டவளை மீண்டும் முத்தமிட்டு.. அவள் இதழ்களை வருடி.. இறுக அணைத்து.. “ஐ லவ் யூ சுஜூ...”என்றான்.. அவனது அணைப்பில் முழுதாகத் தன்னைத் தொலைக்கத் தொடங்கியவள்.. அவனது இந்த வார்த்தைகளைக் கேட்டு.. மேலும் அவன் மார்பில் புதைய.. அவள் விருப்பத்தை உணர்ந்து.. அவளைத் தன் கைகளில் ஏந்தி.. படுக்கையில் சாய்த்தான்....

இருளத் தொடங்கியிருந்த வானமும்.... தொடர்ந்து பெய்து கொண்டிருந்த மழையும்... குளிரைப் பரப்பிய காற்றும்.. அவர்களிருவரின் தாம்பத்யத்திற்கு வாழ்த்து கூற.. தன் அழகான இம்சையை... ஆசைக் காதலியை.. அன்பான மனைவியை.. காதலுடன் அணைத்து.. தன் 29 ஆண்டு தவத்தைப் பூர்த்தி செய்து கொண்டான் ஷ்யாம் பிரபு..................................

மறு நாள் காலை கண் விழித்ததும்... மனைவியைக் காணாது... புன்னகைத்த ஷ்யாம்.. எழுந்து பால்கனிக்குச் சென்று கீழே தோட்டத்தை நோக்கினான். தன்னைப் போல்.. நேற்று பொழிந்த மழையில் மலர்ந்திருந்த பல மலர்களைக் கண்டு ரசித்த படி.. புன்னகை மாறாத முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் சுஜி. பால்கனியில் வைக்கப்பட்டிருந்த செடிகளிலிருந்த மலரைப் பறித்து அவள் மீது எறிந்தவன்.. அவள் தன் புறம் திரும்பியதும்.. “குட் மார்னிங்...”என்றான்.

DO NOT COPY

மேலும் புன்னகையில் விரிந்த இதழ்களுடனும்.. வெட்கத்தில் சிவந்து கன்னங்களுடனும்.. அவனைப் பார்த்துச் சிரித்தபடியே ஓடி விட்டாள் அவள். தானும் சிரித்தபடி.. "க்யூட் சுஜூ.."என்று முணுமுணுத்தபடியே குளிக்கச் சென்றான்.

குளித்து முடித்துக் கீழே வந்தவன்.. வீட்டிலிருப்போரை நோட்டம் விட.. ஒருவரும் கண்ணில் படாததைக் கண்டு.. சமையலறையில் வேலையில் ஈடுபட்டிருந்த மனைவியிடம் சென்று.. அவளைப் பின்னோடு அணைத்துத் தோளில் முகம் புதைத்தான். "விடுங்கள் ஷ்யாம்.. யாரேனும் பார்த்து விடப் போகிறார்கள்..."என்று சிணுங்கியவளிடம்.. "யாருமே கண்ணில் படவில்லையே.. எங்கே சென்று விட்டார்கள்..?"என்று வினவினான்.

"அனு காலேஜ் சென்று விட்டாள்.. அத்தையும்,மாமாவும் ஒரு விசேஷத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.."என்று அவள் பதில் கூற.. "அப்படியானால்.. என் பொண்டாட்டி மட்டும் தனியாக இருக்கிறாளா..?"என்று வினவிய படியே.. அவன் அவளது காதோரத்தில் முத்தமிட..

கூச்சத்தில் நெளிந்தவள்.. "முத்து அண்ணா.. வெளியே சென்றிருக்கிறார்.. வந்து விடப் போகிறார்.. விடுங்கள் ஷ்யாம்.."என்று போராட.. "அப்படியானால்.. எனக்கு ஒரு முத்தம் கொடு போகிறேன்.."என்று அவளைத் தன் புறம் திருப்பினான் அவன். "இங்கே..."என்று அவன் இதழ்களைக் காட்ட.. "மாட்டேன்.."என்று மறுத்தவளிடம்.. "அப்படியானால் நான் விட மாட்டேன்.." என்று அவள் இடையைப் பற்ற.. "ப்ளீஸ் ஷ்யாம்.."என்றவளிடம்..

"சரி.. வேண்டுமானால்.. நான் கண் மூடிக் கொள்கிறேன்.."எனக் கூறி கண் மூடிக் கொண்டான்.. என்ன செய்வதென்று சுற்றும் முற்றும் நோக்கியவள்.. கைக்கு எட்டும் தூரத்திலிருந்த தக்காளிப் பழத்தை எடுத்து.. அவன் முகத்தில் அழுத்த.. "ஏய்..."என்று அவன் விலகிய நிமிடத்தில்.. கலகலத்துச் சிரித்தபடி.. வெளியே ஓடினாள்.

"உன்னை...."என்றபடித் தானும் அவளைத் தொடர்ந்து ஓடியவன்.. அவள் முகம் பற்றி.. அருகிலிழுத்து... அணைத்துக் கொண்டான்.. அவள் முகத்தை நிமிர்த்தி.. இதழ்களில் முத்தமிட்டவன்.. "ஐ லவ் யூ புஜ்ஜூ..."என்று கூறச் சிரித்தபடி.. அவளும்.. "ஐ லவ் யூ ஷ்யாம்.."என்றாள்..

மேலும் அவளை இறுக அணைத்து.. "நிரூபித்துக் காட்டு..."என்று அவன் கூற.. தயக்கமின்றி அவன் கன்னத்தில் முத்தமிட்டு அவள் அணைத்துக் கொள்ள.. "பரவாயில்லையே.... தத்தி சுஜூ கூடத் தேறி விட்டாள்.."என்று அவன் கேலி செய்தான்.. "என்ன ஷ்யாம்..?"என்று அவன் தோளில் அடித்தவளைக் கண்டு அவன் சிரிக்க.. இருவரது சிரிப்பொலியும் வீட்டை நிறைத்த அந்த வேளை

DO NOT COPY

“அண்ணா....”என்ற ஸ்ரீதரின் அழைப்பு இருவரையும் திடுக்கிட்டு விலக வைத்தது....



# அத்தியாயம் – 22



**வீணையடி நீ எனக்கு..**

**மேவும் விரல் நான் உனக்கு**

**பூணும் வடம் நீ எனக்கு**

**புது வயிரம் நான் உனக்கு**

**காணும் இடந்தோறும் நின்றன்**

**கண்ணின் ஒளி வீசுதடி**

**மானுடைய பேரரசே!**

**வாழ்வு நிலையே கண்ணம்மா!**

**ச**ற்றும் எதிர்பார்த்திராத "அண்ணா" என்கிற ஸ்ரீதரின் அழைப்பைக் கேட்டு திடுக்கிட்டு விலகிய இருவரும்... ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு முதலில் வெளிப் படுத்தியது அப்பட்டமான அதிர்ச்சியைத் தான். சொல்ல முடியாத கலக்கம் மனதில் சூழ.. இந்தப் பொறுக்கி இப்போது வரவில்லையென்று யார் அழுதது என மனதுக்குள் சபித்தபடி எரிச்சலுடன் நின்றிருந்தாள் சுஜிப்ரியா. இது அனைத்தும் நடந்தது.. ஒரே நிமிடம் தான்..

அந்த ஒரு நிமிட இடைவெளியே ஸ்ரீதருக்குப் போதுமானதாக இருக்க.. இருவரும் தன்னைக் கண்டு பயப்படுவதாகக் கற்பனை செய்து கொண்டவன்.. புன்னகையுடன் "என்ன அண்ணா.. என்னுடைய வரவு இருவருக்கும் பிடிக்கவில்லை போலிருக்கிறதே... வாவென்று கூட அழைக்காமல் வாயடைத்துப் போய் நிற்கிறீர்கள்..?"என்று வினவ...

DO NOT COPY

சட்டெனத் தலையைச் சிலுப்பி நடப்புக்குக் கொண்டு வந்த ஷ்யாம்.. "வா டா ஸ்ரீதர்.. நீ எப்போது சிங்கப்பூரிலிருந்து கிளம்பினாய்..?, ஏன் முன்னமே தெரிவிக்கவில்லை..?"என்று வரிசையாகக் கேள்விகளைத் தொடுத்தான். அவனுக்குமே உள்ளுக்குள் ஏனென்று புரியாத மெல்லிய அதிர்வு தான். எதனால் என்று யோசிப்பதற்கு அவகாசம் இல்லாததால் தம்பியின் புறம் திரும்பினான்.

அவனது கேள்விகளைக் கேட்டு மேலும் சிரித்த ஸ்ரீதர்.. "அண்ணா உன் கேள்விகளுக்குப் பிறகு பதில் கூறுகிறேன்.. முதலில் உங்கள் திருமணத்திற்கு வாழ்த்து தெரிவிக்காததற்கு என்னை மன்னித்து விடுங்கள்.. இதோ.. உங்கள் இருவருக்குமான என் திருமணப் பரிசு... என் சம்பாத்தியத்தில் வாங்கியது தான்.. அப்படிப் பார்க்காதே அண்ணா.."எனக் கூறி ஒரு பார்சலை நீட்ட.. ஷ்யாமிற்கே கொஞ்சம் கூசிப் போனது.. இந்த அளவிற்கு அண்ணன் என்கிற ஈடுபாட்டோடு இருப்பவனைத் திருமணத்திற்கு வர விடாமல் செய்து விட்டோமே என்று!

"தேங்ஸ் டா.."என்று சிரித்தபடி பார்சலை வாங்கக் கை நீட்டியவன்.. சுஜிப்ரியா எதுவும் பேசாமல் அமைதியாக நிற்பதைக் கண்டு "சுஜூ.."என்று அவள் கையைப் பற்றிக் கண் ஜாடை செய்தான். அவளும் புரிந்து கொண்டு "தேங்க்ஸ் ஸ்ரீதர்.., பிரயாணமெல்லாம் சுகமாக இருந்ததா..?, அமருங்கள்.. பசியாக இருப்பீர்கள்.. இதோ.. பலகாரம் கொண்டு வருகிறேன்.."என்று உள்ளே சென்றாள்.

அவள் சென்றதும்.. "ருத்ரன் சித்தப்பா.. மலேசியா செல்லப் போவதாகக் கூறினாரே.."என்று ஷ்யாம் வினவ.. சோபாவில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்தவன் "ம்,ஆமாம்.. அவர் மலேசியா சென்று விட்டார்.. அதனால் தான் என்னை இங்கே அனுப்பி வைத்தார்.."என்று அவன் கூறியதும் "அப்படியானால் சிங்கப்பூர் ஃபேக்டரியை யார் பார்த்துக் கொள்கிறார்கள்..?"என்று வினவினான் ஷ்யாம்.

யாருமில்லையென்றால் நீயும்,உன் மனைவியும் சென்று பார்த்துக் கொள்ளப் போகிறீர்களா..? என்று ஸ்ரீதருக்கு மனதுக்குள் எரிச்சல் எழுந்தாலும் மறைத்து "அதெல்லாம் பார்த்துக் கொள்ள ஆள் இருக்கிறார்கள் அண்ணா.. முதலில் என்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் போகத் தான் திட்டம் வைத்திருந்தார்.. பின் என்ன நினைத்தாரோ.. நீ இந்தியா செல் என்று விட்டார்.."என்று அவன் கூற..

அன்னைக்காகத் தான் அனுப்பியிருப்பார் என்று முடிவு செய்தான் ஷ்யாம். அவனும் கவனித்துக் கொண்டு தானே வருகிறான்...? ருத்ரன் சித்தப்பா ஸ்ரீதரைப் பற்றி அவனுடன் பகிர்ந்து கொண்ட விசயங்கள்

DO NOT COPY

நம்பிக்கைக்குரியவைகளாகத் தானே இருந்தன? அவனது பேச்சிலும் இப்போது தெளிவு தெரிகிறதே! அனைத்திற்கும் மேல் தொழிலைச் சிறப்பாகக் கற்று வந்திருக்கிறான். தொழிலில் ஆர்வம் காட்டத் தொடங்கினால்.. மற்ற விசயங்களிலும் தன்னை மெருகேற்றிக் கொள்வான்.. என்று எண்ணிக் கொண்டான்.

ஷ்யாமின் பலத்த யோசனையைக் களைத்து "அண்ணா... அம்மா,அப்பா,வாலு அனு அனைவரும் எங்கே..?,யாரையும் காணவில்லையே..?"என்று அவன் வினவிய நேரத்தில்.. விசேஷத்திற்குச் சென்றிருந்த சீதாவும்,ராஜாராமனும் உள்ளே நுழைந்தனர்.

வெகு நாளைக்குப் பிறகு மகனைக் கண்ட சந்தோசத்தில் சீதா "ஸ்ரீதர்..."என்று கூவ.. சட்டெனத் திரும்பிப் பார்த்த ஸ்ரீதரும் "அம்மா..."என்றழைத்த படியே ஓடிச் சென்றான். "வாடா.."என்ற தந்தையின் அளவெடுக்கும் பார்வையை லட்சியம் செய்யாமல்.. "எங்கேம்மா சென்று விட்டீர்கள்..?"என்று அன்னையிடம் திரும்பினான். செய்த தப்பைச் சுட்டிக் காட்டி.. தண்டனையையும் தவறாமல் அளிக்கும் அண்ணனையும்,தந்தையையும் அவனுக்குப் பிடிக்காவிடினும் அன்னை,தங்கை மீது எப்போதும் அன்பு அதிகமே...

"ஸ்ரீதர் கண்ணா.. எப்போதடா வந்தாய்..?.நீ வருவதாக உன் சித்தப்பா கூடத் தெரிவிக்கவில்லையே.. சோர்ந்து தெரிகிறாயே.. ஏதேனும் சாப்பிட்டாயா..?" என்று வினவ.. அதற்குள் காஃபி கப்பும்,பலகாரமுமாக வந்து சேர்ந்த சுஜி அவனுக்குப் பரிமாறினாள். "தேங்க்ஸ் அண்ணி.."என்றபடி அவளிடமிருந்து தட்டை வாங்கிக் கொண்டவன்.. அன்னையைத் தொடர்ந்து சென்று சமையலறை மேடை மீது அமர்ந்து கொண்டு.. அன்னையுடன் வளவளத்தபடி உண்ணத் துவங்கினான்.

அவனைக் கண்ட சுஜிக்கு ஆச்சரியமாகவும்,குழப்பமாகவும் இருந்தது. உண்மையிலேயே அவன் திருந்திவிட்டானோ! என்றெண்ணியவள்.. இவனைப் பற்றி நான் நினைக்க என்ன இருக்கிறது! என்று தோளைக் குலுக்கி விட்டுச் சென்று விட்டாள்.

"அம்மா.."என்றழைத்தபடி சமையலறைக்குள் நுழைந்த அனுவும் அங்கே ஸ்ரீதர் அமர்ந்திருப்பதைக் கண்டு சிரிப்புடன் "டேய்.. ஸ்ரீதர்... எப்போதடா வந்தாய்..?" என்றபடி அவனிடம் ஓடிச் சென்றாள். "ஏய் வாலு.. நீ என்ன அதிசயமாக இன்று காலேஜிற்குச் சென்றிருக்கிறாய்..?"என்று அவளைக் கேலி செய்த படி ஒரு பெரிய சாக்லேட் பாக்ஸை நீட்டினான்.

"வாவ்!,ஸ்ரீதர் உனக்கு என் மேல் கொஞ்சம் பாசம் கூட இருக்கிறது போல! என்னை நியாபகம் வைத்து சாக்லேட்டெல்லாம் வாங்கி வந்திருக்கிறாய்..?"

DO NOT COPY

என்று மகிழ்ச்சியுடனே அவனிடம் வம்பு செய்தாள் அனு. சொல் பேச்சு கேட்காமல்.. சுய புத்தியும் இல்லாமல்.. வேண்டாத வேலைகளையெல்லாம் செய்து அவன் கெட்ட பெயரை வாங்கி வைத்திருந்தாலும்.. பெற்ற மகனை.. உடன் வளர்ந்த சகோதரனை.. மகிழ்ச்சியுடனே வரவேற்றனர் சுஜியின் வீட்டினர் அனைவரும்.

ஆனால் அங்கே அறையில் அமர்ந்திருந்த சுஜியோ ஏகக் கோபத்துடன் ஸ்ரீதரைப் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள். ஏனெனில் அறைக்குள் நுழைந்தவளை.. ஸ்ரீதர் வாங்கித் தந்தப் பரிசுக் கவரை பிரித்து வைத்தபடி யோசனையில் ஆழ்ந்து விட்டிருந்த ஷ்யாமின் கடின முகமே வரவேற்றது.. என்னவென்று அருகே சென்று பார்த்தவளுக்கு ஜிவு ஜிவ்வென கோபம் தலைக்கேறியது..

சீதையை தூக்கிச் செல்லும் தசகண்ட ராவணின் ராட்சத ஓவியத்தைப் பரிசாக அளித்திருந்தான் அவன். “திருமணப் பரிசா இது..?, கண்ணன்-ராதையைப் பரிசளித்திருக்கலாம்.. சீதா,ராமனுடன் இருக்கும் ஓவியத்தைக் கொடுத்திருக்கலாம்.. இது என்ன படம்?,பார்ப்பவர் முகம் சுளிக்குமளவிற்கு..?,இது திருமணப் பரிசென்று வேறு சொல்லிக் கொள்கிறார் உங்கள் தம்பி..?” என்று ஷ்யாமிடம் முறையிட்டுக் கொண்டிருந்தாள் சுஜி.

“விடு சுஜூ.. உனக்கு ஓவியக் கலையில் விருப்பமிருப்பதால் இதைப் பரிசளித்திருப்பான்...”என்றபடி ஓவியத்தைப் பார்வையிட்ட ஷ்யாமும் கொஞ்சம் குழம்பித் தான் போனான். என்ன அர்த்தத்தில்..?, எதை நிரூபிக்க இப்படி ஒரு ஓவியத்தைப் பரிசளித்திருக்கிறான்...?,அவனது எண்ணம் என்ன? நோக்கம் தான் என்ன?, சாதரணமாகத் தான் கொடுத்தானோ? உள்நோக்கு ஏதும்மில்லையோ?

அந்த ஓவியத்தில் ஆஜானுபாகுவான.. கரு நிறத் தோற்றத்துடன்... அகண்ட தோள்களுடனும்.. பெரிய மீசையுடனும்.. கம்பீரமானத் தோற்றத்தில் காட்சி அளித்துக் கொண்டிருந்தான் பத்துத் தலை ராவணன்.. பார்த்ததும் மிரட்சியை ஏற்படுத்தும் அவனது விழிகளின் குரூரம்.. ஒரு நிமிடம் ஷ்யாமையே பயப்பட வைத்தது... தன்னிலை மறந்து அவனது கைகளில் துவண்டு கிடந்த சீதையைக் காணும் போது இரக்கம் சுரந்தது..

இப்படியொரு ஓவியத்தைத் திருமணத்திற்காக பரிசளிக்க வேண்டுமென்று என்ன அவசியம்..?, என்று அவன் புருவங்கள் முடிச்சிட யோசனையில் ஆழ்ந்த போது “அண்ணா... அண்ணி..”என்றழைத்த படி உள்ளே நுழைந்த அனுவுடன் தானும் வந்தான் ஸ்ரீதர்.

DO NOT COPY

இருவரும் தான் பரிசளித்த ஓவியத்துடன்.. குழப்பமான முகங்களுடன் அம்ர்ந்திருப்பதைக் கண்டு அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அந்த ஓவியம் பிரதிபலிப்பதைப் போல்.. அந்த ராவணன், சீதா ராமனின் வாழ்விற்கு.. சோதனையாக வந்தது போலத் தான்.. தானும் இப்போது.. வெறி கொண்ட வேங்கையாக.. படமெடுக்கும் பாம்பைப் போல்.. முழுக் குரூரத்துடன் வந்திருப்பதை அவர்களிருவருக்கும் உணர்த்தி விட வேண்டுமென்று நினைத்தான்.

“அண்ணி.. என்ன இது..?, நீங்கள் வரைந்த ஓவியமா..?, இது என்ன இவ்வளவு குரூரமாக இருக்கிறது..?”என்று அனு வினவ.. எல்லாம் உன் அருமை அண்ணன்.. திருவாளர் ஸ்ரீதர் அவர்கள் பரிசளித்த திருமணப் பரிசு தான்.. என்று எர்ச்சலுடன் மனதில் எண்ணிக் கொண்டு ஸ்ரீதரின் முகத்தைப் பார்க்க..

அவன் சிரிப்புடன் “நான் தான் அவர்களிருவருக்கும் திருமணப் பரிசாக இந்த ஓவியத்தைப் பரிசளித்தேன்... அதில் ராவணின் முகத்தைப் பாரேன் அனு.. எவ்வளவு தத்ரூபமாக அவனது ரௌத்திரத்தைப் படமாக வரைந்திருக்கிறார்கள்..?, அவரது ஆஜானுபாகுவான தோற்றமே.. என்னைக் கவர்ந்து விட்டது.. அதனால் உடனே வாங்கி விட்டேன்.. அண்ணிக்கு ஓவியத்தில் விருப்பமென்று அம்மா ஒரு முறை கூறியதாக நியாபகம்.. அதனால் தான் பரிசளித்தேன்.. ஏன் அண்ணி..?,உங்களுக்குப் பிடிக்கவில்லையா..?”என்று அவன் வினவியதற்கு.. சுஜி பதில் சொல்லும் முன் முந்திக் கொண்ட அனு...

“ஏன் டா உனக்கு அறிவு என்பதே கிடையாதா..?,யாரேனும் கல்யாணப் பரிசாக இப்படி ஒரு ஓவியத்தைப் பரிசளிப்பார்களா..?, அழகான உறவின் அடையாளமாக எத்தனையோ விசயங்கள் இருக்கையில்.. இதைப் போய். கொடுத்திருக்கிறாயே..”என்று அனு கத்தத் துவங்க.. “ஏய் அனு... நான் இதை கல்யாண உறவின் அடையாளமாகப் பரிசளிக்கவில்லை.. பார்க்க நன்றாக.. தத்ரூபமாக இருக்கிறதென்று தான் வாங்கினேன்.. நீ வாயை மூடு... உனக்குப் பிடித்தாக வேண்டிய அவசியமில்லை...அண்ணி.. நீங்கள் கூறுங்கள்.. உங்களுக்குப் பிடித்திருக்கிறதா..?”என்று சுஜியிடமே வினவினான்.

என்ன சொல்வதென்று புரியாமல் விழித்த சுஜி பின் தொண்டையச் செருமிக் கொண்டு “நீங்கள் கூறியதைப் போல்.. ஓவியம் மிகவும் தத்ரூபமாக இருக்கிறது.. எனக்குப் பிடித்திருக்கிறது..”என்று இரு வரியில் முடித்துக் கொள்ள.. “பார்த்தாயா.?,அவர்களுக்கே பிடித்திருக்கிறது.. நீ ஏன் துள்ளுகிறாய்..?” என்று அவள் தலையிலடித்து வம்பு செய்த படியே எழுந்து சென்றான் ஸ்ரீதர்.

அவன் சென்றதும் ஷ்யாமை முறைத்துக் கொண்டிருந்தவளைக் கண்டு “என்ன அப்படிப் பார்க்கிறாய்..?, அவன் தான் விளக்கம் கூறி விட்டானே..?, என்னை

DO NOT COPY

எதற்காக முறைத்தபடி அமர்ந்திருக்கிறாய்..?, படத்தை மூடி வை.. பார்க்கவே பயமாக இருக்கிறது..”என்று எரிச்சலுடன் மொழிந்து விட்டு அறையை விட்டு வெளியேறினான் ஷ்யாம்.

அவன் கூறியதைப் போல்.. படத்தை மூடி வைத்த சுஜி.. அதைக் கிழித்துத் தூக்கி எறிய வேண்டுமெங்கிற எண்ணத்தை அடக்கி.. கண் படாத.. இடத்தில் போட்டு வைத்தாள். இத்தனை நாட்களாக.. அழகான பாதையில்.. மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்த வாழ்க்கை.. திடீரென்று கனலை அள்ளி வீசப் போவதாக உள் மனம் எச்சரிக்கத் துவங்க.. அது ஸ்ரீதரின் வரவால் தானா..?, அவனைப் பார்த்து எதற்காக மனம் கலங்க வேண்டும்..?,அவனை ஒரு மனித ஜென்மமாக.. ஏன் ஒரு பொருட்டாகக் கூட மதித்திராத தனக்கு அவன் மீது பயமா..?,இது வேறு ஏதோ மனக் கலக்கம்.. விரைவில் அன்னை வீட்டிற்குச் சென்று சிறிது நாட்கள் தங்கி வர வேண்டுமென்று முடிவு செய்தாள்.

அதன் பின் வந்த நாட்களில் “அண்ணா,அண்ணி..”என்று பாசத்தைப் பொழிந்த கோட்டான் ஸ்ரீதரின் பாச மழையைச் சகித்துக் கொண்டு.. எரிச்சலும்,கோபமுமாக வலம் வர வேண்டியதாயிற்று சுஜிக்கு. வீட்டில் யாருக்கும் தன் மீது சந்தேகம் வந்து விடக் கூடாதென்பதில் கவனமாக இருந்த ஸ்ரீதர்.. அண்ணன்,தந்தையுடன் அலுவலகத்திற்கும் சென்று வந்தான். இந்தச் சில நாட்களில் அது பழகிப் போன ஒன்றாகி விட்டிருந்ததால் அவனுக்குச் சுலபமாகவும் இருந்தது.

அன்று இரவுச் சாப்பாட்டின் போது... அனைவரும் அமைதியாக சாப்பாட்டில் முனைப்பாக இருக்க.. “இன்னொரு சப்பாத்தி வைத்துக் கொள்ளுங்கள்..”என்று கூறிய படி ஷ்யாமின் தட்டில் சப்பாத்திகளை அடுக்கிய சுஜியிடம் “எத்தனை சப்பாத்திகளை அடுக்குகிறாய் சுஜூ..”என்று கை பற்றி அவளைத் தடுத்தவன் “நீ போடும் சாப்பாட்டைச் சாப்பிடுவதற்கு.. எனக்கு இன்னொரு வயிறு தான் வேண்டும்..”எனக் கேலி செய்து கொண்டிருந்தான்.

அவர்களிடையே இருந்த அந்நியோன்யம்.. சுஜூ என்கிற ஷ்யாமின் அழைப்பு இவையிரண்டும் எரிச்சலைக் கொடுக்க.. கட்டாயத்தின் பேரில் நடந்த இந்தத் திருமணம் இவர்களிடையே எப்படி இவ்வளவு நெருக்கத்தை அளித்தது..?, வீட்டினர் முன்பு நடிக்கிறார்களென்கிற முடிவுக்கும் அவனால் வர முடியவில்லை. ஏனெனில் முதல் நாள் இருவரது அணைப்பையும்,சிரிப்பையும் தான்... தன் சொந்தக் கண்களிலானாலே கண்டானே! இடையில் பூத்த இந்த நெருக்கத்தைத் தகர்ப்பதென்ன கடினமான காரியமா..? என்று எண்ணமிட்டவன்..

முகத்தை மாற்றி.. சிரிப்பைக் கொணர்ந்தவன் நிமிர்ந்து “அண்ணி...”என விளித்து “அண்ணனுக்கு உப்புக் கா∴பி.. உப்புக் கஸ்டர்ட் தான் கொடுப்பீர்களாமே அண்ணி.. ஏன் அண்ணன் உங்களை விட்டுச் சென்று

விடுவான் என்று பயமா..?, அவன் உள்ளளவும் நினைக்க வேண்டுமென்பதற்காகத் தான் உப்பைக் கொட்டுகிறீர்களா..?"என்று சிரித்தபடியே வினவினான்.

அவன் கூறியதைக் கேட்டு ஷ்யாம் உட்பட.. வீட்டினர் அனைவரும் முறுவலிக்க.. சுஜியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.. ரோஷமாக நிமிர்ந்து "நான் உப்பே இல்லாத சாப்பாடு போட்டாலும்.. உன் அண்ணன் என்னை உள்ளளவும் நினைத்துக் கொண்டு தான் இருப்பார்... ஆனால் மைத்துனரே.. இப்போது என் யோசனை என்னவென்றால்.. உங்களைத் துரத்துவதற்கு கா..பியில் உப்பைக் கலக்க வேண்டுமா,அல்லது மிளகாய்ப் பொடியைக் கலக்க வேண்டுமா என்பது தான்.."எனக் கூற அனு கொல்லென்று சிரித்தாலும்.. ஸ்ரீதரின் முகம் கூம்பிப் போனது..

என் வீட்டிலிருந்து என்னையே விரட்டப் பார்க்கிறாயா..?,அதுவும் கொஞ்சம் கூட பயமோ..தயக்கமோ இல்லாமல்.. வீட்டினர் அனைவரின் முன்பும் தைரியமாகச் சொல்கிறாள்...! என் வீட்டில் கொட்டிக் கிடக்கும் பணமென்ன..? வசதியென்ன....?, அடிச்சது லாட்டரி என்பதைப் போல்.. சாதாரண மிடில் கிளாஸ் ரகமான இவள்.. தன் வீட்டினுள் நுழைந்து..அனைவரையும் கைக்குள் போட்டுக் கொண்டு புரியும் அட்டகாசத்தைப் பார்.. இருக்கட்டும்! பிறகு பார்த்துக் கொள்கிறேன்.. என்று கறுவிக் கொண்டான்.

உணவு முடிந்து உர்ரென்ற முகத்துடனே அறைக்குள் வந்த சுஜியை ஷ்யாம் கேள்வியுடன் நோக்கினான். எரிச்சல் குறையாமல் படுக்கையில் சாய்ந்தவள், ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட.. இவளுக்கு இருக்கும் மூளையை வைத்து யோசிக்க வேறு செய்கிறாளாக்குமென்று சிரிப்பு வந்தது ஷ்யாமிற்கு.. தனக்கு முதுகு காட்டி படுத்திருந்தவளை அருகிலிழுத்தவன்.. "மேடம் என்ன பயங்கர யோசனையில் இருக்கிறீர்கள் போல..?, யாரைப் பற்றிய யோசனை..?, உன் மணவாளன்.. மனங்கவர் கள்ளன்..ஷ்யாம் பிரபுவைப் பற்றியா..?"என்று அவள் கன்னத்தை உரச..

அவள் "அவர் தான் என் அருகிலேயே இருக்கிறாரே! அவரைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது..?, என் யோசனை அவரது தம்பி கல்லூளி மங்கனைப் பற்றியது.."எனக் கூறினாள். "ஏய்..சுஜூ.."என்று அவளைத் தன் புறம் திருப்பியவன் "உனக்கு அவன் மீது என்ன கோபம்..?,சாப்பாட்டு அறையில் கூடக் கண்டேன்.. அவன் நகைச்சுவையாகக் கூறியதை நீ எதற்காக வில்லங்கமாக எடுத்துக் கொள்கிறாய்..?,அவனுடன் அப்படி சண்டைக்குச் செல்கிறாயே..?"என்று வினவ.. ஆத்திரத்துடன் எழுந்தமர்ந்தாள் சுஜிப்ரியா.

"எது நகைச்சுவை.. உங்கள் தம்பி கூறியதா..?,அவர் வில்லங்கமாகக் கூறியதை நீங்கள் தான் நகைச்சுவையென்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்.. அவரளித்த

DO NOT COPY

,திருமணப் பரிசில் கூட வித்தியாசத்தை நீங்கள் உணரவில்லையா..? அவருக்கு என்னைப் பிடிக்காது,. அதனால் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்.." என்று சேலை முந்தானையைக் கசக்கியபடி கூற..

அவன் அவளைக் கண்டிப்புடன் நோக்கி.. "இது தான் பிரச்சனையே!, அவனுக்கு உன்னைப் பிடிக்காது என்கிற மனோபாவத்துடனே நீ அவனிடம் நடந்து கொள்கிறாய்.. அதனால் தான் அவன் சாதாரணமாகப் பேசுவது கூட உனக்குத் தவறாகப் படுகிறது... இதோ பார் சுஜூம்மா.. ஸ்ரீதர் ஒரு காலத்தில் தப்பு செய்தவன் தான்.. அவன் முற்றிலும் மாறிப் புது வடிவம் எடுத்து விட்ட இந்த நேரத்தில் வீண் குழப்பம் வேண்டாம்.. இப்போது தான் அவனைப் பற்றிய கவலையற்று வீட்டினர் அனைவரும் நிம்மதியாக இருக்கிறார்கள்.. அதை நாமே கெடுக்க வேண்டாம்.. சரியா கண்ணே..?,"எனக் கேட்டான்.

பதிலேதும் கூறாமல் உம்மென்ற முகத்துடனே தலையாட்டியவளை இழுத்து அணைத்து அவன் "இன்னும் என்ன..?"என்று வினவ.. சற்றுத் தயங்கியவள்.. அவன் முகம் நோக்கி நிமிர்ந்து "நீ.. நீங்கள் எப்போதும் என்னை விட்டுப் பிரிய மாட்டீர்கள் தானே ஷ்யாம்..?"என்று தனது பெரிய கண்களை விரித்து வினவ..

அவள் கண்களை வருடி முத்தமிட்டவன்.. "பார்த்த நொடியிலிருந்து இன்று வரை என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவள் நீ.. உன் சந்தோசத்தை,உன் சோகத்தை,உன் கண்ணீரை,உன் காதலை.. முழுமையாக அனுபவித்துக் கொண்டிருப்பவன் நான்.. உன்னை விட்டுப் பிரிந்தால்.. என் உடல் உயிரற்றுப் போனதாகத் தான் இருக்கும்..."எனக் கூற.. எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டு.. "ஐ லவ் யூ ஷ்யாம்.."என்று கூறினாள் சுஜிப்ரியா.

"ஐ லவ் யூ டூ புஜ்ஜூ... உனக்காக.. உனக்காக மட்டும் தான் நான் இந்தப் பிறவியெடுத்ததே... உன் மகிழ்ச்சி மட்டும் தான் எனக்கு முக்கியம்.. அதனால் இந்த 2 நாட்களாக உம்மென்ற முகத்துடன் வலம் வருவதைப் போலல்லாமல்.. எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும்.. சரியா..?, நான் இருக்கிறேன் உனக்காக.. எப்போதும்... சரியா..?"என்று வினவ..

சரியென்று தலையசைத்தபடியே அவன் தோளில் சாய்ந்தவள் சட்டென நிமிர்ந்து "ஷ்யாம்.. அம்மா என்னை இந்த வாரக் கடைசியில் வீட்டிற்கு அழைத்தார்கள்.. கல்யாணம் ஆனதிலிருந்து ஒரு முறை கூட நான் அங்கே சென்று தங்கவே இல்லையல்லவா..?,அதனால் தான்.. நான் செல்லட்டுமா..?, நான்கு நாட்கள் மட்டும் தான் ப்ளீஸ் ஷ்யாம்.."என்று அவன் நாடியைத் தடவ..

"ஏய்.. என்னடி விளையாடுகிறாயா..?,என்னை விட்டு எப்போதும் பிரிய மாட்டீர்கள் தானே ஷ்யாம் என்று கேட்டு விட்டு இப்போது நீ என்னை விட்டுச் செல்லத் தயாராகி விட்டாய்..?,அப்படியானால் உனக்கு என் மீது

DO NOT COPY

பாசமேயில்லை..”எனக் கூறி அவளைப் போலவே அவன் முகம் திருப்பிக் கொள்ள.. கலகலவென்று சிரித்தவள்..

“நான்கு நாட்கள் மட்டும் தான்.. ப்ளீஸ் ஷ்யாம்.. அம்மா,அப்பாவுடன் இருந்து பல நாட்களாகி விட்டது..”என்று அவள் கூற.. அவள் இரண்டு கன்னத்தையும் பற்றி.. “சரிடா புஜ்ஜூ.. தாராளமாகப் போய் வா.. நான்கே நாட்கள் தான்.. அதற்கு மேல்.. என்னால் நீ இல்லாத அறையில் இருக்க முடியாது.. சரியா..?,”எனக் கேட்க.. “தேங்க் யூ ஷ்யாம்..”என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சுஜி. “இந்த வாரக் கடைசியில் நம் வீட்டு விருந்திற்கு... ஆன்ட்டி,அங்கிள்,சக்தி அனைவரும் வருகிறார்கள் தானே..?,அன்றைக்கு அவர்களுடன் செல்ல ஏற்பாடு செய்து கொள்”என்று முடித்தான் ஷ்யாம்பிரபு.



# அத்தியாயம் – 23



**காதல்... காதல்... காதல்...**

**காதல் போயின்... காதல் போயின்...**

**சாதல்... சாதல்... சாதல்...**

**கூடல்... கூடல்... கூடல்...**

**கூடிப் பின்னே குமரன் போயின்**

**வாடல்... வாடல்... வாடல்..**

**அ**ந்த வாரக் கடைசியில்.. தொழில் பெற்ற ஒரு சிறு வெற்றிக்காக ஷ்யாமும், ராஜாராமனும் சிறிய அளவிலான விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். நெருங்கிய நண்பர்களும்,வீட்டினரும் மட்டுமே கலந்து கொள்ளக் கூடிய வீட்டளவிலான விருந்து. சீதாவிற்கு உதவியாக அனுவும்,சுஜியும் சிறு சிறு வேலைகளைப் பகிர்ந்த வண்ணம் இருக்க.... அந்த மினி விருந்து தடபுடலாகத் தயாராகிக் கொண்டிருந்தது.

“சுஜி.. நீ சென்று புடவை மாற்றித் தயாராகி வாம்மா.. ஆட்கள் வர ஆரம்பித்து விட்டார்கள் பார்..”என்று சீதா விரட்ட.. “இதோ போகிறேன் அத்தை..”என்று அடுக்களையிலிருந்துத் தன் அறைக்கு விரைந்தாள் சுஜி. தந்தையுடன் பேசிய படி உள்ளே நுழைந்த ஷ்யாம் சுஜியைக் கண்டு “என்னடா புஜ்ஜூ நீ இன்னும் தயாராகவில்லையா..?, சக்தி கிளம்பி விட்டதாக இப்போது கால் செய்தான்.. அவனே தயாராகி விட்டதாகக் கூறுகிறான்.. உனக்கென்ன தாமதம்..?”என்று அதட்ட....

“அவனே என்ன அவனே... அவனுக்கென்ன..?, ஒரு சட்டை,பேண்ட்டை மாட்டிக் கொண்டு கிளம்பி விடுவான்.. எனக்கு அப்படியா..?,”என்று நொடித்தபடியே

DO NOT COPY

படியேற.. அதற்குள் அவளருகே வந்து விட்டவன்... முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு “உடை மாற்றுவதில் உதவி வேண்டுமானால் கேள் சுஜூ.. நான் தயாராக இருக்கிறேன்..”எனக் கூற... “ச்சி..”என்றபடி ஓடிச் சென்று விட்டாள் சுஜி.

இரண்டு நண்பர்கள் தங்களது குடும்பத்துடன் வருகை தந்திருக்க... அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த ஷ்யாம்.. வாசலில் கார் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.. மகாலிங்கத்துடன் வள்ளியும்,சக்தியும் இறங்குவதைக் கண்டு.. பேசிக் கொண்டிருந்தவர்களிடம் அனுமதி கோரி விட்டு அவர்களை வரவேற்க எழுந்து சென்றான்.

“அனு சக்தி வந்து விட்டான் பார்..”என்று கூவியபடியே நடந்து சென்றவனைத் தன் அறையிலிருந்து வெளி வந்த ஸ்ரீதர் யோசனையுடன் நோக்கினான். சக்தி என்றால்.. சுஜியின் தம்பியின் பெயர் தானே..?, நியாயமாகப் பார்த்தால்.. சுஜியின் வீட்டினரின் வருகையை சுஜியிடம் தானே தெரிவிக்க வேண்டும்..?, இவன் எதற்காக அனுவை அழைக்கிறான்..? என்று குழம்பிய படியே வாசலை நோக்கினான்.

“இதோ வருகிறேன் அண்ணா...”என்றுத் தானும் கூவியபடியே ஷ்யாமைத் தொடர்ந்து ஓடிய அனு.. சுஜியின் அன்னை,தந்தையுடன் கலகலத்து பேசிய படி நின்று கொண்டிருந்தாள். “உள்ளே வாருங்கள் அத்தை,மாமா..”என்று வரவேற்றவள்.. “எங்கே மிஸ்டர்.ராமனைக் காணவில்லை..?”என்று வினவ.. “அதோ ஃபோன் பேசிக் கொண்டிருக்கிறான் பார்..”என்று சற்றித் தள்ளி நின்று கொண்டு யாருடனோ உரையாடிக் கொண்டிருந்த சக்தியைக் கை காட்டினார் மகாலிங்கம்.. “சுஜி எங்கே..?”என்று விசாரித்தபடி ஷ்யாமுடன் அவர்கள் உள்ளே செல்ல.. சக்தியை நோக்கிச் சென்றாள் அனு.

“ஹே சானா பானா... சக்தி பிரகாஷ்...”என்று அவள் சிரிப்புடன் அழைக்க அவன் திரும்பாததைக் கண்டு “மிஸ்டர்.சாப்பாட்டு ராமன்...:”என்று அவன் தோள் தட்டி அழைக்க.. “ஹ்ம்ம்,ஒகே கிருஷ்,ஓகே..”என்றபடியே ஃபோனை அணைத்த சக்தி அருகே நின்றிருந்த அனுவை நோக்கி.. வாவ்! என்று விழி விரித்தவன்.. “நீ தான் டா லட்டு எனக்கு ஏற்ற ஜோடி... என் மனம் அறிந்து நடந்து கொள்கிறாய் பார்... மாமாவுக்காகத் தானே டா இதைக் கொண்டு வைத்திருக்கிறாய்..?, ஐ லவ் மை ஸ்வீட் லட்டு.. நோ.. ஜாங்கிரி..”என்றபடியே அவள் கையில் வைத்திருந்த தட்டிலிருந்த ஜாங்கிரியை எடுத்து உண்ணத் தொடங்கினான்.

வந்ததுமே அவன் ஆரம்பித்து விட்டதைக் கண்டு “உனக்கு சக்தி பிரகாஷ் என்று பெயர் வைத்ததற்கு.. பீமசேனனென்று பெயர் வைத்திருக்கலாம்.. கல்யாண சமையல் சாதம் பாட்டில் வரும் தாத்தா கூட இவ்வளவு சாப்பிட்டிருக்க மாட்டார்.. நீ வருகிறாய் என்பதற்காக பார்த்துப் பார்த்து மேக்கப்



DO NOT COPY

செய்து.. நீ வந்ததும் இப்படி ஆவலாக ஓடி வந்திருக்கிறேனே.. என்னைப் பற்றி ஏதேனும் பேசுகிறாயா..?, ஜாங்கிரியாம்,ஜாங்கிரி!"என்று அனு திரும்பிக் கொள்ள..

அப்போது தான் அவளை மேலிருந்து கீழ் வரை முழுதாக நோக்கியவன்.. "வாவ்! சேலை கட்டியிருக்கிறாயா லட்டு..?, அதுவும் எனக்காக..?,"என்று அவள் கை பற்றி இழுக்க.. அவள் பதறி விலகி.. "வீட்டி வாசலில் நின்று கொண்டு என்ன விளையாட்டு..?, உள்ளே போகலாம் வாருங்கள்.."என்றவளிடம்.. "உள்ளே சென்ற பிறகு விளையாடினால்.. பரவாயில்லையா லட்டு..?"என்று வம்பு செய்தபடியே உடன் நடந்தான் சக்தி. இவர்கள் இருவரது சீண்டலையும், நெருக்கத்தையும்,சிரிப்பையும் கண்ட ஸ்ரீதருக்கு உடம்பு எறிந்தது.

சதிகாரி! தான் இந்தக் குடும்பத்துக்குள் நுழைந்தது போதாதென்று.. தம்பியின் மூலமாக அனுவின் மனதைக் கெடுத்து.. அவனையும் இந்த வீட்டுக்குள் சேர்க்கப் பார்க்கிறாள்.. பற்பல கோடிகளுக்குச் சொந்தமான சீதாராமனின் ஒரே பெண்ணிற்குக் கணவனாக.. இந்த வீட்டின் ஒரே மருமகனாக.. வரப் போகின்றவனுக்கு... எப்பேர்ப்பட்டத் தகுதியிருக்க வேண்டும்..?, அடுத்தவனிடம் மாத சம்பளத்தைக் கை கட்டி வாங்கி.. நோட்டுக்களை எண்ணி எண்ணி செலவு செய்யும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவனா அமைய வேண்டும்..?

அண்ணன்,தந்தை,அன்னை அனைவருக்கும் இவையனைத்தும் தெரிந்திருக்கிறது போலவே! அவள் தான் வயசுக் கோளாறில்.. தன் குடும்பத்திற்கு தகுதியற்ற ஒருவனை விரும்புகிறாளென்றால்.. இவர்களுக்கு எங்கே போனது புத்தி! அவர்களைப் பொறுத்தவரை அவன் சுஜிப்ரியாவின் தம்பியாக இருப்பதே மிகப் பெரியத் தகுதி தானே..! எப்படியெல்லாம் மயக்கி வைத்திருக்கிறாள்.. என்றெண்ணியபடி.. சிரிப்புடன் படியிறங்கி வந்து கொண்டிருந்த சுஜியைக் கோபத்துடன் நோக்கினான்.

மயில் கழுத்து நிறப் புடவையில்.. வண்ண மயிலாகவே.. சிரிப்பென்ற தோகையை விரித்துத் தன் பொற் பாதங்கள் தரையில் பதிய.. அழகாக நடந்து வருபவளை.. ஷ்யாம் விரிந்த விழிகளுடன் பார்த்துக் கொண்டிருக்க... சக்தி அனுவை இடித்து உன் அண்ணனைப் பார் என்று ஜாடை செய்தான். சிரிப்புடன் தமையனை நோக்கிய அனு பின் சக்தியிடம்..

"பார்.. என் அண்ணன் உன்னைப் போல்.. ஜாங்கிரியைக் கண்டதும் காதலியை மறந்து விடவில்லை.."என்று கூற.. அவன் "லட்டு.. உன் அண்ணனும் என்னைப் போல் பயங்கரமான பசியில் இருந்திருந்திந்தால்.. அவருக்கும் எதிரில் இருப்பது யாரென்று தெரியாமல் தான் போயிருக்கும்.. ஆனால் ஒரு கடி ஜாங்கிரி உள்ளே போனதும்.. மாமாவின் என்ர்ஜியைத் தான் நீ

கண்டாயே..” என்றவனை அனு முறைக்க.. “சரி,சரி உன் அண்ணனுக்குக் கொஞ்சம் மந்திரித்து விடு.. போ.. போ..”என்று அனுப்பி வைத்தான்.

ஷ்யாமின் அருகே சென்று அவன் முன்பு கை தட்டி.. “மிஸ்டர்.ஷ்யாம் பிரபு..”என்று அனு அழைக்க.. “இதென்னடி பழக்கம்?, அவனைப் பேர் சொல்லி அழைக்கிறாய்..?”என்று சீதா அதட்டியதைப் பொருட்படுத்தாமல்.. “அம்மா.. உன் மகன்.. இந்த உலகத்திலேயே இல்லை..கந்தர்வ உலகத்தில் பிரவேசித்து விட்டார்.. அவர் அங்கே சென்று விட்டால்.. விருந்தை யார் கவனிப்பது..?, அதனால் தான் அழைத்தேன்.. சொல்லப் போனால் நான் அவருக்கு உதவி தான் செய்திருக்கிறேன்.. வேண்டுமானால் அவரிடமே கேட்டுக் கொள்..”என்று அண்ணன் பக்கம் திரும்பினாள்.

அவள் கூறியது அனைத்தையும் கேட்டவன் முதலில் அசடு வழிந்து... பின் அனுவின் காதைப் பற்றித் திருகி “வாயை மூடு.. லூசு..” என்றுத் தன் அருகே அமர வைத்தான். மீண்டும் மனைவியைக் கண்டு விட்டு அனுவிடம் “அனு.. உன் அண்ணி இன்று மிகவும் அழகாக இருக்கிறாள் அல்லவா..?”எனக் கேட்க.. “நீ திருந்த மாட்டாய்..”எனக் கூறி தலையில் கை வைத்துக் கொண்டாள் அனுதரணி. இவையனைத்தையும் வெட்க முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்த சுஜி.. அண்ணனையும்,தங்கையையும் பொருட்படுத்தாது.. “டாடி..” என்றழைத்தபடி தந்தையின் அருகே சென்றமர்ந்தாள்.

“எல்லாருக்கும் கா.ஃபி கொண்டு வா சுஜி..”என்று சீதா சுஜியை ஏவ.. எழுந்து சென்று டிரேயை எடுத்து வந்து அனைவரிடமும் கா.ஃபிக் கோப்பைகளை நீட்டினாள். அனைத்தையும் கவனித்தபடி ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ரீதரைக் கண்டு விட்ட அனு... “ஸ்ரீதர் என்னடா.. அங்கேயே நின்று கொண்டாய்..?, இங்கே வா..”என்று ஓடிச் சென்று அவன் கை பற்றி அழைத்து வந்தவள்.. “சக்தி இது என் இரண்டாவது அண்ணன்.. ஸ்ரீதர்.. அண்ணா-அண்ணி கல்யாணத்தின் போது சிங்கப்பூர் சென்றிருந்தான்.. வேலை,வெட்டியில்லாமல் சும்மா திரிந்து அம்மா,அப்பாவின் உயிரை வாங்கிக் கொண்டிருந்தான்...”என்று தன் போக்கில் தொடர்ந்தவள்.. ஸ்ரீதர் முறைப்பதைக் கண்டு நிறுத்தி.. “ச்ச,ச்ச அதெல்லாம் அப்போது... இப்போது அப்படியல்ல.. நிறையவே மாறி விட்டான்..” என்று முடிக்க..

“அது ஒரு லூசு.. அப்படித் தான் ஏதாவது உளறி வைப்பாள்..”என்று சிரித்தபடி சிநேக பாவனையுடன் “நான் சக்தி” என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு அவன் முன்பு கை நீட்ட... என்னிடமே என் தங்கையைப் பற்றிக் கூறுகிறாயா..?, உன்னுடன் கை குலுக்காதது ஒன்று தான் குறை.. என்று சலித்தவன்.. கை நீட்டும் சாக்கில்.. சக்தியின் மறு கையிலிருந்த கா.ஃபிக் கோப்பையைத் தட்டி விட்டான். கோப்பையிலிருந்த கா.ஃபி முழுதும் சக்தியின் கால் சட்டையில் சிதறியது.. “ஷிட்..”என்றபடி எழுந்தவனிடம்.. “சாரி சக்தி..

DO NOT COPY

தெரியாமல் கை பட்டு விட்டது..”என்று ஸ்ரீதர் கூற.. அதற்கு சக்தி பதில் கூறும் முன் முந்திக் கொண்ட அனு..

“ஏன் டா உனக்கு அறிவு என்பதே கிடையாதா..?, மாடு மாதிரி வளர்ந்திருக்கிறாயே..?, புத்தி இல்லை..?, இப்படித் தட்டி விட்டு அவரது பேண்ட்டையே பாழாக்கி விட்டாய்..?”என்று கத்தத் துவங்க.. அவனுக்கு வக்காலத்து வாங்கி என்னிடமே சண்டைக்கு வருகிறாயா..? என்ற ரீதியில் ஸ்ரீதர் அவளை முறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு..

“அனு... அனு...”என்று அவள் கை பற்றித் தடுத்த சக்தி “தெரியாமல் கை பட்டு விட்டதாகத் தான் அவர் கூறுகிறாரே..! இப்போது எதற்காக காளி அவதாரம் எடுக்கிறாய்..?”என்று அதட்ட.. ஸ்ரீதரை முறைத்தபடியே.. “வாருங்கள்..”என்று சக்தியைச் சுத்தம் செய்ய அழைத்துச் சென்றாள். அங்கே நடந்தேரிய இந்த நாடகத்தைக் கண்டு சுஜி எரிச்சலுடன் ஷ்யாமை நோக்க.. இதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லையென்பது போல் வேண்டுமென்றே சுவரில் இருந்த பல்லியை வெகு தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பெரிதாகப் பேசினாரே! தம்பி நல்லவன் வல்லவன் என்று! இப்போது அழுத்தமாக அமர்ந்திருப்பதைப் பார் என்று கோபத்துடன் சென்றாள் சுஜி.

அங்கே அனுவின் அறையில்.. சக்தியின் கரை பட்ட பேண்ட்டை துடைத்துக் கொண்டிருந்த அனுவிடம்.. “உன் அண்ணனுக்கு என்ன என் மீது அப்படியொரு கோபம்..?, முதல் சந்திப்பிலேயே கா∴பியை ஊற்றி விட்டார்..?,”என்று சக்தி கேலி செய்ய... நிமிர்ந்து அவனை முறைத்த அனு.. “தெரியாமல் செய்து விட்டானென்று நீங்கள் தானே வக்காலத்து வாங்கினீர்கள்? இப்போது என்ன..?”என்று கேட்டபடி மீண்டும் குனிந்து துடைக்கத் தொடங்கினாள்.

அவள் தோளைப் பற்றி நின்று கொண்டிருந்தவன்.. “இல்லை அனு.. அவர் பார்வையிலும் ஒரு கோபம் இருந்தது... சகஜமாகப் பேசிக் கை குலுக்கியிருக்கலாமே!,உன் அண்ணன் வாயே திறக்கவில்லை... நேராக கா∴பி அபிசேகம் தான்..”என்றவனிடம் “அவனுக்கு என்ன உங்கள் மீது கோபம் இருக்கப் போகிறது..?, இஷ்டத்திற்கு எதையேனும் உளறிக் கொண்டிருக்காதீர்கள்... துடைத்தாயிற்று.. போகலாமா..?”என்று வினவினாள்.

ஆரஞ்சு வண்ணப் புடவையில்.. தங்கமாக ஜொலித்துக் கொண்டிருந்தவளைக் கண்டு மனம் மாற.. அறையின் யாருமற்றத் தனிமையும் கை கொடுக்க.. “அதற்குள்ளாகவா லட்டு...”என்றபடியே அவள் இடையைப் பற்றி சுவரில் சாய்த்தவன்.. “எ..என்ன..?”என்ற அவளது தடுமாற்றத்தைப் பொருட்படுத்தாது முன்னேறி.. அவள் இதழ்களை வருடித் தன் இதழ்களால் மூடினான். முதலில் செயலற்றுத் திகைத்தவள்.. பின் கண் மூடி அனுபவித்துப் பின் சுதாரித்து.. அவனை விலக்கித் தள்ளி ஓடி விட்டாள்..

“ஏய்.. அனு...”என்றபடியே தொடர்ந்து ஓடி வந்தவனைப் பின்னே திரும்பிப் பார்த்தபடியே சிரிப்புடன் ஓடியவள்.. எதிரே வந்த ஸ்ரீதரின் மீது மோதி நின்றாள். “ஏய்.. குரங்கு...”என்று வைதபடி தங்கையைப் பிடித்து நிறுத்தியவன்.. அவளைத் தொடர்ந்து ஓடி வந்த சக்தியைக் கண்டு மீண்டும் முகம் இறுகினான். மறுபடியும் இந்த வில்லனா..?, என்று சக்தி திகைக்க.. “தள்ளுடா..”என்று ஓடிய அனுவைத் தொடர்ந்துத் தானும் இளித்தபடியே ஓடிச் சென்று விட்டான்.

அடுத்த இரண்டு மணி நேரமும் அரட்டை அடிப்பதிலும்.. பாட்டு பாடி விளையாடியதிலும் கழிய.. சக்தி அனுவைச் சீண்டிய படியும்,ஷ்யாம் சுஜியைக் கோட்டா செய்தும் இரவு உணவை முடித்துக் கொண்டு அனைவரும் புறப்படத் தயாராயினர். முன்னமே கூறியிருந்த படி அன்று தாய் வீடு செல்லத் தயாராகி விட்டாள் சுஜிப்ரியா.

“பேக்கிங் எல்லாம் செய்து விட்டாயா சுஜி..?”என்று சீதா வினவியதற்கு.. “அவள் என்ன 10,15 நாட்கள் தங்குவதற்காகவா போகிறாள்..?,4 நாட்கள் தானேம்மா..?”என்று எரிச்சலுடன் கூறிய ஷ்யாமிடம் “4 நாட்கள் என்றாலும் உடுத்திக் கொள்ள ஆடை வேண்டாமா டா..?:என்று சீதா கூற.. “அம்மா.. அண்ணி போகிறாளென்று அவனே சோகத்தில் இருக்கிறான்.. நீ வேறு.. அவனைக் கோபப் படுத்தாதே!”என்று அடக்கினாள் அனு.

“அவர் கூறுவதையெல்லாம் கண்டு கொள்ளாதீர்கள் அத்தை...”என்ற சுஜி “அடிப்பாவி...!”என்று ஷ்யாம் பல்லைக் கடித்ததை லட்சியம் செய்யாமல்.. “நான் நேற்றே பேக் செய்து விட்டேன் அத்தை..”என்று கூறினாள்.. “ஆமாமாம்.. நேற்றே செய்திருப்பாள்.. என்னை விட்டுப் பிரிந்து செல்வதில் அவ்வளவு ஆர்வம்..”என்று புலம்பியபடியேத் தன் அறைக்குப் படியேறினான்.

“இரண்டு நிமிடம்.. உடை மாற்றி விட்டு வந்து விடுகிறேன் அம்மா..”எனக் கூறித் தானும் அறைக்குச் சென்றாள் சுஜி. அவள் அறைக்குள் காலடி வைத்ததும் அதற்காகவே காத்திருந்தவன் போல்.. அவளைப் பின்னாலிருந்து அணைத்துக் கொண்ட ஷ்யாம்.. “புஜ்ஜூ... நீ கண்டிப்பாகச் செல்ல வேண்டுமா..?,”எனக் கூறிக் கொண்டே அவள் காதோரத்தில் முத்தமிட்டு கழுத்தில் முகம் பதித்தான்.

அதற்குக் கலகலவென்று சிரித்தவள்,”நீங்கள் தானே ஷ்யாம்.. விருந்து முடிந்ததும் அப்பா,அம்மாவுடன் செல் என்றீர்கள்.. இப்போது இப்படிக் கேட்டால் என்ன அர்த்தம்..?”என்று வினவ.. அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல்.. அவளைத் தன்னுடன் சேர்த்தணைத்து மேலும் மேலும் முன்னேறியவனை அரும்பாடு பட்டுத் தடுத்து நிறுத்தி.. “அனைவரும் எனக்காக காத்திருக்கிறார்கள் ஷ்யாம்..”என்று அவள் கூற..

DO NOT COPY

கள்ளுண்ட மயக்கத்திலிருந்தவன்.. "வரவில்லையென்று கூறி விடு..."எனச் சொல்லி மீண்டும் முத்தமிடத் தொடங்கினான்.. அவனோடு சேர்ந்துத் தன்னை இழக்கத் துவங்கியவள்.. கடைசி முயற்சியாக "ஷ்யாம்...."என விளிக்க.. அவன் அவளை மேலும் இறுக அணைத்து "நீ எனக்கு இப்போது வேண்டும் சுஜூ.."எனக் கெஞ்சல் குரலில் யாசித்தவனிடம்.. மறுக்கத் தோன்றாமல்.. "ப்ளீஸ் ஷ்யாம்..."என்று முணுமுணுத்தவளிடம்.. "ஏய்.. இப்படி அழகாகப் புடவை கட்டிக் கொண்டு என் முன்னே வலம் வாவென்று நானாடி கூறினேன்..?, நீயாகவே என்னை மயக்கி விட்டு இப்போது தப்பிக்கப் பார்க்கிறாயா..?"என்று வினவினான்.

"நான் ஒன்றும் உங்களை மயக்குவதற்காக அந்தப் புடவையைக் கட்டிக் கொள்ளவில்லை.. நேரமாயிற்று ஷ்யாம்.."என்று கலங்கியவளை ஒரு முறை இறுக அணைத்து இதழ்களைச் சிறை செய்தவன்.. எதுவும் கூறாமல் அறையை விட்டு வெளியேறினான். அவனது நிலையைக் கண்டு.. மனம் மாறினாலும்.. வருகிறேன் எனக் கூறி விட்டு அன்னை,தந்தையை எப்படி ஏமாற்ற முடியும்... என்றெண்ணிப் புறப்பட்டாள்.

கீழே வந்து அனைவரிடமும் விடை பெற்றவள்.. வாசல் வரை சென்று பின் ஷ்யாமின் புறம் திரும்பினாள். மற்ற அனைவரும் சிரித்தபடியே காரின் அருகே சென்று விட்டனர். "இப்படி உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டால்... நான் எப்படிப் போவதாம்..?"என்று சிணுங்கியவளுக்குப் பதில் கூறாமல் ஷ்யாம் வேறு புறம் பார்க்க.. "ஷ்யாம் ப்ளீஸ்..."எனக் கூறி அவன் அருகே நெருங்கி நின்றாள். அவன் அப்போதும் எதுவும் கூறாமல் இருப்பதைக் கண்டு அவன் கன்னத்தைத் தொட்டு.. "என் கண்ணு... என் செல்லம்.. என் புஜ்ஜூ.. ப்ளீஸ் டா.." என்று ஷ்யாம் எப்போதும் சுஜியைச் சமாதானப் படுத்த உபயோகிக்கும் வார்த்தைகளைக் கூற..

அதற்கு மேல் தாங்காமல்.. அவளைப் பற்றி அருகிலிழுத்தவன்.. அழுந்த முத்தமிட்டு... "போய் வா.."என்றான்.. முகம் மலர்ந்து விகசிக்க.. "தேங்ஸ் ஷ்யாம்.."என்றவள் காரில் ஏறி அமர்ந்து புறப்பட்டாள். அது வரை அவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தவளுக்கே இப்போது.. அவனைப் பிரிந்து செல்வது கடினமாகத் தோன்ற.. அவன் உருவம் மறையும் வரை அவனைப் பார்த்துக் கொண்டே சென்றாள்.

அவள் பார்வையைக் கண்டு சிரித்த சக்தி "ஒரு 20 நிமிடப் பயணத்தில் வீட்டை வைத்துக் கொண்டு.. ரொம்பத் தான் பண்ணிக் கொள்ளாதீர்கள் இருவரும்.."என்று கேலி செய்ய.. அவனை முறைத்த சுஜி "டேய்.. நீ மட்டும் அனுவிடம்.. உன்னைப் பிரிய மனமே இல்லை கண்ணே என்று வசனம் பேசவில்லை..?"என்று கேட்க.. ஸ்டியரிங் வீலில் இருந்து கையை எடுத்து

DO NOT COPY

அவள் காதைத் திருகியவன் “ஒட்டு கேட்பதையே பிழைப்பாக வைத்திரு..”என்று சிரித்தான்.

சுஜி சென்ற பின்.. வீடே வெறிச்சோடிக் கிடப்பது போல் தோன்ற.. அறைக்குச் செல்ல மனமின்றி.. வெகு நேரம் டிவி பார்த்தபடி அமர்ந்திருந்தவன்.. செல் அழைக்க.. எழுந்து சென்றான். அவனது மனைவி தான் அழைத்திருந்தாள், சிரிப்புடன் “ஹலோ”என்றவனிடம்.. “சாரி ஷ்யாம்..”என்றாள் அவள். “அதை விடு சுஜூ.. நீ வீட்டிற்குச் சென்று விட்டாயா..?, நேரமாயிற்றே.. உறங்கவில்லை..?”என்று வினவினான்.

“ம்ஹ்ம்.. தூக்கம் வரவில்லை..”என்றவள்.. “ஐ மிஸ் யூ ஷ்யாம்..”எனக் கூற.. அவன் நன்றாகச் சிரித்து “ஐ மிஸ் யூ டூ புஜ்ஜூ..”என்றான். மேலும் சிறிது நேரம் அவளிடம் பேசியதும்.. மனம் அமைதியுற.. நிம்மதியுடன் உறங்கச் சென்றான்.

அடுத்த இரண்டு நாட்களும் நத்தை வேகத்தில் நகர... வெளிப்படையாகவே அனைவரிடமும் எரிச்சலைக் காட்டினான் ஷ்யாம். இருக்காதே பின்னே?, சுஜியின் பேச்சும்,சிரிப்பும் அன்றாட வாழ்வுடன் கலந்து விட்ட ஒன்றாக மாறி விட்ட பின்.. எப்படி அவளை நினைக்காமல் நேரத்தைக் கடத்த முடியும்?

“இந்த சட்டை போடுங்கள் ஷ்யாம்.. வேண்டாம்,வேண்டாம் அதை விட இது நன்றாக இருக்கிறது.. அய்யோ இரண்டுமே நன்றாக இருக்கிறதே!”எனக் குழம்பிய படித் தினமும் காலை அவன் அணிந்து செல்லும் ஆடைத் தேர்வில் இறங்கி விடுபவள் இல்லாமல் தொடங்கும் காலை நேரமே அவனுக்குப் பெரிய அலுப்பைக் கொடுத்தது.

அலுவலகம் சென்ற பின் கூட.. வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டவன் இரவைக் கழிப்பதற்குத் தான் மிகவும் திண்டாடிப் போனான். அறை முழுதும் நிறைந்திருந்த அவளது வாசம்... வழக்கம் போல் கிறக்கத்தைக் கொடுக்க.. அருகில் அவள் இல்லாதது அவனை மேலும் எரிச்சல் படுத்தியது..

“தூக்கம் வருகிறது ஷ்யாம்...”என்று குழைபவளை எழுப்பி “சுஜூ...”என்று கிறங்கி அணைப்பவனை வெட்கத்துடன் எதிர் கொள்பவள்.. அவளில்லாமல்.. மூளை வேலை நிறுத்தம் செய்து விட்டதாகவே உணர்ந்தவனுக்குத் தான் எந்த அளவிற்கு.. சுஜியை.. அவளின் அண்மையை நேசிக்கிறோம் என்பது அவனுக்கே வியப்பாக இருந்தது... எப்படி இந்த அளவிற்கு என் வாழ்வில் ஒன்றிப் போனாள்..? ஐ நீட் யூ சுஜூ... ஐ நீட் யூ டில் மை டெத்... என்று அவளைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தவன்.. நாளை நிச்சயம் அவள் வீட்டிற்குச் சென்று அவளைச் சந்திக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்..

DO NOT COPY

இருவரையும் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தாய் நாட்டில் கால் பதித்திருந்த ஸ்ரீதர்.. வந்து சேர்ந்த இரு நாட்களில் சந்தித்ததனைத்தும் ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம் மட்டுமே! ஷ்யாம்-சுஜியின் நெருக்கமும், அந்நியோன்யமும் தந்த ஏமாற்றம்.. சக்தியுடன் காதல் டூயட் பாடிக் கொண்டிருந்த அனு தந்த ஏமாற்றம்.. தான் எண்ணி வந்த அளவுக்கு எதையும் நிறைவேற்ற முடியாமல்.. தன் மீதே வந்த கோபம் ஒரு புறம் என்று அவன் நிம்மதியின்றி நடமாடினான்.

அலுவலகத்திலும் ஷ்யாமையும்,வீட்டில் சுஜியையும் வேட்டை நாய் போல் தொடர்ந்து கவனித்துக் கொண்டு தான் இருந்தான். இருவரது நடவடிக்கைகளிலும் சிறியதாக ஏதேனும் தவறு கண்டறிந்து விட்டால்.. ஏதேனும் குழப்பம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்..

அன்று அலுவலகத்தில் அமர்ந்திருந்த போது ஷ்யாம் அவசர அவசரமாக வேலையை முடிப்பதைக் கண்டு "அண்ணா.. வேறு அவசர வேலை ஏதும் இருக்கிறதா உனக்கு..?,"என்று வினவினான். அவனைப் பார்த்துப் புன்னகைத்த ஷ்யாம்.. "ஆம்.. அதி முக்கியமான அவசர வேலை தான்.. உன் அண்ணியைப் பார்க்கச் செல்ல வேண்டுமடா..."என்று கூற..

ஓ!, காதல் மனைவியைக் காணாமல் இருக்க முடியவில்லையாக்கும்..?, நேற்றிரவு கூடத் தோட்டத்தில் பார்த்தேனே.. வெகு நேரம் ஃபோனில் உரையாடிக் கொண்டு தானே இருந்தான்... அதற்குள்.. பார்க்க வேண்டுமாக்கும்..?, என்று கடுகடுத்தவனுக்கு ஒரு யோசனை தோன்ற..

"அண்ணா.. நானும் வரட்டுமா..?, இது வரை நான் அண்ணியின் வீட்டிற்குச் சென்றதேயில்லையே..?"எனக் கேட்க.. பிரபுவும் மகிழ்ச்சியுடனே தலையசைத்தான். இருவரும் காரில் சென்று கொண்டிருக்கையில்.. வழியில் ஒரு பரிசுப் பொருட்கள் விற்கும் கடையைக் கண்டு கொண்டவன்.. "10 நிமிடத்தில் வந்து விடுகிறேன்.."எனக் கூறி இறங்கிச் சென்றான்.

உள்ளே சென்று ஒவ்வொன்றாகப் பார்வையிட்டவனை... அங்கேயிருந்த கிறிஸ்டல் பொம்மை வெகுவாக ஈர்த்தது... வெண் உடையில்.. முகத்தில் வெட்கத்துடன்.. காதலனின் செய்கையை ஓரக் கண்ணில் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அழகியை... முட்டியிட்டுத் தன் இரு கரத்தையும் விரித்து காதல் யாசகம் புரிந்து கொண்டிருந்தான் ஒரு அரசன். ஆங்கிலேய பாணியில் இருவரது உடையும் காட்சியளித்தாலும்.. இரு முகங்களிலிருந்த உணர்ச்சிகள் அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது.. அவனும் இப்படித் தானே தன் தேவதையிடம் யாசித்துக் கொண்டிருக்கிறான்..? சிரிப்புடன் அதைப் பேக் செய்து வாங்கிக் கொண்டு.. காரை நோக்கி வந்தான்.

DO NOT COPY

கையில் பையுடன் வந்தவனைக் கண்டு இது வேறா என்று மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்ட ஸ்ரீதர்.. “அண்ணா.. என்ன கி∴ப்ட்டா..?, ஜமாய்..” என்று சிரித்தான். பதிலுக்கு சிரித்தபடி காரை ஸ்டார்ட் செய்த ஷ்யாம் உற்சாகத்துடன் சுஜியின் வீட்டின் முன்பு நிறுத்தினான்.

தமையனின் காதலைக் கண்டு உள்ளூர பொறாமை கூட எழுந்தது ஸ்ரீதருக்கு. வாசலில் கார் சத்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த சுஜி ஷ்யாமைக் கண்டு திகைத்து.. பொங்கிய மகிழ்ச்சியுடன் அவனருகே ஓடிச் சென்றாள்.. தன்னை நோக்கி ஓடி வருபவளை.. இரு கரம் நீட்டி ஆசையுடன் அணைத்துக் கொண்ட ஷ்யாமைக் கண்டு சிரித்தவளுக்கு.. சந்தோசத்தில் கண்ணில் நீர் சேர்ந்து விட்டது.. அவன் தோளில் அடித்து “ஐ மிஸ்ட் யூ சோ மச் தெரியுமா..?”என்று கூறியவளைக் கண்டு நகைத்து...

நெற்றியில் முத்தமிட்டு... “ஐ மிஸ்ட் யூ டூ புஜ்ஜூ...”என்றவன் பின் சூழ்நிலையை உணர்ந்து அவளை விலக்கி நிறுத்தினான். இருவரையும் கண்டு சற்றுத் திகைத்தே விட்ட ஸ்ரீதர், அவர்களிருவரும் தன்னை நோக்குவதைக் கண்டு முகத்தை மாற்றினான். பாவாடை,சட்டையுடன் நிற்பவளிடம்.. “அண்ணி.. யூ லுக் சோ யங்..”என்றவன் “அண்ணனைச் சந்தித்ததே போதுமா..?, என்னை உள்ளே அழைக்க மாட்டீர்களா...?”என்று வினவினான்.

மற்ற நேரத்தில் எப்படியோ.. இப்போது.. கணவனைக் கண்ட மகிழ்ச்சியில் திக்கிமுக்காடித் திளைத்துக் கொண்டிருப்பவளுக்கு... ஸ்ரீதரின் மீது கோபமோ, அவன் வரவில் எரிச்சலோ வரவேயில்லை.. “சாரி..சாரி.. உள்ளே வாருங்கள்..” என்று அழைத்துச் சென்றவள்.. “அம்மா..”என விளித்து அன்னையிடம் தெரிவிக்க.. “வாருங்கள் மாப்பிள்ளை.. வாங்க தம்பி..”என்று வரவேற்றவர் குளிர்பானம் அளித்து உபசரித்தார்.

இருவரது பார்வையும் ஒருவரையொருவரை அன்புடன் வருடிக் கொண்டிருக்க.. இமைக்கும் நேரம் கூட வீண் என்பதைப் போல்... மனைவியிடம் பார்வையாலே உரையாடிக் கொண்டிருந்தான் ஷ்யாம் பிரபு. அந்த அழகான மௌனத்தைக் களைக்கும் பொருட்டு தொண்டையைக் கணைத்த ஸ்ரீதர்.. “அண்ணா.. அண்ணிக்கு வாங்கி வந்த காதல் பரிசை அவரிடம் காண்பிக்கவில்லையா..?”என்று வினவினான்.

“உன்னைப் பார்த்ததில் அதை மறந்தே போனேன் சுஜூ...”என்ற ஷ்யாம் பையிலிருந்து எடுத்து “ஸ்மால் கி∴ப்ட் ∴பார் யூ” என்று அவளிடம் நீட்டினான்.. திகைப்பும்,வியப்புமாக அவனிடமிருந்து வாங்கிப் பிரித்தவள்.. அதிலிருந்த பொம்மைகளைக் கண்டு விழி விரித்தாள்.. தங்களதுக் காதலைப் போல்.. தங்கள் இருவரின் தற்போதைய மன நிலையை எடுத்துக் காட்டுவது போலிருந்த சிலைகளைக் கண்டு சிரிப்பு விரிந்தது அவளுக்கு..

DO NOT COPY

அன்னையும்,ஸ்ரீதரும் இருப்பதைக் கூட மறந்து அவனது கன்னத்தில் முத்தமிட்டுத் தன் விருப்பத்தைத் தெரிவிக்க... இப்போது வெட்கப்படுவது ஷ்யாமின் முறையாகிப் போனது..

"சுஜூ..."என்று அவளைத் தன்னிடமிருந்து அவன் பிரிக்க.. சிரித்தபடியே விலகியவளிடம்.. "சுஜூ.. இருவருக்கும் பலகாரம் எடுத்து வாம்மா.."என்று வள்ளி கூற.. "அதெல்லாம் வேண்டாம் ஆன்ட்டி.."என்று இருவரும் மறுப்பதைக் காதில் வாங்காமல் உள்ளே சென்றாள். "இந்தப் பொம்மையையும் எடுத்து உள்ளே வைம்மா.. உடைந்து விடப் போகிறது.."என்று வள்ளி எச்சரிக்க.. "சரிம்மா.."என்றவள் இரண்டு தட்டுகளில் வீட்டில் செய்யப்பட்ட பலகாரங்களுடன் வந்தாள்.

"இவ்வளவா சுஜூ..?"என்று கடிந்த ஷ்யாமிடம் "மிச்சம் வைக்காமல் சாப்பிட வேண்டும்.."என்று சிரித்தபடி திரும்பியவளின் கால்களில் ஏதோ இடறத் தடுக்கி விழுந்தவள்.. பற்றுகோலாக.. டீபாயைப் பிடிக்க.. அவளது தொடுகை ஏற்படுத்திய அதிர்வில்.. டீபாயின் மீது வைக்கப்பட்டிருந்த பொம்மை.. விழுந்து இரண்டு துண்டுகளாக உடைந்து போனது.. அந்த அரசன் தனியாகவும்.. அந்தப் பெண் தனியாகவும் பிரிந்து போனார்கள்.

கீழே விழுந்த அதிர்ச்சியை விட பொம்மை உடைந்து போனதை அவள் விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருக்க.. "சுஜூ.."என்று வேகமாக ஓடி வந்து அவளைத் தூக்கியவன்.. "பார்த்து நடக்கத் தெரியாதா சுஜூ.., அடி பட்டு விட்டதா..?"என்று அவள் காலை நீவினான். மூவரின் பார்வையும் அவள் மீது படிந்திருக்க.. அவளோ உடைந்து கிடந்த பொம்மையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனைவியின் பார்வை சென்ற இடத்தைத் தானும் தொடர்ந்த ஷ்யாம்.. அங்கே பொம்மை உடைந்து கிடப்பதைக் கண்டு ஜிவ்வெனக் கோபம் தலைக்கேறியது அவனுக்கு. எவ்வளவு ஆசையுடன்,காதலுடன்.. மனைவியின் முதல் பிரிவுத் தன்னை எவ்வளவு தூரம் பாதித்ததென்பதை நிரூபிக்கும் வகையில் இதைப் பரிசளித்திருப்பான்..?, அசட்டையாக இருந்து இப்படி உடைத்து விட்டாளே என்று சுஜி மீது கோபம் வந்தது அவனுக்கு.

எரிச்சலும் கோபமுமாய் அவளை நோக்கியவன்.. "என்ன சுஜூ... கவனமாக இருக்கத் தெரியாதா..?, அத்தை சொல்லும் போதே அதை எடுத்து வைத்திருந்தால் இப்படி உடைந்து போயிருக்குமா..?, எல்லாத்திலும் அசட்டை தானா..?, எவ்வளவு ஆசையாக வாங்கி வந்தேன் தெரியுமா..?,ச்ச.."என்று கோபமாகக் கூறிவிட்டு வெளியேறி விட்டான்.

DO NOT COPY

“காலை ஏதோ இடறி விட்டது ஷ்யாம்.. அதனால் தான் விழ நேர்ந்தது.. சாரி ஷ்யாம்..”என்று அவள் கெஞ்சியது ஏதும் அவன் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை.. கண்ணில் நீர் கோர்க்கச் செய்கையற்று நின்றவளைக் கவனிக்காது சென்று விட்டவனைக் கண்டு மேலும் கண்ணீர் பெருகியது அவளுக்கு.

அண்ணனைத் தொடர்ந்து “சாரி அண்ணி..”எனக் கூறி ஸ்ரீதரும் வேகமாக வெளியேறினான். திட்டமிட்ட படி இருவருக்குள்ளும் சண்டையை மூட்டி விட்ட மகிழ்ச்சியில்... திருப்தியுடன் சென்றவன்.. ஷ்யாமை நகரச் சொல்லி விட்டுத் தானே வண்டி ஓட்டினான். சற்றும் கோபம் குறையாமல் எரிச்சலுடன் வெளியே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டு குரூரமாகச் சிரித்தான் ஸ்ரீதர்.

ஆம்!, பொம்மை உடைந்து விடப் போகிறது.. உள்ளே எடுத்து வைம்மா... என்று வள்ளி கூறிய போதே இந்த யோசனை மனதுக்குள் தோன்றி விட்டது அவனுக்கு.. என்ன செய்யலாமென்று சிந்தித்துக் கொண்டிருந்தவன்.. சுஜி தன் அருகே வந்து பலகாரத் தட்டை வைக்கும் போது.. கால் நீட்டி இடற வைத்து அவளை விழ வைத்தான்.. விழும் போது எப்படியும் டீபாயைப் பற்றுவாள்.. பொம்மை உடையுமென்று கணக்கிட்டிருந்தான்.. அவன் எண்ணப் படியே அவள் கீழே விழுகையில் பொம்மையும் விழுந்து உடைந்தது..

இது நீயும்,நானும்.. என்று சொல்லாமல் சொல்லி ஷ்யாம் அளித்த அந்தப் பொம்மைகள் இரண்டும்.. உடைந்த வேகத்தில் தனித்தனியாக பிரிந்து விட்டதைக் கண்டு உற்சாகம் பீறிட்டது அவனுக்கு. அனைத்துக்கும் மேலே.. ஷ்யாம் அவளைக் கோபமாகத் திட்டியது! இப்படியே சிறிது சிறிதாகச் சண்டைகளைப் பெரிதாக்கி.. இருவரையும் நிரந்தரமாகப் பிரித்து விடுகிறேன்.. என்று சூள் உரைத்துக் கொண்டிருந்தவனின் சந்தோசம் முழுதாக 5 மணி நேரம் கூட நீடிக்கவில்லை..

திருமணமெனும் பந்தம், அது உண்டாக்கும் அன்பு, அது ஏற்படுத்தும் காதல். அது கொடுக்கும் அந்நியோன்யம்.. வாழ்வின் எல்லை வரை உடன் பயணிக்கக் கூடியதென்பதை.. இந்த அர்ப்பண்.. அறியாமல் போனது சோகம் தான்.. ஆம்! அந்த உறவின் புனிதத்தை.. தங்களது நேசத்தை அடுத்த சில மணி நேரங்களில் ஆணி அடித்தது போல் அவன் மனதில் பதிய வைத்தனர்.. அந்தக் காதல் நெஞ்சங்கள்..

DO NOT COPY




DO COPY

# அத்தியாயம் – 24



**உன் கண்ணில் நீர் வழிந்தால் – என் நெஞ்சில்**

**உதிரம் கொட்டுதடீ**

**என் கண்ணில் பாவையன்றோ? – கண்ணம்மா**

**என் உயிர் நின்னதன்றோ?**

**அ**லுவலகத்தில் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்று கொண்டிருந்த ஷ்யாமிற்கு சுஜி வீட்டில் தான் நடந்து கொண்ட விதத்தை நினைத்துத் தன் மீதே கோபம் வந்தது. அறியாமல் நேர்ந்து விட்ட சிறு தவறு.. அவள் என்ன செய்வாள் பாவம்?, அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் எப்படி ஆசையுடன் வந்து அணைத்துக் கொண்டாள்..?, முகத்தில் அடித்தாற் போல் பேசி விட்டு வந்தாயிற்றே...! திருமணமானது முதல் அவர்களிருவருக்கும் இடையே எந்தவிதத் தகராறும் வந்ததேயில்லை.. முட்டாள்தனமாக அவளைத் திட்டி.. அவள் அழுவதைக் கூட கண்டு கொள்ளாமல்.. ச்ச.. என்று வருந்தியவன்.. மாலை அவளைச் சந்தித்து விட்டுச் செல்ல வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான்.

ஷ்யாம் சென்ற பின் அழுத படியே பொம்மைகளைப் பொறுக்கி எடுத்த சுஜி.. அதை அணைத்துக் கொண்டு தேம்ப.. அவளை ஆறுதல் படுத்தத் தெரியாமல் குழம்பிப் போனார் வள்ளி. "சாதாரண பொம்மை உடைந்ததற்கு.. இவ்வளவு அழுகையா சுஜி...?"என்று அதட்டியதும்.. கண்களைத் துடைத்துக் கொண்டவள்... பொம்மையை எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்று விட்டாள். மாலை கணவனும் மகனும் வந்த பின் வள்ளி விசயத்தைத் தெரிவிக்க.. சக்தி சமாதானம் செய்ய முயன்றான்.

DO NOT COPY

ஆளாளுக்கு அவளுடன் போராடித் தோற்றுப் போய் அமர்ந்திருந்த வேளையில் ஷ்யாம் உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் வரவேற்ற சக்தி "மாமா.. தாஜ்மகால் இடிந்து போனால் ஷாஜகான் கூட இப்படி அழுவாரோ என்னவோ.. அந்தப் பொம்மை உடைந்ததற்கு உங்கள் தர்ம பத்தினி ஒப்பாரி வைத்தே கரைகிறாள்.. நீங்களே என்னவென்று கேளுங்கள்.."எனக் கேலி செய்து அவனை சுஜியின் அறைக்கு அனுப்பி வைத்தான்.

அங்கே அறையில் பொம்மைகள் இரண்டையும் பசை கொண்டு ஒட்டி வைக்க முயன்று தோற்று.. அதன் அருகிலேயே கண் மூடி சாய்ந்திருந்தாள் சுஜிப்ரியா. மனைவியின் நிலை கண்டு இரக்கம் எழ.. "சுஜூ..."என்று மெதுவாக அழைத்தான். அவன் குரல் கேட்டதும் திடுக்கிட்டு விழித்தவள்... அவனை நிமிர்ந்து நோக்கி விட்டு.. மீண்டும் தலை குனிந்து கொண்டாள்.. குற்ற உணர்வு தலை தூக்க.. வேகமாக அவளருகே வந்து.. "என்னை மன்னித்து விடு கண்ணம்மா... அறியாமல் பேசி விட்டேன்.. இனி ஒரு போதும் அப்படி அறிவீனமாக நடந்து கொள்ள மாட்டேன்.."எனக் கூற.. அவன் வந்ததுமே.. கண்ணில் சேர்ந்து விட்டக் கண்ணீரை வெளி விட்டு.. தன்னருகே நின்று கொண்டிருந்தவனின் வயிற்றில் முகத்தைப் புதைத்து அழுது தீர்த்தாள்.

அவள் அழத் தொடங்கியதும், பதறிப் போன ஷ்யாம்.. "புஜ்ஜூ.. ப்ளீஸ் டா.. உன்னைத் திட்டியதற்கு,, பதிலுக்குத் திட்டி விடு... வேண்டுமானால்.. 2 அடி கூட அடித்து விடு... அழாதேடா புஜ்ஜூ... ப்ளீஸ்... நான் 100 முறை ஐ ஆம் சாரி புஜ்ஜூ என்று பேப்பரில் எழுதி கூடத் தருகிறேன்.. ப்ளீஸ்.."என்று சமாதானம் செய்ய... சிரித்தபடி.. கண்ணீரைத் துடைத்தாள் சுஜிப்ரியா.

"தட் இஸ் மை புஜ்ஜூ.."என்றவன் அவளைத் தூக்கி நிறுத்தி.. கண்களை அழுந்தத் துடைத்து விட்டு.. அழுது சிவந்திருந்த கண்களை முத்தமிட்டு.. "இனி எதற்காகவும் இப்படி அழக் கூடாது.. சரியா கண்ணா..?, நீ கோபப் பட்டு 4 திட்டு கூடத் திட்டி விடு... நீ அழுவதை மட்டும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது புஜ்ஜூ..."என்றவன் தொடர்ந்து "இப்போதே உன் அழுகையை நிறுத்தி.. உன் முகத்தில் புன்னகையைக் கொண்டு வரட்டுமா..?என்றவன் அவள் சரியெனத் தலையாட்டியதும்.. கொண்டு வந்த பையிலிருந்து.. ஏற்கனவே கொடுத்தது போன்ற.. அதே பொம்மையை எடுத்துக் கொடுத்தான்.

அந்தக் கடையில் அதைப் போல் நிறைய பொம்மைகள் அடுக்கி வைக்கப் பட்டிருப்பதை முதல் தடவை வாங்கிய போதே கண்டிருந்தான். அதனால் அலுவலகம் முடிந்ததும் நேராக அங்கேயே சென்று மீண்டும் அதே பொம்மையை வாங்கிக் கொண்டு தான் புறப்பட்டான்.

கணவன் அதே பொம்மையைப் பரிசளித்ததும் மகிழ்ச்சியுற்ற சுஜி "சாரி ஷ்யாம்.."எனக் கூற.. அவள் வாயில் விரல் வைத்துத் தடுத்தவன்.. "புஜ்ஜூ மீது

எந்தத் தவறுமில்லை.. சரிதானே..?"எனக் கூறி அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்..

அவன் தோளில் சாய்ந்த படி பொம்மையை வருடிக் கொண்டிருந்தவளிடம்.. "நீ இல்லாத.. உன்னைக் காணாத இந்த 2 நாட்களும் நான் எவ்வளவு தவித்துப் போனேன் தெரியுமா..?, நீ என் வாழ்வில் எவ்வளவு முக்கியமானவள் என்பதை இந்த 2 நாள் பிரிவு தெரிவித்து விட்டது.. அன்பு,பாசம்,காதல்,நேசமென்று உலகிலுள்ள.. வார்த்தைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கூறினாலும்.. என் காதலை விவரிக்க முடியாது.. உன் சிரிப்பு என்னை சாந்தப்படுத்துகிறது.. உன் அருகாமை என்னை நிம்மதியுறச் செய்கிறது.. உன் அழுகை என்னைக் காயப் படுத்துகிறது.. எப்போது.. எந்த நொடி உன்னைக் காதலிக்க ஆரம்பித்தேன் என்பதை என்னால் கண்டறிய முடியவில்லை சுஜூ.. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.. நீ என் உள்ளம் நிறைந்து உயிரோடு கலந்து விட்டாய்.."என்று உணர்ச்சிவசமுற்று பேசிக் கொண்டே சென்றான் ஷ்யாம்.

அவனது பேச்சில்.. அவனது அன்பில்.. தன்னை இழந்த சுஜியும்.. அவனுக்குத் தன் அன்பையும் உணர்த்தி விடும் வேகத்தில் அவனை இறுக அணைக்க.. இருவரும் வார்த்தைகளற்ற மௌன உலகில் சஞ்சரிக்கத் துவங்கினார். சிறிது நேரத்தில் அறைக் கதவை யாரோ தட்ட.. சட்டென விலகினர் இருவரும்.

கண்களை அழுந்தத் தேய்த்தபடி சென்று கதவைத் திறந்த ஷ்யாம் அங்கே வாயெல்லாம் பல்லாக சக்தி நிற்பதைக் கண்டு "நினைத்தேன் நீயாகத் தான் இருப்பாயென்று! உனக்கு மூக்கு வியர்த்து விடுமே.."என்று ஷ்யாம் எரிச்சலுடன் கூற.. கொஞ்சமும் சூடு,சுரணையே இல்லாமல்.. மீண்டும் பற்களைக் காட்டிய சக்தி "நீங்கள் வரும் போது அனுவையும் அழைத்து வந்திருந்தால் நான் ஏன் மாமா உங்களைத் தொந்தரவு செய்யப் போகிறேன்..?" என்று வினவினான் சக்தி.

"அடப்பாவி... நாங்களும் இருவரும் கணவன்-மனைவி.. நீயும் அனுவும் காதலர்கள் தான் என்பதை மறக்காதே.."என்று ஷ்யாம் கூற.. "இரண்டுக்கும் என்ன பெரிய வித்தியாசம்?"என்றவன் ஷ்யாம் முறைப்பதைக் கண்டு "உங்கள் இருவரையும் சாப்பிட அழைத்தார்கள்.. வந்து சேருங்கள்.."எனக் கூறி விட்டு ஓடி விட்டான்.

"சுஜூ.. வெளியே செல்லலாமா..?"என்று ஷ்யாம் வினவியதற்கு சுஜியும் சம்மதம் தெரிவித்து விட.. அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தவன் வள்ளியிடம் தாங்கள் இருவரும் வெளியே செல்வதாகத் தெரிவிக்க.. "அனைத்தும் தயார் செய்து விட்டேன் தம்பி.. வீணாகி விடப் போகிறது.."என்ற வள்ளியிடம் "அதற்குத் தான் உங்கள் மகன் சாப்பாட்டு ராமன் இருக்கிறானே.. அவனுக்குப் போடுங்கள்.."எனக் கூறியவன் சக்தி தன்னை முறைப்பதைக்

DO NOT COPY

கண்டு அவனைப் போலவே 32 பற்களையும் காட்டி ஈ என இளித்து விட்டு வெளியேறி விட்டான்.

இருவரும் பீச்,ஹோட்டலெனச் சுற்றி விட்டுத் திரும்பும் வேளையில்.. “சுஜூ.. நம் வீட்டிற்கே சென்று விடலாமா..?”என்று கம்மிய குரலில் வினவினான் ஷ்யாம். அவனை ஆச்சரியத்துடன் விழி விரித்து நோக்கியவள்.. “இப்போது தான் நான் சொல்ல வந்தேன் ஷ்யாம்.. நீங்களே கூறி விட்டீர்கள்..”என்றவள் தொடர்ந்து “அம்மா வீட்டிற்குச் சென்று கிளம்புவதாகக் கூறி விட்டு.. என் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போகலாம் ஷ்யாம்”என்று கூற.. அவன் நேராகச் சுஜியின் வீட்டிற்கே வண்டியைச் செலுத்தினான்.

வீட்டிற்குச் சென்று... அவளை அழைத்துச் செல்வதாக ஷ்யாம் தெரிவிக்க.. வள்ளியும்,லிங்கமும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். சக்தியும் “ஆமாமாம், அழைத்துச் சென்று விடுங்கள்.. இங்கேயிருந்தால் சீக்கிரம் பைத்தியமாகி விடுவாள்.. சரியாகப் பேசுவதில்லை.. கலகலப்பதில்லை.. எப்போதும்.. விட்டத்தை வெறித்துக் கொண்டு பசலை நோய் வந்த தலைவியைப் போல் காட்சி தருகிறாள்..”என்று கேலி செய்ய.. “நாளை உங்கள் திருமணத்திற்குப்பிறகு அனு என் வீட்டிற்கு வந்தாலும் இதே நிலைமை தான் டா..”என்று தன் மனைவிக்கு வக்காலத்து வாங்கிப் பேசியபடியே விடை பெற்றுச் சென்றான் ஷ்யாம் அவனது மனைவியுடன்.

இரவு உணவு முடிந்ததும்.. தோட்டத்திற்குச் செல்வதற்காக வெளியே வந்த ஸ்ரீதர்.. காரைத் திறந்து கொண்டு இறங்கிய ஷ்யாமையும், மறுபுறத்திலிருந்து இறங்கிய சுஜியையும் கண்டு திகைத்து நின்று விட்டான். மதியம் அவன் கத்திய போது அவனுக்கிருந்த கோபத்தைக் கண்டு இன்னும் நான்கு நாட்களுக்கேனும் அவன் மனைவியைத் தேடிச் செல்ல மாட்டான் என்று முடிவு செய்திருந்த ஸ்ரீதருக்கு இந்தக் காட்சி கனவிலும் எதிர்பார்த்திராதது.

“இப்போது எதற்காக இவ்வளவு பெரிய மூட்டையைச் சுமந்து கொண்டு வருகிறாய் சுஜூ..?”என்று கடிந்த ஷ்யாமிடம் “அதில் அத்தைக்கும்,அனுவுக்கும் கொடுக்க வேண்டிய பொருட்கள் இருக்கின்றன.. கனமாக இருக்கிறது.. ப்ளீஸ் ப்ளீஸ் தூக்கி வாருங்கள் ஷ்யாம்..”என்று அவனிடம் கெஞ்சி..கொஞ்சிய படியே நடந்து வந்தவளைக் கண்டு எறிந்தது ஸ்ரீதருக்கு.. அதை விடப் பெரிய எரிச்சல்.. அவள் கையிலிருந்த அதே பொம்மை.. ஆனால் உடையாத நிலையில்.. அவன் குழம்பிக் கொண்டிருக்கையிலேயே அவனைக் கண்டு விட்ட சுஜூ...

“உங்கள் தம்பி நம்மை வரவேற்க.. வாசலிலேயே காத்திருக்கிறார் பாருங்கள்..” என்றவள் சிரிப்புடன் அவனருகே சென்று “என்ன ஸ்ரீதர் அப்படிப் பார்க்கிறீர்கள்..?என்று அவள் வினவ.. “இ..இந்தப் பொம்மை..”என்று திக்கியவனிடம் “இதுவா.. உன் அண்ணன்.. அதே கடையிலிருந்து எனக்கு

வேறு பொம்மை வாங்கி வந்து கொடுத்தார்..."என்று புன்னகை மாறாத குரலில் கூற.. "அப்படியா..?"என்று வினவிய ஸ்ரீதரின் குரல் தான் உள்ளே சென்று விட்டது..

இவர்களிருவரின் குரலைக் கேட்டு "அண்ணி..."என்றபடி ஓடி வந்த அனு.. "என்ன அண்ணி.. 2 நாட்கள் கூட அண்ணனை விட்டு இருக்க முடியவில்லையா..?, ஓ! உங்கள் ஆம்படையானால் இருக்க முடியவில்லையாக்கும்?,உடனே சென்று அழைத்து வந்து விட்டார்..?,நல்ல கணவன் மனைவி.."என்று அனு வார.. "ஏய்.. மக்கு போய் தூங்கு.."என்று அவளை அடக்கினான் ஷ்யாம்.

"போகலாம்.. போகலாம்.. ஹே இது என்ன பொம்மை..?,வாவ்! ரொமான்ட்டிக்.. அண்ணனின் காதல் பரிசா அண்ணி.."என்று அவள் வினவியதற்கு.. "ஆம்.."என்ற சுஜி மதியம் நடந்த சம்பவத்தை அப்படியே கொட்டினாள்.. இருவருக்குமிருந்த நேசத்தை.. அவர்களது கோர்த்த கைகளைப் பார்த்தபடி ராஜாராமனும்,சீதாவும் நெகிழ.. அனுவும் நெகிழ்ந்து அண்ணனையும்,அண்ணியையும் அணைத்து "இதே சந்தோசத்துடன்.. காதலுடனும்.. நீங்கள் கடைசி வரை வாழ வேண்டும் அண்ணி.."என்று வாழ்த்தினாள்.

அனைவரும் ஆசி கூறியபடியும்,கேலி செய்த படியும் அமர்ந்திருக்க.. ஸ்ரீதர் மட்டும் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தான். இது என்ன?, இந்தக் காதல் பறவைகளைப் பிரிக்க வழியேயில்லை போலவே!

ஒரு அடி ஏறினால்... நான்கு அடி சறுக்கி விடுகிறதே! ஷ்யாம் மதியம் அவளது வீட்டில் காட்டிய கோபமென்ன..?, அவளைத் திட்டியதென்ன..?, இப்போது அவளுடன் கொஞ்சிய படி அமர்ந்திருப்பதென்ன..! இங்கே வந்து சேர்ந்த இத்தனை நாட்களில் ஒரு வெற்றியேனும் கிட்டியதா..?, இருவரது நெருக்கத்தைக் கண்டு பொறாமைப் பட்டு இப்படிப் புலம்பிக் கொண்டிருப்பது தான் மிச்சம்!

பெரிதாக.. பெரிதாக.. எதையேனும்.. செய்தாக வேண்டும்.. சட்டமாக அமர்ந்து கொண்டு.. வீட்டில் அவள் புரியும் அட்டகாசத்தைத் தகர்த்தாக வேண்டும்.. தான் நுழைந்தது போதாதென்று... தம்பியையும் உடன் இழுக்கப் பார்க்கிறாள் ராட்ச்சி.. அவனது ஒட்டு மொத்த கோபமும் இப்போது சுஜிப்ரியாவின் மீது பாய்ந்து விட.. தக்க தருணத்திற்காக காத்திருந்தான் அவன்.

**ம**றுநாள் மாலை ஸ்கூட்டியில் தன் வீட்டு வாசலில் வந்திறங்கிய சக்தியைக் கண்டு "ஏய்.. லட்டு பாய்... என்ன இந்த வண்டியை ஓட்டிக் கொண்டு

வருகிறாய்..?,"என்று அனு வினவ.. உம்மென்ற முகத்துடன் வண்டியை நிறுத்திய சக்தி "என் மானத்தை வாங்குவதற்கென்றே ஒரு பிறவி இருக்கிறதே.. மிஸஸ்.சுஜிப்ரியா ஷ்யாம் பிரபு.... அவளால் தான்.. அவளுக்காகத் தான் ஓட்டி வந்தேன்..."என்றவன் தொடர்ந்து "ரோட்டில் போகிற பெண்களெல்லாம் என்னைப் பார்த்து எப்படி சிரித்தார்கள் தெரியுமா..?, அதை விட.. அந்த வானதி.. கெக்கொலி கொட்டிச் சிரித்து விட்டுப் போகிறாள்.. என் மானமே போய் விட்டது..."என்று கீழே கிடந்தக் கல்லை உதைத்தவனைக் கண்டு அனு முறைக்க.. சுஜி அவன் தலையில் அடித்தாள்.

"சாவியைக் கொடு டா.."என்று அவனிடமிருந்து பறித்தவள்.. "ஹை,என் வண்டி.."என்றபடியே அருகே ஓடிச் சென்றாள். மூவரது சத்தம் கேட்டு வெளியே வந்த ஷ்யாம் "இது சுஜியின் ஸ்கூட்டி தானே..?, சக்தி.. இதை எதற்காக இப்போது இங்கே கொண்டு வந்திருக்கிறாய்..?"என்று வினவ..

"உங்கள் பெட்டர் ஹாஃப் தான் மாம்ஸ்.. அடம் பிடித்தாள்.. அவளையே கேளுங்கள்.. லட்டு.. எனக்கு ஒரு கப் பூஸ்ட் தருகிறாயா..?"என்றபடி அனுவின் அருகே சென்றான். அவன் இவ்வாறு கூறியதும் கோபத்துடன் சுஜியின் அருகே சென்ற ஷ்யாம் "என்னடா புஜ்ஜூ.. உனக்கு வண்டி வேண்டுமானால் நான் புதிதாக வாங்கி வந்திருக்க மாட்டேனா..?, இதை எதற்காக அத்தை வீட்டிலிருந்து எடுத்து வரச் சொல்லியிருக்கிறாய்..?"என்று வினவினான்.

"பின்னே இந்த வண்டியை என்ன செய்வதாம்...?, அங்கே யார் உபயோகிக்கிறார்கள்..?,இந்தத் தடியன் ஒரு நாள் ஓட்டியதற்கு.. எவ்வளவு வசனம் பேசுகிறான் பாருங்கள்.. இவனா ஓட்டப் போகிறான்..?,அல்லது அம்மா ஓட்டப் போகிறார்களா..?,வீணாகத் தானே நிற்கப் போகிறது..?, இங்கேயிருந்தால் நான் உபயோகிப் படுத்திக் கொள்வேன்.."எனக் கூறி விட்டு வண்டியின் புறம் திரும்ப..

அங்கே சக்தியும்,அனுவும் வண்டியில் அமர்ந்து கொண்டு "ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்.."என்று ஒருவரையொருவர் பார்த்தபடி பாட்டு பாடிக் கொண்டிருந்தனர்.. "ஏய்.. இறங்குங்கள்.. என் ஸ்கூட்டியைக் குதிரை வண்டி என்று நினைத்தீர்களா...,"என்று அடித்து விரட்டி.. "என்னுடைய ஸ்கூட்டி.." என்று அணைத்துக் கொள்ள.. "முதலில் டெட்டி,இப்போது ஸ்கூட்டியா..?"என்று பல்லைக் கடித்தான் ஷ்யாம்..

அடுத்த வந்த நாட்களில் பக்கத்துத் தெருவிற்கு செல்வதானால் கூடத் தன் ஸ்கூட்டியிலேயே சென்று வந்து கொண்டிருந்தாள்.. அனுவும்,ஷ்யாமும் கேலி செய்த போதும் அவள் அசரவில்லை.. இது போதாதென்று.. சீதா,ஷ்யாம் என்று அனைவரையும் அமர வைத்து வீட்டைச் சுற்றி ரௌண்டுகள் வேறு!

ஷ்யாமை அமர வைத்து அவள் வலம் வருகையில் வீட்டில் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அவனது ஆறடி உயரத்தை அவன்.. அந்தச் சிறிய வண்டியில்.. குறுக்கி அமர்ந்து உட்கார்ந்து.. மனைவிக்காகச் சமாளிக்க.. அவளோ அவனை வைத்து ஓட்டும் குஷியில்.. 4,5 முறை வீட்டைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.. “அய்யோ போதும் இறக்கி விடுடி.. வண்டியை நிறுத்து... ப்ளீஸ்”என்று அவன் கதறியும் கேளாமல்.. “ஊ....”எனக் கத்தி வேகத்தைக் கூட்டி அவனை அலற வைத்தாள்..

“படுத்துகிறாயே புஜ்ஜூ...”என்று அவன் கத்திக் கொண்டிருந்த வேளையில்.. “ஏய்.. பாவி... உன்னை என்ன செய்தேனென்று இப்படிப் பழி வாங்குகிறாய்... இறக்கி விடு அனு... ப்ளீஸ்...”என்று சக்தியின் கதறலும் கேட்க.. “மாப்பிள்ளை.. நீயுமா டா..?, உனக்கும் இந்தக் கொடுமை நடக்கிறதா..?”என்று ஷ்யாம் அவனைப் பார்த்து வினவ..

“மாம்ஸ்.. உங்கள் வீட்டுக் கொலை விளக்கு... சாரி.. குல விளக்கு.. என் உயிரை வாங்கி விடுவாள் போலும்.. காப்பாற்றுங்கள்..”என்று அலற.. “யாஹூ...”என சுஜியும்,அனுவும், ஹை-ஃபைவ் கொடுத்துக் கொண்டு வேகமாக வண்டியைச் செலுத்தினர்.. நால்வரையும் கண்டு சீதாவும்,ராஜாராமனும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தனர்.

அன்று காலை உணவிற்காக டைனிங் டேபிளில் வந்தமர்ந்த ஸ்ரீதர்.. “அம்மா.. நான் என் பல்சரை சர்வீசிற்குக் கொடுத்து விட்டு.. அதன் பின்பு தான் அலுவலகம் செல்ல வேண்டும்..?, சீக்கிரம் கொண்டு வாருங்கள்..”என்று சத்தமிட்டான்.. “இதோ வருகிறேன் டா ஸ்ரீதர்..”என்ற சீதா “சுஜி இந்தத் தோசையை எடுத்துச் செல் மா.. அவனுக்கு சூடாக சாப்பிடத் தான் இஷ்டம்..” என்று கூற.. சரியென்ற சுஜி தட்டை எடுத்துக் கொண்டு சென்றாள்..

அவள் பரிமாறியதும் “தேங்ஸ் அண்ணி..”என்று பெற்றுக் கொண்டவனிடம் “ஸ்ரீதர்.. எனக்கு இரு சின்ன உதவி.. என் வண்டியையும் சர்வீசிற்குக் கொடுக்க வேண்டும்.. நீங்கள் செல்கையில் அதையும் எடுத்துச் செல்கிறீர்களா...?”என்று வினவ.. தன்னாலே வந்து மாட்டிக் கொள்கிறாளே..?, இந்த வாய்ப்பை எப்படியேனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே என்று வேகமாகச் சிந்தித்த ஸ்ரீதர் “ஷ்யூர் அண்ணி...”என்று புன்னகை மாறாத குரலில் கூறியவன் சாப்பிட்டு முடித்து.. ஒர்க் ஷாப்பிலிருந்து ஆட்களை வர வைத்து சுஜியின் ஸ்கூட்டியையும் எடுத்துக் கொண்டே புறப்பட்டான்.

இதன் விளைவு அடுத்த இரண்டு நாட்களில் ஷ்யாமின் மனதில் பூகம்பத்தையே உருவாக்கி விட்டது..

DO NOT COPY

“புஜ்ஜூ... ஏய் எழுந்திருடி.. இன்று சீக்கிரம் அலுவலகம் செல்ல வேண்டும்.. என்னை நேரத்தில் எழுப்பி விடு என்று கூறினால்.. சரி,சரியென்று தலையாட்டி விட்டு.. நான் எழுந்த பின்னும் உறங்கிக் கொண்டிருக்கிறாய்..?, எழுந்திரு..”என்று அவள் தோளைத் தட்டியவனை.. “இன்னும் கொஞ்ச நேரம் தூங்குகிறேன் ஷ்யாம்...”என்று அவன் கரத்தை எடுத்து முகத்தில் பதித்துக் கொள்ள..

சிரித்தபடி அவள் கன்னத்தில் முத்தமிட்டவன்.. “நீ தூங்கு.. நான் செல்கிறேன்.. பாய் புஜ்ஜூ..”எனக் கூறி விடை பெற்றுக் கீழே வந்தான். காலை சாப்பாடு தயாராகி டேபிளின் மீது அமர்ந்திருக்க.. அவசர அவசரமாக.. புத்தகத்தில் பார்வையைப் பதித்த படி.. இட்லிகளை கபளீகரம் செய்து கொண்டிருந்தாள் அனு.

“சாப்பிடும் போது.. படிப்பதா..?, இதென்ன புது பழக்கம் அனு..?”என்று அவன் கண்டிக்க.. “நேரமாயிற்று அண்ணா... இன்று பரீட்சை இருக்கிறது.. கொஞ்சம் ரிவைஸ் செய்ய வேண்டியிருக்கிறது... அதனால் தான்..”என்று புத்தகத்தை பார்வையிட்ட படியே கூறினாள்...

சிறிது நேரத்தில் அவளது செல்ஃபோன் அழைக்க.. அவள் எடுக்கும் முன் முந்திக் கொண்டு... அவளிடமிருந்து செல்லைப் பறித்தவன்.. செல்லில் ஒளிர்ந்த சக்தியின் பெயரைக் கண்டு “ம், படிப்பதற்கும்,சாப்பிடுவதற்கும் நேரமில்லை.. இதற்கு மட்டும் இருக்கிறதாக்கும்..?”என்று நமுட்டுச் சிரிப்புடன் கூறியவன்...

ஃபோனை ஆன் செய்து “டேய் சக்தி.. படிக்கிற பெண்ணை இப்படித் தான் கெடுப்பாயா..? ”என்று அதட்டினான்.. எதிர்ப்புறத்தில் அவனோ.. “மாம்ஸ்.. உங்கள் தங்கையை நான் கெடுப்பது இருக்கட்டும்.. ஒரு வேலைக்குப் போகும் பையனை கெடுக்க வேண்டாமென்று உங்கள் தங்கையிடம் கூறுங்கள்...”என்று கோபமாகக் கூறியவன்.. தொடர்ந்து..

“என் பைக் சாவியை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.. இப்போது நான் எப்படி அலுவலகம் செல்வதாம்..?, அந்த மட்டியிடமே கேளுங்கள்..”எனக் கூற.. அவன் தங்கையை நோக்கி.. “ஏய்.. அவன் பைக் சாவியை நீ எடுத்துக் கொண்டு வந்து விட்டாயாமே..?,”என்று வினவினான்.

“அய்யய்யோ!!”என்று புத்தகத்தைத் தலையில் அடித்து நாக்கைக் கடித்தவள்.. “என் ஹேண்ட் பேக்கில் இருக்கிறது...” என்று கூற.. “பார்த்தீர்களா மாம்ஸ்... உங்கள் தங்கை.. நல்லவள்.. செய்த வேலையை.. என் பிராணனை வாங்குவதற்கென்றே பிறந்திருக்கிறாள்.. இந்த இம்சையைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து வைத்து இன்னும் என்னவெல்லாம் படப் போகிறேனோ..?,”

என்று புலம்ப... “ஏய்.. என்ன இப்போ..?,வீட்டில் வேறு வண்டியே இல்லையா..?, காரை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்.. அல்லது.. மாமாவின் டிவிஎஸ் ஃபிப்டி ஒன்று ஷெட்டில் நிற்கிறதே... அதை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்..”எனக் கூறி கலகலவென்று சிரிக்க.. ஷ்யாமிற்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை...

“சிரிடி.. சிரி.... இன்று பரீட்சையில் நீ ஃபெயில் ஆகி விடுவாய்.. சாபம் விடுகிறேன்..”என்று அவன் சாபம் விட..”போடா.. உன் பைக் கீ வேண்டுமானால்.. மாலை என் காலேஜிற்கு வந்து வாங்கிச் செல்...”என்று முடித்தாள்.. இருவரையும் பேசியதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே அமர்ந்திருந்தவனை...

“ஷ்யாம்.. நீங்கள் இன்னும் கிளம்பவில்லையா..?,”என்று கேட்டபடியே அருகில் வந்தாள் சுஜி.. ஈரக் கூந்தலைத் துடைத்தபடி வந்தவளைக் கண்டவன்.. “கிளம்ப வேண்டும் புஜ்ஜூ..”என்றவன்.. அவள் கூந்தலை வருட.. “ம்க்கும்..”என்று தொண்டையைச் செறுமிய அனு.. “நாங்களும் இங்கே இருக்கிறோம்...”எனக் கூற.. “இவ்வளவு நேரமாக சக்தியுடன் வாயடித்தாயே.. நான் அமைதியாகத் தானே இருந்தேன்..?, போ..”என்று விரட்டினான்.

அவள் சென்றதும்.. மனைவியின் இடையைப் பற்றி அருகிலிழுத்து வயிற்றில் முகம் புதைத்தவனை.. “ஷ்யாம்.. நடு ஹாலில் அமர்ந்து கொண்டு என்ன செய்கிறீர்கள்...?,விடுங்கள்..”என்று அவனை விலக்கியவளை.. “ரொம்பத் தான் போடி.. சரி நான் கிளம்புகிறேன்...பாய் புஜ்ஜூ.. ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு அலைந்து திரியாதே....”என்று கண்டித்து விட்டு... அவள் கன்னத்தில் முத்தமிட்டுச் சென்றான்..

“ஹ்ம்ம்.. தினமும் ஒரு லைவ் ஷோ பார்க்க வேண்டியதாயிருக்கிறது... கன்னிப் பெண்ணின் மனதைக் கெடுப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்..” என்று அனு அலுத்துக் கொள்ள.. “ஏய்.. காலேஜிற்குக் கிளம்பு...”என்று அதட்டிய படியே வெளியேறினான் ஷ்யாம்..

வீட்டில் அனைவரும் அலுவலகம் சென்று விட்ட பின்.. சிறிது நேரம் சமையலறையில் ஈடுபட்டிருந்த சுஜி.. நியாபகம் வந்தவளாக.. “அத்தை.. நான் எம்ப்ராய்டரி போடக் கொடுத்திருந்த ரவிக்கை தயாராகியிருக்கும்.. நான் சென்று வாங்கி வந்து விடுகிறேன்..”எனக் கூற.. “இந்த வெயிலில் நீ எதற்காக அம்மா செல்ல வேண்டும்...?, செல்வியிடம் கூறினால் அவள் வாங்கி வந்து தருவாளே..?”என்றார் சீதா.

“ஸ்கூட்டியில் சென்றால் 15 நிமிடம் தானே அத்தை.. இதற்காக.. செல்வியை அலைய வைக்க வேண்டாம்.. நானே சென்று வாங்கி வருகிறேன்..”என்றவள்..

DO NOT COPY

அடுத்த 10 நிமிடத்தில் சுடிதாரை மாட்டிக் கொண்டு ஸ்கூட்டியில் கிளம்பி விட்டாள்..

தான் செய்து வைத்த காரியம் உபயோகமில்லாமல் போய் விடும் போலவே என்று ஸ்ரீதர்... இரண்டு நாட்களாக ஷெட்டை விட்டு வெளியே எடுக்கப் படாத ஸ்கூட்டியைக் கண்டு புலம்பிய புலம்பல்.. தீரும் வேளை வந்து விட்டதை எண்ணி.. தன் அறைக்குள் இருந்த படியே.. சுஜிப்ரியா ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்டான்.

சீரான.. வேகத்தில்.. ஸ்கூட்டி சென்று கொண்டிருக்க... வழக்கம் போல்.. தனது எண்ணங்களின்.. அங்கங்களின் நாயகன்.. ஷ்யாம் பிரபுவை நினைத்துக் கொண்டே.. உதட்டில் உறைந்த சிரிப்புடன்.. வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த சுஜிப்ரியா... எதிரே வந்த அந்தப் பெரிய வாகனத்தைக் கண்டு.. வண்டியை பிரேக் போட முயல.. தன் முயற்சிக்கு.. எவ்வித பலனுமின்றிப் போகவே... என்ன செய்வதென்று புரியாமல்.. மூளை செயலிழந்த நேரத்தில்... “ஷ்யாம்...”என்ற கூவலுடன்... கண்களை இறுக மூடியவள்... எதிலோ மோதிக் கீழே விழ.. செத்து விட்டோம் என்ற பயத்திலேயே மயங்கிச் சரிந்தாள் சுஜிப்ரியா.

சுஜி சென்ற சில நிமிடங்களில்... அலுவலகத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த ஷ்யாமை மொபைல் அழைக்க.. புதிய எண்ணாக இருப்பதைக் கண்டு ஹலோ என்றவன்... எதிர் முனையில் பேசியவர் சொன்ன சேதியைக் கேட்டு... கையிலிருந்த செல்ஃபோனை நழுவ விட்டான்...

மூளை மரத்துப் போய்... சில நிமிடங்கள்.. செயலற்று நின்று விட்டவன்.. கீழே விழுந்து கிடந்த செல்ஃபோனைக் கூட எடுக்க மறந்து ஓடினான்.. அலுவலகத்தில் வேலை செய்வோர் அனைவரும் அவன் வேகத்துடன் ஓடுவதை வினோதமாகப் பார்க்க.. அது எதையும் கவனிக்காமல்.. உணராமல் ஓடிச் சென்றான்.. அவன் மனம் முழுதும்... நிறைந்திருந்திருந்தது.... விடாமல் கதறியது...ம்சுஜூ.. சுஜூ.. என்கிற.. மனைவியின் பெயரைத் தான்...

சுஜிப்ரியாவுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும்... அவள் சுகம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும்.. யாரோ தெரிவிக்க.. என்ன நடந்ததென்று மேலே விசாரிக்கக் கூடத் தோன்றாமல்.. தன் ஆருயிர் மனைவியைத் தேடிப் புறப்பட்டு விட்டான்.

“சுஜூ... உனக்கு எதுவும் ஆகாது... நான் இருக்கிறேன்.. உனக்கு எதுவும் நடப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.. சுஜூ.. ஐ நீட் யூ..” என்று தன்னை மறந்து வாய் விட்டுக் கதறியவனுக்குக் கண்ணீர் சாலையை மறைக்க... அவளை இப்போதே பார்த்துக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றிருந்தது.. முழு

வேகத்துடன் காரைச் செலுத்தி... மருத்துவமனையின் முன்பு நிறுத்தியவன்.. சாவியை எடுக்கக் கூட மறந்து.. காரைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினான்..

ரிஷப்சனில் அமர்ந்திருந்த பெண்ணிடம்.. "சுஜி... சுஜிப்ரியா..."என்றவனுக்கு மேலே வார்த்தைகள் வராமல் போக.. அந்தப் பெண்.. "அந்த அறைக்குச் செல்லுங்கள்.."என்று எதிரேயிருந்த அறையைக் காட்ட.. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு... அறையை நோக்கிச் சென்றான்..

மருத்துவமனைக்கே சொந்தமான.. அந்தப் பச்சை நிற கர்டைனை விலக்கி உள்ளே பார்த்தவன்.... அங்கே.. அந்த அறையில்... நீல நிறச் சுடிதாரில்.. கையில் ஒரு கட்டுடனும்... தலையில் சிறிய பிளாஸ்திரியுடனும்... தோற்றமளித்த சுஜிப்ரியா... பக்கத்து இருக்கையில் இருந்த சிறுமியிடம்.. "இது.. மிக்கி மௌஸ்... இது டொனால்ட் டக்... இது.. மை ஃபேவரட் பிங்க் டெட்டி..."என்று கூறி அந்தச் சிறுமியின் முகம் மலர்ந்து சிரிப்பதைக் கண்டு புன்னகைத்துக் கொண்டிருந்தாள்..

ஏதேதோ.. பேராபத்தை.. பெரிய இடியைச் சந்திக்கப் போவதாக.. கற்பனை செய்து கொண்டு.. மனம் முழுக்க சஞ்சலத்துடன்.. முழு வேகத்துடன் வண்டியைச் செலுத்திக் கொண்டு வந்தவன்... காரை ஓட்டிக் கொண்டு வந்த 30 நிமிடமும்.. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு.. சுஜூ..சுஜூ என்று உருப்போட்ட படி.. தன்னில் பாதியை.. தன் செல்வத்தை.. தன் உயிரோடு நிறைந்து விட்டவளைக் காண வந்த ஷ்யாம்.. அவள் எந்த வித சேதமுமின்றி.. முழுதாக.. இருப்பதைக் கண்டு.. மகிழ்ச்சி ஊற்று பெருகியது....

அது வரை.. பயத்தில் கை,கால்கள் நடுங்கி.. தொண்டை வரை வந்து துடித்துக் கொண்டிருந்த இதயம்.. இந்த எல்லை கடந்த மகிழ்ச்சியில்... வேகமாகத் துடிக்க.. கால்கள் துவள.. அங்கேயிருந்த கட்டிலில் சாந்தவன்.. பெருகிய கண்ணீருடன்... "சு..சுஜூ.."என்றழைக்க.. சட்டெனத் திரும்பிப் பார்த்த சுஜியும்.. "ஷ்யாம்..."என்று ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள்..

எலும்பு நொறுங்கி விடுமளவிற்கு அவளை இறுக அணைத்தவன்.. "உ..உனக்கு ஒன்றும் ஆகவில்லை தானேடா.. நான் எப்படி பயந்து போனேன் தெரியுமா..?,இனி உன்னைப் பார்க்கவே முடியாதோ என்றெல்லாம் கற்பனை செய்து விட்டேன் கண்ணம்மா.. என்னால்.. என்னால் தாங்கவே முடியவில்லை புஜ்ஜூ..."என்று அவளைத் தன்னுள்ளே புதைத்து விடுபவன் போல் இறுக அணைக்க.. "எனக்கு ஒன்றுமாகவில்லை ஷ்யாம்.. சின்ன காயங்கள் தான்.. நான் நன்றாக இருக்கிறேன்.. ரிலாக்ஸ் ஷ்யாம்.."என்று அவன் முதுகைத் தடவிக் கொடுத்த சுஜிக்கும் கண்கள் நனைந்து தான் போயிருந்தது,...

நினைவிழந்து மயங்கிய போது.. அவள் நினைத்ததும் இது தானே! இனி தன் உயிருக்கு உயிரான.. உள்ளத்தில் நிறைந்து விட்ட.. தன் கண்ணான காதலனைக் காண முடியாமல் போய் விடுமே என்று தானே அவளும் பயந்தது...! அதே வார்த்தைகளை ஷ்யாமும் உச்சரிக்கவும் கண்ணீர் பெருகி விட்டது அவளுக்கு... எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியம்..?, யார் செய்த தவம்...?, இப்படியொரு மணாளன் எனக்கு வாய்த்திருக்கிறான்... என்று அவள் பெருமிதப் பட்டுக் கொண்டிருந்த வேளையில்..

அவளைத் தன்னிடமிருந்து நிமிர்த்திய ஷ்யாம்... அவளது நெற்றிக் காயத்தை வருடி... கையில் பட்ட காயத்தையும் நோக்கினான்.. அவன் பற்றியதும் எரியத் தொடங்கிய காயம்.. எரிச்சலைத் தர.. ஆ! என்று முகம் சுளித்தவளை அவசரமாக விடுவித்தவன்.. “ரொம்பவும் வலிக்கிறதா புஜ்ஜூ..?”என்று வினவ.. இல்லையென்பது போல் தலையாட்டிவளை அருகிலிழுத்து அணைத்துக் கொண்டவன்..

பால் மணம் மாறாத பச்சைக் குழந்தை என்பார்களே! அதைப் போல் தீய எண்ணங்களற்ற.. உன்னதமானவள் இவள்... தன் காயத்தைப் பார்த்து ஊதிக் கொண்டிருந்தவளைக் கண்டு... நெஞ்சில் வலித்தது அவனுக்கு... அவளது இந்த சிறு பிள்ளைத் தனமான செய்கைகளே... அவனுக்கு இரக்கத்தை ஏற்படுத்த.. தன் தோளோடு சேர்த்தணைத்தான்..

“சீக்கிரம் சரியாகி விடும் டா புஜ்ஜூ...”என்று அவள் கூந்தலை வருடி முத்தமிட்டான்.. மனைவி மறுபடியும் முழுதாகக் கிடைத்ததே அவனுக்கு.. நிம்மதியாக இருந்தது.. இஷ்ட தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டு வந்து சேர்ந்தவனுக்கு.. அவளது சேதமற்றத் தோற்றமே.. எல்லையில்லா நிம்மதியைக் கொடுத்தது..

ஒரு நிமிடம் கூட.. இனி அவளை விட்டுப் பிரியக் கூடாதென்று வேகம் பிறக்க... தன் கையுடன் கோர்த்திருந்த அவள் கைகளை அவன் பிரிக்கவேயில்லை.... கண்ணீரைச் சிந்திய கண்கள்.. இமைக்கவும் மறந்து அவளை நோக்கியபடியே இருக்க..

“சார்..”என்ற அழைப்பைக் கேட்டுச் சத்தம் வந்த இடத்தை நோக்கித் திரும்பினான் ஷ்யாம்.. “நீங்கள் தானே மிஸ்டர்.ஷ்யாம் பிரபு... நான் அஷ்வத்..”என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான் அவன்.. “ஹலோ..”என்று குழம்பிய பார்வையைச் செலுத்தியபடி கூறிய ஷ்யாமிடம்.. “நான் தான் உங்கள் மனைவியை இந்த மருத்துவமனையில் அட்மிட் செய்தேன்.. உங்களுக்கு ஃபோனில் தகவல் தெரிவித்தேனே..?”என்று அவன் கூற..

DO NOT COPY

“சாரி.. சாரி அஷ்வத்.. எனக்கிருந்த டென்ஷனில்.. உங்கள் பெயரைக் கூட நான் சரியாகக் கேட்கவில்லை..”என்று மன்னிப்புக் கோரியவனிடம் சிரித்தவன்.. “நீங்கள் நான் பேசியதைக் கூட முழுதாகக் கேட்கவில்லை.. இந்த நிலையில் என் பேரை கவனிக்காமல் போனதில் ஆச்சரியமேதும் இல்லை தான்.. பயப்படும் படியாக ஏதுமில்லையென்று நான் கூறியதை நீங்கள் கேட்கவேயில்லை.. அதன் பின் நிறைய முறை முயற்சி செய்து பார்த்தேன்.. ஃபோன் எடுக்கப் படவில்லை..”என்று கூற..

பாக்கெட்டுக்குள் செல்லைத் தேடியவன்.. இல்லாததைக் கண்டு.. “அங்கேயே விட்டு விட்டேன் போலும்.. சாரி அஷ்வத்..”என்றவன் தொடர்ந்து.. “எனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை அஷ்வத்... என் மனைவிக்கு விபத்து என்றதும்.. நான் அடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை.. அவளைக் காணும் வரை கடந்த 1 மணி நேரமும் என் உயிர் என்னிடத்தில் இல்லை,.. உங்களை என் ஆயுள் வரை மறக்க மாட்டேன்..”என்று உணர்ச்சி மிக்கக் கூறியவனிடம் புன்னகைத்து..

“பிரபு சார்.. நீங்கள் இத்தனை பெரிய நன்றியைத் தெரிவிக்கும் அளவிற்கு.. நான் பெரிய காரியமெதுவும் செய்து விடவில்லை.. கொஞ்சம் தைரியமானவராக இருந்திருந்தால்.. தானே தெளிந்து எழுந்திருப்பார்.. உங்கள் மனைவி கொஞ்சம் பயந்த சுபாவம் போலும்.. அதனால் தான் வேகமாகக் கீழே விழுந்ததும் மயங்கி விட்டார்...என்றவனிடம் “என்ன நடந்தது..?”என்று வினவினான் ஷ்யாம்..

“இப்போதேனும் உங்களுக்குக் கேட்கத் தோன்றியதே.. மனைவியைக் கண்டு விட்ட சந்தோசத்தில் அனைத்தையும் மறந்து விட்டீர்கள்..”என்று கேலி செய்தவன் தொடர்ந்து.. “எதிரே வந்த லாரியைக் கண்டதும் பிரேக் பிடிக்க முயன்றிருக்கிறார்.. அது முடியாமல் போகவே... தடுமாறி விழுந்து விட்டார்.. நல்ல வேளை லாரி ஓட்டி வந்தவன்.. இவர் தடுமாறுவதைக் கண்டு சரியான நேரத்தில் பிரேக் அடித்து விட்டான்.. விழுந்த வேகத்தில்.. மணல் திட்டின் மீது மோத.. பயத்தில் மயக்கமடைந்து விட்டார்.. லேசான காயங்கள் தான்.. சுதாரித்துத் திரும்பி மணல் மேட்டின் மீது வண்டியை விட்டிருந்தால் இந்தக் காயங்களும் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம்....”என்றவனை இடை மறித்து..

“நான்.. நான் பிரேக் பிடிக்க எவ்வளவோ முயன்றேன் ஷ்யாம்..முடியவில்லை.. திடீரென்று என் வண்டிக்கு என்னவாகியதோ தெரியவில்லை...”என்று குழம்பிய குரலில் கூற.. “ப்ரியா மேடம்.. வண்டியை எடுக்கும் முன் பிரேக் வயர் அனைத்தும் சரியாக வேலை பார்க்கிறதா என்று நீங்கள் செக் செய்ய வேண்டாமா..?, உங்கள் பிரேக் வயர் அறுந்த நிலையில் இருக்கிறது..”என்று அவன் கூற..

DO NOT COPY

“பிரேக் வயர் அறுந்திருந்ததா..?, இரண்டு நாட்களுக்கு முன்பு தானே சர்வீசிற்குக் கொடுத்திருந்தேன்..., அனைத்தையும் சோதித்து தானே கொடுத்திருப்பார்கள்..?, எப்படி இது நடந்தது..?”என்றவளிடம்.. “நீ கவனக் குறைவாக இருந்து விட்டு... அனைவரையும் குறை கூறாதே சுஜூ..”என்று கோபப் பட்டவன்.. “இங்கேயே இரு.. நான் பில் செட்டில் செய்து விட்டு வருகிறேன்..எனக் கூறி அஷ்வத்துடன் நடக்க.. “அது எப்படி அறுந்து போகும்..” என்று தன் மூளையைக் கசக்கினாள் சுஜூ...

தன்னுடன் நடப்பவனை தயக்கத்துடன் ஏறிட்ட அஷ்வத் “சார்.. நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.. விபத்து ஆன இடத்திலிருந்து வண்டியை எடுத்து வர ஏற்பாடு செய்தது நான் தான்.. என் மெக்கானிக் கூறிய விசயத்தை தான் நான் கூறுகிறேன்.. உங்கள் மனைவியின் வண்டியில்.. பிரேக் வயர் தானாக அறுந்தது போல் தெரியவில்லை.. யாரோ வேண்டுமென்றே கட் செய்ததைப் போல் தெரிகிறது... எதற்கும்.. அவரை நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்வது நல்லது..”

“நீங்கள் நகரின் பெரிய புள்ளியென்று தெரியும்.. யாரேனும்.. வேண்டுமென்றே கூட இதைச் செய்திருக்கலாம்.. விசாரித்துக் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருங்கள்..”எனக் கூற.. இதைச் சற்றும் எதிர்பார்த்திராத ஷ்யாம்.. திகைத்துப் பின் யோசனையில் ஆழ்ந்தான்..

அதன்பின் சுஜியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தவன்.. அவளை வண்டியிலிருந்து இறங்கியதும்.. “பார்த்து.. பார்த்து சுஜூ....என்று அவள் கை பற்றி.. மெல்ல அழைத்து வந்தான்.. பெரிதாக ஏதேனும் நடக்குமென்று எதிர்பார்த்து பரபரப்புடன் காத்திருந்த ஸ்ரீதருக்கு இந்த முறையும் ஏமாற்றமே கிடைக்க.. ஷ்யாமின் தோள் வளைவில் முகம் பதித்து நடந்து வந்தவளைக் கண்டு அவன் முகம் கருத்துச் சிறுத்துப் போனது...

அவனது முக மாற்றங்களைக் கண்டு ஷ்யாம் “ஸ்ரீதர்...”என விளிக்க.. சட்டெனச் சுதாரித்துக் கொண்டவன்.. “எ.. என்னவாயிற்று அண்ணா...?, என்ன காயம் பட்டிருக்கிறது..?”என்று பதறியது போல் நடித்தான்.. “வண்டியிலிருந்து கீழே விழுந்து விட்டாள்...”என்று எரிச்சலுடன் மொழிந்தவன்.. “அம்மாவைக் கூப்பிடு..”என்றபடியே உள்ளே நுழைந்தான்..

அதற்குள் வெளியே வந்து இவர்களைக் கண்டு விட்ட சீதாவும்..”சுஜி என்னவாயிற்று..?”என்று பதறி அருகே வர... “ஒன்றுமில்லையம்மா.. சிறிய காயம் தான்.. பதறாதீர்கள்.. “என்று ஷ்யாம் சமாதானப் படுத்திக் கொண்டிருக்க... இந்த முறையும் அவள் தப்பித்து விட்டதைக் கண்டு சினம் பொங்கியது ஸ்ரீதருக்கு.

DO NOT COPY




Nindran kaathalai enni kalikkindren - Nivetha

# அத்தியாயம் – 25



**தீர்த்த கரையினிலே – தெற்கு மூலையில்**

**செண்பகத் தோட்டத்திலே**

**பார்த்திருந்தால் வருவேன் – வெண்ணிலாவிலே**

**பாங்கியோடு என்று சொன்னாய்**

**வார்த்தை தவறிவிட்டாய் – அடி கண்ணம்மா**

**மார்பு துடிக்குதடி...**

**பார்த்த இடத்தில் எல்லாம் உன்னைப் போல்**

**பாவை தெரியுதடி...!**

**க**ட்டிலில் அமைதியாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மனைவியைக் கண்டு யோசனையுடன் அமர்ந்திருந்தான் ஷ்யாம் பிரபு. கையில் கட்டுடன் வந்திறங்கியவளைக் கண்டு வீட்டினர் அனைவரும் பதற.. ஒருவாறு சமாதானப் படுத்தி விட்டு... சுஜியை அன்னையின் பாதுகாப்பிலேயே விட்டு விட்டான். எப்படி நடந்ததென்று ஆயிரம் கேள்விகள் அவர்களிடமிருந்து எழத் தான் செய்தன.. பிரேக் வயர் அறுந்து போனதால் அவள் தடுமாறி விழுந்து விட்டதாகக் கூறிச் சமாளித்தான். ஏனோ அவனுக்கு அஷ்வத் கூறிய உண்மைகளைச் சொல்லி வீட்டினரை பயமுறுத்துவதில் விருப்பமில்லை.

தீர விசாரித்து உண்மையைக் கண்டறிந்த பின் சொல்லிக் கொள்ளலாமென்று அவன் மனைவியிடம் கூடக் கூறவில்லை. அந்தோ பரிதாபம்! உண்மையைச் சொல்லி அனைவரிடமும் எச்சரித்திருந்தால்.. சுஜியைத் தனியாக வெளியே அனுப்பக் கூடச் சம்மதித்திருக்க மாட்டார்கள்.. அவளும் பின்னாளில் நடக்கப் போகும் அந்தப் பேராபத்திலிருந்து தப்பித்திருப்பாள்.

DO NOT COPY

சுஜியின் பெற்றோரிடம் அவளுக்கு விபத்து ஏற்பட்டிருக்கும் விவரத்தைத் தெரிவித்து அவர்களை பீதி அடையச் செய்ய வேண்டாமென்று இருவரும் முடிவு செய்திருக்க.. அண்ணி உள்ளே நுழைந்ததும் முதல் காரியமாக சக்தியை அழைத்து அனைத்தையும் கொட்டி விட்டாள் அனு.. "எதற்காக கூறினாய் அனு?" என்று ஷ்யாமும்,சுஜியும் திட்டியதை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவேயில்லை.. "என்னிடம் கூற வேண்டாமென்று சொன்னாயா..?"எனக் கூறி சக்தி அவளைப் பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டான்.

அஷ்வத் கூறிய உண்மையைக் கேட்டு குழம்பிப் போயிருந்த ஷ்யாம்.. வீட்டிற்கு வந்திறங்கிய சுஜியின் வண்டியை.. வேறு ஒரு மெக்கானிக்கிடம் கூறி விசாரித்துப் பார்த்தான்.. அவனும் வேண்டுமென்றே யாரோ அறுத்தது போலத் தான் இருக்கிறதென்று கூறி விட... ஏற்கனவே சர்வீஸ் செய்திருந்த மெக்கானிக் ஷாப்பிற்குச் சென்று விசாரித்தான்.. அவனோ "வாய்ப்பே இல்லை சார்.. டெஸ்ட் டிரைவ் செய்து விட்டுத் தானே வாடிக்கையாளர்கள் வாங்கிச் செல்கிறார்கள்.. உங்கள் தம்பி கூட ஓட்டிப் பார்த்து விட்டுத் தான் வாங்கிச் சென்றார்.. தவறு நடந்திருக்க வாய்ப்பேயில்லை.. வேண்டுமானால் உங்கள் தம்பியிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.."என்று சூடம் அடித்து சத்தியம் செய்யாத குறையாகத் தெளிவாக விளக்கி விட்டான்.

வேறு யார் இதைச் செய்திருப்பார்கள் என்று ஷ்யாமினால் யூகிக்க முடியவில்லை.. வீட்டுக் காவலைத் தாண்டி அன்னியர் எவரும் வீட்டுக்குள் புகுவதற்கு வாய்ப்பேயில்லை.. வாசல் காவலுக்கு வேலை பார்ப்பவர்கள் பரம்பரை பரம்பரையாக இங்கே பணி புரிகின்றனர்.. நிச்சயம் அவர்களைச் சந்தேகப் பட முடியாது.. அப்படியிருந்தும் வேலுவையும்,முத்துவையும் அழைத்து விசாரித்துப் பார்த்தான்.. அறிமுகமற்றோர் யாரும் வீட்டிற்கு வரவில்லையென்று கூறி விட்டனர்.

வெளியே இருந்து வந்து யாரும் இதைச் செய்யவில்லையென்றால்.. வீட்டில் இருப்போர் எவரேனும் செய்திருக்க வேண்டும்.. இப்படி ஒரு காரியத்தைச் செய்யும் அளவிற்குத் தன் வீட்டில் எவருக்குச் சின்னத்தனம் இருக்கிறது.. என்றெண்ணிய ஷ்யாமினால் மேலே யோசிக்க முடியவில்லை.. எவ்வளவு யோசித்தாலும் கடைசியில் குழப்பமே மிஞ்சியது..

தன் போக்கில் சிந்தித்த படியே அமர்ந்திருந்தவன்.. மனைவியிடம் அசைவு தெரிய வேகமாக அவளருகே சென்றான். தூக்கத்தில் புரண்டவள்.. காயம் பட்டிருந்த கையை அழுத்தி விட.. வலியில் முகம் சுளித்தபடியே கண் விழித்தாள்.. அவளது வலியை உணர்ந்து அவளருகே வந்து சுளித்த புருவங்களை நீவியவன்.. "சுஜூ..."என்றழைக்க...

DO NOT COPY

அவனது அழைப்பைக் கேட்டு.. வலியை மறந்து புன்னகைத்தவள்.. அவனை நோக்கி இரு கைகளையும் நீட்டினாள்.. சிரித்தபடியே அவளருகே வந்து அவளை அள்ளித் தன் மார்பில் சாய்த்துக் கொண்டவன்.. "என்னடா புஜ்ஜூ..?"என்று வினவினான்..

அவன் மார்பில் தலை சாய்த்தவள்.. அவனை அணைத்து நெஞ்சில் அழுத்தமாக முத்தமிட.. மனைவியின் செய்கையைக் கண்டு மென்மையாகச் சிரித்தவன்... அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டுத் தன் பதிலைத் தெரிவித்தான்.. அவனை நிமிர்ந்து நோக்கியவள்.. "ம்,இது மட்டும் போதாது.. இங்கே கொடுக்க வேண்டும்.."என்று அவனைப் போலவே கூறித் தன் இதழ்களைக் காட்டிக் குறும்பாகச் சிரித்தாள்.

கண்களில் காதலுடன் அவளை நோக்கியவன்... அவள் முகம் வருடி... இதழ்களில் முத்தமிட்டான்.. அன்று காலை பட்ட துன்பங்கள் அனைத்தும் கொடுத்த வேதனை.. மனைவியை விட்டுப் பிரிந்து விடக் கூடாதென்பதில் இருந்த அன்பு,காதல்.. அவளைக் கண்டதும் உள்ளே எழுந்த மகிழ்ச்சி.. அனைத்தையும் அந்த ஒரு முத்தத்தில் அவளுக்கு உணர்த்தினான்..

அவனது முத்தத்திலிருந்த அனைத்து உணர்ச்சிகளையும் கண்டு நெகிழ்ந்து அவனிடம் சரணடைந்தாள் அவனது அழகு மனைவி...

தங்களது நேசத்தை பொட்டில் அறைந்தார் போல் ஒரு மூடனுக்குப் புரிய வைத்துக் கொண்டிருப்பதை அறியாத அந்தக் காதல் ஜோடி... காவியம் படைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்க.. அங்கே தன் அறைக்குள் ஸ்ரீதரோ.. தன் திட்டங்கள் அனைத்தும் தோல்வியைத் தழுவி விட்டதை நினைத்துக் குமுறிக் கொண்டிருந்தான்.

இன்னும் என்ன தான் செய்வது..?, தனக்கு எதைச் செய்யவும் வாய்ப்பளிக்காமல் கடவுள் அவர்களின் பக்கம் சென்று உதவி புரிந்து கொண்டே இருந்தால்.. என் நிலைமை என்ன ஆவது..?, ஷ்யாமையும்,சுஜியையும் பிரித்து அவர்களை நரகத்திற்குத் தள்ள நினைக்கும் தன் எண்ணம் நிறைவேறாதா..?

மனைவியின் கண்ணீரைக் கண்டால்.. உயிரையே விட்டு விடுவான் போலும் அவன்! அவளுக்கு ஒன்று என்றால் இவன் பதறி விடுகிறான்.. அவளும் இவனுக்கு இணையாகப் பாசத்தைப் பொழிகிறாள்.. இந்த ஜோடிப் புறாக்களைப் பிரிக்க என்ன தான் வழி..?, ஒருவரின் மீது மற்றொருவர் வைத்திருக்கும் நம்பிக்கையை,காதலை எப்படித் தான் அழிப்பது?, சுவற்றில் முட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு..


DO NOT COPY

அடுத்த முறை எடுத்து வைக்கும் அடியில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு விட்டத்தை வெறித்தபடி யோசனையில் ஆழ்ந்தான் அவன். அவனை அதிகம் யோசிக்க விடாமல்.. ஆண்டவனே அவனுக்கு விரைவிலேயே அடுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்..

அடுத்த ஒரு வாரத்தில் சுஜியின் கைக்காயம் குணமாகி விட.. இயல்பாக நடமாட ஆரம்பித்து விட்டாள்.. ஷ்யாமின் முறைப்பிற்கு பயந்து ஸ்கூட்டியைத் தொடாமல் திரிந்தவள்.. அவன் சென்றதும் வீட்டைச் சுற்றி ஓட்டிக் கொண்டிருந்தாள்... அன்னையின் மூலம் ஷ்யாமின் காதுகளுக்கு இந்த விசயம் எட்டி விட... அவள் அவ்வாறு அலைந்து கொண்டிருந்த வேளையில்.. ஒரு முறை வீட்டிற்கு வந்து விட்டான்..

"ஒரே ஒரு ரௌண்ட் அத்தை.. ப்ளீஸ்..."என்றபடியே வண்டியைத் திருப்பியவள்.. எதிரே ஷ்யாம் நிற்பதைக் கண்டு திகைத்து.. வண்டியிலிருந்து கீழே இறங்கினாள்.. தலை குனிந்த படியும்,அவன் பார்க்காத போது அவனைப் பார்த்துக் கொண்டும்... துப்பட்டாவின் நுனியைக் கசக்கியபடி நின்றிருந்தவளை கோபமாக முறைத்தவன்..

"தினமும் நான் சென்ற பின் இதைத் தான் செய்து கொண்டிருக்கிறாயா..?"என்று வினவ.. இல்லையென்று வேகமாகத் தலையாட்டியவள் பின் மெல்ல.. ஆமாமென்று தலையசைத்தாள்.. கீழே கிடந்த குச்சியைக் கையில் எடுத்துக் கொண்டவன்.. "உன்னை..."என்று அவளருகே வர.. "வேண்டாம் ஷ்யாம்.. அய்யோ வேண்டாம்.."என்றபடி அவனது அடியிலிருந்து தப்பித்து ஓடியவள்..

கீழே கிடந்த மற்றொரு குச்சியைக் கையில் எடுத்துக் கொண்டு அவனுடன் சண்டையிடத் தொடங்கினாள்.. இருவரும் எம்ஜிஆர்,பி.எஸ்.வீரப்பாவைப் போல் சண்டையிட்டுக் கொள்ள.. அப்போது அங்கே வந்து சேர்ந்த சீதாவும்,அனுவும் சுவாரசியமாக இவர்களிருவரின் சண்டையை ரசிக்கத் தொடங்கினர்..

கடைசியில் சோர்ந்து குச்சியைக் கீழே போட்ட ஷ்யாம்.. "ஏய்.. என்ன வாள் சண்டை ஏதும் கற்று வைத்திருக்கிறாயா..?"என்று வினவ.. "நான் கற்றுக் கொள்ளாத கலையே இல்லை இந்த உலகத்தில்!"என்று சட்டைக் காலரைத் தூக்கிப் பெருமைப் பட்டுக் கொண்டாள்.

"இதெல்லாம் நன்றாகப் பேசு.. "என்று சலித்துக் கொண்டவன்.. "விளையாட்டு இல்லை சுஜூ.. ஜாக்கிரதையாக நடந்து கொள் என்று தான் கூறுகிறேன்.. சிறிது நாளைக்கு வண்டியைத் தொடாமல் இருந்தால் தான் என்ன..?"என்று வினவ.. மறுப்பாகத் தலையசைத்து "முடியாது.. முடியாது..., அதை மட்டும்

DO NOT COPY

செய்யச் சொல்லாதீர்கள்..என்னால் நிச்சயம் முடியாது..”என்று கூறி விட.. “என்னவோ செய்..”என்று விட்டுச் சென்று விட்டான்.

அவன் சென்றதும் சீதாவும்,அனுவும் பலமாகக் கை தட்டினர்.. “என்னே ஒரு சண்டை..! என்னே ஒரு போட்டி...! வாவ் அண்ணி.. நீங்கள் ஒரு சகலகலாவள்ளி!”என்று அனு சிரிக்க.. “எவ்வளவு திறமை வாய்ந்தவள் என் மருமகள்..”எனக் கூறி சீதாவும் முறுவலித்தார்.

கணவனுடன் சண்டையிட்டு வண்டி ஓட்டுவதற்கு அனுமதி வாங்கி விட்ட சுஜி வெற்றிப் புன்னகையுடன் துள்ளி ஓடி வீட்டுக்குள் நுழைய.. அவளது செல்ஃபோன் அவளை அழைத்தது... “ஹலோ..”என்றவளுக்குப் பதிலாக.. “சுஜி...” என்ற ஆனந்தியின் குரல் ஒலித்தது.. “ஏய்.. தீ...”என்று கூவியவள்.. உடனே முகத்தை மாற்றி...

“ஏய்.. என்னடி.. என்னவோ பாசம் இருப்பவள் போல் சுஜி என்கிறாய்.. கல்யாணமாகி இத்தனை நாட்களில் நான் எத்தனை மெயில் அனுப்பியிருப்பேன்..?, நீ யுஎஸ் சென்று விட்டதாகக் கூறினாரே உன் அப்பா.., எங்கே இருக்கிறாய்..?”என்று தொடர்ச்சியாகக் கேள்விகளைத் தொடுத்தவளிடம்..

“நான் இந்தியா வந்து 2 நாட்கள் ஆகி விட்டதடி.. அவருக்கு 1 மாதம் விடுமுறை.. அதனால் தான் வந்திருக்கிறோம்... நீ எப்படியிருக்கிறாய்?”என்று விசாரித்தவளிடம்.. மேலும் சிறிது நேரம் உரையாடினாள்.. “சுஜி.. நம்முடன் படித்த ராம்குமாருக்குத் திருமணமாம்... என் வீட்டிற்கு வந்து பத்திரிக்கை வைத்திருக்கிறான்.. உன் வீட்டு முகவரி கேட்டானாம், அப்பா கொடுத்திருக்கிறாரடி.. அனேகமாக இன்று அல்லது நாளை உன் வீட்டிற்கு வருவானென்று நினைக்கிறேன்...”எனக் கூறினாள்.

“ஹே.. அந்த ஒணாண்டிப் புலவனுக்குத் திருமணமா... ஹா ஹா..”என்று நகைத்தவளிடம் “ஆமாமடி.. அவனை நீ பாரபட்சம் பார்க்காமல் ஓட்டி எடுப்பாயே பாவம் அவன்.. இப்போதும் உன்னை நியாபகம் வைத்து அழைக்கிறான் பார்..”என்றாள் ஆனந்தி.. “சரி டி.. அவன் வந்த பின் நான் உனக்கு அழைக்கிறேன்.. டாட்டா”என்று முடித்தாள்..

மாலை வீட்டிற்கு வந்த ஷ்யாமிடமும் அவள் விசயத்தைத் தெரிவித்து கல்லூரியில் அவள் செய்யும் கலாட்டாக்களையும்,அதற்கு அவன் முழிப்பதையும் கூறிக் கொண்டிருந்தாள்.. அவள் கூறிக் கொண்டிருந்த வேளையில் அவளது நண்பனும் உள்ளே நுழைந்தான்..

DO NOT COPY

“அண்ணி.. உங்களைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்...”என்றபடியே சுஜியின் அறைக்குள் நுழைந்த அனு ஃபோன் பேசியபடியே பால்கனிக்கு நடந்து விட்டாள்.. “நேரில் கொஞ்சுவது போதாதென்று.. 24 மணி நேரமும் ஃபோனில் உரையாடல்கள் வேறு..”என்று கேலி செய்த ஷ்யாமை சட்டை செய்யாமல் அவள் நகர்ந்து விட..

“ஷ்யாம்.. அந்த ஓணாண்டி தான் போலும்.. வாருங்கள் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்..”எனக் கூறி அவனையும் அழைத்துச் சென்றாள். ஹாலில் அமர்ந்து ராஜாராமனுடன் உரையாடிக் கொண்டிருந்தான் ராம்குமார். “ஹே ஓணாண்டிப் புலவா.., எப்படியிருக்கிறாய்..?”என்று உற்சாகத்துடன் கூவியவளிடம் அவனும் பதிலுக்கு முறுவலித்து “வாம்மா.. காரைக்கால் அம்மையாரே!, என்னை நலம் விசாரிப்பது இருக்கட்டும்.. நீ ஏன் உன் திருமணத்திற்கு அழைக்கவில்லை..?,நம் வகுப்பில் படித்த அனைவரின் திருமணங்களுக்கும் சென்று நீ அவர்களைக் கேலி செய்து உயிரை வாங்குவாயே!, உன் கல்யாணத்திற்கு ஏன் அழைக்கவில்லை..?,”என்று வினவினான் அவன்.

“திருமணம் அவசரமாக நடைபெற்றது.. அதனால் தான் அனைவரையும் அழைக்க முடியவில்லை.. மன்னித்துக் கொள்.. உனக்கு ஆள் சிக்கி விட்டதாமே..?, யாரந்தக் கள்ளி..?”என்று சிரிப்புடன் வினவியவளிடம்.. தன் செல்ஃபோனில் பதிவு செய்திருந்த புகைப் படத்தை எடுத்து நீட்டினான் ராம். “வாவ்!, உன் மூஞ்சிக்கு இப்படியொரு அழகான பெண்ணா..?, என்ன செய்வது?, தமிழகத்தில் அழகான ஆண்களுக்கு பஞ்சமாகிப் போனதால்.. உன்னைப் போல், இவரைப் போல்.. சுமாராக உள்ளவர்களுக்கெல்லாம் வாழ்க்கை அளிக்க வேண்டியதாயிருக்கிறது... “என்று சந்தடி சாக்கில் ஷ்யாமையும் வம்பு செய்ய...

“ஏய்....”என்று ஒருசேரக் குரல் கொடுத்தனர் இருவரும். “பார்த்தீர்களா சார்..?, உங்கள் மனைவி கூறுவதை..?, இவள் என்னை உங்களிடம் அறிமுகம் செய்து வைப்பாளென்று நான் காத்திருந்தால் அது இந்த ஜென்மத்தில் நடக்கப் போவதில்லை..”என்றவன் “நான் ராம்குமார் சார்.. உங்கள் பத்தினி கல்லூரியில் செய்த கொடுமைகளையெல்லாம் தனி ஆளாகச் சமாளித்தவன்..”எனக் கூறி முறுவலிக்க.. “சாரெல்லாம் வேண்டாமே ராம்குமார்.. ஷ்யாம் என்றே கூப்பிடுங்கள்..”என்று இயல்பாகக் கூறிய ஷ்யாம்.. அவனிடம் தன் உரையாடலைத் தொடர்ந்தான்.

“இந்த ஓணாண்டி.. எப்போதும் என்னுடன் படிப்பில் போட்டி போட்டுக் கொண்டே இருப்பான்.. ஆனால் நான் தான் எப்பவும் ஃபர்ஸ்ட்..”என்று பெருமையாகக் கூறியவளைக் கண்டு “இல்லை ஷ்யாம்.. பொய் கூறுகிறாள்.. நான் இவளை ஒரு முறை தோற்கடித்திருக்கிறேன்..”என்று ராம் கூற.. “எது?, நான் டைபாய்ட் காய்ச்சல் என்று 1 பரீட்சை எழுதாமல் இருந்தேனே..

DO NOT COPY

அப்போது தானே..?”எனக் கூறிச் சிரிக்க.. “ஆமாம்..”என்று அசடு வழிந்த படி தானும் சிரித்தான்..

இருவரையும் கண்டு சிரித்தபடி அமர்ந்திருந்த ஷ்யாம் “கல்யாணம் எங்கே வைத்திருக்கிறீர்கள் ராம்..?, திருமணமும் முடிந்ததும் பெண்ணையும் உங்களுடன் யு.கே அழைத்துச் சென்று விடுவதாகத் திட்டமா..?”என்று விசாரித்தான்.

மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட படியே வீட்டுக்குள் நுழைந்த ஸ்ரீதர்.. புதிதாக அமர்ந்திருந்தவனைக் கண்டு யாரென்று அன்னையிடம் விசாரித்தான். “ப்ரியாவின் கல்லூரித் தோழன் டா..”என்றபடி தட்டில் பலகாரத்தை எடுத்து வைத்துக் கொண்டு சமையலறையை விட்டு வெளியேறினார்.

“கல்லூரி நண்பனா..?”என்றபடி தாடையைத் தடவிய ஸ்ரீதருக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்ற.. அவர்களிருவரும் பேசிக் கொள்வதை உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கினான்...

“இருவரும் கண்டிப்பாக என் கல்யாணத்திற்கு வர வேண்டும்.. ஆனந்தியிடம் கூறியதைப் போல் ஊரைக் காரணம் காட்டி நீ தப்பிக்க முடியாது.. உள்ளூரில் தான் நடக்கிறது..”எனக் கூறி பத்திரிக்கையை நீட்டினான். “கண்டிப்பாக வருகிறோம்..”என்று முறுவலித்தபடி வாங்கிக் கொண்டனர் இருவரும்..

அவன் விடைபெற்றுச் சென்றபின் மாலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு நண்பர்களைக் காணச் சென்றான் ஸ்ரீதர்.. கையில் சிகரெட்டை ஊதித் தள்ளியபடி நெற்றியைத் தட்டிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தவனை “என்னடா...?, என்ன நடந்தது..?, மறுபடியும் ஏதேனும் பிரச்சனையா..?,”என்று வினவினான் நண்பன் குமார்.

“ஆமாம்.. 2 பிரச்சனையும் ஒரே இடத்தில் ஒற்றுமையாக என் கண் முன்னே நடமாடிக் கொண்டிருக்கும் போது என்னால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்..?, என் வாழ்வில் மிகப் பெரிய அவமானத்தை ஏற்படுத்திய இருவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண்கையில் எனக்கு எரிகிறதடா..”என்று முழு பலத்துடன் மேஜையைக் குத்தினான்.

“டேய்...”என்று பதறி அவன் கையைப் பற்றியவன்.. “மேஜையை உடைத்து விடாதேடா.. இதற்கு வேறு காசை அழுக வேண்டும்..”என்று தடுக்க.. “அடுத்தடுத்து நான் திட்டமிட்ட அனைத்தும் தோல்வியைத் தான் தழுவியிருக்கிறது.. என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை..”என்று கண்களைத் தேய்த்தவன்.. “அவளுடைய நண்பன் எனக் கூறிக் கொண்டு

புதிதாக ஒருவன் உள்ளே நுழைந்திருக்கிறான்.. அவனை வைத்து எதையேனும் சாதிக்கலாமென்று நினைத்தால்.. ஒரு வழியும் கிட்டவில்லை..”என்று கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டுத் தானும் யோசித்த குமார் பின் நிமிர்ந்து “டேய்.. உன் பழைய பாணியையே கையாள வேண்டியது தானே..?, உன் அண்ணி சுஜிப்ரியாவுடன் அவளது நண்பன் உடன் இருப்பதைப் போல் புகைப்படம் எடுத்து உன் அண்ணனுக்கு அனுப்பி வை.. புகைப் படத்தால் ஒன்று சேர்ந்தவர்கள்.. புகைப் படத்தாலேயே பிரியட்டும்..”என்று அவன் கூற..

கண்கள் பளிச்சிட நண்பனை நோக்கி முறுவலித்தவன்.. “இது நல்ல திட்டம் தான்.. சுஜிப்ரியாவின் மீது என் அண்ணன் வைத்திருக்கும் நம்பிக்கையை உடைப்பதற்கான நல்ல வாய்ப்பு.. ஆனால் அவர்களிருவரையும் எப்படி சந்திக்க வைப்பது..?”என்று வினவினான்.

“அது மிகவும் சுலபமான காரியம் தான் டா.. இருவரையும் ஒரே இடத்திற்கு வரவழைத்து.. இருவரும் சேர்ந்து இருப்பது போல்.. புகைப்படம் எடுத்து விடலாம்..”என்று நண்பன் தனது திட்டத்தை ஒப்புக் கொண்ட உற்சாகத்தில் மேலும் பல ஐடியாக்களை அள்ளி வழங்கினான் குமார்.

“அதுவும் சரி தான்.. நாளையே இதற்கு ஏற்பாடு செய்கிறேன்.. அவனது செல்ஃபோன் எண்ணை சுஜிப்ரியாவிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும்.. கடைசி முறை செய்ததைப் போல் நீயே அவர்களிருவரையும் சேர்த்து வைத்து புகைப்படம் எடுத்து விடு.., நாளையே இதைச் செய்தாக வேண்டும்..”என்று அவனை மேலும் எச்சரிக்கை செய்து விட்டு.. நண்பனிடம் விடை பெற்றுக் கிளம்பினான்.

மறு நாள் நண்பனுடன் திட்டமிட்டதை செயல் படுத்தும் முயற்சியில் முதல் கட்டமாக.. சுஜிப்ரியாவின் செல்ஃபோனிலிருந்து ராம்குமாரின் நம்பரைத் திருடினான் ஸ்ரீதர். அன்னையுடன் செல்போனில் உரையாடிக் கொண்டிருந்த சுஜிப்ரியா சாப்பாட்டு மேஜையில் அலைபேசியை வைத்து விட்டுச் சென்றது அவனுக்கு சாதமாகிப் போனது..

அடுத்து அரைமணி நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வந்தவன்.. பொது தொலைபேசியில் ராம்குமாரின் எண்ணிற்கு அழைத்து குரலை மாற்றி... பெண் குரலில்.. “நான் சுஜி பேசுகிறேன் ராம்.. உன்னிடம் ஒரு முக்கியமான விசயத்தைப் பற்றிப் பேச வேண்டும்.... உடனே பெசண்ட் நகர் பீச்சிற்கு வந்து விடு.. ப்ளீஸ்.. மிக மிக முக்கியமான விசயம்..”என்று எதிர்முனையில் அவனுக்குப் பேச வாய்ப்பளிக்காமல்.. தான் சொல்ல வந்ததை அவன் சொல்லி முடிக்க..

ஸ்ரீதர் எதிர்பார்த்தபடி அவனும் பதறி.. "நீ பதட்டப் படாதே சுஜி... நான் கண்டிப்பாக வருகிறேன்.."எனக் கூறி விட.. பதிலேதும் கூறாமல் தொலைபேசியைத் துண்டித்தவன்.. சுஜிக்கு ஃபோன் செய்து.. ராம் பேசுவதைப் போல்.. குரலை மாற்றி.. பெசண்ட் நகர் பீச்சுக்கு வருமாறு அழைத்தான். சுஜியும் சம்மதித்து விட.. மகிழ்ச்சியுடன் தன் நண்பனிடன் விவரத்தைத் தெரிவித்தான். "காலேஜில் நீ மிமிக்ரி செய்து வென்றது.. இப்போது நன்றாக உபயோகப் படுகிறது.."என்று கேலி செய்தான் குமார்.

அவசரமென்று ராம் கால் செய்ததால்.. என்னவாக இருக்கும் என்று பதறிய சுஜி வீட்டில் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல்.. தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு பீச்சிற்குப் புறப்பட்டு விட்டாள். அவள் வந்திறங்கிய சமயத்தில் அவளைத் தேடி அலைந்து கொண்டிருந்தான் ராம்குமார்.

"ஹே ராம்..."என்ற குரலைக் கேட்டுத் திரும்பியவன் "சுஜி.."என்றபடி வேகமாக அவளருகே வந்தான்.. "என்னடா.. என்னவாயிற்று..?, அப்படி என்ன முக்கியமான விசயம் பேச வேண்டும் என்னிடம்?, என்ன பிரச்சனை?"என்று சுஜி வினவ.. அவனோ குழம்பிய குரலில் "எனக்கென்ன பிரச்சனை.. நான் நன்றாகத் தான் இருக்கிறேன்.. உனக்கு ஏதோ பிரச்சனை என்று தானே நீ ஃபோனில் தெரிவித்தாய்..?, இப்போது என்னை விசாரித்தால் என்ன அர்த்தம்...? சுஜி இப்படி விளையாடுவதை நீ இன்னமும் செய்து கொண்டு தான் இருக்கிறாயா..?, எனக்கு எவ்வளவு வேலை இருக்கிறது தெரியுமா..?, என்ன சுஜி..?"என்று எரிச்சலுடன் வினவினான்.

அவன் கூறிய பதிலைக் கேட்டுத் திகைத்த சுஜி "முக்கியமான விசயம் பேச வேண்டுமென்று நீ தானேடா என்னை அழைத்தாய்..?,"என்றவளிடம்.. "நான் அழைத்தேனா..?, சுஜி என்ன விளையாடுகிறாயா..?, நீ தானே என்னை அழைத்தாய்..?,என்னவோ ஏதோ என்று பதறிப் போய் ஓடி வந்தால்.. என்னைக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாய்..?"என்று அவன் மேலும் கோபத்தில் பொறிந்தான்.

"இ..இல்லை டா.. நான் அழைக்கவில்லை.. யார் இப்படிச் செய்திருப்பார்கள்..?, நீ பேசுவது போல் என்னிடமும்,நான் பேசுவது போல் உன்னிடமும்.. யார் இதைச் செய்திருப்பார்கள்..?"என்று குழம்ப.. "நீயே விளையாடி விட்டு.. இப்போது நடிக்கிறாயா..?"என்றவன் தொடர்ந்து "சரி,வந்ததற்கு ஒரு ஜூஸேனும் குடித்து விட்டுச் செல்லலாம் வா.."என்றழைக்க..

தன் போக்கில் சிந்தனையில் ஈடுபட்டிருந்த சுஜி "இல்லைடா.. நீ குடித்து விட்டுச் செல்.. நான் வீட்டில் யாரிடமும் கூறாமல் வந்து விட்டேன்.. நான் செல்கிறேன்.."எனக் கூறி விடை பெற்று வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

DO NOT COPY

இருவரும் அருகருகே நின்றதையும்.. குழம்பிய முகங்களுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதையும் புகைப்படங்களாக எடுத்துக் கொண்ட குமார் அதை உடனே ஸ்ரீதருக்கும் அனுப்பி வைத்தான்..

அலுவலகத்தில் இருப்பு கொள்ளாமல் தவித்துக் கொண்டு.. நொடிக்கொருதரம் தன் அலைபேசியை பார்வையிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதர்.. நண்பன் அனுப்பிய புகைப்படங்களைக் கண்டு.. துள்ளாத குறையாக.. மகிழ்ச்சியடைந்தான்.. அலுவலகத்திலிருந்து கிளம்பி செல்ஃபோனிலிருந்ததை புகைப்படங்களாக மாற்றி கையில் வாங்கிக் கொண்டான்..

வீட்டிற்குச் சென்று தன் அறையில் போஸ்ட் கவரைத் தேடினான்.. சென்ற முறை அனுப்பியதைப் போல்.. அதே உறையில் இந்தப் புகைப்படங்களை வைத்து போஸ்ட் செய்து விட்டான்.. வீட்டில் யார் கையில் கிடைத்தாலும் சரி தான்.. ஒருவருக்குச் சந்தேகம் வந்து விட்டால்.. அதை வைத்தே மேலும் கதை கட்டி.. காரியத்தைச் சாதித்து விட வேண்டியது தான் என்று கறுவிக் கொண்டான்.

குழப்பத்தில் வீட்டினுள் நுழைந்த சுஜியோ.. தன் அறைக்குச் சென்று யோசனையில் ஆழ்ந்து விட்டாள்.. ராம் சென்றதும் தன் செல்லிற்கு வந்த எண்ணிற்கு அழைத்துப் பார்த்தாள். அது ஒரு பொது தொலைபேசி எண் என்று தெரிந்து கொண்ட பின் மேலும் குழப்பமாகி விட்டது.. யார் இதைச் செய்திருப்பார்கள்..?,என்று மண்டையைப் பிய்த்துக் கொண்ட சமயத்தில் ஷ்யாம் உள்ளே நுழைந்தான்.

“என்னடா புஜ்ஜூ.. நீ வெளியே சென்றிருப்பதாகக் கூறினாரே அம்மா..?, இங்கே உட்கார்ந்திருக்கிறாய்..?,என்னவாயிற்று..?”என்று வினவ.. அன்று நடந்ததை அப்படியே தெரிவித்தாள் சுஜி. “யார் இப்படி செய்தார்கள் என்றே புரியவில்லை ஷ்யாம்.. நான் அவனை அழைக்கவில்லை.. அவனும் என்னை அழைக்கவில்லை.. அந்த கால் வந்த எண்ணிற்கும் அழைத்துப் பார்த்தேன்.. அது ஒரு பப்ளிக் டெலிஃபோன் பூத்..”என்று கூற..

சில நாட்களாக நடந்து கொண்டிருக்கும் குளறுபடிக்குக் காரணம் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த ஷ்யாம்... இதைக் கேட்டதும் மேலும் அதிர்ந்தான்.. வேண்டுமென்றே பிரேக் வயரை அறுத்திருக்கிறான்.. இப்போது காரணமேயில்லாமல்.. சுஜியையும்,அவள் நண்பனையும் சந்திக்க வைத்திருக்கிறான்... யார் அவன்?, அவன் எதற்காக சுஜியின் வாழ்க்கையில் விளையாடுகிறான்..?, என்று குழம்பிய ஷ்யாம்.. பின்..சுஜியிடம்..

“என்ன சொல்கிறாய் சுஜூ... அந்த நம்பரைக் கொடு..”என்று வாங்கிக் கொண்டவன்.. “உன் நண்பனுக்கு அழைத்து அவனுக்கும் இதே நம்பரிலிருந்து

கால் வந்ததாவென்று விசாரி..”எனக் கூறி விட்டுத் தன் நண்பனுக்கு ஃபோன் செய்து இந்த எண்ணிற்குரிய இடத்தின் விலாசத்தை விசாரித்தான்.

அந்தப் பொதுத் தொலைபேசி நிலையத்தின் விலாசத்தை வாங்கிக் கொண்டவன்.. சுஜியின் புறம் திரும்பி “என்ன கூறினான் உன் நண்பன்...?, நம்பரை வாங்கினாயா..?,”என்று வினவ.. “அதே எண் தான் ஷ்யாம்.. ஒரே நம்பரிலிருந்து எங்களிருவருக்குமே அழைத்திருக்கிறான்..”என்று கூறினாள்.

“ஓ!”என்றபடி தாடையைத் தடவியவன்... யாராயிருக்கும் என்ற யோசனையில் ஆழ்ந்தான்.. மனைவியின் கலங்கிய முகம் வேறு வேதனையைக் கொடுக்க... “சுஜூ.. உன் தோழிகள் யாரேனும் விளையாடியிருப்பார்கள்.. நீ கவலைப் படாதே.. இதற்குப் போய் இவ்வளவு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்,..., ரிலாக்ஸ் சுஜூ...”என்று அவளைச் சமாதானப் படுத்திய ஷ்யாம் நாளை அந்த டெலிஃபோன் பூத்திற்குச் சென்று விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான்.

மறு நாள் காலை உணவு முடிந்து ஹால் சோபாவில் அமர்ந்தவன் அன்றைய தபால்கள் அனைத்தும் பிரிக்கப் படாமல் இருப்பதைக் கண்டுத் தானே அதைக் கையில் எடுத்தான். தினமும் அலுவலகம் செல்லும் பரபரப்பில் கடிதங்கள் எதையும் அவன் பிரிக்கவே மாட்டான். ராஜாராமன் தான் அனுவின் உதவியுடன் அனைத்தையும் பிரித்துப் படித்து பதிலையும் அனுப்பி வைப்பார்.

அன்று ஏதோ உந்துதலில் அவன் கடிதங்களைப் பிரித்துப் பார்வையிட.. சிகப்பு நிறத்திலிருந்த அந்த வித்தியாசமான கடித உறை அவனை ஈர்க்க.. வேகமாக அதைப் பிரித்துப் பார்த்தான்.. சுஜி நேற்று ராமைச் சந்தித்த புகைப்படங்கள் அனுப்பப் பட்டிருந்தன.. “டேமிட்...”என்றபடி கோபமாக எழுந்த ஷ்யாம்.. தன் அறைக்குச் சென்று குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினான்.

விசயம் வளர்ந்து விபரீதமானப் பாதையில் சென்று கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்குக் கோபம் பொங்கியது.. ஆனால்..ஆதாரம் ஏதும் கிடைக்காமல்.. யாரென்றும் தெரியாமல்.. இப்படி மண்டையைப் பிய்த்துக் கொள்ளும் தன் நிலையை நினைத்தால்.. அவனுக்கே ஆத்திரம் எழுந்தது.

என்ன தான் நடக்கிறது தன்னைச் சுற்றி?, இப்படியெல்லாம் புகைப்படங்களை அனுப்பி.. விளையாடிக் கொண்டிருக்கும் அந்தக் கயவன் யார்? அவனது நோக்கம் என்ன..?, சுஜிப்ரியாவைப் பழி வாங்குவதா..?, அல்லது அவளின் மூலமாகத் தன் நிம்மதியைக் குலைப்பதா..?, யார் இந்த முகம் தெரியாத எதிரி..?, அடுத்தடுத்து தொல்லைகளைக் கொடுத்து.. சிக்கல்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறான்..

DO NOT COPY

தன் கையில் கிடைத்த இப்புகைப் படங்கள்.. தந்தையின் கையில் சிக்கியிருந்தால் என்னவாகியிருக்கும்..?, யாரும் சுஜியைச் சந்தேகப்படப் போவதில்லை.. ஆனால்.. தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கையில்..இது நிச்சயம் கலங்கத்தை உண்டாக்கத் தானே செய்யும்..?, இதைப் பற்றி சுஜிக்குத் தெரிந்தால் என்ன நடக்குமோ..?. நினைக்கும் போதே நெஞ்சு குமுறியது அவனுக்கு. யார் இந்த முட்டாள்... கண்ணில் படாமல் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறான்.. ராஸ்கல்.. என்று பல்லைக் கடித்த ஷ்யாமை..

அந்தப் புகைப்படங்கள் அனுப்பப் பட்டிருந்த உறை வெகுவாக ஈர்த்தது.. இது.. இதை எங்கேயோ பார்த்திருக்கிறேனே.. என்று யோசித்தவன்.. இருவரது திருமணத்திற்குக் காரணமாக அமைந்த.. இருவரும் சேர்ந்திருக்கும் அந்தப் புகைப் படங்களை அலமாரியில் தேடினான்.

சிறிது நேர தேடலுக்குப் பின் கையில் சிக்கி விட்ட அந்தப் பழைய கடிதத்தின் உறையையும், இன்றைய கடிதத்தின் உறையையும் ஒப்பிட்டுப் பார்த்தான். இரண்டுமே ஒரே சிகப்பு நிறமிட்ட.... டிசைன் உறை தான்.. அப்படியானால் இந்த இரண்டு கடிதங்களையும் அனுப்பியது ஒரே ஆசாமி தான்.. அவனது நோக்கம்.. கோபம்.. இருவரில் எவரேனும் ஒருவரின் வாழ்க்கையை அழிப்பது.. கண்ணுக்குப் புலப்படாத அந்தக் காமுகன் எதற்காக இப்படி சோதனையாக வந்துத் தொலைக்க வேண்டும்..

உறையைப் பார்த்தபடியே யோசனையில் ஆழ்ந்தவனுக்கு.. ஏதோ உறுத்த.. இன்னும் என்ன.. இன்னும் என்னவென்று மூளையைத் துரிதமாக செயல் பட வைத்தவனின் கண்களில்.. அடுத்த நிமிடம்.. மின்னல் வெட்டியது.. இந்தக் காகித உறை... இதிலிருக்கும் டிசைன்.. அலுவலகத்தின் வாடிக்கையாளர் ஒருவர் அன்பளிப்பாக அளித்தது.. சென்ற முறை அலுவலகத்திலிருந்து இதை அள்ளிக் கொண்டு சென்றவன் ஸ்ரீதர் ஒருவன் மட்டுமே!

தான் கண்டறிந்த உண்மை... சொல்லொணாக் கோபத்தையும்.. கட்டுக் கடங்காத ஆத்திரத்தையும் அளித்து வெறியையே உண்டாக்கியது ஷ்யாமிற்கு.

DO NOT COPY




Nindran kaathalai enni kalikkindren - Nivetha

## அத்தியாயம் – 26



**ஆசை முகம் மறந்து போச்சே – இதை**

**ஆரிடம் சொல்வேனடி தோழி?**

**நேசம் மறக்கவில்லை நெஞ்சம் – எனில்**

**நினைவு முகம் மறக்கல் ஆமோ?**

**யா**ரோ ஒரு முகம் தெரியாத எதிரி!கண்ணில் படாமல்.. கண் முன்னே தோன்றாமல்.. மறைமுகமாகத் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும் அந்தக் கயவனைப் பற்றி ஷ்யாம் பிரபுவிற்கு ஒரு எண்ணம் இருந்தது. ஒன்று அவன், ஷ்யாமின் தொழில் வளர்ச்சியை,இந்தியா முழுதும் டெக்ஸ்டைல் பிஸினஸில் தனது திறமையை நிலை நாட்டிக் கொண்டிருக்கும் அவனது வெற்றியைக் கண்டு வயிறு எரிந்து... தனக்கு எதிராகத் தொழிலில் போட்டியிட முடியாமல்.. தனது சொந்த வாழ்வில் தலையிட்டுப் பிரச்சனைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும் தொடை நடுங்கி என்று தான் நினைத்துக் கொண்டிருந்தான்...

மற்றொன்று.. சுஜிப்ரியாவின் சிறு பிள்ளைத் தனமான.. அதிரடியான.. துடுக்குத் தனத்தில்.. பாதிக்கப்பட்ட எவரேனும்.. அவளது வாழ்வில் சஞ்சலத்தை உண்டாக்க வேண்டும் என்கிற காரணத்திற்காக இதைச் செய்திருக்கலாமென்று நினைத்தான்.. ஏனெனில் சுஜிப்ரியா ஒரு ஜான்சி ராணியாயிற்றே.. ஊர்ப் பிரச்சனைக்களுக்கெல்லாம் முதல் ஆளாக பஞ்சாயத்திற்கு கிளம்பி விடுவாளே! அப்படி ஒரு பஞ்சாயத்தில் தானே அவளுடனான சந்திப்பே நடந்ததென்று சிரிப்புடன் எண்ணிக் கொண்டான். அத்தோடு.. இந்த இரண்டு காரணங்களுக்காக அவன் இப்படி பூச்சாண்டி காட்டுகிறானென்றால் சுலபமாக அவனை.. அவனது தாக்குதல்களைச் சமாளித்து விடலாமென்று அவன் இறுமாப்புடன் இருந்ததும் உண்மை தான்..

DO NOT COPY

ஆனால்.. இப்போது வந்து சேர்ந்த இந்தப் புகைப் படங்கள்.. மிகப் பெரிய சவுக்கடியை அல்லவா கொடுத்து விட்டது...?, உடன் பிறந்த சகோதரன்.. ஒரு தாய் வயிற்றில் பிறந்து.. தன் கை பிடித்து நடை பயின்று.. இருபத்தைந்து வருடங்களாக.. ஒரே வீட்டில்.. விருப்பு,வெறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு வளர்ந்த சகோதரன்! தம்பி! அவன் இப்படி ஒரு ஈனத் தனத்தை செய்திருக்கிறானென்று ஷ்யாமினால் நம்பவே முடியவில்லை..

தன் உடன் பிறப்புகளுக்காக.. எத்தனை விசயங்களில் பொறுப்பாக நடந்து கொண்டு.. அவர்களின் தேவைகளைக் கவனித்து.. அவர்களது விருப்பத்தை நிறைவேற்றி.. இவர்களிருவரின் நலனுக்காகத் தனது குடும்ப வாழ்க்கையைக் கூட ஒத்திப் போடத் தயாராக இருந்தானே! அவனுக்கு இப்படி ஒரு துரோகத்தைச் செய்ய எப்படி அவனால் முடிந்தது...?

"அண்ணா.. எனக்குக் கல்லூரிக்குச் செல்ல பைக் வேண்டும்...", "அண்ணா.. நண்பர்கள் அனைவரும் ஊட்டி செல்கிறார்கள்.. என்னையும் அழைக்கிறார்கள்.. எனக்குப் பணம் கொடு...", இப்படியெல்லாம்.. தொட்ட விசயங்களுக்கெல்லாம் அண்ணனைத் தேடியவனுக்கு இப்போது அண்ணன் என்பவன் எதிரியாகிப் போனான்.. ஆனால் அவன் தேவைக்கு மட்டுமே அண்ணனை நாடுபவன் என்பதும்.. அனைவரிடமும் நற்பெயரைப் பெற்றிருக்கும் அண்ணன் அவனது பரம எதிரி என்பதை ஷ்யாம் அறியாமல் போனது துன்பம் தான்!

படிப்பைத் தான் முடித்தாயிற்றே, என்னுடன் அலுவலகத்திற்கு வந்து தொழில் கற்றுக் கொள் என்று ஷ்யாம் கூறியதிலிருந்து அவனை எதிராளியாகப் பார்க்கத் தொடங்கி விட்டான்.. நண்பர்களுடன் திரிந்து கொண்டு.. சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு.. அலுங்காமல் திரிந்தால்.. வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி..?, இதைத் தட்டிக் கேட்பது தவறா..?, இவனைத் திருத்த நினைத்தது தவறா..?

ஷ்யாமின் தந்தையோ,அன்னையோ.. தாங்கள் பணக்காரர்கள் என்கிற அகங்காரத்துடனோ.. ஆடம்பரத்துடனோ.. குழந்தைகளை வளர்க்கவில்லை.. பணத்தைப் பற்றியோ.. தங்களது செல்வநிலையைப் பற்றியோ.. அவர்கள் எப்போதும் பிள்ளைகளின் முன்பு பேசியதில்லை.. நல்ல பண்புகளுடன்.. நல்ல பழக்கவழக்கங்களைக் கற்று ஒழுக்கத்துடன் வளர வேண்டுமென்பது தான் அவர்களின் எண்ணம்! பெற்றோரின் எண்ணங்கள் இப்படியிருக்க... அவர்களது நினைப்பிற்கு முற்றிலும் மாறாய்.. தான்தோன்றித் தனமாய் இவன் திரிந்து கொண்டிருந்தால் பார்த்துக் கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும்..?

இந்தச் சேட்டைகளையெல்லாம் விட.. அவனது தவறுகளின் உச்சகட்டம்.. ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டது தான்.. வேலைக்குச் செல்லாமல்.. வீட்டை அளந்து கொண்டு வீணாகத் திரிந்த போதெல்லாம்... ஷ்யாம் அவனை

DO NOT COPY

எதுவும் கேட்கவில்லை தான்.. ஆனால் இந்தத் தவறு...?, முளையிலேயே கிள்ளி எறியப் பட வேண்டிய ஒன்றாயிற்றே! இது தொடர்ந்தால்.. அவன் பெண்களின் பின்னே திரியும் பொருக்கியாக மாறிப் போனால்.. அன்னையும்,தந்தையும் தாங்கிக் கொள்வார்களா..?, ஒழுக்கக் கேட்டை சுலபத்தில் ஒப்புக் கொள்ளாதவர்கள்.. இத்தனை நாட்களாக கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் குடும்ப மானம்.. இவன் ஒருவனால் குலைந்து போவதா..?

அத்தோடு.. அவனது எதிர்காலம் என்னவாவது...?, தொழிலையும் கற்றுக் கொள்ளாமல்.... வாழ்க்கைக்கு முக்கியத் தேவையான பணம் பண்ணுவதற்கான வழியையும் அறிந்து கொள்ளாமல்.. தந்தையின் பணத்தில் உண்டு சொத்தை அழித்துக் கொண்டு... தின்ன சோறு செமிப்பதற்காக.. ஊர்ப் பெண்களிடம் வம்பு செய்பவனைத் திருத்த நினைத்ததற்காக.. அவன் இப்படிப் பழி வாங்க வேண்டுமா...?

முதல் முறை.. இருவரும் சேர்ந்திருந்த அந்தப் புகைப்படங்களை அனுப்பிய போது அவனது நோக்கம் என்னவாக இருந்திருக்கும்..?, இந்தத் திருமணம் நடந்தது அவனுக்கு நிச்சயம் ஏமாற்றமாகத் தான் இருந்திருக்கும்.., செய்யாத தவறை இருவரும் செய்ததாக நம்ப வைத்து... வீண் பழியை போட்டு.. இருவரது நற்பெயரையும் கெடுப்பது தான் அவனது நோக்கமாக இருந்திருக்க வேண்டும்..

ஆனால் சுஜிப்ரியாவும்,ஷ்யாம் பிரபுவும் கட்டிக் காத்த நற்பெயர்.. ஒரு புகைப் படத்தால் அழிந்து விடக் கூடியது அல்லவே! அதனால் அவர்களிருவர் மீதும் அவர்களது பெற்றோர் வைத்திருந்த நம்பிக்கை எள்ளளவும் குறையவில்லை... புகைப்பட விசயத்தை வளர்க்க விரும்பாமல் இருவரும் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வாழ்க்கை சுமூகமானது... ஸ்ரீதர் நினைத்ததற்கு மாறாக.. இவை அனைத்தும் நடந்து முடிந்ததில்.. அவனது வெறி நிச்சயம் அதிகமாகியிருக்க வேண்டும்...

அதனால் தான்.. சிங்கப்பூரிலிருந்து இந்தியா திரும்பிய அன்று அப்படியொரு ஓவியத்தைக் கொடுத்து பயமுறுத்தப் பார்த்திருக்கிறான்.. அவன் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த போது மனதுக்குள் ஏதோ இனம்புரியாத சஞ்சலம் உண்டானதே.. இதை எதிர்பார்த்துத் தானா..?, படுபாவி! உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்ய நினைக்கிறானே!

இவனுடன் பிறந்த பாவத்திற்காக அவன் ஷ்யாமைப் பழி வாங்க நினைப்பது சரி, ஆனால் ஒரு பாவமும் அறியாத.. சுஜியின் வாழ்க்கையில் விளையாடுவதற்கு அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது...?, அவனுக்குப் பிடிக்காத அண்ணனைத் திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்திற்காக அவளையும் பழி வாங்க நினைப்பதில் என்ன நியாயம் இருக்கிறது...?,

ஒரு வேளை அவன் செய்த இந்தக் குளறு படிகளில் அவளுக்கு விபரீதமாக ஏதேனும் நடந்திருந்தால் என்னவாகியிருக்கும்...?, அவளது உயிரை எடுக்குமளவிற்குத் துணிந்திருக்கிறானே! என்றெண்ணிய போது ஷ்யாமின் கை முஷ்டி இறுகியது.. தம்பியென்று கூடப் பாராமல்.. அவனது கழுத்தை நெறித்து விட வேண்டுமென்று கோபம் எழுந்தது...

தன் வாழ்வில்... தென்றலாக.. மேக மூட்டத்துடன் வந்து.. சந்தோச மழையைப் பொழிந்து கொண்டிருக்கும்.. எனது உயிருக்கு உயிரான.. எனக்கே எனக்கான.. அவளுடனான உறவை.. ஸ்ரீதர் குலைக்க நினைப்பது வில்லத்தனம்! அவனது வாழ்வை சீராக்க நினைத்த ஷ்யாம் மீதோ.. தனது தோழியிடம் வம்பு செய்ததற்காக.. அவனைத் தட்டிக் கேட்ட.. சுஜியின் மீதோ.. தவறிருப்பதாகத் தோன்றவில்லை அவனுக்கு..

உடன் பிறந்தவனாக இருந்தாலென்ன..?, தாய்க்கும்,சேய்க்குமே வாயும் வயிறும் வேறு என்கிறார்கள்.. இவன் சகோதரன் தானே...?, என் வாழ்வை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு திரிபவனிடம் கரிசனம் என்ன வேண்டிக் கிடக்கிறது..?, சீக்கிரமே அவனுக்கு முடிவு கட்டி விட வேண்டியது தான்.. என்று ஷ்யாம் முடிவு செய்த போது... அவனது முகத்தில் இருந்த கோபமும், இதயம் துடித்த வேகமும்.. அவனுக்கிருந்த வெறியை.. ஆத்திரத்தை உணர்த்தியது....

தனது அறையில்.. சுவரை வெறித்தபடி கட்டுக் கடங்காத ஆத்திரத்துடன் அமர்ந்திருந்தவனை... சீதாவின் குரல் நடப்புக்கு கொண்டு வந்தது.. "ஷ்யாம்.. ஷ்யாம்..."என்று அவளை உலுக்கிய சீதா.. "என்ன.. உட்கார்ந்து கொண்டே தூங்குகிறாய்...?, அலுவலக செல்லவில்லையா..?"என்றவருக்கு பதிலளிக்க முடியாமல்.. அவன் விழிக்க.. அவனது பதிலை எதிர்பாராமல் தொடர்ந்தாள் அவன் அன்னை.

"ஸ்ரீதர் சாப்பிடாமல் சென்று விட்டானடா.. வெளியே எதையேனும் வாங்கித் தின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளப் போகிறான்.., அவனுக்கு சாப்பாடு கட்டித் தருகிறேன்.. எடுத்துச் செல்கிறாயா கண்ணா...?"என்று வினவ... ஷ்யாமிற்கு எரிச்சல் பொங்கியது.. "அம்மா.. அவன் என்ன சின்னக் குழந்தையா..?, அதெல்லாம் சாப்பிட்டுக் கொள்வான்.. நீ கொடுப்பதை எதிர்பார்த்துத் தான் காத்துக் கொண்டிருக்கிறான் பார்.."என்று கோபத்தை அவர் மீது காட்ட..

"இப்போது என்ன சொல்லி விட்டேனென்று கோபித்துக் கொள்கிறாய் கண்ணா..?,இத்தனை நாட்களாக.. வீட்டுச் சாப்பாட்டுக்காக ஏங்கியிருக்கிறான்.. வெளியே எங்கேயும் இப்போதெல்லாம் அவன் உண்பதேயில்லை.. ப்ளீஸ் டா.." என்று கெஞ்ச.. சற்றும் கோபம் தணியாமல் முறைத்தான் அவன்.. அவன்

பார்வையைக் கண்டு அடங்கி.. “நான் முத்துவிடம் கொடுத்து விடுகிறேன்..” என்று சென்றவரைப் பார்க்கப் பாவமாக இருக்க.. “அம்மா..”என்று தடுத்தவன்.. கண்களைத் தேய்த்து முடியை அழுந்தக் கோதி.. “சாரிம்மா.. நான் வேறு ஏதோ கோபத்தை உங்களிடம் காட்டி விட்டேன்.. ஸ்ரீதருக்கு சாப்பாடு கொண்டு செல்ல வேண்டும் அவ்வளவு தானே..?,எடுத்துச் செல்கிறேன்..”என்று கூற.. மலர்ந்த முகத்துடன் சரியெனக் கூறிச் சென்றார் சீதா.

அவர் சென்றதும்.. மீண்டும் படுக்கையில் அமர்ந்த ஷ்யாமிற்கு... ஆயாசமாக இருந்தது.. அண்ணன் வாழ்வை அழித்தே ஆக வேண்டுமென்ற.. நேத்திக்கடனோடு அலையும் தம்பி.. அவன் மீது பாசத்தைப் பொழியும் அன்னை.. அவன் தவறு செய்தவனாகவே இருந்த போதும்... வெறுப்பைப் பொழியாத தாயின் மனம்.. அவன் திருந்தி விட்டதாக.. பொறுப்புள்ளவனாக மாறி விட்டதாக எண்ணி.. மகிழ்வுற்று.. நிம்மதியுடன் இருக்கும்.. அம்மாவின் மனம் நோகாமல்... அவனை அப்புறப் படுத்துவது எப்படி..?

சென்ற முறை அவன் செய்த தில்லாலங்கடி வேலையை வெளிக் கொணராமல்.. அவனை சிங்கப்பூருக்கு நாடு கடத்தியதைப் போல்... இந்த முறையும்.. அனுப்பியாக வேண்டும்.. ஷ்யாமைப் பற்றி நன்றாக புரிந்து வைத்திருப்பதால் மட்டுமே.. இப்படி பேடித் தனமாக.. மறைமுகமாக தாக்கிக் கொண்டிருக்கிறான்.. ஷ்யாம் நினைத்தால் அவனை என்ன வேண்டுமானாலும் செய்து விடுவான் என்கிற பயம் அவனுக்கு இப்போதும் இருக்கிறது..

அவனைக் கொன்று விடுவதில் கூட இப்போது ஷ்யாமிற்கு எவ்விதத் தயக்கமும் இல்லை.. தன் வாழ்வில் நன்மையைச் செய்யத் தான் முயல்கிறான் அண்ணன் என்பதே அவனுக்குப் புரியவில்லை.. தன் போக்கில் தாந்தோன்றித் தனமாகத் திரிய வேண்டுமென்றும்.. தன்னை யாரும் தட்டிக் கேட்கக் கூடாதென்றும் நினைத்துக் கொண்டு அலைகிறான்.

குறுக்கு வழியில் அனைத்தையும் சாதிக்க வேண்டுமென்கிற.. அடிப்படை குணத்துடன் இருப்பவனை திருத்த முயல்வது கூடக் குற்றம் தான். இவனை இப்படியே விடுவது தவறு.. அண்ணன் என்கிற பாசம்.. ஏன் அண்ணன் தொழில் கற்றுக் கொள்ளச் சொன்னான்..?, ஏன் பணக்காரத் திமிருடன் திரிய வேண்டாமென்று கூறினான் என்பதை அவனே உணர்ந்தால் ஒழிய.. அவனைத் திருத்துவது கடினமே!

தான் மாறி விட்டதாக ருத்ரன் சித்தப்பாவையும்,வீட்டினரையும் நம்ப வைத்தவன்.. எவ்வளவு பெரிய காவாலியாக இருக்க முடியும்! உண்மைகள் அனைத்தையும் ருத்ரன் சித்தப்பாவிடம் கூறியாக வேண்டும்... இவன் விசயத்தில் அவர் முடிவெடுப்பது தான் சரி.. இவனைத் தண்டித்து.. அன்னையைக் காயப் படுத்த வேண்டாம்.. வீட்டிலிருப்பவர் எவருக்கும்

DO NOT COPY

அவனைப் பற்றிய உண்மை தெரிய வேண்டாம்.. அவன் திருந்தி விட்ட.. நல்லவனாகவே இருந்துவிட்டுப் போகட்டும்.. அவர்களைப் பொறுத்தவரை!

பற்பல எண்ணங்களுடன் சுஜியிடம் கூடத் தெரிவிக்காது.. அலுவலகம் கிளம்பினான். செல்லும் வழியில் நேற்று அவன் ஃபோன் செய்த பப்ளிக் டெலிஃபோன் பூத்திற்குச் சென்று.. ஸ்ரீதரின் புகைப்படத்தைக் காட்டி விசாரித்தான். நேற்று காலை 11 மணி அளவில் அவன் வந்து சென்றதாகக் அவர்கள் கூறி விட.. கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் அற்றுப் போனது..

வெறுப்புடன் ஸ்டீயரிங்கை அழுத்தியவன்.. காரை அலுவலகத்துக்குத் திருப்பினான்.. அலுவலகத்தில் நுழைகையிலேயே... ஸ்ரீதரின் பக்கம் பார்வையைச் செலுத்திக் கொண்டு தான் நடந்தான். தமையன் தன்னைத் தீப் பார்வை பார்த்துக் கொண்டு செல்வதை அறியாத ஸ்ரீதர்.. தனது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிக் கொண்டிருக்கும் பூரிப்பில் கம்ப்யூட்டரில் கேம் ஆடிக் கொண்டிருந்தான்..

ருத்ரன் சித்தப்பாவிற்கு ஃபோன் செய்து.. ஷ்யாம் அனைத்து விவரங்களையும் தெரிவித்து விட.. “அவன் இங்கேயிருப்பது எங்களிருவரின் வாழ்விற்கும் எமனாகி விடும் போல சித்தப்பா.. அவனுக்கு பயந்து கொண்டு நான் அவனை எதுவும் செய்யாமல் இருக்கவில்லை.. இவனால் வீட்டினர் நிம்மதி கெடுவதை நான் விரும்பவில்லை.. இவன் மேலும் இங்கேயிருந்தால் நிச்சயம்.. நானே அவனைக் கொன்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.. என் மனைவியைக் கொல்லுமளவிற்குத் துணிந்திருக்கிறான்.. கொஞ்சம் கூட பயமோ.. தயக்கமோ இல்லை அவனுக்கு... இனி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது சித்தப்பா.. சீக்கிரமே அவனை சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லுங்கள்.. அம்மா,அப்பாவிடம் நீங்களே ஏதேனும் காரணம் சொல்லிக் கொள்ளுங்கள்“என்று ஷ்யாம் முழுக் கோபத்துடன் கூற..

அவனை சாந்தப் படுத்தியவர்.. மறு வாரமே தானே ஸ்ரீதரை அழைத்துச் செல்வதாகக் கூறி அவனை நிம்மதியுறச் செய்தார்.. ஆனால் இந்த ஒரு வார இடைவெளியில் நிச்சயம் அவன் வேறு எதற்கேனும் முயல்வான் என்று நம்பினான் ஷ்யாம்.. ஏனென்றால்.. அவன் இங்கே வந்து சந்தித்தது அனைத்துமே தோல்வி தான்.. பொம்மையை உடைத்து அவர்களிருவருக்குள்ளும் சண்டையை மூட்டி விடப் பார்த்தான்.. அது நிறைவேறவில்லை..

அடுத்ததாக பிரேக் வயரை அறுத்து.. பெரிதாக எதிர்பார்த்ததும் நடக்காமல் போய் விட்டது.. இப்போது.. அவன் மலை போல் நம்பியிருந்த இந்தப் புகைப்படத் திட்டமும் சின்னா பின்னமாகிப் போனது.. இந்தப் புகைப்படங்கள்

DO NOT COPY

தன் கையில் கிடைத்த போதே கடவுள் தங்கள் பக்கம் இருக்கிறார் என்று பரிபூரணமாக நம்பினான் ஷ்யாம்..

ஆனால்.. எப்போதும் துணையிருப்பாரென்று கூற முடியாதே! யாரென்றே அறியாமல்.. குழம்பிக் கொண்டிருந்த வேளையில்.. இவனை அடையாளம் காட்டியதே.. கடவுள் செய்த பெரிய உதவி தான்.. இனி சுதாரித்துக் கொள்ள வேண்டும்.. இவன் இங்கே இருக்கும் 1 வாரத்திற்கும் இவனைப் பின் தொடர ஆட்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.. சுஜியை சர்வ ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி எச்சரிக்க வேண்டும்.. இதை நிச்சயம் உறுதி செய்ய வேண்டும் என்றெண்ணிக் கொண்டவன்.. உடனே அதைச் செயல் படுத்தினான்.

தனக்குத் தெரிந்த டிடெக்டிவ் ஏஜென்ஸிக்குச் சென்று ஸ்ரீதரின் புகைப்படத்தைக் காட்டி அவனைப் பின் தொடருமாறு கூறினான். அவர்கள் ஒப்புக் கொள்ள.. அன்றே வேலையைத் தொடர வேண்டுமென்று உத்தரவிட்டுக் கிளம்பினான். பலவிதமான உணர்ச்சிக் கொந்தளிப்பில் அல்லாடி.. முழுச் சோர்வுடன் வீட்டுக்குள் நுழைந்தவனுக்கு சுஜியின் சிரிப்பொலி மனதில் சாரலை ஏற்படுத்தியது..

அனுவுடன் வாயாடிக் கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்தவளின் நகையொலி வீட்டையே நிறைத்துக் கொண்டிருந்தது, இந்த மகிழ்ச்சி,இந்த சந்தோசம்,இவளால் இந்த வீட்டிற்குள் நுழைந்த உற்சாகம்... எப்போதும்.. என்றென்றும் நீடித்திருக்க வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் உள்ளே நுழைந்தவனை... அதே சிரிப்புடன் வரவேற்ற சுஜி... அவன் முகத்தில் தெரிந்த சோர்வைக் கண்டு “என்னவாயிற்று ஷ்யாம்...?”என்று வினவினாள்.

ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவன்.. “ஐ நீட் அ ஹக் ஃப்ரம் யூ..” என்றான்.. இதற்கு அனுமதி கேட்கிறீர்களா என்ற கேள்வியுடன் அவனை நோக்கியவள்.. அருகே வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.. அவள் தன்னை அணைத்ததும்.. கண் மூடி அவள் தோள் சாய்ந்தவன்... என் மேல் நீ வைத்திருக்கும் இந்த தூய்மையான நேசத்திற்காக.. எதையும் எதிர் பாராத இந்த அன்பிற்காக... நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன் சுஜி... கண்ணின் மணி போல் உன்னைக் காப்பது என் கடமை கண்ணம்மா.. உனக்கு எதுவும் நடந்து விட.. நான் அனுமதிக்க மாட்டேன்.. என்றெண்ணியபடி அவளை மேலும் மேலும் தன்னுள் புதைத்தான்.

அவன் அணைப்பு இறுகுவதைக் கண்டு “என்ன ஷ்யாம்... என்னவாயிற்று...?”என்று சுஜி வினவ.. அவளைத் தன்னிடமிருந்து பிரித்தவன்.. அவள் காதோர முடியை ஒதுக்கியபடி “ஏன் என்னவென்று கேட்காமல்.. நான் சொல்வதைச் செய்ய வேண்டும் சுஜூ.. செய்வாயா..?”என்று வினவினான்,

DO NOT COPY

செய்கிறேன் என்று அவள் உறுதி அளித்ததும்.. “என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் நீ வீட்டை விட்டு எங்கேயும் செல்லக் கூடாது.. நீ எங்கே செல்ல வேண்டுமானாலும் நான் அழைத்துச் செல்கிறேன்.. பக்கத்து தெருவிற்கென்றால் கூட.. என்னிடம் கூறாமல் செல்ல வேண்டாம்.. நீ அறியாத எண்ணிலிருந்து உன் செல்ஃபோனிற்கு உன்னை எவரேனும் அழைத்தால்.. உடனே எனக்கு தெரிவித்து விடு.. தலை போகிற காரியமாக இருந்தால் கூட.. நீயாக எங்கேயும் செல்லக் கூடாது.. வீட்டிலிருக்கும் போது கூட.. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை எனக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.. சரியா..?”எனக் கேட்க..

அவன் கூறிய அனைத்தையும் கேட்டுக் குழம்பிய சுஜி “நேற்று எனக்கு கால் செய்தது யாரென்று தெரிந்து விட்டதா ஷ்யாம்..?, அதனால் தான் இப்படி எச்சரிக்கிறீர்களா..?, என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்.. என்னவென்று கூறுங்கள்.. ப்ளீஸ்..”என்று பதற.. “சுஜூ... இங்கே பார்..”என்று அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி.. “நீ என்னை எந்த அளவிற்கு நேசிக்கிறாய்..?”என்று வினவினான். அவனை முறைத்தவளிடம் “ம்,சொல் சுஜூ...”என்றான்,

வேக மூச்சுடன் அவன் முகம் நோக்கியவள்.. “என்னைப் பொறுத்தவரை நேசம் என்கிற வார்த்தைக்கு அர்த்தமே ஷ்யாம் பிரபு தான்..”எனக் கூற.. வாய் விட்டு நகைத்தவன் “ஐ லவ் யூ புஜ்ஜூ...”என்றணைத்துக் கொண்டான். பின் அவள் கூந்தலை வருடி.. “இப்போது என்னை எந்தக் கேள்வியும் கேட்காதே சுஜூ... நான் பதில் கூற முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன்... அதற்காக உன்னிடமிருந்து மறைக்கிறேன் என்று நினைக்காதே.. இப்போதைக்கு நீ எதைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டாமென்று நினைக்கிறேன்.. ஆனால் நான் கூறிய அனைத்தையும் நினைவு வைத்துக் கொள் சுஜூ.. ஜாக்கிரதையாக இரு.. சரியா..?”எனக் கூற.. கணவனைப் புரிந்து கொண்ட மனைவியும் சரியெனத் தலையாட்டினாள்.

அலுவலகம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்த ஸ்ரீதர்.. மிகப் பெரிய பூகம்பத்தை எதிர்பார்த்திருந்தான்.. கண்ணைக் கசக்கிக் கொண்டு மூலையில் அழுது கொண்டிருக்கும் சுஜிப்ரியா... அந்தப் புகைப்படத்தைக் கண்டு சந்தேகப் பட்டு... அவளைக் கோபத்துடன் முறைத்துக் கொண்டிருக்கும் ஷ்யாம்.. அன்னை,தந்தை,அனுவின் கலங்கிய முகங்கள்.. சுஜியின் பெற்றோர் மற்றும் சக்தியின் அவமானத்தில் கறுத்த முகங்கள்.. இவையெல்லாம் காலையிலிருந்து ஸ்ரீதர் தன் கற்பனையில் கண்ட காட்சிகள்..

ஆனால் நிஜத்தில் அவன் கண்ட காட்சிகளோ.. அவனுக்கு மாரடைப்பையே ஏற்படுத்தியது... கணவனிடம் தன் உள்ளங்கையை நீட்டி... அவன் தனக்கு மெகந்தியிடும் அழகை ரசித்த படி அமர்ந்திருக்கும் சுஜிப்ரியா.. தனது ஓவியத்

DO NOT COPY

திறமையை மனைவிக்கு நிரூபித்து விடும் மும்முரத்தில்.. அவள் கேலியைப் பொருட்படுத்தாது.. அவளது கையில் கோலமிட்டுக் கொண்டிருந்த ஷ்யாம்..

அவர்களிருவரையும் கேலி செய்த படி.. ஒருவரையொருவர் வாரிக் கொண்டு கலகலத்துச் சிரித்துக் கொண்டிருக்கும் அன்னை,தந்தை,அனு... அவர்களனைவரின் முகத்திலிருந்த சந்தோசமும்,நிம்மதியும் ஸ்ரீதரை என்னவோ செய்தது... தானும் இதில் ஒன்றிப் போயிருந்தால்.. எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று யோசித்தவன்.. மறு நொடியே தலையைச் சிலுப்பினான்..

ச்ச.ச்ச, கொஞ்சமும் ஈவு,இரக்கமில்லாமல்.. தன்னை நாடு கடத்திய இவன் மீது.. அதற்கு ஒத்து ஊதிய தந்தையின் மீது.. கோபப் படாமல்.. இந்தக் கோமளிக் கூட்டத்துடன் கலந்து கொள்ள நினைப்பதா..?, நெவர், நெவர்.. என்று தனக்குத் தானே கூறிக் கொண்டவனுக்குக் கோபம் கொஞ்சம் மட்டுப் பட்டதைப் போல் இருந்தது.. இல்லை என் கோபத்தின் அளவு குறையவில்லை.. என்ன நடந்ததென்பதை தெரிந்து கொண்டு... இப்போதும்.. என் திட்டம் தோற்றுப் போயிருந்தால்.. நெடு நாட்களாக.. சுஜிப்ரியாவைக் கொல்வதற்கு யோசித்துக் கொண்டிருக்கும் திட்டத்தை அமுல் படுத்தி விட வேண்டியது தான்.. என்று சிலிர்த்த படி வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தான்.



# அத்தியாயம் – 27



**கண்ணில் தெரியுது ஒரு தோற்றம் – அதில்**

**கண்ணன் அழகு முழுது இல்லை**

**நண்ணு முகவடிவு காணில் – அந்த**

**நல்ல மலர்ச் சிரிப்பைக் காணோம்..**

**ஸ்ரீ**தரைப் பொறுத்தவரை ஆனந்தி விசயத்தில் தலையிட்டுத் தன் வீட்டில் தேவையில்லாத பிரச்சனைகளை உண்டாக்கிய சுஜிப்ரியாவின் மீது அவனுக்குக் கோபம் இருந்ததென்னவோ உண்மை தான்.. ஆனால் அடுத்தடுத்துத் தமையனின் அதிரடி தாக்குதல்களினால்.. அவள் மீதிருந்த கோபம் மட்டுப் பட்டு ஷ்யாமின் மீது தான் ஆத்திரம் அதிகமானது..

இருவரும் சேர்ந்திருந்த அந்தப் புகைப்படங்களை அனுப்பியது கூட.. அவளைப் பூச்சாண்டி காட்டுவதற்காகத் தான்... ஒரு வேளை இந்தத் திருமணம் நடவாமல் போயிருந்தால்.. சுஜிப்ரியா தனது மூளைக்கு எட்டாத விசயமாகிப் போயிருப்பாள்.. ஆனால் எப்போது அவள் ஷ்யாமைத் திருமணம் செய்து கொண்டு தன் வீட்டில் ராஜ்ஜியம் நடத்தத் தொடங்கினாளோ அப்போதே அவள் மீதிருந்த கோபம் இரு மடங்கானது அவனுக்கு.

அத்தோடு நில்லாமல்.. ஷ்யாம் வாழ்வில் முழுமையாக ஒன்றி விட்ட மனைவியாக அவள் இருந்த கோலத்தைக் கண்ட போது.. இவளைத் தாக்கினால் நிச்சயம் ஷ்யாம் ரத்தக் கண்ணீர் வடிப்பான் என்பதை உறுதி செய்து கொண்டான். ஆஜானுபாகுவான.. மத்தகஜத்தைப் போல் கம்பீர தோற்றம் கொண்டிருக்கும் ஷ்யாம் பிரபுவைத் தாக்குவதற்கு பயந்து அவன் தயங்கிக் கொண்டிருந்த வேளையில் அவளாகவே வந்து வலையில் விழ.. விஷயம் சுலபமாகிப் போனது அவனுக்கு. அதனால் ஒரே சமயத்தில் இருவரையும் அழ வைப்பதெனத் தீர்மானித்துக் கொண்டான்.

DO NOT COPY

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கப் போவதாக அவன் மார் தட்டிக் கொண்டு பெருமைப் பட.. கண்டதென்னவோ படு தோல்வியைத் தான்.. ஒவ்வொரு முறையும் இருவருக்குமிடையே இருந்த நெருக்கம் அவனை அதிர வைத்தது.. குறுகிய காலத்தில் எப்படி ஒன்றிப் போனார்கள்..?, கல்யாணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயக்கப் படுவதாகக் கூறுகிறார்களே!, அதனால் தான் ஒரு மஞ்சள் கயிறைக் கட்டியவுடன்.. தன்னாலே அந்தப் பிணைப்பு பிறந்து விட்டதோ! என்றெல்லாம் கூட எண்ணினான்.

ஆனாலும் அசராமல்.. அவர்களைப் பிரிப்பதற்கான.. அவர்களது வாழ்வில் தாங்க முடியாத வலியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அடுத்தடுத்து முயற்சிகளைச் செய்து கொண்டு தான் இருந்தான்.. பிரேக் வயரை அறுக்கும் போது.. அவள் உயிரையே எடுத்து விட வண்டுமென்று அவன் திட்டமிடவில்லை... நிரந்தரக் குறை எதையேனும் அவளது உடம்பில் ஏற்படுத்தி விட வேண்டுமென்றும் அதைக் கண்டு ஷ்யாம் தினமும் துன்பத்தில் துடிக்க வேண்டுமென்று தான் நினைத்திருந்தான்.

ஆனால் அந்த முயற்சியும் தோற்று விட... சுஜியும்,அவளது நண்பனும் இணைந்த இந்தப் புகைப்படங்களை வைத்து.. இருவரிடையே ஏதேனும் குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைத்தான்... அவன் அனுப்பிய புகைப் படங்களை தந்தை பிரித்துப் பார்ப்பாரென்றும்... சுஜிப்ரியாவை அழைத்து கேள்வி கேட்பாரென்றும் அவள் தலை குனிந்து தன் நிலையை புரிய வைக்க முடியாமல் விழித்துக் கொண்டு நிற்பாள் என்றெல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தான்..

ஆனால் அவன் அனுப்பிய புகைப் படங்கள் யார் கைக்குக் கிட்டியதென்றே அவனால் கண்டறிய முடியவில்லை.. ஏனெனில்.. இன்று ஏதேனும் தனக்குக் கடிதம் வந்ததா என்று மறைமுகமாகக் கடிதத்தைக் காரணம் காட்டி புகைப் பட விசயத்தை அறிந்து கொள்ள முயன்றான்.. சீதா "என்னடா புதிதாக என்னிடம் கேட்கிறாய்..?, அப்பாவிடம் கேள்.."என்று முடித்து விட..

தந்தையிடம் விசாரித்தான்.. எப்போதும் அவனைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கும் ராஜாராமன் "உனக்குக் கடிதமா..?, யாரிடமிருந்து..?"என்று அவனையே விசாரித்தார்.. இவருக்கு பதில் சொல்வதற்கு பதில் ருத்ரன் சித்தப்பா கொடுக்கும் காய்ந்த ரொட்டியைக் கூட மென்று விடலாம்.. என்று எரிச்சலுடன் எண்ணிக் கொண்டவன் "நண்பனிடமிருந்து..."என்று கூறி விட்டு நகர்ந்து விட்டான்.. இதற்கு மேல் நின்றால் என்னென்ன கேள்வி கேட்பாரோ என்ற பயத்தில்...

DO NOT COPY

ஸ்ரீதர் இருப்புக் கொள்ளாமல்... அன்னையைத் தேடி சமையலறைக்குள் நுழைந்ததையும்.. பின் தந்தையிடம் சென்றதையும்.. நோட்டம் விட்டபடி அமர்ந்திருந்த ஷ்யாமை அவன் கவனிக்காமல் போனது சோகம் தான்..

கடைசியில் சோர்ந்துத் தன் அறைக்குள் நுழைந்தவனுக்கு ஆத்திரமே மிஞ்சியது... தான் முயற்சி செய்யும் எதுவும் உருப்படவில்லையே.. முன்னமே தெரிந்து கொண்டதைப் போலல்லவா இருவரும் ஒவ்வொரு முறையும் தப்பித்துக் கொள்கிறார்கள்... கடிதம் என்னவானது...?, கடிதம் வந்து சேர்ந்ததைப் பார்த்து விட்டுத் தானே அலுவலகம் சென்றான்.. பின் எப்படி மாயமாகிப் போனது..?, யார் எடுத்திருப்பார்கள்..?, எடுத்தவர்கள் எதற்காக மறைத்து விட்டார்கள்...?, ஒரு வேளை தந்தையே மறைத்து விட்டாரோ...?

ஒழுக்கம்,ஒழுக்கம் என்று வில்லுப் பாட்டு பாடிக் கொண்டிருக்கும் தந்தை இதை மறைத்திருக்க வாய்ப்பேயில்லை.. ஒரு வேளை ஷ்யாம் பிரபுவே பார்த்து விட்டானோ..?, ஆனால்.. ஒரு ஆண்மகனால்.. தன் மனைவி வேறு ஒரு ஆணுடன் புகைப் படத்திலிருப்பதைக் கண்டு விட்டு.. எப்படி அவளுடன் சிரித்து விளையாட வேண்டும்..?, இவன் ஏன் இப்படியிருக்கிறான்.. அவளை இழுத்து வைத்து அறைந்து காது ஜவ்வைக் கிழிப்பான் என்று இங்கே இவன் கனா கண்டு கொண்டிருக்க.. அவன் என்னவோ... மனைவியின் கையைப் பற்றி.. கோலமிட்டுக் கொண்டிருக்கிறான். அவ்வளவு நம்பிக்கையா...?

அப்படியானால் எந்த வழியில் சென்றாலும் இருவரையும் பிரிக்கவே முடியாதா..?, இருவரில் எவரேனும் ஒருவரை பூலோகத்தை விட்டு அனுப்பி விட்டால்.. பிரிந்திருந்து தானே ஆக வேண்டும்..?, ஆம்!, இதைத் தவிர வேறு வழியில்லை... இப்படி அவன் முடிவெடுத்து விட்ட பின்பு.. வழக்கம் போல்.. அண்ணனைப் பலியிடுவதைக் காட்டிலும் சுஜிப்ரியாவை மேலே அனுப்பி விடுவது தான் சுலபம் என்று எண்ணினான்.. எரிச்சலுடன் வீட்டை விட்டு வெளியே கிளம்பினான்.. “எங்கே செல்கிறாய் கண்ணா..”என்ற சீதாவின் கேள்விக்குப் பதில் கூறாமல் நடந்து விட்டான்.

அவன் சென்ற பின்பு அனைவரும் இரவுச் சாப்பாட்டுக்கு ஒன்று கூட.. ருத்ரன் சித்தப்பா ஸ்ரீதரை 4 நாட்களில் அழைத்துச் செல்லவிருப்பதை வீட்டினருக்குச் சொல்ல எண்ணி தொண்டையைச் செருமினான் ஷ்யாம்.. அவன் அப்படி செய்ததும்... அனுவைச் சுரண்டிய சுஜி.. “உன் அண்ணன் ஏதோ.. சொல்ல வருகிறாராம்... ஷ்யாம் பிரபுவின் வார்த்தைகள் வரும் பின்னே.. செருமல் வரும் முன்னே...”என்று கூற.. புரையேறுமளவிற்குச் சிரித்தாள் அனு..

அவர்களது சீண்டலை ஒரு பார்வையில் அடக்கிய ஷ்யாம்.. பின் தந்தையிடம் “அப்பா.. ஸ்ரீதரை அழைத்துச் செல்ல ருத்ரன் சித்தப்பா.. இந்த வாரக்

DO NOT COPY

கடைசியில் வருகிறாராம்.. இன்று எனக்கு ஃபோன் செய்தார்..”என்று கூற.. சுஜி உட்பட.. அனைவரும் அவனை வியப்புடன் நிமிர்ந்து நோக்கினர்.

“ஏன் அண்ணா... அவன் முன் போல் அல்லாது நன்றாகத் தானே இருக்கிறான் இப்போது.. எதற்காக அவனை மறுபடியும் அனுப்ப வேண்டும்..?, அவன் இங்கேயே இருக்கட்டுமே.. எனக்குச் சண்டை போட ஆள் வேண்டும் அண்ணா..” என்று அனு கெஞ்ச... அவளுக்கு பதில் கூறாமல் ஷ்யாம் தந்தையை நோக்கினான்.. எப்போதும் ஷ்யாம் கூறும் எதற்கும் மறு வார்த்தை பேசாத ராஜாராமனே சற்றுத் தயங்கி..

“ஏன் பிரபு... அவனைக் கட்டாயமாக அனுப்பியாகத் தான் வேண்டுமா..?,மூவரும் நம் வீட்டில் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்க எவ்வளவு நன்றாக இருக்கிறது..?,”என்று வினவ.. அய்யோ டாடி.. அவன் இங்கே இருந்தால் குடும்ப மகிழ்ச்சியென்பதைக் குழி தோண்டி புதைக்க வேண்டி வருமே.. என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டவன்...

மேலும் தொண்டையைச் செறுமி.. “இல்லைப்பா... அவன் இன்னும் சிறிது நாட்களுக்கேனும்.. சிங்கப்பூரில் இருக்க வேண்டுமென்று ருத்ரன் சித்தப்பா விரும்புகிறார்.. அங்கே தொழிலையும் இவன் நன்றாகப் பார்த்துக் கொள்வதால்.. அவன் அங்கே இருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறார்...”என்று கூற...

தாடையைத் தடவிய படி யோசித்த ராஜாராமன்.. “அதுவும் சரி தான்.. தனக்குப் பின் வாரிசற்றுப் போனதால்.. உங்களிருவரில் ஒருவரையேனும் அங்கே அழைத்துக் கொள்ள.. அவன் ஏற்கனவே கேட்டுக் கொண்டு தான் இருந்தான் என்னிடம்... இப்போது.. ஸ்ரீதர் உடன் இருப்பதை அவன் விரும்பினால் சரியென்று தான் கூற வேண்டும்..”என்று அவர் முடித்து விட...

சீதா தான் மிகவும் கலங்கிப் போனார்.. “என்ன கண்ணா இது.. என்னைக் கேட்காமல்.. நீயும் அப்பாவுமாக முடிவு செய்து கொள்கிறீர்கள்..?, அவன் இங்கேயே இருக்கட்டுமே.. எனக்காக கண்ணா...”என்று கெஞ்ச... எந்த உண்மையையும் வெளிப் படுத்த முடியாமல்.. தாயிடம் மறுக்கவும் முடியாமல்... இயலாமையுடன் அன்னையின் முகம் நோக்கினான்.

“அம்மா... அவன்.. அவன்.. இன்னும் சிறிது நாட்களுக்கு அங்கேயே இருக்கட்டும்.. அவனது எதிர் காலத்திற்காகம்மா.. நீங்கள் நினைத்த நேரத்தில் சிங்கப்பூர் சென்று வரலாம்.. சரியா..?”என்று வினவ.. “சரி தான் கண்ணா..”என்ற படி பெரு மூச்சுடன் நகர்ந்து செல்பவரைக் காணும் போது... நெஞ்சு விம்மியது ஷ்யாமிற்கு..

DO NOT COPY

குடும்பமே அவனது உத்தம வேடத்தை நம்பி.. அவனை நல்லவனாக எண்ணிக் கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் அவனைப் பற்றிய உண்மைகள் தெரிய வந்தால் என்ன ஆவது...?, ஸ்ரீதர் மாறி விட்டதாக எண்ணி மகிழ்ச்சியாக இருக்கும் இந்த அன்னை ஏமாற்றத்துக்குள்ளாவதா...?

தன் அண்ணன்,தன் குடும்பமென்று வாழ்வில் ஒரு நிமிடமேனும் நினைத்துப் பார்த்திருப்பானா...?, இந்தக் குடும்பத்தில் அனைவரும் பாசத்தின் மறு பிறப்பாக இருக்கையில் அவன் மட்டும் எப்படி கொடிய விஷமுள்ளப் பாம்பாக இருக்கிறான்... பாசமென்பதே கிடையாதா அவனுக்கு...?, அவன் செய்யும் இந்தப் பாவச் செயல் குடும்பத்தின் அமைதியைக் கெடுத்து விடுமென்று அறியாதவனாக இருக்கிறானே....! கடவுளே! அன்னைக்காகவேனும்.. ஸ்ரீதர் விரைவில் மாறி விட வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டான்..

தோட்டத்தில் வெகு நேரம் நடந்த படி... புகைப் பிடித்துக் கொண்டிருந்தவனை அழைத்த படி அருகே வந்தாள் சுஜி.. "அத்தையின் முகமே வாடி விட்டது.. இப்போது எதற்காக உங்கள் தம்பியை அனுப்ப வேண்டுமென்கிறீர்கள் ஷ்யாம்...?,"என்று அவள் வினவ.. "உனக்குத் தான் அவனைப் பிடிக்காதே.. இப்போது அவனுக்கு வக்காலத்து வாங்குகிறாய்...?"என்று அவன் சிரிப்புடன் வினவ.. "இப்போதெல்லாம் உங்கள் தம்பி என்னிடம் நன்றாகத் தானே நடந்து கொள்கிறார்... என்னை விடுங்கள்.. அத்தைக்காகவேனும் அவரை அனுப்ப வேண்டாமே..."எனக் கூற.. குடும்பமே தன்னிடம் கெஞ்சுவதைக் கண்டு ஷ்யாமிற்கு மேலும் தலைவலி அதிகமானது.. "அவன் செல்வது தான் இப்போதைக்கு நல்லது சுஜி.. இனி இதைப் பற்றிப் பேச வேண்டாம்... தூங்கச் செல்லலாம் வா.."என்றழைத்துச் சென்றான்.

இரவு வெகு நேரம் கழித்து வீடு வந்து சேர்ந்த ஸ்ரீதர்.. ஷ்யாம் தன்னை மறுபடியும் சிங்கப்பூர் அனுப்பப் போகும் விசயம் கேள்விப் பட்டு.. கொதித்துப் போனான்... காயம் பட்ட இடத்தில் கத்தியை நுழைத்துப் பார்க்கிறானே... சீக்கிரமே இதற்கு அவனைக் கதற விடுகிறேன் என்று கறுவிக் கொண்டான்.

அடுத்த வந்த 4 நாட்களும் எவ்விதப் பிரச்சனையுமின்றி அமைதியாகக் கழிந்தது. ஸ்ரீதரைப் பின் தொடரும் ஆட்கள்.. அவன் அவனது நண்பர்களுடன் ஹோட்டலில் கூடுவதையும், வெறி பிடித்த முகத்துடன் அலைவதையும் ஷ்யாமிற்குத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். சுஜிப்ரியாவும் ஷ்யாமிடம் தெரிவிக்காமல் எங்கேயும் செல்வதில்லை... அனைத்தும் சுமூகமாகச் சென்று கொண்டிருக்க... ஸ்ரீதர் சிங்கப்பூர் செல்வதற்கு முன் நிச்சயம் ஏதேனும் முயற்சி செய்வானென்று நினைத்திருந்தான் ஷ்யாம்.

அவன் நினைத்ததைப் போல்.. தன் நண்பன் குமாரின் மூலம் சுஜியைக் கடத்திச் செல்வதற்கான.. ஈனச் செயலில் ஈடுபட்டிருந்தான் ஸ்ரீதர். தான்

DO NOT COPY

நேரடியாக இந்த விசயத்தில் தலையிட முடியாதென்றும்.. முழுப் பொறுப்பையும் குமாரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும்.. அதற்குப் பெரிய விலையை நிச்சயம் அவனுக்கு அளிப்பதாகவும் ஸ்ரீதர் கூறி விட்டதால்.. அவனும் ஒப்புக் கொண்டான்..

ஸ்ரீதருக்கு இருக்கும் வெறியில் அவளைக் கடத்திச் சென்று அவளைத் தன் கையாலே கொன்று விட வேண்டுமென்று தான் முதலில் எண்ணினான்.. ஆனால் குமார் அவனைச் சமாதானப் படுத்தி.. உன் அண்ணன் வாழ்விலிருந்து விலகி.. எங்கேனும் கண் காணாத இடத்திற்குச் சென்று விடுமாறு உன் அண்ணியிடம் கூறிப் பார்க்கலாம்.. அவள் அப்படி சம்மதிக்கவில்லையென்றால்.. அதற்கும் மறு ஏற்பாடு செய்கிறேன்...

பெண்களைக் கடத்தி விற்கும் கும்பலுடன் என் நண்பன் ஒருவனுக்குப் பழக்கம் இருக்கிறது.. அவனை வரவழைக்கிறேன்.. உன் அண்ணி.. நாம் கூறுவதற்கு ஒப்புக் கொள்ளவில்லையென்றால்... அவனுடனே அனுப்பி விட வேண்டியது தான்.. என்று தன் திட்டத்தை அவன் ஸ்ரீதரிடம் விவரிக்க.. அவனும் இதற்கு ஒப்புக் கொண்டான்..

"டேய்.. சென்ற முறையும் நீ கொடுத்த ஐடியாவை செயல் படுத்தித் தான் படு தோல்வியைச் சந்தித்தேன்.. இந்த முறை எதுவும் தவறாகி விடக் கூடாது.. நிச்சயம் வெற்றி கிடைத்தாக வேண்டும்.."என்று ஸ்ரீதர் கூறியதற்கு சரி சரியெனத் தலையாட்டி விட்டான் குமார்.

எந்த விதத்திலேயும் தலையிடாமல்.. அமைதியாக அலுவலகம் சென்று வந்து கொண்டிருந்தான் ஸ்ரீதர்.. வீட்டையும்,அலுவலகத்தையும் தவிர அவன் எங்கேயும் செல்லாததைக் கண்ட ஷ்யாம்.. சந்தேகத்துடன் அவனை நோக்கினான்.. அடுத்த 2 நாட்களில் அவன் சிங்கப்பூர் சென்றாக வேண்டிய நிலை வந்த போது... சுஜிப்ரியா தொலைந்து போனாள்.

DO NOT COPY




Nindran kaathalai enni kalikkindren - Nivetha

## அத்தியாயம் – 28



**நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா**

**நின்னைச் சரணடைந்தேன்...**

**பொன்னை உயர்வை புகழை விரும்பிடும்**

**என்னைக் கவலைகள் தின்னத் தகாது என்று**

**நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா**

**நின்னைச் சரணடைந்தேன்...**

DO NOT COPY

**சு**ஜிப்ரியாவைக் கடத்திச் செல்ல முடிவு செய்து விட்ட ஸ்ரீதரும் அவனது நண்பனும்.. தங்களது முயற்சி யாருக்கும் தெரிந்து விடாத படி... தங்களை யாரும் சந்தேகிக்காத படி பார்த்துக் கொண்டனர்.. அதனால் ஸ்ரீதரைத் தொடர்ந்து கொண்டிருந்த டிடெக்டிவிற்கு அவனிடமிருந்து எதையும் கண்டறிந்து கொள்ள முடியவில்லை..

கடைசியாக ஸ்ரீதர் கிளம்பிச் செல்வதற்கான இரண்டு நாள் முன்பு மாலை... கல்லூரி முடிந்து வீட்டிற்கு வந்த அனு "அண்ணி..."என்று கூவியபடியே உள்ளே நுழைந்தாள். "அண்ணி... அத்தைக்கு இரண்டு நாட்களாக காய்ச்சலாமே.. நீங்கள் என்னிடம் எதுவுமே கூறவில்லை...?"என்று விசாரித்தாள்.

"அம்மாவிற்கு காய்ச்சலா..?"என்று சுஜி பதறிய படி விசாரித்தாள். "உங்களுக்குத் தெரியாதா அண்ணி.?,அத்தைக்கு 2 நாளாக பயங்கர காய்ச்சலாம்.. மாமாவும்,உங்கள் தம்பியும் தான் சமையல் செய்கிறார்களாம்.. இன்று மதியம் என்னுடைய சாப்பாட்டைத் தான் உங்கள் தம்பி பிடுங்கித் தின்றார்.. பாவம்.. 2 நாட்கள் நல்ல சாப்பாடு சாப்பிட முடியாமல் போனதால்

கவலையில் இருக்கிறார் உங்கள் தம்பி.. ஆனால் உங்களிடம் ஏன் அவர்கள் இதைக் கூறவில்லை..?"என்று அனு விழிக்க..

"நீ பதறி விடுவாய் என்று தான் கூறவில்லையோ என்னவோ... நீ சென்று பார்த்து விட்டு வந்து விடு சுஜி.."என்று சீதா கூற.. "இப்போதே செல்கிறேன் அத்தை.."என்றவளுக்குப் பதற்றத்தோடு கோபமும் சேர்ந்து கொண்டது.. என்னிடம் ஒரு வார்த்தை கூறவில்லை.. கல்யாணமாகி விட்டால்.. எனக்கும் அந்த வீட்டுக்கும் சம்பந்தமில்லையா என்ன..?, இந்தத் தடியனும்,அப்பாவும் கூட மறைத்து விட்டார்கள்.. அங்கே போய் கவனித்துக் கொள்கிறேன்.. என்ற பொறுமலுடன் கிளம்பி வெளியே வந்தவளுக்கு அப்போது தான் ஷ்யாமிடம் அம்மா வீட்டிற்குச் செல்வதை தெரிவிக்காதது நினைவிற்கு வந்தது...

உடனே செல்லில் அவனுக்குத் தெரிவிக்க முயன்றாள்.. பல முறை முயற்சி செய்து பார்த்தும் பலனளிக்காமல் போக.. அவனது அலுவலக நம்பருக்கு முயற்சி செய்தாள்.. அவனது காரியதரிசி ஷ்யாம் வெளியே சென்றிருப்பதாகத் தெரிவிக்க.. "சரி,அவரது செல் நம்பர் எடுக்கப்படவில்லை.. அதனால் அவரிடம் நான் எனது அம்மா வீட்டிற்குச் செல்வதாகக் கூறி விடுங்கள்.."என்று சுஜி கூற அவள் சரியென்றாள். விசயத்தைக் கூறி முடித்ததும் தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்..

சுஜிப்ரியா வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீதரின் நண்பன் குமார் அவனது தோழன் ஒருவனுடன் அவளது வீட்டின் அருகிலேயே காத்துக் கொண்டிருந்தான்.. இன்று அவள் தனது ஸ்கூட்டியில் வெளியே செல்வதைக் கண்டு உடனே அவளைப் பின் தொடர்ந்தான். செல்கையிலேயே ஸ்ரீதருக்கு ஃபோன் செய்து விசயத்தைத் தெரிவித்தான்..

பின் ஆள் அரவமற்ற அந்தச் சாலையில் சுஜி சென்று கொண்டிருந்த போது.. அவளது வண்டியை மறித்து நிறுத்தி... அவள் முன்னே சென்று நின்றான்.. "மேடம்.. இந்த முகவரி எங்கே இருக்கிறதென்று கூற முடியுமா..?"என்று அவன் வினவ... வண்டியில் செல்பவளை வழி மறித்துக் கேள்வி கேட்கிறான் முட்டாள்.. என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே.. அவன் நீட்டிய பேப்பரை வாங்கினாள்.. அந்தத் தாளில் எதுவுமே எழுதப் படாததைக் கண்டு "என்ன.. இது...?"என்று அவள் நிமிர்ந்து அவனைக் கேட்பதற்குள்.. பின்னே இருந்து எவனோ ஒருவன் அவளது மூக்கில் மயக்க மருந்து கலக்கப்பட்டத் துணியை அழுத்தினான்..

அடுத்த நிமிடம் அவள் மயங்கிச் சரிய அப்படியே அவளை அள்ளிக் கொண்டு போய் காருக்குள் வைத்து ஏற்கனவே திட்டமிட்டபடி ஊரின் எல்லையில் இருந்த தென்னந்தோப்புக்கு வண்டியைத் திருப்பினான் குமார். விசயம் வெற்றி பெற்று விட்டதை ஸ்ரீதருக்குத் தெரிவிக்க.. அலுவலகத்திலிருந்தவன் தனது



DO NOT COPY

சீட்டில் இருந்து குதிக்காத குறையாக மகிழ்ச்சியடைந்தான். உடனே தானும் அந்த இடத்திற்கு வந்து சேர்வதாகக் கூறி விட்டு.. அலுவலகத்திலிருந்து புறப்பட்டான். ஷ்யாம் அப்போது அலுவலகத்தில் இல்லாதது அவனுக்கு சுலபமாகிப் போனது...

ஸ்ரீதர் அலுவலகத்தை விட்டுக் கிளம்பியதும் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்த டிடெக்டிவ் அவனைத் தொடர்ந்து தானும் பைக்கை உதைத்துப் புறப்பட்டார். வெறியும்,ஆத்திரமும் நெஞ்சு முழுக்க நிரம்பி இருந்தாலும்.. மெலிதான உறுத்தலும் பயமும் இருந்தது ஸ்ரீதருக்கு. ஒரு மிகப் பெரிய காரியத்தை நண்பனின் தூண்டுதலால் செய்யப் போவதை எண்ணி... பீதியானது.. உண்மை ஊராருக்குத் தெரிந்தால் என்னவாவது... ஜெயிலில் களி திங்க வேண்டியது தான்...

பயத்தில் சுற்றும் முற்றும் பார்த்தபடி வண்டியைச் செலுத்தியவனுக்குத் தன்னை யாரோ தொடர்வது போல் தோன்றத் திரும்பிப் பார்த்தான். 2,3 முறை அவன் தன்னை திரும்பிப் பார்ப்பதைக் கண்ட டிடெக்டிவ் சுரேஷ், அவனைக் கடந்து வண்டியை செலுத்திக் கொண்டு போய் அவனுக்கு சந்தேகம் வராதது போல் பார்த்துக் கொண்டார்.

அவர் தன்னைக் கடந்து சென்று விட்டாலும்.. ஸ்ரீதருக்கு பயம் போகவில்லை.. வழியில் இருந்த ஹோட்டலின் முன்பு வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தான். அவன் ஹோட்டலுக்குச் சென்றதும்... கொஞ்சம் நிம்மதியடைந்த சுரேஷ்.. இதற்காகத் தான் வந்தானா..., என்றபடி அங்கேயிருந்த பெட்டிக் கடையில் நின்று கொண்டு ஹோட்டலை நோட்டம் விடத் தொடங்கினர்.

கடந்த 4 நாட்களாக ஸ்ரீதர் சந்தேகப் படும் படியாக எதுவும் செய்யாததால் அசட்டையான மன நிலையுடனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் 2 மணி நேரத்துக்கும் மேலாக வெளியே காத்திருந்தவர், பின்பு வேறு யாரோ ஒருவன் வந்து ஸ்ரீதரின் பைக்கை எடுப்பதைக் கண்டு அவசரமாக அருகே சென்று விசாரித்தார்.

அவன் இந்த ஹோட்டலின் சிப்பந்தி என்றும்.. ஸ்ரீதர் இந்த ஹோட்டலுக்கு அடிக்கடி வருபவனென்றும் கூறியவன் அவருக்கு ஏதோ அவசர வேலையிருப்பதாகக் கூறிச் சென்று விட்டார். அவர் வண்டியை அவரது அலுவலகத்தில் நிறுத்தச் சொல்லி சாவி கொடுத்திருக்கிறார்.. என்று அவன் முடித்து விட..

சென்று விட்டானா..?, ஆனால் வெளியே அவன் வந்தது போல் தெரியவில்லையே என்று தாடையைத் தடவியவர் அவனிடமே விசாரித்தார்.. ஹோட்டலை விட்டு வெளியே செல்வதற்கு இரண்டு வழியிருப்பதாகவும்

DO NOT COPY

அவன் அந்த இரண்டாவது வழியில் 1 மணி நேரத்திற்கு முன்பே வெளியேறி விட்டதாகவும் கூற.. சந்தேகம் அதிகமானது சுரேஷிற்கு..

உடனே ஷ்யாமிற்கு ஃபோன் செய்து அவர் விசயத்தைத் தெரிவிக்க.. ஒரு நிமிடம் ஷ்யாமிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.. "ஹலோ.."என்று அவர் மறுபடி அழைத்ததும்.. "அவன் எந்த வழியாகச் சென்றிருக்கிறான் என்பதை உங்களால் யூகிக்க முடியுமானால்.. உடனே செல்லுங்கள் சுரேஷ்... நான் 5 நிமிடத்தில் மறுபடி அழைக்கிறேன்.."என்றவன் உடனே சுஜிப்ரியாவிற்கு அழைத்தான். அவளது எண் எடுக்கப்படாமல் போக.. வீட்டிற்கு முயற்சித்தான்.

"சுஜி அவளது அம்மா வீட்டிற்குச் சென்றிருக்கிறாள் கண்ணா.."என்று சீதா கூறி விட.. அவளது அம்மா வீட்டிற்கு முயற்சி செய்தான்.. ஆனால் அவள் அங்கே வரவில்லையென்று வள்ளி கூற... "காட்..."என்று நெற்றியை அழுத்தினான்.. எங்கே சென்றாளென்றே தெரியவில்லையே.. இவன் ஏதோ செய்திருக்கிறான் படுபாவி.. என்று உறுமிய ஷ்யாமினால் மேலே எதையும் யோசிக்க முடியவில்லை.. என்ன செய்தான் இந்தச் சண்டாளன்! என்றெண்ணியவனுக்கு ஸ்ரீதரின் மீது கொலைவெறியே வந்தது.

அவளுக்கு ஸ்ரீதரினால் ஏதேனும் விபரீதமாக நடந்து விட்டால்... அவனைக் காக்க ஆண்டவனே வந்தாலும்.. கொல்லாமல் விட மாட்டேனென்று சபதமெடுத்துக் கொண்டவன் வண்டியை எடுத்துக் கொண்டு ஸ்ரீதரைத் தேடிப் புறப்பட்டான்.

**கு**மாரும்,அவனது நண்பனும் ஊரின் எல்லையில் இருந்த தென்னந்தோப்புக்குச் சென்று ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த அந்தப் பாதி உடைந்த வீட்டின் உள்ளே சென்று மயக்கத்திலிருந்த சுஜிப்ரியாவைக் கீழே கிடத்தினர். பின் கதவைப் பூட்டி விட்டு வெளியே சென்று நின்று ஸ்ரீதருக்காகக் காத்திருந்தனர். குமாருடன் இருந்த நண்பன் அத்தோடுத் தன் வேலை முடிந்து விட்டது என்பதைப் போல் பணத்தை வாங்கிக் கொண்டுக் கிளம்பி விட்டான்.

சிறிது நேரத்தில் ஸ்ரீதர் வந்து சேர்ந்தான். ஹோட்டலில் இருந்து கிளம்பியவன் பஸ்ஸில் பாதி தூரம் வந்து.. மீதி தூரத்தை லிஃப்ட் கேட்டு வேறு ஒருவனுடைய வண்டியில் ஏறி கடைசியாகத் தோப்பிற்கும் வந்தடைந்து விட்டான்.. மயங்கிக் கிடக்கும் சுஜிப்ரியாவைப் பார்க்க எண்ணி கதவைத் திறந்து கொண்டு ஸ்ரீதர் உள்ளே செல்ல.. குமார் "நான் சென்று சாப்பிட ஏதேனும் வாங்கி வருகிறேன்.. உன் அண்ணி.. குறைந்தது 2 மணி நேரத்திற்கேனும் முழிக்க மாட்டாள்.. இவளை நாடு கடத்தும் திட்டத்திற்காக நான் ஏற்பாடு செய்திருந்த.. ஆள் விரைவிலேயே இங்கே வந்து விடுவான்.. எல்லாமே திட்டமிட்ட படி சீராகச் சென்று கொண்டிருக்கிறது... யாருக்கும் நம் மீது சந்தேகமும் இல்லை... இவளாகவே எங்கேயோ ஓடிச் சென்று விட்டதாகக்

கதைக் கட்டி விடலாம்... என்ன..?" என்று கூற... வெற்றிச் சிரிப்பு சிரித்தான் ஸ்ரீதர். தானும் சிரித்து நண்பனின் தோளைத் தட்டி விட்டு நகர்ந்தான் குமார்.

அவன் சென்றதும் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த ஸ்ரீதர்... கீழேக் கண் மூடி மயங்கிக் கிடந்திருந்த சுஜிப்ரியாவை ஏளனமாக நோக்கினான். "ஜோடிப் புறாக்களில் ஒன்று இங்கே யாருமற்ற அனாதையாக் கிடக்கிறதே... அங்கே இவளது ஜோடி பெண்டாட்டியைக் காணாது.... துடித்துக் கொண்டிருப்பானே.. ஒருவர் மீது மற்றவர் வைத்திருக்கும் நம்பிக்கையென்ன... காதலென்ன.. பாசமென்ன...?, உனக்கு ஏதாவது ஆகி விட்டதென்றால் அவன் உயிர் போனது போல் துடிக்கிறான்.. அப்படியென்னடி..... காதல் உங்கள் இருவருக்கும்...?"

"உன் தோழிக்காக... வக்காலத்து வாங்கி என்று என் வீட்டில் நீ காலடி எடுத்து வைத்தாயோ.. அன்றே என் நிம்மதியும்,சந்தோசமும் அழிந்து போனது.. உன்னால் தானே ஷ்யாமிற்கு உண்மை தெரிய வந்தது...?,அதனால் தானே என்னை இந்த ஊரை விட்டே துரத்தினான்... ஏற்கனவே அவன் வைத்தது தான் சட்டம் என் வீட்டில்... இதில் நீயும் இப்போது அவனுடன் சேர்ந்து கொண்டு ஒரு தனி ராஜ்ஜியமே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்....!"

"முதல் முறை உங்கள் இருவரையும் இணைத்து வைத்து ஃபோட்டோ அனுப்பிய போதே.. நீ பயந்து விலகிச் சென்றிருந்தால் எனக்குப் பிரச்சனையே வந்திருக்காது... ஆனால் நீ... ஷ்யாமைத் திருமணமே செய்து கொண்டு என் வீட்டுக்குள் நுழைந்து விட்டாய்... என்னை அவமதித்துப் பேசிய உன்னை நான் அண்ணி,அண்ணியென்று வாய் நிறைய அழைக்க வேண்டுமா...?"

"நீ ஒட்டிக் கொண்டதோடு மட்டுமில்லாமல்.. உன் தம்பியையும் உடன் சேர்க்கப் பார்க்கிறாய்.... என் குடும்பத்தின் செல்வ நிலையைப் பற்றி உனக்குத் தெரியுமா...?, எப்பேர்ப்பட்ட பணக்கார இடம்.. உனக்கும் உன் தம்பிக்கும் அதை அனுபவிக்க என்ன தகுதி இருக்கிறது...? அக்காவும்,தம்பியும் என் வீட்டுச் சொத்தைச் சுருட்டப் பார்க்கிறீர்களோ!"

"நீ அழிய வேண்டும்.... அதைக் கண்டு ஷ்யாம் துடிக்க வேண்டும்.. என் விதியை எழுதுவதற்கு.. அவன் என்ன பிரம்மாவா..?, என் விருப்பத்தை அறிந்து கொள்ளாமல்.. அவனே எனக்கும் சேர்த்து முடிவெடுத்து விடுகிறான்...?, நான் என்ன செய்ய வேண்டுமென்பதை அவன் எதற்காகச் சொல்ல வேண்டும்...?, என்று விவரம் தெரிய ஆரம்பித்ததோ... என்று ஷ்யாம் பிரபுவை என் வீட்டில் தலையில் தூக்கி வைத்து ஆடுகிறார்களென்ற உண்மையைப் புரிந்து கொண்டேனோ.. அன்றிலிருந்து அவன் மீது எனக்கு வெறுப்பு மட்டுமே..."

"பொறுப்புள்ள அண்ணனாக நடந்து கொள்வதாகக் கூறிக் கொண்டு அராஜகம் செய்கிறான் அவன்.. இதை நான் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க

DO NOT COPY

வேண்டுமா..?, இப்போது.. அவனுக்கு நான் கொடுக்கப் போகும் அடி.. இந்த ஜென்மம் முழுதும் அவனால் எழுந்திருக்க முடியாத அளவிற்குப் பலமான அடி.. குடும்ப கௌரவம் என்னால் குலைந்து விடும் என்று குதித்தானே.. இன்று அவன் பெண்டாட்டி.. அவனை விட்டு ஓடிச் சென்று விட்டால் என்கிற சேதி பரவி விட்டால்... குடும்ப கௌரவம்.. சின்னா பின்னமாகி விடுமே... என்ன செய்வான்...?,"என்று பலமாகச் சிரித்தவன் தொடர்ந்து....

"உன் ஒருத்தியை வைத்தே.. நான் நினைத்த காரியங்கள் அனைத்தையும் சாதித்து விடுவேன்.. என் வாழ்வின் இத்தகைய மாற்றங்களுக்கு மூலக் காரணியான உன்னை.. நாடு கடத்தப் போகிறேன்.. நீ ஓடிச் சென்று விட்டதாகக் கதை கட்டப் போகிறேன்... ஷ்யாம் இதைக் கேட்டுத் துடிப்பான்.. மொத்தக் குடும்பமும் கட்டிக் காத்த மானம்,கௌரவம் அவனால் அழிந்து போகும்... ஷ்யாம் மரண வலியை உணர்வான்.. அந்த நேரம்.. அவனை மன சாந்திக்காக சிங்கப்பூர் செல் என்பேன் நான்..."

"பின் என்ன...?, என் வீட்டில் என் ராஜ்ஜியம் மட்டும் தான்.. இனி ஷ்யாமினால் தனது ஹிட்லர் ஆட்சியைத் தொடர முடியாது.. அவன் வேரறுந்த மரமாகி விடுவான்.. நடை பிணமாகக் காட்சியளிப்பான்.. அதைக் காண்பது தானே என் வாழ்வின் லட்சியம்.. காண்பேன்.. நிச்சயம் காண்பேன்...."என்று அவன் வெறியுடன் கூறி முடித்த அந்த வேளை..... "அது வரை நீ உயிரோடு இருந்தால் தானேடா..... பொருக்கி ராஸ்கல்....."என்று முழு வீரியத்தில் சுஜி ப்ரியாவின் குரல் கேட்டது.... குரல் வந்த திசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த... ஸ்ரீதர் அதிர்ச்சியில் உறைந்து விட்டான்... தனது முழுக் கோபத்தையும்,ஆங்காரத்தையும் முகத்தில் தேக்கி..... காளி ரூபத்தில் காட்சி அளித்துக் கொண்டிருந்தாள் சுஜிப்ரியா.

2 மணி நேரத்திற்கேனும் அவள் கண் விழிக்க மாட்டாள் என்று நண்பன் கூறி விட்டுச் சென்றதால் தான்.. தைரியமாகத் தனியே இருக்கச் சம்மதித்தான் ஸ்ரீதர்.. ஆனால்.. அரை மணி நேரத்திலேயே சுஜிப்ரியா எழுந்து விட்டதைக் கண்டு அவன் திகைத்து நின்றான். அவன் செயலிழந்து நின்றதென்னவோ இரண்டு நிமிடம் தான்.. பின் இவளை அடக்குவதற்கு ஆள் தேவையா என்ன... என்றெண்ணிக் கொண்டு... வேகமாக அவளை நோக்கிச் சென்றான்.... ஆனால் அடுத்த நொடி.. சுஜிப்ரியாவின் அதிரடியானத் தாக்குதலில் வயிற்றைப் பிடித்துக் கொண்டு "அம்ம்ம்ம்ம்மா....."என்று கீழே சரிந்தான்...

குமாரின் நண்பன் அவள் முகத்தில் மயக்க மருந்தை அழுத்திய போதே... சுதாரித்துக் கொண்டவள்... மூச்சை அடக்கி.. மயங்கியது போல்... நடித்து அவர்களுடன் உடன் பட்டாள்.. யோகக் கலையில் கற்று வைத்திருந்த மூச்சுப் பயிற்சி இதற்கு உதவி புரிந்தது... யார் இதையெல்லாம் செய்கிறார்களென்று அவளுக்கு அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.. அதனால் அமைதியாக

DO NOT COPY

அனைத்தையும் கேட்டுக் கொண்டே சாய்ந்திருந்தாள்... குமார், ஸ்ரீதருக்கு ஃபோன் செய்த போதே.... இந்தக் காவாலி தானா....? என்று கோபத்துடன் வினவியவள்.. மேலே என்ன நடக்கப் போகிறதென்று காத்திருந்தாள்... ஸ்ரீதரின் நோக்கம் என்ன... எதற்காக அவன் இதையெல்லாம் செய்கிறான் என்று தெரிந்து கொள்ள எண்ணினாள்..

ஆனால்.. அவன் ஷ்யாமைப் பற்றிப் பேசிய அனைத்தையும் கேட்ட பின் அவளால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை... இந்தப் பொருக்கி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக அவன் பிரம்மப்பிரயத்தனம் செய்து கொண்டிருக்கையில்... இவன்... இப்படி ஒரு கீழ்த் தரமான காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறான்...

அண்ணன் மனைவியைக் கடத்திக் கொண்டு வந்து.. அவளை வேறு ஒருவனுக்கு விற்று.. இதனால்.. அண்ணனின் மகிழ்ச்சி கெட வேண்டுமென்று நினைக்கின்றான்.. ஒரு பெண்ணின் வாழ்வை.. அவள் தனது அண்ணன் மனைவி என்பதைப் பற்றிக் கூடக் கவலைப் படாமல்.. ஈன புத்தியோடு... அவளைக் கடத்தி வைத்து விற்க நினைக்கிறான்... முதன் முதலில் இருவரையும் இணைத்து வைத்து ஃபோட்டோ அனுப்பி அவமானத்தைத் தேடித் தந்ததும் இவன் தான்... சண்டாளன்!

நல்ல பண்புகளை மட்டுமே கற்றுக் கொடுத்திருக்கும் அந்த உயர்ந்த குணம் கொண்ட பெற்றோருக்கு.. இப்படி ஒரு தறுதலை மகனா...?, சிங்கப்பூரிலிருந்து திரும்பியதிலிருந்து நல்லவன் போல் வேடமிட்டு.. அனைவரையும் நம்ப வைத்து ஏமாற்றியிருக்கிறான்... ஏமாற்றுக்காரன்.. இந்த உண்மைகளனைத்தையும் தெரிந்து கொண்டதால் தான்.. ஷ்யாம் இவனை மறுபடியும் சிங்கப்பூர் அனுப்பப் பார்த்தாரோ....

உன் ஆட்டத்தை இத்துடன் நான் முடித்து வைக்கிறேன் என்றெண்ணியவள்.. கீழே கிடந்தவனைத் துச்சமாக நோக்கினாள்... "கராத்தேயில் கருப்பு பெல்ட்.... வலி எப்படி...?,உயிரை எடுக்கிறதா...?, என்னை விட்டு விடு என்று அழுது புலம்பி உன் காலைப் பிடிப்பேன் என்று நினைத்தாயா...?, ஈன ஜென்மமே.... பெண் தானே.. அப்படி என்ன செய்து விடப் போகிறாள் என்று எண்ணியிருந்தாயானால் உன் எண்ணத்தை மாற்றிக் கொள்..."

"ரோட்டில் போகிற பெண்களுக்கு இப்படி ஏதேனும் ஆகியிருந்தாலே.... பொங்கி விடுவேன்... நீ என்னையே சிறையெடுப்பாயா...?,"என்று அவனை சரமாரியாகத் தாக்க... அவளது அடுத்தடுத்த அடிகளில் சுருண்டு விழுந்தான்.. திருப்பிக் கை ஓங்க.. வாய்ப்பே அளிக்காமல்.. அவள் அடித்து வீழ்த்த... செய்கையற்றுச் சாய்ந்தான்...

“உன்னைப் போன்ற கோணல் புத்தியிருப்பவர்களுக்கெல்லாம் வெற்றி என்பது என்றும் கிட்டாத ஒன்று.. உன் அண்ணனுக்கும் எனக்குமான நேசத்தை உன்னைப் போன்ற... கேடு கெட்டவனால்.. குலைக்க முடியும் என்று நினைக்கிறாயா...?, உண்மை தெரிந்து உன் அண்ணன் உன் உயிரை எடுத்து விடும் முன்பு எங்கேனும் கண் காணாத இடத்துக்குச் சென்று விடு.... உன்னை எச்சரிக்கிறேன்.. இனி எங்கள் வாழ்வில் உன் குள்ள நரித் தனத்தைக் காட்டி.. மேலும் சவுக்கடி வாங்காதே....”என்று முடித்தவள்... வேக வேகமாக கதவைத் திறந்து கொண்டு ஓடப் பார்த்தாள்..

சுஜி பேச ஆரம்பித்த போதே... வந்து விட்ட குமார்... அவள் அவனைச் சரமாரியாகத் தாக்கியதைக் கண்டு பயந்து ஒதுங்கி விட்டான்.. ஆனால் அவள் தப்பிக்கப் பார்த்ததும்.. என்ன செய்வதென்று விழித்துப் பின்.. அவள் வெளியே வந்ததுமே... பாக்கெட்டில் வைத்திருந்த மயக்க மருந்து கலந்த துணியை அவள் முகத்தில் வைத்து அழுத்தி விட்டான்..

இந்த முறை.... அவனது முயற்சி ஜெயித்து சுஜிப்ரியா மூச்சடக்க முயன்றுத் தோற்றுப் பின் நிஜமாகவே மயங்கி விட்டாள்.. அவள் மயங்கி விட்டதை நன்றாக உறுதி செய்து விட்டுப் பின் தரதரவென இழுத்துச் சென்று அறைக்குள் தள்ளினான். குமார் இழுத்து வருவதைக் கண்டு.. உதட்டில் ரத்தம் கசிய.. முயன்று எழுந்து வந்த ஸ்ரீதர்.. “நிஜமாகவே மயங்கி விட்டாளா..?, சோதித்துப் பாரடா..”என்று பதற...

“இல்லையில்லை.. இந்த முறை நிஜமாகவே மயங்கி விட்டாள்.. “என்றவன்.. இடுப்பில் கை வைத்து.. தலையைப் பின் சாய்த்து பெரு மூச்சு விட்டான்.. “என்ன டா உன் அண்ணி.. ப்ரூஸ்லி,ஜாக்கி சானுக்கெல்லாம்.. தங்கையாக இருப்பாள் போல.. இப்படி அடிக்கிறாள்.. இந்த விசயத்தில் உன் அண்ணனுக்கு ஏற்றவள்.. அவனும் வெளுத்துக் கட்டுவதில் வல்லவன்.. இவளும் இப்படி.... நல்ல குடும்பமடா..”என்று அவன் தலையிலடித்துக் கொள்ள... உதட்டிலிருந்த ரத்தத்தைத் துடைத்தபடி ஓரமாகச் சென்றமர்ந்தான் ஸ்ரீதர்.

“திமிர் பிடித்தவள்... எனக்கு வாய்ப்பளிக்காமல்.. இப்படி போட்டுப் பிரட்டி எடுக்கிறாள்... அவள் பக்கத்தில் செல்லக் கூட பயமாக இருக்கிறதுடா... அவள் மயங்கி விட்டாள் தானே...?”என்று மிரண்ட விழிகளுடன் வினவியவனை.. “அவள் மயங்கி விட்டாள்.. நீ வா.. கதவைப் பூட்டி விட்டு வெளியே சென்று வருவோம்... வாடா..”என்று அவன் கையைப் பற்றி இழுத்துச் சென்றான்....

அந்த தென்னந்தோப்பை விட்டு வெளியே சற்றுத் தொலைவில்.. பெட்டிக் கடை ஒன்று இருந்தது... அங்கே நின்று இருவரும் புகைப்பிடித்துக் கொண்டிருந்தனர். “அவளுக்குக் கராத்தே தெரியுமாம்.. அதனால் தான் அப்படித் தாக்குகிறாள்.. பெண்ணா அவள்...?, எப்படித் தான் என் அண்ணன் அவளுடன்

DO NOT COPY

குடும்பம் நடத்துகிறானோ.... லேடி விஜயகாந்தாக இருப்பாள் போலும்.. நல்ல நேரத்தில் நீ வந்தாய்.. இல்லையென்றால்.. அவள் அடியில் நான் உயிரை விட்டிருந்தாலும் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.. யோகா,கராத்தே.. இன்னும் என்னவெல்லாம் கற்று வைத்திருக்கிறாளோ.... கிராதகி..”

“நீ சொன்ன ஆள் எப்போதடா வருவான்..?, அவளை அவனிடம் ஒப்படைத்தால் தான் நிம்மதி...”என்று அவன் கூற.. “என்னடா உன் அண்ணியை அனுப்புவதில் உனக்கு அவ்வளவு அவசரமா..?”என்று சிரித்தான் குமார்.. “ஆமாம் டா.. அவசரம் தான்.. ஷ்யாமின் முகத்தில் தோன்றும் சோகத்தை.. அவனது வலியை நான் பார்க்க வேண்டும்.. இருவரும் சேர்ந்து என் வாழ்க்கையில் விளைவித்த அத்தனை துன்பங்களுக்கும்... அவர்கள்.. இப்போது வேதனைப் படுவதை நான் பார்க்க வேண்டும்...”எனக் கூறினான். “சரிடா.. அவள் விழித்து விடப் போகிறாள்.. வா.. செல்லலாம்..”என்று குமார் கூற.. இருவரும் நடந்து சென்றனர்.

வெளியூர் செல்வதற்காகத் தன் காரில் புறப்பட்ட சரவணன் (சுஜியின் மாமா) தொடர்ச்சியாகக் கார் ஓட்டிக் களைத்துப் போனதால்.. வழியில் தென்பட்டப் பெட்டிக் கடையில் சோடா வாங்கிக் கொடுத்தபடி நின்று கொண்டிருந்தார். அங்கே ஸ்ரீதர் தன் நண்பனுடன் வந்ததைக் கண்டு.. இவன்.. ஷ்யாமின் தம்பியாயிற்றே.. ஷ்யாம்-சுஜி திருமணத்தின் போது.. அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது.. ஸ்ரீதரின் புகைப் படத்தை அவர்களது வீட்டில் பார்த்திருக்கிறார். ஆனால் உறுதியாகத் தெரியாததால்.. அவனிடம் பேசி அறிந்து கொள்ளலாம் என்று முதலில் எண்ணினார். பின் என்ன நினைத்தாரோ.. அவன் பேசுவதைக் கவனித்தபடி அமைதியாக நின்று விட்டார்.

அவன் கூறிய அனைத்தையும் கேட்டவருக்கு உடம்பு கொதித்தது... இவன் சுஜிப்ரியாவை அடைத்து வைத்திருக்கிறானா..?, ஆனால் எதற்காக..?, காரணத்தை யோசிப்பது இப்போது முக்கியமல்ல.. முதலில் சுஜியைக் காப்பாற்ற வேண்டும்.. என்றெண்ணியவர்.. அவர்கள் சென்ற பாதையைத் தொடர்ந்து தானும் சென்றார்..

பிறந்ததிலிருந்து செல்லமாக வளர்க்கப்பட்ட.. வீட்டின் மகாராணியாக வலம் வந்தவளுக்கு இப்படி ஒரு கதியா..?, சுஜியின் சிரித்த முகம் வந்து போனது அவருக்கு.. சுஜிம்மா.. உன்னை அதே சிரிப்புடன் நான் மறுபடியும் காண வேண்டும்.. கிருஷ்ணா.. என் பெண்ணைக் காப்பாற்று! என்று பிரார்த்தித்துக் கொண்டவர் செல்லும் வழியிலேயே ஷ்யாமிற்கு ஃபோன் செய்தார்.

ஸ்ரீதர் எங்கே சென்றானென்று தெரியவில்லையென சுரேஷ் கூறிய அதே நேரத்தில் சுஜிப்ரியாவையும் காணவில்லையென்று தெரிந்து கொண்டதும்... உடனே சுரேஷ் உடன் சுஜிப்ரியாவைத் தேடி ஸ்ரீதர் சென்ற திசையில் தானும்

DO NOT COPY

சென்றான் ஷ்யாம் பிரபு.. ஆனால் வெகு நேரமாக அலைந்து திரிந்தும் எதையும் கண்டறிய முடியவில்லையென்றதும்... ஷ்யாமின் கலக்கம் அதிகமானது...

"என் வைஃபை காணவில்லை சுரேஷ்.. நிச்சயம் அவன் தான் ஏதேனும் செய்திருக்க வேண்டும்... உயிர் போகுமளவிற்கு வலிக்கிறது சுரேஷ்.. என்னைக் கல்யாணம் செய்து கொண்ட பாவத்திற்காக அவள் எதற்காக பலி ஆக வேண்டும்..?,அவனுக்கு என் மீது கோபமென்றால்.. என்னை ஏதாவது செய்துத் தொலைத்திருக்கலாமே.... எனக்கு இப்போதே அவளைப் பார்த்தாக வேண்டும்.."என்று கதற.. சுரேஷிற்கு அவனை என்ன சொல்லிச் சமாதானப் படுத்துவதென்றே புரியவில்லை...

"சார்.. உங்கள் மனைவிக்கு ஒன்றும் ஆகியிருக்காது.. அவர்கள் நன்றாகத் தான் இருப்பார்கள்.. நீங்கள் கவலைப் படாதீர்கள்.. நிச்சயம் கிடைத்து விடுவார்கள்.. கண்டு பிடித்து விடலாம்.. கலங்காதீர்கள்.."என்று கூற.. எதுவும் கூறாமல் அமைதியாக வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான் ஷ்யாம். அவன் மனம் எரிமலையாய்க் குமுறிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் சரவணனிடமிருந்து ஃபோன் வர.. புது நம்பராக இருக்கிறதே என்று மனம் பதற.. நடுங்கிய விரல்களுடன் "ஹலோ..."என்றான்.. "ஹலோ.. ஷ்யாம் நான் சரவணன் பேசுகிறேன்.. சுஜியின் மாமா.... உங்கள் தம்பி ஸ்ரீதர்.." என்று அவர் முடிப்பதற்குள்.. "அங்கிள்.. ஸ்ரீதரைப் பார்த்தீர்களா..?, அவன் எங்கேயிருக்கிறான்..?"என்று வினவ..

"ஷ்யாம்.. கவனமாகக் கேள்.. உன் தம்பி ஊருக்கு வெளியே இருக்கும் தென்னந்தோப்பில் ஒரு ஓட்டு வீட்டில் சுஜியை அடைத்து வைத்திருக்கிறான்.. உடனே நீ கிளம்பி வா.. சுஜியின் நிலையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.. அவள் ஸ்ரீதரைத் தாக்கியிருக்கிறாளென்று அவர்களது பேச்சிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.. இன்னும் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறானோ தெரியவில்லை... நான் அவனைத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறேன்.."என்று கூற...

ஒரு வழியாக மனைவியைப் பற்றித் தெரிந்து கொண்டதில் நிம்மதியுற்ற ஷ்யாம்,,, இனி நிச்சயம் சுஜியைக் காப்பாற்றி விடலாமென்று நம்பினான்., இப்போது அவனது பயம் அனைத்தும் கோபமாக மாறி... ஸ்ரீதரின் பக்கம் திரும்பியது... "அங்கிள்.. நான் அந்த இடத்திற்கு அருகில் தான் இருக்கிறேன்.. இன்னும் 10 நிமிடத்தில் அங்கே இருப்பேன்.. நீங்கள் ஜாக்கிரதையாகச் செல்லுங்கள்.."என்றவன் தொடர்ந்து கலங்கிய குரலில் "என் சுஜியைக் காப்பாற்றியாக வேண்டும் அங்கிள்... அவளுக்கு... அவளுக்கு எதுவும் ஆகி விடக் கூடாது"என்று கூற..

DO NOT COPY

அவனது குரலில் இருந்த வலியைப் புரிந்து கொண்டவர் “என் உயிரைக் கொடுத்தேனும் அவளைக் காப்பேன் ஷ்யாம்.. நிச்சயம் சுஜிக்கு ஒன்றும் ஆகாது...”என்று உறுதியான குரலில் கூறியவர் செல்லை அணைத்து விட்டு அவர்களைப் பின் தொடர்ந்தார்..

15 நிமிட நடைக்குப் பின் அந்த ஓட்டு வீடு கண்ணில் தென் பட... மறைந்திருந்து இருவரையும் கவனித்தார்.. உள்ளே மயங்கிய நிலையில் கீழே கிடந்த சுஜியைக் கண்டு உயிரே போனது அவருக்கு... சிறிது நேரத்தில் ஸ்ரீதரை உள்ளே விட்டு விட்டு... செல்லில் பேசிய படி குமார் வெளியே வர.. இருவரையும் தனித்தனியே தான் தாக்கியாக வேண்டும் என்றெண்ணியவர்...

அவன் அருகே வந்ததும் கீழே கிடந்த தென்னை ஓலையை எடுத்து அவன் மீது ஓங்கி அடித்தார்.. தீடீரென்ற தாக்குதலில் அலறி கீழே விழுந்தான் குமார்.. மேலும் அவனை ஆத்திரத்தில் அவர் அடித்து விலாச.. குமாரின் அலறலைக் கேட்டுப் பதறி வெளியே வந்த ஸ்ரீதர் யாரோ ஒருவன் அவனை அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டவன்...

மேலும் பதறி.. கீழே கிடந்த இழனியை எடுத்து அவர் தலையைக் குறி வைத்து எறிந்தான்.. அவனது அரவம் கேட்டுத் திரும்பியவர்.. அவனது தாக்குதலிலிருந்து தப்பிக்க எண்ணி.. விலக.. அந்த இழனி அவரது தோளைப் பதம் பார்த்தது... வலியில் முகம் சுளித்தவருக்கு.. ஸ்ரீதரின் மீது கோபம் அதிகமாக.. வேகத்துடன் அவனை நோக்கி ஓடி வந்தவரின் கால்களின் மீது மறுபடியும் இழனிகளை.. எறிந்தான். இந்த முறை சரியாக அது அவரின் கால்களைச் சென்றடைந்து விட.. தடுமாறிக் கீழே விழுந்தார்..

கீழே விழுந்தவர் மறுபடியும் எழும் முன் மீண்டும் இழனிகளை எறியக் கைகளை உயர்த்தியவனை.. ஒரு வலிய கரம் தடுத்தது... யாரென்று ஸ்ரீதர் திரும்பிப் பார்த்த மறு நொடி... ஷ்யாம் பிரபுவின் அறையில் சுருண்டு கீழே விழுந்தான்...

அண்ணனைச் சற்றும் எதிர்பார்த்திராத ஸ்ரீதர்.. மரண பயத்தில் ஓட முயல... கீழே கிடந்த இழனிகளை அவன் காலில் எறிந்து அவனது ஓட்டத்தை நிறுத்தியவன்... அதே இழனிகளை வைத்தே அவன் தலையில் ஓங்கி அடித்தான்.. மரண வலியில் ஓலமிட்டபடி.. தப்பிக்க எண்ணி... அங்குமிங்கும் அலைந்து பதறி.... கடைசியில் முடியாமல் போய்... உயிருக்கு பயந்து அண்ணனிடமே கெஞ்சத் துவங்கினான்..

“அண்ணா.. அண்ணா... விட்டு விடு... ப்ளீஸ்... வேண்டாம்... வேண்டாம் அண்ணா...”என்று அவன் கதற.. ஆத்திரத்தில் தன்னிலை மறந்து அவனை அடித்துத் துவைத்துக் கொண்டிருந்த ஷ்யாம்.... அவன் அண்ணன்



DO NOT COPY

என்றழைத்ததில் மேலும் வெறியாகி.... "அண்ணனா....?, அண்ணன் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமாடா உனக்கு...?, உன் நலத்தை மட்டும் எண்ணிய எனக்கு நீ செலுத்தும் நன்றிக் கடனா இது...?, இனியொரு முறை என்னை அண்ணன் என்றழைத்தாயானால் கொன்று விடுவேன்..."என்று அவன் மீது அவனைத் தன் காலால் எட்டி உதைக்க.. நான்கடி தள்ளி விழுந்தான் அவன்.

"உனக்கு என்னடா கோபம் என் மீது...?, வேலை வெட்டியில்லாமல் திரிந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியாது.. என்னைப் போலவே தொழிலில் என் தம்பியும் பெரியாளாக வேண்டுமென்றெண்ணி உன்னைத் தொழில் கற்றுக் கொள்ளச் சொன்னது தவறா...?, நீ சொந்தக் காலில் நிற்க வேண்டுமென்று நினைத்தேனே.. பொறுப்பானவனாக நீ நடந்து கொண்டு அம்மா,அப்பாவிற்கு நிம்மதி கொடுப்பாய் என்று நம்பினேனே.."

"உன்னை உலகம் மதிக்கும் பெரிய மனிதனாகப் பார்க்க எண்ணியது தவறா..?, நீ தூய்மையான எண்ணங்களுடன்.. ஒரு பெண்ணைக் காதலிப்பதாக என்னிடம் வந்து கூறியிருந்தால் நிச்சயம் ஏற்றுக் கொண்டிருந்திருப்பேன்.. ஆனால் நீ ஒரு திருமணம் நிச்சயமான பெண்ணிடம்.. வம்பு செய்து.. அவளை ஏழை என்று ஏளனமாக எண்ணி.. உன் பணக்காரத் திமிரைக் காட்டினாய்.. அதனால் கண்டித்தேன்.. இங்கேயிருந்தால் நண்பர்களுடன் திரிந்து கொண்டு மேலும் கெட்டுப் போவாய் என்று தானே சிங்கப்பூர் அனுப்பினேன்.... அங்கே சென்றதால் எவ்வளவு நன்மைகளைச் சாதித்திருக்கிறாய் நீ... தெரியுமா..?"

"தொழிலை வெற்றிகரமாகக் கற்றுக் கொண்டு வந்து... அன்னை,தந்தை,தங்கையென அனைவரின் பாசத்தையும்,அன்பையும் திரும்பப் பெற்றிருக்கிறாய்.. உன்னைப் பற்றிய கவலை மறந்து நிம்மதியாக வலம் வர வைத்திருக்கிறாய்... உன்னை மறுபடியும் சிங்கப்பூர் அனுப்புவதாக நான் கூறிய போது.. வீட்டில் அனைவரும் என்னை எதிர்த்தார்கள் தெரியுமா...?,அப்பா உட்பட..." என்றதும் விலுக்கென்று தலை நிமிர்ந்தான் ஸ்ரீதர்.

"அனைவரின் நிம்மதியையும் ஒரே சமயத்தில் கெடுக்கப் பார்த்தாயே... உன் நன்மையை,நலத்தை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும் மொத்த குடும்பத்தையும் இப்படி ஏமாற்றி விட்டாயே....?, என் அன்னை முகத்தில் விழிக்க உனக்கு எந்தத் தகுதியும் கிடையாது.,.. குடும்ப மானத்தை வாங்கி அவரின் அன்பைக் கொச்சைப் படுத்திய உனக்கு என் குடும்பத்திற்குள் நுழைய உரிமை கிடையாது..."என்று கிறீச்சிட்டவன்.... தொடர்ந்து

"என் மனைவி என்ன பாவம் செய்தாள்...?, அவளை எதற்காக இப்படி சித்திரவதைப் படுத்தினாய்...?, எங்கள் இருவரையும் நீ பிரிக்க நினைக்கிறாயா..?, நேசம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு...?,

DO NOT COPY

இன்று அவளுக்கு ஏதேனும் ஆகியிருந்தால்.. இந்த இடத்திலேயே நான் என் உயிரை விட்டிருப்பேன்... அவள் என் உயிருக்கு நிகரானவள்.. என் நேசத்தின் திருவுறு... ஹ்ம், உன்னைப் போன்ற.. மிருகத்திற்கெல்லாம்.. எங்கள் காதலைப் பற்றி எப்படிப் புரியும்... உன்னால் எங்களிருவரையும் எந்த ஜென்மத்திலும் பிரிக்க முடியாது...”

“உன் ஈனத் தனத்தின் உச்சியாக.. இன்று... இப்படியொரு சம்பவத்தைக் கண்டு விட்டேன்... உனக்கு ஒரு வாய்ப்பளிக்கிறேன்.. சென்று விடு.. என் கண்ணில் படாத இடத்திற்குச் சென்று விடு... என் தம்பி என்ற ஒருவன் இன்றோடு செத்து விட்டதாக நான் நினைத்துக் கொள்கிறேன்.. இனி என் முகத்தில் விழிக்காதே... நானோ.. என் மனைவியோ.. நீ செய்த இந்தத் தவறை என்றுமே மன்னிக்க மாட்டோம்... போய் விடு...”என்றவன்.. விறு விறுவென மனைவியிடம் சென்றான்..

அதற்குள் சுரேஷ் மற்றும் சரவணனின் முயற்சியால்.... கண் விழிக்கத் தொடங்கியிருந்தாள் சுஜி... அவள் கிடந்த கோலத்தைக் கண்டு பதறி... “சுஜூ....”என்றபடி அருகே சென்றவனுக்குக் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது... அவள் லேசாகக் கண் விழிக்க.. அவள் கன்னத்தைத் தட்டி.. “சுஜூ.... சுஜூ...”என்றான்.. தன் கணவனின் குரல் கேட்டதும்.. லேசான முறுவலுடன் கண் திறக்க முயன்றவளிடம்.... “என்னை மன்னித்து விடு கண்ணம்மா... உன்னை இப்படிக் கஷ்டப்பட வைத்து விட்டேனே.. சா...சாரிடா...” என்று கலங்கிய குரலில் கூறியவனிடம்...

“ஸ்ரீதர்... ஸ்ரீதர்....”என்றவள்... மீண்டும் மயக்கமானாள்.. “சுஜூ.. சுஜூ...”என்று அவளை உலுக்கியவனிடம் “சார்... உங்கள் மனைவிக்கு ஒன்றுமில்லை.. மயக்க மருந்து கொடுத்திருப்பார்கள் போலும்.. அதனால் தான் நினைவு தப்புகிறது... மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம்... “என்று சுரேஷ் கூற.. “அங்கிள்.. போகலாம்.. இனியும் இங்கே இருக்க வேண்டாம்.... வாருங்கள்..”எனக் கூறி மனைவியைத் தூக்கிக் கொண்டு வண்டிக்கு விரைந்தான்.

சுஜியை காரில் கிடத்தியவன் பின் சுரேஷிடம்... “சுரேஷ்.. அ..அவனை மருத்துவமனையில் அனுமதித்து விடுங்கள்.. வீட்டிற்கு விசயமேதும் தெரிய வேண்டாம்.. நான் சமாளித்துக் கொள்கிறேன்...”என்றவன் “அண்ணா....”என்ற ஸ்ரீதரின் குரலைக் கேட்டு முகம் இறுகினான்..

“அவனைப் போகச் சொல்லுங்கள் சுரேஷ்... அவன் முகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை...”என்று கூறிக் கொண்டிருக்கையிலேயே.. அவன் காலில் விழுந்து “என்னை மன்னித்து விடு அண்ணா... ஆத்திரத்தில் அறிவிழந்து என்னன்னவோ செய்து விட்டேன்.. அம்மா... அம்மாவிற்கு மட்டும் இந்த

DO NOT COPY

விசயம் தெரிந்தால் என்னை நிச்சயம் வெறுத்து விடுவார்.. அதை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது... நான் செய்த தவறை உணர்ந்து விட்டேன்.. என்னை மன்னித்து விடு அண்ணா....”என்று அழுகையுடன் கூற.. எதுவும் கூறாமல் சுரேஷிடம் அவனைப் பார்த்துக் கொள்ளுமாறு தலையசைத்து விட்டுத் தன் காரில் ஏறிப் புறப்பட்டான்.

செல்லும் வழியிலேயே மருத்துவமனையில் காரை நிறுத்தி.. சுஜியை அழைத்துச் சென்றான்.. சிகிக்சைக்காகக் காத்திருந்த வேளையில்... மருந்து வாங்கி வர வெளியே சென்ற ஷ்யாம் மருந்துடன் திரும்பிய போது... சுஜி இருந்த அறையை எட்டி எட்டிப் பார்த்த படி கலக்கத்துடன் நின்று கொண்டிருந்த சரவணனைக் கண்டான்...

யார் இவர்....?, சுஜியைப் பெற்றவரா...?, அல்ல... சுஜியின் தாய் மாமன்.. அந்த வார்த்தைக்கு முழு அர்த்தம் கொடுத்து விட்டார் இன்று.. தன் உயிரைப் பற்றிக் கூடக் கவலைப் படாமல்.. அவளுக்காக.. இன்று அவர் செய்த காரியம் அவனை நெகிழ வைத்தது... வேகமாக அவரருகே சென்றவன்.. அவர் தோளைப் பற்றி.. “சுஜிக்கு ஒன்றுமில்லை அங்கிள்.. நீங்கள் கவலைப் படாதீர்கள்....”என்று கூற.. அவருக்குக் கண்ணீர் தேங்கியது...

“சரியான நேரத்தில் நீங்கள் கடவுளைப் போல் காப்பாற்றி விட்டீர்கள்.. உங்கள் மகள் இப்போது பத்திரமாக இருக்கிறாள்.. நீங்கள் இல்லாவிட்டால் என்னவாகியிருக்குமோ தெரியவில்லை... என் மனைவியை எனக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறீர்கள்....காலம் முழுதும் உங்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்....“என்று அவர் கையைப் பற்ற...

அவன் தோளைப் பற்றி அணைத்துக் கொண்டார்.. “சுஜிக்கு நீ கிடைக்க அவள் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும் ஷ்யாம்... தம்பியென்று கூடப் பாராமல்.. உன் மனைவிக்காக.. நீ அவனை அடித்துத் துவைத்ததிலிருந்தே தெரிகிறது,.. நீ சுஜியை எவ்வளவு நேசிக்கிறாயென்று... நன்றி ஷ்யாம்.. இது உங்கள் நேசத்தைச் சோதிக்க கடவுள் செய்த விளையாட்டு என்றே எண்ணிக் கொள்.. இனி உங்கள் இருவரின் வாழ்வும் சுகமாகவே அமையட்டும்...”என்று மனமார வாழ்த்தினார்.

அடுத்த அரைமணி நேரத்தில் சுஜியை வீட்டிற்கு அழைத்துச் சென்றான் ஷ்யாம், 2 மணி நேரம் அவள் நன்றாகத் தூங்கி எழ வேண்டுமென்று டாக்டர் கூறியதால்.. இப்போதும் அரை மயக்கத்திலேயே இருந்தாள் சுஜிப்ரியா. வீட்டின் முன்பு காரை நிறுத்தியதும் இவர்களின் வருகைக்காகக் காத்திருந்த ஒட்டு மொத்த குடும்பமும் வாசலில் நின்றிருந்தது..

DO NOT COPY

சுஜிப்ரியாவைக் காரை விட்டு இறக்கியதும் பதறி முன்னே வந்த சக்தி.. "எ.. என்னவாயிற்று மாமா...?"என்று அவளைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டான். "சுஜி..சுஜி.."என்று அவளை அவன் எழுப்ப முயல.. "அவள் மருந்தின் வீரியத்தால் மயக்கத்தில் இருக்கிறாள் சக்தி.., அவளை உள்ளே அழைத்துச் செல்ல வேண்டும்.. "என்றான் ஷ்யாம்..

பின் சுஜிப்ரியாவைத் தூக்கிக் கொண்டு ஷ்யாம் உள்ளே செல்ல.. அனைவரும் பின் தொடர்ந்தனர். அவளைத் தன் அறையில் கிடத்தி விட்டுக் கீழே வந்தவனை கலங்கிய முகத்துடன் நோக்கியவர்கள்.. என்ன நடந்ததென்று விசாரித்தார்கள்..

சுஜிப்ரியா அவளது வீட்டிற்குச் செல்லும் வழியில் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டதாகவும்... அப்போது தற்செயலாக அங்கே வந்த சரவணன் அவளை மருத்துவமனையில் அனுமதித்ததாகவும் கூறிச் சமாளித்தான்.. எதற்காக மயக்கமடைந்தாள் என்ற வள்ளியின் கேள்விக்கு சத்துக் குறைபாடு அத்தை என்று ஷ்யாம் கூற.. "உன் தம்பியிடம் கராத்தே கலையைக் காட்டி.. அவனை அலற வைத்தவளுக்கு சத்துக் குறைபாடு என்கிறாயே ஷ்யாம்...?"என்று சரவணன் முணுமுணுக்க... வெகு நேரமாகச் சிரிப்பை மறந்திருந்த ஷ்யாமிற்கு லேசான முறுவல் எட்டிப் பார்த்தது..

"சுஜிக்கு இருக்கும் குசும்பெல்லாம் எங்கேயிருந்து வந்ததென்று இப்போது தான் தெரிகிறது.."என்றவன்.. "பயப்படும் படியாக ஒன்றுமில்லை.. ட்ரிப்ஸ் ஏற்றியதால்.. நேரமாகி விட்டது.. அவள் 2 மணி நேரம் தூங்கி எழுந்தால் தெளிவு பெற்று விடுவாள் என்று டாக்டர் கூறினார்..."என்று கூறிய ஷ்யாம் அத்துடன் முடிந்து விட்டதென்பதைப் போல் எழுந்து சென்று விட்டான்.

அதன் பின் ஷ்யாம் போட்டக் கோட்டில் தான் ரோடு போட்டு.. மேலும் பல பொய்களை அள்ளி வீசினார் சரவணன்.. எப்படியோ இருவரின் வீட்டினரும் சமாதானமாகி விட.. சுஜி கண் விழிப்பதற்காகக் காத்திருந்தனர்,

சுஜி கண் விழித்து எழுந்ததும்.. அவள் முதலில் நோக்கியது ஷ்யாமின் காதல் பார்வையைத் தான்.. "என்ன.. லேடி ஜாக்கி சான்.. இப்போது எப்படியிருக்கிறீர்கள்..?"என்று அவன் புன்னகையுடன் வினவ... அவன் கேள்வியைக் கேட்டுச் சிரித்தபடியே எழுந்தமர்ந்தாள் சுஜிப்ரியா.

பின் அவனை நிமிர்ந்து நோக்கி... "ஐ நீட் அ ஹக் ஃப்ரம் யூ..."என்றாள்.. மேலும் சில நிமிடம் அவளை நோக்கியவன் பின் எழுந்து வந்து... அவளைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்து அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டு.. அவள் இடையைப் பற்றி அருகிலிழுத்து அவள் முகமெங்கும் இதழ் பதித்தான்...

DO NOT COPY

தானும் அவனைப் பற்றி முத்தமிட்ட சுஜிப்ரியா... பின் பெரு மூச்சுடன் அவன் தோளில் தலை சாய்த்தாள்...

“உங்களை மறுபடியும் பார்க்க மாட்டேன் என்றெல்லாம் நினைத்து விட்டேன் தெரியுமா...?”என்று அவன் சட்டையை இறுகப் பற்றிய படி கூறியவளின் நெற்றியில் இதழ் பதித்தவன்... “நம் இருவரின் பந்தம் எவ்வளவு உறுதியானதென்பதை இந்தச் சம்பவத்திலிருந்து புரிந்து கொண்டேன் சுஜூ... நம் நேசம் உண்மை.. அதனால் தான் இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்திருக்கிறோம்...”என்றான்.

“நான் ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்த போது ஒருவன் வழி மறித்தான்.. பின் என் முகத்தில் மயக்க மருந்தை அழுத்தினார்கள்.. ஆனால் நான் மூச்சடக்கி முழுதாக மயங்காமல் பார்த்துக் கொண்டேன்.. ஆனால் அப்படிச் செய்யச் சொல்லி அனுப்பியது.. ஸ்ரீதர் என்றதும் எனக்கு அதிர்ச்சியாகிப் போனது ஷ்யாம்...”

“எவ்வளவு கீழ்த் தரமாகப் பேசினான் தெரியுமா...?, உங்கள் கண்ணில் படாமல் கண் காணாத இடத்திற்கு நான் சென்று விட வேண்டுமாம்.. இல்லையென்றால்.. என்னை எவனுக்கோ விற்கப் போவதாகக் கூறினான்.. எனக்கு உங்கள் தம்பியைக் கண்டு பயம் சிறிதளவும் இல்லை ஷ்யாம்.. எனக்கு வந்த ஆத்திரத்தில் அவனை அடித்துத் துவைத்து விட்டேன்.. ஆனால் மறுபடியும் யாரோ.. என் முகத்தில் மயக்க மருந்தை அழுத்தி விட்டார்கள்.. திருமணத்திற்கு முன் புகைப் படங்களை அனுப்பியது, பிரேக் வயர் அறுத்தது எல்லாமே.. அவன் செய்தது தான் ஷ்யாம்...”என்று கூறியவளின் கையை அழுத்தி...

“நீ முதலில் என்னைத் தான் மன்னிக்க வேண்டும் சுஜூ... இந்த உண்மைகளனைத்தும் எனக்கு 5 நாட்களுக்கு முன்பே தெரிந்து விட்டது... ஆனால் உன்னிடம் கூறி உன்னை பீதியாக்கி விட வேண்டாம் என்று தான் உன்னிடமிருந்து மறைத்தேன்... ஆனால் அது தவறென்று இப்போது தோன்றுகிறது.. உன்னிடம் முதலிலேயே விசயத்தைக் கூறி எச்சரித்திருக்க வேண்டும்...”என்று தலை முடியை அழுந்தக் கோதியவனின் கைகளைப் பற்றி..

“எல்லாம் நன்மைக்கு தானே ஷ்யாம்...?, அவன் செய்த ஒவ்வொரு செயலிலும் நம்மிடையே இருந்த நெருக்கம் அதிகமானது.. அதை நீங்கள் கண்டீர்களா..?, பல வகையிலும் இது நன்மையை மட்டும் தான் அளித்திருக்கிறது...”என்று சமாதானம் கூறியவளிடம் “என்னால் தானே கண்ணம்மா.. உனக்கு இவ்வளவு கஷ்டம்... என்னை மன்னித்து விடு... இனி உன்னைக் கவனமாகக் காப்பது மட்டும் தான் என் நோக்கம்.. இனி இப்படி நடக்காது சுஜூ...”என்று அவள் முகத்தைப் பாராமல்..கூறியவனின் முகம் நிமிர்த்தி...

DO NOT COPY

அவன் கண்களில் இதழ் பதித்து அவனை அணைத்துக் கொண்டவள்.. “இதை இக்கட்டாக நான் எண்ணவேயில்லை ஷ்யாம்.. எனக்கு நம் நேசத்தின் மீது நம்பிக்கை இருந்தது.. நான் உங்களால் காப்பாற்றப் படுவேன் என்று நம்பினேன்.. எனக்கு உங்கள் தம்பியிடம் பயமில்லாததால் பெரிதாகப் பதறவில்லை.. நீங்கள் சொன்னது போல்.. இது நம் நேசத்தின் உறுதியை நமக்கு நன்றாகவே புரிய வைத்து விட்டது... அதற்காகவேனும் ஸ்ரீதருக்கு நன்றி தான் சொல்ல வேண்டும்....”என்று சிரித்தவள் தொடர்ந்து “உங்களுக்கு அவனைப் பற்றி முன்னமே தெரியும் என்றீர்களே எப்படி...?”என்று வினவினாள்.

“உனக்கு விபத்து ஏற்பட்ட போது... அஷ்வத் என்னிடம் உன் வண்டியின் பிரேக் வயரை யாரோ வேண்டுமென்றே அறுத்ததாகக் கூறினான்.. அப்போதிலிருந்தே சந்தேகம் தான்.. சர்வீஸ் செய்த மெக்கானிக்கிடம் சென்று விசாரித்தேன்... உங்கள் தம்பி டெஸ்ட் டிரைவ் செய்து தான் வண்டியை வாங்கிச் சென்றார் என்று கூறினான்.. ஆனால் அப்போது அவன் மீது எனக்கு சந்தேகம் ஏற்படவில்லை...”

“உன் நண்பன் ராம்குமார் வந்து சென்ற மறு நாள்.. உனக்கு ஃபோன் கால் வந்ததாகக் கூறினாயே.. உங்கள் இருவரையும் சந்திக்க வைத்து.. நீங்கள் இணைந்திருப்பதைப் போல் புகைப் படம் எடுத்து அனுப்பியிருந்தான்.. அவன் செய்த ஒரே தவறு.. அவன் உபயோகித்த.. கடித உறை.. அது எங்கள் வாடிக்கையாளர் ஒருவர் அன்பளிப்பாக அளித்தது.. சென்ற முறையும் இதே உறையில் தான் அனுப்பியிருக்கிறான்.. அவன் நமக்கு அளித்த திருமணப் பரிசு... அவன் நடந்து கொண்ட விதம் என் சந்தேகத்தை உறுதிப் படுத்தியது.. பின் உனக்கு ஃபோன் வந்த அந்தப் டெலிஃபோன் பூத்தில் அவன் ஃபோட்டோவைக் காட்டி விசாரித்தேன்... அவர்களும் அவன் தான் என்று உறுதி செய்தார்கள்..”

“பின் அவனைத் தொடர ஆள் ஏற்பாடு செய்திருந்தேன்.. அதைக் கண்டு கொண்டதாலோ என்னவோ.. அவன் அமைதியாகவே இருந்தான்.. ஆனால் இன்று தான் தெரிந்தது அவன் அவனது நண்பன் குமார் மூலமாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கிறானென்று.. பின் எங்கள் கண்ணில் மண்ணைத் தூவி எங்கள் கண்ணில் படாமல் எங்கேயோ சென்று விட்டான்.. உன்னையும் காணாமல்... அவனையும் கண்டு பிடிக்க முடியாமல்.. நான் பதறிப் போனேன் சுஜூ.. இவன் முட்டாள் தனமாக.. என்ன செய்து வைப்பானோ என்று பயம் வேறு.. அவனை வெட்டிப் போட வேண்டும் என்ற அளவிற்கு.... கோபமும்,ஆத்திரமும் எழுந்தது சுஜூ.... எப்பேர்ப்பட்ட.... கௌரவமான குடும்பத்தில் பிறந்தவன்.. இந்த அளவிற்குத் தரமிறங்கி... ச்ச... எனக்கு இன்னும் வெறுப்பும்,கோபமும் அடங்கவில்லை...”என்று அவன் கூறுகையில் அவன் மொபைல் அழைத்தது..

DO NOT COPY

பேசியது சுரேஷ்.. "சார்.. உங்கள் தம்பியின் காயங்களுக்கெல்லாம் மருந்து போட்டாயிற்று... அவன்,மற்றும் அவனது நண்பனின் செல்லில் இருந்த அத்தனை புகைப் படங்களையும் கைப் பற்றி விட்டேன்... அவன் நண்பனை எச்சரித்து அனுப்பி விட்டேன்.. நீங்கள் உங்கள் தம்பியை அடித்த அடியில் குமார் அரண்டு விட்டான் போலும்..விட்டால் போதுமென்று ஓடி விட்டான்.. உங்கள் தம்பி மிகவும் அமைதியாகவே இருக்கிறார் சார்.. திருந்தி விட்டாரென்று நினைக்கிறேன்.."என்று கூற.. இறுகிய முகத்துடன் "அவனை இன்னொரு முறை நம்ப நான் தயாராக இல்லை சுரேஷ்.."என்றான்..

சிறிது நேரம் அமைதியான சுரேஷ் தொடர்ந்து "உங்கள் வீட்டிற்குச் செல்லச் சொல்லிக் கேட்டேன் சார்... ஆனால் உங்கள் தம்பி மறுத்து விட்டார்.. அண்ணனின் முகத்திலும்,அம்மாவின் முகத்திலும் விழிக்கத் தனக்குத் தகுதியில்லை என்கிறார்.. நாளை மிஸ்டர்.ருத்ரனுடன் சிங்கப்பூர் சென்று விடுவதாகவும் இனி உங்கள் வாழ்வில் தலையிட மாட்டேன் என்றும் மன்னிப்பு கேட்டார் சார்.."என்று கூற.. பதிலேதும் கூறாமல் அமைதியாக இருந்தான் ஷ்யாம்..

அவனைப் புரிந்து கொண்ட சுரேஷும் மேலே எதுவும் கூறாமல் "விசயம் அவ்வளவு தான் சார்..."எனக் கூறி ஃபோனைக் கட் செய்தார். அவர் பேசி முடித்ததும் பெரு மூச்சுடன் தன்னருகே வருபவனை நோக்கிய சுஜி என்னவென்று விசாரித்தாள்.. சுரேஷ் கூறிய அத்தனையையும் அவளிடம் தெரிவித்தான் ஷ்யாம்.

அவன் கூறிய அனைத்தையும் கேட்டவள்.. "ஷ்யாம்.. அவன் தான் மன்னிப்பு கேட்கிறானே... நீங்கள் பேசிய வார்த்தைகளில் அவன் நிச்சயம் தன் தவறை உணர்ந்திருப்பான்.. அவனைத் தண்டிப்பதை விட மன்னிப்பது தான் நல்லது.. இனி அவன் மாறி விடுவான்.. அவனை நம்புங்கள் ஷ்யாம்.. நாமே அவனது வாழ்வைப் பாழாக்க வேண்டாம்.. அவனை வீட்டுக்குக் கூப்பிடுங்கள்.. எனக்காக.. ப்ளீஸ்..."என்று கூற.. அவளை ஆச்சரியமாக நிமிர்ந்து நோக்கினான் ஷ்யாம்.

"உன் வாழ்வில் அவனால் நீ சந்தித்த இன்னல்கள் ஏராளம் சுஜூ.. உன்னைக் கடத்திச் சென்று விற்கப் பார்த்தக் கயவன் அவன்.. அவனை மன்னிக்கச் சொல்கிறாயா..?"என்று ஷ்யாம் வினவ.. சிரிப்புடன் அவனுக்குப் பதில் கூறினாள் சுஜி. "அவன் விளைவித்த இன்னல்கள் அனைத்தும் நன்மையில் தானே முடிந்திருக்கிறது ஷ்யாம்..?, முதன்முதலில் அவன் அனுப்பிய புகைப் படங்கள் இல்லாவிட்டால்.. இன்று நாம் இருவரும் கணவன்-மனைவியாக இருந்திருக்க மாட்டோம்.. அவன் செய்த அத்தனை குள்ள நரித் தனமும் நம்மிடையே இருந்த அன்னியோன்யத்தை இரண்டு மடங்காக்கியது தானே...?"

“நம் இருவரைத் தாண்டி.. அத்தை,மாமா,அனு என்று அனைவரைப் பற்றியும் யோசிக்க வேண்டுமே ஷ்யாம்..?, ஸ்ரீதர் யாரோ ஒருவனல்ல.. நம் குடும்பத்தைச் சேர்ந்தவன்.. உங்கள் தம்பி.. அப்படியெல்லாம் நினைத்த மாத்திரத்தில் அவனை ஒதுக்க முடியாது ஷ்யாம்.. நமக்கு அவன் வேண்டாமென்றாலும் அத்தை,மாமாவிற்காகவேனும்.. நம் குடும்பத்திற்காகவேனும்.. அவனை மன்னித்து விடுங்கள் ஷ்யாம்...”

“அடிப்படையில் உங்கள் மீது அவனுக்கு வெறுப்பு இருந்திருக்கிறது.. அண்ணன் தனக்கு நல்லது செய்கிறான் என்று அனுவிற்கு இருந்த எண்ணம் இவனுக்கு இல்லை.. அண்ணன் தன்னை அடக்கியாள நினைக்கிறான் என்று தான் எண்ணம் வைத்திருந்தான்.. இப்போது அவன் கற்ற பாடம் நிச்சயம் அவன் மீதான உங்கள் அக்கறையை,அன்பை அவனுக்கு உணர்த்தியிருக்கும்.. இனி அவன் உங்களைப் பார்க்கும் பார்வையில் நிச்சயம் மரியாதை கூடியிருக்கும்.. இனியும் அவனை சிங்கப்பூருக்கு அனுப்பி.. அவனது கோபத்தை நாம் கிளறிப் பார்க்க வேண்டாம்.. அவன் இங்கேயே இருக்கட்டும்.. குடும்ப சூழ்னிலையை.. உணர்ந்து அனைவரிடமும் ஒன்றி கலகலப்பாகட்டும்.. அவனைத் தண்டிக்க வேண்டாம் ஷ்யாம்...”என்று அவள் கூற.. மனைவியின் தெளிவான பேச்சைக் கண்டு வியப்பானது அவனுக்கு.

“தேங்க்ஸ் சுஜூ...எங்கே நீ அவனை வெறுத்து ஒதுக்கி விடுவாயோ என்று பயந்தேன்.. எனக்கும் அவன் மாறி விட்டான் என்றே தோன்றுகிறது.. நிச்சயம் அவனை வீட்டிற்கு அழைக்கிறேன்...”என்று அவன் உறுதி கொடுக்க.. “இப்போதே அழையுங்கள்..”என்றாள் சுஜி.

சுரேஷிற்கு ஃபோன் செய்து ஸ்ரீதரிடம் கொடுக்குமாறு கூற.. அண்ணன் தன்னிடம் பேச நினைக்கிறானா என்று வியப்பும் மகிழ்ச்சியுமாய்... “அண்ணா...”என்றான் ஸ்ரீதர்.. “என்னை மன்னித்து விடு... நான் செய்த இந்தக் கேவலமானக் காரியத்திற்கு மன்னிப்பு என்ற ஒற்றை வார்த்தையைக் கூற எனக்குக் கேவலமாக இருக்கிறது அண்ணா.. சிறு வயதிலிருந்து எங்கள் நலத்தை மட்டுமே நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னை.. நான் தவறாக நினைத்ததற்கு.. இந்தத் தண்டனை தேவை தான்...”

“அம்மா.. அம்மாவிற்கு இந்த விசயம் தெரிந்தால்.. எப்படி துடித்துப் போவார்.. பின் இந்த ஜென்மத்தில் என்னை மன்னிக்க மாட்டார்.. நான் தவறு செய்து விட்டேன்.. என்னை மன்னித்து விடு.. அண்ணியின் முகத்தில் விழிக்கவே எனக்கு அசிங்கமாக உள்ளது..”என்று கண்ணீர்க் குரலில் கூறியவனை தடுத்த சுஜி “ஸ்ரீதர்... நீங்கள் இந்த அளவிற்கு வருத்தப் படுமளவிற்கு ஒன்றும் நடக்கவில்லை.. நீங்கள் மாறியதே எங்களுக்குச் சந்தோஷம் தான்.. எந்த வித உறுத்தலும் வேண்டாம் ஸ்ரீதர்.. நீங்கள் வீடு வந்து சேருங்கள்.. இனி சிங்கப்பூர் சென்று அவஸ்தைப் படவேண்டுமென்று கட்டாயமில்லை.. நீங்கள் இங்கேயே

இருக்கலாம்... நாம் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமெங்கிற அத்தை,மாமாவின் ஆசையை நாம் நிறைவேற்றுவோம்.. சரி தானே...?"எனக் கேட்க..

"ஐ ஆம் சாரி அண்ணி... ரியலி சாரி..."என்ற ஸ்ரீதரிடம் மேலும் உரையாடி விட்டு ஷ்யாமிடம் கொடுத்தாள்... "அண்ணா..."என்றவனிடம் "உன் அண்ணி கூறியது போல்.. நீ மாறியதே மகிழ்ச்சி தாண்டா.. வீட்டிற்கு வா.."என்றான் ஷ்யாம்.. "இல்லை அண்ணா.. நான் இன்னும் சிறிது நாட்களுக்கு சித்தப்பாவுடன் சிங்கப்பூரிலேயே இருக்கிறேன்.. இந்த உறுத்தலுடன் என்னால்.. என்னால்.. நம் வீட்டில் வலம் வர முடியுமென்று தோன்றவில்லை.. ஆனால் விரைவிலேயே நான் வீட்டிற்குத் திரும்பி விடுவேன்.. நிச்சயம்.."என்றவன் தொடர்ந்து "மிக.. ந.. நன்றி அண்ணா.."என்றான்.. அவனிடம் உரையாடி முடித்ததும் இருவருக்கும் பாரம் இறங்கியதைப் போல் இருந்தது...

"உ∴ப்..."என்று மூச்சு விட்டவளை தன்னருகே இழுத்து அணைத்துக் கொண்டவன் "நீ எப்படி என் வாழ்வில் வந்தாய் சுஜூ...?, எப்படி என்னுள் ஒன்றிப் போனாய்..?, என் உயிரேனும் மேலாக உன்னை நான் எப்போது நேசிக்கத் தொடங்கினேன்..?, ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் நீ இல்லாத வாழ்வை என்னால் கற்பனை கூட செய்ய முடியவில்லை"என்று கூற..

"நீங்கள் ஸ்ரீதரிடம் பேசியதைக் கேட்டேன் நான்.. அவளுக்கு ஏதேனும் ஆகியிருந்தால்... நானும் செத்திருப்பேன் என்றீர்களே... என்னை அவ்வளவு நேசிக்கிறீர்களா ஷ்யாம்...?"என்று தன் சிப்பி விழிகளில் காதலைத் தேக்கி அவள் வினவ.. அவள் நெற்றியில் முட்டி... "எனக்கு ஏதாவது ஆகியிருந்தால் நீயும் கூட இதையே தான் கூறியிருப்பாய்.."என்றான் அவன்.

தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த அவன் கரத்தைப் பற்றி... முத்தமிட்டு.. "ஐ லவ் யூ ஷ்யாம்..."என்றாள்.. "ஐ லவ் யூ டூ புஜ்ஜூ...."என்றவன் "உன் சரவணன் மாமா மட்டுமில்லையென்றால்... நான் இப்போது உன்னிடம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பேனோ என்னவோ... அவர் உன் மீது உன் பெற்றோரைப் போல் அதிகமான பாசம் வைத்திருக்கிறார் சுஜூ..."என்று கூற.. "என் சரவணன் மாமா.. அம்மா,அப்பாவிடம் கூட நானும்,சக்தியும் அவரிடம் தான் அனைத்தையும் பகிர்ந்து கொள்வோம்.. எங்களிடன் சரிக்குச் சரியாக வம்பு செய்வாரா... அதனால் சிறு வயதிலிருந்தே அவர் என்றால் எங்களுக்குப் பாசம் அதிகம்.. என் மேல் மிகவும் அன்பாக இருப்பார்.. அவருக்குக் குழந்தைகள் இல்லாததால்.. எங்களைத் தான் பிள்ளைகளாக நினைத்துக் கொண்டிருக்கிறார்... மாமாவிற்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும்...."என்றவளிடம்..

DO NOT COPY

“ஆனால் நீங்கள் என்ன கராத்தே குடும்பமா என்ன..?.உன் சரவணன் மாமாவும் அடித்துத் துவைத்தெடுக்கிறார்.. நீ லேடி ஜாக்கி சானாய்.. பாய்ந்து பாய்ந்து சண்டை போடுகிறாயாம்..”என்று கேலி செய்ய.. கலகலவெனச் சிரித்தவள்.. “மாமா தான் எனக்கும் சக்திக்கும் கராத்தேவிலிருந்து வர்மக் கலை வரை அனைத்தையும் கற்றுத் தந்தவர்.. கற்றுக் கொண்டே ஆக வேண்டுமென்று கட்டாயப் படுத்தினார்.. அவர் கற்றுக் கொடுத்த கலை.. இன்று உபயோகமாகி விட்டது....”எனக் கூற,, “அப்படியானால் உன்னிடம் ஜாக்கிரதையாகத் தான் இருக்க வேண்டும்... என் சொல் பேச்சு கேட்க மாட்டீர்களா... என்று நீ வால்வாக் எல்லாம் செய்து அடி வெளுத்து விட்டாயானால் நான் என்ன செய்வது...?,”என்று பயந்தது போல் நடிக்க “ஷ்யாம்...”என்று சிணுங்கி அவன் தோளில் அடித்தாள்..

சோர்ந்து போயிருந்தாலும்.. தெளிவுடன்.. காதலை அள்ளி வீசிக் கொண்டிருந்த அந்த விழிகள்... களைந்திருந்த கேசம்... எப்போதும் மினுமினுப்புடனே தோற்றமளிக்கும் அந்தக் கன்னங்கள்... கிறக்கத்தையும் மயக்கத்தையும் சேர்த்துக் கொடுத்தது அவனுக்கு.. “சுஜூ....”என்றழைத்தவன்.,.. அவள் கழுத்து வளைவில் முகம் புதைக்க... அவனைத் தன்னோடு சேர்த்தணைத்து அவனோடு ஒன்றினாள் அவள்.

தன்னிலை மறந்து இருவரும் வேறு உலகத்திற்குச் சென்று கொண்டிருக்க.. “மாம்ஸ்...”என்ற சக்தியின் அழைப்பைக் கேட்டு திடுக்கிட்டு விலகினர்.. அவனைக் கோபத்துடன் முறைத்த ஷ்யாம்.. “டேய்... உனக்கு என்ன தான் டா பிரச்சனை... எப்போதும் சரியான நேரத்தில் ஆஜராகி உயிரை வாங்குகிறாயே...!”என்று வினவ.. “ஹா ஹா.. ஹோ ஹோ.. ஹி ஹி..”என்ற சக்தி...

“மாமா நான் உங்களிடம் ஏற்கனவே சொல்லி விட்டேன்.. என் லட்டுவுடன் சீக்கிரம் எனக்குக் கல்யாணம் செய்து வையுங்கள்... உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்...”என்று அனுவின் தோள் மீது கையைப் போட்டபடி வம்பு செய்ய.. “ஏய்.. அதெல்லாம் வேண்டாம்..:என்று அவன் கையைத் தட்டி விட்டவள்.. “அண்ணா.. 2 வருடம் கழித்துத் தான் திருமணமென்று நான் ஏற்கனவே கூறி விட்டேன்..”என்று முடிக்க...

“லட்டு.. என்னடா.. மாமாவின் தேவையை நீ புரிந்து கொள்ளவே மாட்டேன் என்கிறாயே....”என்று கெஞ்ச.. “உன் தேவையா...?”என்று வினவியவள் தொடர்ந்து அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி “அம்மா.. இன்று பிரியாணி செய்திருக்கிறார்கள்..”என்று கூற.. நிமிடத்தில் மாறிப் போனவன்.. “என்னது பிரியாணியா..?, வாசனை வரவில்லையே.. எப்படி டா சக்தி கண்டு பிடிக்காமல் போனாய்..?”என்று தனக்குத் தானேப் பேசிய படி வெளியே ஓடப் பார்த்தவனைக் கண்டு அனைவரும் சிரிக்க..

DO NOT COPY

அவன் நின்று அனைவரையும் முறைத்து "லட்டு.. என்னடா.. என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா...?, எனக்குத் தெரியும்.. அத்தை இன்று பிரியாணி செய்யவில்லை.. ஏனென்றால் உள்ளே நுழைந்ததுமே எனக்கு வாசனை வந்திருக்கும்.."என்று கூற.. "மோப்பம் பிடிப்பதைப் பார்.."என்று அவன் மூக்கைப் பிடித்து ஆட்டினாள்.. "விடுடி.. வலிக்கிறது..."என்று கத்தியவனைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறாள் சுஜி.

அவள் சிரிப்பதைக் கண்ட சக்தி அவளருகே சென்று "இப்போது எப்படி இருக்கிறது சுஜி...?, தனியே எங்கேயும் வெளியே செல்லாதே என்றால் கேட்க மாட்டாயா..?, சரவணன் மாமா உன்னைப் பார்த்ததால் இன்று பிரச்சனை இல்லாமல் போய் விட்டது.. அவர் வரவில்லையென்றால் என்னவாகியிருக்கும்..?, ஜாக்கிரதையாக இருக்கப் பழகிக் கொள் சுஜி.. வெளியே செல்வதாயிருந்தால் மாம்ஸ் உடனே செல்.. அவர் பிஸியாக இருந்தால்.. உங்கள் வீட்டில் தான் ஒருத்தி எப்போதும் வெட்டியாகவே சுற்றிக் கொண்டு திரிகிறாளே.. அவளை அழைத்துச் செல்.."எனக் கூற.. "டேய்.. நான்.. நான் வெட்டியாக இருக்கிறேனா..?" என்று அவன் தலையில் குட்டினாள் அனு.

அவள் கையைப் பிடித்து அடக்கியவன் மீண்டும் சுஜியிடம் "ஜாக்கிரதையாக இரு சுஜி.."என்றான்.. இன்று நடந்த உண்மைகள் மட்டும் இவனுக்குத் தெரிந்தால்.. ஸ்ரீதரை பொலி போட்டு விடுவான்.. திருமணத்திற்கு முன்பு அந்தப் புகைப்படங்கள் வந்த போதே.. கொலைவெறியுடன் இருந்தான்.. என்றெண்ணிக் கொண்ட சுஜி "சரி டா தம்பிப் பையா.."என்று தலையாட்டி வைத்தாள்..

"நான் உள்ளே வரலாமா...?"என்று அறை வாயிலில் நின்று கொண்டு சரவணன் வினவ.. "என்ன அனுமதியெல்லாம் கேட்கிறீர்கள்.. உள்ளே வாருங்கள்.."என்று ஷ்யாம்,சுஜி இருவரும் எழுந்து சென்று வரவேற்றனர்.. "உங்களுக்கு இப்படி ஒரு வரவேற்பா...?"என்று சக்தி உதட்டைச் சுழிக்க.. "சும்மா இரு டா.."என்று அவன் தலையில் அடித்தான் ஷ்யாம். "மாம்ஸ்... உங்கள் வீட்டு மாப்பிள்ளை நான்.. என்னை அடிக்கிறீர்கள்.. இதை என் தர்மபத்தினி கண்டால் என்ன நடக்கும் தெரியுமா..?"எனக் கேட்டவன் திரும்பி அனுவைப் பார்க்க.. "இது தான் நடக்கும்.."என்று கூறி அண்ணனுடன் ஹை-ஃபைவ் கொடுத்துக் கொண்டாள்.

இருவரையும் கண்டு சிரித்த சரவணன்... "இப்போது எப்படியிருக்கிறாய் சுஜி...?, மிகவும் சோர்வாக இருக்கிறதா..?,"என்று விசாரித்தார். "நான் நன்றாக இருக்கிறேன் மாமா..."என்றவள் தொடர்ந்து "தேங்ஸ் மாமா..."என்று கூறி அவர் தோளில் சாய்ந்து கொள்ள.. அவளைக் கண்டுச் சிரித்தான் ஷ்யாம். "சின்ன குழந்தையென்று நினைப்பா...?, இன்னும் அவர் தோள் சாய்ந்து கொண்டிருக்கிறாய்..."என்று கேலி செய்தான் சக்தி.

அவரைத் தொடர்ந்து வள்ளி,மகாலிங்கம்,சீதா,ராஜாராமன் அனைவரும் உள்ளே வர.. மகளின் நலத்தைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்ட வள்ளியும்,லிங்கமும்... அவ்வளவு நேரமும் நீடித்த கவலை மறந்து நிம்மதியுற்று... சிறிது நேரத்தில் சகஜமாகி விட.. அந்த இடமே கலகலப்பானது.. “சுஜி.. நீ மயக்கமானாய் என்றதும்.. உன் அத்தை ஒரு நிமிடம் சந்தோசப் பட்டு விட்டாள்...”என்று ராஜாராமன் கூற.. “எதற்காக...?”என்று விசாரித்தாள் அனு. “எதற்காக என்று உன் அண்ணியின் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்...”என்று சீதா கூற.. திரும்பி சுஜியை நோக்கிய அனுவிற்கு சிரிப்பு பொங்கியது.

வெட்கத்தில் ஷ்யாமின் பின்னே நின்று கொண்டு அவன் முதுகில் முகத்தை மறைக்க முயன்று கொண்டிருந்தாள்.. “ஓ!, புரிந்து விட்டது... ஆமாம், அம்மா கேட்பதற்கு முன் நான் கேட்கிறேன்.. என்னை எப்போது அத்தையாக்கப் போகிறீர்கள்..?”என்று சிரிப்புடன் அவள் வினவ.. “போ அனு...”என்று ஷ்யாமின் தோளில் சாய்ந்து கொண்டாள் சுஜி.

அவளைக் கண்டு அனைவரும் சிரிக்க சக்தி அனுவின் புறம் குனிந்து “லட்டு குட்டி.. சுஜியை விசாரிப்பது இருக்கட்டும்.. நீ எப்போது அம்மாவாகப் போகிறாய்..?”என்று கேட்டு விட்டு “அய்யோ வெட்கம் வருகிறது! “என்று அவள் துப்பட்டாவில் தன் முகத்தை மறைத்துக் கொண்டான்..

“ச்சி.. துப்பட்டாவை விடுடா ராஸ்கல்.. பேச்சைப் பார்.. இன்னும் திருமணமே நடக்கவில்லை.. அதற்குள்.. பாப்பாவா..?.இரு இரு ஸ்ரீதரிடம் சொல்லித் தருகிறேன்..”என்று மிரட்ட.. “வேண்டாம் லட்டு.. அந்த வில்லனா..?, அவன் இதைக் கேட்டால் சுடு காப்பியை ஊற்றுவதற்குப் பதிலாக.. என்னை அடுப்பிலேயே போட்டு விடுவான்..”என்று கூற.. “ஹா..ஹா.. ஸ்ரீதருக்கு பயப்படும் ஒரே ஆள் நீயாகத் தான் இருக்க முடியும்...”என்றவள்.... அப்போது தான் ஸ்ரீதர் இல்லாததை உணர்ந்து “அம்மா.. ஸ்ரீதர் எங்கே..?”என்று வினவினாள்.

ஒரு நிமிடம் சரவணன்,ஷ்யாம்,சுஜியின் கண்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள.. எப்படி சமாளிப்பது... என்று ஷ்யாம் சிந்திக்கும் முன் பதில் சீதாவிடமிருந்து வந்தது.. “அவனது நண்பனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாம்.. அதனால் அவனுக்குத் துணையிருக்கிறானாம்.. அங்கிருந்தே நாளை ஏர்போர்ட் செல்கிறானாம்.. அவனது உடைமைகளை ஷ்யாமிடம் கொடுத்து விடச் சொன்னான்.. 2 வாரத்தில் சிங்கப்பூரிலிருந்து திரும்பி விடுவானாம்.. ஃபோன் செய்தான்”என்று கூற...

DO NOT COPY

பரவாயில்லை.. அவனே ஃபோன் செய்து அன்னையிடம் பேசியிருக்கிறான் என்று எண்ணிய சுஜியும் ஷ்யாமும். நாளை அவனை மருத்துவமனைக்குச் சென்று பார்க்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டனர்...

"ஹ்ம்ம்.. சரி,சரி.. சுஜிக்குத் தான் சரியாகி விட்டதே.. பசி தாங்க முடியவில்லை.. அத்தையின் தக்காளிச் சட்னி வாசம் வேறு என்னை இழுக்கிறது.. அனைவரும் சாப்பிடச் செல்லலாம்.. வாருங்கள்.."என்று சக்தி கூவ.. "அம்மா தக்காளிச் சட்னி தான் செய்தார்கள் என்று உனக்கு எப்படி டா தெரியும்..?"என்று வினவிய ஷ்யாமிடம்..

"அண்ணா.. அவனது மோப்ப சக்தியைப் பற்றி உனக்குத் தெரியாதா.. நம் வீட்டில் என்ன..,? பக்கத்து வீட்டில் என்ன சட்னி என்று கூட சொல்லுவான்..."எனக் கூற.. "ஏய்.. என்னடி.. ரொம்பத் தான் கேலி செய்கிறாய்...?"என்று சக்தி அவளை அடிக்கக் கை ஓங்க.. அவனிடமிருந்து தப்பிக்க.. ஓடியவளைக் கண்டு அனைவரும் சிரித்தனர்.

தன்னைச் சுற்றி ஒலித்த அந்தச் சிரிப்பொலி... சுஜியின் மனதில்... என்றுமில்லா அமைதியையும் சந்தோசத்தையும் ஏற்படுத்தியது.. தன்னைச் சுற்றி.. மகிழ்ச்சியைத் தரும்.. சிரிப்பை உண்டாக்கும்.. நல்ல உறவுகள் மட்டுமே இருப்பதைக் கண்டு.. தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி இப்படிப்பட்ட உறவுகள் அமைய.. என்றெண்ணிவளுக்கு.. உற்சாகம்.. கரை புரண்டோடியது...

இவையனைத்தையும் தாண்டி... எனக்கே எனக்காக... கடவுளால் படைக்கப்பட்டு... என் வாழ்வின் ஒட்டு மொத்த சந்தோசத்தையும் தன் ஒரே பார்வையில்.. ஒற்றைச் சிரிப்பில் அள்ளி அள்ளிக் கொடுக்கக் கூடிய.... என் நலத்திற்காக... எப்பேர்ப்பட்டத் தியாகங்களையும் செய்யத் தயாராயிருக்கும்.. என் கணவன்.. என் உயிருடன் கலந்து விட்ட... எனக்கே எனக்காவன்.. என்னவன்... என்று கர்வத்துடன்.. தன் காதல் அனைத்தையும் கண்களில் தேக்கி... அவள் ஷ்யாமை நோக்க... மனைவியின் பார்வையை உணர்ந்து அவளை நோக்கியவனிடம்... அதே பார்வையுடன்.. "ஐ லவ் யூ ஷ்யாம்...." என்றாள் சுஜிப்ரியா.

வரிசைப் பற்கள் தெரிய அழகாக முறுவலித்தவன்.... மனைவியைக் காதலுடன் நோக்கி.. அவளது விரல்களுடன்.. தன் ஐந்து விரல்களையும் கோர்த்து... அழுத்தினான்.... இதற்காக... இதற்காக.. மட்டுமே ஏழேழு ஜென்மத்திற்கும்... அவனது மனைவியாகவே பிறவியெடுக்கலாமென்று தோன்றியது அவளுக்கு.

****************************முற்றும்*******************************

DO NOT COPY




DO NOT COPY

Nindran kaathalai enni kalikkindren - Nivetha